# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

# ஊடகமும் தமிழும்

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி – 627 012.**

| Learning Objectives | |
|---|---|
| The Main Objectives of this Course are to : | |
| 1) அச்சு ஊடகம், காட்சி ஊடகம்,குரல் ஊடகம் பற்றி அறிதல்<br>2) அச்சு ஊடகத்தின் தன்மையை அறிதல்<br>3) குரல் ஊடகத்தின் தன்மையை அறிதல்<br>4) திரை, தொலைக்காட்சி ஊடகத்தின் பணியை அறிதல் | |

## ஊடகமும் தமிழும்

**அலகு - 1 ஊடகம் விளக்கம்**

ஊடக வகைகள் - வரலாறு - ஊடகங்களில் தமிழ் - தொழில் நூட்பம், ஊடகம் அறிமுகம் -

**அலகு - 2 அச்சு ஊடகங்கள்**

மக்கள் தொடர்பு கருவிகள் - அச்சு ஊடகங்கள் - நாள், வார, மாத இதழ்கள் - இதழ்களின் பணிகள் - இதழியல் வீதிகள் - இதழ்களின் பொறுப்பும் கடமையும் - மக்களாட்சியில் இதழ்களின் பங்கு.

**அலகு - 3 வானொலியும் தொலைக்காட்சியும்**

வானொலி - தொலைக்காட்சி - தோற்றம் வளர்ச்சி - ஒளிபரப்பு நிலையங்கள் - நிகழ்ச்சிகளின் வகைகள் (வேளாண் நிகழ்ச்சிகள், மகளிர், குழந்தைகள், நல்வாழ்வு , அறிவியல், இலக்கியம் போன்றவை), நேர்காணல் - செய்திப்பிரிவு - விளம்பரங்கள் - வானொலித் தொடர்கள் - பண்பலை நாடகங்கள் - தொலைக்காட்சித் தொடர்கள் - வானொலி - தொலைக்காட்சி எழுத்துக் கலை.

**அலகு - 4 திரை ஊடகங்கள்**

திரைப்படம் - அறிமுகம் - மேற்குலக - கிழக்குலகசினிமாக்கள் - இந்தியக்கலைத் திரைப்படங்கள் - தமிழ்த் திரைக்கலை வரலாறு - சிறந்த கலைஞர்களின் - கதை - திரைக்கதை ஆசிரியர்களும் அவர்களது தனித்திறன்களும் - பாடலாசிரியர்களும் அவர்களது தனித்திறன்களும் - தொழில்நுட்பவல்லுநர்கள் - திரைக்கதை அமைப்பு - திரைக்கதை உள் அமைப்புகள் - எமோசன் என்னும் உணர்ச்சிகள் - காட்சி உருவாக்குதல் - திரைப்படவிமர்சனக் கலை - இன்றைய படங்கள் - ஒரு பார்வை

**அலகு - 5 குறும்படங்கள்**

குறும்படத் தயாரிப்பு - குறும்படங்களின் தேவைகள் - வகைகள் ( கதைப் படங்ள், ஆவணப் படங்கள், நிகழ்ச்சிப் படங்கள், சமூக விழிப்புணர்வுப் படங்கள்) - குறும்படங்களுக்கன திரைக்கதை உருவாக்குதல் - காட்சித் துணுக்கு (ஷாட்) வகைகள் - கேமரா கோணங்களும் அசைவுகளும் - படத்தொகுப்பில் பொருள்கொள்ளும் தொழில்நூட்பம்.

**பார்வை நூல்கள்**


1. இதழியல்கலை.மா.பா.குருசாமி, குருதேமொழி பதிப்பகம், திருச்செந்தூர்
2. தமிழ் சினிமாவின் கதை, அறந்தைநாராயணன்.சிரீ செண்பகா பதிப்பகம், சென்னை.
3. தொலைக்காட்சியும் பிற தகவல் துறைகளும், வெ.நல்லதம்பி, வள்ளுவன் வெளியீட்டகம், சென்னை. 1990.
4. அலைந்து திரிபவனின் கதை, சாருநிவேதிதா, அடையாளம் பதிப்பகம், சென்னை, 2001.
5. ஊடகவியல், த.ரெஜித்குமார், என்.சி.பி.எச், சென்னை, 20.
6. மக்கள் தகவல் தொடர்பியல், கி.ராசா, பார்த்திபன் பதிப்பகம், திருச்சி, 2003.
7. தமிழ்ப் பத்திரிகைகள், க.குளத்தூரான், ஜெயகுமரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்.
8. எம்தமிழர் செய்த படங்கள், க.தியோடர்பாஸ்கரன்.

## அலகு - 1

## ஊடகம் விளக்கம்

தகவல் தொடர்பியல் என்பது ஒரு மனிதன் தன் எண்ணங்களை, கருத்துக்களை, விருப்பங்களை தான் விரும்பும் ஒருவரிடம் பகிர்ந்து கொள்ளுதலே ஆகும். ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப்பட்ட செய்திகளுக்கு எதிர்விளைவாய் கருத்துப் பரிமாறவே தகவல் தொடர்பு எனப்படுகிறது. இந்தக் கருத்துப் பரிமாறலுக்கு அனுப்புநரும் பெறுநரும் இன்றியமையாதவர்கள். இவர்களின் தேவைக்குப் பயன்படும் அறிவியல் சாதனங்களே தகவல் தொடர்பியல் சாதனங்களாகச் செயலாற்றுகின்றன.

தொடர்பு என்பது ஏதோ ஒன்றைப் பொதுவாக்கி, அந்த ஒன்றை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோர் பகிர்ந்து கொள்ளல் ஆகும். தொடர்பினால் கருத்துப் பரிமாற்றம் நடைபெற்று, கருத்துப் பொதுவாக்கப்படுகிறது. தொடர்பு என்பது மனிதர்கள் செய்தியை அனுப்புதல், பெறுதல் என்னும் செயற்பாங்கு ஆகும். செய்தியை அனுப்பியவருக்கும் செய்தியைப் பெறுபவருக்கும் நெருங்கியத் தொடர்பு ஏற்படும். சொல்லுதல் அல்லது தெரிவித்தல் தொடர்பின் ஒரு பகுதியே ஆகும். சொற்களைப் பயன்படுத்தி உணர்வுகளை வெளிப்படுத்தும்போது அதைக் கேட்பதற்கு எவரும் இல்லை எனில் அப்போது தொடர்பு ஏற்படுவதில்லை. தொடர்பு என்பது அனுப்புநர் செய்திகளை அனுப்புவதும் பெறுநர் செய்தியைப் பெற்று விளக்கம் தருவதும் ஆகும்.

தகவல் தொடர்பு என்பதை ஆங்கிலத்தில் 'கம்யூனிகேசன்' என்பர். கம்யூனிகேசன் என்னும் சொல் 'கம்யூனிசு' என்னும் இலத்தீன் மொழி சொல்லிலிருந்து பிறந்ததாகும். கம்யூனிசு என்னும் இலத்தீன் சொல்லுக்குப் பொதுவாக்கு, பகிர்ந்துகொள், செயல்வினை, பயன், செய்தியைப்பரப்பு என்னும் பொருட்கள் உண்டு. கருத்துக்களைப் பொதுவாக்குவதே தொடர்பியலாகும். மனிதத் தொடர்பு என்பது பொருளுள்ள செய்தியை ஒருவர் இன்னொருவருக்கு அனுப்புவதாகும் என்பார் வெ. கிருட்டிணசாமி (2006:3).

தகவல் அனுப்புநரும் பெறுநரும் ஒரே மனநிலையில் இருக்கின்றபோது தகவல் பரிமாற்றம் எளிதாக நடைபெறுகிறது.

தகவல்கள், எண்ணங்கள், நடத்தைகள் முதலியவற்றை ஒரு மனிதன் பிறருக்குத் தெரிவிக்கும் கலையே தகவல்தொடர்பு எனப்படும் என எட்வின் எமெரி, பிலிப் எச் அவுட்வோரன் (2006:13) குறிப்பிட்டுள்ளார். ஊடகங்களில் தகவல் பரிமாற்றம் கலை

வடிவங்களுடன் மக்களிடம் சென்று சேரும் வகையில் நிகழ்த்தப் படுகின்றன. ஒருவன் செய்தியைப் பிறருக்கு அனுப்புதலே தகவல் தொடர்பு ஆகும் என டெனிஸ் மாக்வில் (2006:13) கூறுகிறார்.

ஒருவரின் அறிவு (மனம்) இன்னொருவரின் அறிவைப் (மனத்தை) பாதிக்கும் அல்லது மாற்றியமைக்கும் செயல்முறைகவே தகவல் தொடர்பியல் என வாரன் வீவர் (2001:7) குறிப்பிட்டுள்ளார். இக்கோட்பாட்டைப் பயன்படுத்தி இருநாடுகளுக்கிடையில் அல்லது இரு அரசர்களுக்கிடையில் நடைபெறவிருந்த போரினைத் தூதுவர்கள் நடுத்து நிறுத்தினர்.

சூழலுக்கு ஏற்ப எப்போதும் மாறிக் கொண்டேயிருக்கும் பிறரை நாம் புரிந்து கொள்ளும் செயல்முறையே தொடர்பு என்று மார்டின் பி. ஆண்டர்சன் (2001:5) கூறுகிறார்.

தொடர்பு (Communication) என்னும் சொல்லிற்குப் பொதுமை யாக்குதல் என்பது நேர் பொருளாகும். அஃதாவது பெறுநருடைய மனதில் அனுப்புநரின் கருத்து அல்லது கருத்துப் படிமத்தை உருவாக்குவதாகும் என்று எச்சி கல்வி (2000:5) கூறியுள்ளார்.

**ஊடகங்களின் வகைகள்**

அறிவியல் துறையில் அசாத்திய உயரத்தை தொட்டு விட்ட இன்றைய நிலையில் ஊடகங்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளாக மாறி நிற்கின்றன. தகவல் தொடர்புகள் மரபியல் முறையில் இருந்து இன்று பல்வேறு மடங்கு விரிந்து, உலகத்தையே சுருக்கி குறுகிய எல்லைக்குள் கொண்டு வந்து விட்டன. வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி என்று நீள்கின்ற அறிவியலின் முன்னேற்ற சக்திகள் மனிதனின் ஆன்மாவாக மாறி உலகையே புரட்டிப்போட்டுக் கொண்டிருக்கின்றன.

ஊடகங்கள் மூலமாகப் பொதுமக்களின் தொடர்பு மிக எளிமையாக மாறிவிடும். மக்களாட்சி அமைப்பில் ஊடகங்களின் பணி இன்றியமையாததாகும். இத்தகைய ஊடகங்களை அவை ஆற்றும் பணியின் அடிப்படையில் அவற்றை,

1. மரபு சார்ந்த (அ) தொன்மை ஊடகங்கள்
2. அச்சுவழி ஊடகங்கள்
3. மின்வழி ஊடகங்கள்
4. மின்னணு ஊடகங்கள்

என நான்காக வகைப்படுத்தலாம்.

1. **மரபுசார்ந்த (அ) தொன்மை ஊடகங்கள்**

மரபுவழிச் செய்திப் பரவலுக்கு மொழி ஒரு ஊடகச் சாதனமாக அமைகின்றது. அது வாய்மொழி சார்ந்தநிலை, வாய்மொழி சாராதநிலை, இரண்டும் கலந்தநிலை என மூன்று நிலைகளில் கருத்துக்களைத் தெரிவிக்கிறது. ஒரு சமுதாயம் காலங்காலமாக நிலைநிறுத்தி செல்கின்ற பண்பாட்டு எச்சங்களைப் பல்வேறு வெளிப்பாட்டு நிலைகளத்தோடு அவ்வவ்கால செய்திப்புலப்பாட்டு வழிமுறைகள் தெளிவுறுத்துகின்றன.

**தூது**

மரபுவழி ஊடகச் சாதனங்களில் தூதும் ஒன்று. ஒருவர் தம்முடைய உள்ளக்கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க நம்பிக்கைக்குரிய ஒருவர் வாயிலாகக் கூறி அனுப்புவது தூது எனப்படும். பழங்காலத் தகவல் தொடர்பிற்குத் தூது சிறந்த பங்காற்றியிருப்பதைக் காணமுடியும். சான்றாக, சங்க இலக்கிய ஐங்குறுநூற்றில் தலைவியை விட்டு, தலைவன் பிரிந்தமையால் உடல் மெலிவுற்றதைப் பாணனுக்குக் காட்டி, தன்நிலையை உரைக்க, பாணனைத் தூதாக அனுப்புவதைக் காணலாம். இரண்டு அரசர்கள் தம்முள் பகை கொண்டு போரிடத்துணிவர். அவ்விருவரின் பகையைத் தணிவிப்பதற்காகச் செல்வது தூது என்று தூதிற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது. தொன்மை காலத்தில், அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியோரே தூதிற்கு உரியவர்களாக தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார். அரசனால் ஏனாதி, காவிதி போன்ற சிறப்புப்பெயர் பெற்ற வணிகர்களும், வேளாளர்களும் தூதிற்கு உரியவர்கள் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. தூது செல்பவன் எப்படி இருக்க வேண்டும் என்பதை,

**"இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**

**உறுதி பயப்பதாம் தூது"** **(குறள்.690)**

என்றவாறு பதிவு செய்கிறார் வள்ளுவர். தன் உயிரை இழக்க நேர்ந்தாலும் தன் அரசன் சொல்லியச் செய்தியை வேற்றரசனிடம் சொல்லத் துணிபவனே சிறந்த தூதுவனாவான் என்பதே குறளின் பொருண்மையாகும். முற்காலத்தில் தகவல்கள் மறைமுக செய்திகளாகவும், இரகசிய செய்திகளாகவும் காப்பு உறையிட்டு இராஜமுத்திரையினைப் பதித்து அனுப்புவது வழக்கம். எகிப்து. கிரேக்கம் போன்ற நாடுகளில் அடிமைகளையும், குதிரை ஆட்களையும் பயன்படுத்தி மன்னரின் செய்திகள் எடுத்துச் செல்லப்பட்டன.

**கூத்து**

தமிழகத்தில் நாட்டார் கலை மரபுகளுள் இன்று வாழ்ந்துக் கொண்டிருக்கும் நிகழ்த்துக்கலை தெருக்கூத்தாகும். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் ஒருங்கே இணைந்ததைச் 'சமா' என்றழைப்பர். இதனைக் 'கட்டைக்கூத்து' என்றும் அழைப்பர். சான்றாக ஆங்கிலேயர் காலத்தில் விடுதலை உணர்வை மக்களிடையே ஏற்படுத்த தெருவோரங்களில் தெருக்கூத்து நடத்தப்பட்டதைக் கூறலாம். வில்லுப்பாட்டு, நொண்டி நாடகம் ஆகியவற்றின் வளர்நிலையில் தெருக்கூத்து உருவானது என்ற கருத்தும் உண்டு, இவை பின்னாளில் நாடகங்களாக வளர்ந்தன. பொது மக்கள் நலன் கருதி வடிவமைக்கப்பட்ட வள்ளி திருமணம், அரிச்சந்திரன் கதை, நல்லத்தங்காள் கதை, பவளக்கொடி போன்றன தெருக்கூத்தில் புகழ்பெற்ற கதைகள். பண்ணைச் சமுதாயத்தைச் சாடும் வகையிலும், அரசியல் நிகழ்வுகளைச் சாடும் வகையிலும் அங்கதச்சுவையுடன் தெருக்கூத்து நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன.

**பஞ்சாயத்துமுறை**

இரண்டு மனிதர்களுக்கு இடையே ஏற்படும் பிரச்சினையை, உடன்பாடற்ற நிலையைத் தீர்த்து வைப்பதற்காகத் தேவைப்படும் மூன்றாவது மனிதர் பேசி பிரச்சினையை சரி செய்வதே பஞ்சாயத்து முறையின் அடிப்படையாகும். மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகள் அல்லது நன்மை, தீமைகள், சமூகக் கட்டுப்பாடுகள், வாழ்வியல் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள், குடும்ப உறவுகள், உள்ளூர் பிரச்சினைகள், வெளியூர் பிரச்சினைகள், கோயில் வழிபாடுகள், பொழுதுபோக்குத் திட்டங்கள், மனிதநேயச் சிந்தனைகள் போன்ற சமூக வாழ்வியல் கருத்துகள் சிந்திப்பதற்குரிய களமாகப் பஞ்சாயத்துகள் விளங்குகின்றன. நாளடைவில் தனிமனித ஆளுமைத்தன்மையாக மாறிப்போன பஞ்சாயத்து முறை தற்காலத்தில் அரசால் குக்கிராமங்களிலிருந்து அகற்றப்பட்டுவிட்டது.

**வெற்றிலை வைத்தல், அழைப்பிதழ் கொடுத்தல்**

கிராமங்களில் தகவல் தொடர்பு நிலையில் வெற்றிலை வைத்தல் என்னும் பழக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது. உறவுமுறையில் முக்கிய பங்களிப்புக்கு உரியவர்களானத் தாயின் சகோதரர்களுக்கு முன்னுரிமை கொடுத்துத் தகவலைத் தெரிவிப்பது சமுதாயக் கடமையாகக் கருதப்படுகிறது. வெற்றிலை முதல் மரியாதைக்கு உரிய ஒன்றாகப் போற்றப்படுகிறது. ஊர் சபை நிர்வாக உறுப்பினர்களிடையே குறிப்பிட்ட வீட்டாரின் சுபகாரிய நிகழ்ச்சிக் குறித்து அறிவிக்கப்படும். போதும், வீட்டில் நடைபெறவுள்ள சடங்கு

நிகழ்ச்சி, பூப்புனித நீராட்டு, காதணி விழா, திருமண விழா போன்றவற்றை அறிவிக்கவும், கலந்துக்கொண்டு சிறப்பிக்கவும் செய்யப்படுகின்ற மரவுவழிச் செய்திப் பரவுமுறையாகும்.

**குறியீட்டு தகவல் பரிமாறல்**

பண்டை காலத்தில் கிராமப்புறங்களில் குழந்தை பிறப்பு அவர்களுடைய வசிப்பிடங்களிலேயே நடைபெற்று வந்துள்ளது. பிறந்துள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்பதனை அம்மறை விடங்களிலிருந்தே குறிப்பாக அறிவித்துள்ளனர். ஆண் குழந்தை யானால் பெண்கள் மூன்று அல்லது ஐந்து குரவையிடுவார்கள். இதே போல் குழந்தை பிறக்கிற மறைவிடங்களிலிருந்து எலுமிச்சம் பழங்களை உருட்டி விட்டால் ஆண்குழந்தை பிறந்துள்ளது என்று பொருள். ஆனால் பெண்குழந்தை பிறந்தால் இம்மாதிரியான செயல்பாடுகள் இடம்பெறாது. புழங்குகின்ற (பயன்படுத்துகின்ற) ஒரு பொருள் தவறி கீழே விழுந்தாலும், வீட்டின்மேல் காகம் கரைந்தாலும் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

மலைப்பாதைகளில் செல்கின்ற பொழுது இலைத்தழைகளைப் பாதையில் அடையாளக் குறியாக ஒடித்து வைத்துச் செல்வர். அதேப்போன்று கரிக்கொட்டைகளால் கற்பாறைகளிலும், மரப்பட்டைகளிலும் எழுதி கொள்வதைக் காணலாம். இத்தகைய சிந்தனை பிற்காலத்தில் கற்பாறைகளிலும், கற்றூண்களிலும் செய்திகளைச் செதுக்கி வைக்கின்ற மரபிற்கு வழிவகுத்திருக்கின்றது.

**புதைபொருள்கள்**

இந்தியாவில் நடைப்பெற்ற, நடைப்பெற்று வரும் புதைபொருள் ஆய்வுகளின் வழி பல பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. காவிரி, வைகை வடிநிலங்கள், வட தென் ஆற்காடு மாவட்டங்கள், வல்லம், பல்லாவரம், உடையார் பாளையம் போன்ற இடங்களில் கரடு முரடான இருபுறமும் செதுக்கப்பட்ட கோடாரிகள், பழங்கற்கால கருவிகள் போன்றனவும்; சாயர்புரம்,சேர்வராயன் மலைப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட உளி, லிங்கம், சிவந்த மட்பாண்டங்கள் போன்றன புதிய கற்காலக்கருவிகள் என்றும், ஆதிச்சநல்லூரில் 3500 வகையான இரும்புக்கருவிகள், பொன் செம்பு அணிகலன்கள், சங்கு வளையல்கள், மணப்பொருள் பேழைகள், நெற்றிப்பட்டங்கள், வேல், கோழி உருவங்கள், நெல், உமி போன்ற இரும்புகாலப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டன. இவை யாவும் அவ்வவ் காலத்தில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டுக்கூறுகள், வழிபாட்டு முறைகள், வாழ்க்கை நிலை, தொழில் செய்தமை, நெருப்புமூட்ட அறிந்தமை, நாகரிக வாழ்க்கை போன்றவற்றை நமக்கு அறிவிக்கும் கருவிகளாகத் திகழ்கின்றன.

**கடிதம்**

தொடக்கக் காலத்தில் ஓலை, துணி வழி செய்திகள் பரிமாறப்பட்ட நிலையில் காகிதங்களின் வரவால் கடிதத்தொடர்பு ஏற்பட்டது. தகவல் தொடர்புச் சாதனங்களாகக் கடிதங்கள் செயல் பட்டன. இது பாமர மக்களிடையே கடுதாசி என்ற பெயரையும் பெற்றது. தொலைபேசி, கணினி வரவுகளுக்கு முன் அயல் ஊர் மற்றும் அயல் நாடுகளில் உள்ள உறவுகளோடு தொடர்புக் கொள்ளவும், அவர்களின் சூழ் அமைவுகளைத் தெரிந்து கொள்ளவும் கடிதங்கள் பெரும் பங்காற்றின. அவசர செய்திகளைத் தெரிவிக்கும் ஊடகமாகத் தந்தி செயல்பட்டது.

அறிவியல் சாதனங்களின் வரவால் தந்தி முறை சேவையை 2013இல் மத்திய அரசு நீக்கி விட்டது. கடிதப் போக்குவரத்தும் குறைந்து இன்று நிறுவன விளம்பரத்திற்காகவும், வாழ்த்துக்களை அனுப்பவும் மட்டுமே பயன்படுகிறது.

இவ்வாறு தகவல் தொடர்புச் சாதனங்கள் பல்வேறு வகைகளாகத் தோன்றி வளர்ந்து இன்று மக்களின் வாழ்க்கையினூடே பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்து மக்கள் தம் வாழ்வு மேன்மையுறப் பணியாற்றி வருகின்றன. இச்சாதனங்கள் இல்லையெனில் இன்றைய புதிய உலக வாழ்க்கை இல்லை எனலாம்.

**2. அச்சுவழி ஊடகங்கள்**

தொடக்கத்தில் பட்டுத்துணி, மூங்கில்,ஓலை ஆகியவற்றில் கூரான குச்சி, பேபைரஸ் புல்லின் நாணல் குச்சி, எழுத்தாணி கொண்டும் எழுதினர். சீனாவில் காகிதம் கண்டுபிடிக்கப்பட்ட பின் அச்சு எழுத்துருக்கள் உருவாக்கப்பட்டு அதில் மை தடவி செய்திகள் காகிதத்தில் பதிக்கப்பட்டன. காலப்போக்கில் அறிவியலின் வளர்ச்சியாக அச்சுப்பொறி கண்டுபிடிக்கப்பட்டு, அதுவும் பல்வேறு மாற்றங்களைக் கண்டு அச்சிடும் முறையில் பெரும் மாற்றத்தை நிகழ்த்தியுள்ளன.

கி.பி.19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அச்சுக்கலையில் ஏற்பட்ட பெரும் மாற்றம் அச்சுப்பொறியின் காலம் என்னும் அளவிற்கு வளர் நிலையை எய்தியுள்ளது. இதன் விளைவாய் ஆங்கிலேய, பிரெஞ்சுக்காரர்களின் வரவால் இந்தியாவின் பல இடங்களில் அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழகத்தில் புன்னைக்காயல், தரங்கம்பாடி ஆகிய இடங்களிலும் அச்சகங்கள் உருவாக்கப்பட்டு, இறைநூல்களும் இலக்கண நூல்களும் அச்சிடப்பட்டன. மேலும் சென்னை,பாளையங்கோட்டை, நெய்யூர், நாகர்கோவில் போன்ற இடங்களிலும் அச்சகங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அச்சுக்கலை தமிழர் அனைவருக்கும் பயன்படுமாறு அமைந்த பிறகு செய்திகளை அறிவிக்கும் துண்டு பிரசுரங்களும், இதழ்களும் பெருமளவில் தோன்றின.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தமிழகத்தைக் கைப்பற்றிய போது அவர்கள் ஐரோப்பியர் அல்லது கிறித்தவ மத போதகர்களைத் தவிர பிறர் அச்சகங்களை வைத்திருக்கவோ, நூல்கள் வெளியிடவோ அனுமதிக்கவில்லை. இத்தடை கி.பி 1835 வரை அமுலில் இருந்தது. எல்லீசு மற்றும் தோமஸ் ஆகியோரின் முயற்சியால் இத்தடைகள் தளர்த்தப்பட்டன. பின் இறைசார்ந்த கார்டில்ஹா, தம்பிரான் வணக்கம், ஞானோபதேசம், அடியார் வரலாறுகள், மந்திரமாலை, புனர் ஜென்ம ஆட்சேம், கித்தேரியம்மன் அம்மானை, வேதியர் ஒழுக்கம், திருச்சபை போன்ற இலக்கியங்களையும் இலக்கண வினா விடை, வீரமாமுனிவரின் கொடுந்தமிழ் அகராதி இலக்கியம், தமிழ் இலக்கணம் போன்ற இலக்கண நூல்களும் அச்சிடப்பட்டன.

ஆறுமுகநாவலர், உ.வே.சாமிநாதஐயர் ஆகியோர் ஓலைச் சுவடிகளைத் தேடிக்கொணர்ந்து பதிப்பித்தனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, சி.வை.தாமோதரம் பிள்ளை, சந்திரசேகரகவிராச பண்டிதர், தாண்டவராய முதலியார், சுப்புராய செட்டியார். கோமளபுரம் இராசகோபால பிள்ளை, சரவணப்பெருமாள் ஐயர், மயிலை சண்முகம்பிள்ளை போன்றோர்கள் பல இலக்கணங்களையும், இலக்கியங்களையும், நிகண்டுகளையும் அச்சேற்றி தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளனர். (விரிவாக அலகு இரண்டில் கூறப்பட்டுள்ளது.

**ஓலைச் சுவடிகள்**

எண்ணங்களையும் முக்கியமானக் கருத்துக்களையும் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல் என்ற வகையில் தகவல் பரிமாற்றம் செய்யப்படுகிறது. பண்டைகால மக்கள் பனை ஓலைகளை நன்கு பக்குவப்படுத்தி இலக்கியங்கள், இலக்கணங்கள், மருத்துவக் குறிப்புகள், நாட்டியக் குறிப்புகள், மன்னர் பற்றிய செய்திகள், ஜோதிடக் குறிப்புகள், நாடி சாத்திரங்கள் போன்றவை எழுதி பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. சங்க இலக்கியம் முழுமையும் ஓலைச்சுவடியில் இருந்தவைகள் ஆகும். அவை பின்னர் அச்சேற்றப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும். இன்றும் பல ஓலைச்சுவடிகள் நமக்கு கிடைக்காமல் அழிக்கப்பட்டு விட்டன. குறிப்பாக, மருத்துவம் சார்ந்த ஓலைச்சுவடிகள் பல மக்களின் அறியாமையினால் அழிக்கப் பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

**கல்வெட்டுகள்**

ஒரு காலக்கட்ட மக்கள் கருத்தினை நிரந்தரப்படுத்தி அழிவில்லாப் பாதுகாப்பாகக் கருதி கற்தூண்களிலும், கற்பாறை களிலும் எழுதிப்பதிவுச் செய்யும் சிந்தனை உருவாகியுள்ளது. கி.பி. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அசோகரின் கல்வெட்டின் செய்திப் பரவல் குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களிலும், தொல்காப் பியத்திலும் நடுகல் பற்றியச் செய்திகள் உள்ளன. மன்னனின் ஆட்சி, எல்லை, போர்நிலை, நாட்டுவளம், கொடைத்தன்மை போன்றவற்றை அறிய கல்வெட்டுகள் உதவுகின்றன.

தகவல் தொடர்புச் சாதனங்களில் கல்வெட்டும் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழக வரலாற்றுத் தொகுப்பை அறிய உதவும் கல்வெட்டுகள் தமிழகத்தில்தான் அதிகம் காணப்படுகின்றன. இலக்கிய உத்திகளும் கற்பனைகளும் கலக்கப்படாமல், இலக்கிய புராணச் சான்றுகளை விட நம்பத் தகுந்தவைகளாகக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. குடுமியான் மலை கல்வெட்டு இசை பற்றிய செய்திகளை விளக்குகிறது. மகேந்திரவர்மன் காலத்திற்கு முன் கற்கோவில்கள் இல்லை என்பதை மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டுக் கல்வெட்டு உணர்த்துகிறது.

சோழர்கால ஊராட்சி முறையைத் தெரிந்து கொள்ள உத்திரமேரூர், தஞ்சை பெரிய கோவில், திருமுக்கூடல், திருவெற்றியூர் கல்வெட்டுகள் உதவுகின்றன. புத்தூர் கல்வெட்டு முதல் இராசேந்திர சோழனின் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வெற்றிச் செய்திகளைத் தருகின்றன.

வீரராசேந்திரனின் திருமுக்கூடல் கல்வெட்டு அவனது மருத்துவமனையில் இருந்த மருந்துகளை வரிசைப்படுத்துகிறது. தவிர அரிட்டாபட்டி, அழகர் மலை, கழுகு மலை, திருப்பரங்குன்றம், புளியங்குளம், மாங்குளம், மேட்டுப்பட்டி, யானைமலை, அரசலூர், திருச்சி, பிகளூர், உத்திரமேரூரர், பிள்ளையார்பட்டி ஆகிய இடங்களிலும் உள்ள கல்வெட்டுகள் பல செய்திகளைப் பறைசாற்றுகின்றன.

தற்காலத்தில் மதுரை சிவக்குமார் என்பவர் 3-ஆம் நூற்றாண்டு கல்வெட்டிற்கான சங்ககாலத் தமிழி என்ற எழுத்துருவை உருவாக்கியுள்ளார். கல்வெட்டு எழுத்துக்களை எளிமையாக வாசிக்கும் விதமாக கல்வெட்டு எழுத்துக்குரிய பொத்தானை அழுத்தினால் அதற்குரிய தமிழ் எழுத்துகள் திரையில் தெரிகிறது. இப்படியாகக் கல்வெட்டுகள் அன்றைய காலச்செய்திகளை நமக்குத் தகவல்களாகத் தருவதில் பெரும்பங்காற்றுகின்றன.

**செப்புப் பட்டயங்கள்**

பாலி, வடமொழி, தமிழ் போன்ற மொழிகளில் செப்புப் பட்டயங்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழர்கள் செய்திகளைச் செப்பேடுகளில் பொறித்து வைத்துள்ளனர். மன்னராட்சிக் காலத்திலிருந்த படை பற்றிய விவரங்கள், நீதிமுறை, கோவில் வழிபாடு, தானக் குறிப்புகள், அரசபரம்பரை, நாட்டு எல்லை, மக்கள் மன்ற வழக்குகளின் தீர்ப்புகள், தலப்புராணங்கள் போன்ற செய்திகள் செப்பு பட்டயங்களில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ளன. இவைகள் பண்டைய காலமக்களைக் குறித்த தகவல்களை அளிப்பதாக உள்ளன.

**இலக்கியங்கள்**

தகவல்களை அறிய உதவும் மற்றொரு ஊடகம் இலக்கியங்கள். தொன்மைக்காலத்தில் எழுத்தாணி கொண்டு ஓலையிலும், உளி கொண்டு கற்பாறையிலும் வண்ணங்கள் கொண்டு சுவர்களிலும் இலக்கியங்கள் எழுதப்பட்டன. கற்பனையும், உயர் நவிற்சியும் கலக்காத படைப்புகளைக் காண்பது அரிது. எனினும் சங்ககால வரலாற்றை அறிய தொல்காப்பியம்,எட்டுத்தொகை இலக்கியங்கள் பெரும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

அம்மூவனார், பரணர் போன்ற சங்கப் புலவர்களின் உவமை வாயிலாய் வரலாற்றுச் செய்திகளைப் பெய்துரைத்தமையினால் அவர்கள் வரலாற்றாசிரியர்கள் எனப் போற்றப்படுகின்றனர். பதிற்றுப்பத்து சேர மன்னர்கள் வரலாற்றை நிரல்பட தொகுத்துரைக்கிறது. தமிழ் இலக்கியங்கள் பல அரசியல் செய்திகளை பகிர்கின்றன. இலங்கை மன்னன் கயவாகுவுடனும், வடநாட்டு மன்னருடனும் செங்குட்டுவன் கொண்டிருந்த அரசியல் தொடர்பை சிலப்பதிகாரம் பதிவு செய்கிறது.

நந்திவர்மன் தெள்ளாற்றில் பாண்டிய மன்னனை வென்ற செய்தியை எடுத்துரைக்கிறது. முதலாம் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின் மீது கொண்ட வெற்றியையும், கலிங்கநாடு பெற்ற சீரழிவையும் கலிங்கத்துப்பரணி விளக்குகிறது. நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசியை வென்ற செய்தி பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய இலக்கியங்களான சிறுகதை, புதினம், கவிதை, நாடகம் போன்றவை சமுதாயச் சிக்கல்களைப் பாடுபொருளாய்க் கொண்டு அவற்றை ஆசிரியரிடமிருந்து பொது மக்களுக்கு எடுத்துச்செல்கிறது. பண்டைய இலக்கியங்களும், தற்கால இலக்கியங்களும்

தகவல்களைப் பரிமாறும் ஊடகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

**பத்திரிகைகள்**

அச்சு வடிவில், நாள்தோறும் மக்களிடையே தொடர்புகொள்ளும் தகவல் தொடர்பு சாதனங்களுள் முதன்மையானதாகவும், முக்கிய மானதாகவும் பத்திரிகைகள் விளங்குகின்றன. உலக நடப்புகளை உடனுக்குடன் மக்களுக்கு அறிவித்துச் சமூக இயக்கத்தைச் செயல்படுத்தும் வலுவான கருவியாகப் பத்திரிகை அமைகின்றது. கடிதத்தைக் குறிக்கும் 'பத்ர' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து பத்திரிகை என்ற சொல் பெறப்பட்டது. பல்வேறு செய்திகள் அடங்கிய தொகுப்பு 'பத்திரிகா' எனப்படும்.

சீனர்களின் சிந்தனையில் உருவான அச்சுக் கலையும்,தாள் தயாரிப்பும் ஐரோப்பா முழுவதும் பரவியது. வில்லியம் காக்ஸ்டன் இங்கிலாந்தில் கி. பி. 1476-இல் உருவாக்கிய அச்சக அறிவு வீச்சு இந்தியாவிலும் முத்திரை பதித்தது. இதற்கு கிறிஸ்தவச் சமயத்தை வளர்க்க விரும்பிய பாதிரிமார்களும், ஆங்கிலேயர்களும் முன்னோடி களாகக் கருதப்படுகிறார்கள். இவர்களின் சிந்தனையின் விளைவாகக் கோவாவில் கி.பி. 1556 செப்டம்பரில் உருவான முதல் அச்சுக் கூடமும் கி.பி. 1766- இல் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய வில்லியம் போஸ்டனின் அறிக்கையும் இந்தியாவில் அச்சுவழிச் செய்திப் பரவலுக்குக் காரணங்களாக அமைந்தன.

கி.பி. 1780-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ஆம் நாள் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கியால் அச்சுக்கலை எழுச்சிப் பெற்று பத்திரிகை வெளியிடப்பட்டது. இவர் பெங்கால் கெஜட் அல்லது கல்கத்தா ஜெனரல் அட்வர்டைசர் என்னும் பெயரில் முதல் இதழை உருவாக்கினார். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் அணிவகுத்து சென்ற மிதவாதிகளும், தீவிரவாதிகளும் அவரவர் கொள்கை களையும், கருத்துக்களையும் மக்கட்கு அறிவிப்பதற்காக அச்சு வழிச் இதழ்களைப் பயன்படுத்தினர்.

இன்றைய நாளிதழ்களான தினமணி, தினத்தந்தி,தினகரன், தினமலர், தினக்கதிர் போன்றவை மக்களுக்குச் சிறந்த தகவல் தொடர்புச் சாதனமாக விளங்குகின்றன. ஆனந்த விகடன், கல்கி. குங்குமம்,குமுதம், ராணி, தேவி, புதிய தலைமுறை முதலிய பருவ இதழ்கள் சிறந்த தகவல்களை மக்களுக்குத் தெரிவிக்கும் ஊடகமாகத் திகழ்கின்றன.

அச்செழுத்துக்கள் பல்வேறு வகை வடிவங்களில் உருவாக்கப் பட்டுள்ளன. தகவல் தொடர்பில் இம்முன்னேற்றங்கள் ஒரு புதிய வீச்சை உருவாக்கியுள்ளன. அச்சு முறையில்

வரும் வெளியீடுகளான செய்தித்தாள்,இதழ் முதலியன மக்களால் வாங்கிப் படிக்கக்கூடிய விலையிலேயே உள்ளன. இவற்றில் தலைப்பு, பத்திகள், படங்கள், விளம்பரங்கள் முதலியன நல்ல வண்ணம் வடிவமைக்கப்படுகின்றன.

செய்திகள், சிறப்புக் கட்டுரைகள், செய்தி விமர்சனங்கள், பொழுதுப்போக்குச் செய்திகள், இலக்கியப் பகுதிகள், விளம்பர பகுதிகள் போன்ற பல பகுதிகளை இதழ்களும் செய்தித்தாள்களும் உள்ளடக்கியனவாய் வெளிவருகின்றன.

### 3. மின்வழி ஊடகங்கள்

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் மின்வழி ஊடகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மின்வழி ஊடகங்களாக வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### வானொலி

மின்வழி ஊடகங்களுள் ஒன்றாகிய வானொலி தன் சேவையை இன்றும் சிறப்பாகச் செய்து வருகிறது. குறிப்பிட்ட நேயர்களை இனங்கண்டு அவர்களுக்கெனத் தன் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக ஒலிப்பரப்புகிறது. வர்த்தக விளம்பரங்கள் மூலம் தனக்கென நிதியை உருவாக்கிக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது.

ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் அணுகக்கூடிய ஒரே ஊடகம் வானொலியே. கிராமப்புற மக்கள், கைத்தொழில் செய்யும் தொழிலாளர்கள், பார்வையற்றோர் போன்றோர் விரும்பும் தகவல் தொடர்பு சாதனமாக வானொலி திகழ்கிறது. மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளைத் தருவதுடன் தேசிய ஒருமைப்பாட்டுக்கான கலை, இலக்கியம் தொடர்பான நிகழ்ச்சி களையும் தருகிறது. (விரிவாக அலகு மூன்றில் கூறப்பட்டுள்ளது).

### தொலைக்காட்சி

டெலிவிஷன் என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பே தொலைக்காட்சியாகும். தகவல் தொடர்புச் சாதனங்களில் மக்களிடத்தில் அதிக செல்வாக்குப் பெற்றுள்ள ஊடகம் தொலைக்காட்சி ஆகும். திரைப்படத்தின் தாக்கத்தை இவ்ஊடகத்தில் காணலாம். கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கின்ற ஒப்பற்ற ஊடகம் தொலைக்காட்சியாகும். வீட்டின் வரவேற்பறைக்குள்ளேயே உலகத்தை கொண்டுவருகின்ற ஊடகமாக விளங்குகின்றது. (விரிவாக அலகு மூன்றில் கூறப்பட்டுள்ளது.

**திரைப்படம்**

திரைப்படம் மிகவும் செல்வாக்குப் பெற்றத் தகவல்தொடர்புப் சாதனம் ஆகும். கி.பி. 1913-இல் ஆரம்பிக்கப்பட்ட காட்சிப்படம் கி. பி.1931- இல் பேசும் படமாகத் திரையரங்குகளில் திரையிடப்பட்டு மாற்றம் பெற்றன.

கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் கறுப்பு வெள்ளைப் படம் வண்ணப்படமாக மாறியது. ஒலி, ஒளித் தொழில் நுட்ப வசதிகளுடன் கல்வி, பொழுதுபோக்கு, விளம்பரம் ஆகிய பல்வேறு துறைகளில் திரைப்படம் வளர்ச்சியடைந்து வலுவூட்டியது.

தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழகம் (NFDC) கி. பி. 1975-இல் ஆரம்பிக்கப்பட்டுத் திரைப்படத்திற்கென நிதி உதவி செய்து வருகிறது. அரசுத் திரைப்பட விழாக்கள் விருதுகள் போன்றவை திரைப்படத் துறையினருக்கு ஊக்கம் தருகின்றன.

**4. மின்னணு ஊடகங்கள்**

அறிவியல் மற்றும் தொழில் துறையில் ஏற்பட்ட அதீத வளர்ச்சியால் மின்னணு மூலம் இயங்கும் கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டன. அவற்றில் குறிப்பாக, கணினி, இணையம், அலைபேசி போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். (இவைகள் விரிவாக அலகு நான்கில் கூறப்பட்டுள்ளது).

**ஊடகங்களின் இன்றியமையாமை**

தகவல்களை எடுத்துச் செல்கின்ற ஊடகங்கள் என்ற ஒன்று இல்லாவிட்டால் மனிதனின் வாழ்க்கை முழுமை அடைந்திருக்காது.

தகவல் தொடர்பு ஊடகங்கள் வழியாக உலகம் சுருங்கி மனிதனின் உள்ளங்கைக்குள் அடங்கி விட்டன. உலகின் ஏதோ ஒரு மூலையில் நடந்த நிகழ்வுகள் நம்முடைய வீட்டின் வரவேற்பறையில் பார்க்க முடிகிறது.

ஆரம்பகாலத்தில் பிற நாட்டினரின் கண்டுபிடிப்புகளை மிகவும் காலதாமத்துடன் அறிந்து கொண்டோம். தகவல் தொடர்பின் அதீத வளர்ச்சியால் இன்று ஊடகங்கள் வாயிலாக உடனுக்குடன் அவைகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

சமுதாயத்திலுள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு ஊடகங்கள் பெரும்பங்காற்றுகின்றது.

ஊடகங்கள் பிற நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கும் நமக்கும் உள்ள இடைவெளியினைக் குறைத்து உறவு பாலமாக விளங்குகின்றன.

ஊடகங்கள் மூலம் பல்வேறு இனமக்களின் பண்பாடு, நாகரீகம், கலை, கலைநுட்பம், வாழ்வியல், இலக்கியம் பற்றி அறிந்துக் கொள்ள முடிகின்றது.

இவ்வாறு தகவல்களை எடுத்துச் செல்கின்ற ஊடகங்கள் இன்று மக்களிடம் இரண்டறக் கலந்து விட்டன. இவ்ஊடகங்கள் இல்லாத மனித வாழ்வியலை எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு இவைகள் வளர்ச்சியடைந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

**வரலாறு**

மனித வாழ்வில் தகவல் தொடர்பின் பங்கு அளவிட முடியாதது. மனிதர்கள் தாங்கள் விழித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் 80 சதவீதத்தைத் தகவல் தொடர்பில் செலவழிக்கிறார்கள். பிறர் சொல்வதைக் கேட்பது, பிறருக்குப் பதில் சொல்வது போன்ற செயல்கள் அவர்களின் நேரத்தை ஆக்கிரமிக்கின்றன. ஆனால் தகவல் தொடர்பு என்பது வார்த்தைகளால் மட்டும் மேற்கொள்ளப்படுவது அல்ல, முக பாவங்கள், சைகைகள், குரல் ஏற்ற இறக்கம், சிரிப்பு, அழுகை, கை தட்டுதல், கண்ணடித்தல், முத்தம் போன்ற செயல்களும் தகவல்களைத் தெரிவிப்பதாகும்.

தகவல் என்பது எவ்வளவு இன்றியமையாதது என்பதை ஒவ்வொரு மனிதரும் தம் வாழ்க்கையில் உணர்ந்து வந்துள்ளனர். விற்பனை யாளர்கள் வாடிக்கையாளர்கள் பற்றிய தகவலைத் தேடுகின்றனர். வேலை இல்லாதவர்கள் வேலை வாய்ப்புப் பற்றிய தகவலைத் தேடுகின்றனர்.

காவலர்கள் குற்றவாளிகளைப் பற்றிய தகவலைத் தேடுகின்றனர். ஆராய்ச்சியாளர்கள் உண்மையைத் தேடுகின்றனர். ஆராய்ச்சி என்பதே தகவலைத் தேடும் முயற்சிதான்.

தொடக்கக் காலங்களில் மக்கள் தங்களுக்குத் தேவையான தண்ணீர், உணவு, இருப்பிடம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவும், எதிரிகளிடமிருந்தும், கொடிய விலங்குகளிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் தகவல் தொடர்பினைப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்று மக்கள் தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு செயலுக்கும் தகவல் தொடர்பினைப் பயன்படுத்தி வருகின்றனர். மக்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்கின்றார்கள். உலக நாடுகளோடு தொடர்பு வைத்திருக்கின்றார்கள். எனவே தகவல் தொடர்பு மிகவும் இன்றியமை யாததாகின்றது.

**தகவல் - விளக்கம்**

தகவல் என்று நாம் எதைக் கூறலாம்? பறவைகள் ஒரு இடத்திலிருந்து சபதமிடுவதைப் பிற இடங்களில் இருக்கின்ற பறவைகள் புரிந்து கொள்கின்றன. பறவைகள் சபதமிடுவதும், அச்சபதத்தைப் பிற பறவைகள் புரிந்து கொள்வதும் தகவலே ஆகும். அது போன்று வந்தவளைகள் சப்தமிடுவதும் ஒரு தகவலாகும். இச் சப்தத்தைப் பிற இடங் ஃககளிலுள்ள தவளைகள் அறிந்து கொள்கின்றன. தேனீக்கள் ரீங்காரமிடுவதும், பிற தேனீக்களுக்குத் தகவலைக் கொடுப்பதற்குத்தான். பிறந்த குழந்தை அழுவதும், இறந்த வீட்டில் இருந்து கேட்கும் அழுகைச் சப்தமும் ஒரு தகவலாகும். மனித வாழ்க்கையில் நடைபெறுகிற ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு தகவலே ஆகும். மனிதனின் கோபம், அழுகை, சிரிப்பு, வருத்தம், அச்சம், எண்ணங்கள் போன்ற அனைத்துமே தகவலாகும். தகவல் தொடர்பின்றி ஒருவர் சமுதாயத்தில் வாழ முடியாது.

**தகவல் தொடர்பு - விளக்கம்**

தகவல் தொடர்பு என்ற சொல் 'கம்யூனிஸ்' (Communis) என்ற இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து வந்தது. 'கம்யூனிஸ்' என்ற சொல் பொதுவானது, பங்கிடுதல், அறிவித்தல், அனுப்புதல் என்ற பொருள் களைத் தருகின்றது. கருத்துகளைப் பொதுவாக்குவதே தொடர் பியலாகும். இருவர் அல்லது இரு அமைப்புக்களுக்கிடையே நடை பெறுகின்ற செய்திப்பரிமாற்றமும், அதனால் ஏற்படும் தெளிவும் தகவல் தொடர்பு எனப்படும். தகவல் தொடர்பு செய்திப் பரிமாற்றத்துடன் அச் செய்தியை வெளிப்படுத்தும் மனத்தையும், கருத்தையும் தெரிவிக்கிறது.

தகவல்தொடர்பு எனப்படுவது பொதுவானதும், தகவலைக் கொடுப்பவர்களும், பெறுபவர்களும் ஒருமித்த கருத்துக்களைக் கொண் டவர்களாக இருப்பார்கள் என வடமொழிக் கோட்பாடு தெரிவிக்கிறது. எட்வின் எமெரி, பிலிப் எச். அவுல்ட் வோரன் கெ. அகி போன்றோர்கள்,

"தகவல்கள், எண்ணங்கள், நடத்தைகளை ஒரு மனிதர் பிறருக்குத்

தெரிவிக்கும் கலையே தகவல் தொடர்பு" எனப்படும் என்கின்றனர். (எட்வின் எமெரி, பிலிப் எச். அவுல்ட் வோரன் கெ. அகி, ப. 3)

"ஒருவர் செய்தியைப் பிறருக்கு அனுப்புதலே தகவல் தொடர்பு எனப்படும்" என்று டெனிஸ் மாக்வில் கூறுகிறார். (டெனிஸ் மாக்வில், ப. 2) வாரன் வீவர் என்பவர்,

"ஒருவரின் அறிவு ( மனம்) இன்னொருவரின் அறிவைப் ( மனத்தை) பாதிக்கும் அல்லது மாற்றியமைக்கும் செயல்முறைகளே தகவல் தொடர்பியல் எனப்படும்" என்கிறார். (வெ.கிருட்டிணசாமி,1992:7)

லீகன் என்பவர்,

"இருவரோ, இருவருக்கு மேற்பட்டவர்களோ ஒரு செய்தியின் பொதுமைக் கருத்தைப் பகிர்ந்து கொள்ளும் முறையில் எண்ணங் களையோ (கருத்துகளையோ), உண்மைகளையோ, உணர்வு களையோ, தாக்கங்களையோ ( மனப்பாதிப்புகள் அல்லது பாதிப்புகள்) பரிமாறிக்கொள்ளும் செயல் முறையே தொடர்பு ஆகும். ஒரு செய்தியை அல்லது தொடர்ச்சியான செய்திகளை அனுப்புநரும்,பெறுநரும் பெற ஒத்தியைபு ஏற்படுத்துதலே தொடர்பின் சாரம் ஆகும் " என்கிறார். 8)) (வெ.கிருட்டிணசாமி,1992:8)

வில்பர் ஷ்ரம் என்பவர்,

"இரண்டு ஒப்புமை உடைய அமைப்பு முறைகள் நிலையொத்து இருந்து பொதுமையை அடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அவற்றோடு தொடர்பில்லாத அமைப்புகளைப் (படங்கள், சொற்கள், பொருள்கள்) பயன்படுத்துகின்றன. அதனால் ஒப்புடைய அமைப்பு களுக்குள் ஒரு தகுநிலை (ஒரே நிலை, தரம்) ஏற்படுகிறது. அச்செயல்முறைக்குத் தொடர்பு என்று பெயர்" எனக் கூறுகிறார். (வெ. கிருட்டிணசாமி, 1992:8)

தகவல் தொடர்பு என்பது ஒரு செயல் முறையாகும். அது கருத்துள்ள செய்தியை ஒருவரிடமிருந்து மற்றவரிடம் பரப்புவதாகும். இத்தகவல் தொடர்பு முறை மனிதன் தோன்றிய கால முதல் இருந்து வருகிறது . ஒரு சமுதாயம் வளர அடிப்படைத் தேவையாகக் கருதப்படுவது தகவல் தொடர்பு ஆகும். ஆதி காலத்து மனிதன் உடலசைவுகள், குறியீடுகள், பின்னர் சொற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி மற்றவர்களுடன் தகவல் தொடர்பு கொண்டான். அறிவியல் வளர்ச்சியின் காரணமாக இன்று தகவல் தொடர்புத் துறையில் பல்வேறு கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன . ஒவ்வொரு குறியீட்டுக்கும் உடலசைவிற்கும் தகவல் தொடர்புத் துறையில் சிறப்பான இடம் உண்டு. (வெ.கிருட்டிணசாமி, 1992 :10)

தகவல் தொடர்பு என்பது ஒரு வழிப்பாதையல்ல. அது இரு வழிப் பாதை. அனுப்பும் தகவல் பெறுநருக்குப் போய்ச் சேர்ந்தால் தான் அது தகவல் தொடர்பாகும். இல்லையெனில் தகவல் தொடர்பு நிகழ்ந்ததாகக் கூற முடியாது. தகவல் பெறுநருக்குப் போய்ச் சேரும் போதுதான் அது தகவல் தொடர்பு என்றழைக்கப்படுகிறது.

ஒருவர் தான் சொல்ல நினைக்கின்ற கருத்துக்களை அல்லது எண்ணங்களை யாருக்குத் தெரிவிக்க விரும்புகிறாரோ அவருக்குத் தெரிவித்தல் தகவல் தொடர்பு எனப்படும். இத் தகவல் தொடர் பினால் தகவல் கொடுப்பவரும், தகவல் பெறுபவரும் தங்களுக்குள் கருத்து களைப் பகிர்ந்து கொள்கின்றனர். தகவலைப் பெறுகின்றவர் தகவலை ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ செய்யலாம். தகவல் அனுப்புபவரின் திறனையும், தகவலைப் பெறுபவரின் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் பொறுத்துத்தான் தகவல் தொடர்பு வெற்றியோ தோல்வியோ அடையும்.

**தகவல் தொடர்பின் வகைகள்**

தகவலின் தன்மையைப் பொறுத்தும், தகவலை அனுப்புகின்ற முறையினைப் பொறுத்தும் தகவல் தொடர்பினை இரு வகைப் படுத்தலாம். அவையாவன,

1. அகத்தகவல் தொடர்பு (Internal Communication)
2. புறத்தகவல் தொடர்பு (Extemal Communication)

என்பனவாகும்.

**1. அகத்தகவல் தொடர்பு (Internal Communication)**

ஒருவன் தனக்குத் தானே கருத்துப் பரிமாற்றம் செய்வது அகத்தகவல் தொடர்பு எனப்படும். இதனை உள் மனத் தொடர்பு ( Intra Personal Communication) என்றும் கூறலாம். மனிதச் செயல் களுக்கு அடிப்படைக் காரணமாக விளங்குவது அகத் தகவல் தொடர்பு ஆகும். எடுத்துக்காட்டாக நேர்முகத் தேர்வில் கலந்து கொள்பவர் அத்தேர்வில் எவ்வாறு பங்கேற்க வேண்டும்? எவ்வாறு அதிகாரிகள் கேட்கும் வினாக்களுக்குப் பதிலுரைக்க வேண்டும் என்று தனக்குத்தானே கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது அகத்தகவல் தொடர்பாகும்.

அகத்தகவல் தொடர்பின் உந்துதலே புறத் தகவல் தொடர்பை மேற்கொள்ளத் தூண்டுகிறது. அகத்தகவல் தொடர்பால் மதிப்புகள், நம்பிக்கைகள் போன்றன உருவாக்கப்படுகின்றன. அகத்தகவல் தொடர்பு 'சொல் சாராத் தகவல் தொடர்பாகும்.

**2. புறத்தகவல் தொடர்பு (External Communication)**

ஒருவர் பிறரிடம் கருத்துகளைப் பரிமாறிக்கொள்வது புறத்தகவல் தொடர்பாகும். புறத்தகவல் தொடர்பினைச் சொல்சாராத் தகவல் தொடர்பு, சொல்சார்ந்த தகவல் தொடர்பு என இருவகையாகப் பாகு படுத்தலாம்.

**சொல்சாராத் தகவல் தொடர்பு (Non Verbal Communication)**

சொல்சாராத் தகவல் தொடர்பில் தகவல் கொடுப்பவர் தன் வாய்மொழிச் சொல்லைப் பயன்படுத்தாமல் தான் சொல்ல நினைக்கும் தகவலை தன் முக பாவனையாலும், கையால் சைகை செய்தும், தன் உடல் அசைவுகளாலும் வெளிப்படுத்துவர். இத் தகவல் தொடர்பில் பேசப் பயன்படும் மொழி மௌன மொழி (Silent Languagae) அல்லது உடல் மொழி (Body Laguage) ஆகும்.

பேச்சு மொழியில் பல சொற்றொடர்களைப் பயன்படுத்திச் சொல்ல வேண்டிய கருத்தைச் சைகை மொழியில் மிகச் சுருக்கமாகப் புலப்படுத்த முடிகிறது. இதனால் தகவல் தொடர்பில் சைகை மொழி முக்கிய இடத்தை வகிக்கிறது.

எடுத்துக்காட்டாக வீட்டில் குழந்தை தவறு செய்யும் போது அக்குழந்தையின் தந்தை குழந்தையிடம் கையை ஓங்கிக் காட்டினால் 'அடித்து விடுவேன், ஒழுங்காக இரு' என்று கூறுவதாகப் பொருள்படும். குழந்தையின் தந்தையிடமிருந்து கோபமான சொற்கள் வெளிப்பட வில்லை. ஆனாலும், குழந்தை தன் தந்தையின் தகவலைப் புரிந்து கொள்கிறது.

நாட்டியத்தில் நாட்டியப் பெண்களின் உடலசைவுக்கும், விழிகளின் அசைவுக்கும் பல பொருள்கள் உள்ளன. காதல், பாசம், கோபம்,இரக்கம் போன்ற நவரசங்களையும் உடலசைவு மூலமும், முகபாவம் மூலமும் வெளிப்படுத்துகின்றனர்.

ஒருவர் கைவிரல்களை மூடி கட்டை விரலை மட்டும் உயர்த்திக் காட்டினால் அவர் முயற்சியில் வெற்றி பெற்று விட்டார் என்பதை அறிவிக் கிறார். இரண்டு கைகளையும் தட்டி ஓசை எழுப்பினால் பாராட்டுகிறார் என்றும், கருத்துக்கு ஆதரவு தருகிறார் என்றும் பொருள். ஒருவர் கை கட்டி நிற்பது பணிவுக்கு அடையாளம். இடுப்பில் கை வைத்து நிற்பது அதிகாரத்துக்கு அடையாளம்.

விளையாட்டுகளில் கூட சைகை மொழி பயன்படுவதைக் காண முடிகிறது. கிரிக்கெட் ஆட்டத்தில் நடுவர் வலது கையை நீட்டி அசைத்தால் நான்கு ஓட்டங்கள் தருகிறார் என்று பொருள். இரண்டு கைகளையும் தூக்கி உயர்த்தினால் ஆறு ஓட்டங்கள் தருகிறார் என்று பொருள். ஒரு கையை மட்டும் தூக்கி ஆட்காட்டி விரலை உயர்த்தினால் மட்டை பிடித்தவர் வெளியேற வேண்டும் என்று பொருள்.

சொல் சாராத் தகவல் தொடர்பினை அதன் தன்மைகளைப் பொறுத்து இரு வகையாகப் பாகுபடுத்தலாம். அவை

1. குறியீட்டுத் தகவல் தொடர்பு (Symbolic Communication)

2. உணர்வுத் தகவல் தொடர்பு (Sensory Communication) என்பனவாகும்.

**குறியீட்டுத்தகவல் தொடர்பு (Symbolic Communication)**

அடையாளங்களைப் (Symbols) பயன்படுத்தி பிறருக்குத் தகவலைத் தெரியப்படுத்துதல் குறியீட்டுத் தகவல் தொடர்பு எனப்படும். அடை யாளங்களைப் பார்த்து தகவலைப் புரிந்து கொள்வதில் கடினம் ஏதும் இருக்காது. சிவப்பு முக்கோணம் என்ற அடையாளம் குடும்பக்கட்டுப்பாடு என்ற தகவலை உணர்த்துகிறது. தொடர் வண்டியில் பச்சைக் கொடி காட்டப்படும் போது வண்டி பயணத்தைத் தொடங்குகிறது; சிவப்புக் கொடி காட்டப்படும்போது வண்டி நிற்கிறது. இரவில் பச்சை விளக்கும். சிவப்பு விளக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இதே போன்று சாலைச் சந்திப்புகளிலும் பச்சை, மஞ்சள், சிவப்பு விளக்குகள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த உதவுகின்றன.

**உணர்வுத் தகவல் தொடர்பு (Sensory Communication)**

தொடு உணர்ச்சியின் அடிப்படையில் தகவலைத் தெரிவித்தல் உணர்வுத் தகவல் தொடர்பு எனப்படும். காது கேட்காதவர் களிடத்தில் தகவலைத் தெரிவிக்கும் போது அவர்களைத் தொட்டு,கை அடையாளத்தைக் காண்பித்து தகவலைத் தெரிவிப்பர்.

.**சொல்சார்ந்த தகவல் தொடர்பு (Verbal Communication)**

சொல்சார்ந்த தகவல் தொடர்பில் பங்கேற்போர் தங்கள் வாய்மொழிச் சொல்லைப் பயன்படுத்துவர். இத்தகவல் தொடர்பு சிக்கல் இல்லாதது, எளிமையானது. சொல் சார்ந்த தகவல் தொடர்பைப் பின்வருமாறு பாகு படுத்தலாம். அவை

1. இரு நபர்களிடைத் தகவல் தொடர்பு (Inter Personal Communication)

2. குழுத் தகவல் தொடர்பு (Group Communication)

3. நேரடித் தகவல் தொடர்பு (Face to Face Communicaton)

4. கிசு கிசுத் தகவல் தொடர்பு (Gossip Communication)

5. வதந்தித் தகவல் தொடர்பு (Rumour Communication)

6. மக்கள் தகவல் தொடர்பு (Mass Communication) என்பனவாகும்.

**இரு நபர்களிடைத் தகவல் தொடர்பு (Inter personal Communication)**

தகவலைக் கொடுப்பவரும், பெறுபவரும் நேரடியாகத் தகவல் தொடர்பில் பங்கு பெறுவது இரு நபர்களிடைத் தகவல் தொடர்பு எனப்படும். இத்தகவல் தொடர்பில் பங்கு

பெறுபவர்கள் அருகருகே நின்றும் தகவல் தொடர்பில் பங்கேற்கலாம், அல்லது தொலைபேசி, ஒயர்லஸ், செல்பேசி வழியாகவும் பங்கு பெறலாம். இத்தகவல்தொடர்பு எளிமையானது. தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதில் சிக்கல் இருக்காது. தகவல் அனுப்புவருக்கு உடனடியாக தகவல் பெறுப வரிடமிருந்து பதிலுரைகள் ( Feed Back) கிடைக்கப்பெறும்.

**குழுத் தகவல் தொடர்பு (Group Communication)**

சிறு குழுவினர்கள் தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது குழுத்தகவல்தொடர்பு எனப்படும். சிறு குழுக்களில் மாணவ, மாணவியர், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், நண்பர்கள், குடும்பத்தினர் மற்றும் பல சங்கங்களைச் சார்ந்தவர்கள் இருக்கலாம்.சிறு குழுவில் இருக்கும் உறுப்பினர்கள் தங்களுக்குள் அறிமுகமானவர்களாக இருப்பர். தங்களுக்குள் பலவிதமான கருத்துகளைப் பரிமாறிக் கொண்டாலும் இறுதியில் பெரும்பாலும் ஒரே விதமான முடிவினைத் தேர்ந்தெடுப்பார்கள்.

குழு வகைகள்

குழுத் தொடர்பில் பங்கு பெறும் குழுவை நான்கு வகைகளாகப் பாகுபடுத்தலாம். அவையாவன,

1. அடிப்படைக் குழு
2. தற்செயல் குழு
3. தொடர்புக் குழு
4. பலவினக் குழு என்பனவாகும்.

**அடிப்படைக்குழு**

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பம்,அலுவலகம் போன்றவற்றை அடிப்படைக் குழு எனலாம். குடும்ப நண்பர்கள், ஓரிடத்தில் பணியாற்றுபவர்கள் போன்றோர் அடிப்படைக்குழு அல்லது ஓரினக்குழு எனப்படுவா. இக்குழுவில் நீண்டகால, நேருக்கு நேரான, நெருக்கமான தகவல் தொடர்பு இருப்பதைக் காணலாம்.

**தற்செயல் குழு**

பல்வேறு இனமக்கள், சமயம் சார்ந்தவர்கள் ஏதேனும் ஒரு குறிக்கோளுக்காக ஒன்று கூடுவர். அறிமுகம் இல்லாத உறுப்பினர்கள் ஒன்று கூடுவதைத் தற்செயல் குழு எனலாம்.

இவர்கள் தம்முன் பொதுவான கருத்துகள், எண்ணங்கள் போன்றவற்றைப் பகிர்ந்து கொள்வர். இக்குழுவினரின் தகவல் தொடர்பில் உடனுக்குடன் பதிலுரைகள் ( Feed Back) கிடைக்கப் பெறும்.

**தொடர்புக் குழு**

தொடர்புக்குழுவினர் ஒரு குழுவினைச் சேர்ந்தவர் அல்லர். வெவ்வேறு குழுவைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இவர்கள் நேரடியாகச் சந்திக்காமல் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழியாக கருத்துகளைப் பரிமாறிக் கொள்வர். இக்குழுவின் தகவல் தொடர்பில் பதிலுரைகள் உடனுக்குடன் கிடைக்காது.

**பலவினக் குழு**

மேற்சொன்ன குழுக்களுக்குள் அடங்காதவர்கள் பலவினக் குழுவினர் எனப்படுவர்.

**நேரடித் தகவல் தொடர்பு (Face to Face Communication)**

ஒரு சமுதாயம் நடைபெற அடிப்படையாக விளங்குவது தகவல் தொடர்பு ஆகும். பழங்குடியினரிடமும், வேளாண் குடியினரிடமும் தகவல் தொடர்பு நேருக்கு நேர் நடைபெறுகிறது. அவர்கள் தமக்குத் தெரிந்த வர்களுடனும், உறவினர்களுடனும், குடும்பத்தினருடனும் செய்திகளை

நேருக்கு நேர் பரிமாறிக்கொள்கின்றனர். சிற்றூர்களில், கிராமப்புறங் களில் வாழ்வோர் ஒருவருக்கொருவர் உறிவினர்களாகவோ, அறிமுகம் ஆனவர்களாகவோ இருப்பர். அதனால் அவர்களிடம் கருத்துப் பரிமாற்றம் எளிதில் நடைபெறுகிறது.

நேரடித்தகவல் தொடர்பு என்பது செய்தியை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அனுப்புவதாகும்.

தகவல் தொடர்பில் பங்கு பெறுபவர்கள் நேரடியாகத் தங்களுக்குள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வது நேரடித்தகவல் தொடர்பு எனப்படும்.

இரு நபர்களிடைத் தகவல் தொடர்பிலும், குழுத் தகவல் தொடர் பிலும் தொடர்பு கொள்பவர்கள் பெரும்பாலும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதால் இத் தகவல் தொடர்புகள் நேரடித் தகவல் தொடர்பினைச் சாரும்.

நேரடித் தகவல் தொடர்பில் ஒருவர் மற்றொருவரின் விருப்பு வெறுப்புகளை உடனே தெரிந்து கொள்வதாலும் அதற்கு ஏற்றாற்போல் தகவல் தொடர்பை அமைத்துக் கொள்வதாலும் இத் தகவல் தொடர்பு சிறப்பாகக் கருதப்படுகிறது.

ஒருவருடைய வாழ்க்கையில் மிகுதியாக நடைபெறுவது நேரடித் தகவல் தொடர்பாகும். வீட்டில் குடும்பத்தினருடன் உரையாடுதல், கல்வி நிலையங்களில் ஆசிரியரிடம் உரையாடுதல், பேருந்தில் நடத்துநரிடம் உரையாடுதல், வங்கியில் மேலாளருடன் உரையாடுதல், அலுவல கத்தில் அதிகாரிகளுடன் உரையாடுதல் போன்ற அனைத்துமே நேரடித் தகவல் தொடர்பாகும்.

நேரடித் தகவல் தொடர்பில் பங்கு பெறும் தொடர்பாளர்கள் ஒருவரை ஒருவர் நன்கு அறிவர். ஒருவர் தாம் யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவர். தொடர்பாளர்கள் பரிமாறிக்கொள்ளும் செய்திகள் இருவருக்கும் பொதுவான வையாக இருக்கும். இவர்கள் பொதுவான உலக நடப்புப் பற்றியும், பொருள்களின் விலை உயர்வைப் பற்றியும், அரசியல் பற்றியும், கல்வி நிலை பற்றியும், மக்களைப் பாதிக்கும் ஏதேனும் சிக்கல் பற்றியும் விவாதிக்கலாம். இவர்களுக்குள் நடைபெறும் தகவல் தொடர்புச் செய்தி இருவருக்கும் தெரிந்ததாக இருக்கும். இத் தகவல் தொடர்பில் பங்கேற்பவர்கள் ஆர்வமாக இருப்பதால் தகவல் தொடர்பு தெளிவாகவும் இருக்கும்.

நேரடித் தகவல் தொடர்பில், சொற்றொடர்பும், சொற் சாராத் தொடர்பும் நடைபெறுகிறது. தகவல் தெரிவிப்பவரும், பெறுநரும் உரை யாடும் போது சொற்களுடன் உடலசைவுகளும் இடம் பெறுகின்றன . உடலசைவுகள், முகக் குறிப்புகள், குரல் ஒலி, பயன்படுத்தும் சொற்கள், பயன்படுத்தும் கருவிகள் போன்றவையும் தகவல் தொடர்பில் பங்கேற்கின்றன. நேரடித் தகவல் தொடர்பில் உடனுக்குடன் பதிலுரைகள் ( Feed Back) பெறப்படுகின்றன.

**கிசுகிசுத் தகவல் தொடர்பு (Gossip Communication)**

குறிப்பிட்ட ஒரு நபரைப் பற்றி தவறான செய்திகளைப் பரப்புதல் கிசுகிசுத் தகவல் தொடர்பு எனப்படும். இவ்விதக் கிசுகிசுக்கள் பெரும்பாலும் நடிகர் நடிகையர் பற்றியதாக இருக்கும். திரைப்படச் செய்திகளை வெளியிட்டு வருகின்ற வார இதழ்கள், தினசரிப் பத்திரிகைகளில் இத்தகைய கிசுகிசுக்கள் இடம் பெறுகின்றன. கிசுகிசுப்புத் தகவல் வெகுவிரைவாக மக்களைச் சென்றடையும்.

**வதந்தித் தகவல் தொடர்பு (Rumour Communication)**

தவறான செய்திகளைப் பரப்புதல் வதந்தித் தகவல் தொடர்பாகும். இது வாய்மொழியாக விரைவாகப் பரவும். இது எளிதில் நம்பக்கூடிய செய்தியை உடையதாக இருக்கும்.வதந்தி ஒருவரிடமிருந்து இன்னொரு வரிடம் செல்லும்போது, சில

மாற்றங்களைப் பெறும். இது தவறான அறிக்கை அல்லது அறிவிப்பாகும். இது காட்டுத் தீ போலப் பரவக் கூடியது. இதில் உண்மையும், பொய்யும் பல்வேறு வகைகளில் கலந் திருக்கும். இது மக்களின் வாழ்க்கையோடு தொடர்புடையதாகவும் அவர்களது வாழ்க்கையைப் பாதிக்கக் கூடியதாகவும் இருக்கும். வதந்தி நாடு, வட்டாரம் போன்றவற்றையும் கடந்து பரவும்.தெளிவற்ற சூழல், தெளிவற்ற செய்தி, குழப்பமான மனநிலை போன்றவற்றின் காரணமாக வதந்தி தோன்றிப் பரவுகிறது. சூழ்நிலை தெளிவாக இருந் தால் வதந்தி பரவாது. அப்படியே வதந்தி உருவானாலும் பரவாது.சில சமயங்களில் தகவல்கள் அரைகுறையாகத் தெளிவில்லாமல் வெளியிடப்பட்டால் அது வதந்தியாக உருவெடுத்து விடும். அது பல்வேறு உருவங்கள் பெற்று மக்களிடையே பரவும். மக்கள் தத்தம் கற்பனைக்கும் அறிவுக்கும் தக்கவாறு அரைகுறையான தகவலைப் பூர்த்தி செய்து உலவ விடுகிறார்கள். இறுதியில் பலரது கூட்டுக் கற்பனையில் ஒரு வதந்தி உருவாகி ஊரையே கலக்கி விடுகிறது.

**மக்கள் தகவல் தொடர்பு (Mass Communication)**

மக்கள் தகவல் தொடர்பு பிற தகவல் தொடர்புகளை விடவும் மிகவும் வலிமை வாய்ந்தது. ஏனெனில் பிறத் தகவல் தொடர்புகளில் தகவல் தனி மனிதருக்கோ அல்லது சிறு குழுவினருக்கோ மட்டும் தெரிவிக்கப் படுகிறது. ஆனால் மக்கள் தகவல் தொடர்பில் ஒரே நேரத்தில் பல்லா யிரக்கணக்கான மக்களுக்குத் தகவல் அனுப்பப்படுகிறது.

"ஒரு செய்தியைத் தகவல் தொடர்புச் சாதனங்கள் ( Mass Media) மூலம் ஒரே நேரத்தில் தெரிவிக்கப்படும் போது அத்தொடர்பு 'மக்கள் தகவல் தொடர்பு என்றாகின்றது. அதாவது தகவல் தொடர்புக்கென உருவாக்கப்பட்ட சாதனங்கள் மூலம் பெருவாரியான, பலதரப்பட்ட மக்களுக்குத் தகவல்களையோ, கருத்துகளையோ, நோக்கங் களையோ அறிவிக்கும் முறை மக்கள் தகவல் தொடர்பு எனப்படும்'. (சிவ. சசிரேகா,1992:3)

"மக்கள் தகவல்தொடர்பு என்பது, ஒரே தன்மை உடைய மக்களிடம், பொதுவான கருத்துகளைத் தொடர்புடைய காரணங் களுக்காக மக்கள் தொடர்புச் சாதனங்கள் வழியாக ஒரே நேரத்தில் ". (Denis MC Quail, 1988:168)

தொழில்நுட்பத் தகவல் தொடர்புச் சாதனங்களான பத்திரிகைகள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றின் வழியாக தகவல்களை பலதரப்பட்ட மக்களுக்குத் தெரியப்படுத்துவது மக்கள் தகவல் தொடர்பாகும்.


மக்கள் தகவல் தொடர்பு என்பது ஒரு தகவலைத் தகவல் தொடர்புச் சாதனங்கள் வழியாக பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஒரே நேரத்தில் தெரியப்படுத்துதல் ஆகும். இத்தகவல் தொடர்பு மிகவும் சக்தி வாய்ந்ததாகும். ஆனால் உடனடியாக தகவல் பெறுபவர்களிடமிருந்து பதிலுரைகள் கிடைக்காது. தகவலை அனுப்புகின்றவர் மிகவும் தாமத மாகத்தான் பதிலுரைகளைத் தகவல் பெறுபவரிடமிருந்து பெற முடியும்.

**மக்கள் தகவல் தொடர்பின் கூறுகளும் செயல் முறை விளக்கங்களும்**

மக்கள் தகவல் தொடர்பில் அனுப்புநர் ( Source), செய்தி ( Message) செய்திப்பாதை (Channel), பெறுநர் ( Receiver), பின்னூட்டம் ( Feed Back) அல்லது விளைவு ( Effect) என்னும் கூறுகள் காணப்படுகின்றன. இதனை 'SMCRF/E' .

**தகவல் தொடர்பு மாதிரி**

**(COMMUNICATION MODEL)**




| | | | | |
|---|---|---|---|---|
| S | - | Source | - | (அனுப்புநர்) |
| M | - | Message | - | (செய்தி) |
| C | - | Channel | - | (செய்திப்பாதை) |
| R | - | Receiver | - | (பெறுநர்) |
| F | - | Feed Back | - | (பின்னூட்டம் பதிலுரைகள்) |
| E | - | Effect | - | (விளைவு) |

1. அனுப்புநர் (Source)

செய்தியை அனுப்புகின்றவர் ( Sender) செய்தி மூலம் ( Source) என்று அழைக்கப்படுகிறார். மக்கள் தகவல் தொடர்பில் தகவல் அனுப்புகின்றவர் இரண்டு செயல்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக தான் என்ன செய்தியை அனுப்பப் போகிறோம் என்பதையும், இரண்டாவதாக அச்செய்தியை எவ்வாறு

கூறப்போகிறோம் என்பதையும் தெரிந்திருக்க வேண்டும். செய்தியின் உள்ளீடு ( Content) சிறப்பாக அமையாவிட்டால் அல்லது செய்தி சரியாகக் கூறப்படாவிட்டால் தகவல் தொடர்பு தோல்வியடையலாம். எனவே தகவல் தொடர்பு வெற்றியடைய தகவலை அனுப்புகின்றவர் செய்தியைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

**2. செய்தி (Message)**

நம்மைச் சுற்றி நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் செய்தியாகும். செய்தி என்பதற்குப் புதுமை என்பது பொருள். ஆங்கிலத்தில் இதனை News T. (N- North, E- East, W- West, S- South) நான்கு திசைகளிலும் இருந்து கிடைக்கக்கூடிய புதுமையானதே செய்தி எனலாம். பழைய செய்தி வரலாறு ஆகும். இதைத்தான், "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்கிறோம்.

"புதிதாக கேட்கப்படுகின்ற ஒன்று, தற்போது நடைபெற்ற ஒன்றைப் பற்றி கூறும் முதல் தகவல்தான் செய்தி என நியூஸ் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு சேம்பர்ஸ் அகராதி விளக்கம் தருகின்றது". (ச. ஈஸ்வரன், இரா. சபாபதி, 2004: 125)

செய்தி என்பது செய்தியாகவோ, கருத்தாகவோ, பொழுது போக்கு நிகழ்ச்சியாகவோ அமையலாம். செய்தி அனுப்பப்படும் தகவல் தொடர்புச் சாதனங்களுக்கு ஏற்ப அனுப்பப்படும் செய்தியின் உருவம் மாறுபடுகிறது. உதாரணமாக தொலைக்காட்சி. ஒலி, ஒளி இரண்டையும் பயன்படுத்துகிறது. ஆனால் வானொலி ஒலியை மட்டும் கொண்டு செயல் படுகிறது. எனவே வானொலி மூலம் அனுப்பப்படும் செய்தி எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அமைக்கப்படல் வேண்டும். நீளமான வாக்கியங்கள், மயக்க நிலை வாக்கிய அமைப்பு ( Ambiguous Sentence) ஆகியவற்றை முற்றிலுமாக நீக்க வேண்டும். ஏனெனில் வானொலி மூலம் செய்தி பெறுபவர்களுக்கு, மீண்டும் செய்தியைப் படித்துப் புரிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆனால் தொலைக் காட்சியில் படங்களும், பேச்சுகளும் இணைவதால் வானொலியைக் காட்டிலும் தொலைக்காட்சி சக்தி வாய்ந்த சாதனமாகின்றது.

**3. செய்திப் பாதைகள் (Channel)**

செய்தி அனுப்புபவர் செய்தி பெறுபவருக்கு செய்திப் பாதைகள் வழியாகச் செய்தியை அனுப்புவார். செய்திப்பாதைகள் சக்தி வாய்ந்தவை.

சொல்சாராத் தகவல் தொடர்பிலும், பொதுமக்கள் தகவல் தொடர்புத் தவிர, பிற சொல்சார்ந்த தகவல் தொடர்புகளிலும் செய்தி அனுப்புபவரே செய்திப் பாதையாகவும்

அமைகிறார். மக்கள் தகவல் தொடர்பில் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்திப் பாதையாகச் செயல்படுகின்றன .

## மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களின் நோக்கம்

உலகில் மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே தகவல் தொடர்பும் துவங்கிவிட்டது. தொடக்கக் காலங்களில் தன் வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனிதன் பல வழிகளிலும் தொடர்பு கொண்டான். ஆனால் இன்றோ தங்களது வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் மக்கள் தொடர்பினை மேற்கொள்கிறார்கள். மக்கள் வாழ்வின் ஓர் உறுப்பாகவே தகவல் தொடர்பு மாறிவிட்டது.

ஒருவர் ஒரு தகவலை அல்லது செய்தியைப் பிறருக்குத் தெரிவித்தலே தகவல் தொடர்பு எனப்படும். தனிமனிதத் தொடர்பு குழுத் தொடர்பாகிப் பொதுமக்கள் தொடர்பாக மாறியது. தகவல் பரிமாற்றம் என்ற அடிப்படை நோக்கத்திலிருந்து மாறி இன்று பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மக்கள் தொடர்பு மாறிவிட்டது.

மரபுவழி, அச்சுவழி, மின்னணுவழிச் சாதனங்கள் மூலமாகப் பொதுமககள் தொடர்பு மிக எளிமையாக மாறிவிட்டது. மக்களாட்சி அமைப்பில் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களின் பணி இன்றியமை யாததாகும். சமூகத்தில் ஏற்படும் பல மாற்றங்களுக்கு இச்சாதனங்களின் தேவை முக்கியமானதாகும்.

உலகத்தை ஒரு குறுகிய எல்லைக்குள் கொண்டு வருவதே மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களின் தலையாய நோக்கமாகும். மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்களுக்கு அறிவிப்பதையோ, கற்பிப் பதையோ மட்டுமே செய்வதில்லை. பொதுப்பணிகளின் கண்காணிப் பாளராகவும், மக்களின் உரிமைகளின் பாதுகாவலராகவும் செயல் படுகின்றது.

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் அறிவித்தல் ( To inform). அறிவுறுத்தல் ( To instruct), பொழுதுபோக்குதல் ( To entertain). எண்ணத்தை உருவாக்குதல், எண்ணத்தைப் பிரதிபலித்தல், வியாபாரப் படுத்தல் என்பனவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

கூர்ந்தாய்தல்,இணைத்துக்காட்டல், சமுதாயச் சார்புடைய வராக்கல், சமுதாயத்தகவல் தருதல், செய்தி வலுவூட்டல், நியதி வகுத்தல், வழிப்படுத்துதல் போன்றவற்றையும் சிறப்பு நோக்கங்களாகக் கொண்டு மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் இயங்குகின்றன.

**1. அறிவித்தல் (To inform)**

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களின் தலையாய நோக்கம் மக்களுக்கு அனைத்து விபரங்களையும் உடனுக்குடன் உண் மையாக விருப்பு வெறுப்பின்றி முழுமையாக வழங்க வேண்டும்.

**2. அறிவுறுத்தல் (To instruct)**

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்திகளை அறிவித்தல் மட்டும் போதாது. தேவையான விபரங்களை வழங்கி மக்களுக்குக் குறிப்பிட்ட செய்தி பற்றிய தெளிவினையும் ஏற்படுத்த வேண்டும்.

**3. பொழுதுபோக்கு (To entertain)**

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்கள் சோர்ந்து விடாமலிருக்க, உற்சாகமூட்டி பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த தகவல்களைத் தெரிவிக்க வேண்டும்.

**4.எண்ணத்தை உருவாக்குதல்**

மக்களிடையே செய்திகள் பற்றிய முழு வெளிப்பாட்டினையும் உணர்த்தி செய்தி பற்றிய சிந்தனையைத் தூண்டி பல கருத்துகளை உருவாக்க வேண்டும்.

**5. கூர்ந்தாய்தல்**

மக்களைப் பாதிக்கும் நிகழ்வுகளைக் கூர்ந்தாய்ந்து தொகுத்து மக்களுக்குக் கொடுத்து பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும்.

**6. இணைத்துக்காட்டல்**

காரணமின்றிக் காரியமில்லை. காரணத்திற்கான காரியத்தையும் கண்டுபிடித்து இரண்டையும் இணைத்துக் காட்ட வேண்டும்.

**7. சமுதாயச் சார்புடையவராக்கல்**

சமுதாய நலன் மிகவும் முக்கியமானது. மக்களைச் சமுதா யத்தோடு தொடர்புடையவராக்கிச் சமுதாயக் கல்வியை மக்களுக்குக் கொடுக்க வேண்டும்.

**8. சமுதாயத் தகவல் தருதல்**

சமுதாயத்தில் நடக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களைக் கொடுக்க வேண்டும். சமுதாயத்தின் நிறைவுகளை மட்டுமின்றிச் சமுதாயக் குற்றங்களையும் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

**9. செய்தி வலுவூட்டல்**

முக்கியமான செய்திகளை மீண்டும் மீண்டும் மக்களுக்குத் தெரியப்படுத்தி அச்செய்திகளை வலுவூட்ட வேண்டும்.

**10. நியதி வகுத்தல்**

ஒரு கருத்து மீண்டும் மீண்டும் மக்களிடம் வலுவூட்டப் படும்போது மக்கள் கவனத்தைக் குறிப்பிட்ட கருத்துக்கள் கவர்ந்து பின் அவையே நியதிகள் ஆகின்றன. இதனால் மக்களின் பழக்கவழக்கங்கள் சீரமைக்கப்படுகின்றன.

**11. வழிப்படுத்துல்**

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்களை நல்வழிகளில் வழிநடத்த வேண்டும். எந்த வழியைத் தேர்ந்தெடுத்தால் மனிதன் சிறப்புற முடியும் என்பதனை நிர்ணயித்துக் காட்ட வேண்டும்.

மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் மக்களுக்குத் தகவலைத் தெரிவித்து மக்களை நல்வழிப்படுத்துகின்றன; அவர்களை விழிப்புணர்வு அடையச் செய்கின்றன. மக்கள் தகவல்களைத் தெரிந்து கொள்வதால் அறிவுடையவர்களாக மாற்றப்படுகிறார்கள். கல்லூரி மாணவர்கள் தகவல்களைத் தெரிந்து கொள்வதால், போட்டித் தேர்வுகளுக்குத்

தங்களைத் தயார்படுத்திக் கொள்கிறார்கள். மக்கள் மருத்துவச் செய்திகளைத் தெரிந்து கொள்வதால் உடல்நலத்தில் அக்கறைக் காட்டு கிறார்கள். இவை போன்று பல நன்மைகளைச் சமுதரயத்திற்குத் தகவல் தொடர்புச் சாதனங்கள் செய்து வருகின்றன.

கல்வியே மக்களாட்சிக்கு ஆதாரம். கல்விதான் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும். அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய உறுப்பாகக் கல்வி அமைகின்றது. குழந்தைக் கல்வி, வயது வந்தோர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, செயல்முறைக் கலைக் கல்வி,உடற்கல்வி என்று அத்தனைக் கல்விகளையும் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் செவ்வனே முறைசாராக்கல்வி, முறைசார்கல்வி, விரிவாக்கக் கல்வி மூலம் செய்கின்றன.

சமுதாய மாற்றத்திற்கான ஒரு காரணியாதல், தேசிய ஒருமைப் பாட்டை வளர்த்தல், மக்களிடையே அறிவுப்பூர்வமான சிந்தனையை உருவாக்குதல், தேவையான வேளாண் செய்திகளைத் தருதல், சுற்றுச்சூழல் மற்றும் உயிரினச் சூழல் இவற்றைப் பாதுகாக்க உதவிடல், விளையாட்டில் மக்களிடையே ஆர்வத்தை வளர்த்தல், கலை மற்றும் கலாச்சார

மரபைப் போற்றித் தூண்டுதல் போன்றவற்றில் மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் சக்தி மிக்க சாதனங்களாகத் திகழ்கின்றன.

**அச்சுக் கலையின் தோற்றம்**

மனிதன் எழுதக் கற்றுக்கொண்ட பிறகு எழுத்தின் மூலமும், ஓவியங்களின் வாயிலாகவும் செய்திகளைப் பரப்பினான். ஆட்களை அனுப்பியும் செய்திகளைப் பரப்ப எழுத்து முறை துணை செய்தது. எகிப்து நாட்டில் அடிமைகளை வைத்தும், கிரேக்க நாட்டில் குதிரை யாட்கள் மூலமும் அரசனின் செய்திகளைப் பரப்பியதாக வரலாறு கூறுகிறது.

ரோம் நாட்டை ஆண்ட ஜூலியஸ் சீசர் கி.மு. 60-ஆம் ஆண்டில் அரண்மனைச் செய்திகளை 'ஆக்டா டையூர்னா' (Acta Diurna -அன்றாட நடவடிக்கை) என்ற பெயரில் எழுதி பொது இடங்களில் வைத்தார். மேலும் போர்ச் செய்திகளை தலைநகருக்கு அனுப்பி வந்தார். இதனால் சீசரை இதழியலின் தந்தை' என்று அழைக்கின்றனர். ஆனால் சிலர், சீசருக்கு முன்பே கி.மு. 106இல் சிசரோ, பிறப்பு - இறப்பு விபரங்களை எழுதி தனது அரண்மனைக்கு முன்னால் பலரும் பார்க்க அறிவித் தாரென்றும், ஆதலால் அவரையே இதழியலின் முன்னோடியாகக் கருத வேண்டுமென்றும் கூறுகின்றனர். (மா.பா. குருசாமி,1988:44)

இத்தாலியில் ஆஷ்டிரியா என்ற இடத்தில் அகலமான கற்பாறை களில் கி.மு. 49ஆம் ஆண்டு பாம்பே ( Pompey) மன்னனின் இறப்புச் செய்தி குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியாவில் அசோகரின் கல்வெட்டுகளை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம். புத்தமதக் கொள்கைகளையும், அரச கட்டளைகளையும் பரப்புவதற்கு இவை பெரிதும் பயன்பட்டன.

கி.பி. எட்டாம் அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் 'பீகிங் கெஜட்' (Peking Gazette) என்ற மரத்தால் செய்த அச்சுக்கருவிகளைக் கொண்டு பத்திரிகை வெளியிடப்பட்டதனை ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனையே முதல் பத்திரிகையாகக் கருதலாம்.

கி.பி. 105-இல் மல்பெரி மரப்பட்டையிலிருந்து ( சாய்லன் என்ற சீனக்காரர் முதன் முதலாக காகிதம் செய்வதைக் கண்டுபிடித்தார். கி.பி. 795-இல் அரேபியர்கள் பாக்தாத்தில் காகிதம் செய்யும் ஆலை ஒன்றை நிறுவினர். அச்சுக்கலையும் முதலில் சீனாவில் தான் தோன்றியது. மர எழுத்துகளைச் செய்து, அவற்றில் மை தடவி தாளில் 'அழுத்தி' (Press) அச்சிட்டனர். அச்சகத்திற்கு 'பிரஸ்' என்று பெயர் வந்ததும் இதுவே காரணமாகும். கி.பி. 1041-

இல் பிசெங் என்ற சீனக்காரர் களிமண்ணில் எழுத்துகளைச் செய்து, சுட்டு, தகடு சுத்தி, கடினப்படுத்தி, அச்சிடும் முறையைக் கொண்டு வந்தார்.

கி.பி. 1450 இல் ஜான் கூடன்பர்க் (John Gutenberg 1398-1468) என்ற ஜெர்மானியர் முதன் முதலில் அச்சுப் பொறியினைக் கண்டுபிடித்தார். ஜான் கூடன்பர்க்கினுடைய கண்டுபிடிப்பே தற்கால அச்சுக்கலை வரலாற்றின் துவக்கமாக இருந்தது.

தற்கால அச்சுக்கலைக்கு மேலும் வலுக்கொடுத்தவர் ஜார்ஜ் பி. கார்டன் என்பவர். தற்கால சிலிண்டா அச்சு இயந்திரம் வில்லியம் நிகல்சன் என்பவரால் 1790 இல் வடிவமைக்கப்பட்டது. ஆனால் அவரால் அதனை முழுமையாக்கி வெளியே கொண்டுவர முடிய வில்லை. பிரடரிக் சேனிக் என்பவர் முதலில் நீராவி சக்தியினால் இயங்கக்கூடிய அச்சு இயந்திரத்தை அமைத்தார். அது 1814-இல் இலண்டனில் 'தி டைம்ஸ்' பத்திரிகையால் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதன் மூலம் ஒரு மணி நேரத்திற்கு 1,100 பக்கங்கள் அச்சடிக்கப்பட்டன. இதற்குப்பின் 34 ஆண்டுகள் கழித்து ரிச்சர்டுஹோ என்ற அமெரிக்கர் முழுமையான ரோட்டரி அச்சு இயந்திரத்தை வடிவமைத்தார். இவ்வியந்திரம் அச்சு எழுத்துகளை உருளையில் கொண்டு விளங்கியது. இதன்மூலம் ஒரு மணி நேரத்தில் 8,000 படிகள் எடுக்க முடியும். இதுவே அச்சுக்கலையின் துவக்க நிலையாக இருந்தது.

அச்சுக்கலையின் துவக்கம் பத்திரிகைக் கலையை வளர்க்கும் முதல் முயற்சியாக விளங்கியது. அச்சுக்கலை அடிப்படைக் கூறுபாடு களைக் கொண்டது. 1 அச்சு செய்வதற்குரிய பகுதி 2. அசசு இயந்திரம் 3. அச்சு மை 4. அச்சிடுவதற்குரிய தாள், மற்றும் அச்சுக்கலையில் 1. படிப்பெருக்குதல் 2. மையைச் செலுத்துதல் 3. அச்சு எழுத்துகளைச் சேர்த்தல் ஆகிய மூன்று கூறுபாடுகளையும் கூடக் குறிப்பிடுவர். அச்சுமுறையில் முக்கியமான மூன்று முறையினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது 1. எழுத்து அச்சுமுறை (Letter Press), 2. புகைப்பட அச்சுமுறை ( Photogravure), 3.ஆப்செட் ( Offset) ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.

அச்சுக்கலை அச்சுவழித் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி நிலைக்கு அடிப்படையாக அமைந்தது. செய்தித்தாள், இதழ்கள். புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், தட்டிகள் போன்ற வகைகளில் அச்சு வழியாகத் தகவல்கள் பல்லாயிரக் கணக்கான மக்களைச் சென்றடைகின்றன.

அச்சுவழி முறையில் தற்காலத்தில் நேர்படி அனுப்பும் முறைப் பதிப்பு ( Facsimile Edition), செயற்கைக்கோள் செய்திப்படி அனுப்பும் முறை (Satellite Edition) போன்றவை உள்ளன.

**வானொலி தோற்றமும் வளர்ச்சியும்**

தகவல் தொடர்பைப் புரட்சிகரமானதாக மாற்ற பல புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. மனித வாழ்வின் வேகம், எதையும் விரைந்து செய்ய வேண்டும் என்னும் உந்துதல், நாகரிக வளர்ச்சி, கல்வியில் முன்னேற்றம் போன்றவை வானொலிக் கண்டுபிடிப்பிற்கு முன்னோடியாயின.

கம்பியில்லாத் தந்தியின் அரிய சக்தியைப் பயன்படுத்தி மனிதக் குரலையும், இசையையும் மின்காந்த அலைகள் மூலம் வீடுகளில் கேட்கச் செய்வது எப்போது என்ற மக்களின் பேரார்வம் வானொலிக் கண்டுபிடிப்பிற்கு உதவியது. வானொலி காதுக்குரிய சாதனம். ஆகையால் அதனைப் 'பார்வையற்ற சாதனம்' (Blind medium) என்பர். ஆனால் வானொலி ஒலி வழியாக, நிகழ்ச்சிகளைக் கேட்பவரின் சிந்த னையையும், கற்பனையையும் தூண்டி அவர் உள்ளத்தில் ஒரு சிறந்த சித்திரத்தைப் பதித்து விடும் ஆற்றல் பெற்றது. வேறு ஒரு வேலையைச் செய்து கொண்டே வானொலியின் நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

**உலக நாடுகளில் வானொலி ஒலிபரப்பு - வரலாறும் வளர்ச்சியும்**

1844-ஆம் ஆண்டு மோர்ஸ்ட் என்பவர் மின்கம்பிகளின் வழியாகச் செய்திகளைக் குறியீடுகளாக மாற்றி அனுப்பலாம் என்பதைக் கண்டுபிடித்தார். ஒலி அலைகளுக்கும், மின்னோட் டத்திற்கும் உள்ள உறவின் அடிப்படையில் அலெக்சாண்டர் தி கிரகாம்பெல் 1876-ஆம் ஆண்டில் ஒலிபெருக்கியை உருவாக்கி தொலைத் தகவல் தொடர்புச் சாதன வளர்ச்சியில் பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து மார்க்கோனி பல ஆராய்ச்சிகளைச் செய்து ஒலி அலைகளை மின் அலைகளாக மாற்றினார். இவர் 1896-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தமது வானொலிக் கண்டுபிடிப்பை இங்கிலாந்தில் பதிவு செய்தார். 1901-ஆம் ஆண்டு மார்க்கோனி வானொலி நிறுவனத்தைத் தொடங்கினார். 1904-ஆம் ஆண்டு பிலிமிங் என்பவர் மின்னணுக் குழாயில் மின்னலைகளை ஒரே திசையில் ஓட விட்டுக் காட்டினார். லீ.டி. காரஸ்ட் என்னும் அமெரிக்க அறிவியலாளர் மின்னணுக் குழாயில் கம்பிப் பின்னலைச் சேர்த்து வலிமை உடைய குழாயாக மாற்றினார்.

1920-ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் தேதி அமெரிக்காவிலுள்ள பிட்ஸ் பர்க்கில் உலகத்தின் முதல் ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டது. இந்த ஒலிபரப்பு நிலையத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஹார்டிங்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி முதல் ஒலிபரப்பாகியது.

ஐரோப்பிய நாடுகளில் இங்கிலாந்து ஒலிபரப்பில் அதிக அக்கறை காட்டிய முதல் நாடாகும். ஆனால் தனிமனிதன் விரும்பிய எதையும் ஒலிபரப்புவதற்குப் பிரிட்டன் பல

கட்டுப்பாடுகளை விதித்தது. 10 வாட் ஆற்றலுக்கு மேல் ஒலிபரப்புச் செய்தல் கூடாது என்று தடை விதித்தது. எந்த நேரத்திலும் ஒலிபரப்புத் தடைசெய்யப்படலாம் என்ற அச்சத்திலேயே ஒலிபரப்பினர்.

1922-ஆம் ஆண்டு இலண்டனில் 100 வாட் ஆற்றல் ஒலி பரப்பு நிலையம் நிறுவப்பட்டது. இதே ஆண்டில் பிரிட்டனின் ஆறு நிறுவனங் கள் ஒன்றுகூடி 'பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்' (British Broadcasting Corporation) என்ற பொது நிறுவனத்தை உருவாக்கினர். இந்நிலையம் தினசரி நிகழ்ச்சிகளை ஒலி பரப்பியது. இதனைத் தொடர்ந்து பர்மிங்ஹாமிலும், மான்ஸ் செஸ்டரிலும் ஒலிபரப்புகள் தொடங்கப்பட்டன. 1923-ஆம் ஆண்டு செக்கோஸ்லோவாக்கியாவிலும், ஜெர்மனியிலும், பெர்லினிலும் ஒலிபரப்புகள் தொடங்கப்பட்டன.

தொடக்க காலங்களில் 100 முதல் 500 மீட்டர் நீளமுடைய மத்திய அலைகளிலும், 1000 முதல் 2000 மீட்டர் நீளமுடைய நெட்டலை களிலும் ஒலிபரப்புகள் செய்யப்பட்டன. 1926-ஆம் ஆண்டு குறுகிய அலைகளைப் பயன்படுத்தி நெடுந்தொலைவிற்குச் செய்திகளை அனுப்பினர். 1928-ஆம் ஆண்டில் உலகில் 400 வானொலி ஒலிபரப்பு நிலையங்கள் இருந்தன. 1948-ஆம் ஆண்டு 'டிரான்சிஸ்டர்' கண்டு பிடிக்கப்பட்டது.

உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கும் தலைமைச் செயலகம் ஜெனிவாவில் உள்ளது. இச்செயலகம், வானொலி நிலையங்களுக்குரிய அலைவரிசைகளைத் தீர்மானிக் கின்றது. ஒரு வானொலி நிலையத்தின் அலை வரிசையில் மற்றொரு வானொலி நிலையம் குறுக்கிடாதவாறு இச்செயலகம் பணியாற்றுகிறது. உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துகிறது.

**இந்தியாவில் வானொலி ஒலிபரப்பு -வரலாறும் வளர்ச்சியும்**

செய்தி ஒலிபரப்பை நிகழ்த்திய தொடக்க கால நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. எனினும் இந்தியா ஒலிபரப்பில் பல தடைகளைக் கடந்து வந்து தான் இன்றுள்ள வளர்ச்சியை அடைந்துள்ளது.

பம்பாய் மாகாணத்தின் ஆளுநராக இருந்த சர் ஜார்ஜ் லாயிட்டின் வேண்டுகோளுக்கிணங்க, அஞ்சல் தந்தித் துறையின் ஒத்துழைப்புடன் 'டைம்ஸ் ஆ.:ப் இந்தியா' ஒரு சிறப்பு ஒலிபரப்பை 1921-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஏற்பாடு செய்தது.

பம்பாயிலிருந்து சுமார் 175 கி.மீ தொலைவில் புனே நகரில் இருந்த சர் ஜார்ஜ் லாயிட் இந்தச் சிறப்பு இசை நிகழ்ச்சி ஒலிபரப்பைக் கேட்டு மகிழ்ந்தார்.

**1. வங்காள வானொலிக் குழாம்**

வங்காள வானொலிக்குழாத்திற்கு ( Radio club) சிறிய வானொலி ஒலிபரப்புக் கருவி மூலம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது. இந்தக் குழாம் 1923 நவம்பரில் தனது ஒலிபரப்புச் சேவையைத் தொடங்கியது.

2. இந்திய ஒலிபரப்பு நிலையம் (Indian Broadcasting)

**திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

திரைப்படம் கலை, கருத்து, இசை, பாடல்கள்,நடிப்பு ஆகிய வற்றால் ஆற்றல்மிக்க தகவல் தொடர்புச் சாதனமாகவும், பொது மக்களுக்குப் பயனுள்ள பொழுதுபோக்குச் சாதனமாகவும் திகழ்கின்றது. திரைப்படம் பார்த்தல் - கேட்டல் என்ற நிலையில் இருவழி ஊடகமாகவும் ( Audio - Visual Medium) விளங்குகின்றது. எழுத்தறிவற்ற பாமர மக்களும் திரைப்படத்தைப் பார்த்து ரசிக்கின்றனர்.

தொடக்க நிலையில் திரைப்படம் நகர மக்களுக்குப் பயனுள்ள பொழுதுபோக்குச் சாதனமாக விளங்கியது. இந்தியாவில் உழைக்கும் மக்கள் மிகுந்துள்ள பகுதிகளில் மிகக் குறைந்த செலவில் அறிமுகப் படுத்தப்பட்ட திரைப்படம், நகரங்களில் வெகு விரைவில் பரவியது. திரைப்படம் மக்களால் உடனடியாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும், எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் விளங்கும் தகவல் தொடர்பியல் ஊடகமாகும். காரணம், திரைப்படத்திற்கு மொழியைப் பற்றிய முழுமையான அறிவு தேவையில்லை. இந்தக் காரணிகளே திரைப்படத்தைப் பொழுது போக்கு வடிவமாக உருவாக்கியுள்ளன. உடனடியாக கிராமங்களிலும் இந்த ஊடகம் பரவியது.

மக்கள் தங்களது வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற் காகவும், மனச் சுமைகளைக் குறைப்பதற்காகவும் திரைப்படத்திற்குச் செல்கின்றனர். இந்தியச் சமூகத்தின் ஓய்வுநேர அமைப்பில் திரைப் படங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்கள் உளவியலில் (Audience psychology ) திரைப்படங்கள் அழுத்தமான சுவடுகளைப் பதியச் செய்துள்ளன.

திரைப்படங்கள் நமது சமூகத்தின், பண்பாட்டின் புதிராகவும், காலத்தைத் தாண்டி நின்று மகிழ்வூட்டக்கூடிய பொழுதுபோக்குச் சாதனமாகவும், சமூக மாற்றங்களைப் பற்றிச் சிந்திப்பவர்கள் மறந்து விடுகின்ற சமூகச் சக்தியாகவும் உள்ளன. மேலும் திரைப்படங்கள் அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் சக்திமிக்கச் சாதன மாகவும்

விளங்குகின்றன. ஆனால் அதே நேரத்தில் மக்களிடம் பல விபரீத விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. குறிப்பாகச் சிலத் திரைப் படங்களில் காட்டப்படுகின்ற வன்முறைச் செயல்கள், சமூகவிரோதச் செயல்கள் சமூகத்தில் குற்றவாளிகளை உருவாக்கி விடுகின்றன.

**திரைப்படத்தின் தொடக்க காலம்**

தொடக்க காலத்தில் திரைப்படம் பல பெயர்களால் அழைக்கப்பட்டன. மக்கள் சிறு துளை வழியே காட்சிகளைக் கண்டதால் பீப் ஷோ ( Peep Show) என்றும், இயங்குகின்ற தொடர்ச்சியாகக் காட்சிகளைத் தொகுத்து வழங்கியதால் 'கைனெட்டா ஸ்கோப்' (Kinetto Scope) என்றும் அழைத்தனர். பின்னர் 'மியூட்டோஸ்கோப்' (Mutoscope), பயோ கிராப் (Bio Graph) என்றும் அழைத்தனர். ஆனால் நமது நாட்டவர் 'பயாஸ்கோப்' என்றே அழைத்தனர். நாளடைவில் சினிமா என்று அழைக்கப்படலாயிற்று. சினிமா என்ற சொல்லானது 'சினி' என்ற சொல்லி லிருந்து உருவானது. 'சினி' என்ற இலத்தீன் சொல் உணர்த்துவது 'அசைவு' என்பதாகும். அசைவு இல்லாதப் படத்தைத் திரையில் அசையச் செய்யும் நிலையேற்பட்ட பொழுது அதற்கு 'சினிமா' என்று பெயரிட்டார்கள். அந்த இலத்தீன் சொல்லே பின்னாளில் மருவி 'சினிமா' வாயிற்று. திரையில் காணும் படமாகியதால் அதனைத் திரைப்படம் என அழைத்தனர்.

அமெரிக்கரான தாமஸ் ஆல்வா எடிசனின் 'கைனட்டோ ஸ்கோப்' என்ற கருவியே திரைப்படத்தின் ஆரம்ப நிலைக்கு வழிகோலிற்று. அது 1884-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அக்கருவியின் உதவியால் கண்ணாடியில் படங்களைப் பொருத்திக் காட்டி வந்தனர். முதன் முதலாக 23.04.1886-ஆம் ஆண்டு அக் கருவியின் மூலம் படம் காட்டப்பட்டது. கண்ணாடியில் படங்களைப் பொருத்துவதற்குப் பதிலாக செல்லுலாய்ட்டைப் பயன்படுத்தி படம் பிடிக்கும் முறை 1889-இல் வில்லியம் பிரிஸ்கின் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை சினிமாட்டோ கிராப் என்று அழைத்தனர்.

ஒரே சமயத்தில் பலர் உட்கார்ந்து படம் பார்க்கும் 'சினிமாட்டோ கிராபி என்ற கருவியை 1895-ஆம் ஆண்டு லூமியர் சகோதரர்கள் கண்டு பிடித்தனர். இப்போதுள்ள திரைப்படக் கருவிக்கு அதுவே முன்னோடியாகும்.

இங்கிலாந்து நாட்டில் இராபர்ட்பால் என்பவர் 1895-ஆம் ஆண்டு டிசம்பரிலும், 1896-ஆம் ஆண்டு ஜனவரியிலும் அம்முறையில் திரைப் படத்தைக் காண்பித்தார்.

ஜெர்மனியில் முதன்முதலாக திரைப்படத் தொழிலுக்கு வித்திட்டவர்கள் மேக்ஸ்எமில், ஸ்கவடெனோஸ்கி ஆகியோர் ஆவர்.

உலகிலேயே சட்டவிதிமுறைகளுக்குட்பட்டு ஒரு முழுமையான மற்றும் முறையான திரைப்பட அரங்கு அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் எனும் நகரில் 1905-ஆம் ஆண்டு ஜாண் பி.ஹாரிஸ் என்பவரால் திறக்கப்பட்டது. அது நிக்கலோடியோன் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டது.

06.07.1928-ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் 'லைட் ஆப் நியூயார்க்' எனும் முழுநீள பேசும்படம் திரையிடப் பட்டது (டாக்டர். அ. சாந்தா, வீ. மோகன், 2001 : 373)

**இந்தியத் திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

இந்தியாவுக்கு வந்த முதல் திரைப்படம் ‘ஏசுவின் வாழ்க்கையாகும். இத்திரைப்படம் 1896-இல் பம்பாயில் திரையிடப்பட்டது. இது ஓர் ஊமைப் படமாகும்.இத்திரைப்படங்கள் நான்கு வருடங்கள் ஓடிக் கொண் டிருந்தது. இத்திரைப்படத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்த 'டுபான்ட்' இந்தியாவின் பல நகரங்களிலும் காட்டினார்.

ஏசுவின் வாழ்க்கை திரைப்படத்தைத் திருச்சியில் காட்டிக் கொண்டிருந்த பிரெஞ்சுக்காரரான 'டுபான்ட்' உடல்நலக் குறைவு காரணமாகத் தாயகம் திரும்ப நேரிட்டபோது, சாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர், அவரிடமிருந்து அப்படச்சுருளையும், கருவியையும் விலைக்கு வாங்கினார். திருச்சியில் குடியிருந்த சாமிக்கண்ணு வின்சென்ட் தான் தமிழகத் திரைப்பட வரலாற்றின் பிதாமகர் ஆவார்.

வின்சென்ட் தம் சொந்த ஊரான கோயமுத்தூரில் 1914-இல் ஒரு நிரந்தரத் திரைப்படக் கொட்டகையைக் கட்டினார். வெரைட்டி ஹால் என்றழைக்கப்பட்ட அதுவே தென்னிந்தியாவின் முதல் நிரந்தரத் திரையரங்கமாகும்.

**தொலைக்காட்சி தோற்றமும் வளர்ச்சியும்**

இன்றைய நவீன உலகத்தை ஒரு எலக்ட்ரானிக் யுகம் என்றே கூறலாம். தகவல் தொடர்புச் சாதனங்களின் முன்னேற்றத்தால் நம்முடைய அன்றாட வாழ்க்கை மிகவும் எளிமையாகி விடுகிறது. மக்கள் தொடர்புச் சாதனங்களில் காணப்படும் அறிவியல் முன்னேற் றத்தின் பலனாக உலக நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம் உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடிகிறது.இதனால் உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கி வருகிறது.

ஒலியையும், ஒளியையும் தொலைக்காட்சி நிலையம் உயர்ந்த ஒளிப்பரப்புக் கோபுரத்தின் வழியாக மின்காந்த அலையாக மாற்றிக் காற்றில் கலக்கச் செய்கிறது.

தொலைக்காட்சிப் பெட்டியில் இணைக் கப்பட்டுள்ள ஆண்டனா என்னும் கருவி மின்காந்த அலையை உள்வாங்கி ஒலி ஒளிக் காட்சியாகக் கேட்கவும், காணவும் செய்கிறது.

படத்தையும் ஒலியையும் பல கிலோமீட்டர்களுக்கு அப்பால் எண்ணற்ற இடங்களுக்கு உடனுக்குடன் எலக்ட்ரானிக் என்னும் மின்னணு முறையில் அஞ்சல் செய்யும் சாதனம் தொலைக்காட்சி என வெ. நல்லதம்பி குறிப்பிடுகிறார். தொலைக்காட்சிப் பெட்டியின் மூலம் இதனை ஒலி ஒளிக் காட்சியாக நுகரலாம்.

**சிறப்பு**

தொலைக்காட்சி 1. உடனடித்தன்மை ( Immediacy) 2. உறவு நெருங்கியத் தன்மை (Intimacy) 3. உண்மைத் தன்மை (Actuality) உடையதாக அமைகிறது. எனவே மக்கள்தொடர்புத் துறைகளில் தொலைக்காட்சி சாதனத்தின் செல்வாக்குப் பெருகி வருகிறது. காட்சிப் புலனுக்கும், செவிப்புலனுக்கும் இது விருந்து அளிப்பதால் மக்கள் தொடர்புச் சாதனங்களில் அதிக ஆற்றலுடைய ஊடகம் தொலைக் காட்சி எனப்படுகிறது.

**சொல்லாய்வு**

தொலைக்காட்சி என்று கூறும் சொல் டெலிவிஷன் ( Television) என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். மாக்ஸ் பிளெஸ்னர் ( Max Plessner) என்பவர் டெலக்ராஸ்கோப் ( Telecroscope) என்னும் கருவிமூலம் நாடகம், இசை நாடகம், முக்கிய நிகழ்ச்சிகள், நாடாளுமன்ற நடவடிக் கைகள், தலைவர் உரைகள் ஆகியவை காட்டப்படும் என கட்டுரை ஒன்றில் எழுதினார். டெலக்ஸ்கோப், எலக்ட்ரிகல் டெலஸ்கோப், டெலக்ட் ராஸ்கோப் என்ற பெயர்கள் வழங்கப்பெற்று இறுதியில் 'டெலிவிஷன்' என்ற சொல்லே இறுதி வடிவம் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

**மேலை நாடுகளில் தொலைக்காட்சி**

தொலைக்காட்சியின் தோற்றத்திற்கு மூலகாரணமாக இருந்த விஞ்ஞானி 'மே' (May) என்பவர் ஆவார். இவர் அயர்லாந்தில் ஒரு தந்தி அலுவலகத்தில் தொழில்நுட்ப வல்லுநராய்ப் பணியாற்றி வந்தவர். இவர் 1873 இல் ஸெலினியம் படிகத்தைக் ( Selenium Crystals) கொண்டு சில சோதனைகளை நடத்தினார். தொலைக் காட்சித் தோற்றத்தின் வித்து அன்றுதான் விதைக்கப்பட்டது எனலாம்.

1884-ஆம் ஆண்டு ஜெர்மன் விஞ்ஞானி பால் நிக்காவ் (Paul Nikow) துளைகளுள்ள ஒரு வகைத் தட்டு ( disk) ஒன்றைக் கண்டுபிடித்தார். ஒரு படத்தைக் கம்பி மூலமாக

மற்றோரிடத்திற்கு ஒளிபரப்ப இத்தட்டு உதவியது. தொலைக்காட்சி வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும்.

தொலைக்காட்சிக்கு முக்கிய தேவையான காற்றில்லாக் குழாயினை ஹென்ரிச் என்பவர் 1857-ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார். இதனைத் தொடர்ந்து ஸர் வில்லியம் குரூக்கஸ் என்ற ஆங்கில அறிவியல் அறிஞர் மேலும் பல ஆராய்ச்சிகளைச் செய்தார்.

**ஊடகங்களில் தமிழ் (மின்வழி ஊடகங்கள்)**

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டதன் விளைவாக ஊடகங்களும் அதீத வளர்ச்சியடைந்துள்ளன. அறிவியல் அறிஞர்கள் நாளுக்கு நாள் புதிய புதிய தகவல் தொடர்பு முறைகளைக் கண்டுபிடித்து வருகின்றனர். இவ்வகையில் வானொலி, திரைப்படம், தொலைக் காட்சி, வீடியோ போன்றவை புதிய மின்வழிச் சாதனங்களாகத் திகழ்கின்றன. இவை அவ்வப்போது நாட்டில் நடைபெறும் பிரச்சினைகள் மற்றும் செய்திகளை உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிக்கின்றன.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் செயற்கைக்கோள் வழித் தகவல் தொடர்பு உலகையே மிகுதியும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. விண்ணிலுள்ள செயற்கைக்கோள்கள் பூமியில் உள்ள ஒலிபரப்பு நிலையங்களைப் போலவே செயல்பட்டு ஒலி, ஒளி கதிர்கள் மூலம் படம்பிடித்து தகவல்களை உலக அளவில் பரப்புகின்றன.

**வானொலி**

மின்வழித் தகவல் தொடர்பு ஊடகங்களுள் ஒன்றாகிய வானொலி தன் சேவையைச் செய்து வருகிறது. குறிப்பிட்ட நேயர்களை இனங்கண்டு அவர்களுக்கெனத் தன் நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக ஒலிப்பரப்புகிறது. வர்த்தக விளம்பரங்கள் மூலம் தனக்கென நிதியை உருவாக்கிக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது.

நேயர்களிடையே எதிர்பார்ப்பை உருவாக்கும் வகையில் தன் நிகழ்ச்சிகளைச் சிறப்பாக அமைத்துக்கொள்வது அதன் வெற்றிக்கு அடிப்படை தனிப்பட்ட வலைப்பின்னல்களை ( network) அவற்றோடு தொடர்புடைய அமைப்புகளுடன் உருவாக்கிக் கொண்டுள்ளது. அரசுக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் செயல்படும் சாதனம் இது.

வானொலி ஒலி சாதனம் என்பதால் இதனை பார்வையற்றோர் சாதனம் என்றும் கூறுவர். ரேடியோ என்ற சொல்லை வானொலி என்று தமிழாக்கம் செய்தவர் முன்னாள் தமிழக முதல்வர் இராஜாஜி ஆவார்.

**வானொலியின் வரலாறு**

தகவல் தொடர்புச் சாதனங்களின் வரலாறு கி.பி. 1844 ஆம் ஆண்டிலிருந்து தொடங்குகிறது. இந்த ஆண்டில் தான் மோர்ஸ் என்பவர் மின்கம்பிகளின் வழியாகச் செய்திகளைக் குறியீடுகளாக மாற்றலாம் என்பதைக் கண்டுபிடித்தார்.

ஒலி அலைகளுக்கும், மின்னோட்டத்திற்கும் இடையே இருக்கும் உறவில் அடிப்படையில் அலெக்சாண்டர் கிரகாம்பெல்பி ஆம் ஆண்டில் ஒலிபெருக்கியை (Microphone) உருவாக்கினார்

இதனைத் தொடர்ந்து, இந்தரிலியைச் சார்ந்த மார்கோனி பல ஆராய்ச்சிகளுக்கு பின்னர் ஒலி அலைகளை மின் அலைகளா ( Radio Waves) மாற்றி வானொலியை கண்டுபிடித்தார். இவர் தமது கண்டு பிடிப்பை இங்கிலாந்தில் கி.பி.1896 ஆம் ஆண்டு பதிவு செய்தார். கி.பி. 1901 ஆம் ஆண்டு மார்கோனி வானொலி நிறுவனத்தைத் தொடங்கினார்.

**ஒலிபரப்பு நிலையங்கள்**

கி.பி. 1920 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பீட்ஸ்பெர்க்கி உலகத்தின் முதல் ஒலிபரப்பு நிறுவப்பட்டது.

கி.பி. 1922 ஆம் ஆண்டு லண்டனில் 100 வாட் ஆற்றலில் ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டது. இதே ஆண்டில் பிரிட்டனில் ஆறு நிறுவனங்கள் ஒன்றுக்கூடி பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் ( British Broadcasting Corporatio) என்ற பொது நிறுவனம் உருவாக்கப்பட்டது.

பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் தன்னிச்சையாக சுதந்திரமாகச் செயல்படும் நிறுவனமாகும். இது 43 மொழிகளில் ஒலிபரப்பு செய்யப்பட்டது. இதற்கான நிதியினை இங்கிலாந்து அரசின் வெளிநாட்டு இலாகா வழங்குகிறது. எனவே இது இலாப நோக்கோடு செயல்படாமல் சேவையாக நிகழ்ச்சிகள் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இதில் விளம்பரங்கள் இடம்பெறுவதி

உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கும் தலைமைச் செயலகம் ஜெனிவாவில் உள்ளது. இச்செயலகம்,யானொலி நிலையங்களுக்குரிய அலைவரிசைகளைத் தீர்மானிக்கிறது. ஒரு வானொலி நிலையத்தின் அலைவரிசையில் மற்றொரு வானொலி நிலையத்தின் அலைவரிசை குறுக்கிடாதவாறு செயல்படுகிறது. இது உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துகிறது.

**இந்தியாவில் வானொலி ஒலிபரப்பு**

இங்கிலாந்தில் கண்டுபிடிக்கப்பட்ட வானொலி 28 ஆண்டு களுக்குப்பின் இந்தியாவிற்கு வந்தது. அகில இந்திய வானொலி ( AIR) நிலையம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சென்னை பிரஸிடென்ஸி சங்கம் கி.பி 1924-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் நாள் நிறுவப்பட்டது. ஜூலை 31-ஆம் நாள் அச்சங்கம் தன் ஒலிப்பரப்பைக் துவங்கியது.

சில இடையூறுகளின் பின்னர் இந்திய ஒலிபரப்பு கம்பெனி லிமிடெட் என்ற ஒரு தனியார் நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டபோது ஓர் ஒழுங்கான ஒலிபரப்பு கி.பி.1927-இல் ஆரம்பித்தது. கி.பி.1930-இல் அரசு நடத்தும் ஒலிபரப்பமைப்பு இந்திய நாட்டு ஒலிபரப்புப் பணி என்ற பெயரில் துவங்கப்பட்டது. அதன் கட்டுப்பாட்டாளராக இருந்த ஃ பீல்டன் கி.பி.1936-இல் ஜூன் 8-ஆம் நாள் அதன் பெயரை அகில இந்திய வானொலி என்று மாற்றினார்.

அகில இந்திய வானொலி அதன் திறமைக்கும் தொழில் நுட்பத்திற்கும் பெயர் பெற்றதாகச் செயல்பட்டது. அது தன் வலைப்பிணைப்பில் 150க்கும் அதிகமான நிலையங்களை உள்ளடக்கியுள்ளது.

அதன் ஒரு துணை நிலையங்களுள் ஒன்று புவனேஷ்வரிலும் மற்றொன்று சாந்திநிகேதனிலும் உள்ளது. 12,000 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். உலகின் குறிப்பிடத்தக்க செய்தி நிலையங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

ஒவ்வொரு நாளும் 70 தேசியச் செய்தி அறிக்கைகளை 19 மொழியிலும் 118 மாநிலச் செய்தி அறிக்கைகளை 22 மொழிகள் மற்றும் 33 மலைவாழ் மக்களது வட்டார வழக்குகளிலும் 63 வெளிநாட்டுச் செய்தி அறிக்கைகளை 7 இந்திய மற்றும் 18 வெளிநாட்டு மொழிகளிலும் வெளியிடுகிறது.

நாட்டின் எல்லா முக்கியப் பண்பாட்டு மொழி வட்டாரங் களுக்கும் தன் ஒலிபரப்பை நிகழ்த்துகிறது. தேசியச் சேவைகள், மாநிலச் சேவைகள், விவிய பாரதி ஒலிபரப்பு, வெளிநாட்டு ஒலிபரப்பு, பல்கலைக்கழக ஒலிபரப்பு என்று அகில இந்திய வானொலியின் பயன்கள் பலவாறாக அமைந்தது.

வானொலி நாட்டின் தகவல் தொடர்பில் முக்கிய இடம் வகிக்கிறது. தற்போது தினமும் 285 செய்தி அறிக்கைகள் 38 மணிநேரம் 45 நிமிடங்களுக்கு ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

கி.பி. 1935 ஆம் ஆண்டு மைசூர் சமஸ்தானத்தில் வானொலி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இந்த வானொலி நிலையத்திற்கு முதன் முதலில் ஆகாஷ்வாணி என்று பெயர் சூட்டப்பட்டது. ரவீந்திரநாத் தாகூர் கூறிய ஆகாஷ்வாணி என்ற பெயரை வானொலி இயக்க முன்னோடி எம்.வி. கோபாலசாமி என்பவர் சூட்டினார்.

கி.பி. 1938 ஆம் ஆண்டு சென்னை வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. இது அப்போதைய ஆளுநர் எர்ஸ்கின் பிரபுவால் தொடங்கி வைக்கப்பட்டது. இது சென்னை மாகாண வானொலியாக தமிழ், தெலுங்கு, கன்னடம். மலையாளம் என்று நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

கி. பி. 1939 ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. இதனை சென்னை மாகாண முதலமைச்சர் இராஜாஜி தொடங்கி வைத்தார்.

**ஒலிபரப்பு முறைமைகள்**

வானொலி அலைவரிசைகளை இரண்டாகப் பிரிக்கலாம். அவை,

1. அலை அகல மாற்றமைப்பு (AM - Amplitude Modulation)

2. பண்பலை ஒலிபரப்பு (FM - Frequency Modulation) என்பனவாகும்.

இதில் AM அலைவரிசையில் அலையின் அதிர்வு மாறாமல் நிலையாக இருக்கும். ஆனால் அதிர்வின் காரணமாக அமையும் அலையின் நீளம் மாறிக்கொண்டே இருக்கும். AM ஒலிபரப்பு வானொலி நிலையத்திலுள்ள இரும்பு கோபுர ஆன்டெனா ரேடியோ அலைகளை எல்லா திசைகளுக்கும் ஒலிபரப்புகிறது. ஆன்டெனாவின் உயரம் நிலையத்தின் நிர்ணயிக்கப்பட்ட அலை அதிர்வின் நீளத்தைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

இந்திய வானொலியின் ஒலிபரப்புகளைக் கேட்பவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், ஒலிபரப்பின் எல்லையை விரிவுபடுத்தவும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக தோன்றியது பண்பலை ஒலிபரப்பாகும். இதனை எப்.எம் ரேடியோ என்றும் அழைக்கின்றனர்.

FM ஒலிபரப்பு அலையின் அதிர்வை, அனுப்பப்படும் ஒலியைப் பொறுத்து அதற்கேற்பச் சரிசெய்து கொள்ளுகிறது. இவ்வசதி AM வானொலியில் இல்லை.

FM இல் அலைகளுக்கு இடையில் உள்ள ஒலியலைகளின் எண்ணிக்கை (Frequency) மாறும். AM வானொலி ஏற்படுத்துவதைவிட அதிக அதிர்வையும், சிறுஅலைகள் முதலியவற்றைக் காட்டும் குறியீடுகளையும் FM பரப்புகிறது.

FM வானொலிகள் நிலப்பகுதிக்கு மேல் முடிந்தவரை ஆன்டெனாவை அதிக உயரத்தில் வைத்து ஒலிபரப்புகின்றன. இதனுடைய குறியீடுகளை மலைகள், உயர்ந்த கட்டடங்கள், மரங்கள் போன்றவை தடுக்கிறது.

**பல்வேறு வகையான வானொலி நிகழ்ச்சிகள்**

செய்தியைச் சிறப்பாக அளித்துவரும் வானொலி, பல்வேறு வகைப் பண்பாட்டு நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு, அறிவித்தல், அறிவூட்டல், மகிழ்வித்தல் ஆகிய பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. விவசாய நேயர்களுக்கெனத் தனித்தனியே பல பயனுள்ள நிகழ்ச்சிகளை அளித்துவருகிறது. மக்களின் வயது, ரசனை, தரம் போன்றவற்றை மனதில் கொண்டு நிகழ்ச்சிகளை வானொலி நிலையத்தினர் தயாரித்து. ஒலிபரப்பு செய்கின்றனர்.

**செய்தி ஒலிபரப்பு**

வானொலி நிகழ்வுகளில் அதிகளவு. மக்கள் எதிர்பார்பது செய்தியாகும். வானொலிகள் நிகழ்ச்சி நடைபெறும் இடங்களிலிருந்து நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

போர், வேலைநிறுத்தம், போராட்டம் போன்ற அவசரகாலங் களில் வானொலியைக் கேட்பவர்களே அதிகமாக உள்ளனர். அதனால் செய்திகளை உடனுக்குடன் வானொலிகள் மக்களுக்கு அறிவிக்கின்றன.

அகில இந்திய வானொலியின் செய்திப் பிரிவின் வாயிலாக முதல் செய்தி அறிக்கை கி.பி.1936 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒலிபரப்பாகியது.

மாநிலச் செய்திகள் முதன்முதலாக கி.பி. 1953 ஆம் ஆண்டு லக்னோ, நாக்பூர் வானொலி நிலையங்களில் ஒலிபரப்பப்பட்டன. தலைநகரான டெல்லியிலிருந்து ஒலிபரப்பப்படும் செய்தி அறிக்கைகள், ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பிற இந்திய மொழிகளில் ஒலிபரப்பாகும். இவற்றை பிற வானொலி நிலையங்கள் வாங்கி மறுஒலிபரப்பு செய்கின்றன.

மாநிலத் தலைநகரங்களிலிருந்து வானொலி நிலையங்கள் அவ்வவ் மொழிகளில் செய்திகளைத் தயாரிக்கின்றன. இவற்றைப் பிற நகரங்களிலிருக்கும் வானொலி நிலையங்கள் வாங்கி ஒலிபரப்பு செய்கின்றன. மாநிலச் செய்திகளில் மாநில நிகழ்வுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

மாவட்ட வானொலி நிலையங்கள் உள்ளூர் நிகழ்வுகளுக்கு முக்கியம் கொடுத்து செய்திகளைத் தயாரித்து ஒலிபரப்பு செய்கின்றன.

**வானொலியில் செய்தியின் அமைப்பு**

வானொலி செய்திகளைப் படித்தவர்கள் மட்டுமின்றி பாமர மக்களும் கேட்பதினால் சிறுசிறு சொற்றொடர்களாக அமைக்கப் படுகின்றன. அதுமட்டுமின்றி எளிமையான சொற்கள் கையாளப் படுகின்றன.

முடிந்த வரையில் வழக்கில் உள்ள சொற்கள் கையாளப் படுகின்றன. ஒரு சில இடங்களில் வடமொழிச் சொற்கள் எடுத்து ஆளப்படுவதும் காணமுடிகிறது.

பிறமொழி சொற்களை ஒலிக்கும் முறையில் இடற்பாடு தோன்றும் போது, அந்தந்த நாட்டு தூதரகங்களில் தொடர்பு கொண்டு சரியான ஒலிப்பு முறையை அறிந்து செய்தியினை வாசிக்க வேண்டும்.

வானொலியில் செய்திகள் அதிகளவில் 10 அல்லது 15 நிமிடங்கள் மட்டுமே ஒலிபரப்பாகின்றன. இக்குறுகிய காலத்தில் தெளிவாக செய்திகளைத்தர வேண்டும் என்பதால் வானொலியில் சுருக்கமாக தரப்படுகின்றன. எனவே வானொலி செய்திகள் எளிமையாகவும், இயன்றவரைத் தமிழ்ச் சொற்களைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

**கல்வி ஒலிபரப்பு**

வானொலி நிலையங்கள் மக்களுக்கு பயனுள்ள கல்வி சார்ந்த நிகழ்வுகளையும் ஒலிபரப்புகின்றன. கி.பி. 1937 ஆம் ஆண்டு கல்கத்தா வானொலி நிலையம் முதன்முதலில் பள்ளிக்கல்வி ஒலிபரப்பினைத் தொடங்கியது.

கி.பி. 1938 அம் ஆண்டு பம்பாய், டெல்லி,சென்னை வானொலி நிலையங்கள் பள்ளிக்கல்வி ஒலிபரப்பினைத் தொடங்கின. கி.பி. 1940 ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையம் கல்வி ஒலிபரப்பினைத் தொடங்கியது. தற்போது சென்னை,திருச்சி வானொலி நிலையங்கள் பள்ளிக்கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை தமிழகத்திலுள்ள பிற வானொலி நிலையங்களுக்கு அஞ்சல் செய்கின்றன. கல்வி ஒலிபரப்புகள் மாநில மொழிகளிலேயே ஒலிபரப்பாகின்றன.

இந்தியாவிலுள்ள பல பல்கலைக்கழகங்கள் அஞ்சல் வழி கல்வியை நடத்தி வருகின்றன. இவற்றின் வாயிலாகப் படிக்கின்ற மாணவர்களுக்கான அஞ்சல் வழிக்கல்விப் பாடங்களை வானொலி நிலையங்கள் ஒலிபரப்பி வருகின்றன. கி.பி. 1966ஆம் ஆண்டில் டெல்லி வானொலி நிலையம் டெல்லி பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வி ஒலிபரப்பினைத் தொடங்கியது.

கி.பி. 1992 ஆம் ஆண்டு முதல் இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மாணவர்களுக்கான கல்வி ஒலிபாப்பை இந்தியா முழுவதும் வானொலி நிலையங்கள் மூலம் செய்து வருகின்றன.

தமிழகத்தில் அஞ்சல்வழிக் கல்வியை முதன்முதலில் அறிமுகம் செய்தது மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகும். இதன் பாடங்கள் இரவுநேரங்களில் ( 10.30-11.00) வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன.

**முறைசாராக் கல்வி**

முறையாக கல்வி கற்கும் வாய்ப்பினை இழந்தவர்களுக்கும், கல்வியைத் தொடர இயலாதவர்களுக்கும் கல்வியை வழங்கும் வகையில் தேசிய முதியோர் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது. அகில இந்திய வானொலி நிலையங்கள் தேசிய முதியோர் திட்டத்திற்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. கி.பி. 1985 ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையம் முறைசாராக் கல்வி ஒலிபரப்பினைத் தொடங்கியது.

கி.பி. 1990 ஆம் ஆண்டு அகில இந்திய வானொலியும், தேசிய எழுத்தறிவு இயக்கமும் இணைந்து பிரியள் ( PREAL - Programme of Radio Education for Adult Literacy) என்ற சிறப்புத் தொடர் நிகழ்ச்சியை ஒலிபரப்பத் தொடங்கியது. இதன் நோக்கம் 15 முதல் 35 வயதிற்குட் பட்ட எழுத்தறிவற்ற பெண்களுக்கு அடிப்படை எழுத்தறிவினை வழங்குவதாகும்.

**வேளாண்மை சார்ந்த நிகழ்வுகள்**

வானொலிகள் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பு செய்கின்றன. இந்தியாவின் வேளாண்மைத் துறையில் பசுமைப்புரட்சிக்கு வானொலிகள் பெரும் பங்காற்றியுள்ளன. கி.பி. 1966 ஆம் ஆண்டு அகில இந்திய வானொலியின் பத்து நிலையங்களிலும் வேளாண்மை சார்ந்த பண்ணை இல்ல நிகழ்வு தொடங்கியது. ஆடுதுறை 27 என்ற நெல் ரகம் வானொலி மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை தஞ்சை மாவட்ட விவாயிகள் ரேடியோ நெல் என்றே அழைத்தனர்.

வானொலியில் சந்தை விலை நிலவரம், வேளாண்மை, கால் நடை வளர்ப்பு, கைத்தொழில், கிராமப்புற வளர்ச்சி, குடிசைத் தொழில்கள், ஆரோக்கியம் போன்ற தொகுப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன. தொகுப்பாளர்கள் எளிமையாகவும், உள்ளூர் பேச்சுவழக்கில் நகைச்சுவை உணர்வோடு நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர்.

கி.பி. 1950 ஆம் ஆண்டுகளில் சமுதாய வானொலிப் பெட்டிகள் கிராமங்களில் வழங்கப்பட்டன. கூட்டாக வானொலி கேட்டல் என்ற நிகழ்வு ஐந்தாண்டுத் திட்டங்களில் ஓர் அங்கமாகச் சேர்க்கப்பட்டது. கி.பி. 1964 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் 7500 வானொலி மன்றங்கள் இருந்தன.

வேளாண்மைச் சார்ந்து விதைகள், விதை நேர்த்தி, பயிர்களைத் தாக்கும் நோய்கள், பண்ணைப் பராமரிப்பு முறைகள், மகசூல் பெறுதல் குறித்த அறிவுரைகள், விவசாய விளைபொருட்களை விற்கும் முறை. உழவர்களுடன் நேர்காணல், பேட்டி, உழவுத்தொழில் நவீனத்துவம். வேளாண்மை சார்ந்த கருத்தரங்குகள் போன்றவை இன்றளவும் வானொலிகளில் ஒலிபரப்பப்படுகின்றன.

**இசை நிகழ்ச்சிகள்**

வானொலியில் இந்துஸ்தானி இசை, கர்நாடக இசை,நாட்டுப்புற இசை போன்றவை ஒலிபரப்புச் செய்யப்படுகின்றன. மத்தியச் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த டாக்டர். கேஷ்கார் என்பவரின் முயற்சியால் கி.பி. 1952 ஆம் ஆண்டு அகில பாரத இசை நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது.

கி.பி. 1955 ஆம் ஆண்டில் தொடங்கிய ஆகாஷ்வாணி சங்கீத சம்மேளன நிகழ்ச்சிகள் அனைத்தும் நேயர்களின் முன்னிலையில் பொது இடங்களில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, தேசிய நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்பட்டது. இதேபோன்று நம் நாட்டின் இருபெரும் இசை விழாக்களான திருவையாறு தியாகராஜர் ஆராதனை இசை நிகழ்ச்சி, வடநாட்டின் தான்சேன் இசை விழா இரண்டும் நேரடியாக அஞ்சல் செய்யப்படுகிறது.

திரையிசைப்பாடல்கள் மக்களின் மனதைக் கெடுத்துச் சீரழிக்கும் என்று கருதி அகில இந்திய வானொலியில் தடை செய்யப்பட்டது. இதனால் இலங்கை வானொலி இந்திய நேயர்களை இலக்காகக் கொண்டு சக்தி வாய்ந்த வர்த்தக ஒலிபரப்பினைத் தொடங்கியது. இதில் திரையிசைப்பாடல்களே அதிகளவில் இடம்பெற்றன. அதனால் அகில இந்திய வானொலியின் நேயர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

அகில இந்திய வானொலி நேயர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக கி. பி. 1957 ஆம் ஆண்டு பம்பாய் வானொலி நிலையத்திலிருந்து விவித பாரதி ஒலிபரப்பு அறிமுகம் செய்யப் பட்டது. இதில் 60 சதவீதம் திரையிசைப்பாடல்களே இடம்பெற்றன. எஞ்சிய நேரத்தில் பக்திப்பாடல்கள், மெல்லிசை, நாடகம், நகைச்சுவை, நடிகர்களின் பேட்டி முதலியன இடம்பெற்றன.

**இலக்கிய ஒலிபரப்புகள்**

வானொலிகள் தங்களது நேயர்களுக்கு இலக்கியம் சார்ந்த அறிவினை புகட்டும் நோக்கோடு பல நிகழ்வுகளை ஒலிபரப்பி வருகிறது. குறிப்பாக, கவியரங்க நிகழ்வுகள், நாடக நிகழ்வுகள், நினைவு சொற்பொழிவுகள், சிறுகதைகள் போன்றவற்றை ஒலிபரப்புகின்றனர்.

**கவியரங்கம்**

கி.பி. 1956 ஆம் ஆண்டின் குடியரசு நாளுக்கு முந்தைய நாளில் வானொலியின் தலைமை இயக்குநராக இருந்த ஜெ.சி. மாத்தூர் பன்மொழிக் கவியரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அதிலிருந்து ஆண்டுதோறும் குடியரசு நாளுக்கு முந்தைய நாளில் பன்மொழிக் கவியரங்கம் டெல்லியிலிருந்து ஒலிபரப்பாகி, எல்லா வானொலி நிலையத்திற்கும் அஞ்சல் செய்யப்பட்டு வருகிறது.

இன்றும் பெரும்பாலும் வானொலி நிலையங்களில் சிறந்த கவிஞர்களின் கவிதைகள் ஒலிபரப்பு செய்யப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

**நாடகம்**

முத்தமிழ் கலைகளுள் ஒன்று நாடகக் கலையாகும். நாடகம் என்பது ஒருவன் செய்ததனை மற்றொருவன் வாங்கிக் கொண்டு பின்னர் அதனைச் செய்து காட்டுவதாகும். இதனால் நாடகம் என்று பெயர் பெற்றது; அதாவது நடித்தல் என்று பெயர் கூறப்பட்டது. வானொலி நாடகங்களில் கண்களுக்கு வேலையில்லை. அதனால் கதைமாந்தர்களின் குரல்களே மெய்ப்பாடுகளை விளக்குவனவாக அமைகின்றன. குரல் ஒன்றின் மூலமாகவே வானொலி நாடகங்கள் வெற்றியடைகின்றன.

கி.பி. 1956 ஆம் ஆண்டு அகில பாரத நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. அன்றிலிருந்து மாதம் தோறும் அகில பாரத நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

வானொலியில் தேசிய ஒருமைப்பாடு, கல்வியின் அவசியம், சமூக ஒத்திசைவு, மனிதநேயம், குடும்பக் கட்டுப்பாடு, சமூக சிக்கல்கள் போன்ற மையபொருண்மை கொண்ட நாடகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**நினைவுச் சொற்பொழிவுகள்**

மக்கள் மனதில் நிலைத்திருக்கும் முக்கிய தலைவர்களின் நினைவு நாளில் அவருடைய சிறப்புகளை எடுத்தியம்பும் விதமாக நினைவுச் சொற்பொழிவுகளை வானொலிகள் ஒலிபரப்புகின்றன.

சர்தார் வல்லபாய் படேல் நினைவாக ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவும், டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவாக ஹிந்தியில் ஒரு சொற்பொழிவுமாக ஆண்டுதோறும் இரண்டு சொற்பொழிவுகளை வானொலி ஒலிபரப்பி வருகின்றன.

**வானொலியில் நேர்காணல்**

வானொலி நிலையங்கள் சில நேர்காணல் நிகழ்வுகளையும் ஒலிபரப்புகின்றன. நேர்காணலில் பங்குபெறுவோர் அரசியல் தலைவர்கள், துறைச் சார்ந்த அரசு அலுவலர்கள், சாதனையாளர்கள், படைப்பாளர்கள் போன்றவர்கள் ஆவார்.

நேர்காணல் நிகழ்வினை தொகுத்து வழங்குபவர் ஒருவர் இருப்பார். அவர் யாரை நேர்காணல் செய்ய போகிறாறோ அவரைக் குறித்த முழுவிவரங்களையும் அறிந்து வைத்திருப்பார். அதுமட்டுமின்றி அவரிடம் பேசும் நோக்கோடு வினா நிரலையும் தயார் செய்து வைத்திருப்பார். சில நேரங்களில் தொலைபேசி மூலமாக நேயர்கள் தங்களுடைய சந்தேகங்களை கேட்கும் விதமாக நேர்காணல் அமைக்கப்பட்டிருக்கும்.

ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் அணுகக்கூடிய ஒரே தகவல் தொடர்பு சாதனம் வானொலியே. கிராமப்புற மக்கள், கைத்தொழில் செய்யும் தொழிலாளர்கள், பார்வையற்றோர் போன்றோர் விரும்பும் தகவல் தொடர்பு ஊடகமாக வானொலி திகழ்கிறது. மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளைத் தருவதுடன் தேசிய ஒருமைப்பாட்டுக்கான கலை, இலக்கியம் தொடர்பான நிகழ்ச்சிகளையும் தருகிறது: அனைத்து மக்களையும் சென்று சேரும் மக்கள் தகவல் தொடர்பு ஊடகம் இது. செப்டம்பர் 2003 இல் வானொலி நிகழ்ச்சிகள் கணினி உதவியுடன் சமீபத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஒலிபரப்பப்படுகிறது.

**தொலைக்காட்சி**

தகவல் தொடர்பு ஊடகங்களில் மக்களிடத்தில் அதிக செல்வாக்குப்பெற்றுள்ளது தொலைக்காட்சி ஆகும். இது திரைப்படத்தின் தாக்கத்தைப் பெற்ற ஊடகமாகும். இது திரைப்பட உத்திகளை தன் நிகழ்ச்சிப் படைப்புகளில் கையாள்கிறது. கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கின்ற ஒப்பற்ற ஊடகம். வீட்டுக்குள்ளேயே உலகத்தை கொண்டுவருகின்ற ஊடகம் தொலைக்காட்சியாகும்.

**தொலைக்காட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்**

டெலிவிஷன் என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிபெயர்ப்பே தொலைக்காட்சியாகும். மாக்ஸ் பிளெஸ்னர் ( Max Plessner) என்பவர் டெலக்ராஸ்கோப்(Telecroscope) என்னும் கருவி

மூலம் இசை, நாடகம், நாடாளுமன்ற நடவடிக்கை, தலைவர்கள் உரைகள் போன்றவை காட்டப்படும் என்று கட்டுரை ஒன்றில் எழுதினார்.

கி.பி. 1873 இல் அயர்லாந்தில் தந்தி அலுவலகத்தில் தொழில் நுட்ப வல்லுநராகப் பணியாற்றிய மே ( May) என்பவர், செலினியம் படிகத்தை ( Selenium Crystal) கொண்டு சில சோதனைகளை நடத்தியது. தொலைக்காட்சித் தோற்றத்தின் வித்து என்று கூறப்படுகிறது."

கி.பி. 1884 இல் ஜெர்மனிய விஞ்ஞானி பால் நிக்காவ் ( Patil) Nikow) என்பவர் ஒரு படத்தைக் கம்பி மூலமாக மற்றோரிடத்தில் ஒளிபரப்பும் டிஸ்க் ( Disc) ஒன்றைக் கண்டுபிடித்தார்.

கி.பி. 1923 ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சார்ந்த விளாடிமிர் சொர்க்கின் (Viadimir Zworykin) என்பவர் ஒளி அலைகளை மின்னணு அலைகளாக மாற்றி அனுப்புகிற முயற்சியில் வெற்றி பெற்றார். அவர் கண்டுபிடித்த கருவிக்கு ஐகோனோஸ்கோப் ( Iconoscope) என்று பெயரிட்டார். இக்கருவியை கைனஸ்கோப் என்றும், பிக்சர் டியூப் என்றும் கூறுவர். ஐகோனோஸ்கோப் என்ற கிரேக்கச் சொல்லுக்குப் பிம்பமாகப் பார்த்தல் என்பது பொருளாகும். இக்கண்டுபிடிப்பு தொலைக்காட்சி உருவாகுவதற்கு திருப்புமுனையாக இருந்தது.

ஸ்காட்லாந்து நாட்டைச்சார்ந்த சான் லேகி பெயர்டு என்ற விஞ்ஞானி கி.பி.1926இல் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்து அதே ஆண்டு சனவரி 27ஆம் நாள் இயக்கியும் காட்டினார். பெயர்டு முதலில் இதற்கு பேர்ட் டெலிவிஸர் என்று பெயர் சூட்டினார்.

கி.பி. 1928 இல் பெயர்டு வண்ணத் தொலைக்காட்சிக்கும் வாய்ப்புண்டு என்ற செய்தியை வெளியிட்டார். ஆனால் அவ் வேளையில் கருப்பு - வெள்ளைத் தொலைக்காட்சியே வெற்றிகரமாக முழுமையாக வெளிவராத நிலையில் இருந்தது. கி.பி. 1928 இல் பி.பி.சி தொலைக்காட்சியை ஆரம்பித்தது. பெயர்டு கண்டுபிடித்த தொலைக்காட்சி முறையில்தான் உலகின் முதல் பொதுமக்கள் தொலைக்காட்சி கி.பி. 1929 இல் ஒளிபரப்பானது.

கி.பி. 1930 இல் நியூயார்க் ஒலிபரப்பு நிறுவனத்தால் தொலைக் காட்சி நிலையம் நிறுவப்பட்டது. பிரிட்டிஷ் ஒளிபரப்பு நிறுவனம் ஒரு தொலைக்காட்சி நிலையத்தை இலண்டனில் நிறுவியது. இந்நிலையங்கள் தொடர்ந்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்பின.

முறையான தொலைக்காட்சி நிகழ்ச்சி இலண்டனில் அலெக்சாண்ட்ரா அரண்மனையிலிருந்து கி.பி. 1936 ஆம் ஆண்டு இயங்கத் தொடங்கியது. பெயர்டு

முறையைப் பின்பற்றி ஒருவாரமும், சொர்க்கின் முறையை பின்பற்றி ஒருவாரமும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. இறுதியில் சொர்க்கின் முறையைப் பின்பற்றியே நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

**வண்ணத் தொலைக்காட்சி**

பெயர்டைத் தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் வண்ணத் தொலைக்காட்சியைக் கண்டுபிடிக்க ஆய்வுகள் செய்தன.

கி.பி. 1953 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஆர்.சி.ஏ நிறுவனம் வண்ண நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து வைக்கும் முறையினைக் கண்டுபிடித்து முதன்முதலில் ஒளிபரப்பியது. கி.பி. 1960 இல் அமெரிக்காவிலும், ஜப்பானிலும் வண்ணத் தொலைக்காட்சிகள் செயல்படத் தொடங்கியது.

**இந்தியாவில் தொலைக்காட்சி வரலாறு**

இந்தியாவில் கி.பி. 1959 செப்டம்பர் 14 ம் நாள் யுனெஸ்கோ நிதி உதவியுடன் டெல்லி டெலிவிஷன் சென்டர் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப தொடங்கியது. 20 நிமிடம் மட்டும் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் வாரம் இருமுறை ஒளிபரப்பப்பட்டன. பின் பல வளர்நிலைகளை அடைந்து மக்களின் ஓர் அங்கமாக மாறிவிட்டது.

கி.பி. 1965 ஆம் ஆண்டு டெல்லியில் முதல் தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்டது. இந்நிலையத்தில் வாரந்தோறும் நான்கு நாள்கள் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. கி.பி. 1966 முதல் எல்லா நாள்களிலும் அரைமணி நேர நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. நாளடைவில் நாடகம், செய்தி, திரைப்படம், பல்சுவை என நிகழ்ச்சிகள் பல்கிப் பெருகின.

கி.பி. 1976 முதல் தொலைக்காட்சியில் வர்த்தக ஒளிபரப்பு தொடங்கப்பட்டது. இதில் திரைப்படம், ஒலியும் ஒளியும். நாடகம், விளையாட்டு, விளம்பரம், பொழுது போக்கு நிகழ்ச்சிகள் சேர்க்கப்பட்டன.

கி.பி. 1959 முதல் அகில இந்திய வானொலியின் ஒரு பகுதியாக இயங்கத் தொடங்கிய தொலைக்காட்சி, தூர்தர்ஷன் என்ற தனிப்பெயருடன் கி.பி. 1976 முதல் செயல்பட ஆரம்பித்தது.

தொலைக்காட்சி ஒலியுடன் ஒளியையும் சேர்த்துச் சின்னத் திரையில் தருவதால் ஒரு பரந்த அளவிலான நேயர்களைக் கொண்டுள்ளதாய் விளங்குகிறது. அவர்கள் அரசியல், சமுதாய, பொருளாதாரத் தளங்களில் வேறுபடுபவர்கள். எல்லாத் தகவல் தொடர்பு

ஊடகங்களையும் பாதிக்கும் ஒரு சாதனமாகத் தொலைக்காட்சி விளங்குகிறது. அண்மையில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்ப வளர்ச்சியினால் நூற்றுக்கணக்கான புதிய அலைவரிசைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கணிப்பொறிகளுடனும் ஒளிபரப்புச் செயற்கைக் கோள் களுடனும் இணைந்து இவ் ஊடகம் நமது வாழ்வில் உலகளாவிய செய்திகளைக் கொண்டுவந்து சேர்க்கிறது. கி.பி. 1965-இல் முதல் பறவை என்னும் செயற்கைக்கோள் வானில் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் பலப்பல புதிய ஒளிபரப்புசெயற்கைக் கோள்களும் தொடர்ந்து அனுப்பப்பட்டன. அது பன்னாட்டுத் தகவல் தொடர்பிற்கு உறுதுணையாக இருக்கிறது.

கி.பி. 1970களில் நியூயார்க்கில் திரைப்படம் போன்று ஒளிப்பதிவு செய்தல் போன்ற போக்கு உருவாகி அது தொலைக்காட்சிகளில் பயன்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சியில் ஒவ்வொரு வகை நிகழ்ச்சிக்கும் வெவ்வேறு உத்திகள் கையாளப்படுகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிக்கு எழுதுவோர் பின்னணி ஆக்கம், ஒளி, உடை, ஒப்பனை, பங்கு பெறுவோரின் நடிப்பு ( அசைவு) முதலியன பற்றித் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும், தொலைக்காட்சிச் சாதனத்தின் இயந்திர, மின்னணு பற்றிய அறிவு இவருக்கு இருக்க வேண்டும். அரங்கு, காமிரா, சுட்டுப்பாட்டு அறை, சிறப்பு ஒளி உத்திகள், தொகுத்தல் (editing), ஒலி முதலியன பற்றி அவர் அறிந்திருக்க வேண்டும்.

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

தொலைக்காட்சியில் மக்களை சுவரும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. குறிப்பாக, செய்திகள், கல்வி ஒளிபரப்புகள், விவசாய நிகழ்ச்சிகள், பேட்டிகள், குழந்தைகள் நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், விளம்பரங்கள், நாடகத் தொடர்கள், திரைப்பட நிகழ்வுகள், திரைப்படம் போன்றவற்றைக் கூறலாம்.

**தொலைக்காட்சி செய்திகள்**

தொலைக்காட்சியில் செய்தி அறிக்கைகள், குழுவிவாதங்கள் போன்றவை செய்தி நிகழ்ச்சிகளாகும். செய்தி நிகழ்ச்சியின் போது மக்களுக்குத் தெரிவிப்பதற்காக ஒளிப்படங்கள், பிலிம்துண்டுகள், வரைப்படங்கள், உலகப்படங்கள். அட்டவணைகள் போன்றவை தயார் செய்து காட்டப்படுகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

தொலைக்காட்சிச் செய்திகளை மக்கள் அதிகளவில் விரும்பி பார்க்கின்றனர். உலகின் பல பகுதிகளில் நடக்கின்ற நிகழ்வுகளை தொலைக்காட்சி உடனுக்குடன் நம் கண்முன் கொண்டு வந்து செய்திகளாகக் காட்டுகின்றன.

ஆரம்பகாலத்தில் தூர்தர்ஷன் தொலைக்காட்சி மட்டும் இருந்த போது செய்தியே முதன்மையாக இருந்தது. இது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் மத்திய அரசு தொடர்பான செய்திகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தமை இதன் குறையாகும்.

அரசுக்கு எதிரான நிகழ்வுகளான, போராட்டங்கள், கடை யடைப்புகள் குறித்தச் செய்திகளைத் தூர்தர்ஷனில் ஒலிபரப்பப்படுவ தில்லை என்பது மிகப்பெரிய குறையாகும்.

தனியார் தொலைக்காட்சிகள் பொரும்பாலும் அரசியல் கட்சிகள் சார்பாக நடத்தப்படுவதால் அவைகள் அந்தந்த கட்சிகளின் துதிபாடுவதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். பிற கட்சிகளை வசைபாடுவதாகவே அதிகளவில் செய்திகள் வருகின்றன. உண்மைச்செய்திகள் மிகக்குறைவாகவே வருகின்றன.

தூர்தர்ஷனைவிட தனியார் தொலைக்காட்சிகள் செய்திகளோடு படப்பதிவுகளை அதிகளவில் ஒளிபரப்புவது சிறப்புக்குரியதாகும். மேலும் தனியார் தொலைக்காட்சிகள் செய்திக்காகத் தனி அலைவரிசையினை ஏற்படுத்திக்கொண்டு உடனுக்குடன் செய்திகளை மக்களுக்கு தெரிவிக்கின்றமை பாராட்டுக்குரியதாகும்.

செய்தி வாசிப்பாளர்கள் செய்தியினை கூறும்போது ழகர ளகரத்தைப் பிழையாக உச்சரிக்கப்படுவதும் காணமுடிகிறது. செய்தி அறையில் வருகின்ற செய்திகளைப் பிரித்துத் தொகுத்து தருவது செய்தியாசிரியரின் பணி. நிகழ்ச்சி தயாரிப்பாளர் அச்செய்தி படிவங்களுக்குரிய படங்களைத் தருகிறார்.

திரையில் தோன்றி செய்தி வாசிப்பவர் நிகழ்ச்சி தயாரிப்பாளர் தயார் செய்து வைத்துள்ள செய்தியினை வழங்குவார். செய்தி வாசிப்பவர் செய்தியினை பார்த்து வாசிப்பதுபோல் தோன்றாமல் இருக்க அவர் முன்னால் டெலிபிராம்ப்டர் என்ற கருவி பொருத்தப் பட்டிருக்கும். அதில் ஓடுகின்ற செய்தினை அவர் வாசிக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

தனியார் தொலைக்காட்சிகள் பெருகிவருகின்ற காலச்சூழலில் செய்திகளில் புதிய அணுகுமுறைகள், செய்தி வழங்கும் முறைகள். தொழில்நுட்பம் ஆகியவற்றில் புதுமைகள் உருவாக்கப்பட்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

**கல்வி நிகழ்ச்சிகள்**

வானொலியைப் போன்று தொலைக்காட்சிகளிலும் கல்வி நிகழ்ச்சிகள் அதிகளவில் ஒளிபரப்பாகின்றன. கல்வியாளர்களால் வழங்கப்படும் கல்வி நிகழ்ச்சிகள் ஒரே நேரத்தில் பலரை சென்றடைகின்றது.

இயற்பியல், மருத்துவம், நாடகம், வரலாறு, ஆங்கிலம் போன்ற துறைத் தொடர்பானப் பாடங்கள் பயிற்சிமுறையில் தொலைக் காட்சியில் செய்து காட்டப்படும்போது எளிதில் விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது.

கி.பி.1961 இல் தொலைக்காட்சி பரிசோதனை ஆரம்பகட்டத்தில் இருந்த போதே சில பாடங்களுக்கு (அறிவியல்) கல்வி ஒளிபரப்பு செய்யத் திட்டமிடப்பட்டது.

பள்ளிகளில் பரிசோதனைக் கூடங்கள் இல்லாமை, போதிய அறிவியல் ஆசிரியர்கள் இல்லாமை போன்ற சூழலில் அதனை தொலைக்காட்சிகள் மூலம் ஈடுகட்ட இவ்வகை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஆசிரியர் மாணவர்களிடையே நல்ல ஆர்வம் இருந்தது. இத்திட்டத்தை எஜீகேஷனல் டெலிவிஷன் என்று அழைத்தனர்.

இப்போதும் டெல்லியில் அதிகமான பள்ளிகள் இத்தகைய நிகழ்ச்சிகளை மாணவர்களுக்காக ஒளிபரப்புகின்றன. செகண்டரி பள்ளி மாணவர்களுக்கு வாரத்திற்கு 2 மணி நேரம் அறிவியல் வகுப்பு தொலைக்காட்சி வழி தரப்படுகிறது.

தொலைக்காட்சியில் ஆங்கில மொழி தொடர்பான பாடங்கள் நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டு ஒளிபரப்பு செய்யப்படு கின்றன. இவை பல்வேறு வகை ஒலி அழுத்தங்கள் உச்சரிப்புகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

**பேட்டிகள் (நேர்காணல்)**

தொலைக்காட்சி நிகழ்வுகளில் பேட்டிகள் சிறப்பிடம் பெறுகின்றன. பேட்டி பலவகைப்படும். ஒருவரது ஆளுமையை வெளிப்படுத்தும் பேட்டி, செய்தியை மட்டுமே தருவதை நோக்கமாகக் கொண்ட செய்திப்பேட்டி, குழுப்பேட்டி என்று பேட்டிகள் பலவகையில் இடம்பெறுகின்றன.

ஒரு திரைப்பட நடிகரைப் பேட்டி காணுதல் அவருடைய ஆளுமையை வெளிக்கொணரும் நோக்கில் அமைக்கப்படுகின்றன.

வயலும் வாழ்வும் என்ற நிகழ்சியில் தாப்படும் பேட்டி கொடுக்கும் நபருக்கு முக்கியத்துவம் தராமல் அவர் தருகின்ற விவசாயம் குறித்த செய்தியை மக்களுக்கு அளிப்பதையே நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

தமிழக முதலமைச்சரை அல்லது அமைச்சரை பத்திரிகையாளர்கள் சூழ்ந்து கொண்டு அவரிடம் மாறிமாறிக் கேள்வி கணைகளைத் தொடுத்து எடுக்கும் பேட்டி குழுப்பேட்டிக்குச் சான்றாகும்.

**தொலைக்காட்சியின் செல்வாக்கு**

பொதுமக்களின் அதிக செல்வாக்கைப் பெற்றுள்ள தொலைக் காட்சி தனது சிறிய திரையின் காட்சி மூலம் மக்கள் மனதில் பதிய வைக்கும் செய்திகள் ஏராளம். ஒளிப்பரப்புக் கோள் மூலம் சேகரிக்கும் செய்திகள் அதிகம். தகவல் தொடர்பு ஊடகங்கள் மூலம் உலக நாடுகளுக்கிடையிலேயான வேறுபாடு குறைந்து உலகம் சுருங்கி வருகிறது.

தொலைக்காட்சி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதால் திரைப்பட தயாரிப்புப்பணி குறிப்பிடத்தக்க பாதிப்புக்குள்ளாகிறது. எனவே மேலைநாடுகளில் திரைப்படத்துறையினர் சினிமாஸ்கோப் போன்ற பெரிய திரை அமைப்பில் திகில் படங்கள் உள்ளிட்ட மாறுபட்ட நிலையில் படங்கள் எடுக்க வேண்டிய கட்டாயத் திற்குள்ளாகின்றனர். இந்தியாவில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடைமுறைக்கு வந்தவுடனேயே இத்தகைய பாதிப்பு ஏற்பட்டது. எனவே இயக்குநர்கள் பாடல்கள், நாட்டியங்கள், சண்டைக்காட்சிகள் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி ரசிகர்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

இங்கிலாந்தில் தொலைக்காட்சியின் கண்டுபிடிப்பானது வானொலியை தேசிய சாதனம் என்றிருந்த நிலையினின்று மாற்றி வட்டார அளவிற்கு ஒலிபரப்பை மாற்றச் செய்தது. BBC வானொலி வட்டார அளவில் தன் சேவையை ஆரம்பித்தது இவ்வாறே. அந்தந்த வட்டார மக்களுக்கென்றே தேவையான செய்திகள் அவர்களது தேவைகள், பிரச்சினைகள், தீர்வுகள் முதலியவற்றை நல்கும் ஊடகமாகப் பரிணமிக்க ஆரம்பித்தது தொலைக்காட்சியின் வரவின் பின்னரே ஆகும்.

செய்திகள் தினமும் படங்களுடன் தொலைக்காட்சியில் காட்டப்படுவதால் மக்கள் வானொலிச் செய்திகளை விட தொலைக்காட்சிச் செய்திகளை விரும்புகின்றனர். செய்தியாளர்கள் வாசிப்பதை நேரில் பார்ப்பது, நடந்த செய்திகள் உடனுக்குடன் நடந்தவாறே காட்சியாகக் காட்டப்படுவது, செய்தி ஒளிபரப்பாளர்களின் தொலைக்காட்சி உத்திகள் முதலியன தொலைக்காட்சி நேயர்களை மிகவும் ஈர்க்கிறது.

தொலைக்காட்சியின் வரவு செய்தித்தாள்களைப் பாதிக்கவில்லை. வாங்கி வைத்திருந்து தேவைப்படும் போது எடுத்து வாசித்துக் கொள்ளலாம். அதிகக் குறிப்புகளை நிதானமாகத் தேவையிருக்கும் போது எடுத்துச் சேகரித்துக் கொள்ளலாம் என்பதால் அச்சு வழி ஊடகங்களுக்குரிய செல்வாக்குக் குறையவில்லை.

வானொலி, தொலைக்காட்சியில் அந்த நேரம் கவனிப்பதை, பார்ப்பதை வைத்துதான் செய்திகளை அறியமுடிகிறது. மீண்டும் ஒருமுறை பார்க்க வேண்டுமானால் முடிவதில்லை.

ஆனால் செய்தித்தாள்கள் அப்படி அல்ல. இருப்பினும் செய்தித்தாள்கள் தன் வாசகர் வட்டம் குறைந்து விடாமல் இருக்க பல்வேறு இணைப்பு மலர்கள், வண்ணப்படங்கள், பெரிய அச்சு எழுத்துக்கள் போன்ற சில மாற்றங்களைச் சேர்த்து வாசசர்களைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

தொலைக்காட்சி, விளம்பரத்திலிருந்து அதிக நிதியைப் பெருக்கிக் கொள்கிறது. அதிகமான வண்ணம், நடனம், இசை முதலியவற்றுடன் விளம்பரத்தைத் தருவதால் நுகர்வோர் நுகர்வுத் திறத்தை அதிகரித்து, வணிகர்களுக்கும் விற்பனைப் பெருக்கத்தை ஏற்படுத்த உதவுகிறது. வானொலி விவித பாரதி விளம்பரத்தைப் போன்ற வருமானம் இப்போது தொலைக்காட்சிக்குச் சென்றுள்ளது. கோடிக்கணக்கான ரூபாயை விளம்பரத்தின் மூலம் தொலைக்காட்சி ஈட்டுகிறது.

கல்வி நிகழ்ச்சிகளுக்குத் தொலைக்காட்சி பயன்படுத்தப்படுகிறது. நேயர்கள் நேரடியாகவே பணம் செலவு செய்து தாம் விரும்பிய நிகழ்ச்சிகளை வாங்கும் ஒளிபரப்புச் சேவைகளாகிய கேபிள் தொலைக்காட்சிகளும் உள்ளன. கேபிள் சேவை தனியாகவும் நிகழ்த்தப்படும்.தொலைக்காட்சி நிலையத்துடன் இணைந்து கூடுதல் அலைவரிசையாகவும் வழங்கப்படும். தூர்தர்ஷனின் DD 5 (தமிழ்), DD7 (மூவிகிளப்) போன்றவை சான்றாகும்.

**மின்ன்னு ஊடகங்கள்**

அச்சுவழி ஊடகங்கள் நாளிதழ்கள், நூல்கள் வழியாகத் தனி சந்தாதாரர்களைச் சார்ந்திருப்பது போலன்றி மின்னணுச் சாதனங்கள் ஒரு தனி மின்னணு வழியில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்ட செய்தி பண்பாடு, உணர்வு, அறிவு முதலியவற்றில் வேறுபட்ட, தனித்தனி மனிதர்களை உள்ளடக்கிய பொதுமக்கள் குழுவிற்கு ஒரே நேரத்தில் சென்றடைகிறது. மின்னணு ஊடகங்களில் கணிப்பொறி, இணையம், அலைப்பேசி முதலியவை சிறப்பிடம் பெறுகின்றன.

**கணிப்பொறி**

கம்யூட் என்ற சொல்லிலிருந்து உருவானதே கம்யூட்டர். கம்யூட் என்ற சொல்லுக்கு மதிப்பீடு, கணக்கீடு, கண்டுபிடி என்ற பொருள்கள் உண்டு. தகவல் தொடர்பு ஊடகங்களில் ஒன்றான கணினி ஒரு மின்னணு ஊடகமாகும். கணினியின் பயன்பாட்டினை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று கணினியை மட்டும் நேரடியாகப் பயன்படுத்துவது. மற்றொன்று கணினியுடன் இணையத்தையும் இணைத்துப் பயன்படுத்துவது.

கணினி உள்ளீடு செய்யப்படும் தரவுகளை ஏற்று, கொடுக்கப் பட்ட ஆணைகளின் படி தேவையானத் தகவல்களை மாற்றித்தரும் திறனுடையதாகும். சாதாரண மனிதனால் வணிகம், கல்வி, ஆய்வு போன்றவற்றில் பயன்படுத்தப்படும் நெறிப்படுத்திய கருவி மொழியைக் கொண்டதே கணினி. இது,

1. உள்ளீடு

2. செயலாக்கம்

3. வெளியீடு

என்னும் மூன்று நிலைகளைக் கொண்டுள்ளது. கணினியில் உள்ளீடாகக் கொடுக்கப்படும் நிகழ்வுகளை மையச்செயலகம் செயல்படுத்தி காட்சித்திரையிலோ அல்லது அச்சுப் பிரதியாகவே வெளியிடுகிறது.

**கணினியின் வரலாறு**

கி.பி. 1642 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த பிளெய்ஸ் பாஸ்கல் என்பவர் கண் சக்கரக் கணிப்பான் ஒன்றை கண்டுபிடித்தார்.

கி.பி. 1673 இல் லைபினிட்சின் என்பவர், பாஸ்கலின் எண் சக்கரக் கணிப்பானில் மேம்பாடுகளைச் செய்து லைபினிட்சின் சக்கரத்தை உருவாக்கினார்.

லைபினிட்சினைப் பின்பற்றி ஜார்ஸ் பூலே என்பவர் உண்மைப் பட்டியல்கள் ( Truth Tables) என்பதைக் கண்டுபிடித்தார். இதில் கூட்டல், கழித்தல் மட்டுமின்றி பெருக்கல், வகுத்தல் போன்றவைகளையும் கணக்கிட இயலும்.

இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சார்லஸ் பாபேஜ் என்பவர் கணினியின் தந்தை என்று போற்றப்படுகிறார். இவர் மடக்கைப் பட்டியலில் ( Logrithams) உள்ள குறைகளை நீக்குவதற்குப் புதியதோர் கருவியைக் கண்டுபிடித்தார். இக்கருவியை கி.பி. 1833 ஆம் ஆண்டு வடிவமைத்தார்.

பாபேஜியின் உதவியாளர் ஆடா அகஸ்டா என்பவர் கணினியில் உள்ளீடு செய்வதற்குரிய ஆணைகளை ( Programmes) எழுதினார். ஓர் ஆணைத் தொடர் மொழிக்கு ஆடா என்றே பெயரிடப்பட்டது.

கி.பி. 1944 இல் ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹோவார்ட் ஜக்கன் என்பவர் உலகின் முதல் முழுமையான தானியங்கிக் கணினி மார்க் 1 என்பதை

உருவாக்கினார். இதுவே முதல் தலைமுறை கணினியாகும். இதனைத் தொடர்ந்து மார்க் 2, மார்க் 3, மார்க் 4 கணினிகள் உருவாக்கப்பட்டன.

கி.பி.1945 இல் முற்றிலும் மின்னணு முறையில் செயல்படும் ஙலி (ENICAC - Electronic Intergrator And Calculator) ஙஏ லீலீ கண்டறியப்பட்டது. இதனைக் கண்டுபிடித்தவர் மாச்லே, எக்கார்ட் என்பவர் ஆவார். இதில் அடிப்படைக் கருவியாக வெற்றிடைக் குழாய் ( Vacum Tubes) பயன்படுத்தப்பட்டது.

முதலிரு தலைமுறையிலிருந்த கணினியின் குறைபாடுகளை நீக்கி, மூன்றாம் காலகட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கணினி செயல்திறன், வேகம் மிக்கதாக உருவாக்கப்பட்டது.

கி.பி. 1970 முதல் 1975 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட கணினியே நான்காம் காலக்கட்டக் கணினியாகும். இதில் திறன் வாய்ந்த பல மின் நுண் கருவிகள் ( Electronic components) இணைக்கப் பட்டிருந்தன.

கி.பி. 1986 ஆம் ஆண்டு முதல் ஐந்தாம் கணினிக் காலமாகும். இதன் ஒரு பிரிவு சூப்பர் கணினிகள் ஆகும்.

**கணினியின் வகைகள்**

இயக்க நெறியின் அடிப்படையில் கணினி மூன்றாக வகைப்படுத்தப்படுகின்றன.

1. ஒப்புமைக் கணினி (Analog computer)

2. எண்ணிலக்க்க் கணினி (Digital computer)

3. கலப்பினக் கணினி (Hybrid computer)

**ஒப்புமைக் கணினி**

பொறியியல் துறையில் பயன்படும் இது புற அளவைகளான வெப்பநிலை, அழுத்தம், அளவு என்பன கணக்கீடு செய்யப்பெற்று அவை எண்களாக மாற்றம் பெற்றுப் பயன்படுத்தப்படும்.

**எண்ணிலக்கக் கணினி**

எண்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் இது பெரிதும் வணிகத்துறையில் பயன்படுகிறது.

**கலப்பினக் கணினி**

ஒப்புமைக் கணினி மற்றும் எண்ணிலக்கக் கணினி என்ற இரண்டின் செயல் திறனையும் ஒருங்கே தன்னகத்தே கொண்டது இதுவாகும். மேலும் இதன் வடிவத்தைப்பொறுத்து பெருமுகக் கணினி, சிறு கணினி, நுண் அல்லது தீனி நபர் கணினி என்று வகைப்படுத்தப்படுகிறது.

கணினி அமைந்திருக்கும் களத்தினைப் (இடத்தினை) பொருத்து அதனை,

**தன்கணினி** (Personal computer)

**மனைக் கணினி** (Home computer)

**மேஜைக் கணினி** (Desktop computer)

**மடிக் கணினி** (Laptop computer or Note book computer)

**கைப்பெட்டிக் கணினி** (Briefcase computer)

**உள்ளங்கைக் கணினி** (Palmtop computer)

என்று வகைப்படுத்துவர். மிக அதிக வேகமாக இயங்கும் செயல் திறனுடைய கணினியை மிகநுட்பக் கணினி (Super computer) என்றும் குறிப்பிடுவர்.

**கணினியின் செயல்பாடு**

கணிப்பொறி செயல்படுவதற்கு வன்பொருள், மென்பொருள் ஆகிய இரண்டும் தேவைப்படுகிறது. இவை இரண்டிற்கும் இடையிலான பரிமாற்றத்தில் தான் கணினி இயங்குகிறது.

**வன்பொருள் (Hardware)**

கணினியில் வன்பொருள் சாதனங்களாக, திரையகம் ( Monitor), விசைப்பலகை (Keyboard), சுட்டி ( Mouse), அச்சுப்பொறி(Printer) போன்றவையாகும். நம் கண்ணால் பார்த்து தொடக்கூடிய பொருட்கள் எல்லாம் வன்பொருட்கள் ஆகும்.

**மென்பொருள் (Software)**

வன்பொருளுக்கு வேலைக்கொடுக்கும் அல்லது கட்டளைகளைப் பிறப்பிக்கும் நிரல்களை ( programs) மென்பொருள் என்பர். கணினியில் கடிதங்கள் தட்டச்சு செய்ய பயன்படும் சொற்செயலி (word processing program) ஒருவகை மென்பொருள் தான்.

இயக்க முறைமை ( Operating system) என்பது கணினியுடன் இணைக்கப்பட்டிருக்கும் சாதனங்களை நிர்வாகிக்கும் மென்பொருள். Windows, Mac OS இரண்டும் பரவலாக அறியப்படும் இயக்க முறைமைகள் ஆகும்.

மனிதனின் மூளையைப் போன்று செயல்படுவது கணினியின் மையச் செயலகம் (Central processing Unit) செயல்படுகிறது. இதனை CPU என்று கூறுவர்.

கணினியில் உள்ளீடு செய்யப்பட்டத் தரவானது மையச் செயலகம் மூலம் மாற்றம் பெற்று காட்சித்திரை மூலமாகவோ (Desktop), குரலாகவோ, படமாகவோ வெளியிடப்பெறும். மேலும் அச்சுப்பதிவு செய்ய வேண்டுமென்றால் அச்சுப்பதிவு செய்யும் கருவிக்கு ( Printer) ஏற்ற முறையில் குறியீடுகளாக வழங்குகின்றன.

**கணினியின் பயன்பாடு**

கணினி இன்று நம்முடைய அன்றாட வாழ்வில் பயன்படும் கருவியாகிவிட்டது. அறிவியல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு கல்வி, மருத்துவம், விண்வெளி, பாதுகாப்பு போன்ற பல்துறைகளில் பயன்பட்டு வருகிறது.

சொல் விளையாட்டு, பொறியியல் வரைபடம் வரைதல் பொழுதுபோக்கு விளையாட்டுகள், கணிதவியல் தீர்வுகள் போன்ற அரிய பணிகளையும் எளிமையாகச் செய்கிறது.

இன்று பேருந்து நிலையங்கள், வங்கிகள், கல்வி நிலையங்கள், உணவகங்கள் என்று எல்லா இடங்களிலும் கணினியின் ஆளுமையே நிலவுகின்றது. இது வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரத்துணைச் செய்கின்றன.

கணினியின் பயன்பாடு அதிகமாக உள்ள இக்காலத்தில் தொழில் நுட்ப உத்திகள் அனைத்தையும் பயன்படுத்திக் கணினிவழியாகத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களையும் பெற முடிகிறது. இந்நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பான கணினி அறிவை விரிவு செய்வதற்கும் உலகத் தொடர்பிற்கும் சிறந்த வாயிலாக உள்ளது.

**கணினி அச்சு (Computer printer)**

முதன்முதலில் கணினிக்கான அச்சுக்கருவியினை சார்லஸ் கார்ல்சன் என்பவர் கி.பி. 1938 ஆம் ஆண்டு உருவாக்கினார். கி.பி. 1953 ஆம் ஆண்டு வேகமாக அச்சிடும் சுருவியை ரேமிங்டன் ரேண்ட் என்ற நிறுவனம் உருவாக்கியது.

கி.பி. 1964 ஆம் ஆண்டு டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றப் போது முடிவுகளை அச்சிட்டு வழங்க டாட் மேட்ரிக்ஸ் ( Dot Matrx (or) Impact Matrx) என்ற கருவி உருவாக்கப் பட்டது. இதனை சீக்கோ (தற்போது எப்சன் நிறுவனம் சந்தைப் படுத்தியுள்ளது.

அதன்பிறகு கி.பி. 1970 இல் இம்பேக்ட் பிரிண்டரும். கி.பி. 1971 இல் ஜெராக்ஸ் பிரிண்டரும், கி.பி. 1971 இல் ஜெராக்ஸ் நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்ட லேசர் பிரிண்டரும் வெளியிடப்பட்டது. கி.பி. 1976 இல் இங்க் ஜெட் (Ink -jet) என்ற திரவ மையைக் கொண்டு அச்சிட உதவும் பிரிண்டர்களும் சந்தைக்கு வந்தன. எப்சன் நிறுவனம் டெஸ்க் டாப் (Desk top) பிரிண்டர் கி.பி. 1977 இல் விற்பனைக்கு வந்தது.

தற்போது கையடக்கப் பிரிண்டர்களும் வந்து விட்டன. வண்ண நிறத்தில், காகிதத்தின் இருபக்கமும் அச்சிடும் நவீன முறைகளும் வந்து கொண்டே இருக்கிறது. பிரிண்டர் தயாரிப்பில் பெக்கார்டு, டி.வி.எஸ், கேனான், சாம்சங், எப்சன், லெக்ஸ்மார்க் முதலிய நிறுவனங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

**கணினி வைரஸ் (Computer Virus)**

கணினியைப் பொறுத்தவரை வைரஸ் என்பது கிருமி கிடையாது. அதுவும் கணினியில் செயல்படும் தவறான கட்டளைகளைத் தானாகச் செயல்படுத்தும் ஒரு கோப்பு (File) தான்.

இதனை ஏன் வைரஸ் என்று அழைத்தார்கள் எனில் எப்படி மனிதனின் உடலில் உட்புகுந்த ஒரு வைரஸ் கிருமி மனித உடலின் செயல்பாட்டில் குறுக்கிட்டு அதிகளவில் வைரஸ் கிருமிகளை உற்பத்திச் செய்து மனிதனுக்கு உடல்நல குறைபாடுகளை ஏற்படுத்துகின்றதோ அதைப்போன்று கணினி வைரஸ்கள் தானாக அதிகமாக உற்பத்தியாகி கணினியின் இயக்கத்தின் பின்புலக் கோப்புகளை அழித்து கணினியின் செயல்பாட்டில் அதிகமான குறைபாடுகளையும், செயலிழப்புகளையும் ஏற்படுத்துகிறது.

கணினியை வைரஸ் தாக்காமல் பாதுகாக்க வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் ( Anti virus software) பயன்படுத்துகின்றன.

**குறுவட்டு (C.D)**

குறுவட்டு என்பது ஒரு தட்டையான மெலிந்த வட்ட வடிவிலான பிளாஸ்டிக் தகடாகும். பெரும்பாலும் குறுவட்டுகள் பாலி கார்பனேட், அலுமினியம் போன்றவைகளால் தயாரிக்கப்படுகிறது.

இதன் ஒருபக்கம் பளபளப்பாகவும் மறுபக்கம் சாதாரணமாகவும் இருக்கும். பளபளப்பாக இருக்கும் பக்கத்தில் தகவல்களைப் பதிவு செய்யலாம். குறுவட்டு கி.பி. 1982 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

அதன் பின்னர் நவீன தொழில் நுட்பத்துடன் கி.பி. 1990 இல் டிஜிட்டல் வீடியோ குறுவட்டு அறிமுகம் செய்யப்பட்டது. இது குறுவட்டைவிட ஏழுமடங்கு தகவல்களைப் பதிவுச் செய்யமுடியும்.

குறுவட்டில் பதிவு செய்து வைக்கப்படும் தகவல்களின் அளவினை பைட் கணக்கில் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு எழுத்தும் ஒரு பிட் (Bit) என அழைக்கப்படுகிறது. எட்டு பிட் சேர்ந்தது ஒரு பைட் (Byte) ஆகும். 1024 பைட் சேர்ந்தது ஒரு கிலோ பைட் (Kilo Byte) என்றும், 1024 கிலோ பைட் சேர்ந்தது ஒரு மெகா பைட் ( Mega Byte) என்றும், 1024 மெகா பைட் சேர்ந்தது ஒரு ஜிகா பைட் (Giga Byte) என்றும் வழங்கப்படுகிறது.

**சி.டி.ராம் (C.D.ROM)**

சி.டி. ராம் என்பது Compact Disc Read Only Memory என்பதன் சுருக்கமே ஆகும். இது பாலி கார்பனேட் ( Poly Carbonate) எனப்படும் சுடினமான பிளாஸ்டிக் பொருளால் செய்யப்பட்டுள்ளது. லேசர் சுதிரைக் கொண்டு சிறப்பு வாய்ந்த மின்னணுப் பதிப்பு முறையில் தகவல்கள் இதில் பதிவு செய்யப்படுகின்றன.

இதில் பதிவு செய்த தகவல்களை வாசிக்கமட்டுமே முடியும்; அதனை அழித்து எழுத முடியாது. எனவே தான் இதனை Read Only Memory என்று அழைக்கின்றனர். இதில் பதிவு செய்த தகவல்கள் அழிவதில்லை.

**ஃபிளாப்பி தட்டு (Floppy Dise)**

ஃபிளாப்பி தட்டு என்பது நுண்மக் கணினியில் பயன்படுத்தபடும் பாலிஸ்டர் ஃபிலிமாலான தட்டாகும். இது தகவல்களைப் பதிவு செய்வதற்கு சி.டி ( குறுவட்டு) வருவதற்கு முன் பயன்படுத்தப்பட்டது. தற்போது இதன் பயன்பாடு குறைவாகவே உள்ளது.

**கடினத்தட்டு (Hard Dise)**

இது அலுமினியத்தால் செய்யப்பட்ட வட்டவடிவ தட்டாகும். இதில் ஃ பெர்ரோ மாக்னடிக் என்ற பொருளாலான காந்தம் பூசப்பட்டிருக்கும்.

**விண்டோஸ்**

உலகின் பெரும்பகுதி கணினிகள் விண்டோஸ் இயங்கு தளத்தில்தான் இயங்கி வருகின்றன. கி.பி. 1985 ஆம் ஆண்டு விண்டோஸ் 1 என்ற பெயரில் முதல் இயங்குதளத்தை வெளியிட்டார் பில்கேட்ஸ். அப்போது அதனுடைய விலை 99 அமெரிக்க டாலர் ஆகும். அதன்பிறகு கி.பி. 1987 ஆம் ஆண்டு விண்டோஸ் 2 வெளிவந்தது. இதில் முதன்முதலாக கண்ட்ரோல் பேனல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதுமட்டுமின்றி கடினத்தட்டு இல்லாத கணினியிலும் இரண்டு ஃ பிளாப்பி தட்டுக்கள் மூலம் இயங்கும் முறையும் சேர்க்கப்பட்டது. கி.பி. 1990 இல் விண்டோஸ் 3 வெளிவந்தது. இதில் கண்ட்ரோல் பேனல் மேலும் மேம்படுத்தப் பட்டது. கணினி விளையாட்டு (கேம்) அறிமுகப்படுத்தப்பட்டது.

கி.பி. 1993 இல் விண்டோஸ் என்.டி.3.1 என்ற இயங்குதளம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஐ.பி.எம் நிறுவனத்துடன் கொண்டிருந்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட பின்னர், மைக்ரோசாப்ட் நிறுவனம் உருவாக்கிய முதல் இயங்குதளம் இதுதான்.

கி.பி. 1995 இல் விண்டோஸ் 95 என்ற இயங்குதளம் வெளியிடப்பட்டது. இதுதான் சாதாரண மக்களை மனதில் வைத்து உருவாக்கப்பட்ட முதல் ஆப்ரேட்டிங் சிஸ்டம். இதில் டாஸ்க் பார். மிஸ்டம்ட்ரே, நோட்டிபிகேஷன் ஏரியா, விண்டோஸ் மேக்சிமைஸ். மினிமைஸ் முதலிய வசதிகள் முதன்முதலில் வந்தன.

கி.பி. 1996. இல் விண்டோஸ் என்.டி.4 இயங்குதளம் வெளிவந்தது. இது ஓர்க் ஸ்டேஷன் மற்றும் சர்வர்களில் இயங்கும் கணினியாக வடிவமைக்கப்பட்டது.

கி.பி. 1998 இல் விண்டோஸ் 98 இயங்குதளம் வெளிவந்தது. இதில் ஸ்கேனர், சுட்டேலி, விசைப்பலகை முதலியவை யு.எஸ்.பி போர்ட் மூலம் பயன்படுத்த முடிந்தது.

கி.பி. 2000 இல் விண்டோஸ் மீ இயங்குதளம் வெளிவந்தது. இந்த இயங்குதளத்தில் வெளிவந்த கணினி தான் மிகவும் மேசமான கணினி என்று கூறப்படுகிறது.

கி.பி. 2001 இல் வெளிவந்த விண்டோஸ் எக்ஸ்பி இயங்குதள கணினி அனைவரையும் கவர்ந்த ஒன்றாகும். இன்றும் இத்தகைய இயங்குதள கணினியைப் பயன்படுத்துபவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள்.

இவைகளை அடுத்து கி.பி. 2003 இல் விண்டோஸ் சர்வர் 2003, கி.பி. 2006 இல் விண்டோஸ் விஸ்டா, கி.பி. 2008 இல் விண்டோஸ் சர்வர் 2008, கி.பி. 2009 இல் விண்டோஸ் 7, கி.பி. 2012 இல் விண்டோஸ் சர்வர் 2012 என்று பல கணினி இயங்குதள மென் பொருட்களை மைக்ரோசாப்ட் நிறுவனம் வெளியிட்டது.

25.10.2012 இல் வெளியான விண்டோஸ் 8 மக்களிடம் பெரிய வரவேற்பைப் பெறவில்லை. இது தொடுதிரை தொழில் நுட்பத்தில் வடிவமைக்கப்பட்டது. ஸ்டார்ட் மெனு உள்ளிட்ட பல வசதிகள் இதில் தரப்படவில்லை. இதனால் மக்கள் தொடர்ந்து விண்டோஸ் 7 மென்பொருளையே பயன்படுத்தி வந்தனர். பின்னர் ஸ்டார்ட் பட்டன் சேர்க்கப்பட்டு விண்டோஸ் 8.1 என்ற பெயரில் மீண்டும் வந்தது. ஆனாலும் இது பெரிய வரவேற்பினைப் பெறவில்லை.

தற்போது கடைசியாக கி.பி. 2015 இல் விண்டோஸ் 10 வெளியிடப்பட்டது. இதுவும் பெரிய வரவேற்பைப் பெறவில்லை. இதில் எட்ஜ் பிரவுசர் என்ற புதிய பிரவுசரை அறிமுகப்படுத்தி யுள்ளனர்.

**இணையம் (Internet)**

தகவல் தொடர்பில் நெட்வொர்க் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது தமிழில் இணையம் என்றும் வலைப்பின்னல் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் மூலம் நொடிப்பொழுதில் உலகில் உள்ளவரோடு தொடர்பு கொள்ள முடியும். கணினித் தொழில் நுட்பமும் தொலைபேசி அமைப்பில் உண்டான முன்னேற்றமும்

இணைந்து உருவாகிய சாதனை இதுவாகும். ஒருவருக்கொருவர் கலந்துரையாடுவது, கல்வி கற்பது, தொழில் முறை கற்பது, ஆலோசனை தருவது, பெறுவது, செய்திகளை அறிவது, கலைகளை வளர்ப்பது,சமயச்சொற்பொழிவுக் கேட்பது போன்ற அனைத்தும் சாத்தியம் ஆகும்.

இணையத் தொடர்பு முன்னேற்றத்தில் அமெரிக்கா விரைவான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத் துறையினரின் பணித்தேவைக்காகக் கண்டறியப்பட்டதே இணையம். உலகத்தையே தன்னுள் அடக்கிய பெருமை இதற்கு உண்டு.

ஒரு அலுவலகத்தில் பத்து கணினிகள் இருந்தால் அவைகள் ஒன்றோடு ஒன்று செய்திகளை பறிமாறிக்கொள்ள இணைக்கிறோம். இந்த இணைப்பை நெட்வொர்க் வலைப்பின்னல் என்பர். ஒரு அலுவலகத்தில் உள்ள வலைப்பின்னலை மற்றொரு அலுவலக வலைப்பின்னலுடன் இணைக்க விரும்பலாம். இணைக்க வேண்டும்; அப்போது தான் அலுவலகத்திற்கு இடையே அதிகளவில் செய்திகளை பறிமாறிக்கொள்ள முடியும். இந்தச் செயல் உலகெங்கும் விரியும் போது எல்லா மக்களும் இணைகிறார்கள். இதைதான் இணையம் என்கிறோம்.

**இணையத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

இன்று உலகத்தையே தன்னுள் வைத்திருக்கும் இணையம் தோன்றுவதற்குப் பல்வேறு அறிஞர்களும், அமைப்புகளும் முன்னோடியாகத் திகழ்ந்தனர்.

உலக வலையமைப்பின் அடிப்படையில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஜெ.சி.ஆர். லிக்லைடர் ஆவார். கி.பி. 1960 இல் வந்த செய்தி இதழிலில் வெளியான இவரது, மனிதன் கணினி கூட்டு வாழ்வு என்கின்ற கட்டுரை இவர்தம் சிந்தனைகளைத் தெளிவாகப் புலப்படுத்தியது.

லிக்லைடர் கி.பி. 1962 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புத்துறைத் தலைவராக இருந்தார். அப்போது நவீன ஆய்வுத்திட்ட நிறுவனம், தர்பா (DARPA) என்று அழைக்கப்படுவது தகவல் செயல்பாட்டு அலுவலகமாக இருந்தது. இவர் தர்பாவுடன். இணைந்து கணினி ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கு அதிகாரபூர்வ மற்ற குழு ஒன்றை அமைத்தார்.

அங்கு தகவல் செயல்பாட்டு அலுவலகப்பணியின் ஒருபகுதியாக மூன்று வலையக முனையங்கள் நிறுவப்பட்டன. அவற்றில் ஒன்று சண்டா மோனிகாவிலுள்ள சிஸ்டம் டெவலப்மெண்ட் கார்ப்ப ரேஷனுக்காகவும், மற்றொன்று பெர்கெல்லியிலுள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் பிராஜெக்ட் ஜெனிக்காகவும், மூன்றாவது மாசாகயுட்டஸ் இன்ஸ்டியூட் ஆஃப் டெக்னாலஜி ( MIT) க்கான ஒத்திசைத்த கால-பறிமாற்ற முறைத்திட்டத்திற்காகவும் அமைக்கப் பட்டது.

பிரிட்டன் நாட்டு அறிஞர்களான சார்லஸ் காவ், ஜார்ஜிஸ் ஹாக்மேன் ஆகியோர் ஃபைபர் ( Fiber) நூலிழையின் உதவியால் தகவல்களை ஒளிப்பிம்பங்களாக மாற்றி நெடுந்தொலைவிற்கு அனுப்பமுடியும் என்பதை கி.பி. 1966 ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர்.

கி.பி. 1979 இல் டியுக் பல்கலைக்கழகத்தின் மாணவர்களான டாம் டிரஸ்காட், ஜிம் எல்லிஸ் ஆகியோர் எளிமையான பார்ன் ஷெல் முறையில் செய்திகள் மற்றும் தகவல்களைத் தொடர் நிரல்களாகப் பயன்படுத்தும் முறையினை கண்டறிந்தனர். இந்த முறையினை சேப்பல் ஹில்லிலுள்ள வடக்கு கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்துடன் இணைத்து கொண்டு வந்தனர்.

இணையத்தை உருவாக்குவதில் பலர் முன்னோடிகளாக இருந்துள்ளனர். அவற்றில் வின்டன் செர்ஃப், ஹியூபர்ட் சிம்மர்மென் ஜெரார்ட், ராபர்ட் டைலர், லேரி ராபர்ட்ஸ், டொனால்ட் டேவிஸ் முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

இண்டர்நெட் என்பதன் விரிவான சொல்லாக்கம் இண்டர்நெட் வொர்க்கிங் ( Internet Working) என்பதாகும். சுவிட்சர்லாந்து நாட்டை சார்ந்த பிம்பெர்னர்லீ என்பவர் கி.பி. 1989 இல் இணையத்திற்கு உலகளாவிய வலைப்பின்னல் என்று பெயரிட்டார்.

கி.பி. 1980 இல் பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த மினிடேல் என்பவர் தொலைப்பேசி கம்பி வழியாகத் தகவலறியும் சேவையைத் தொடங்கினார்.

டெல்ஃபி (Delphi) என்ற நிறுவனம் கி.பி. 1992 இல் பெரியளவில் தகவல் சேவையைத் தொடங்கியது. அதன்பின்னர் கி.பி. 1993 இல் மிகப்பெரிய அளவிலான தேசியத் தகவல் பரவலுக்கான திட்டம் ஒன்றை அமெரிக்க அரசு ஏற்பாடு செய்தது.

கி.பி.1993 இல் இல்லியானாய்ஸ் பல்கலைக்கழகத்தின் National Centre for Super Computing என்ற மையத்தை சார்ந்த மாணவர்கள் பல வசதிகள் கொண்ட இணையத் தேடலுக்கான மென்பொருள் திரையைக் கண்டுபிடித்தனர். இது மொசைக் ( Mosaic) என்றழைக்கப்பட்டது. இதனை மார்க் ஆண்டர்சன் மொசைக் என்பவர் கண்டுபிடித்தார்.

**முதல் இணையதளம்**

உலகின் முதல் இணையதளம் அர்பாநெட் (ARPANET - Advanced Research Project Agency Network) ஆகும். இது அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத்துறையில் எதிரிகளுக்குத் தெரியாமல் இராணுவ வீரர்களுக்குச் செய்திகளை அறிவிக்கப் பயன்படுத்தப்பட்டது.

**தமிழில் இணையம்**

இண்டர்நெட் என்பதை தமிழில் இணையம் என்று முதன் முதலில் கி.பி. 1995 இல் பாலா பிள்ளை என்பவர் மொழிப்பெயர்த்து வழங்கினார். இதே ஆண்டு சிங்கப்பூரைச் சார்ந்த நா. கோவிந்தசாமி என்பவர் தமிழை இணையத்தில் ஏற்றினார். இவரே தமிழ் இணையத்தின் தந்தை என்று போற்றுவர்.

**தமிழில் முதல் இணையதளம்**

கி.பி.1995 இல் சிங்கப்பூர் அதிபர் ஓங் டாங் சாங் தொடங்கி Journey: words, Home and Nation- Anthology of singapore Poetry என்கிற நான்கு மொழிக் கவிதைகளுக்கான வலையகத்தில்தான் முதன்முதலில் தமிழ் இணையத்தில் நுழைந்தது.

இதனை சாதித்த IRDU (Internet Research and Development Unit) குழுவில் நா. கோவிந்தசாமி, சீன அறிஞர்கள் டான்டின் வீ. லியோஸ், கோக்யாங் ஆகியோர் முதல் தமிழ்ப் பக்கத்தை வலையில் ஏற்றியவர்கள் ஆவர்.

**இணையத்தின் கட்டுப்பாட்டகம்**

இணையத்தை தனிமனிதனோ அல்லது குழுவோ கட்டுப்படுத்து வதில்லை. எனினும் அதனை வழிநடத்த இணைய கழகம் இலாப நோக்கமின்றி நடத்தி வருகிறது. அவற்றுள் IAB (Internet Architecture Board), IETF (Internet Engineering Test Force) ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும்.

கணினிகளை இணையத்தில் இணைப்பதற்கான வரையறை களையும், இணையத்தில் இணைந்துள்ள கணினிகளுக்கு முகவரி களையும் IAB வழங்குகிறது.

கணினியின் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்தும், அதனால் இணையத்தில் ஏற்படுத்த வேண்டிய மாறுதல்கள் குறித்தும் IETF முடிவு செய்கிறது.

**இணைய இணைப்பினை வழங்கும் நிறுவனங்கள்**

இணைய இணைப்பினை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கட்டணம் செலுத்தி இணைய இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த நிறுவனங்களை ஆங்கிலத்தில் Service Provider என்று கூறுவர். @ VSNL, BSNL, DISHNET, SIFY, AIRTEL, AIRCEL, RELIANCE, TATA INDICOM போன்ற நிறுவனங்கள் இணைய சேவையை வழங்கி வருகின்றன.

**இணைய முகவரி**

ஒவ்வொரு இணையத் தளத்திற்கும் பெயர் மற்றும் முகவரி காணப்படுகிறது. இதனை இணைய முகவரி என்று கூறுவர்.

உதாரணமாக. http://www.E.mail.com

இதில் நான்கு பகுதிகள் உள்ளன. http - Hyper Text Transport Protocol என்பதன் சுருக்கமாகும்.

www- World Wide web என்பதன் சுருக்கமாகும்.

E.Mail- Electronic Mail என்பதன் சுருக்கமாகும். இது குறிப்பிட்ட ஓர் இணையதளத்திற்கு வழங்கப்பட்டுள்ள பெயர்.

com-commerce என்பதன் சுருக்கமாகும். இது இணையதளத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.

சில இணையதளங்களின் தன்மையினைச் சுட்டும் சில குறியீடுகளை பார்ப்போம்.

au - ஆஸ்திரேலியா,

ca - கனடா,

edu - கல்வி,

in - இந்தியா,

it - இத்தாலி,

இணைய முகவரிகள் கணினி, எண்களைக் கொண்டே அடையாளம் காட்டப்படுகிறது. இதனை IP முகவரி (Internet Protocol Address) என்று கூறுவர்.

**வலைப்பின்னலின் வகைகள்**

வலைப்பின்னலை LAN,MAN, WAN என்று மூன்றாக வகைப்படுத்தலாம். LAN (Local Area Network) என்பது குறிப்பிட்ட சில கணினிகளை மட்டும் இணைப்பதாகும். உதாரணமாக ஒரு கல்லூரிக்குள் இருக்கும் கணினிகளை ஒன்றோடு ஒன்று இணைப்பது.

MAN (Metropolitan Area Network) என்பது ஒரு நகரத்திற்குள் இருக்கும் கணினிகளை ஒன்றோடு ஒன்று இணைப்பதாகும். இவற்றிற்கு தொலைபேசி இணைப்பு மட்டும் போதும். WAN (Wide Area Network) என்பது நாட்டிற்குள் இருக்கும் கணினிகளை இணைப்பது.இதற்கு செயற்கைக்கோளும், தொலைபேசி இணைப்புகளும் பயன்படுகின்றன. WWW (World Wide Web) என்பது உலகம் தழுவிய இணைய வலைப்பின்னல் ஆகும்.

**இணைய நூலகம்**

இணையம் தகவல் தொடர்புச் சாதனமாக மட்டுமின்றி மக்களுக்கு அறிவினைப் புகட்டும் தகவல் கிடங்காகச் செயல்படுகின்றது. இதனுள் உலகளாவிய பல்வேறு நூல்களை கொண்ட பெட்டகமாகத் திகழ்கிறது.

நூலகம் என்பது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு புதிய சிந்தனைகளை உருவாக்கக் கூடிய பல்வேறு துறைச்சார்ந்த நூல்களை ஒரே இடத்தில் இருந்தவாறு வாசிக்கவும், எடுத்துச் செல்லவும் வசதி கொண்டிருப்பதாகும்.

அதேப்போன்று இணையத்தில் நமக்குத் தேவையான செய்திகள் அல்லது நூல்களை, அதற்குரிய தலைப்பைத் தேர்வு செய்து இணையதளத்தில் செல்லும் போது தகவல்கள் அமுதசுரபி போன்று பெறமுடியும். சில செய்திகள் அல்லது நூல்களை வாசிக்கவும், பிரதி எடுத்து கொள்ளவும் முடியும். சில நூல்கள் இலவசமாகப் பதிவு இறக்கம் செய்து கொள்ளவும் முடியும். இணையம் ஒரு நூலகமாகவே இன்று செயல்படுகிறது.

இணையத்தில் அறிவியல், வரலாறு, கலை, இலக்கியம், பொது அறிவு என்று துறைசார்ந்த நூல்கள், அகராதிகள், கலைக் களஞ்சியங்கள், கலைச்சொல் தொகுப்புகள், சுவடிக் காட்சியங்கள், பண்பாட்டு காட்சியகங்கள் போன்றவற்றை சேகரித்துக் கொள்ள முடியும். தற்போது புத்தக பதிப்பகங்களும் தங்களின் பதிப்பகத்தில் உள்ள நூல்களின் பட்டியலை இணையத்தில் பதிவுச் செய்து வைத்துள்ளனர். நூல்களை இணையத்தின் வாயிலாகப் பணம் செலுத்தி நம் வீட்டிலேயே பெற்றுக் கொள்ள முடிகிறது.

இணையவழிக் கற்றல் கற்பித்தலுக்கு இணையநூலகம் அதிகளவில் பயன்படுகிறது. தமிழ் மொழிக்கான இணைய நூலகங்கள் பல இணையதளத்தில் செயல்படுகின்றன. சென்னை நூலகம் தமிழ் இணையக்கல்விக்கழகத்தின் நூலகம், மதுரைத்திட்டம் என்றழைக்கப் படும் மதுரைத் தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம், தமிழ் மின்னூலகம் போன்ற இணைய நூலகங்கள் இலவசமாக மக்களுக்குக் கிடைக்கின்றன. அதுமட்டுமின்றி விக்கிப்பீடியா என்பது அறிவுத் தகவலைத் திரட்டும் களஞ்சியமாக இருக்கிறது. அவ்வகையில்,

| | | |
|---|---|---|
| தமிழ் இணையக் கல்விக்கழகம் | - | www.tamilvu.org |
| சென்னை நூலகம் | - | www.chennailibrary.com |
| தமிழகம் | - | www.thamizhagam.net |
| மதுரைத்திட்டம் | - | www.projectmadurai.org |
| தமிழ் மின்னூலகம் | - | www.tamillibrary.org |

போன்ற இணைய நூலகங்களை ஆசிரியர்கள் பயன்படுத்தித் தங்கள் தமிழ் அறிவையும் மாணவர்கள் வாசிப்புத் திறனையும் வளர்த்துக் கொள்ளலாம். விக்கிப்பீடியாவில் ஆசிரியர்கள் பங்கு கொண்டு தங்களுடைய தமிழ் பட்டறிவுத் திறன்களைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. அவ்வாறு பகிர்ந்து கொண்டால் அது மற்றவர்களுக்குப் பயன்படும்.

**இணைய இதழ்கள் (Electronic Journal)**

எலக்ட்ரானிக் ஸ்கை ரைட்டிங் (Electronic Sky Writing) முறையே இணைய இதழ்களுக்கு அடிப்படையாகும். இதன் மூலம் விரைவாகத் தொடர்பு கொள்ள முடியும். இம்முறையில் செய்திகள், கட்டுரைகள், பிறத்தகவல்களைப் படிக்க முடிகிறது. கி.பி. 1992 இல் அமெரிக்காவில் ஆறு மின்னணு இதழ்கள் வெளியாயின.

இணையத்தின் அதீத வளர்ச்சியால் தமிழ் வலைதளங்கள் அதிகளவில் புகுந்துள்ளன. அது மட்டுமின்றி தமிழ் இதழ்கள் அனைத்தும் இணையத்தின் வாயிலாகப் படிக்க வழிவகைச் செய்துள்ளன. நாளிதழ்களாக, திங்கள் இதழ்களான தினமலர், தினகரன், தினத்தந்தி, தினமணி, விகடன், குமுதம், கல்கி, புதிய தலைமுறை, துக்ளக், குங்குமம், காலச்சுவடு போன்ற இதழ்கள் இணையத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

இணையத்தில் மட்டும் இயங்குகின்ற தமிழ் இதழ்களும் அதிகளவில் உள்ளன. அவை, தமிழ் மனம், எழில் நிலா, நெய்தல், பதிவுகள், தமிழ்.காம். முத்தமிழ், தமிழமுதம், நெட் தமிழ், வெப் தமிழன், திண்ணை, தமிழ் ஓவியம், தமிழ்க் கூடல் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவைகள் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், செய்திகள் என்று பல்வேறு பரிமாணங்களில் செய்திகளை அளிக்கின்றன.

**வலைப்பூ (Blog)**

வலைப்பூ என்பது எழுத்துக்கள், ஒலி -ஒளி வடிவக் கோப்புகள். ஓவியங்கள், படங்கள் போன்றவற்றை இணையவழி வெளிப்படுத்தும் வலைப்பதிவாகும். இதில் பல்வேறு துறை சார்ந்த கருத்துக்களை எழுதலாம்; அறிவுபூர்வமான அறிந்த செய்திகளை அல்லது தகவல்களை அவரவரின் பக்கங்களில் வெளிப்படுத்தலாம். எந்த விதமான செலவும் இல்லாமல் ஒருவர் தம் சிந்தனையினை வலைப்பூவில் உலவ விடமுடியும்.

கி.பி. 1996 இல் ஹன்யா ( Xanya) என்ற நிறுவனம் முதன் முதலில் வலைப்பூ சேவையை வழங்கத் தொடங்கியது. கி.பி. 1997 இல் அமெரிக்காவைச் சேர்ந்த ஜார்ன் பர்கர் (Jom Barger) என்பவர் Weblog என்ற பெயரை உருவாக்கினார்.

பீட்டர் மெர்ரோஸ் (Peter Merholz) என்பவர் கி.பி. 1999 இல் We blog என்று சொல்லை இரண்டாகப் பிரித்துப் பயன்படுத்தினார்.

தமிழில் முதல் வலைப்பூவினை கி.பி.01.01.2003 அன்று கார்த்திகேயன் ராமசுவாமி என்பவர் தோற்றிவித்தார். 26.01.2003 அன்று இரண்டாவது வலைப்பூவினை கன்னியாகுமரியைச் சேர்ந்த நவன் (நவநீதகிருஷ்ணன்) தோற்றிவித்தார்.

வலைப்பூவில் ஏற்றப்பட்ட சிந்தனைகள் குறித்த பின்னோட் டங்கள் (Feedback) பெற இயலும். பின்னோட்டத்திற்கு உடனுக்குடன் விளக்கம் கூறவும் முடியும்.

அறிவியல், ஆன்மீகம், இலக்கியம், அரசியல், சுயமுன்னேற்றம். திரைப்படத்துறை, பெண்ணியம், பொருளாதாரம், சமயம் போன்ற பல்வேறு துறை சார்ந்த வலைப்பூக்கள் உள்ளன.

கி.பி. 2003 பிப்ரவரியில் கூகுள் நிறுவனம் இதை வாங்கியது. ஈரான், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் வலைப்பூவைத் தடைசெய்துள்ளன.

**மின்னணு அஞ்சல் (Email)**

சிவா அய்யாத்துரை என்ற தமிழர்தான் மின்னஞ்சலைக் கண்டு பிடித்தார். கி.பி. 1995 இல் இதனை முதன்முதலில் செயல்படுத்தியவர் இந்தியாவைச் சேர்ந்த சபீர் பாட்டியா என்பவர் ஆவார். இவர் ஹாட் மெயில் (Hot mail) என்ற சேவையைத் தொடங்கினார்.

Electronic mail என்பதன் சுருக்கம் E.mail ஆகும். மின்னணுத் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்திச் செய்திகளை எழுதுதல், அனுப்புதல், பெறுதல் போன்ற முறைகளே மின்னணு அஞ்சல் ஆகும்.

இணையம் வழியாகச் செய்திகளை அனுப்புவோர், ஏதாவது ஒரு மின்னணு அஞ்சல் வசதி கொண்ட இணையதளத்தில் சேர்ந்து தங்களுக்கென்று ஒரு முகவரியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஜி.மெயில் (g.mail), யாகூ மெயில் (yahoo mail), ஹாட் மெயில் (Hot mail), ரெடிப் மெயில் (reddiff mail), அவுட்லுக்எக்ஸ்பிரஸ் Out-look Express), (Mozhila Thunder bird) போன்ற அஞ்சல் திட்டங்கள் இருக்கின்றன. இதில் ஒன்றில் தமக்குரிய அஞ்சல் முகவரியை உருவாக்கிக் கொள்ளலாம். ஜி. மெயில் கூகுளினால் அறிமுகம் செய்யப்பட்டது.

மின்னணு அஞ்சல் மூலம் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சில நொடிகளில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம்.

**கூகுள் (Google)**

கி.பி. 1996 இல் அமெரிக்காவில் கலி∴போர்னியா ஸ்டான் ∴போர்ட் பல்கலைக்கழக பேரா.லாரிபேஜ் (Larry Page), அவரது மாணவர் சர்ஜிபிரின் (Sergey Brin) ஆகியோர் இணைந்து கூகுள் நிறுவனத்தை உருவாக்கினர். இது கி.பி. 1997 இல் பதிவு செய்யப் பட்டது.

கூகோல்(Googol) என்பது ஒன்றை அடுத்து 100 பூஜ்ஜியங்கள் கொண்ட எண்ணைக் குறிக்கும். இந்தப் பெயரைதான் வைக்க எண்ணினர். இது ஏற்கெனவே பதிவு

செய்யப்பட்டிருந்ததால், அந்தப் பெயரைப் பதிவு செய்தவர் கொடுக்க முன்வரவில்லை. அதனால் இவர்கள் தவறுதலாகத் தட்டச்சுச் செய்த பெயர்தான் கூகுள் (Google).

கூகோல்(Googol) என்பதன் அர்த்தம் கண்டு விரும்பப்பட்ட போதிலும், எழுத்து பிழைகளுடனான கூகுள் என்பது மிகப்பிரபலம் ஆயிற்று.

**முனநூல் (Facebook)**

ஃபேஸ் புக் என்றழைக்கப்படும் முகநூல் கி.பி. 2004 இல் ஹார்வர்ட் பல்கலைக்கழக மாணவன் மார்க் ஸீக்கர்பெர்த் உருவாக்கினார்.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் பயலும் மாணாக்கர், பணிபுரியும் பேராசியர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய புத்தகம் அனைவருக்கும் வழங்கப்படும். அந்தப் புத்தகத்திற்கு ஃ பேஸ்புக் என்று பெயர். இந்தக் கருத்துருவைதான் மார்க் ஸீக்கர்பெர்க் எடுத்துக் கொண்டார். தன்னுடைய நண்பர்களான எட்வர்டோ சவேரின், டஸ்டின் மொஸ்கோவிட்ஜ், கிறிஸ் ஹயூக்ஸ் ஆகியோரின் உதவியோடு முகநூலைக் கொண்டு வந்தார்.

ஹார்வர்ட் பல்கலைக்கழக மாணவர்களைத் தொடர்ந்து, ஐவி லீக், ஸ்டான்போர்டு பல்கலைக்கழக மாணவர்களும் பயன்படுத்த இசைவு கிடைத்தது. பின்னர் ஆப்பிள், மைக்ரோசாப்ட் நிறுவன ஊழியர்களும் முகநூலில் சேர்ந்தனர்.

கி.பி. 2008 இல் முகநூலின் தலைமையகம் அயர்லாந்தில் டப்ளின் நகரில் இருந்தது. கி.பி. 2011 இல் அமெரிக்காவின் கலிஃபோர்னி யாவிற்கு மாற்றப்பட்டது. கி.பி. 2011 இல் முகநூலில் அரட்டை யடிப்பதை நேரடிக்குரல் அழைப்பு மூலம் உலகெங்கும் உள்ள நண்பர்களுடன் பேசும் முறை கொண்டு வரப்பட்டது.

கி.பி. 2011 இல் ஸ்கைப் என்ற நிறுவனத்தின் உதவியுடன் நேரடி ஒளிப்பதிவாக ஒருவருக்கொருவர் பேசுவதைப் பார்க்கும் முறையைக் கொண்டு வந்தனர். இது கூகுள், அமேசானைத் தொடர்ந்து அமெரிக்காவின் மூன்றாவது பெரிய இணையதள நிறுவனமாகும். இது தற்போது யாகூ ( Yahoo) நிறுவனத்தின் கட்டுபாட்டில் உள்ளது. இதில் 13 வயதிற்கு மேற்பட்ட யாரும் உறுப்பினராகலாம்.

**ஆர்க்குட் (Orkut)**

ஆர்க்குட் கூகுள் நிறுவனத்தின் சமூக வலைத்தளமாகும். இதனை ஓர்க்குட் என்றும் அழைப்பர்.இதனை கூகுள் நிறுவன ஊழியர் துருக்கி நாட்டு ஆர்க்குட் புயுக்கோக்டன்(Orkut Buyukkokten) என்பவர் தொடங்கினார். அவர் பெயராலேயே ஆர்க்குட் என வழங்கப் படுகிறது.

இது 22.01.2004 அன்று கூகுள் நிறுவனத்தால் தொடங்கப் பட்டு 30.09.2014 அன்று மூடப்பட்டது.

ஆர்க்குட் சேவை இஸ்லாமிய நெறிகளுக்கு எதிராகச் செயல் பட்டதாகக் கூறி ஈரான், ஐக்கிய அரபு நாடுகளில் ஆர்க்குட் தடை செய்யப்பட்டது.

**டுவிட்டர் (Twitter)**

இணையத்தின் வாயிலாகக் குறுஞ்செய்தி அனுப்பும் சமூக வளைத்தளமாக டுவிட்டர் உள்ளது. இது கி.பி. 2006 இல் தொடங்கப் பட்டது. அமெரிக்காவின் கலி∴போர்னியாவில். இதன் தலைமையகம் உள்ளது.

இது தன்னுடைய பயனாளர்களுக்கு ட்வீட்ஸ் எனப்படும். செய்திகளை அனுப்பவும் மற்றும் பெறவும் வசதிகளை அளிக்கிறது. ட்வீட்ஸ் என்பது 140 எழுத்துருக்கள் வரையிலான வெளியீடுகளைத் தன் விவரப் பட்டியலில் காட்டுவதாகும்.

இணைய ஒளிபரப்பு நிறுவனமான ஒடியோவின் டேலாங் பிரெயின் ஸ்டார்மிங் கூட்டத்தில் டுவிட்டர் ஆரம்பமானது. இந்தக் கூட்டத்தில் ஜேக் டோர்சே என்பவர் சிறு குழுக்களுடன் தொடர்பு ஏற்படுத்தும் தனிநபர் பயன்படுத்தும் குறுஞ்செய்தி சேவை யோசனையை அறிமுகப்படுத்தினார்.

Flicker என்பதன் தாக்கத்தினால் டுவிட்டர் என்று பெயர் வைக்கப்பட்டது. கி.பி 2006 இல் ஜேக் டோர்சே, முதல் டுவிட்டர் செய்தியான Just Setting up my Twitter என்பதனை வெளியிட்டார். முதலில் டுவிட்டர் செய்தி ஒடியோ நிறுவன பணியாளர்களின் அக சேவையாக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. கி.பி. 2006 ஜீலை யிலிருந்து பொது மக்களுக்கான முழுப்பதிவு தொடங்கப்பட்டது.

டுவிட்டர் தனி நிறுவனமாக கி.பி. 2007 இல் விரிவுபடுத்தப் பட்டது. அரசியல், சமுதாயம், ஆராய்ச்சி போன்ற அனைத்து நிலையிலும் டுவிட்டர் பயன்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கி.பி.2008 இல் அமெரிக்க அதிபர் தேர்தலில் ஒபாமா டுவிட்டரை பயன்படுத்தி வெற்றி பெற்றமை சிறப்புக்குரியதாகும். இந்தச் சேவையினைப் பயன்படுத்துவதற்குக் கட்டணங்கள் ஏதுவும் இல்லை

**ஊடகத்துறையில் தமிழ் மொழியின் பயன்பாடு**

ஊடகங்கள் இன்று மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன. எனவே ஊடகங்கள் வாயிலாக வெளிவருகின்ற செய்திகள் அல்லது தகவல்கள் எல்லா விதமான மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாக எளிமையாக வெளியிடவேண்டியது

அவசியமாகும். தகவல்களையோ அல்லது செய்திகளையோ வெளியிடும் போது கருத்துப் பிழைகளோ, எழுத்து பிழைகளோ, உச்சரிப்பு பிழைகளோ வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது ஊடகங்களின் கடமையாகும்.

**1. அச்சுவழி ஊடகங்களில் மொழியின் பயன்பாடு**

அச்சுவழி ஊடகமான இதழ்கள் வெளிவரும் போது அவற்றில் தட்டச்சு பிழைகளோ. முரண்பட்ட கருத்துப் பிழைகளோ காணப்படுகின்றனவா என்பதைச் சரிபார்த்து வெளியிட வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

**அச்சுப்படி திருத்துதல் (PROOF READING)**

ஒரு செய்தித்தாளிலுள்ள பலப் பணிகளில் அச்சுப்படி திருத்துதல் பணியும் முக்கியமான பணியாகும். ஒரு செய்தித்தாளின் தரம் உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்றால் அது பிழையற்றதாக இருக்க வேண்டும். எனவே அச்சுப்படியிலுள்ள பிழைகளைத் திருத்த தனியாக ஊழியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

**அச்சுப்பிழை திருத்துவோரின் பொறுப்புகள்**

அச்சுப்படியைத் திருத்துகின்றவர் மூலத்தில் இருப்பது போன்று குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொன்றும் அச்சுப்படியில் அச்சாகி இருக்கிறதா என்பதைச் சரிபார்த்துத் திருத்துவர். அச்சுப்படித் திருத்துபவர் மிகுந்த பொறுப்புணர்வோடு அச்சுப்படிகளைப் படித்துத் திருத்த வேண்டும்.

அச்சுப்படியைத் திருத்துபவர் அச்சுப் படியைத் திருத்துவதோடு மட்டுமல்லாமல், செய்தியில் ஏதேனும் தவறுகளோ, முரண்பட்டக் கருத்துக்களோ இருந்தால் துணையாசிரியரின் கவனத்துக்குக் கொண்டு வரலாம். புள்ளி விவரங்களை மிகக் கவனமாகத் திருத்த வேண்டும். ஏனெனில் புள்ளி விவரங்கள் மாறினால் செய்தியின் பொருள் சீர்குலைந்து விடும்.

அச்சுப்படியில் இருக்கும் தவறுகளை உரிய திருத்தக் குறியிட்டு, பக்கத்தின் ஓரங்களில் இருக்கும் இடத்தில் திருத்துவார்கள். ஒவ்வொரு பிழையும் திருத்துவதற்குக் குறிகள் ( Marks) உள்ளன. இவற்றைப் பற்றிய விவரங்களை அச்சுக் கோர்ப்பவர்களும், அச்சுப்படித் திருத்து பவர்களும் அறிந்து வைத்திருப்பர்.

**அச்சுப்படியைச் செப்பனிடுதல்**

அச்சுப்படித் திருத்துபவருக்கு அச்சுப்படியிலுள்ள செய்தியை நீக்கவோ அல்லது வேறு செய்தியைச் சேர்க்கவோ அதிகாரம் கிடையாது. அச்சுப்படியைத் திருத்துபவர் பிழைகளை மட்டும் திருத்தி செப்பனிட வேண்டும்.

**அச்சுப்பிழையைத் திருத்தும் முறைகள்**

அச்சுப் பிழையைத் திருத்தும் முறைகளில் வழக்கமான முறை கோடிட்டுத் திருத்துதல் என்னும் இரு முறைகள் குறிப்பிடத்தக்கவை.

**வழக்கமான முறை (Formal Method)**

வழக்கமான முறைகளில் ஒவ்வொரு தவறுக்கும் இரண்டு இடங்களில் குறியிட்டுத் திருத்துவார்கள். எந்த இடத்தில் தவறு இருக்கின்றதோ அந்த இடத்தில் ஓர் அடையாளக்குறி போடுவார்கள். தாளின் பக்கவாட்டில் அதற்கு நேராகச் செய்ய வேண்டிய திருத்தத்தைக் குறிப்பார்கள்.

**கோடிட்டுத் திருத்துதல் (Tracking)**

கோடிட்டுத் திருத்துதல் முறையில் திருத்த வேண்டிய இடத்திலிருந்து பக்கத்தின் ஓரம் வரை ஒரு கோட்டினை இழுத்து என்ன திருத்தம் செய்ய வேண்டுமென்பதைக் குறிப்பிடுவார்கள். செய்தித்தாள்களில் இம்முறையைத்தான் பின்பற்றுகின்றனர்.

**அச்சுப்படியைத் திருத்துபவர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்**

1. ஒரு வரியில் செய்கின்ற மாற்றம், பல வரிகளின் அமைப்பினைப் பாதிக்கும். ஆதலால் கூடியவரை பின்வரும் வரிகளின் அமைப்பினைப் பாதிக்காமல் திருத்தங்கள் செய்தல் வேண்டும்.

2. திருத்தங்களைப் பக்கத்தின் ஓரத்தில் பிழைகள் உள்ள வரிகளுக்கு நேராகக் குறிக்க வேண்டும். பிழையின் மீதே திருத்தக் கூடாது.

3. ஒரு வரியின் இடது பாதியில் தவறு இருந்தால் திருத்தத்தை இடது பக்க ஓரத்திலும், வலது பாதியில் தவறு இருந்தால் திருத்தத்தை வலது பக்க ஓரத்திலும் குறிப்பது சிறந்தது.

4. பிழைகளைத் தாளின் ஓரம் வரை கோடிழுத்துக் காட்டும் பொழுது, மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் இரு வரிகளுக்கும் இடையில் கவனமாகக் கோடிழுத்துக் குறிக்க வேண்டும்.

5. ஒரு சொல்லில் ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருந்தால் அந்தச் சொல்லை நீக்கி விட்டு, சரியான சொல்லை பக்க ஓரத்தில் எழுதிக் காட்ட வேண்டும்.

6. எண்ணில் ஏதேனும் தவறு இருந்தால் தவறினைக் குறியிட்டுக் காட்டுவதை விட அந்த எண்ணைத் திருத்தி முழுமையாக எழுத வேண்டும்.

7. எழுத்துப் பிழையை மட்டுமின்றி எழுத்தின் அளவையும், செய்தியின் வடிவ அமைப்பையும் பிழை திருத்துபவர் கவனிக்க வேண்டும்.

8. ஒரு வரியிலேயே அதிகப் பிழைகள் திருத்தப்படும் போது இடது பக்க ஓரத்தில் ஆரம்பித்து வலதுபக்கத்திற்கு செல்ல வேண்டும்.

9. பிழை திருத்தம் பற்றி ஏதாவது அறிவுரை அல்லது விளக்கம் கொடுக்கும்பொழுது, அவற்றை முழு வட்டமிட்டு அச்சகம் ( Printer) என்று பெரிய எழுத்துகளில் எழுதி கீழ்க்கோடிட வேண்டும்.

10. பிழைகளைத் திருத்த வழக்கமாகப் பின்பற்றும் குறியீடுகளையே பயன்படுத்த வேண்டும்.

11. பிழைகளைத் திருத்தக் கொடுக்கின்ற அச்சுப்படி தெளிவாக இருக்க வேண்டும். மை சரியாகப் படாமலோ, அல்லது மிகுதி யாக இருந்தாலோ, அச்சுப்படி திருத்துபவரால் பிழைகளைச் சரியாகக் கண்டு கொள்ள முடியாது.

12. அச்சுப்படியைத் திருத்திய பிறகு திருத்திய படியைப் பதிப்பாசிரியர் மேற்பார்வையிட்ட பின்னரே செய்தித்தாளை அச்சடிப்பர்.

**அச்சுப்பிழை திருத்தக் குறியீடுகள் (Marks in Proof Reading)**

அச்சுப்பிழைகளைச் சுட்டிக் காட்டுவதற்குச் சில அடையாளக் குறிகள் உள்ளன. நமது நாட்டில் ஆங்கிலேயர்களின் பழக்க முறையை ஒட்டியே திருத்தக் குறிகளைப் பயன்படுத்துகின்றனர். இந்திய மொழிகளிலும் ஆங்கில மொழியிலுள்ள குறியீடுகளையே பயன்படுத்துகின்றனர்.

இந்தக் குறிகளை (Marks) இரு வகைகளாகப் பிரிக்கலாம். பக்க ஓரங்களில் குறிப்பது, மற்றது எந்த இடத்தில் திருத்தம் செய்ய வேண்டுமோ, அத்தகைய குறிப்பினைக் காட்ட அந்த இடத்திலேயே குறிப்பது. பிழைகளை ஓரங்களில் குறித்துக் காட்டுவார்கள். பத்தி பிரித்தல், சொல்லைப் பிரித்தல், இரு சொற்களைச் சேர்த்தல் போன்ற வற்றைத் திருத்தம் செய்ய வேண்டிய இடத்திலேயே குறிப்பார்கள்.

**2. மின்வழி ஊடகங்களில் மொழியின் பயன்பாடு**

மின்வழி ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் முதலியவற்றில் மொழியின் பயன்பாடு அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வகை ஊடகங்கள் மொழியினை உச்சரிக்கும் போது மிகவும் கவனமாகச் சரியான உச்சரிப்பு முறையினை கையாள வேண்டியது அவசியமாகும்.

வானொலியில் செய்திகளை அல்லது கருத்துகளை வெளிப்படுத்தும் போது தமிழ்ச் சொற்களை மிகவும் எளிமையாகவும், சுருக்கமாகவும், அழகானக் குரலில் கூறவேண்டும். ஏனெனில் வானொலியில் குரல்களை மட்டுமே கேட்க முடியும். எனவே அந்தக் குரல் மிகவும் இனிமையாக இருக்க வேண்டும். குரலின் இனிமையைப் பொறுத்தே மக்கள் வானொலியை விரும்பி கேட்பார்கள்.

வானொலியில் செய்திகள் அல்லது நிகழ்ச்சிகள் முறையாக எழுதி உருவாக்கிய பிறகு அவற்றில் ஏதேனும் பிழைகள் குழப்பங்கள் உள்ளதா என்பதை மறுஆய்வுச் செய்த பின்னரே ஒலிபரப்புகின்றனர்.

வானொலியில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் போது முரண்பாடுகள். பொருள் வேறுபாடுகள், வாசகர்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தாத வாறு ஒரே சீராக தகவல்களை வழங்க வேண்டும். இதனை நிகழ்ச்சி தயாரிப்பாளர் ஒருங்கமைத்து கொடுக்க வேண்டியது அவருடைய பணியாகும்.

வானொலியில் மொழியின் உச்சரிப்புச் சரியாகவும் கவர்ச்சிகர மாகவும் வாசகர்களை கவரும் விதத்தில் அமைதல் வேண்டும். நேர்முகவர்ணணைகள் செய்யும் போது மக்களின் கண்முன்னால் குரலின் ஓசையினால் நிகழ்வினை கொண்டு நிறுத்த வேண்டியது நேர்முக வர்ணணையாளரின் கடமையாகும். அதுமட்டுமின்றி வானொலி கேட்கும் வாசகர்களுக்குச் சிறிதும் களைப்பு ஏற்படாதவாறு வர்ணணைகள் அமைய வேண்டும். நேர்முக வர்ணணை நடந்து கொண்டிருக்கும் நிகழ்வினை அப்படியே கூறுவதாகும். எனவே நேர்முக வர்ணணையில் நிகழ்காலச் சொற்களையே பயன்படுத்து கின்றனர்.

கலந்துரையாடலின் போது நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தேவைக்கு ஏற்ப சில கருத்துகளை அல்லது தகவல்களை முன்வைக்க வேண்டும். அவ்வாறு முன்னெடுத்து வைக்கும் போது கலந்துரை யாடலின் மையபொருண்மை மாறாதவாறு கேள்விகளையும்,

சமூக சிந்தனைகளையும் எடுத்துரைப்பது அவசியமாகும். கலந்துரை யாடலில் கேட்கப்படும் கேள்விகள் தெளிவாக இருக்க வேண்டும்.

தொலைக்காட்சியில் மொழியின் பயன்பாடுகள் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. ஏனெனில் காட்சிகள் மொழியில் பயன்பாட்டைத் தவிர்த்து விடுவதும் உண்டு. காட்சித்திரையில் தெளிவாக நிகழ்வுகளை காண்பிக்கப்படுவதால் மொழியினை குறித்து அதிக அக்கறை கொள்வதில்லை. இருந்தாலும் வானொலியில் கூறப்பட்ட மொழியின் பயன்பாடு இதற்கும் பெருந்தும்.

**3. மின்னணு ஊடகங்களில் மொழியின் பயன்பாடு**

மின்னணு ஊடகங்களான கணினி, இணையம், அலைபேசி போன்றவற்றில் மொழியின் பயன்பாடு அதிகளவில் காணப்படுகிறது. கணினியில் தாய்மொழிச் செய்திகளை உள்புகுத்தவும், பதிவிறக்கம் செய்து கொள்ளவும் கணினிக்குத் தமிழ் மொழியறிவினை பெறச் செய்தல் மிகவும் அவசியமாகும். தமிழ் மொழியின் இயல்புகளைத் தெளிவாக அறிந்து கொள்ள ஒலியனியல், உருபனியல், தொடரியல், பொருண்மையியல் போன்ற மொழியியல் அறிவு தேவையானதாகும். மனித மூளையைப் போன்று கணினியையும் இயற்கை மொழி யறிவைப் பெறவைத்து, மொழித் தொடர்களைப் புரிந்துகொள்ளவும், உருவாக்கவும், செய்யவைக்கும் முயற்சியே இயற்கை மொழியாய்வு ( Natural Language Processing) ஆகும். இத்தகைய இயற்கை மொழியாய்வினை மேற்கொள்ளுவதற்கு உருவாக்கப்படுகின்ற வழிமுறைகளும் முறைப்படுத்தலுமே கணினி மொழியியல் (Computational Linguistics) என்பதாகும். கணினி மொழியியலின் துணையோடு மொழிக்குத் தேவையான மின்னணு மொழிக் கருவிகளை உருவாக்க உதவும் நுட்பமே மொழி தொழில்நுட்பமாகும் ( Language Technology). இவை மூன்றும் தான் தமிழ் மொழிச் சார்ந்த மென்பொருட்களை உருவாக்குவதற்கான படிநிலைகளாகும்.

கணினியைப் பயன்படுத்துபவர்க்கு கணினிமொழியறிவு தேவை என்ற நிலையிலிருந்து மக்கள் பேசும் இயற்கை மொழியைக் கணினி புரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு கணினி, மக்கள் பேசும் மொழியைப் புரிந்து கொள்ளுவதற்கான முயற்சிதான் இயற்கை மொழியாய்வு ஆகும்.

இயற்கை மொழியறிவை கணினிக்கு மொழி நிபுணர்கள் ஊட்டவேண்டும். இதற்கு ஒரு மொழியின் இசையமைப்பு ( Rhythm), எழுத்து, சொல் உச்சரிக்கும் கலை ( Phonology), உருபனியல் ( Morphology), சொற்றொடர் அமைப்பு ( Syntax), வாக்கிய அமைப்பிற்கான இலக்கணம், சொல், சொற்றொடர்களுக்கான பொருள் ( Semantics), போன்ற மொழி குறித்த

செய்திகளைக் கணினிக்குக் கொடுக்க வேண்டும். இவற்றை மனிதனுக்குப் புரிய வைப்பது எளிது. கணினிக்குப் புரியவைத்து நாம் கொடுக்கும் செய்திகளையும், கட்டளைகளையும் அது புரிந்துகொண்டு செயல்பட கற்றுக்கொடுக்க வேண்டும்.

மனிதன் பேசுகின்ற தமிழ், மலையாளம், இந்தி, தெலுங்கு, கன்னடம், சீனம், மலாய் போன்ற இயற்கை மொழிகளைக் கையாளும் திறனைக் கணினிக்கு அளிக்கும் வழிமுறைகளை ஆராய்வது இயற்கை மொழியாய்வு எனப்படுகிறது.

**பொதுவாகக் கருத்துப் பறிமாற்றம் செய்யப் பயன்படும் மொழிகளை**

1. சைகை மொழி
2. இயற்கை மொழி
3. செயற்கை மொழி

என்று வகைப்படுத்துவர்.

இதில் கணினி மொழிகளைச் செயற்கை மொழி என்று கூறுவர். மனிதன் பேசுகின்ற மொழியைப் புரிந்து கொண்டு செயல்படுவது போல கணினியை செயல்பட வைப்பதற்குரிய ஆய்வாகும்.

இயற்கை மொழியாய்வினைச் சொற்பிழை திருத்தி ( Spell Checker), சந்திப்பிழை திருத்தி (Sandhi Checker), தமிழ்ச்சொல் சுட்டி (Native Word Suggestion), இலக்கணப்பிழை திருத்தி (Grammar Checker), எழுத்து பேச்சு மாற்றி (Text-to-Speech), தானியங்கு பேச்சு அறிவான்(Automatic Speech Recognizer (ASR), ஒளியெழுத்துணரி (Optical Character Recognizer), இயந்திர மொழிபெயர்ப்பு (Machine Translation) போன்ற மென் பொருட்கள் உருவாக்குவதற்காக ஆய்வு முயற்சிகளை குறிப்பிடலாம்.

மனிதனுக்கும் கணினிக்கும் இடையே உள்ள தொடர்பினை மேம்படுத்த வேண்டியது மிகவும் தேவையானதாகும். ஏனெனில் கணினிக்கு இயற்கை மொழி தெரியாது. மனிதனுக்கோ கணினி மொழியோ செயற்கை மொழியோ அறிந்து கொள்ளுவது கடினம். ஏனென்றால் அவை மனித சிந்தனைப் போக்கைப் பிரதிபலிப்பன வல்ல, அவை பொறிக்கு ஏற்றவையாக உருவாக்கப்பட்டவை. இயற்கை மொழி இடைமுகங்கள் கணினியோடு தொடர்பு கொள்ள உதவும் நிலை வரவேண்டும். தகவல் மீட்புக்கும் தரவுக் களங்களில் வினவல்களுக்கும் கணினி இடம் கொடுக்க வேண்டும். பல மொழி பேசும் மக்களுக்கு அவரவர் மொழியில் மொழிபெயர்த்துத் தருகின்ற பணியைக் கணினி செய்ய வேண்டும். எனவே இயந்திர மொழி பெயர்ப்பு கணினி மொழியியலின் ஒரு பகுதியாக அமையும்.

இன்று இணையத் தொடர்பும் இணையப் பயன்பாடும் அபரிதமான வளர்ச்சியைப் பெற்றுள்ளன. இந்த நிலையில் வலையில் பனுவல்கள், வரைபடங்கள், ஒலிகள், படங்கள் முதலிய பல்லூடகத் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. எனவே இயற்கை மொழியில் அதாவது அவரவர் மொழியில் இணையத்தைப் பார்வையிட, வலைப்பக்கத்தைத் தேட, தகவல்களைப் பெற உதவும் வகையில் மொழியாய்வு செய்வதும் கணினி மொழியியலின் பணியாகும். இணையத்திலேயே மொழிகளுக்கிடையிலான தகவல் பறிமாற்றத் திற்குக் கணினி மொழியியல் ஆய்வு உதவும். கணினியோடு பயனர் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வகையில் இயற்கை மொழித் தரவுதள அணுக்க இடைமுகத்தை ( Natural Language Interface to Data Base Access) உருவாக்குவதன் மூலம் பல்வேறு மொழியாய்வுப் பணிகளுக்குக் கணினியைப் பயன்படுத்த முடியும்.

கணினி மொழியாய்வு எழுத்து நிலை, பேச்சுநிலை ஆகிய இரு நிலைகளில் நடைபெறும். எழுத்து மொழியாய்வில் சொல்,தொடர், பொருண்மை நிலைகளில் மட்டுமின்றி இடச்சூழலில் மொழி செயலாற்றும் நிலையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பேச்சு மொழியாய்வில் மேற்குறிப்பிடப்பட்ட மொழிக் கூறுகளுடன் ஒலியியல் பற்றிய ஆய்வும் தேவைப்படும். மேலும் பேச்சு மொழியில் ஏற்படும் மயக்கங்களும் கருத்தில் கொள்ள வேண்டும். மின்னணு ஊடகங்களில் கலைச்சொற்கள் மிகவும் தேவையான ஒன்றாகும். இன்று புதுப்பது கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

**வினாக்கள்**

1. ஊடகம் - விளக்குக.
2. ஊடகத்தின் வகைகளை விளக்குக.
3. மின்வழி ஊடகங்கள் குறித்து எழுதுக.
4. ஊடகங்களின் இன்றியமையாமையை விளக்குக.
5. அச்சு வழி ஊடங்களில் மொழியின் பயன்பாட்டைக் கூறுக.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஊடகம் - விளக்குக. | K4 | CO1 | PO4 |
| 2 | ஊடகத்தின் வகைகளைவிளக்குக. | K5 | CO2 | PO5 |
| 3 | மின்வழிஊடகங்கள் குறித்துஎழுதுக. | K3 | CO4 | PO1 |
| 4 | ஊடகங்களின் இன்றியமையாமையைவிளக்குக. | K5 | CO2 | PO2 |
| 5 | அச்சு வழி ஊடகங்களில் மொழியின் பயன்பாட்டைக் கூறு. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஊடகத்தின் வரலாறுகுறித்துஎடுத்துரைக்க. | K2 | CO5 | PO4 |
| 2 | திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துகட்டுரைக்க. | K3 | CO3 | PO6 |
| 3 | மின்னனுஊடகங்கள் என்றால் என்ன? அதன் தோற்றுவாயைஎடுத்துரைக்க. | K2 | CO5 | PO5 |
| 4 | ஊடகத்துறையில் தமிழ் மொழியின் பயன்பாடுகுறித்துவிவரிக்க. | K5 | CO3 | PO6 |
| 5 | வானொலியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துதொகுத்துரைக்க. | K3 | CO3 | PO3 |

## அலகு - 2

## அச்சு ஊடகங்கள்

### 1) மரபுவழித் தகவல் தொடர்பு கருவிகள்

தகவல் தொடர்பிற்கு மரபுவழித் தகவல் தொடர்புச் சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவைகளுள் முக்கியமானவை தூது ,பறை, தெருக்கூத்து, பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு, கதாகா லட்சேபம் போன்றனவாகும். இவைபோன்று இந்தியாவின் பல மாநிலங்களில் சில நாட்டுப்புறக்கலை வடிவங்கள் தகவல் தொடர்பிற்குப் பயன்படுகின்றன. அவை தமாஷா, வாக்கதை, பொவாடா அல்லது பாவாடா, தங்கி தமாஷா, தசாவதாரம்,ஜத்ரா, பாவை, யக்ஷகானா, கீர்த்தனா என்பனவாகும்.

### 1. தூது

மரபுவழித் தகவல் தொடர்புச் சாதனங்களில் தூதும் ஒன்று. ஒருவர் தம்முடைய உள்ளக்கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க தக்க ஒருவர் வாயிலாகக் கூறி விடுவது தூது ஆகும். பண்டைக் காலத்தில் சிறந்த தகவல் தொடர்பிற்குத் தூது பயன்பட்டிருக்கிறது.

தமிழ் இலக்கிய இலக்கண நூற்களான தொல்காப்பியம் சங்ககால இலக்கியங்கள் போன்றவற்றில் தூது குறித்த செய்திகள் உள்ளன. அதியமான் நெடுமான் அஞ்சிக்காக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்று பெரிய போர் ஏற்படாமல் தடுத்த செய்திகளைப் புறநானூறு கூறுகிறது. தூதுவின் பெயராலேயே நிலாவிடுதூது , அன்னம்விடுதூது, தமிழ்விடுதூது போன்ற இலக்கியங்கள் உள்ளன.

இக்காலத்திலும், உலகம் முழுவதும் தூதரகங்கள் ஏற்படுத் தப்பட்டு முக்கிய நாடுகளிலுள்ள தூதர்கள் ஒவ்வொரு நாட்டிலும் இருக்கின்றனர். ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துதல், கலாச்சாரப் பரிமாற்றம் , முக்கிய செய்திகளைத் தெரிவித்தல் , தத்தம் நாட்டு மக்களுக்கு உதவதல் என்று சிறந்த தொடர்பாளர்களாகத் தூதுவர்கள் விளங்குகிறார்கள்.

### 2. பறை

'பறை' என்பது முக்கியமான ஒரு இசைக்கருவியாகும். பழங் காலத்தில் விரைவாகச் செய்தி தெரிவிக்கப் பயன்படுத்திய முறைகளில் பறையறைதலும் ஒன்றாகும்.

ஓரிடத்தில் அடிக்கும் பறை ஒலியைக் கேட்டு தூரத்திலுள்ளவன் தன்னிடமுள்ள பறையை அறைந்து அந்தச் செய்தியை அடுத்த பறையடிப் பவனுக்கு அறிவிப்பான். இவ்வாறு செய்திகள் நெடுந்தொலைவிற்குக் கூட அனுப்பப்பட்டன.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு, மின்சாரத்தட்டுப்பாடு, வரிகட்டுதல், அரசு அதிகாரிகளின் கூட்டங்கள். தேர்தல்கள் போன்றவற்றைப் பற்றிய செய்திகள் இன்றும் பறையறைதல் மூலமே தெரிவிக்கப்படுகின்றன.

**3. தெருக்கூத்து**

தமிழகத்தில் நாட்டார் அரங்கக்கலை மரபுகளுள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்த்துக்கலை தெருக்கூத்தாகும். இயல் , இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் ஒருங்கே இணைந்தது. தெருக்கூத்துக் குழுவினை சமா என்றழைப்பர். கோயில் சார்ந்த நாட்டார் கலையாகக் கருதப்படுகிறது. /இதனைக் 'கட்டைக் கூத்து' என்றும் அழைப்பர். வட ஆர்க்காடு, திருவண்ணாமலை, செங்கல் பட்டு, தஞ்சாவூர் மாவட்டங் களில் நிகழ்த்தப்பட்டு வருகிறது. கதையாடல்களின் உள்ளடக்கம் வழி பாட்டுச் சார்புடையதாகும். பாரதம் அல்லது திரௌபதி அம்மன் விழாக் களில் , மாரியம்மன், அங்காளம்மன் போன்ற ஊர்த்தெய்வங்களுக்கும் ; கணபதி, சிவன்,திருமால் போன்ற பெருந்தெய்வங்களுக்கும் எடுக்கும் விழாக்களில்,சாவுச்சடங்கு,காது குத்துதல் போன்ற தனியாருக்கு எடுக்கப்படும் விழாக்களில், மழை வேண்டி தெய்வ வழிபாடுகள் நடக்கும்பொழுதும் , ஊரில் சண்டை நீங்கி சமாதானம் ஆகும் பொழுதும் , பண்பாட்டுத் திருவிழாக்கள் நடைபெறும் பொழுதும் நிகழ்த்தப் படுகின்றது. முருகன் கோவில் விழாவில் பங்குனி மாதத்திலும் , மாரியம்மன், ஓவலம்மன், அய்யம்படையாரி போன்ற அம்மன் கோவில் விழாக்களில் சித்திரை , வைகாசி மாதங்களிலும், காளி, புடையாறு, ஐயநாறு ஆகிய தெய்வங்களின் கோவில்களில் ஆனி , ஆடி மாதங்களில் நிகழ்கிறது. மழை வேண்டி விராடபருவக் கூத்தையும் , இறந்தவர்கள் மோட்சம் பெறுவதற்குக் காணமோடசம் கதையையும் நடத்துகின்றனர். மாசி மாதத்தில் முன்மதன் எரிப்பு நிகழ்ச்சியில் ஆடுவதுண்டு. தெருக்கூத்து

தெருக்கூத்தினைத் தெற்குத்திப்பாணி , வடக்குத்திப்பாணி என இரண்டாகப் பகுப்பர். தெருக்கூத்து நிகழ்த்துதல் மூன்று வகையில்

அமையும். 1. மேளக்கட்டு, 2. திரைப்பிரவேசம், 3. பொதுவசனம்.

**மேளக்கட்டு :** கணபதி பூஜைக்குப்பின் மேளக்கட்டுத் தொடங்கும். கூத்தின் இசைக்குழு ஆதி, அட, ரூபகம், திரிபுடை, ஜம்பை என்னும் ஐந்து தாளங்களைக் கொண்டு தொடங்கும்.

**திரைப்பிரவேசம்** : முக்கியமான பாத்திரங்கள் அரங்கத்திற்குள் நுழைந்து ஆடுதலாகும். சில திரைப் பிரவேசம் செய்யும். சில திரையில்லாமலும் நுழையும். கட்டை கட்டிக் கொண்டு வரும் வேடங்கள் திரைப்பிரவேசம் செய்யும். இதனைத் திரை நோக்கு என்றும் கூறுவர். திரைக்குள்ளே யிருந்தோ, திரையைப் பிடித்தோ, உலுக்கியோ, உதறியோ ஒரு முகமாகவோ இரு முகமாகவோ கரந்துவரல் மூலமாகவோ நிகழ்த்தப்படும். தெருக் கூத்தில் முதன்முதலாக அரங்கினுள் நுழையும் பாத்திரம் (கட்டியக்காரன் ஆவான். அரசனைப் புகழ்பவனாகவும், அரசவைக் காவலனாகவும் , தூதுவனாகவும், வேலைக் காரனாகவும் , கோமாளியாகவும், பொது மக்களுள் ஒருவனாகவும் மாறி நடிப்பான்.

**பொதுவசனம்** : கூத்தின் இறுதிக்கட்டம் பொதுவசனம். முடிவுப் பாட்டு , மங்களம் பாடுதலுடன் முடியும்.

கூத்து நடைபெறும் இடத்தை 'களரி' என்றழைப்பர். மூன்று பக்கமும் அடைக்கப்பட்ட ஒப்பனை அறை , அதன் முன்பகுதியில் ஆடுகளம். அதனை அடுத்து பார்வையாளர்கள் அமரும் பகுதி , இவ்விரண்டிற்கும் இடையில் விளக்கு தொங்கவிடப்பட்ட தூண் ஆகியவற்றைத் தெருக் கூத்தின் ஆடுகளப் பொது அமைவாகக் கொள்ளலாம். தெருக்கூத்து நிகழ்ச்சிகளில் மக்கள் பங்கேற்பது மரபு. அந்நிகழ்ச்சிகள் சடங்கியலாக இருக்கும். அர்ச்சுனன் தபசுக்காட்சியில் தபசுமரம் ஏறும் கலைஞரை அர்ச்சுனனாகவே பாவித்துப் பிள்ளைவரம் வேண்டுவர். (மாடுபிடி சண்டை , பகாசுரன் ஊர்வலம் வருதல் , அரக்குமாளிகை கட்டுவதற்குக் குழந்தை களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் பார்வையாளரும் கூத்தில் ஓர் அங்கமாகப் பங்கேற்பர். ஊர் முழுவதும் அப்பொழுது ஆடு களமாக் கப்படும். தெருக்கூத்து நாடகத்தன்மை கொண்டது. இதற்கென்று காட்சி ஜோடனைகளோ பகுப்புகளோ இல்லை. குறிப்பிட்ட காலவரையறை இல்லை. தெருக்கூத்தின் தொடக்க காட்சி முதல் இறுதிக்காட்சி வரை கதைகூறும் போக்கு செய்யுள்களாலேயே அமையும். இசையுடன் பாடப்படும் இந்தப் பாடல் களைக் கதைத் தொடர்புப் பாடல்கள் , உதிரிப் பாடல்கள் என வகைப்படுத்துவர். கதைத் தொடர்புப் பாடல்கள் முந்திய பரம்பரையினர் எழுதி வைத்தவையாகும்.

**4. பொம்மலாட்டம்**

பொம்மையை ஆட்டி நிகழ்த்துவதால் பொம்மலாட்டம் எனப்பட்டது. மரத்தாலான பொம்மைகளை நூல்களால் இணைத்துத் திரைக்குப் பின்னே இருந்து ஆட்டி இயங்கச் செய்து கதையை நிகழ்த்துவர். பொம்மலாட்டத்தை மரப்பாவைக் கூத்து , கட்டபொம்மக்கூத்து, கட்டபொம்ம நாடகம் என்றும் அழைப்பர். இது உலகம் தழுவிய ஒரு

கலையாகும். கி.பி. முதலாம் நூற்றாண்டில் இத்தாலியில் பொம்மலாட்டம் இருந்ததாகச் சான்று உள்ளது. இந்திய இலக்கியங்களிலும் சான்றுகள் உள்ளன. திருமகள் பொம்மலாட்டம் நிகழ்த்தி அசுரர்களை அழித்ததாக வாய்மொழிப் புராணக்கதைகள் கூறும். விக்கிரமாதித்தன் கதை களிலும் சான்று உண்டு. அக்பர் இக்கலையை ஆதரித்துள்ளார். இந்தியாவிலிருந்து இலங்கை, ஜாவாவிற்கு இக்கலை பரவி யுள்ளது. சிவஞான சித்தியாரில் மரப்பாவையும், தோற்பாவைக் கூத்தும் மேற் கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இன்று இக்கலையை நிகழ்த்துவோர் தமிழகத்தில் கும்பகோணம் , மாயவரம், சேலம் ஆகிய இடங்களில் உள்ளனர்.

**5. தோல்பாவைக்கூத்து**

கதையாடலுக்கும் கதை நிகழ்த்துதலுக்கும் பொருள்களைப் பயன்படுத்தும் பண்பாட்டு மரபுகளுள் மிகவும் பழமையானது பாவைக் கூத்தாகும். நாடகப்பண்பு கொண்ட நிகழ்த்துதலில் மனிதக் கைகளால் உயிரற்ற பொருள்களை இயக்கி உயிர்பெற வைத்துக் கதை சொல்லும் மரபிற்குப் பாவைக்கூத்து எடுத்துக் காட்டாகும். தோலில் வரையப்பட்ட வண்ணப்படங்களை விளக்கின் ஒளியில் திரைச்சீலையில் விழும்படிச் செய்து இயக்கிப் பேசி பாடி நிகழ்த்துவதைத் தோல்பாவைக்கூத்து என்பர். பாவைக்கூத்து என்றழைக்கப்படும் இவ் நிகழ்த்துக்கலையைத் தோல்பாவைக் கூத்து , தோல்பாவை நிழல் கூத்து , நிழலாட்டம், தோல் பொம்மலாட்டம் என்று வேறு வேறு பெயரில் அழைப்பதும் உண்டு. இக்கலை இந்தியாவிலிருந்து கீழை நாடுகளுக்குச் சென்றது என்றும் , சீனாவிலிருந்து இந்தியாவிற்கு வந்தது என்றும் இருவேறு கருத்துகளைக் கூறுவர்.

இந்தியாவில் ஆந்திரா , கர்நாடகம், ஒரிசா, கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் இக்கலை நிகழ்த்தப்பட்டு வருகிறது. இரவில் மட்டுமே இக்கலை நிகழ்த்தப்படுகிறது. மராட்டி மொழியைத் தாய். மொழியாகக் கொண்ட மண்டிகர் இனத்தவர் இக்கலையை நிகழ்த்துகின்றனர்.

**6. வில்லுப்பாட்டு**

கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் நாட்டார் தெய்வ வழிபாட்டுக் கோயில் கொடைவிழாக்களில் வில்லுப் பாடல்கள் நிகழ்த்தப்பெறுகின்றன.

வில்லுப்பாட்டின் அடிப்படை அமைப்பில் முக்கியமானது நிகழ்த்தும் குழுவாகும். (இதில் ஐந்து பேர் இடம்பெறுவர். இவர்கள் பாடிக்கொண்டே இசைக்கருவிகளை இசைப்பர். இந்தக் குழுவை வலம்பாடிகள் , இடம் பாடிகள் என இரண்டாகப் பகுப்பர். முன்னோடிப்

பாடகர்களை வலம் பாடிகள் என்பர். முன்னோடிப் பாடகர் , தாளக்காரர், குரு ஆகியோர் இதில் இடம்பெறுவர். சேர்ந்து பாடுவோர் இடம்பாடிகள் எனப்படுவர். குடம் அடிப்பவர் , உடுக்கை வாசிப்பவர், கட்டைக்காரார் ஆகியோர் இதில் இடம்பெறுவர்.

வில்லுப்பாட்டில் பயன்படும் வில் 10 அடி முதல் 14 அடி வரை இருக்கும். கூந்தப்பனையிலிருந்து இது தயாரிக்கப்படுகிறது. மூங்கிலை யும் பயன்-படுத்துவர். முன்னோடிப்பாடகர் மாட்டுத் தோலால் அமைந்த நாணை வீசுகோலால் அடித்து இசைப்பார். சேர்ந்திசைப்போரின் தலைவராக குடம் அடிப்பவர் செயல்படுவார். கருங்காலி மரத்தால் செய்யப்பட்ட சதுரக் கட்டைகளையும் , பித்தளையால் செய்யப்பட்ட தாளக்கருவிகளையும் வில்லுப்பாட்டில் பயன்படுத்துவர்.

**7. வாசாப்பு நாடகம்**

வாசாப்பு நாடகம் கூத்துவடிவ கலைவடிவமாகும். வாசகப்பா என்னும் சொல்லின் திரிபே வாசாப்பு ஆகும். வசனமும் பாடலும் கலந்தது. திரு மறை வசனங்களைப் பாக்களில் அமைத்து இசைப்பாடல் வழி பரப்பு வதால் வாசகப்பா ஆயிற்று. திருச்சி , வேலூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு , மதுரை, திருநெல்வேலி,தூத்துக்குடி,இராமநாதபுரம் மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது. ஈஸ்டர் திருவிழாவன்றோ அல்லது மறுநாளோ தொடங்கி பத்துநாள் வரை நிகழ்த்தப்படுகிறது. திறந்தவெளி அரங்கில் நடைபெறும். ஆண்கள் மட்டுமே நடிப்பர். இந்நாடகத்தில் எல்லாச் சாதியினரும் நடிக்கின்றனர். நாடகம் நடக்கும் ஊரிலுள்ள பங்குத்தந்தை, நாட்டாண்மை, ஊர்மக்கள் அனைவரும் பங்கேற்பர்.

**8. கதாகாலட்சேபம்**

சங்க காலத்தில் பாணரும் கூத்தரும் ஆடிய கூத்து வகைகளுள் சாக்கைக் கூத்தும் ஒன்று. இச்சாக்கைக் கூத்து இன்று கதாகாலட் சேபமாக வடிவெடுத்துள்ளது எனலாம். (இது ஒருவரே நடிக்கும் நாடக வகையைச் சார்ந்தது. இசையுடன் கூடிய பாடல்களைப் பாடி கதையைக் கூறுவார். இக்கதையைக் கூறும் பொழுது கதைப்பாத்திரங்களாக மாறி பேசி , பாடி, ஆடி, நடித்துக் கதையை நடத்திச் செல்வார். பக்க வாத்தியக்காரர்கள் பக்கப்பாட்டுப் பாடுபவராகவும் கதையைக் கேட்பவராகவும் பயன்படுகின்றார்.

**தகவல் தொடர்பில் அறிவியல் முன்னேற்றம்**

பேச்சுமொழியும், எழுத்துமொழியும் தோன்றுவதற்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தகவல் தொடர்பு தோன்றி விட்டது. தகவல் தொடர்பின் படிநிலை வளர்ச்சியில் 1540ஆம் ஆண்டில் அச்சு ஆவணங்கள் அமைந்திருந்ததை ஸ்கெரம் ( Schromn) என்னும்

அறிஞர் குறிப்பிடுகிறார். 1456-ஆம் ஆண்டு ஜான் கூட்டன்பர்க்கினுடைய அச்சுமுறை மக்கள் தகவல் தொடர்புமுறைக்கு வித்திட்டது. படிப்படியாக இத்தகவல் தொடர்பு அஞ்சல்முறை , தந்தி (Telegraph), தொலைபேசி (Telephone). கம்பியில்லாத் தந்தி, கடல்வழித் தந்தி,வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, ஒலிப்பதிவுப் பேழை ( Tape Recorder), ஒளிப்பதிவுப் பேழை (Video), கணினி, செயற்கைக்கோள், தொலைப்பனுவல் ( Tele text), இணையதளம் ( Internet) போன்ற பல சாதனங்களைக் கையாளுவதில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

**மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் வகைப்பாடுகள்**

தகவல் தொடர்புச் சாதனங்கள் என்பவை புதுமையின் வளர்ச்சியாக இருந்தாலும் தகவல் தொடர்பு என்பது பழமையான ஒன்றாகவே கருதப்படுகின்றது. பிறந்த குழந்தை அழுவதும், வாழ்ந்த மனிதன் இறப்பதும் ஒரு தகவல் தொடர்பு தான். அது அறிவில் குறைந்துள்ள எல்லாப் பொருள்களும் கூட ஒவ்வொரு நிலையில் ஒவ்வொரு தகவல்களை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. அழகான மலர்கள் இதழ்களை விரித்து மலரும் நிலையும் ஒரு தகவல் தான். மகரந்தச் சேர்க்கையின் முகவர்களாக அலைந்து திரியும் வண்டு களுக்குத் தகவல் தந்து வரவேற்பு விழா நடத்தும் நிகழ்ச்சி தானே மலர்களின் மலர்ச்சி! கன்றினை ஈன்ற தாய்ப்பசு அதை நாவால் தடவித் தடவி தன் அளப்பரிய அன்பினைத் தானே தகவலாக வெளிப்படுத்து கின்றது! பேசுகின்ற மனிதனுக்குத் தன் தேவைகளை உணர்த்துவதற்கும் தன் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் மொழி ஒரு வாய்ப்பாக அமைந்து விடுகிறது. என்றாலும் மொழி என்பது மனித வாழ்க்கையின் முதற்படியாகாது. அது மனித நாகரிகத்தின் முதற்படியாகக் கருதப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே பேச்சு மொழி தோன்றுவதற்கு முன்பே தகவல் தொடர்பு தொடங்கி விட்டது.

ஆதி மனிதன் மொழி தோன்றும் முன்பு உடலசைவுகள் , ஒலிகள், சீழ்க்கை ஒலி , கூவியழைத்தல், புகையெழுப்பல், பறையறைதல், மணி யடித்தல் , தீயம்புகளை வானத்தில் எறிதல் போன்றவற்றின் வழியாகத் தன்னைச் சுற்றியுள்ள வட்டார மக்களுக்குத் தேவையான செய்திகளை

மனிதன் அறிவு வளர்ச்சியில் அடியெடுத்து வைத்து அறிவியல் வளர்ச்சியில் நுழைந்த போது தகவல் தொடர்பும் ஒரு கலையானது , வடிவம் பெற்றது , வகைப்படுத்தப்பட்டது. வகைகள் வளர்ச்சி கண்டபோது

ஒரு தகவல் ( Information) குறிப்பிட்ட ஒருவருக்குச் சேரும் போது செய்தி ( Message) ஆகின்றது. இச் செய்தி இன்னும் கொஞ்சம் அதிக அளவில் தொடர்பு கொள்ளும் போது

தொடர்பு ( Communication) ஆகின்றது. இத்தொடர்பு பொதுமக்கள் அளவில் எல்லை தாண்டி ஒரே நேரத்தில் தகவல் தொடர்புச் சாதனங்களின் வழியாகப் பரவும் போது மக்கள் தொடர்பு (Mass Communication) எனப்படுகின்றது. இந்நிலையில் உலகம் சுருங்கி ஊராகி விடுகின்றது. எனவே தான் தகவல் தொடர்பு நிலையில் இந்த உலகைக் குறிக்கும் போது 'உலகக் கிராமம்' (Global Village) என்று தகவலியல் கல்வியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவ் வகையில் தகவல் பரவுகின்ற எல்லை ( Destination), சாதனங்கள் ( Media), செய்திப்புலப்பாடு (Perception) இவற்றின் அடிப் படையிலும் தகவல் தொடர்புச் சாதனங்களின் வகைமைப்பாடு அமைந்திருக்கின்றது.

இயற்கைதான் மனிதனின் சிந்தனை வளர்ச்சியின் தொடக்கப்பள்ளி. இயற்கையைப் பார்த்துப் பார்த்துத்தான் மனிதன் புதுப் புதுச் சிந்தனைக்குள் தன்னைச் செலுத்திக் கொண்டான். நிலத்தில் படிந் திருந்த விலங்குகளின் காலடிகளும் , வானத்தில் காணப்பட்ட மேகத் திரள்களின் வடிவங்களும் மனிதன் ஓவியம் படைக்க இயற்கை தந்த தகவல்கள். இரவில் மனிதன் கண்ட நிழல் உருவங்கள் சிற்பக் கலைக்கு அடி எடுத்துக் கொடுத்தது. இவ்வகையில் இசை, ஓவியம், சிற்பம் எல்லாமே இயற்கைத் தகவல்கள். இலை , தழை, கல், களிமண், பறவை களின் உதிர்ந்த இறகுகள் , விலங்குகளின் ஒடிந்த கொம்புகள் இவை யெல்லாம் தகவல் பரப்பிற்குப் பயன்பட்டன. தொடக்க காலத் தகவல் பரப்புச் சாதனங்களின் ஒரு வகைமைப்பாடாக இயற்கைப் பொருட்களும் அமைந்துள்ளன.

இயற்கையைப் பார்த்து பாடம் படித்த மனிதனின் முயற்சிகள் அவனை மேலும் முன்னேற்றப்பாதைக்கு அழைத்துச் சென்றன. சமூக அமைப்பில் கூட்டமாக வாழத் தொடங்கிய மனிதன் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் முயற்சியில் சில வாயில்களைப் (Sources) படுத்தினான். எகிப்தில் சிறைத் தண்டனை பெற்ற கைதிகள் செய்கி களைக் கொண்டு சோப்பதற்குப் பயன்பட்டனர். கிரேக்கத்தின் மாரத்தான் என்ற இடத்திலிருந்து ஏதன்ஸ் நகருக்கு வெற்றிச் செய்தியை மெல்லோட்டமாகக் கொண்டு சென்றமையால் மெல்லோட்டத்திற்கு 'மாரத்தான் ரேஸ்' என்ற பெயர் வழங்கத் தொடங்கியது. இவ்வகையில் செய்திப் பரவலுக்கு மணிக் கூண்டுகள் , தகவல் சமிக்ஞைக் கோபுரங்கள் , கற்பாறைகள், கொடிகள், குதிரை வீரர்கள், புறாக்கள், தீப்பந்தங்கள், ஒற்றர்கள், தூதுவர்கள், பறை அறைதல் , கொம்பு முழங்குதல் இவை அனைத்தும் வாயில்களாக அமைந்தவை. தூது அனுப்புகின்ற தன்மையை இலக்கிய இலக்கண நூற்களில் காணலாம். ஒரு நாட்டு மன்னன் மற்றோர் நாட்டு மன்னனிடம் தொடர்பு கொள்ள ஓலைச் சுவடிகளைப் பயன்படுத்தினான். இவ்வோலைக்குத் திருமுகம் என்று பெயர். இதனைக் கொண்டு செல்பவனை 'ஓலை

நாயகம்' என அழைத்தனர். பெரியபுராணத்தில் ஆலால சுந்தரரைச் சிவபெருமான் திருமணக் கோலத்தினின்றும் தடுத்தாட்கொள்ள மூலச் சான்றாக இருந்தது 'ஓலை' ஆகும். தூது இலக்கியம் அன்னம் , கிள்ளை, மயில், வண்டு, நாரை முதலியவற்யுைம் மேகம் , தென்றல், தமிழ் முதலியவற்றையும் தூதுப் பொருட்களாகப் பயன்படுத்தியது.

வீரபாண்டியக் கட்டப்பொம்மன் திருச்செந்தூர் முருகப் பெருமானிடம் மிகுந்த பக்தியுடையவர்: திருச்செந்தூர் முருகனுக்கு நண்பகல் வழிபாடு முடிந்த பின்னரே உணவு உண்ணும் வழக்கமுடையவர். பாஞ்சாலஞ் குறிச்சியிலிருந்து திருச்செந்தூர் வரை மண்டபம் கட்டி மணியடிக்க ஏற்பாடு செய்தார். இவ்வாறு செய்தியை அறிந்தார். வீரபாண்டியக் கட்டப் பொம்மனைப் போன்றே திருமலை நாயக்கர் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் மீது பற்றுடையவர். ஆண்டாளுக்கு இரவு வழிபாடு முடிந்த பின்னரே உணவு உண்ணும் வழக்கமுடையவர். மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வரை மண்டபம் கட்டி மணியடிக்க ஏற்பாடு செய்து அதன் மூலம் செய்தி அறிந்தார். தென் திருவிதாங்கூர் மன்னர்களும் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி தேர் நிலைக்கு நிற்கும் செய்தியை வெடி சத்தத்தின் மூலம் அறிந்து கொண்ட பின்னர் தான் உணவு உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் எவ்வாறு செய்தி அறியப்பட்டது என்பதற்கு இவற்றைச் சான்றாகக் கூறலாம். இவ்வாறு தகவல் தொடர்பிற்குப் பயன்பட்ட மணி ஓசை ,பறை ஒலி போன்ற வாயில்களும் தகவலியல் வகைமைப்பாட்டில் ஒன்றாக அமைந்தது.

பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சும் , தாளும் கண்டு பிடிக்கப்பட்டப் பிறகு செய்தித் தாள்கள் வெளிவரத் தொடங்கின. அதன் பிறகு தகவல் தொடர்பில் வேகமான முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. இதனடிப் படையில் அச்சுவழிச் சாதனங்களின் வகைமைப்பாடு அமைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிவியல் துறையில் முனைப்போடு செயல்பட்ட அறிவியல் அறிஞர்கள் சிலர் புதிய கருவிகளைக் கண்டு பிடித்துத் தகவல் தொலைத்தொடர்புச் சாதனங்களைத் தந்தனர். தொலைபேசி , தொலைவரி, தொலை அச்சுக் கருவி, தொலை பதிவுக் கருவி போன்றவை தகவல் தொடர்பில் ஒரு வகைமைப்பாடாக உருவாகின.

இருபதாம் நூற்றாண்டு அறிவியலின் உச்சியை நோக்கி விரைந்து செயல்பட்டது. தொழில் புரட்சியின் அடிப்படையில் தொழில்நுட்பக் கருவிகள் உருவாகின. தகவல் தொடர்பிலும் மின்னணுச் சாதனங்கள் (Electronic Media) பங்கு பெறத் தொடங்கின. வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவை மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றன.

மின்னணுவியல் ( Electronic) வளர்ச்சி, தகவல் தொடர்புத் துறையில் புதிய உத்திகளைப் புகுத்தியதோடு விரைவுபடுத்திச் செயல் பட வைத்தது. செய்தித்தாள் கணினிப் பெட்டிக்குள் அடங்கிவிட்டது (Computerised or Electronic Newspapers), தொலைக்காட்சித் தொடர்பு விண்கோள் தொடர்புக்குள் (Satellite Communication) அடங்கிவிட்டது. அறிவியல் புரட்சியின் அடிப்படையில் தகவல் தொடர்பின் இந்த வகைமைப்பாடு வளர்ச்சியை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது.

பொதுவாக தகவல் தொடர்புச் சாதனங்களை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம். அவை மரபுவழிச் சாதனங்கள், அச்சுச் சாதனங்கள், மின்னணுச் சாதனங்கள் என்பவையாகும்.

மரபு வழியாகத் தகவல் தொடர்பிற்குப் பயன்பட்டு வருகின்ற சாதனங்கள் மரபுவழித் தகவல் தொடர்புச் சாதனங்கள் எனப்படும். அவை பாவைக் கூத்து , வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம், பொம்மலாட்டம் போன்றவையாகும்.

1450-ஆம் ஆண்டு ஜான் கூட்டன்பர்க் முதன் முதலாக அச்சகத்தை நிறுவினார். அதன் பின்னர் உலக நாடுகளில் அச்சகங்கள் தொடங்கப் பட்டு செய்தித்தாள்கள் , இதழ்கள் வெளி வரத் தொடங்கின. செய்தித் தாள்களைக் காலைப் பத்திரிகைகள் , மாலைப் பத்திரிகைகள், மொழிப் பத்திரிகைகள் எனப்பாகுபாடு படுத்தலாம். இதழ்களைப் பருவ இதழ்கள் எனப் பாகுபாடுபடுத்தலாம். பருவ இதழ்களை வார இதழ்கள் , மாத இதழ்கள் என வகைப்படுத்தலாம். இதழ்களில் வெளிவரும் கருத்து களின் ( Content) அடிப்படையில் அரசியல் இதழ்கள் , ஆன்மிக இதழ்கள் , விளையாட்டு இதழ்கள் , பொழுதுபோக்கு இதழ்கள் , திரைப்பட இதழ்கள் அறிவியல் இதழ்கள் , இலக்கிய இதழ்கள் , புலனாய்வு இதழ்கள் என வகைப்படுத்தலாம்.

ஒழுங்கற்ற முறையில் தொடங்கிய தகவல் தொடர்பு கடந்த ஐந்து நூற்றாண்டுகளில் வகைமைப்படுத்தும் முறையில் ஒழுங்கு பெற்றுள்ளது. காலம் , கருத்துப் பரவல், பயன்பாடு. அறிவியல் வளர்ச்சி இவற்றின் அடிப்படையில் தகவல் தொடர்புச் சாதனங்களை வகைப்படுத்தலாம்.

1) கால அடிப்படையில் வகைமைப்பாடு (Classification According to Period)

2) காலச் செல்வாக்கு அடிப்படையில் வகைமைப்பாடு (Classification According to Time Value)

3) புலப்பாட்டு அடிப்படையில் வகைமைப்பாடு (Classification According to perception)

4) தொழில், தொழில்நுட்ப அடிப்படையில் வகைமைப்பாடு (Classification According to Industry and Technology)

5) பங்கேற்போர் அடிப்படையில் வகைமைப்பாடு (Classification According to Media Participants)

என முனைவர் இரா. கோதண்டபாணி அவர்கள் தகவல் தொடர்புச் சாதனங்களை ஐந்து வகைகளாகப் பாகுபடுத்தியுள்ளார்.

**கால அடிப்படையில் வகைப்பாடு (Classification According to Period)**

**1. தொடக்க காலச் சாதனங்கள்**

தொடக்க காலங்களில் மனிதன் தகவலைப் பிறருக்குத் தெரிவிக்கக் குரல் ஒலிகளையும், கை அசைவுகளையும் , அடையாளங்களையும் பயன்படுத்தினான். பின்பு இயற்கைப் பொருள்களையும் பயன்படுத்தத் தொடங்கினான். தாமரை இலையில் நகத்தினால் சகுந்தலை மடல் எழுதினாள். சீனாவின் பழமையான படைப்பான பட்டுத்துணியும், இறகு களும் எழுத்துத் தொடர்புகளும் பயன்பட்டன. சீழ்க்கை ஒலியில் செய்திகள் சொல்லப்பட்டன. களிமண் , குச்சி, ஆட்டுத்தோல், நாணல் தட்டை , மரக்கட்டை, ஓலை நறுக்கு , எழுத்தாணி, பாறைகள் இத்தகைய இயற்கைப் பொருட்கள் கருத்தைச் சொல்லப் பயன்பட்டன. இதனை இயற்கை வழித் தொடர்புக் காலம் என்று குறிப்பிடலாம். கருவிகள் எதுவும் இல்லாமல் இருந்த இடத்தில் கிடைத்த இயற்கைப் பொருட் களைத் தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்திய காலம் தொடக்க காலம் , இவ்வகையில் கருவி அல்லாத தொடர்பே முதல் வகைமைப்பாடாக அமைந்தது.

**2. இடைக்காலச் சாதனங்கள்**

தொடக்க காலத்தில் செய்தி அறிவிப்பு வழக்கில் இருந்தது. இடைக்காலத்தில் செய்திப் பரவல் தொடங்கியது. செய்திப் பரவலுக்குச் சில வாயில்களை அமைத்தனர். இவ்வகையில் செய்திப் பரவலுக்கு மணிக்கூண்டுகள் , கொடிகள், புறாக்கள், தீப்பந்தங்கள், பறை அறைதல், கொம்பு முழங்குதல் போன்ற வாயில்களைப் பயன்படுத்தினர்.

மேலும் மரபுவழித் தகவல் தொடர்புச் சாதனங்களையும் இடைக் காலத்தில் தகவலைத் தெரிவிக்கப் பயன்படுத்தினர். கூத்து. பொம்மலாட்டம் , தோல்பாவைக் கூத்து , தாலாட்டு, ஒப்பாரி, வழி நடைப் பாடல்கள் , சிறுதெய்வ வரலாற்றுப்பாடல்கள் போன்றவை தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்தப்பட்டன.

### 3. இக்காலச் சாதனங்கள்

கால அடிப்படையில் அச்சுத் தகவல் தொடர்புச் சாதனங் களையும் , மின்னணுச் சாதனங்களையும் பாகுபடுத்துகின்ற பொழுது அவற்றினை இக்காலச் சாதனங்கள் எனக் கூறலாம்.

அச்சும், தாளும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டு உலக நாடுகளில் பரவியபோது தகவல் தொடர்பின் புதிய வடிவமாகச் செய்தித் தாள் பிறந்தது. உலகில் முதல் செய்தித்தாளை வெளியிட்ட பெருமை ஜெர்மனியைச் சேரும். இங்கு முதலில் தோன்றிய நாளிதழ் ரிலேஷன் ( Relation) என்பதாகும். உலகின் முதலில் தோன்றிய நாளிதழிலிருந்து இன்று வரை செய்தித்தாள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று திகழ்கிறது. அறிவித்தல் , அறிவுறுத்தல், மகிழ்வித்தல், சமூக சார்புடை யவராக மாற்றுதல் , கூர்ந்து நோக்குதல் என்ற பயன்பாடுகளைக் கொண்டு செய்தித்தாள் தலை சிறந்த தகவல் சாதனமாகச் செயல் படுகிறது. செய்தித்தாள்களை வெறும் அச்சடித்த தாள்களாகக் கருதிவிட முடியாது. அவை உலகச் சமுதாயத்தை நாள் தோறும் காட்டு கின்ற காலக் கண்ணாடிகளாகும். உலகிலேயே அதிக அளவில் விற்பனையாகும் பத்திரிகை ஜப்பானில் வெளிவரும் "அசாகி சிம்பான்" என்பதாகும். இந்தியாவிலும் டைம்ஸ் ஆப் இந்தியா , ஸ்டேட்ஸ் மேன் , அமிர்த பஜார் பத்ரிகா, மலையாள மனோரமா , இந்து, மெயில் போன்ற நூற்றாண்டு விழா கண்ட நாளிதழ்களும் உண்டு.

#### மின்னணுச் சாதனங்கள்

மின்னணுச் சாதனங்களில் திரைப்படம் முதலில் தோன்றிய சாதனமாகும். 1896-இல் லூமியர் சகோதரர்கள் மும்பையில் சலனப் புகைப்படக் காட்சியை நடத்தினர். இந்தியாவில் 1913-இல் வெளிவந்த முதல் திரைப்படமான ராஜ ஹரிச்சந்திரா-வை தாதாசாகேப் தயாரிப்பதற்கு இப்புகைப்படக் காட்சி அடிப்படையாய் அமைந்தது. 1931. ஆம் ஆண்டு முதல் பேசும் படமான ஆலம் ஆரா வெளிவரத் தொடங் கியதிலிருந்தே திரைப்படங்கள் பொதுமக்கள் தொடர்புச் சாதனங்களாக மாறின. இந்தியப் பண்பாட்டில் ஊறித் திளைத்திருந்த புராணங்களான இராமாயணம் , மகாபாரதம் போன்றவை திரைப்படச் செய்திகளாகப் பொதுமக்களிடையே பரவின. காலப்போக்கில் திரைப்படங்கள் தொழில் முறைத் தயாரிப்புகளாக மாறிய போது மும்பை , கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் படப்பிடிப்புக் கூடங்கள் தோன்றின. வி. சாந்தாராம் , கே.ஏ.அப்பாஸ், மாபூப்கான், கே.சுப்பிரமணியம் போன்ற திரைப் படத் தயாரிப்பாளர்கள் பொது மக்களுக்குப் பயன்படும் திரைப் படங்களைத் தயாரித்தனர். சமூகக் கண்ணோட்ட அடிப்படையில் சத்திய ஜித்ரே

இந்தச் சாதனத்தைத் திறன்பட செயல்பட வைத்தார். ஒவ்வொரு காலகட்டத்திலும் பொதுமக்களின் பிரச்சினைகளோடு இணைந்தே திரைப்படங்கள் வெளிவரத் தொடங்கின. விடுதலைப் போராட்டங்களில் 'தியாக பூமி போன்ற திரைப்படங்கள் தேசிய உணர்வுகளைப் பரப்பின. திரைப்படங்களை வெறும் பொழுது போக்குச் சாதனங்களாகக் கொள்ளாமல் செயல்பட்டால் அவை மிகச் சிறந்த தகவல் தொடர்புச் சாதனங்களாக விளங்கும். திரைப்படங்கள் படக் காட்சிகளாக அமைந் திருப்பதால் இந்தச் சாதனம் பொதுமக்களை நன்கு கவருகின்றது.

1959-ஆம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் இந்திய நாட்டுச் சமூக. கல்வி முன்னேற்றத்திற்கு பெருந்தொகையை அளித்தது. இக்காலக் கட்டத்தில் தான் தொலைக்காட்சி இந்தியாவில் தோன்றியது. 1965-ஆம் ஆண்டு முதல் தொலைக்காட்சி அரசினர் தகவல் தொடர்புச் சாதனமாக மாறியது. இன்று மக்களிடையே அமோக ஆதரவைப் பெற்று திகழ்கின்றது. தொலைக்காட்சி விளம்பரங்களின் வழியாக ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் மேல் வருவாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கின்றது. தொலைக் காட்சியின் மீது மக்கள் பெரிய நம்பிக்கை வைத்துள்ளனர்.

மின்னணுத் தகவல் சாதனங்களாகிய திரைப்படம் , வானொலி, தோலைக்காட்சி ஆகியன தகவல் தொடர்புச் சாதனங்களில் அதிக மேலாதிக்கம் பெற்று விளங்குகின்றன.

**காலச் செல்வாக்கு அடிப்படையில் வகைப்பாடு (Classification According to Time - Value)**

காலச் செல்வாக்கு அடிப்படையில் தகவல் தொடர்புச் சாதனங் களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1. நிலையானவை (Permanent)
2. பாதி நிலையானவை (Semi - Permanent)
3. நிலையற்றவை (Impermanent)

**1. நிலைச் சாதனங்கள்**

பழமையான கல்வெட்டுகள் வரலாற்றுச் செய்திகளை நிலையாக நின்று வழங்கி வருகின்றன. மன்னர் ஆட்சியில் அரசியல் அமைப்புச் செய்திகள் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளதை இன்று நாம் காண்கிறோம். அசோகரின் கல்வெட்டுச் செய்திகள் காலத்தில் அழிக்க முடியாத தொடர்புச் செய்திகளாகும். பழங்கால ஓவியங்களும் , சிற்பங் களும், நாகரிகம், பண்பாட்டுச் செய்திகளின் அறிவிப்பாக அமைந்திருக் கின்றன. அரிக்கமேடு கல்வெட்டு, தென்காசி காசி விசுவநாதர் கோவில் கல்வெட்டு , சுசீந்திரம் தாணுமாலைய

சுவாமி கோவில் கல்வெட்டு போன்றவற்றில் அக்கால மன்னர்கள் கோயிலுக்கு வழங்கிய நன்கொடைகள் பற்றிய செய்திகள் உள்ளன. அஜந்தா எல்லோராக் குகை ஓவியங்கள் பழமையான வரலாற்றுச் சின்னங்களாகக் காணப் படுகின்றன. வாய்மொழிச் செய்திகளாகத் தொடர்ந்து பின்பற்றப்படும் கதைப்பாடல்கள் ( Ballads) வழிவழிச் செய்திகளாய் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தகைய செய்தி அறிவிப்புகள் தொடர்ந்து வருவதாலும் , நிலைத்த பயனைத் தருவதாலும் இவை நிலையான இடத்தைப் பெறுகின்றன.

**2. பாதி நிலைச் சாதனங்கள்**

முழுவதும் நிலைத்த பயன் அளிக்காமல் பாதி அளவில் அல்லது குறிப்பிடத்தக்க அளவில் பயன் தருகின்ற தகவல் அறிவிப்புக்களைப் பாதி நிலைச் சாதனங்கள் எனலாம். இன்றைய செய்தித்தாள் நாளைய ( Today Newspaper Tomorrow Waste paper) என்பது நடைமுறையில் உள்ளது. அச்சுத் சாதனங்கள் அனைத்தும் குறிப்பிட்ட காலத்திற்கே பயனளிக்கும் சாதனங்களாக அமைந்துள்ளன. புத்தகங்கள் , விளம்பரங்கள், பருவ இதழ்கள் , சிறிய அறிக்கைத் தாள்கள் இவை அனைத்தும் இந்த முறையில் அமைந்தவைகளேயாகும்.

**3. நிரந்தரமற்ற நிலைச் சாதனங்கள்**

தகவல் தொடர்புச் சாதனங்களில் சில பருவச் செல்வாக்கு ( Seasonal Value) பெற்றுள்ளன. திருவிழாக் காலங்களில் நாடகம் , கூத்துகள், பொம்மலாட்டம், பரத நாட்டியம் போன்றவை இடம் பெறுகின்றன. சில ஆன்மிக சொற்பொழிவுகள் கோவில் விழாக்களில் மட்டும் தான் இடம் பெறுகின்றன. இவைபோன்றே மரபுவழித் தொடர்புச் சாதனங்களான நாட்டுப்புறக் கலைகள் திருவிழாக் காட்சிகளில் ஒன்றாகவும் , பொழுதுபோக்கு நிகழ்ச்சியாகவும் இடம் பெறுகின்றன. இவற்றின் நோக்கம் தகவல் தர வேண்டும் என்பதை விட நிகழ்ச்சிகள் தகுதிகள் பெற வேண்டும் என்பதிலேயே நிலைத்து நிற்கின்றன.
இத்தகைய நிலைகளில் பொழுதுபோக்குத் தன்மைகள் மேலோங்கி தகவல் தன்மைகள் மறைந்துவிடும். தகவல்தொடர்புச் சாதனங்களான மேடை நாடகங்கள் , கலை நிகழ்ச்சிகள் , கூத்து, பொம்மலாட்டம், கிராமியக் கலைகள் எல்லாம் நிலைப்புத் தன்மையற்ற தொடர்புச் சாதனங்களாகும்.

**புலப்பாட்டு அடிப்படையில் வகைப்பாடு (Classification according to Perception)**

புலப்பாட்டு அடிப்படையில் தகவல் தொடர்புச் சாதனங்கள்

1. காட்சியறித் தகவல் தொடர்புச் சாதனங்கள் (Visual Media)

2. செவிப் புலனறித் தகவல் தொடர்புச் சாதனங்கள் (Audio Media)

3. ஒலி, ஒளிக் காட்சித் தகவல் தொடர்புச் சாதனங்கள் ( Audio Visual Media ) என வகைப்படுத்தலாம்.

**1. காட்சியறித் தகவல் தொடர்புச் சாதனம் (Visual Media)**

ஓவியங்கள், சிற்பங்கள், விளம்பரங்கள், விளம்பரப் பலகைகள் , கண் காட்சிகள் , வரைபடங்கள், நிழற்படங்கள், சுவரொட்டிகள், பத்திரிகைகள், இதழ்கள் போன்றவை காட்சியறித் தகவல் தொடர்புச் சாதனங்களாகும். பொதுமக்கள் தங்களின் சமூக , பொருளாதார நிலைமைக் கேற்ப தகவல் தொடர்புச் சாதனங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர்.

**2. செவிப்புலனறித் தகவல் தொடர்புச் சாதனங்கள்**

கிராமியக் கூத்துகளான தோற்பாவைக்கூத்து , பொம்மலாட்டக் கூத்து , கேரளாவின் கதகளிக்கூத்து போன்றவை செவிப்புலனறித் தகவல் தொடர்புச் சாதனங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

செவிப் புலனறித் தகவல் தொடர்புச் சாதனங்களில் வானொலி இன்றியமையாத இடத்தினைப் பெறுகின்றது. தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றும் சாதனமாக வானொலி விளங்கி வருவதற்குக் காரணம் அதன் செய்திப் புலப்பாட்டு தன்மையேயாகும்.

**3. ஒலி - ஒளி தொடர்புச் சாதனங்கள்**

தகவல் அறிவிப்பில் பொதுமக்கள் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றிருக்கும் சாதனங்கள் ஒலி -ஒளித் தொடர்புச் சாதனங்கள். காட்சியும் , கருத்து விளக்கமும் இவற்றில் அடங்கியுள்ளன. நடந்த நிகழ்ச்சிகளை நேரில் காண்பது போன்ற உணர்வுகளை இச் சாதனங்கள் உருவாக்குகின்றன. அதற்கேற்றவாறு செய்தி வடிவங்களாக நாடகம் , இசை, பேட்டி, வருணனை, செய்முறைப் பயிற்சிகள் முதலியவற்றைப் பயன்படுத்தி ஆர்வத்தைத் தூண்டுகின்றன. முறைசாராக் கல்வித் திட்ட நிகழ்ச்சிகள் வானொலியை விடத் தொலைக்காட்சியில் வெற்றி பெறுவதற்கு இத்தகைய வடிவங்கள் அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளன

**தொழில், தொழில்நுட்ப அடிப்படையில் வகைப்பாடு ( Classification according to Industry and Technology)**

தொழில் நுட்பம் அல்லது தொழில் ஆற்றும் முறையில் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பின்வருமாறு வகைமைப்படுத்தலாம்.

1. மரபுவழிச் சாதனங்கள் (Traditional)

2. அச்சுச் சாதனங்கள் (Print Media)

3. மின்னணுச் சாதனங்கள் (Electronic Media)

இவை ஒவ்வொன்றிலும் தொழில் ஆற்றும் முறையில் சில தொடர்புகளைப் பெற்றுள்ளன. அச்சுச் சாதனங்கள் மேற்கத்திய நாடுகளில் தோன்றிய தொழில்புரட்சியின் விளைவாக விரைவான வளர்ச்சி பெற்றுத் தொழில் ஆற்றுகின்றன. மின்னணுச் சாதனங்கள் இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் வளர்ச்சிகளைத் தொடர்ந்து ஏற்றுக்கொண்டு வளர்ந்து கொண்டே தொழில் ஆற்றுகின்றன. மரபு வழிச் சாதனங்கள் தொழில்நுட்பக் கூறுகளைப் பெறாவிடினும் கருத்து விளக்கம் தரும் முயற்சியில் புதிய கண்ணோட்டங்களை ஏற்றுத் தொழில் புரிகின்றன.

**1. மரபுவழிச் சாதனங்கள்**

மரபுவழிச் சாதனங்கள் மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளன. இச் சாதனங்கள் மரபுவழிச் செய்திகளையும் , பண்பாட்டுச் செய்திகளையும் நேரடியாக மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றன. வில்லுப்பாட்டு , பொம்மலாட்டம் போன்ற மரபுவழிக் கலைகளில் பாரம்பரியச் செய்திகள் மிகவும் எளிமையாகச் சொல்லப்படுகின்றன. வில்லுப்பாட்டில் வில்லும், பானையும் எளிய இசைக் கருவிகளாய் இடம் பெறுகின்றன. பொம் மலாட்டச் செய்திகள் நுட்பமான தொழில் முறைகளில் வெளிப்படுகின்றன.

**2. அச்சுச் சாதனங்கள்**

ஜெர்மன் நாட்டு மெயின்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஜான் கூட்டன்பர்க் 1450-ஆம் ஆண்டு முதல் அச்சுக் கூடத்தை நிறுவினார். பின்னர் உலக நாடுகளில் அச்சுக் கூடங்கள் நிறுவப்பட்டன. பல செய்தித்தாள்கள் தோன்றின. செய்தித்தாள்களில் செய்திகள் விரிவாகவும், விளக்கமாகவும் இடம் பெறுகின்றன. இன்றைய சமுதாயத்தின் எளிய தொடர்புச் சாதனங்கள் செய்தித்தாள்கள் என்பதில் சந்தேகமில்லை. செய்தித் தலைப்புகள் , பத்திப் பிரிப்புகள் , பக்க ஒழுங்கு , படங்கள், தலையங்கம், விளம்பரங்கள் முதலிய செய்தித்தாள்களில் வாசகர்களின் எதிர் பார்ப்புகளுக்கு ஏற்றவாறு அமைகின்றன. செய்திக் கட்டுரைகள், சிறப்புக் கட்டுரைகள் , செய்தி விமர்சனங்கள் , இலக்கியச் செய்திகள் , பொழுதுபோக்குக் கூறுகள் இவை அனைத்தும் அச்சுச் சாதனங்களின் சிறப்புப் பகுதிகளாகும். எழுத்தாளர் , செய்தியாளர், பொதுமக்கள் அனைவரும் பங்கு பெறும் பொதுமக்கள் சாதனங்களாக அவை அமைந் துள்ளன. மின்னணுச் சாதனங்களின்

வருகைக்குப் பின்பும் செய்தித் தாள்கள் மக்களிடத்தில் வரவேற்பைப் பெற்றுள்ளன. நேரடி அனுப்பு முறைப் பதிப்பு (Facsimile Edition), விண்கோள் அனுப்பு முறைப்பதிப்பு v (Satellite Edition) போன்றவை அச்சுச் சாதனங்களின் சாதனைகளாகும்.

**3. மின்னணுச் சாதனங்கள் (Electronic Media**

வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, செயற்கைக்கோள். கணினி போன்றவை மின்னணுச் சாதனங்களாகும். இவை தொழில்நுட்ப வளர்ச்சியில் பரபரப்பான மக்கள் தொடர்புச் சாதனங்களாக விளங்குகின்றன.

**1. வானொலி**

வானொலி சிறந்த தகவல் தொடர்புச் சாதனமாகும். இந்தியாவின் எல்லாக் கிராமங்களையும் தொழில் நுட்ப ரீதியில் வானொலி தொடர்பு கொண்டிருக்கின்றது. அயல்நாட்டில் வாழும் இந்தியர்களுக்கும் தனியான அலைவரிசையில் நம்நாட்டுச் செய்திகளை வானொலி ஒலி பரப்பிக் கொண்டிருக்கின்றது. நிர்வாகப் பகுதியினர் , பொறியாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப் பாளர்கள் என சுமார் 12,000 பேர் பணியாற்றும் மிகப்பெரிய தொடர்புச் சாதனம் இந்திய வானொலியாகும். அனைத்து இந்திய வானொலி செயல் திறனிலும், தொழில் நுட்பத்திலும் உலகின் மிகப்பெரிய வானொலி அமைப்புக்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு நாளும் 19 மொழிகளில் 70 தேசியச் செய்தி ஒலிபரப்பும், 21 மொழிகளில் 118 மாநிலச் செய்தி ஒலிபரப்பும் , 33 பழங்குடி யினருக்கான செய்தி ஒலிபரப்பும் , 63 வெளி நாட்டவருக்கான செய்தி ஒலிபரப்பும் செய்து வானொலி சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது.

**2. திரைப்படம்**

தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் ஆகிய மக்கள் தொடர்புச் சாதனங்கள் மக்களை நாடிச் செல்கின்றன. ஆனால் மக்கள் தாமே நாடிவரும் துறை திரைப்படத்துறையாகும். திரைப்படத்தின் கவர்ச்சியும் , கற்பனையை உண்மை போலக் காட்டும் திறனும் மக்களை அதன் பால் ஈர்க்கின்றன. எனவே வலிமையுள்ள தகவல் தொடர்புச் சாதனம் திரைப்படமாகும்.

1896-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7-ஆம் நாள் லூமியர் சகோதரர்கள் பம்பாயிலுள்ள வாட்சன் ஓட்டலில் சில துண்டுப் படங்களைக் காட்டினர். இதனைத் தொடர்ந்து பலர் திரைப்படம் தயாரிக்கும் துறையில் ஈடுபட்டனர். படம் காட்ட திரையரங்கு தேவை என்பதை உணர்ந்த ஜி.எஃப் மதன் என்பவர் 1907-ஆம் ஆண்டு

**3. தொலைக்காட்சி**

மக்களைக் கவரும் தகவல் தொடர்புச் சாதனங்களில் தொலைக் காட்சி முதலிடத்தை வகிக்கின்றது. தொலைக்காட்சி அறிமுகமாகிய போது புதுமையைக் கண்டு வரவேற்ற பொது மக்கள் மற்ற தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டனர். எழுபதுகளில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வுகள் அனைத்தும் தொலைக்காட்சியின் வருகை சமூகக் கூட்டங்கள் , வானொலி, இதழ்கள், சுற்றுலா,திரைப்படம் போன்ற எல்லாவற்றையும் குறைத்துவிட்டன என்பதையே சுட்டிக்காட்டின. இந்தியாவிலும் தொலைக்காட்சியின் வருகை திரைப்படத்துறையை நலிவடையச் செய்துள்ளது. பெரும்பாலான திரைப்பட அரங்குகள் மூடப்பட்டு அவை திருமணக் கூடங்களாக மாறியுள்ளன.

**4. செயற்கைக்கோள்**

கிளார்க்கு என்னும் ஆங்கில எழுத்தாளர் செயற்கைக் கோள்களைத் தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்தலாம் என்னும் கருத்தை உலகிற்கு வழங்கினார். 1945-இல் அறிவியலாளரிடம் செயற்கைக்கோள் பற்றிய சிந்தனை தோன்றியது. 1958-இல் முதல் செய்தி ஒலிபரப்பும் செயற்கைக் கோள் உருவானது. செயற்கைக் கோள்கள் பூமியிலிருந்து 22,300 கல் உயரத்தில் வைக்கப்படுகின்றன. அவை பூமியின் வேகத்திற்கு இயைந்து சுற்றுகின்றன. அதனால் உலகின் எந்தப் பகுதியுடனும் தொடர்பு கொள்ள முடியும் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனோவரின் கிறித்துமஸ் வாழ்த்துச் செய்தி செயற்கைக் கோளில் ஒலிபரப்பபட்ட முதல் செய்தியாகும்

**5. கணினி**

சீனர்களின் மணிச் சட்டத்திலிருந்து இன்றைய கணினியின் வரலாறு தொடங்குகிறது. 'கம்ப்பூட்டர்' என்னும் சொல்லுக்கு 'கணிக்க உதவும் கருவி ' என்பது பொருளாகும். இன்று கணினியும் விரைவான தகவல் தொடர்பிற்குப் பயன்படுகிறது. இன்று மனித வாழ்வின் எல்லா நிலை களிலும் கணினி பயன்படுகிறது. உத்தரவுகளிலிருந்து தகவல் உருவாக்க மிக வேகமாகச் செயல்படும் கருவி கணினியாகையால் தகவல் தொடர்பிற்கு கணினியின் பங்கு இன்றியமையாதது.

**அச்சுவழி ஊடகங்கள்**

மனிதன் மொழியைப் படைத்துப் பேசத் தொடங்கிய பின்னர் செய்தித் தொடர்பிற்கென வாயில்கள் பல உருவாகின. சைகைகள் காட்டியும், கூவியழைத்தும்,

சீழ்க்கை, சங்கு, மணி முதலியவற்றை ஒலித்தும், பறைகளை அறைந்தும் செய்திகளை அறிவித்தான். இம்முறைகள் அண்மையில் உள்ளவர்களுக்கு மட்டும் செய்தியறிவிக்கப் பயன்பட்டனவேயன்றி தொலைவில் உள்ளவர்களுக்கு அறிவிக்க இயலவில்லை. யானைமீதமர்ந்து முரசறைந்தும், குதிரை ஏறிச்சென்றும் செய்திகளைப் பரப்புவது மேட்டுக் குடியினருக்கு மட்டுமே கிட்டிய வாய்ப்பாக இருந்தது. அனைத்து இடங்களிலிருந்தும் செய்திகளை அனைவரும் அறியும் வாய்ப்பு செய்தித்தாள்கள் வந்த பிறகே கிடைத்தது. நவீன தொழில் நுட்ப வளர்ச்சியில் இன்று செய்தித்தாள்களுடன் மக்கள் இரண்டற கலந்துவிட்டனர். காலையில் எழுந்தவுடன் செய்திகள் வாசிப்பது இன்று பலரது பழக்கம்

"ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே" (1983:186)

எனப் பாராட்டி மகிழ்வார். மேலும்,

**"ஏற்றமுறச் செய்வதும்**
**மாற்றமுறச் செய்வதும்**
**ஏடேயாகும்"**

எனவும் செய்தித்தாளின் பணிகளையும், பெருமைகளையும் பகர்வார்-பாவேந்தர் பாரதிதாசன்.

**அச்சுவழி ஊடகங்களின் (இதழியல் ) தோற்றமும் வளர்ச்சியும்**

கூட்டு வாழ்க்கையில் மனிதன் ஈடுபட்ட காலத்திலிருந்தே, மனிதர்கள் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளத் தொடங்கியிருக்கலாம். நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறதென்பதை அறிந்து கொள்ளும் ஆர்வம் மனிதனிடம் இருந்தது. பேச்சு மொழி உருவாவதற்கு முன்பே 'செய்கைகள்' மூலமும், ஒலிகளின் மூலமும் மனிதர்கள் செய்திகளைப் பரப்பினார்கள். கி.பி. 1950-இல் ஜான் கூடர்பர்க்(John Guterberg - 1398-1468) என்ற ஜெர்மானியர் முதன்முதலில் அச்சுப் பொறியினைக் கண்டுபிடித்தார். இதன் பின்பு அச்சு எந்திரத்தின் துணையோடு உலகெங்கும் செய்தித் தாட்கள் வெளிவரத் தொடங்கின.

அச்சிட்ட இதழ்கள்: ஜெர்மனியில் அச்சுப் பொறி தோன்றியதால் முதலில் அச்சிட்ட இதழ்களும் 'ஜெர்மனியிலேயே பிறந்தன. ஜெர்மனியில் முதன்முதலில் 'செய்தித் துண்டு வெளியீடுகளை' (News) pamplets) வெளியிட்டனர். இந்தத் துண்டு வெளியீடுகளை அரசர்கள்

ஆதரிக்கவில்லை. மேலும் அக்காலத்தில் கற்றவர்களின் எண்ணிக்கைக் குறைவாக இருந்ததால் இவற்றிற்குப் பொதுமக்களின் ஆதரவும் கிடைக்கவில்லை. ஆதலால் செய்தித் துண்டு வெளியீடுகள் தொடர்ந்து வெளிவரவில்லை.

முதல் முறையாக தொடர்ந்து வெளிவந்த இதழ் என்ற பெருமை 'உறவு' (Relation) என்ற இதழையே சேரும். இதனை கி.பி. 1609-இல் ஜெர்மனியில் ஸ்ட்ராஸ்பர்க் நகரத்தில் வெளியிட்டனர். பதினேழாம் நூற்றாண்டில் உலகில் பல நாடுகளில் செய்தித்தாள்கள் வெளியாயின.

ஐரோப்பிய நாடுகளில் காலை செய்தித்தாள்கள் வெளிவரத் தொடங்கின.அரசியல், பொருளாதாரச் செய்திகளை நூல் வடிவில் வெளியிட்டனர். வாணிப நிறுவனங்களும் செய்திகளைப் பதிப்பித்தன. செய்திக்கடிதங்கள் பயன்பாட்டிற்கு(சுற்றுக்கு) வந்தன. ஜெர்மனியைத் தொடர்ந்து ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்சு, டச்சு, ஹாலாந்து ஆகிய நாடுகளிலிருந்து அச்சிட்ட இதழ்கள் வெளிவந்தன.

கி.பி.1621 முதல் இங்கிலாந்தில் செய்தித்தாள்களை வெளியிட்டனர். 'கோரான்டே' (Coranto) ஒரு தனித்தாள் செய்தி இதழாக வெளிவந்தது. கி.பி. 1660-இல் வாரச் செய்தித்தாள்கள் நிலையான இடத்தைப் பெற்றன. கி.பி. 1665-இல் வாரம் இருமுறை வரும் செய்தி இதழாக ஆக்ஸ்போர்டு கெஜட்', (Oxford Gazette) வெளியானது. பின்னால் இது இலண்டன் கெஜட்' என்று பெயர் பெற்றது. கி.பி. 1702-இல் முதன்முதலில் நாள்தோறும் வரும் செய்தித்தாளாக 'தி டெய்லி கோரண்ட்' (The Daily Courant) என்ற இதழை வெளியிட்டனர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் முதல் செய்தித்தாள் கி.பி.1969-இல் வெளிவந்தது. "உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பொதுவாக ஏற்படுபவை" (Public Occurance Both Foreign and Domestic) என்ற பெயரில் பிரிட்டிஷ்காரரான பெஞ்சமின் ஹாரிஸ்(Benjamin Harris) ஓர் இதழைத் தொடங்கினார். முதல் அமெரிக்க செய்தி இதழை, ஜான் கேம்ப்பெல்(John Campbell) என்ற அமெரிக்கர் பாஸ்டன் செய்திக் கடிதம் என்ற பெயரில் பதிப்பித்தார். நீதிமன்றங்களில் எழுதிய நூற்றுக்கணக்கான செய்திக் குறிப்புகளை ஆங்கிலேயர்கள் தொகுத்து ஆராய்ந்துள்ளனர். கிழக்கிந்திய நிறுவனத்தினர் அப்பொழுதிருந்த செய்தி எழுத்தாளர்களைப் பயன்படுத்தி, ஆங்கிலேய அரசுக்கு செய்திக் கடிதங்களை எழுதி தங்களது குறைவுகளை போக்கிக் கொள்ள முயன்றனர்.

முதல் முயற்சி : நமது நாட்டில் தமிழில் வேத நூலை வெளியிட முதல் அச்சகத்தை கி.பி. 1713-இல் தரங்கம்பாடியில் அமைத்தனர். கி.பி. 1715-இல் தரங்கம்பாடியை

அடுத்த பொறையாறில் முதல் காகித உற்பத்தி ஆலையை நிறுவினர். இருந்தாலும் செய்தித்தாள் வெளியிடப்படவில்லை.

கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சிக்காலத்தில் இங்கிலாந்திலிருந்து வரும் கப்பல்களில் இதழ்களைக் கொண்டு வருவார்கள். கப்பல்கள் வந்து சேர குறைந்தது மூன்று மாதங்களாகும். காலம் தாழ்த்திவரும் இந்தச் செய்தித்தாள்களும், இதழ்களும் மேல் மட்டத்திலுள்ள சிலருக்குத்தான் கிடைக்கும். ஆதலால் பொது மக்களுக்கு இதழ்கள் கிடைப்பதில்லை.

கிழக்கிந்திய நிறுவனத்தில் பணியாற்றிய சிலர், வேலையை விட்டு விட்டு, நிறுவனத்தின் குறைகளை வெளிச்சம் போட்டுக் காட்ட இதழ்களை நடத்த விரும்பினர். முதன்முதலாக ஒரு செய்தித்தாளைத் தொடங்க, கல்கத்தாவில் வில்லியம் போல்ட்ஸ் (William Bolts) என்பவர் கி.பி. 1768-இல் முயன்றார். கிழக்கிந்திய நிறுவனத்தில் பணியாற்றிய இவர், பதவியைத் துறந்துவிட்டு, செய்தி இதழைத் தொடங்கி நடத்தத் தீர்மானித்தார். "ஒவ்வொருவரோடும் தொடர்புடைய பல செய்திகள், வெளியிடத் தயாராக கையெழுத்தில் இருக்கின்றன", என்று அறிவித்தார். அவரது அறிவிப்பு கிழக்கிந்திய நிறுவன அலுவலர் களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவர் செய்தித்தாள் நடத்தினால் தங்களுக்கு ஆபத்து என்று கருதினர். ஆதலால் அவரை உடனே தாய் நாட்டிற்குத் திருப்பி அனுப்பினார். அடுத்த முயற்சி தொடர மேலும் பன்னிரண்டு ஆண்டுகளாயின.

முதல் செய்தித்தாள்: கி.பி.1780-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29- ஆம் நாள் முதல் இந்திய செய்தித்தாளை ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி (James Augustus Hicky) என்பவர் வெளியிட்டார். இதழுக்கு வங்காள கெஜட் அல்லது கல்கத்தா பொது விளம்பரத்தாள்' (Bengal Gazette or Calcutta General Advertiser) என்று பெயரிட்டனர். தன்னை கிழக்கிந்திய நிறுவனத்தின் 'முதல் முன்னாள் அச்சகர்' என்று இதழில் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இந்திய இதழியலில் வரலாறு படைத்தவர் ஹிக்கி. மிகுந்த துணிச்சல்காரர். 'இந்திய இதழியலின் தந்தை', என்று புகழப்படுபவர். கி.பி. 1783-இல் அமெரிக்காவில் முதல் நாளிதழ் வெளிவந்தது. ருஷ்யாவில் கி.பி. 1703-இல் இதழ்கள் வெளியிடத் தொடங்கியதாகத் தெரிகிறது.

இந்திய இதழியல் வரலாறு என்பது இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் இருப்பது போல ஒரு மொழி பத்திரிகை வரலாறு அல்ல; இது பல மொழி இதழ்களின் வரலாறு ஆகும். இந்திய இதழ்களின் வளர்ச்சி பல்வேறு வகைகளில் இருந்தாலும், அவற்றை ஊடுருவி நிற்கும் ஒருமைப்பாட்டையும் காணமுடிகின்றது. "இந்தியப் பத்திரிகை

ஒரு சார்ந்திருக்கும் பத்திரிகையாகத் தொடங்கப் பெற்றது; அது இப்பொழுது வளர்கின்ற சமுதாயத்தில் பத்திரிகையாகப் பல சவால்களுக்குப் பதிலளிப்பதாக மாறியுள்ளது" என்று எம்.சலபதி இராவ் இந்திய இதழ்களின் வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இந்திய இதழியலுக்கு மூலங்களாக இருப்பவை பேரரசர் அசோகரின் கல்வெட்டுகள். அசோகரை 'இந்திய இதழியலின் முன்னோடி' என்று கூறலாம். ஏனெனில் அவரது கல்வெட்டுக்கள் என்றும் அழியாத இதழ்களாகத் திகழ்கின்றன .

ஹிக்கியின் 'வங்காள கெஜட்' 1278 அளவில் இரண்டு தாள்களைக் கொண்ட ஆங்கில வார இதழாக வெளிவந்தது. இதன் உள்ளடக்கமாக இங்கிலாந்து இதழ்களிலிருந்து எடுக்கப்பட்ட செய்திகள், விளம்பரங்கள், வாசகர்களின் கடிதங்கள். கிழக்கிந்திய நிறுவனத்தில் பணியாற்றிய மேல்மட்ட வெள்ளை அலுவலர்களின் தனிவாழ்க்கை பற்றிய ரகசிய செய்திகள், ஆசிரியரின் வேண்டுகோள் ஆகியவை அமைந்தன. எள்ளல் நடையில் அவர் எழுதியவை படிப்பதற்குச் சுவையாக இருந்தன.

ஹிக்கியின் தாக்குதலுக்கும் எள்ளி நகையாடலுக்கும் தலைமை ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்கம், அவரது துணைவியாரும். கிழக்கிந்திய நிறுவனத்தோடு தொடர்புடைய சிமியோன் ட்ரோஸ் (Simeon Droz), தாமஸ் டீன் பியர்ஸ் (Thomas Dean Pearse), ஸ்வீடனைச் சேர்ந்த பாதிரியார் ஜான் சக்காரியா கிர்னண்டர் (John Zachariah Kiernander) ஆகியோர் உள்ளாயினர். இதுதான் அவரை தொல்லைக்குள்ளாக்கியது.

ஹிக்கியை ஒடுக்க நினைத்த அரசு, அவர் தலைமை ஆளுநரின் மாண்புமிகு மனைவியார் மீது குற்றஞ் சாட்டியதையும், தனி மனிதர்களை அவமானப்படுத்தியதையும், குடிமக்களின் அமைதியைக் கெடுத்ததாகவும் காரணம் காட்டி, பொது அஞ்சலகத்தின் மூலம் அவரது இதழை அனுப்புவதை தடை செய்தது. கிர்னண்டர், ஹிக்கி தன்னைப் பற்றி அவதூறாக எழுதி, தனது மானத்தை இழக்கச செய்ததாக வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம் அவருக்கு நான்கு மாதச் சிறைத் தண்டனையும், 100 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

ஹிக்கி இந்தத் தண்டனைகளைக் கண்டெல்லாம் அஞ்சவில்லை. மாறாக, புதிய வேகத்தோடு தலைமை ஆளுநரையும், தலைமை நீதிபதியான சர். எலிஜா இம்பேயையும் (Sir Elijah Impey) தரக்குறைவாக எழுதித் தாக்கினார். இதன் விளைவாக அவரைச் சிறைப்பிடிக்க அரசு ஆணையிட்டது. வெள்ளை அதிகாரிகளின் தலைமையில் 400 ஆயுதம் தாங்கிய காவலர்கள் அவரைக் கைது செய்ய அவரது அச்சகத்திற்குச் சென்றனர்.

ஹிக்கியோ அவர்களைக் கண்டதும் வெகுண்டெழுந்து தாக்கினார். அவரை அவர்களால் சிறைப்பிடிக்க இயலவில்லை. ஆனால் ஹிக்கியோ தானே சென்று உயர் நீதிமன்றத்தின் முன் நின்றார். பிணைத்தொகையாக ரூ.80,000 அவரால் கட்ட இயலாததால் அவரை நீதிமன்றம் சிறையிலிட்டது.

சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டே ஹிக்கி அவரது இதழை நடத்தினார். அவரது இதழின் போக்கு மாறவில்லை. அவரது சாடல்கள் கடுமையாகத் தொடர்ந்தன. வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு ஒரு குற்றச்சாட்டிற்கு ஓராண்டு சிறைத்தண்டனையும் இருநூறு ரூபாய் அபதாரமும் விதித்தது. மற்றொரு குற்றச்சாட்டிற்கு வாரன் ஹேஸ்டிங்சுக்கு ரூ.5,000 இழப்பீட்டுத் தொகையாகத் தர வேண்டுமென்று தீர்ப்பளித்தது. பின்னால் தலைமை ஆளுநருக்குத் தர வேண்டிய பணத்தைத் தள்ளுபடி செய்தனர்.

ஹிக்கி துணிச்சலோடு தனது இதழினை நடத்தினார். தனது செல்வமெல்லாம் இழந்து வறுமையில் வாட வேண்டிய நிலை வந்த போதும் அவர் வளைந்து கொடுக்கவில்லை. இதழியலாளர் எப்படி வீரத்தோடும் தீரத்தோடும், சுதந்திர உணர்வோடும் செயல்பட வேண்டுமென்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார். முதல் இந்தியப் பத்திரிகையாளரே சுதந்திரத்திற்காக விடாமுயற்சியோடு போராடியது குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி.1780-இல், 'வங்காள கெஜட்டை' ஹிக்கி தொடங்கியதைத் தொடர்ந்து,பெர்னால்டு மெஸ்சிங், பீட்டர் ரீடு என்ற இரு ஆங்கில வணிகர்கள், 'இந்தியா கெஜட்' (India Gazette) என்ற இதழை. விளம்பரத்தின் மூலம் தங்களது வாணிபத்தை வளர்க்கும் நோக்கில் ஆரம்பித்தார்கள்.

ஹிக்கியின் அனுபவங்களிலிருந்து, இவர்கள் பாடம் கற்றுக் கொண்டனர். தலைமை ஆளுநரின் அனுமதி பெற்று இதழைத் தொடங்கினர். அரசு இவர்களுக்கு அஞ்சல் மூலம் இதழை அனுப்ப கட்டணச் சலுகை அளித்தது. ஹிக்கி, அரசைச் சாடியதற்கான காரணங்களில் ஒன்று, அரசு இவர்களுக்கு அளித்த சலுகையாகும்.

கி.பி. 1784-இல் அரசின் ஆதரவோடு 'கல்கத்தா கெஜட்' (Calcutta Gazette) வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து 'வங்காள ஜெர்னல்' (Bengal Journal) என்ற இதழும், 'ஓரியண்டல் மேகசின் அல்லது கல்கத்தா அமியூஸ்மென்ட்'(Oriental Magazine or Calcutta Amusement) என்ற மாத இதழும், கி.பி.1786-இல் கல்கத்தா கிரானிகிள் (Calcutta Chronicle) என்னும் இதழும் வெளிவந்தன. இவை எல்லாம் அரசின் துதிபாடி, அதன் ஆதரவிலும் தயவிலும் நடைபெற்றன. இவற்றிற்கு மாறுபட்ட நிலையில் அரசிற்குப் பணியாததாக 'இந்தியன்

ஒர்ல்டு' (Indian World) என்ற இதழை வில்லியம் டூயன் (William Duane) என்பவர் தொடங்கினார். இதுவும் இடையில் நின்று விட்டது.

கி.பி. 1785 அக்டோபர் 12-இல் சென்னையிலிருந்து முதன்முதலாக ரிச்சர்டு ஜான்சன் (Richard Johnson) என்பவர் 'சென்னை கூரியர்' (Madras Courier) என்னும் ஆங்கில வார இதழை அரசின் ஆதரவோடு வெளியிட்டார். இதன் ஆசிரியராக இருந்த ஹியூக் பாய்டு கி.பி.1791-இல் இவ்விதழிலிருந்து விலகிச் சென்று 'ஹார்காரு' (Harkaru) என்ற இதழைத் தொடங்கினார். தொடங்கிய ஓராண்டு காலத்தில் இவ்விதழின் ஆசிரியர் மறைய, இவ்விதழ் நின்று ட்டது. கி.பி. 1795-இல் வில்லியம்ஸ் (Williams) 'சென்னை கெஜட்'(Madras Gazette) என்ற இதழையும் ஹாம்ப்ரீஸ் (Hampreys), 'இந்தியன் ஹெரால்டு'(Indian Herald) என்ற இதழையும் தொடங்கி நடத்தினர்.

பம்பாயின் முதல் இதழாக 'பம்பாய் ஹெரால்டு'(Bombay Herald) கி.பி. 1789-இல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து கி.பி. 1790-இல் லூக் ஆஸ்ர்னர் 'பம்பாய் கூரியர்' (Bombay Courier) இதழைத் தொடங்கினார்.

கி.பி.1790-ஆம் ஆண்டிற்குப் பின் இந்திய இதழ்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. குறிப்பாக கல்கத்தாவில் 'ஆசியாடிக் மிர்ரர்' (Asiatic Mirror 1794), கல்கத்தா கூரியர்“ (Calcutta Courier),இன்டியன் அப்பல்லோ', 'பெங்கால் ஹர்ரகாரு'(Bengal Harkaru-1795), 'டெலிகிராப்' (Telegraph-1796), 'கல்கத்தா மார்னிங் போஸ்ட்'(Calcutta Morning Post),, 'ஸ்ல் ல் (Oriental Star-1791) 2 (1799) ஆகிய இதழ்கள் வெளிவந்தன.

இதழ்களின் பெருக்கத்தையும் அவை செய்திகளை வெளியிட்ட முறையும் ஆட்சியாளர்களை அச்சுறுத்தின. ஆதலால் ஆட்சியாளர்கள் தொடக்கத்திலிருந்தே இதழ்களை கட்டுப்படுத்தி, தங்களது கண்காணிப்பிற்குள் வைத்துக்கொள்ள முயன்றனர். தொடக்க கால இதழாசிரியர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களாக இருந்ததால், அவர்கள் கட்டுப்படாத பொழுது அவர்களை நாடு கடத்தினர்.

கி. பி. 1799-இல் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்ற வெல்லெஸ்லி (Lord Wellesley) 13-5-1799-இல் முதன்முதலாக இதழ்களுக்கான ஒழுங்கு முறைகளைக் கொண்டு வந்தார். இவற்றின்படி,

(1) ஒவ்வொரு இதழிலும் அதனை அச்சிடுவோர் ஆசிரியர், உரிமையாளரின் ஷ பெயர்களை வெளியிட வேண்டும்.

(2) இதழின் ஆசிரியரும், உரிமையாளரும் அரசின் தலைமைச் செயலாளரிடம்

தங்களது முகவரிகளைத் தெரிவிக்க வேண்டும்.

(3) தாங்கள் அச்சிட விரும்பும் எல்லா செய்திகளையும் தலைமைச் செயலரிடம் காட்டி, முன் ஒப்புதல் பெற்று வெளியிட வேண்டும்.

(4) இதழ்களை ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடக்கூடாது.

(5) அரசின் செயலாளர்தான் இதழ்களின் கட்டுப்பாட்டாளர்.

(6) இவ்விதிகளை மீறுபவர்கள் உடனடியாக நாடு கடத்தப்படுவார்கள் என்று அறிவித்தார். வெல்லெஸ்லியின் இந்த அடக்கு முறைக்கு உட்பட்டு அடுத்த 17 ஆண்டுகள், இந்திய இதழ்கள் தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தன.

**இதழியல் - விளக்கம்**

வியக்கத்தக்க வகையில் இதழியல் விரைந்து வளர்ந்து வருகின்றது. அறிவியல், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக இதழ்கள் செய்தித்தாட்கள் - அளவாலும், இயல்பாலும், பரப்பாலும், வகைகளாலும் நமது அரசியல், பொருளாதார சமுதாய வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

"காலையில் எழுந்தவுடன் செய்தித்தாள்" என்பது இன்று பலரின் பழக்கமாகிவிட்டது. இதழ்களின் தாக்கத்திற்குட்படாத, எந்தத் துறையும் இல்லை. பத்திரிகைகளின் செல்வாக்கு எழுத்தில் அடங்காது. ஆக்கல், அழித்தல்' என்று எல்லாம் வல்லதாக' இதழியல் செல்வாக்கும் பெற்றிருப்பதால் அதனைப் பற்றி அறிந்து கொள்ளுதல் இக்காலத் தேவையாகி விட்டது.

'பத்திரிகை'யின் பேராற்றலை மக்கள் உணரும் வகையில் பைந்தமிழ்ப் பாவேந்தர் பாரதிதாசன்,

**"காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான்! இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணிற்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறி வாளர் நெஞ்சில்"**

பிறந்த பத்திரிகைப் பெண்ணே" என்று வாழ்த்தி வரவேற்கின்றார்.

**இதழியல் விளக்கமும் இலக்கணமும்**

சொல் விளக்கம்: ' ஜெர்னலிசம்' (Journalism) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் 'இதழியல்'. இந்தச் சொல்லின் மூலம் "டையர்னல் (Diurnal) என்ற பழைய இலத்தீன் மொழிச் சொல்லில் இருந்து பிறந்தது. 'சானல்' 'டையர்னல்' என்றால், 'அன்று' (அன்றாடம்) என்று பொருள். ' சர்னல்' என்றால், 'அன்றாடம் நடந்ததை எழுதி வைக்கும் ஏடு' என்று பொருள்படும். வாசு கோடகாமாவின் பயண நூல் 'எ சர்னல் ஆப் தி பஸ்டு வாயேஜ் ஆப் வாஸ்கோடகாமா' என்று பெயர் பெற்றது. ஆனால் இப்பொழுது 'சர்னல்' என்பது 'இதழ்'களையே குறிக்கிறது" என்று எழுத்தாளர் அ.மா.சாமி விளக்குகின்றார்.

இதழ் என்பதை 'பத்திரிகை', ' செய்தித்தாள்' 'தாளிகை' என்றும் குறிப்பிடுகின்றனர்.

**இலக்கணம்:** மனிதன் அறிவு வளர்ச்சி பெற்ற காலத்திலிருந்து மற்றவர்களைப் பற்றியும், அவர்களது செயல்களைப் பற்றியும் அறிந்து கொள்ளும் ஆர்வம் உடையவனாக இருந்திருக்கின்றான். முதலில் செய்கையின் மூலமாகவும், மொழி வளர்ந்தபின் பேச்சின் துணையோடும் செய்திகளை அறிந்தும் பரப்பியும் வந்திருக்கின்றான். எழுதக் கற்றுக் கொண்டவன். அச்சுப்பொறியைக் கண்டுபிடித்ததும், செய்திகளின் பரப்பளவு மிகுந்தது. போக்குவரத்து வளர்ச்சி, அறிவியல், தொழில் நுட்ப முன்னேற்றம் இவற்றின் விளைவாக மின்னணுக் கருவிகளின் துணையோடு இலக்கண வரம்புக்குள்ளடங்காத அளவிற்கு இதழியல் வளர்ச்சி பெற்றுள்ளது. மக்கள் தொடர்பும் (Mass Communication) இதழியலின் உட்பிரிவாகுமளவிற்கு இத்துறை விரிவடைந்துள்ளது.

இதழ்களுக்கும், குறிப்பாக செய்தித்தாட்களுக்கும் எழுதும் தொழிலைத்தான் முதன் முதலில் இதழியல் என்ற சொல் குறித்தது. இப்பொழுது அதனுடைய பொருளும், பரப்பும் விரிவடைந்து, செய்திகளையும், கருத்துக்களையும் பரப்புகின்ற மக்கள் தொடர்பு நிறுவனமாக மாறியும், சமுதாய விழிப்புணர்ச்சியின் ஓர் உறுப்பாக அதுவே உருவெடுத்தும், அதனுடைய நடவடிக்கைகளுக்கு அற அடிப்படையிலும் சட்ட நோக்கிலும் பொறுப்பேற்கும் அமைப்பாகவும் இதழியல் திகழ்கின்றது (ஆர்.இராமசந்திர ஐயர், 1988-2) விளக்குகின்றார்

வெப்ஸ்டரின் மூன்றாவது பன்னாட்டு அகராதியில் (Webster's Third International Dictionary), வதற்காகவோ, பதிப்பிப்பதற்காகவோ, "வெளியிடு ஒலிபரப்புவதற்காகவோ நடைமுறை ஈடுபாடுள்ள விவரங்களைத் தொகுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் இதழியல்" என்று விளக்கம் உள்ளது.

சேம்பரின் இருபதாம் நூற்றாண்டு அகராதி (Chamber's Twentieth Century Dictionary) "பொது இதழ்களுக்கு எழுதுதல், எழுதுதல், அவற்றை நடத்துதல் ஆகிய தொழிலே இதழியல் எனப்படும்," என்று கூறுகின்றது.

ஹரால்டு பெஞ்சமின் (Harold Benjamin) என்ற ஒரு புகழ் பெற்ற அமெரிக்க இதழியல் பேராசிரியர், "பொது நோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாக வரையறுக்கப் பெற்ற வளரும் மனித நலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடை பயில்கின்றது." என்று குறிப்பிடுகின்றார்.

ஜி.எப்.மோட் (G.F. Mott) என்பவர் விரிவான விளக்கமாக, "இதழியல் என்பது, பொதுமக்கள் தொடர்புக்குரிய புதிய சாதனங்களைப் பயன்படுத்தி பொதுச் செய்திகளையும், பொதுக் கருத்துக்களையும் பொது பொழுது போக்குகளையும் முறையாக, நம்பிக்கைக்குரிய வகையில் பரப்புவதாகும்." என்று இயம்புகின்றார்.

லார்டு கிரே (Lord Gray), "பத்திரிகை தான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகப்பெரிய காவலாளி" என்று கருதுகின்றார்.

மேத்யூ அர்னால்டு [Mathew Arnold] "இதழியல் அவசரத்தில் பிறக்கும் இலக்கியம்", என்று புகழ்கின்றார். இதழியலின் சிறப்பினை அறிவுறுத்தும் வகையில், "பெரும்பாலும் ஒரு நாளிதழ் அறிவிப்பதும் கருதுவதும் தான் வரலாற்றுக்கு மூலப்பொருளாகவும், வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் மதிப்புடையதாகவும் அமைகின்றது," என்று பிராங் மோரஸ் (Frank Moraes) கூறுகின்றார்.

தாமஸ் ஜெபர்சனிடம் (Thomas Jefferson) ஒருமுறை. "நீங்கள் செய்தித்தாட்களே இல்லாத அரசை விரும்புவீர்களா? அல்லது அரசே இல்லாத செய்தித்தாட்களை விரும்புவீர்களா?" என்று கேட்டதற்கு, அவர், "அரசே இல்லாத செய்தித்தாட்களையே விரும்புவேன்," என்று பதிலளித்தார். இதிலிருந்து இதழ்களுக்கு அவர் தந்த சிறப்பிடத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இதழியல் பொதுமக்களின் கருத்துக்களை உருவாக்கவோ, அழிக்கவோ வல்லதாக இருக்கின்றது. இதழ்கள் வாய்மை வழியில் சென்று, பொறுப்புணர்ச்சியோடு செயல்படாவிட்டால் அதனால் ஏற்படும் கேடுகள் அளவிட முடியாதனவாக இருக்கும்.

## இதழ்களின் பணிகளும் பொறுப்புகளும்

### இதழ்களின் நோக்கம்

இன்றைய உலகில் ஆற்றல்மிக்கவையாக விளங்கும் இதழ்களால் சிறந்த பயன்கள் கிடைக்க வேண்டுமானால் அவை தங்களது பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும். உண்மையான மக்களாட்சி செயல்பட வேண்டுமானால் எல்லா மக்களும் ஆட்சியில் அறிவார்ந்த முறையில் பங்குபெற வேண்டும். அதற்குத் துணைசெய்வதாக இதழ்கள் இருக்கின்றன.

மக்கள் தகவல் தொடர்பில் (Mass Communication) "மக்கள் தகவல் தொடர்பு உண்மையான நடவடிக்கைகள், கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றினை ஒட்டியும் , நாடு தனக்கு முன் வைத்திருக்கும் தேவைகள் , கொள்கைகள் ஆகியவற்றினைச் சார்ந்தும் செயல்படுகின்றது. இது ஓர் உயிரோட்டமான இயல் , எடுத்துக்காட்டாக, பத்திரிகைத் துறை மக்களுக்குத் தெரிவிப்பதையோ , கற்பிப்பதையோ மட்டும் செய்வதில்லை ; பொதுப் பணிகளின் கண்காணிப்பாளராகவும் , மக்களின் உரிமைகளின் பாதுகாவலராகவும் செயல்படுகின்றது", " என்று குறிப்பிடுகின்றார்.

"வாளைவிட பேனா முனை வலுவுடையது" , என்பதை உலகெங்கும் இதழியலாளர்கள் உணர்த்தியுள்ளனர்.

நமது நாட்டின் விடுதலைக்காக இதழ்கள் செய்த அரும்பணியை மறக்க இயலாது. அன்றை இதழியலாளர்கள் உயர்ந்த நோக்கோடும், தியாக உணர்வோடும் நடத்திய இதழ்கள் நாட்டு மக்களை தட்டி எழுப்பின.

**உயர்ந்த குறிக்கோள்** : இதழ்கள் சிறந்த குறிக்கோளோடு செயல்பட வேண்டும். மக்களுக்குத் தொண்டு செய்யும் நோக்கமின்றி, வெறும் ஆதாய நோக்கத்தோடு செயல்படும் இதழ்களால் சமுதாயத்திற்குக் கிடைக்கும் பயன்களை விட கேடுகளே மிகுதியாக இருக்கும்.

அண்ணல் காந்தியடிகள் தனது சுயசரிதையில் ,"செய்தித்தாளின் நோக்கங்களில் ஒன்றாக, மக்களின் உணர்வினை அறிந்து , அதனை வெளியிடுவது இருக்க வேண்டும். மற்றொன்று, மக்களிடம் சில மிகவும் வேண்டிய உணர்வுபூர்வமான எண்ணங்களை உருவாக்க வேண்டும். மூன்றாவதாக , பொதுமக்களிடம் இருக்கும் குறைகளையும் துணிச்சலாக எடுத்துரைக்க வேண்டும்", என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

இதழ்களின் பணிகள் எப்படிப்பட்ட குறிக்கோள்களோடு அமையவேண்டும் என்பதை இங்கிலாந்தின் பத்திரிகை மன்றம் ( Press Council) தனது இரண்டாவது ஆண்டு அறிக்கையில் , அநீதியை வெளிகாட்டுவது , தவற்றைத் திருத்துவது , ஆலோசனை வழங்குவது. நண்பர்களில்லாதவர்களோடு நட்புக் கொள்வது, ஆதரவற்றவர்களுக்கு உதவுவது ஆகியவை செய்தித்தாட்கள் செய்ய வேண்டிய சேவைகளில் அடங்கும். வேறு வகைகளில் பெற முடியாதவர்களுக்குத் தொடர்ந்து உதவிகளை வழங்க வேண்டும். பொதுக் காரணங்களை எடுத்துக் கொண்டு தேவையானால் போராட்டங்கள் நடத்தவும் வேண்டும் ," என்று அழகாக விளக்குகின்றது.

### இதழ்களின் பணிகள்

இதழ்களின் பணிகளை மரபு வழியில் அவை செய்கின்ற பொதுப்பணிகள் என்றும் , மாறிவரும் சமுதாயத்தில் மேற்கொள்கின்ற வளர்ந்து வரும் பணிகள் என்றும் பகுத்து விளக்கலாம்.

**பொதுப்பணிகள்** : அறிவித்தல் (To inform), அறிவுறுத்தல் (To instruct), மகிழ்வித்தல் (To entertain), வாணிபம் செய்தல் ( To merchandise) ஆகிய நான்கு பணிகளை இதழ்கள் திறம்படச் செய்யவேண்டும். இவற்றை இதழ்களின் பொதுப்பணிகள் எனலாம்.

1. **அறிவித்தல்** : இதழ்களின் தலையாய பணி மக்களிடம் செய்திகளைப் பரப்புவதாகும். மக்களுக்கு எல்லா விவரங்களையும் உடனுக்குடன் , உண்மையாக, விருப்பு-வெறுப்பின்றி சிதைக்காமல் முழுமையாக வழங்க வேண்டும். நாட்டில் , சமுதாயம், அரசியல், பொருளாதாரம், கலை, பண்பாடு ஆகியவை தொடர்பாக நடைபெறும் எல்லா நடவடிக்கைகளையும் விளக்கிக் கூறுகின்ற பொறுப்பான பணியை இதழ்கள் செய்கின்றன. மக்கள் அறிய விரும்புகின்ற விலைவாசிகள் விளையாட்டு முடிவுகள் , நடைபெறப் போகும் நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாக இதழ்கள் திகழ வேண்டும். இந்த வகையில் இதழ்கள் நடப்பு நிகழ்ச்சிக் களஞ்சியங்களாகும்.

அறிவித்தல் பணியை இதழ்கள் எப்படிச்செய்ய வேண்டும் என்பதை அகில இந்திய செய்தித்தாட்களின் ஆசிரியர்கள் கூட்டம் ( All India Newspaper Editors' Conference) முதல் பத்திரிகை குழுவிற்கு ( First Press Commission) அளித்த குறிப்பில் , 'இதழியல் நடப்பு நிகழ்ச்சிகளையும், கருத்துக்களின் போக்குகளையும் மக்களுக்குத் தெரிவிக்கவும் , விரிந்து செல்லும் பரப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தவும் , கட்டிக்காக்கவும், பல்வேறு வகையான கருத்துக்களையும் வெளிகாட்டும் வகையில் நடைமுறைச் சிக்கல்களைப்பற்றிய விவாதத்தைத் தூண்டவும் முயல வேண்டும். இவற்றிற்கெல்லாம் செய்திகளையும் ( News)

கண்ணோட்டங்களையும் (Views) துல்லியமாக நடுநிலையில் வெளியிடுவதும் , மோதுகின்ற இலட்சியங்களை பற்றின்றி மதிப்பீடு செய்வதும் தேவையானதாகும்" , என்று விளக்கம் கூறியிருக்கின்றது.

2. **அறிவுறுத்தல்:** இதழ்கள் செய்திகளை வெளியிட்டால் மட்டும் போதாது ; தேவையான விவரங்களையும் வழங்கி மக்களைச் சிந்திக்கச் செய்யவேண்டும். இது இதழ்கள் செய்ய வேண்டிய ஒரு கல்விப் பணியாகும்.

எடுத்துக்காட்டாக, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் நமது முன்னாள் இந்தியத் தலைமையமைச்சர் ராஜீவ் காந்தியும் , முன்னாள் இலங்கை குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவும் கையெழுத்துப் போட்ட செய்தியை வெளியிடுவது அறிவிப்புப் பணியாகும். என்னபின்புலத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது , அதனுடைய விளைவுகள் எப்படி இருக்கும் என்பன போன்றவற்றை வாசகர்கள் புரிந்து கொள்ளுமாறு செய்வது அறிவுறுத்தல் பணியாகும்.

நமது நாட்டில் அரசு பல்வேறு வகையான முன்னேற்றப் பணிகளை மேற்கொள்கின்றது. அவற்றில் மக்கள் முழுமனதோடு ஈடுபட வேண்டுமானால் , அவற்றைப் பற்றிய அறிவும் தெளிவும் மக்களுக்கு ஏற்பட வேண்டும். இதற்கு வேண்டிய வகையில் தலையங்கங்கள் ( Editorials) எழுதியும், சிறப்புக் கட்டுரைகள் , கருத்துப்படங்கள், விளக்கப்பட்டங்கள் வெளியிட்டும் இதழ்கள் மக்களின் அறிவை வளர்க்கத் துணை செய்கின்றன.

நல்ல இதழ்கள் மக்களிடம் தொடர்கல்வியை ( Continuing Education) வளர்க்கும் சாதனங்களாக விளங்குகின்றன. இதழ்களைப் படித்து, அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து வல்லுநர்களாகி, வாழ்க்கையில் முன்னேறி வெற்றி பெற்றவர்கள் உள்ளனர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

**"அறிஞர் தம்இதய ஓடை**
**ஆழநீர் தன்னை மொண்டு**
**செறிதரும் மக்கள் எண்ணம்**
**செழித்திட ஊற்றி ஊற்றிக்**
**குறுகிய செயல்கள் தீர்த்துக்**
**குவலயம் ஓங்கச் செய்வாய்!**

**நறுமண இதழ்ப் பெண்ணே உன்**

**நலம்காணார் ஞாலம் காணார்," என்றும்,**

**தெருப்பெருக் கிடுவோருக்கும்**

**செகம்காக்கும் பெரியோருக்கும், கை**

**இருப்பிற் பத்திரிகை நாளும்**

**இருந்திடல் வேண்டும்! மண்ணிற்**

**கருப்பெற் றுருப்பெற்றிளநடை**

**பெற்றுப் பின்னர் ஐந்தே ஆண்டு**

**வரப்பெற்றார், பத்திரிகை நாளும்**

**உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!"**

என்றும் இதழ்களின் கல்விப்பணியை இலக்கிய நயத்தோடு இயம்புவதைக் காணலாம்.

3. **மகிழ்வித்தல்:** இதழ்களின் மற்றொரு பணி வாசகர்கள் சேர்ந்துவிடாமலிருக்க அவர்களை உற்சாகமூட்டி , உணர்வுகளுக்குத் தீனியளித்து மகிழ்விப்பதாகும். இதழ்கள் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களையும் , கருத்தைக் கவரும் சிறுகதைகளையும் , உணர்வை அள்ளும் கவிதைகளையும் , புதுமை மணம் கமழும் கட்டுரைகளையும் , ரசித்துச் சிரிக்கத் தக்க நகைச்சுவைகளையும் , சமுதாயத்தில் புகழ் பெற்றோரின் பேட்டிகளையும் , மக்களை ஆட்டிப்படைக்கும் திரைப்படங்களையும் , நடிகர்-நடிகைகளைப் பற்றிய துணுக்குகளையும் நாட்டில் நடைபெறும் விந்தைமிகு செய்திகளையும் வெளியிடுகின்றன. இவை வாசகர்களை மகிழ்விப்பதோடு கவர்ச்சியுடையனவாகவும் மாற்றுகின்றன. இதழ்களைக்

இப்பொழுது பெரும்பாலும் செய்தித்தாட்கள் வார மலர்களும் , திரைமலர்களும், சிறுவர்மலர்களும், சிறப்பு மலர்களும் இணைத்து வெளியிடுகின்றன. இவற்றினால் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் இதழ்களை விரும்பி , வாங்கிப் படிப்பதனைக் காண்கின்றோம்.

4. **வாணிபம் செய்தல்** : இதழ்கள் அச்சிடுவதே விற்பனை செய்வதற்காகத்தான். ஆதலால் இதழ்கள் வாணிப நோக்கத்தோடும் செயல்பட வேண்டியுள்ளது. ஒரளவு வருவாய் தேடிக் கொள்ளும் இதழ்களால் தான் தங்களது கால்களில் நின்று கொண்டு துணிச்சலாகக்

கருத்துக்களைக்கூற முடியும். இதழ்கள் விளம்பரங்களை வெளியிடுவது ஒரு வகையில் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ளத்தான். குறைந்த விலையில் இதழ்கள் கிடைப்பதற்கு விளம்பர வருவாய் பெருமளவுதுணை செய்கின்றது. இதழ்களில் வெளிவரும் விளம்பரங்கள் நாட்டின் வாணிப வளர்ச்சிக்கும் வழி வகுக்கின்றன.

**வளர்ந்து வரும் பணிகள்:** இதழ்கள் இப்பொழுது அறிவித்தல் , அறிவுறுத்தல், மகிழ்வித்தல், வாணிபம் செய்தல் ஆகிய நான்கு மரபு வழிப்பணிகளோடு பல புதிய பணிகளையும் காலச் சூழ்நிலைக்கேற்ப ஏற்றுக் கொண்டுள்ளன.

இன்றைய இதழ்கள் சமுதாய மாற்றத்திற்கு வழிகாட்டுகின்றன. நாட்டில் ஏற்படுகின்ற மாற்றங்களின் சிறப்புக்களையும் குறைகளையும் சுட்டிக் காட்டுகின்றன. நல்ல மாற்றங்கள் வேரூன்றி வளர ஆக்கமும் ஊக்கமும் தருகின்றன. எடுத்துக்காட்டாக , தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை மறுப்பு, பெண் கல்வி எழுச்சி ஆகியவற்றிற்கு இதழ்கள் ஆற்றியிருக்கும் தொண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

கலையிலும் இலக்கியத்திலும் சமுதாயப் பழக்க வழக்கங்களிலும் புதிய முறைகள் (New styles) நுழைய இதழ்கள் வாய்ப்பளிக்கின்றன. தமிழ் இலக்கியத்தில் சிறுகதை , புதுக்கவிதை போன்ற வடிவங்கள் தமிழ் இதழ்களின் மூலமே செழித்து வளர்கின்றன. மக்களிடம் பல புதுமைகளை படிப்படியாய் இதழ்கள் புகுத்துகின்றன.

வளர்ந்து வருகின்ற இதழியல் பணிகளில் புலனாய்வுப் பணியும் ஒன்று. தற்காலத்தில் புலனாய்வு இதழியல் ( Investigative Journalism) விரைந்து வளர்கின்றது. மறைந்து கிடைக்கும் மறைக்கப்படுகின்ற பல உண்மைகளை வெளிக்கொணர்கின்ற பணிகளை சில இதழ்கள் வியக்கத்தக்க வகையில் செய்கின்றன. அரசியலில் மிகப்பெரிய திருப்பங்களையும் மாற்றங்களையும் பத்திரிகைகளில் வெளிவரும் புலனாய்வு அறிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

## பொறுப்புகள்

இதழ்கள் ஆற்றல் மிக்க மக்கள் தொடர்பு சாதனங்களாக இருப்பதால் அவற்றை நடத்துகின்றவர்கள் மிகவும் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும்.

பொதுவாக, இதழ்கள் எதனை வெளியிட்டாலும் மக்களிடம் 'நம்புகின்ற மனப்பான்மை இருக்கின்றது. மேலும் , செய்தித்தாட்களில் வெளிவருபவை எல்லாம் சரியானவைதானா என்பதை அறியக்கூடிய வாய்ப்புக்கள் வாசகர்களுக்கு இல்லை. ஆதலால் சரியான செய்திகளையே பத்திரிகைகள் வெளியிட வேண்டும். ஐயப்பாட்டிற்குரிய எந்த செய்தியையும் வெளியிடக் கூடாது.

அறிவியல்,தொழில் நுட்ப புரட்சியின் விளைவாக , செய்தித்தாட்களுக்கு ஏராளமாக செய்திகள் விரைவாகக் கிடைக்கின்றன. அவற்றை எல்லாம் வெளியிட இயலாது. அவற்றில் மக்களுக்குத் தேவையான, பயன்பாடுடையவற்றைத் தெரிந்தெடுத்து வெளியிடும் பொறுப்பு இதழ்களுக்கு இருக்கின்றது , ஜான் ஹோஹன்பெர்க் , "விரிவடைந்து வரும் செய்தித்தொடர்பு இதழியலாளருக்கு இதற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது மிகப் பெரிய அளவில் பொறுப்பை அளித்திருக்கின்றது. செய்திகளுக்கு எண்ண முடியாத அளவு மிகுதியாக வாசகர்களும் இருப்பதால் பொறுப்பு மிகவும் அதிகமாகின்றது."என்று கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தில் அமைதியைக் கெடுக்கும் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடாமல் இருப்பது நல்லது. சில வேளைகளில் எங்கோ ஒரு மூலையில் நடந்த சண்டைக்கு சாதி , சமய வண்ணம் பூசி வெளியிடுவதால் அமைதி கெடுவதைக் காண்கின்றோம்.

மக்களாட்சியில் செய்தித்தாட்களின் பொறுப்பு மிகுதியாகின்றது. மக்களிடம் பொதுக்கருத்தை ( Public opinion) உருவாக்கும் வாய்ப்பும் ஆற்றலும் இதழ்களுக்கு இருக்கின்றன. தவறான கருத்தை வளர்த்துவிட்டால் , பின்பு இதழ்களே முயன்றாலும் மாற்ற முடியாது. ஆதலால் கண்ணும் கருத்துமாக நல்லனவற்றை வளர்க்கும் கடமையும் பொறுப்பும் பத்திரிகைகளுக்கு உள்ளன.

பத்திரிகைகள் நாட்டின் நலனையும் குறிக்கோள்களையும் மனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். நாட்டுப் பற்றும் , பொதுமக்கள் நலம்பேணும் உணர்வும் இதழியலாளர்களுக்குத் தேவை. எடுத்துக்காட்டாக , ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவது நாம் ஏற்றுக் கொண்ட நாட்டுக் கொள்கை , இதற்கேற்பச் செயல்படுவது இதழ்களின் கடமையாகும்.

இதழ்களில் ஒரளவு தரத்தைக் ( standard) கட்டிக் காக்க வேண்டியது பத்திரிகையாளர்கள் கடமையாகும். விற்பனையை மட்டும் நோக்கமாகக் கொண்டு பாலுணர்வைத் தூண்டும் ( Sex), வன்முறை ( Violence) செயல்களை வளர்க்கும் செய்திகளை வெளியிடுவது பொறுப்பற்ற செயலாகும். பத்திரிகைகள் தாங்கள் வெளியிடுவதன் பின் விளைவுகளை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## இதழியல் விதிகள்

**(Canons of Journalism)**

செய்தித்தாள் ஆசிரியர்களின் அமெரிக்க சங்கம் 1923-ஆம் ஆண்டிலேயே சில இதழியல் விதிகளை உருவாக்கித் தந்திருக்கின்றது. அவற்றை மனங்கொண்டு இதழியலாளர்கள் செயல்பட்டால் தரமான இதழ்களை உருவாக்க இயலும். அந்த இதழியல் விதிகளை விளக்கிக் கூறலாம்.

1. **பொறுப்புடைமை (Responsibility)** : வாசகர்களைக் கவர பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றும் உரிமை இதழ்களுக்கு உண்டு. ஆனால் இந்த உரிமைகளைப் பயன்படுத்தும் பொழுது, பொதுமக்களின் நலனைக் கெடுக்காமல் செயல்பட வேண்டிய பொறுப்புணர்ச்சி பத்திரிகையாளர்களுக்கு இருக்க வேண்டும்.

2. **பத்திரிகைச் சுதந்திரம் (Freedom of the Press):** மனித இனத்தின் தலையாய உரிமைகளில் ஒன்று பத்திரிகை சுதந்திரம். சட்டத்திற்குப் புறம்பாகப் போகாமல் எதனைப் பற்றியும் வெளியிட விவாதிக்க இதழ்களுக்குக் கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருக்க வேண்டும்.

3. **தனித்துவம் ( Independence)** : பொதுமக்கள் நலனுக்கு ஊறு விளைவிக்காமல் சுதந்திரமாக, இதழ்கள் தனித்தியங்க வேண்டும். தனித்தியங்கும் உரிமையைப் பயன்படுத்தும் பொழுது இரண்டு கருத்துக்களை அடிப்படையில் பின்பற்ற வேண்டும். முதலாவதாக, தன்னலங்கருதி இதழ்கள் செய்திகளைப் பயன்படுத்துவது நேர்மையாகாது. இரண்டாவதாக, தெரிந்தே ஒரு பக்கம் சார்ந்து , உண்மைக்குப் புறம்பாகத் தலையங்கம் எழுதுவதோ, செய்திகளுக்குத் தவறாக விளக்கம் தருவதோ, விமர்சிப்பதோ முறையாகாது.

4. **நம்பிக்கை, துல்லியம்** : உண்மை, நம்பிக்கையாகவும், உண்மையாகவும் இதழ்கள் (Truthfulness) துல்லியமாகவும் (Accuracy) செய்திகளை வெளியிட வேண்டும். (அ) செய்திகளை வேண்டுமென்றே திரித்தோ. வேறு முரண்பட்ட பொருள்படும் வகையிலோ வெளியிடுவது மன்னிக்க முடியாத குற்றமாகும். (ஆ) செய்திகளின் உள்ளடக்கத்தினை ஒட்டியே செய்திகளுக்குத் தலைப்புக் கொடுக்க வேண்டும். கவர்ச்சிக்காகவோ , கிளர்ச்சிக்காகவோ செய்திக்குத் தொடர்பின்றித் தலைப்பிடக் கூடாது.

5. **பக்கம் சாராமை ( Impartiality):** நடுநிலை நின்று செய்திகளை வெளியிட வேண்டும். செய்தி அறிக்கைகளையும் ( News reports), அவை பற்றிய கருத்துக்களின் வெளியீடுகளையும் (Expression of opinions) வேறுபடுத்திக் காட்ட வேண்டும். செய்திகளின் கோணங்களை மாற்றி , வாசகர்களை திசை திருப்பக் கூடாது.

6. **நியாயமான நடவடிக்கை** ( Fair play): இதழ்கள் அறத்திற்கு முறனாகச் செயல்படக் கூடாது. ஆதாரமின்றி யாரையும் குற்றம் சாட்டுவதோ. பெயருக்கும் புகழுக்கும் களங்கம் கற்பிப்பதோ நியாயமாகாது. மற்றவர்களுக்கும் விளக்கம் கூற வாய்ப்பளிக்க வேண்டும். தவறுகள் ஏற்பட்டு விட்டால் திருத்திக் கொள்ளத் தயங்கக் கூடாது.

7. **பண்பாடு** ( Decency) : இதழ்கள் செய்திகளை பண்பு நெறிகளினின்று விலகாமல் வெளியிட வேண்டும். குறிப்பாக குற்றங்கள் , கொலைகள், கற்பழிப்பு, வன்முறை போன்ற செய்திகளை வெளியிடுகின்ற பொழுது வாசகர்களின் விலங்கு உணர்வுகளைத் தூண்டாமல், சமுதாயம் கட்டிக்காக்கும் மரபுகளையும் , பண்பாடுகளையும் சீர்குலைக்காமல் , கவனமாக இருக்க வேண்டும். தக்க சொற்களைப் பயன்படுத்தி , தரமாக செய்திகளை எழுதி வெளியிட வேண்டும்.

## சுதந்திரமும் கட்டுப்பாடும்

செய்தித் தாட்கள் நடுநிலையோடும் , அற உணர்வோடும் செயல்பட அவற்றிற்குப் போதுமான அளவு சுதந்திரம் இருக்க வேண்டும். அரசு இதழ்களைத் தங்களது விருப்பப்படி செயல்படும் கைப்பாவையாக மாற்றக் கூடாது. அதே நேரத்தில் இதழ்கள் ஒரு வகை சுயக்கட்டுப்பாட்டோடு செயல்படவேண்டும்.

அண்ணல் காந்தியடிகள் எப்படி பத்திரிகைத்துறை சுதந்திரத்தோடும் அதே நேரத்தில் கட்டுப்பாட்டோடும் செயல்பட வேண்டுமென்பதை அருமையாக விளக்கியுள்ளார். அவர் , "இதழியலின் ஒரே நோக்கம் தொண்டு செய்வது தான். பத்திரிகை ( Press) மிகப் பெரிய சக்தி. ஆனால், கட்டுப்பாடின்றி பெருக்கெடுத்துவரும் வெள்ளம் , நாட்டுப்புறத்தை மூழ்கடித்து , பயிர்களைப் பாழ்படுத்துவதைப் போன்று , சுட்டுப் பாடில்லாத பேனா , ஆக்குவதற்குப் பதிலாக அழித்துவிடுகின்றது. கட்டுப்பாடு வெளியிலிருந்து வருமானால் கட்டுப்பாடு இல்லாததை விட மிகவும் கொடிய நஞ்சாகச் செயல்படும். கட்டுப்பாடு உள்ளுக்குள்ளேயே செயல்பட்டால் மிகவும் ஆதாயமாக இருக்கும். இந்த அணுகுமுறை சரியானதென்றால் , உலகில் எத்தனை இதழ்கள் இந்தச் சோதனையில் வெற்றி பெறும் ? ஆனால் பயனற்ற இதழ்களை யாரால் தடுத்து நிறுத்த முடியும் ? யார் சரியான நீதிபதியாக விளங்க முடியும் ? பொதுவாக நல்லதும் கெட்டதும் இணைந்திருப்பதைப் போல , பயனுள்ளவையும் பயனற்றவையும் இருக்கத்தான் செய்யும். மனிதன் தான் நல்லதைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும் ," என்று கூறும் கருத்து இன்றும் என்றும் இதழ்களுக்கு வழிகாட்டக் கூடியதாகும்.

பொறுப்பை உணர்ந்து செயல்படும் இதழ்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாதவைகளாகும்.

**இதழ்கள் - வகைகளும் இயல்புகளும்**

தற்காலத்தில் எண்ணற்ற இதழ்கள் வெளிவருகின்றன. அவற்றின் இயல்புகளையும் , பணிகளையும், பயன்களையும், வீச்சினையும் புரிந்து கொள்ள அவற்றை வகைப்படுத்திப் பார்ப்பது துணை செய்யும்.

இதழ்களை அறுதியிட்டு வகைப்படுத்துவது இயலாது. இதழ்கள் எண்ணிக்கையில் பெருகுவதைப் போல அவற்றின் வகைகளும் பெருகலாம் ;மாறலாம். இருந்தாலும் வகைப்படுத்துவது இதழ்களைப் பற்றிய ஒரு தெளிவினை நமக்கு வழங்கும்.

**மக்கள் தொடர்புமுறை பகுப்பு**

செய்தி பரப்பும் வகைகள்: மக்கள் தொடர்பு முறையில் செய்திகளைப் (தகவல்களை பரப்பும் முறைகளைப் பொதுவாக கீழ்க்கண்ட ஆறுவகைகளாகப் பகுக்கலாம்

1. **அச்சு** (Print) : பார்த்து அறியக் கூடிய வகையில் சொற்களாகவோ, படங்களாகவோ அச்சிட்டு வெளியிடுபவை எல்லாம் இப்பிரிவில் அடங்கும். செய்தித்தாட்கள் , வார, மாத இதழ்கள், ஏடுகள், விளம்பரங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

2. **ஒலி உணர்வு** ( Sense of sound) : காதுகளின் மூலம் கேட்கும் வகையில் செய்திகளைப் பரப்புவது இந்த முறையைச் சார்ந்தவையாகும். வானொலி , ஒலிபெருக்கி ஆகியவை இம்முறைக்கு ஏற்ற எடுத்துக்காட்டுகள்.

3. **கேட்டலும் பார்த்தலும்** (Audio visual) : ஒரே நேரத்தில் கேட்டும், பார்த்தும் அறியக் கூடிய முறையாக இது விளங்குகின்றது. தொலைக்காட்சி ( TV) திரைப்படங்கள் ஆகியவை கேட்டும், பார்த்தும் உணரக் கூடியவைகளாகும்.

4. **மரபு வழிச்சாதனம்** ( Traditional Media) : காலம் காலமாக செய்திகளையும் கருத்துக்களையும் பரப்ப மக்கள் பின்பற்றி வரும் பழமையான முறைகளை மரபு வழிமுறை என்று கூறலாம். தெருக்கூத்துகள் , பொம்மலாட்டம், நாட்டுப்புறபாடல்கள் போன்றவை இம்முறைக்கு ஏற்ற சான்றுகளாகும்.

5. **சொல் வழித்தொடர்பு** ( oral communication) : கருத்துக்களைப் பேச்சின் மூலம் பரப்புகின்ற முறையை இது குறிக்கின்றது. பொதுக்கூட்டங்கள், குழுவிவாதங்கள் ஆகியவை இம்முறையைச் சேர்ந்தவைகளாகும்.


6. **வெளிப்புறச் சாதனங்கள் ( Outdoor Media)** : அச்சிட்ட சொற்கள், பார்க்கக் கூடிய படங்கள் ஆகியவற்றை சுவரொட்டிகளாக. பெரும் விளம்பரத் தட்டிகளாக , அறிவிப்புப் பலகைகளாக வைப்பது போன்றவை வெளிப் புறச்சாதன முறையாகும்.

இந்தப் பகுப்புகளின் அடிப்படையில் இதழ்கள் ' அச்சு வழியில்' இடம் பெறுகின்றன.

**இதழ்களின் பகுப்பு**

அடிப்படை: பொதுவாக அச்சிட்டு செய்திகளையும் ( News), கருத்துக்களையும் ( views) பரப்ப வெளிவருகின்ற எல்லாவற்றையும் 'இதழ்கள்' (Journals) என்ற பொதுச் சொல்லால் குறிப்பிட்டாலும், அவை இயல்பாலும் , வெளிவரும் காலத்தாலும் , உள்ளடக்க கருத்துக்களாலும் தரத்தாலும் , நோக்கங்களாலும், வேறுபடுகின்றன. இங்கு சிலகுறிப்பிடத்தக்க அடிப்படைகளில் இதழ்களை வகைப்படுத்தலாம்.

(1) கால அடிப்படைப் பகுப்பு: இதழ்களை அவை வெளிவரும் (மலரும்) கால அடிப்படையில் எப்படிப் பகுக்கலாம் என்பதை ஒரு வரைப்படத்தின் மூலம் விளக்கலாம்.




**நாளிதழ்கள்** : ஒவ்வொரு நாளும் வெளிவருவதை 'செய்தித் தாட்கள்' (News Papers), 'தினசரிகள்' (Dailies) என்று கூறலாம். இவை காலையில் வெளிவந்தால் 'காலை இதழ் '

என்றும். மாலையில் வெளிவந்தால் 'மாலை இதழ் ' என்றும் கூறுகின்றோம். வாரம் இருமுறையோ, மும்முறையோ வெளிவரும் இதழ்களையும் , உலக நாடுகளின் கல்வி , சமுதாயம், பண்பாட்டு அமைப்பு (UNESCO), நாளிதழ்களாகவே கருதுகின்றது.

தமிழ் நாளிதழ்களில் காலை இதழுக்கு, 'தினத்தந்தி' 'தினமணி', 'தினகரன்' போன்றவற்றையும், மாலைவெளிவரும் இதழ்களுக்கு மாலைமுரசு ', 'மாலைமலர்' ஆகியவற்றையும் எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

**பருவ இதழ்கள்:** ஒரு குறிப்பிட்ட கால இடை வெளியில் ஒரு வருவதை 'கால இதழ்கள்' (Periodicals) அல்லது பருவ இதழ் ( Magazines) என்று கூறுகின்றோம். வாரம் ஒருமுறை, திங்கள் இருமுறை , திங்கள் ஒரு முறை , காலாண்டுக்கு ஒரு முறை , அரையாண்டுக்கு ஒரு முறை, ஆண்டுக்கொருமுறை, என இதழ்கள் வெளிவருகின்றன.

வார இதழ்களுக்கு எடுத்துக்காட்டாக , 'ஆனந்த விகடன்', 'கல்கி'. குமுதம், 'வாரந்திர ராணி', 'கிராம ராஜ்யம்', போன்றவற்றைக் கூறலாம்.

திங்களிருமுறை வெளிவரும் இதழ்களுக்குச் சான்றாக , 'வர்த்தகக் குரல்','வானொலி' ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

திங்கள் இதழ்களில் சிறப்புப் பெற்றவை 'கலைமகள்', 'அமுதசுரபி', 'செந்தமிழ்ச் செல்வி', 'தாமரை' முதலியனவாகும்.

முத்திங்கள் இதழ்களுக்கு பாக்கியப் பரணி ', 'மாணவர் தியானக் குறிப்பு '; அரையாண்டு இதழுக்கு 'ஆராய்ச்சி' ; ஆண்டு இதழ்களுக்கு பள்ளி, கல்லூரிகள் வெளியிடும் ஆண்டு மலர்கள் ஆகியவற்றையும் சுட்டிக்காட்டலாம்.

**(ii) தன்மை ( Quality) அடிப்படைப் பகுப்பு:** இதழ்களை அவை யாருக்காக வெளியிடப்படுகின்றன என்ற தன்மையின் அடிப்படையில் கீழ்க்காணும் வகையில் பகுக்கலாம்.

**1. தரமான இதழ்கள் ( Standard Magazines) :** ஆழமான பொருள் நிறைந்த , புலமைமிக்கவர்கள் படிக்கக் கூடிய இதழ்களை 'உயர்தரமான' இதழ்கள் என்று கூறலாம். ஆராய்ச்சி இதழ்கள் இப்படிப்பட்டவை. செந்தமிழ்ச் செல்வி ' 'தென் மொழி ', 'குறள்மலர்','ஆராய்ச்சி' ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவையாகும்.

**2. மக்கள் இதழ்கள் ( People Magazines):** எல்லா வகையான மக்களும் எளிதாக , பொழுதுபோக்கு நோக்கில் படிக்கக் கூடியவற்றை மக்கள் இதழ்கள் எனலாம். தமிழில் வெளியாகின்ற பெரும்பாலான இதழ்கள் இந்த வகையைச் சார்ந்தவை.

3. **நச்சு இதழ்கள்:** படிக்கின்றவர்களின் உள்ளத்தைக் கெடுக்கும் வகையில் செய்திகளையும், கதைகளையும், கட்டுரைகளையும் கொண்ட இதழ்கள் சிலவும் வெளிவருகின்றன. இவற்றை 'மஞ்சள் இதழ்கள் ( Yellow Journals) என்றும் கூறுவர். இவை 'சாக்கடை' போன்றவை. இவற்றால் சமுதாயத்திற்கு விளைகின்ற கேடுகளே மிகுதியாக இருக்கும்.

**(iii) உள்ளடக்க (Content) அடிப்படைப் பகுப்பு:** இதழ்களில் வெளிவருகின்ற செய்திகள், படைப்புகள் ஆகியவற்றில் எவை மேலோங்கியிருக்கின்றதென்ற அடிப்படையில் இதழ்களைப் பல்வேறு வகைகளில் பிரித்துப் பார்க்கலாம்.. அவற்றில் குறிப்பிடத்தக்கவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

1. பொழுது போக்கு இதழ்கள் (குமுதம், ராணி,கல்கி,ஆனந்த விகடன்)
2. அரசியல் இதழ்கள் (ஜனசக்தி, திராவிடநாடு, விடுதலை அண்ணா)
3. இலக்கிய இதழ்கள் (செந்தமிழ்ச்செல்வி, எழுத்து, ஞானரதம்)
4. கவிதை இதழ்கள் (கவிதை, முல்லைச்சரம்,குயில்)
5. சிறுவர் இதழ்கள் (அணில், கண்ணன், கோகுலம், அம்புலிமாமா)
6. அறிவியல் இதழ்கள் (கலைக்கதிர், விஞ்ஞான விவசாயம்)
7. மருத்துவ (உடல் நல) இதழ்கள் (நல்வழி, மூலிகைமணி)
8. கல்வி இதழ்கள் (கல்வி, ஆசிரியர் குரல்)
9. மகளிர் இதழ்கள் (சௌபாக்கியம்,மங்கை)
10. தொழில் இதழ்கள் (மேழிச்செல்வம்,ஏர் முரசு, நெசவாளி, பனைச்செல்வம்)
11. இல்ல இதழ்கள் (சக்திசர்க்கரை ஆலை செய்திமடல்)
12. கொள்கை விளக்க இதழ்கள் (கூட்டுறவு, கிராமராஜ்யம், சர்வோதயம்)
13. வாணிப இதழ்கள் (வணிகச் செய்தி,வர்த்தகர் உலகம் )
14. எழுத்தாளர் இதழ்கள் (பாரதி, எழுத்தாளன், தமிழ்ப்பாவை)
15. விளையாட்டு இதழ்கள் (ஒலிம்பிக்)
16. செய்தி இதழ்கள் (அமெரிக்கன் ரிப்போர்ட்டர், சோவியத் பலகணி)
17. சோதிட இதழ்கள் (மாத ஜோதிடம், அதிர்ஷ்டம் )

18. சமய இதழ்கள் (தர்ம சக்கரம், ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம், பூக்கூடை, திருக்கோயில்)

19. திரைப்பட இதழ்கள் (பேசும்படம், குண்டூசி, சினிமா கதிர், திரைஉலகம்)

20. பன்மொழி இதழ்கள் (திருமலை திருப்பதி தேவஸ்தான இதழ். ஸ்ரீ ரங்கநாத பாதுகா)

21. புலனாய்வு இதழ்கள் (தராக, ஜூனியர் விகடன்)

22. புதின இதழ்கள் (ராணி முத்து, மாலைமதி, குங்குமச்சிமிழ். ஊதாப்பூ

23. தொகுப்பு இதழ்கள் (மஞ்சரி)

24. தனிச்சுற்று இதழ்கள் (புரட்சிக்கவி)

**எண்ணிக்கையும் தரமும்:** நாம் வாழ்கின்ற இக்காலத்தில் இதழ்கள் புற்றிசல்கள் போல் பெருகுகின்றன. அவற்றில் பல மலர்கின்ற வேசத்திலேயே வாடி , கருகி, உதிர்ந்து விடுகின்றன. பெரும்பாலானவை தரமற்றவைகளாக உள்ளன.

எண்ணிக்கைகள் எண்ணிக்கையிலும் கூடி தரமுள்ளவைகளாகவும் இருந்தால் , இதழ்களின் வளர்ச்சியை வரவேற்கலாம்.

**மக்களாட்சியில் இதழியல்**

செய்திகளைப் பரப்புகின்ற மக்கள் தொடர்புச் சாதனமாக இதழ்கள் விளங்குவதால் , மக்களாட்சி (ஜனநாயகத்தில்) சீரும் சிறப்புமாகச் செயல்பட இதழ்கள் துணை புரிகின்றன. ஆதலால்தான் நேரு பெருமகனார் , "தற்கால வாழ்க்கையில் , குறிப்பாக மக்களாட்சியில் ஆற்றல்மிக்க உறுப்புகளில் ஒன்றாக பத்திரிகை ( Press) இருக்கின்றது. பத்திரிகையிடம் எல்லையற்ற சக்தியும், பொறுப்புகளும் உள்ளன. பத்திரிகையை மதிக்க வேண்டும் ," என்று கூறுகின்றார்.

**ஆட்சியில் இதழ்களின் பங்கு**

ஒருகாலத்தில் அரசு என்றாலே அதனை காவல் அரசாக ( Police State) எண்ணிப் பார்த்தனர். உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது , மக்களுக்கு நீதி வழங்குவது , வெளித்தாக்கு தல்களிலிருந்து மக்களைக் காப்பாற்றுவது - ஆகியவைதான் அரசின் தலையாய பணிகளாயிருந்தன. இப்பொழுது அரசு என்றாலே அது நல அரசாக ' இருக்க

வேண்டுமென்ற கருத்து வளர்ந்துள்ளது. மக்களின் நலனைக் கட்டிக் காக்கவும் , வளர்க்கவும் அரசுக்கு இதழ்கள் தோன்றாத் துணையாகத் திகழ்கின்றன.

எந்த வகையான ஆட்சி அமைப்பு முறை இருந்தாலும் பொதுமக்கள் தொடர்புக்குத்தனியிடம் இருக்கின்றது. ஆர்.கே.சாட்டர்ஜி , "இன்றைய சிக்கலான சமுதாய அமைப்பில் பொது மக்கள் தொடர்பின் பங்கு நல்ல முறையில் ஆக்க பூர்வமானதாக (Positive) இருக்க வேண்டும். ஓர் அரசு மக்களாட்சி முறையில் அமைந்தாலும் , சர்வாதிகார முறையில் அமைந்தாலும் , அங்கு பொதுமக்கள் தொடர்புக்குத் தேவை இருக்கின்றது. ஒரேயொரு மிகவும் முக்கியமான வேறுபாடு என்னவென்றால் , சர்வாதிகார நாடுகளில் மக்கள் தொடர்புப் பணிகள் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும். அதாவது , கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் இருக்காது.மக்களாட்சியில் மக்கள் கருத்துக்களை உணர்ந்து , இணங்கச் 1 செய்யும் முறை பின்பற்றப்படும் ," என்று கூறுவதனை இங்குச் சுட்டிக் காட்டலாம். மக்களாட்சியில் இதழ்களின் பணிகள் விரிவடைந்துள்ளன.

**இதழ்களின் பங்கு:** மக்களாட்சியில் இதழ்களின் பங்கு மிகவும் முக்கியமானதாக வளர்ந்திருக்கின்றது. டி.எஸ். மேத்தா , "பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதிலும் , செப்பனிடுவதிலும் பிரதிபலிப்பதிலும் மக்களாட்சி நடைபெறும் நாட்டில் பத்திரிகை மிகவும் முக்கியமானதாகச் செயல்படுகின்றது. பத்திரிகை நமது சமுதாயத்தின் ஆதார நிறுவனமாகும். நாட்டில் , அரசியல் சமுதாய பொருளாதார வளர்ச்சியினைச் சிறப்பாக ஏற்படுத்த அது மிகவும் துணை செய்கின்றது. பத்திரிகை , அரசு செயல்படுவதோடும் அது பின்பற்றும் கொள்கையோடும் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றது. நமது பொது வாழ்க்கையின் ஒவ்வொரு 2 கூறுபாட்டையும் அது தொடுகின்றது ," என்று சிறப்பாக குறிப்பிடுகின்றார்.

நமது நாட்டில் விடுதலை இயக்கம் நடைபெற்ற பொழுது , இதழ்கள் வரலாறு படைக்கும் வகையில் அருமையாகப் பணியாற்றின. விடுதலை இயக்கத்தை நடத்திய தலைவர்களில் பலர் , தங்களது இயக்க வளர்ச்சிக்கு உதவும் வகையில் தாங்களே இதழ்களை நடத்தினர். மேலும் , பெரும்பாலான பத்திரிகையாளர்கள் நாட்டுப்பற்றும் , விடுதலை வேட்கையுமுடையவர்களாக இருந்தனர். ஆதலால் இந்திய இதழ்கள் துணிச்சலோடு அரசினை எதிர்த்து நின்று உண்மையினை எடுத்துரைக்கும் மரபின் வழியில் வளர்ந்தன. எதிர் நீச்சல் போடுவது இந்திய இதழ்களின் இயல்புகளின் ஒன்றாயிற்று.

நாடு விடுதலை பெற்ற பிறகு இந்திய இதழ்கள் , நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை உணர்ந்து செயல்படத் தொடங்கின. மரபு வழியில் வந்த அரசின்

நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் தலைமை ஆய்வாளர் ' (Inspector General) பணியோடு, பொதுமக்களைத் தூண்டுகின்றவராகவும் செயல்படுகின்றன. சமுதாய ஆசிரியராகவும் இதழ்கள்

**கல்வியாளராக** : நமது நாட்டில் பெரும்பாலானவர்கள் கல்வியறிவற்றவர்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களிலும் பலருக்கு நாட்டின் நடப்புப் புரிவதில்லை. மக்களாட்சி வெற்றி பெற வேண்டுமானால் மக்கள் ஓரளவு விவரம் புரிந்தவர்களாக இருக்க வேண்டும். இதற்கு வேண்டிய சமுதாயக் கல்வியை இதழ்கள் வழங்குகின்றன.

பத்திரிகைகள் செய்திகளை மட்டும் வெளியிடுவதில்லை. நாட்டின் நலனோடு தொடர்பான செய்திகளை வெளியிடும் பொழுது , அவற்றைப் பற்றித் தனியாகச் சிறப்புக் கட்டுரைகள் வெளியிட்டும் , தலையங்கம் எழுதியும் , தலைவர்களின் பேட்டிகளைத் தக்க சமயத்தில் அளித்தும் , மக்களுக்கு விளக்கம் தருகின்றன. மக்களது ஐயப்பாடுகளை நீக்கி வழி காட்டும் நல்லாசிரியராக மக்களாட்சியில் இதழ்கள் செயல்படுகின்றன.

**எதிர்க்கட்சியாக** : நமது நாட்டைப் போன்றே உலகில் மக்களாட்சி நடைபெறும் பல நாடுகளில் எதிர்க்கட்சிகள் வலுவானவைகளாக அமையவில்லை. இந்நிலையில் அரசினைத் 'தட்டிக் கேட்கும்' எதிர்க்கட்சிகளின் பணியையும் இதழ்கள் செய்ய வேண்டியுள்ளது.

"தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டமாருதன்" , என்று ஒரு பழமொழி கூறுவார்கள். இது ஆட்சியாளர்களுக்கும் பொருந்தும். மூக்கணாங்கயிறு போடாத மாடு வண்டி இழுப்பதைப் போல் தான் வலுவான எதிர்க்கட்சி இல்லாத ஆட்சி அரசை நடத்துவது இருக்கும். இந்நிலையில் இதழ்கள் , அரசின் பொது நலனுக்கு எதிரான போக்குகளை 'வெளிச்சம்' போட்டுக் காட்டி, கட்டுப்பாட்டிற்குள் செயல்பட அரசினைத் தூண்ட இயலும்.

பத்திரிகை எதிர்க்கட்சிகளின் பணிக ளச் செய்யும் பொழுது அரசு பத்திரிகையைக் கட்டுப்படுத்த முனைகின்றது. இந்தப் போக்கினைக் கண்டித்து காந்தியடிகள் , மக்களின் கருத்தை வெளிக்காட்டும் " செய்தித்தாட்கள் இல்லையென்றால் , அரசு அதனை எப்படி அறிந்து கொள்ள இயலும் ? பொது மக்களின் கருத்துக்குப் பிரதிநிதிகளாக இருக்கும் செய்தித்தாட்களை அரசு அறிவுறுத்துகின்றார். கட்டுப்படுத்தக் கூடாது". என்று

**வளர்ச்சியில் பங்கு** : பொறுப்புள்ள இதழ்கள் மக்களரசின் வளர்ச்சிப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். மக்கள் நாட்டின் ஆக்கத்திட்டங்களை அறிந்து , உணர்ந்து, பங்குபெற எல்லா வகைகளிலும் உதவ வேண்டும்.

நமது நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி பாலை வனங்களையும் சோலைவனங்களாக்கி, தொழில்களை வளர்த்து மக்களை வாட்டும் வறுமையிலிருந்து மீட்டு, எல்லோரையும் இன்புற்று வாழச் செய்ய அரசு முயல்கின்றது. இத்தகைய முயற்சிகளுக்கு இதழ்கள் முழுமனதோடு ஆதரவு தர வேண்டும்.

நமது நாட்டில் சாதி மத வேறுபாடுகளும் , ஏற்றத் தாழ்வுகளும் , பிற்போக்கு மனப்பான்மையும் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டைகளாக இருக்கின்றன. தன்னலத்தோடும் , குறுகியநோக்கங்களோடும் செயல்படும் சக்திகளை பொதுமக்களுக்கு இனங்காட்டி , அவற்றைப் புறக்கணித்து, நாட்டுப் பற்றோடு பொது மக்கள் செயல்பட இதழ்கள் தொண்டு செய்ய வேண்டும். பொதுமக்கள் தொண்டினை ( Public Service) இதழ்கள் இக்காலத்தில் தலையாய குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன.

**மக்களாட்சியில் இதழ்களின் பணிகள்**

பொதுவாக இதழ்கள் பல பணிகளைச் செய்தாலும் , மக்களாட்சியில் இவை சில குறிப்பிடத்தக்க பணிகளைச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம். அவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

1. **செய்தி பரப்பும் பணி** : நாட்டு மக்களுக்குத் தேவையான செய்திகளையும், கருத்துக்களையும் உடனுக்குடன் சரியான முறையில் பரப்ப வேண்டும். முக்கியமான செய்திகளை இதழ்கள் தந்நலம் கருதி இருட்டடிப்புச் செய்யக் கூடாது.

2. **விளக்கப் பணி** : இதழ்கள் செய்திகளை வெளியிடுவதோடு. அவை பற்றிய எல்லா விவரங்களையும் ( Informative) தெரிவிக்கவும், அவை தொடர்பான கல்வியை வழங்கவும் ( Educative) தேவையானால் அறிவுறுத்தவும் ( Instructive) வேண்டியனவற்றைச் செய்யும் விளக்கப்பணி ( Interpretative function) என்பது பலவழிகளிலும் முறைகளிலும் வாசகர்களின் தரத்திற்கேற்ப அமையலாம். விளக்கப்படங்கள் , கேலிச் சித்திரங்- கேள்வி பதில்கள், சிறப்புக் கட்டுரைகள் ஆகியவை இம்முறைகளில் அடங்கும்.

மறைக்கப் படுகின்ற , மறைந்து கிடக்கின்ற விவரங்களை வெளிக்கொணர்கின்ற ' புலனாய்வுப் பணியை ' (Investigative function) மக்களாட்சியில் சில இதழ்கள் திறம்படச் செய்கின்றன. தமிழில் இதற்காகவே தனி இதழ்கள் தோன்றி வளர்வது வரவேற்கத் தக்கதாகும்.

3. **விமர்சனப் பணி:** செய்திகளை வெளியிட்டு விளக்கினால் மட்டும் போதாது ; தேவையானால் அவை பற்றி விமர்சனமும் ( Criticism) விவாதமும் ( Discussion) நடத்த

வேண்டும். எதனைப் பற்றியும் இருவகையான கருத்துக்கள் இருக்கலாம். உண்மையை உணரவும், தெளிவினை ஏற்படுத்தவும் திறனாய்வுகளும் விவாதங்களும் துணை செய்யும்.

4. **கருத்தை உருவாக்கும் பணி:** பொதுக் கருத்துக்கள் (Public opinion) உருவாக்கும் பணியை இதழ்கள் செய்ய வேண்டும். ஒரு காலத்தில் 'குண்டுக் கோட்பாட்டினை ' (Bullet Theory) நம்பினர். அதாவது இதழ்கள் செய்திகளின் மூலம் வாசகர்களை (சுட்டு) வீழ்த்த முடியுமென்று கருதினர். ஆனால் இப்பொழுது இதழ்களைப் படிக்கின்ற பொது மக்கள் நல்லதையும் கெட்டதையும் சீர்தூக்கி, சொந்தக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ள வகை செய்ய வேண்டும். அப்பொழுது தான் தேர்தல் காலத்தில் மக்கள் தங்களது வாக்குச் சீட்டுக்களைச் சரியாகப் பயன்படுத்த இயலும். ஆதலால் தான் அறிஞர்கள் , *பத்திரிகையும் வாக்குச் சீட்டும் மக்களாட்சியில் இரட்டைக் குழாய் துப்பாக்கி' என்று கருதினர்.

இதழ்கள் பொதுக் கருத்தை உருவாக்கினால் மட்டும் போதாது. அதனை ஆட்சியாளர்கள் அறியவும் செய்ய வேண்டும். ஆசிரியருக்குக் கடிதங்கள் ','மக்களின் கருத்துக்கள்' போன்ற பகுதிகள் இதற்குத் துணை செய்கின்றன.

5. **காவல் பணி:** மக்களாட்சியில் மக்களின் உரிமைகளைக் காக்கின்ற பணியையும் இதழ்கள் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம். இதனால் தான் பத்திரிகையை , மக்களாட்சியின் காவல் நாய்" (Watch dog of Democracy) என்று அழைக்கின்றனர்.

மக்களின் உரிமைகள் பாதிக்கப்படுகின்ற பொழுது இதழ்கள் போராட்டங்கள் (campaigns) நடத்தி, நீதியை நிலை நாட்டிய நிகழ்ச்சிகள் பலமுறை நடந்திருக்கின்றன.

ஜான்பிரைஸ் ( John Bryce) என்பவர்," செய்தித்தாட்களின் வெளியீட்டால் தான் மக்களாட்சி முடியும் என்றாகியுள்ளது ," என்கிறார். நமது நாட்டையும் , உலகின் பல்வேறு நாடுகளையும் ஊன்றிக்கவனித்தால் , இந்த உண்மையை அறியலாம். எந்த நாடுகளில் எல்லாம் பத்திரிகை தனது பணிகளைச் செய்ய முடியாமல் கட்டுப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் மக்களாட்சி முடங்கிக் கிடக்கும். ஆதலால் , இதழ்கள் மக்களாட்சியின் உயிர் மூச்சாகத் திகழ்கின்றன.

**வினாக்கள்**

1. மக்கள் தகவல் தொடர்பு சாதனங்களை விவரி

2. அச்சு ஊடகங்கள் குறித்து எழுதுக.

3. இதழ்களின் பணிகள் யாவை?

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | அச்சுஊடகங்கள் குறித்துஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | இதழ்களின் பணிகள் யாவை? | K4 | CO3 | PO5 |
| 3 | இதழியல் விதிகள் யாவை? | K1 | CO4 | PO1 |
| 4 | இணைய இதழ்கள் குறித்துஎழுதுக. | K5 | CO5 | PO2 |
| 5 | இதழ்களின் வகைகளைவிளக்கு. | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | மக்கள் தொடர்புசாதனங்களைவிவரி. | K3 | CO4 | PO4 |
| 2 | இதழ்களின் பொறுப்பும் கடமையும் குறித்துகட்டுரைக்க. | K4 | CO2 | PO6 |
| 3 | மக்களாட்சியில் இதழ்களின் பங்கினைஎடுத்துரைக்க. | K1 | CO1 | PO5 |
| 4 | மரபு வழி தகவல் தொடர்புகருவிகளைவகைப்படுத்துக. | K5 | CO5 | PO6 |
| 5 | இதழியல் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துவிவரி. | K6 | CO3 | PO3 |

# அலகு - 3

## வானொலியும் தொலைக்காட்சியும்

**வானொலி**

கேட்கும் சாதனம் வானொலி. 'ரேடியோ' என்ற சொல்லை 'வானொலி' என்று தமிழாக்கம் செய்தவர் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி), வானொலியைக் கண்டுபிடித்தவர் மார்க்கோணி.

தற்போது வானொலியின் ('FM' - Frequent Modulation) பண்பலை நிகழ்ச்சிகள் பெரிதும் நேயர்களைக் கவர்ந்துள்ளன. திருச்சி ரெயின்போ பண்பலையில் வரும் (வசந்த அழைப்புகள்) என்ற தொலைபேசி உரையாடல் நிகழ்ச்சி, இன்று ஒரு தகவல் ஆகிய நிகழ்ச்சிகள் நேயர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

வானொலியும் தொலைக்காட்சியும் ஏறக்குறைய எல்லா வீடுகளிலும் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான இல்லங்களில் ஒரே நேரத்தில் செய்தி வழங்கும் சாதனம் வானொலி. தற்கால இதழ்களுக்குப் போட்டியாக விளங்குபவை வானொலி. வானொலி அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால் ஒரு நாட்டின் அரசுச் செய்திகளையோ, அவசரநிலைப் பிரகடனம் போன்றவற்றையோ வானொலியும், தொலைக்காட்சியும் செய்தித்தாள்களைவிட மிக விரைவில் அறிவித்துவிடும்.] மேலும், இவை அறிவிக்கும் செய்திகள் உலகின் மூலை முடுக்குக்கெல்லாம் சில நொடிகளில் சென்று விடுகின்றன. சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்ததைச் சில விநாடிகளில் மனிதகுலம் முழுவதும் தொலைக்காட்சியில் கண்டு மகிழ்ந்ததைச் சுட்டலாம். பூகம்பம். வெள்ளம், புயல், மழை போன்ற நேரங்களில் பத்திரிகைகள் போய்ச் சேர முடியாத இடங்களுக்கு வானொலியும். தொலைக்காட்சியும் ஒலி, ஒளிபரப்பின் மூலம் செய்திகளைத் தந்துவிடுகின்றன.

பி.பி.சி. (B.B.C.), வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா (VOA) ஆகிய இரண்டு நிறுவனங்களும் உலகின் மிகப்பெரிய ஒலிபரப்பு நிறுவனங்கள், இவை இரவு, பகல் எனப் பாராது 24 மணிநேரமும் ஒரு மணிக்கு ஒருமுறை வீதம் செய்திகளை ஒலிபரப்புகின்றன. விரைவாகவும் பரவலாகவும் உலகம் முழுவதும் நடப்பனவற்றை இவை சில நொடிப் பொழுதுகளில் தெரிவித்து விடுகின்றன. தற்போது தொலைக்காட்சி மிகவும் செல்வாக்குள்ள சாதனமாக மக்கள் மத்தியில் விளங்குவதால் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறும் முக்கியச் செய்திகள் உடனுக்குடன் தொலைக்காட்சி மூலம் நேரில் நடைபெறுவதுபோல் அப்படியே காட்டப்படுகின்றன.

செய்தியுடன் நிகழ்ச்சிகளையும் நேரில் காண்பதால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நன்கு மனதில் பதிகின்றன. மக்களும் இதை அதிகம் விரும்புகின்றனர். சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா, சர்வதேச மாநாடுகள் முதலியவற்றிலும் தலைவர்கள் பேசுவதை நேரடி ஒளிபரப்பாகத் தொலைக்காட்சிகள் காட்டுவதைப் பல்லாயிரம் மைல் தூரத்தில் இருந்தாலும் உடனுக்குடன் நேயர்கள் பார்க்க முடிவது மிகவும் விந்தையே. கிரிக்கெட், ஹாக்கி, கால்பந்து முதலிய போட்டிகளும் நேரடியாக ஒளிபரப்பப்படுகின்றன. பெரும்பாலான பத்திரிகைகள் தம் அலுவலக டெலிபிரிண்டர் வேலை செய்யாமல் போகும்போது அல்லது ஸ்டிரைக் முதலியன நடக்கும்போது வானொலியுடன் தொடர்பு கொண்டு செய்திகளைக் கேட்டு வாங்கி எழுதி வெளியிடுகின்றன. குறிப்பாகத் தேர்தல் முடிவுகள் வெளியாகும் காலங்கள், போர்க்காலங்கள் முதலிய நேரங்களில் மக்கள் கூட்டம் கூட்டமாக வானொலியைச் சுற்றி நிற்பதைக் காணலாம். வானொலியின் வரலாற்றினையும் அமைப்புகளையும் இப்பகுதியில் காணலாம்.

**வானொலியின் வரலாறு**

1896ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இங்கிலாந்து மார்க்கோணி தமது கண்டுபிடிப்பைப் பதிவு செய்தபோது வானொலியின் சேவை முதன்முதலாக ஆரம்பித்தது. அதன்பின்னர் உலகின் மற்ற நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்தது. தோன்றி 28 ஆண்டுகள் கழித்து வானொலி இந்தியாவிற்கு வந்து சேர்ந்தது. இந்தியாவில் வானொலிக் குழுக்கள் (Radio Clubs) கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட போது ஒலிபரப்பு இந்தியாவில் ஆரம்பமாயிற்று. அத்தகைய வானொலிக் குழுவில் ஒன்றுதான் சென்னை நகரில் 1924ஆம் வருடம் மே 16ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட சென்னை பிரஸிடென்ஸி வானொலிக் குழு ஆகும். அதே ஆண்டு ஜூலை 31இல் சென்னை மாகாண ரேடியோ கிளப் ஆகிய இக்குழு தன் ஒலிபரப்பைத் தொடங்கியது. அதே ஏப்ரல் முதல் நாள் அன்று சென்னை மாநகராட்சி முறையான ஒலிபரப்பைத் தொடங்கியது.

இந்திய வானொலியில் நிதிப்பற்றாக்குறை காரணமாக ஒலிபரப்புப் பொறுப்பேற்றிருந்த இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனியாரின் ரூ.15 லட்சம் முதலீடு போதாமல் போகவே இந்திய அரசு 1930இல் தாம் உதவ இயலாத நிலையைத் தெரிவித்தது. வானொலிப் பெட்டிகள் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த நிறுவனங்களில் ஒலிபரப்புச் சேவை நிதி நெருக்கடி காரணமாக நின்று போய்விட்டால், தாம் முதலீடு செய்திருந்த லட்சக்கணக்கான ரூபாய்கள் முடக்கப்பட்டுவிடுமே என்று அரசிடம் முறையிட்டனர். அந்த முறையீட்டை ஏற்று 1930 ஏப்ரல் மாதம் முதல் நாளிலிருந்து அப்போதைய அரசு இந்திய அரசின் தொழில் மற்றும் தொழிலாளர் துறையின் கீழ் (தி இந்தியன் பிராட்காஸ்டிங் சர்வீஸ்) என்ற அமைப்பை உருவாக்கிற்று.

பொருட்செலவு மிகுதியானதும் 1931 அக்டோபர் 9 இல் அரசு அச்சேவை அமைப்பை மூடிவிடத் திட்டமிட்டு பின்னர் மக்கள் எதிர்க்கவே. நவம்பர் 23இல் இனி தற்காலிகமாக ஒலிபரப்புத் துறையை ஏற்று நடத்துவது என்று முடிவு செய்தது. 1934ஆம் ஆண்டு முதல் ஒலிபரப்பில் ஆர்வம் வளர்ந்தது. அதே ஆண்டில் சென்னை அரசு பி.பி.சி. நிறுவனத்திலிருந்து பர்லோ என்ற ஒலிபரப்பு வித்தகரை அழைத்துத் திட்டம் தீட்ட முயற்சித்தது. பல லட்ச ரூபாய்கள் நிதி ஒதுக்கப்பட்டதன் பின்னர் ஒலிபரப்புத்துறை வளர ஆரம்பித்தது. பி.பி.சி.யின் ஆராய்ச்சித்துறைத் தலைவரான எச்.எல்.கிர்கே என்பவர் இந்தியா வந்து இச்சேவையைப் பார்வையிட்டு 7 புதிய மத்திய அலைவரிசை நிலையங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தார். செய்தி அறிக்கைகளை நல்ல முறையில் ஒலிபரப்ப டெல்லியில் ஒரு சிற்றலை ஒலிபரப்பியும் அமைக்க அவர் பரிந்துரைத்தார். 1935 செப்.10இல் மைசூரின் ஆகாசவாணி ஒலிபரப்பைத் தொடங்கியது. 1936 ஜூன் 8இல், ஆல் இந்தியா ரேடியோ அறிமுகமாயிற்று. 1938ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16ஆம் நாளில் அன்றைய ஆளுநர் எர்ஸ்கின் பிரபுவால் மதராஸ் நிலையம் தொடங்கி வைக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டு மே 16ஆம் நாளில் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. 1961க்குப் பின்னரே இந்தியாவில் ஒலிபரப்புத்துறை வளர்ச்சியடைந்தது.

**இந்திய வானொலி வளர்ச்சி**

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் 20, 1921 | : | பாம்பேயில் டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை அலுவலகத்திலிருந்து முதல் ஒலிபரப்பு |
| பிப்ரவரி 23, 1922 : | : | முதல் ஒலிபரப்பு லைசென்ஸ் வழங்கப்பட்டது. |
| மார்ச் 7, 1923 | : | முதல் ஒலிபரப்பு மாநாடு |
| நவம்பர் 1923 | : | கல்கத்தாவில் ரேடியோ கிளப் |
| மே 16 1924 | : | சென்னை ரேடியோ கிளப் ஆரம்பிக்கப்பட்டது. |
| மார்ச் 27, 1925 | | ஒலிபரப்பு நிலையங்கள் நிறுவ மனுக்களை வரவேற்று அரசு அறிவிப்பு |
| ஜூலை | | இந்தியன் ரேடியோ டைம்ஸ்' என்ற முதல் வானொலி இதழ் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு இதன் பெயர் 'இந்தியன் லிசனர்' என்றும் 'ஆகாஷ்வாணி' என்றும் மாற்றப்பட்டது. |
| ஜூலை 23, 1927 | | பாம்பே நிலைய ஒலிபரப்புத் துவக்கம் |

| | | |
|---|---|---|
| ஆகஸ்ட் 26, 1927 | | கல்கத்தா நிலைய ஒலிபரப்புத் துவக்கம் |
| 1930 | | இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனி பாம்பே நிலையத்தை அரசிடம் ஒப்படைத்தது.அது இந்தியன் ஸ்டேட் பிராட்காஸ்டிங் சர்வீஸ் (ISBS) என்று பெயர் மாற்றப்பெற்றது. |
| ஜூன் 8, 1936 | | ISBS - 'ஆல் இந்தியா ரேடியோ' (AIR) என்று பெயர் பெற்றது. |
| 1938 ஜூன் 16 | | சென்னை வானொலி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. வானொலி நிகழ்ச்சிகளை வெளியிடும் 'வானொலி' தமிழ் மாத இதழும் 'வாணி' என்ற தெலுங்கு மாத இதழும் வெளிவரலாயின. |
| 1939 மே 16 | | திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் ஏற்படுத்தப் பட்டது. |
| பிப்ரவரி, 1938 | | சிற்றலை ஒலிபரப்பு துவங்கியது. |
| 1939 | | AIR இன் வெளிச்சேவை மையம் தொடங்கப்பட்டது. |
| அக். 2, 1957 | | விவித்பாரதி தொடங்கப்பட்டது. |
| 1984, அக்டோபர் 30 | | நாட்டில் நிறுவ முடிவு செய்யப்பட்ட ஆறு உள்ளூர் (Local radio station) முதலாவது நாகர்கோயிலில் நிறுவப்பெற்றது. |
| 1987 ஜூன் 6 | | மதுரை வானொலி நிலையம் தொடங்கப்பெற்றது. |
| 1988 ஜூன் 6 | | சென்னை வானொலி நிலையம் பொன்விழா கொண்டாடியது. |

**அகில இந்திய வானொலி (ஆல் இந்தியா ரேடியோ)**

இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுதில் AIR சில நிலையங்களே இருந்தன. அதற்கடுத்த சில ஆண்டுகளில் 25 நிலையங்கள் நகரங்களிலும் தலைநகரங்களிலும் நிறுவப்பட்டன. ஆனாலும் கிராமப்புற மக்களுக்கு அதிகமாகக் கிட்டவில்லை. வர்த்தக அலைவரிசையான விவித் பாரதி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதுவே தொடர்ந்து மக்களுக்கு வானொலி மீது ஆர்வத்தை அதிகப்படுத்தி,'வானொலி ஒரு மக்கள் தகவல் தொடர்பு சாதனமே' என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

மேலும் பண்பலை வரிசைகளில் (FM wave) சென்னை, கல்கத்தா, மும்பை ஆகிய இடங்களிலிருந்தும் செய்திகளைத் தருகிறது.

**வானொலியின் அமைப்பு**

அகில இந்திய வானொலி அமைப்பு மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது. முழுமையாக அரசின் கட்டுப்பாட்டில் இயங்காமல் பாதி அரசின் கட்டுப்பாட்டில் இயங்குமாயின் சாலச் சிறந்தது என்று விரும்பினார் ஜவஹர்லால் நேரு.

பிரிட்டனில் இருப்பது போலவே இந்தியாவில் ஒலிபரப்பு ஆரம்பத்தில் தனியார் முயற்சி தோற்றுப்போனபோது,அரசு மிகுதியும் விருப்பமின்றி அவ்வுரிமையை எடுத்துக் கொண்டது. ஆனால் அன்றிலிருந்து ஒலிபரப்பு அரசின் ஏகபோக உரிமையாக இருந்து வரகிறது. ஒலிபரப்பு நிறுவனங்கள் தனித்தியங்குவது குறித்த பேச்சுக்களும் முயற்சிகளும் அவ்வப்போது தோன்று மறைந்து வந்தன.

**சந்தா கமிட்டி**

திருமதி. இந்திராகாந்தி செய்தி மற்றும் ஒலிபரப்பு அமைச்சராக இருந்தபோது டிசம்பர் 1964இல் அசோக். கே.சந்தா என்பவரது தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். இக்குழு ஏப்ரல் 18, 1966இல் ஒலிபரப்பு தொடர்பாகத் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இக்குழு, 1) "ஆகாஷ்வாணிக்கும் தூர்தர்ஷனுக்கும் தனித்தனியான பொதுக் கூட்டுரிமைக் குழுக்கள் நிறுவப்பட வேண்டும். வலிமையூட்டுதல், நிதிநிர்வாகம் சிறப்புத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையிலான பணி விதிமுறைகள் உருவாக்க அனுமதிக்கப்பட வேண்டும்". 2) 'ஒவ்வொரு விவசாயப் பகுதிக்கும் தனித்தனி வானொலி அமைப்புகளை உருவாக்க வேண்டும். நாடெங்கும் இது போன்ற 250 நிலையங்களை உருவாக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. 3) AIR கொள்கையளவில் ஒரு தேசிய நாளிதழைப்போல அன்றன்று நடைபெறும் செய்திகளைத் துல்லியமாக வெளியிடச் சுதந்திரம் கொண்டதாக இருப்பினும் நடைமுறையளவில் அஃது இயலாமல் போய்விட்டது என்றும் இக்குழு சுட்டிக் காட்டியது. இக்குழுவின் பரிந்துரைகள் 1969 டிசம்பரில் பிரதமமந்திரி இந்திராகாந்தி தலைமையிலான அமைச்சரவையினால் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. யுஜசுக்கும் தூர்தர்ஷனுக்கும் தனித்தனியாகத் தன்னியக்க அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற இக்குழுவின் பரிந்துரை 1970 ஏப்ரலில் பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது.

**வர்கிஸ் கமிட்டி**

1978இல் வர்கிஸ் கமிட்டி "ஒரு தேசிய ஒலிபரப்பு மேலாண்மைக் குழு நிறுவப்பட வேண்டும்" என்றும், ஆகாஷ் பாரதி "தன்னாட்சி மற்றும் சுதந்திரம் பெற்ற பொதுமக்கள் சேவை"யாக வேண்டும் என்றும் விவரித்தார். அதன்படி 1978இல் ஜனதா அரசு சில

விதிமுறைகளுக்குண்டான 'ஆகாஸ்பாரதி மசோதா'வைக் கொண்டுவந்தது. 1997 செப்டம்பர் 15ஆம் நாள் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு பிரசார் பாரதியை அமல்படுத்தியதன் மூலம் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் சுய அதிகாரத்தை வழங்கியுள்ளது. இனி எதிர்காலத்தில் வழங்கப்படும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் தான் சுய அதிகாரம் எந்த அளவுக்கு நடைமுறையில் உள்ளது என்பதை நிச்சயிக்கலாம்.

**வானொலிக் கோட்பாடுகள்**

இந்தியாவில் வானொலி (AIR) மற்றும் தொலைக்காட்சி (தூர்தர்ஷன்) இரண்டும் மத்திய அமைச்சகத்தின் செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறையின் தகவல் தொடர்புப் பிரிவுகள் ஆகும். இவ்வொலிபரப்புச் சேவையின் அமைப்புக் குறித்த கொள்கைகளை வகுக்கவும் இவ்வமைச்சகத்துக்கே உரிமை உண்டு. இத்துறைக்கென உள்ள மத்திய மந்திரி ஒரு செயலாளரின் துணையோடு இவ்வொலிபரப்புச் சேவைகளுக்கான தலைவராகக் கருதப்படுவார். மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்ட (ஒலிபரப்பு. செய்தி, கொள்கைகள்) ஒரு சிறு அமைச்சகப்பிரிவு இவர் தலைமையின் கீழ் இயங்கும். மூன்று பிரிவுக்கும் மூன்று கூடுதல் செயலாளர்கள் உண்டு.

1920 இல் வகுக்கப்பட்ட அகில இந்திய வானொலி விதிமுறைகள் நடப்பு ஒலிபரப்பில் இருந்து வருகின்றன. அவையாவன

1. ஒலிபரப்பில் நட்பு நாடுகளைக் குறைகூறக்கூடாது.
2. எந்தச் சமயத்தையோ அல்லது சமூகப்பிரிவினையோ குறைகூறக்கூடாது.
3. மானநஷ்டம் ஏற்படுத்துவனவற்றையோ, தரக்குறைவானவற்றையோ ஒலிபரப்பக் கூடாது.
4. வன்முறையைத் தூண்டும் விதத்தில் ஒலிபரப்பு இருத்தல் கூடாது.
5. நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் எந்த ஒலிபரப்பும் இருத்தல் கூடாது.
6. குடியரசுத் தலைவரின் நேர்மை, நீதித்துறை நேர்மை ஆகியனவற்றிற்கு எதிராக ஒலிபரப்பக் கூடாது.
7. நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியனவற்றால் பாதிக்கும் எதையும் ஒலிபரப்பக் கூடாது.
8. தனிமனிதர் எவரையும் தனிப்பட்ட முறையில் பெயர் குறிப்பிட்டுக் குறைகூறக் கூடாது.
9. தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் ஒலிபரப்பாகும் எந்த நிகழ்ச்சியிலும் எந்த ஓர் அரசியல் கட்சியின் உறுப்பினரோ, அனுதாபியோ பங்கேற்கக்கூடாது.

10. அரசியல் கட்சிகள் தம் செலவில் தயாரித்த திட்டமிட்ட விளம்பர நிகழ்ச்சிகள் எதுவும் ஒலிபரப்பக்கூடாது.

11. தேர்தலுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள பிரதமர், முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியவரின் ஒலிபரப்பும் இடம்பெறக் கூடாது.

ஆனால் சட்டம், ஒழுங்கு சம்பந்தமாக அல்லது நாட்டு நிர்வாகம் சம்பந்தமாக அவர்கள் பேசவேண்டிய தேவை ஏற்பட்டால் அந்த ஒலிபரப்புகளை அனுமதிக்கலாம் என்ற விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**பல்வேறு வகையான வானொலி ஒலிபரப்புகள்**

வானொலி ஏழை எளியவர்களும் வாங்கக்கூடிய ஓர் எளிய கருவி. எல்லோரும் விரும்பும் சாதனம். இதனை அறிந்தே திட்டமிட்ட பல நிகழ்ச்சிகளைக் குறித்த நேரத்தில் ஒலிபரப்பி வருகிறது. இந்திய வானொலி தான் ஒலிபரப்பும் நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு பகுத்துக் கொள்கிறது.

1. தேசிய அளவில் ஒலிபரப்பாகும் தேசிய நிகழ்ச்சிகள் (National Programmes)

2. நாட்டுத் தலைநகரிலிருந்து ஒலிபரப்பாகும் பல்வேறு மொழிச் செய்தி அறிக்கைகள் (Central News Bulletins)

3. மாநிலத் தலைநகர், மற்றைய நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு நிலையங்களிலிருந்து ஒலிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகள் (Regional Pro-grammes)

4. வெளிநாடுகளில் வாழும் நாட்டவருக்கும் மற்றவர்களுக்குமான ஒலிபரப்புகள் (External Servies)

இந்திய வானொலி நிகழ்ச்சியினைப் பெரும்பிரிவாகப் பிரித்தால் அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம்.

**1. பேச்சுமொழி நிகழ்ச்சி (Spoken Word Programmes)**

இந்நிகழ்ச்சிகளில் பேருரைகள், சிற்றுரைகள், உரையாடல்கள், விவாதங்கள், பேட்டிகள், நாடகங்கள், செய்தி அறிக்கைகள், கல்வி நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நேயர்களுக்கான நிகழ்ச்சிகள், விளக்க நிகழ்ச்சிகள் போன்றவை இதில் அடங்கும்.

**2. இசை நிகழ்ச்சிகள் (Music Programmes)**

இந்திய வானொலியில் அதிக நேரத்தை எடுத்துக் கொள்வது இசை நிகழ்ச்சி. கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, நாட்டுப்புற இசை, மேற்கத்திய இசை, திரைஇசை,மெல்லிசை, பக்திஇசை எனப் பல்வேறு இசை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. இதன் மூலம் இசைக் கலைஞர்கள், இளம் கலைஞர்கள், பாடகர்கள் பயன்பெறுகின்றனர்.

**தேசிய ஒலிபரப்புகள்**

நாடு முழுவதற்குமான குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் சில சிறப்பான நேரங்களில் ஒலிபரப்பப்படும். குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், பிரதமர், சான்றோர் நாட்டு மக்களுக்கென நிகழ்த்தும் உரைகள் அந்தந்த மாநில மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஒலிபரப்பப்படுவது தேசிய ஒலிபரப்பாகும். ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளிலும் அந்தந்த மாநில மொழிகளிலும் ஒலிபரப்பாகும் தேசியச் செய்தி அறிக்கையும் இவ்வகையே. செய்தித் துறை செய்திகள், செய்திச்சுருள், ஸ்பாட்லைட், மற்றும் நடப்பு நிகழ்ச்சிகள் ஆகிய நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு ஒலிபரப்புகிறது. இசை, நாடகங்கள், சிறப்பு நிகழ்ச்சிகள், உரைகள் ஆகிய தேசிய நிகழ்ச்சிகள் டைரக்டர் ஜெனரலால் திட்டமிடப்பட்டு அந்தந்த மாநில மையங்களில் தயார் செய்யப்படுகின்றன.

**மாநில நிகழ்ச்சிகள்**

முதன்மைபெற்ற மொழி, பண்பாட்டுக் குழுக்களின் அடிப்படையில் மாநில ஒலிபரப்பு அமைகிறது. ஒவ்வொரு மாநிலமும், யூனியன் பிரதேசமும் தன் நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கான சேவைகளை இந்நிகழ்ச்சிகள் வாயிலாகச் செய்கின்றன. தேசிய ஒலிபரப்பில் டெல்லியிலிருந்து ஒலிபரப்பப்படும் செய்தி, இசை, உரை ஆகிய நிகழ்ச்சிகள் தவிர ஒவ்வொரு மாநில வானொலியும் தம் வட்டார விவசாயிகள், தொழிலாளிகள், குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள் ஆகிய நேயர்களை நோக்கித் தன் நிகழ்ச்சிகளை அந்தந்த மாநில வானொலி நிலையங்களில் தயாரிக்கிறது. தேசிய ஒலிபரப்புகள் சிற்றலை ட்ரான்ஸ்மீட்டர்கள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றன. ஏனெனில் அப்பொழுதுதான் மாநில வானொலி நிலையங்களுக்கு அவற்றை ஒலிபரப்ப முடியும்.

**விவித்பாரதி**

விவித்பாரதி நிகழ்ச்சி 1957ஆம் ஆண்டு அக்.2 அன்று துவங்கப்பட்டது. சிறிது பொழுதுபோக்குடன் வழங்கப்பட இந்நிகழ்ச்சி கொழும்பு வானொலியுடன் போட்டி போடும் நோக்கில் தொடங்கப்பட்டது. திரைப்படப் பாடல்களை அதுவரை அரசு தன் ஒலிபரப்பிற்குத்

தடை செய்திருந்தது. ஏனெனில் மலிந்தவையாகவும் கருதப்பட்டன. எனவே, அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட அவை தகுதி இல்லாதவை என்று கருதப்பட்டது. இந்நிகழ்ச்சி ஆரம்பமானதும் அந்த நிலை மாறியது. திரைப்படப் பாடல்கள், பக்திப் பாடல்கள், குறுநாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள் ஆகிய நிகழ்ச்சிகள் தயாரித்து அளிக்கப்பட்டன. இந்த அலைவரிசைகளில் இரண்டு செய்தி அறிக்கைகளும் சில உரையாடல் நிகழ்ச்சிகளும் தரப்படுகின்றன.

**நிகழ்ச்சிகள்**

மாநில நிகழ்ச்சிகள் அல்லது அந்தந்த வட்டார வானொலிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த நிகழ்ச்சிகளின் நோக்கம் குறிப்பிட்ட அக்குழுவினருக்குத் தேவையானவற்றைக் கருத்தில் கொண்டு நிகழ்ச்சிகளை வழங்குவதும் அந்தக் குழுவினரிடையேயுள்ள திறமைக்கு வாய்ப்புக் கொடுப்பதும் ஆகும்.

குழந்தை நிகழ்ச்சிகள் குழந்தைகளின் நடிப்புத்திறன், பேச்சுத்திறன், எழுத்துத்திறன் ஆகியனவற்றை வெளிக்கொணரும் வண்ணம் அமைக்கப் படுவதுடன், குழந்தைகளின் மனத்தில் நற்பண்புகள் வளரும் வகையில் அமைக்கப்படுகின்றன. பெண்கள் நிகழ்ச்சியில் அவர்களுக்குத் தேவையான குடும்பக்கலை, குழந்தை வளர்ப்பு, தாய் சேய் நலம், வீட்டு நிர்வாகம், குடும்ப வரவு செலவு முதலான நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும்,வாழும் மக்கள் வளமாக வாழவேண்டும் என்பதற்காகவும், உடல்நல. குடும்பநல நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுச் சிறுகுடும்ப நெறியைப் பேசுகின்றன.

இளைஞர்கள் நிகழ்ச்சிகள் அவர்தம் பல்வேறு கலைகளின் மீதான திறனை வெளிப்படுத்துகின்றன. வேலைவாய்ப்புச் செய்திகளும் இவர்களுக்காகத் தரப்படுகின்றன.

ஙதொழிலாளர்களுக்காக, அவர்கள் வேலையின்போது கைக்கொள்ள வேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்றன வழங்கப்படுகின்றன.

விவசாயிகளுக்காகப் பல்வேறு நிகழ்ச்சிகள் அமைக்கப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல், அதிக உற்பத்தியைப் பெருக்குதல் ஆகிய நோக்கங்களில் பண்ணை ஒலிபரப்பு அமைகிறது.

வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருளை இறக்குமதி செய்யும் நிலை மாறி இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு எய்தியதற்கான பல்வேறு காரணங்களுள் வானொலியின்

விவசாய ஒலிபரப்புகளும் ஒரு முக்கியக் காரணம் ஆகும். வானொலி அறிமுகப்படுத்திய ஒரு நெல் வகை 'வானொலி நெல்' என்று இன்றும் விவசாயிகளால் அழைக்கப்படுகிறது. நவீன வேளாண் உத்திகள் வேளாண் பல்கலைக்கழகத்தவரால் எடுத்துரைக்கப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகளில் விவசாயிகளுக்குத் தேவையான கிராமப்புற மேம்பாடு, சிக்கன வாழ்வு, மக்களாட்சி நெறிகள், வளர்ச்சித் திட்டங்கள் போன்றவை பற்றியும் சொல்லப்படுகின்றன.

உலக அளவில் மக்கள் மனம் கவரும் நிகழ்ச்சியாக அமைவது விளையாட்டு நிகழ்ச்சி. அனைத்துத் தரப்பினரும் இந்நிகழ்ச்சியை விரும்பிக் கேட்பர். உலகின் எப்பகுதியில் மிக முக்கிய விளையாட்டு நிகழ்ச்சிகள் நடந்தாலும் அவற்றை ஒலிபரப்புகிறது இந்திய வானொலி.

இலக்கிய வட்டாரத்தின் உயர்ந்த படைப்பாகக் கருதப்படும் கவிதைகளைக் கவியரங்குகள் மூலம் பொங்கல், புத்தாண்டு நாள், விடுதலை நாள், தலைவர்களின் நினைவுநாள் போன்ற நேரங்களில் சிறப்பாகவும், பிற நேரங்களில் சாதாரணமாகவும் வழங்குகிறது. பட்டிமன்றங்கள்,இலக்கிய விவாதங்கள், மொழிபெயர்ப்புக் கலை, நூல்நயம், இலக்கியத் திறனாய்வு போன்ற நிகழ்ச்சிகளும் வழங்கப்படுகின்றன. அறிவியல் வளர்ச்சியை மனதில் கொண்டு அறிவியல் நிகழ்ச்சிகள் பலவற்றை அமைக்கின்றன. பள்ளிக் குழந்தைகளுக்கான கல்வி நிகழ்ச்சிகள், பல்கலைக்கழகங்களின் அஞ்சல்வழிக் கல்வி நிகழ்ச்சிகள் முதலியனவும் ஒலிபரப்பப்படுகின்றன.

**வெளிநாட்டுச் சேவைகள்**

சிற்றலை மற்றம் நீளலை வசதிகள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு ஒலிபரப்பை நிகழ்த்தக்கூடிய வசதிகளை உருவாக்கியுள்ளன. ரேடியோ மாஸ்கோ, பி.பி.சி. சிலான், விஓஏ போன்ற பல்வேறு வெளிநாட்டு சேவைகளைக் கேட்க நாம் ஆசைப்படுகிறோம் .

1939 இல் இந்திய வானொலி தன் வெளிநாட்டுச் சேவையை மேற்கொள்ள முயற்சியை ஆரம்பித்தது. இன்று இச்சேவை 155 வெளிநாடுகளுக்கு 25 மொழிகளில் அமைகிறது. இச்சேவைகளின் நோக்கம் உலக விஷயங்களில் இந்தியாவின் நோக்கு என்ன? என்பதை வெளிநாட்டவருக்கு விளக்குவதே ஆகும். இதனூடே இந்திய வாழ்க்கை, சிந்தனை, கலாச்சாரம் முதலியவை பற்றிய செய்திகளையும் அவர்களுக்குத் தருவது நோக்கமாகும். இந்நிகழ்ச்சிகள் பற்றிய நேயர்களின் எதிரூட்டு (Feed back) நேயர்களின் கடிதம் மூலமே கிடைக்கிறது. வருடத்திற்கு ஏறக்குறைய 31/ லட்சம் கடிதங்கள் இவ்வகையில் வருகின்றன. இத்தகைய வெளிநாட்டுச் சேவைகள் முக்கியமாக - பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தானம், அரபுநாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களைக் கருத்தில் கொண்டே அமைக்கப் படுகின்றன.

**செய்தி அறிக்கைகள்**

மாநிலச் செய்திகள் அந்தந்த மாநிலச் செய்திகளுக்கும். மத்திய செய்தி அறிக்கை - தேசியச் செய்தி மற்றும் பன்னாட்டுச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் தந்து அமைக்கப்படுகின்றன. இரண்டிலுமே அரசியல் மற்றும் விளையாட்டுச் செய்திகள் கட்டாயம் இடம்பெறுகின்றன. செய்தியின் அங்கங்களாகத் திட்டமிடல் செய்திகள், சமூகவியல் செய்திகள், வளர்ச்சிச் செய்திகள் ஆகியன இடம்பெறுகின்றன.

வானொலிச் செய்தி அறிக்கைகள் குறைந்த நேரத்திற்கு ஒலிபரப்பப் படுகின்றன. எனவே மக்கள் கவனமாகக் கவனித்துக் கேட்கின்றனர். வானொலிக்குச் செய்தி எழுத உயர்ந்த திறனும் அறிவும் தேவை. அப்படியானால்தான் எளிய, சிறிய சொற்றொடர்களால் செய்தியைக் கேட்பவர் கவனிக்கும் வண்ணம் தரமுடியும். ஒருமுறை காதால் கேட்பதுதான். செய்தித்தாளைப் போல மீண்டும் எடுத்துப் படிக்க வாய்ப்பில்லை. எனவே, தகுந்த சொற்களைப் போட்டு எழுதவேண்டும். தேவையற்ற ஒரு சொல்கூட வானொலிக்குச் செய்தி எழுதும் முறையில் பயன்படுத்தப்படக்கூடாது. வேகமாகச் செய்தி தருவதும் வானொலிச் செய்தி முறையில் கவனிக்கத் தக்கது. மேலும், செய்தி ஆதாரப்பூர்வமானது என்ற நம்பிக்கை செய்தி வாசிப்பவரின் குரல் மூலம் வழங்கப்பட வேண்டும்.

பி.பி.சி.யின் செய்தி அறிக்கை மக்களால் ஒரு காலத்தில் மிகவும் விரும்பிக் கேட்கப்பட்டதற்குக் காரணம் ஜான் ரெய்த் என்ற அதன் ஒலிபரப்பாளர் குறிப்பிடுவது போல, பாரபட்சமற்ற செய்திகளை, சரியான உண்மை பொருந்திய செய்திகளை உடனுக்குடன் ஒலிபரப்பியமையே ஆகும். போர்க்காலத்திலும், அமைதிக் காலத்திலும், தேர்தல் நேரத்திலும் வானொலிச் செய்திகளின் பங்கு மகத்தானவை எனலாம்.

வானொலி நிலையத்தில் செய்திப்பிரிவு ஒரு முக்கியமான பிரிவு, நிகழ்ச்சித் தயாரிப்பு அரங்கு. ஒலிவாங்கி, ஒலிபரப்பி, ஒலியை வானொலியாக மாற்றும் சாதனங்கள் ஆகிய பல வசதிகள் கொண்ட அமைப்பு ஆகும். இவற்றைப் பொறியாளர் பிரிவினர் கவனித்துக் கொள்கின்றனர்.

வானொலி நாட்டு ஒருமைப்பாட்டு உணர்வையும் வளர்ச்சிப் பணிகளையும் மென்மேலும் வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறது. பல்வேறு மாநிலக் கலைகள், இலக்கியங்கள் ஆகியனவற்றை ஏனைய மாநிலங்களுக்கு அறிமுகப்படுத்துவதில் அக்கறை கொள்கிறது. இசைநிகழ்ச்சிகள் இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு. சிறந்த நாடகங்களையும் இதே போல மொழிமாற்றம் செய்து பிறமாநிலத்தவருக்கு அறிமுகப்படுத்துகிறது. வானொலி நம் நாட்டின் ஒப்பற்ற ஒலிக் களஞ்சியம் என்பதில் தவறில்லை.

**நாடகங்கள்**

வானொலி நாடகங்களில் கண்களுக்கு வேலை இல்லை. நாடகங்களைச் செவிமடுப்பவர்களுக்கு நாடகமாந்தரின் உணர்ச்சி, களச்சூழல் போன்றவற்றை உணர்த்துவதில் வானொலி நாடகங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவை 'நாடகங்கள்' என்ற உணர்வினைப் பெற்று வெற்றியடைய முடியும்.

திரைப்படத்தில் பாடல் காட்சியின்போது நடிப்பவர் எவ்வாறு மிகுந்த கவனத்துடன் பாடலுக்கேற்ப வாயசைக்கின்றாரோ, அது போன்றே வானொலி நாடகத்தில் நடிப்பவர் வானொலி நாடகத்தின் காட்சிக்கேற்ப தன் குரலை நடிக்க வைப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகின்றார். ரயில் நிலையமானால் அங்கு ரயில் வந்து நிற்கும் ஒலி, புறப்படும் ஒலி, காஃபி, டீ விற்பவர்கள் குரல் போன்றவற்றைப் பதிவு செய்து காட்சியின் சூழ்நிலைக்கேற்ப ஒலிபரப்புகின்றனர். இதுபோன்றே குழந்தையின் அழுகுரல்,கார் வந்து செல்லும் ஓசை, வீதியாயின் பலவித ஒலிகள், அலுவலகமாயின் தட்டச்சுப் பொறிகளின் ஒலி ஆகியனவற்றை நாடகத்தின் காட்சிச் சூழலுக்கேற்ப ஒலிக்க விடுவர். எனவே, நாடகத்தின் இயல்புத்தன்மை பாதிக்கப்படுவதில்லை.

மேடை நாடகங்கள் போன்றே வானொலி நாடகங்களும் சிக்கல், உச்சகட்டம், சிக்கல் அவிழ்தல் போன்ற கட்டுக்கோப்பைக் கொண்டிருக்கும். வானொலி நாடகத்தில் பல பாத்திரங்களுடைய குரல்களை மட்டுமே கேட்கிறோம். அவர்களது மெய்ப்பாடுகளைக் காண்பதில்லை. எனவே, ஒவ்வொரு குரலும் அவ்வப்பாத்திரத்தின் தன்மையை நினைவூட்டும் வண்ணம் வேறுபாட்டுடன் அமையவேண்டும். இவ்வேறுபாடு, நன்கு புலனாவதற்காகத்தான் மிகவும் குறைந்த பாத்திரங்களுடனேயே வானொலி நாடகங்களை அமைக்கின்றனர். வானொலி நாடகங்கள் 15 நிமிடங்களுக்கு மிகாமலும் அமைக்கப்படுகின்றன. மேடை நாடகங்களுக்கு 60 நிமிடங்களுக்கு குறையாமலும் விழாக்கள் எடுப்பதுபோல, வானொலி நாடகங்களுக்கும் இந்திய அளவில் நாடக விழாக்கள் ஒலிபரப்பாகின்றன. மேடை நாடகங்களில் நடிப்பதைக் காட்டிலும் வானொலி நாடகங்களில் நடிப்பது கடினமான செயலாகும். மேடை நாடகத்தில் நடிகரின் மொத்த வடிவத்தின் மூலமும் சொல்ல வந்த செய்தியையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தி விடலாம். ஆனால் வானொலி நாடகத்தில் குரல் ஒன்றின் மூலமாகவே அனைத்தையும் வெளிப்படுத்த வேண்டும். வானொலி நாடகங்கள் தொகுக்கப்பட்டு நூலாகவும் வெளிவந்துள்ளன. இவற்றுள் சென்னை வானொலி நிலைய முன்னாள் இயக்குநர் திரு. எம்.எஸ்.கோபால் அவர்கள் தொகுத்த 'காற்றிலே மிதந்த நாடகங்கள்' என்ற நூல் குறிப்பிடத்தக்கதாகும்.

**வானொலியும் தன்னாட்சியும்**

அகில இந்திய வானொலிக்கு 'பிரசார்பாரதி' என்ற பெயரில் தன்னாட்சித் தகுதியைத் தந்துவிட்டாலும் அஃது இன்னமும் அரசின் பிடியில் உள்ளது. எனவே, அரசின் கைப்பாவையாக அஃது இயங்குகிறது என்ற குறை நிலவுகிறது. பி.பி.சி.யைப் போல் அகில இந்திய வானொலிக்கும் தன்னாட்சிக் கழக அந்தஸ்து அளிக்க வேண்டும் என்று நேரு விரும்பினார். அஃது இன்று ஓரளவு நடைமுறைக்கு வந்துள்ளது. அகில இந்திய வானொலியின் செயற்பாடுகள் பற்றி அமைக்கப்பட்ட சந்தா கமிட்டி, வர்கீஸ் கமிட்டி போன்றவை வானொலிக்குத் தன்னாட்சி உரிமை அளிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. தேசிய முன்னணிக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் தன்னாட்சி வழங்குவதற்கான 'பிரசார் பாரதி மசோதா' வைச் சட்டபூர்வமாக்குவதற்கு தொடக்கநிலை முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் தேசிய முன்னணி அரசு 1990 இறுதியில் கவிழ்க்கப்பட்ட பின் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் தன்னாட்சித் தகுதி வழங்குவதற்கான முயற்சிகள் முடங்கிவிட்டன. பின்னர் நடந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்த பாரதீய ஜனதா கூட்டணிப் வானொறிக்குத் தன்னாட்சி படிப்படியாக வழங்கப்படும் என அறிவித்தது. அந்த அறிவிப்பை செயல்முறைப்படுத்தி வருகிறது.

**வானொலி இன்று**

மக்களுக்காக ஒலிபரப்படும் வானொலி நிகழ்ச்சிகளைப் பற்றி பன்னாட்டுக் கல்வி மற்றும் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) ஓர் அறிக்கையைத் தந்துள்ளது. அவ்வறிக்கையின் குறிப்பிடத்தக்க கூறுகள் வருமாறு.

1. அவ்வந்நாட்டு ஒலிபரப்புகள் அந்நாட்டு மக்களின் பண்பாட்டையும், அரசின் கருத்துக்களையும், திட்டங்களையும், செயற்பாடுகளையும் எடுத்துக் கூறுவனவாக இருக்க வேண்டும்.

2. உலகச் செய்திகளைத் திறமையாகவும், உள்நோக்கம் இன்றியும் தெரிவிப்பதாக இருக்க வேண்டும்.

3. உலகப் பிரச்சினைகள் பற்றிய அந்நாட்டின் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்வதாக இருக்க வேண்டும்.

4. உலக அரங்கில் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு உலக அமைதிக்கு வழிவகுப்பதாக இருக்க வேண்டும்.

550 மில்லியன் மக்கள் தொகை உள்ள நாட்டிற்கு 110 மில்லியன் வானொலிப் பெட்டிகள் இருக்க வேண்டும் என்று (UNESCO) அறிக்கை கூறுகிறது. இதன்படி ஐந்து பேர் கொண்ட ஒரு

குடும்பத்திற்கு ஒரு வானொலிப் பெட்டியாவது வேண்டும். தற்போது இந்தியாவின் கிராமப் பகுதிகளில் 'நூறு பேர்கள் கொண்ட ஒரு குழுவிற்கு ஐந்து வானொலிப் பெட்டிகள் தேவை' என்ற யுனெஸ்கோவின் இலக்கு நிறைவேறிவிட்டதாகக் குறிப்பிடுகின்றனர், தொலைக்காட்சியின் வியத்தகு வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து வானொலியும் வளர்ந்துள்ளது. இதனால் வானொலி மக்களுக்கு என்றும் உற்ற தோழனாகவே இருந்து வருகிறது.

இந்தியா சுதந்திரம் பெற்றபொழுது ஆறு வானொலி நிலையங்களே இருந்தன. இரண்டு நிலையங்கள் (சென்னை, திருச்சி ) தமிழகத்தில் இருந்தன. இன்று இந்தியா முழுவதும் 98 வானொலி நிலையங்கள் செயல்படுகின்றன. இவை தவிர நான்கு உள்ளூர் ஒலிபரப்பு நிலையங்களும், 142 மத்தியலை அஞ்சல் நிலையங்களும், 40 சிற்றலை அஞ்சல் நிலையங்களும் நான்கு நுண்ணலை (FM) அஞ்சல் நிலையங்களும் இந்தியாவின் வானொலி ஒலிபரப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) இதுவரை உள்ள வானொல் நிலையங்களையும் சேர்த்து மொத்தம் 205 வானொல் நிலையங்களை அமைக்கவும், 150 மத்தியலை அஞ்சல் நிலையங்களையும் 54 சிற்றலை அஞ்சல் நிலையங்களையும் ஏற்படுத்தவும் குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அகில இந்திய வானொலி நிர்வாகம் மற்றும் விரிவாக்கப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.4 கோடியாகும். ஆனால் இஃது ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.700 கோடியாக உயர்ந்தது. இதன் மூலம் வானொலி ஒலிபரப்புக்கு அரசு தரும் முக்கியத்துவத்தையும் அதன் வளர்ச்சி வேகத்தையும் அறியலாம்.

**திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்**

நாடு விடுதலை பெறுவதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1939 மே மாதம் 16ஆம் தேதி திருச்சிராப்பள்ளியில் வானொலி நிலையம் தொடங்கப்பட்டது. இதைத் தொடங்கி வைத்துப் பேசிய அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சர் மூதறிஞர் இராஜாஜி வானொலியின் ஆற்றலை வியந்து போற்றினார்.

"வானொலியால் நாடு முழுவதும் மகிழ்ச்சியைப் பரப்பலாம். மகிழ்ச்சி என்பது உயிருக்கு அடையாளம். மகிழ்ச்சியே ஆத்மாவின் அந்தரங்க சொரூபம். உயிர் உள்ளதற்கும் உயிரற்றதற்கும் வித்தியாசம் மகிழ்ச்சியே. மகிழ்ச்சியில்லாத ஊர், உயிரற்ற ஊராகும். உணவுப் பொருள் மட்டும் உயிருக்குப் போதாது, மகிழ்ச்சியும் வேண்டும். உணவு உடலாகிறது, மகிழ்ச்சி மனமாகிறது. பரிசுத்தமான விளையாட்டுகளும், ஆடல், பாடல் நிகழ்ச்சிகளும் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்பாடு செய்ய வேண்டும். மகிழ்ச்சியைப் பரப்ப இந்த வானொலி நல்ல இயந்திரமாகும்" என்றார் இராஜாஜி.

இவ்வானொலி நிலையத்தில்தான் 1981ஆம் ஆண்டு நவம்பர் 14ந் தேதி மாநிலச் செய்திப் பிரிவு தொடங்கப்பட்டது. இங்கிருந்து நாள்தோறும் பகல் 1.45 மணிக்கு மாநிலச் செய்திகள் ஒலிபரப்பாகின்றன. தமிழகத்தின் மையத்தில் அமைந்துள்ள இவ்வானொலி நிகழ்ச்சிகள் எண்ணிக்கையில் அதிகமான நேயர்களைக் கொண்டுள்ளது. நிலையம் தொடங்கப்பட்டபோது 5கிலோவாட் திறனுள்ள ஒலிபரப்பி மட்டுமே இருந்தது. தற்போது இந்நிலையத்தின் ஒலிபரப்புத் திறன் 100 கிலோவாட்டாக உயர்ந்துள்ளது. அறுபது ஆண்டுகள் நிறைவைக் கண்ட திருச்சி வானொலி நிலையம் வைரவிழாவைக் கொண்டாடியது.

இவ்வானொலி நிலையம் அண்மையில் அறிமுகம் செய்த 'வசந்த அழைப்பு' என்ற நேர்முகத் தொலைபேசி நேயர் விருப்ப நிகழ்ச்சி மக்களிடையே மிகுந்த வரவேற்பபை; பெற்றுள்ளது. வாழ்க்கை முன்னேற்றக் குறிப்புகளைத் தருவதுடன், நேயர்கள் நம்பிக்கையுடன் தங்கள் வாழ்க்கை தொடங்குதற்குரிய ஆலோசனைகளையும் அறிவிப்பாளர்கள் அளிக்கின்றனர். செப்டம்பர் 2003இல் இவ்வானொலி நிகழ்ச்சிகள் கணினி உதவியுடன் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒலிபரப்பப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

**வானொலியும் தனியாரும்**

வானொலியில் பண்பலை ஒலிபரப்புகள் சில தனியார் மூலமும் நிகழ்த்தப் பெறுகின்றன

**சான்று**

சூரியன், மிர்ச்சி, ஏ.ஒன், 98.3 (திரையிசை). கே.எல். (இசை நிகழ்ச்சி), ஸ்ருதி (கர்நாடக இசை ), கோடை எப்.எம்.

நேயர்களுடன் நேரடித் தொலைபேசி உரையாடல் வழி இசைப்பாடல்கள் வழங்கப் பெறுகின்றன.

ஆனால் செய்தியை மட்டும் ஒலிபரப்பக் கூடாது. செய்தி ஒலிபரப்பிற்குத் தனியார் வானொலிக்கு உரிமையில்லை. ஆனால் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலி, பண்பலை ஒலிபரப்பு வானொலியாகிய ரெயின்போவில் செய்தி ஒலிபரப்பப்படுகிறது.

தனியார் வானொலிக்கென்று குறிப்பிடத்தக்க நேயர்கள் உள்ளனர்.

**பிரஸார்பாரதி**

தொலைக்காட்சி, வானொலி ஆகிய மின்னணுத் தொடர்பியல் சாதனங்களுக்குத் தன்னாட்சியுரிமை வழங்குவதென்று முடிவு செய்த தேசிய முன்னணி அரசு 1989 இல் மக்களவையில் பிரச்சார் பாரதி சட்ட வரைவைத் தாக்கல் செய்தது. பிரச்சார் பாரதி என்ற

இந்திய ஒலிபரப்புக்கழகம் ஒன்றைத் தொடங்கவும், அதனை நிருவாகிக்க ஆளுநர் வாரியம் ஒன்றை உருவாக்கவும் அந்தச் சட்டவரைவில் கூறப்பட்டிருந்தன. தலைவர், நிருவாக ஆளுநர், நிதிப்பிரிவு ஆளுநர், பணியாளர் பிரிவு ஆளுநர், பகுதி நேர ஆளுநர் அறுவர், செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் பிரதிநிதியொருவர் ஆகியோர் அந்த வாரியத்தின் அங்கத்தினர்களாவர். குடியரசுத் தலைவர் நியமனம் செய்த ஒருவரும் மற்றும் இருவர் அடங்கிய குழுவின் பரிந்துரைகளின்படி வாரியத்தின் தலைவரும் ஏனைய ஆளுநர்களும் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர்.

1.வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றி பொதுமக்கள் கூறும் புகார்களைப் பெற்று விசாரிக்க ஒலிபரப்புச்சபை (Broad-casting Council)ஒன்று ஏற்படுத்த இந்தச் சட்டவரைவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2. நாட்டின் பாதுகாப்பு நலன், சட்டம்ஒழுங்கு ஆகியன குறித்து ஒலிபரப்புக் கழகத்திற்கு அவ்வப்போது நெறிமுறைகளை வழங்கும் அதிகாரத்தை அரசுக்குத் தரும் கோரிக்கையும் இந்தச் சட்டவரைவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

3. இந்த சட்டவரைவினைக் கொண்டு வந்த தேசிய முன்னணி அரசு, அதற்கு நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் ஒப்புதலைப் பெற்றது.

**பிரச்சார் பாரதி (இந்திய ஒலிபரப்பு ஆணையம்) மசோதா.1990**

1.தலைவர்

2. செயற்குழு உறுப்பினர்

3.உறுப்பினர் நிதி

4. உறுப்பினர் பணியாளர்

5. ஆறு பகுதிநேர உறுப்பினர்கள்

அகில இந்திய வானொலியின் தலைமை இயக்குநர் (பதவி வழி) தொலைக்காட்சி (DD)யின் தலைமை இயக்குநர் (பதவி வழி) தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் நியமிக்கும் உறுப்பினர்.

வரிசை எண்.1 முதல் 5 வரையுள்ளவர்களைக் குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுப்பர். இதற்குக் குடியரசுத் துணைத்தலைவர், பத்திரிகைக் கவுன்சில் தலைவர், குடியரசுத் தலைவரின் பிரதிநிதி ஆகிய மூவர் கொண்ட குழு அவருக்குப் பரிந்துரைக்கும்.

**மசோதா**

- வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தலைச் சமஅளவில் செய்வதனை உறுதிப்படுத்துதல்.
- அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு ஒற்றுமையும் ஒருமைப்பாட்டையும் பேணிப்பாதுகாத்தல்.
- சுதந்திரமாகத் தகவல்களை நடுநிலையோடு தெரிவித்தல்.
- கல்வி, எழுத்தறிவு, விவசாயம், கிராமமுன்னேற்றம், சுற்றுச்சூழல் மேம்பாடு, பொது சுகாதாரம், குடும்பநலம், அறிவியல் தொழில்நுட்பம் ஆகியனவற்றுக்கு முன்னுரிமை அளித்தல்.
- பலதரப்பட்ட மொழி, இனம், பண்பாட்டு நிகழ்ச்சிகளை வழங்கல்.
- விளையாட்டிற்குத் தகுந்த இடமளித்தல்.
- இளைஞர், மகளிர், சிறுவர், தொழிலாளர் ஆகியோருக்கென தனித்தனியே நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்.
- தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு போன்றனவற்றிற்கு முன்னுரிமை அளித்தல்.
- சிறுபான்மையோர், மலைவாழ் மக்களுக்கென உரிய இடமளித்தல்.
- பார்வையற்றோர், முதியோர், உடல் ஊனமுற்றோருக்கான தனியே நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க மாநில மொழிகளில் நிகழ்ச்சிகளை வழங்கல்.
- துல்லியமான தொழில்நுட்ப வளர்ச்சி மூலம் அவ்வப்பொழுது சீர்படுத்துதல்.
- தேவைக்கேற்ப ஒலிஒளிபரப்பினை விரிவுபடுத்துதல்.
- நூலக உருவாக்கம், தேவைப்படும் நிகழ்ச்சிகளை பிற இடங்களிலிருந்து ஒலிஒளிபரப்பில் வாங்குதல், உரிமம் பெறல் .
- கட்டண நிர்ணயம், அந்நியச் சேவை, வெளிநாட்டுத் தொடர்பு முதலியனவற்றுக்கு மத்திய அரசின் சட்டவரையைறையைப் பின்பற்றுதல்.

இம்மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

# தொலைக்காட்சி

## தொலைக்காட்சி வரலாறும் ஒளிபரப்பு நிகழ்ச்சிகளும்

தகவல் தொடர்பு சாதனங்களிலேயே மக்களிடத்தில் இன்று அதிக செல்வாக்கைப் பெற்றுள்ள சாதனம் தொலைக்காட்சி. திரைப்படத்தின் தாக்கத்தைப் பெற்ற சாதனம் இது.திரைப்பட உத்திகளைத் தன் நிகழ்ச்சிப் படைப்புகளில் கையாள்கிறது. ஒளிபரப்புக் கோள் வழியாகத் தகவல் தொடர்பை மேற்கொள்வதன் வாயிலாக நமது இல்லங்களின் நடுக்கூடத்திற்கே உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனுக்குடன் கொண்டுவந்து தருகின்றது. தனது காட்சிச் சித்திரிப்புகளின் ( Visuals) மூலம் தொலைக்காட்சி மக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சாதனத்தின் வரலாறு, அமைப்பு, ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் ஆகியனவற்றைக் காண்போம்.

## தொலைக்காட்சி வரலாறு

'டெலிவிஷன்' என்ற சொல்லுக்கு இணையாகத் தமிழில் தொலைக்காட்சி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். 1892ஆம் ஆண்டு மாக்ஸ் பிளெஸ்னர் என்ற பத்திரிகையாளர் டெலக்ராஸ்கோப் என்ற கருவியைப் பற்றிய பொருளில் ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில் இக்கருவியின் மூலம் இசை நாடகம், முக்கிய நிகழ்ச்சிகள், நாடாளுமன்ற நடவடிக்கைகள், விளக்கங்கள், சொற்பொழிவுகள், கோயில் வழிபாடுகள், நீர்நிலைக் காட்சிகள், பந்தயங்கள், பேரணிகள், நகர்க்காட்சிகள், அரசுத்தலைவர் நாட்டுமக்களுக்கு நிகழ்த்தும் உரை போன்றனவற்றைக் காட்டலாம் என்று எழுதினார். ஆனால், அதற்கான அக்கருவி இயங்குமுறை பற்றி அவர் விளக்கி எழுதவில்லை. 1900ஆம் ஆண்டு பிரெஞ்சு நூலகர் ஒருவர் 'மின்சார அஞ்சல் முறையில் படங்களைத் தரும் கருவி ' என்ற விளக்கத்தைச் சுருக்கமாக ஒரு கருவியின் பெயரால் குறிப்பிட முற்பட்டபோது 'டெலிவிஷன்' என்ற சொல்லை முதன்முதலில் குறிப்பிட்டார். அந்த நூலகர் வைத்த பெயரே நிலைக்க ஆரம்பித்தது.

## ஜான் லகிபெயர்டு

பெயர் தோன்றி ஆனால் கருவி கண்டுபிடிக்கப்படாத இச்சூழலில் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜான் லகி பெயர்டு (Logie Baird) என்ற விஞ்ஞானி சில சோதனைகளில் ஈடுபட்டார். அதன் விளைவாக 1925ஆம் ஆண்டில் பெயர்டு தொலைக்காட்சிக் கண்டுபிடிப்பில் முதன்முதலாகக் கவனம் செலுத்தினார். தனது கடின முயற்சியின் பலனால் தொலைக்காட்சி நுட்பத்தைக் கண்டறிந்தார். 1926ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள்

27ஆம் நாள் பெயர்டு தன் கருவியை முதன்முதலாக மற்றவர்க்கு இயக்கிக் காட்டினார். அந்தப் 'புதுமை'யைப் பல விஞ்ஞானிகள் கண்டு அதிசயித்துப் போற்றினர். எனவே, தொலைக்காட்சியைக் கண்டுபிடித்த புகழுக்கும் போற்றுதலுக்கும் பெயர்டு உரியவராகிறார்.

இதைத் தொடர்ந்து 1928இல் பி.பி. சி. ( பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்) சோதனை முறையில் தொலைக்காட்சியை ஆரம்பித்தது. 1930களில் நியூயார்க்கில் ஒரு தொலைக்காட்சி நிலையம் நிறுவப்பட்டது. உலகப் போர் இதன் வளர்ச்சிக்கு அப்போது தடைக்கல்லாக அமைந்தது. ஆனாலும் 1940களிலும் 1950களிலும் பெரும்பாலான மக்களின் வாழ்க்கையின் ஓர் அங்கமாக மாற ஆரம்பித்தது.சான்றாக,1948இல் அமெரிக்காவில் மொத்தம் 23 நகரங்களில் 41 டி.வி. நிலையங்கள் இருந்தன. ஆனால் அடுத்த பத்தாண்டுகளுக்குள்ளேயே 533 டி.வி. நிலையங்களும் 55 மில்லியன் ரிசீவர்களும் பெருகியதன் வழி இதன் வளர்ச்சியைத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

1962இல் ஒளிபரப்புக் கோள் தகவல் தொடர்பு 'எர்லி பேர்ட்' (Earty Bird) என்ற முதல் ஒளிபரப்புக் கோள் நிறுவப்பட்டதிலிருந்து தொடங்கியது. 33 ஒளிபரப்புக் கோள் அமைப்புகள் உலகத்தை ஓர் 'உருண்டைகிராமம்' என்று சொல்லக்கூடிய அளவிற்குத் தகவல் தொடர்பின் வழி சுருங்கச் செய்துவிட்டது. 1970களில் மிகவும் வசதிவாய்ந்த தகவல் தொடர்பு உத்திகள் கணிப்பொறித் தொழில்நுட்பத்தினாலும் கோள்களினாலும் கண்டுபிடிக்கப்பட்ட போதும், அதனைத் தொடர்ந்து கேபிள் டெலிவிஷன், ஆடியோ விஷுவல் கேஷட், ஆடியோ விஷுவல் டேப் ரெகார்டர், நேரடி ஒளிபரப்பு அமைப்புகள் முதலியன கண்டுபிடிக்கப்பட்டபோதும் இத்தகவல்தொடர்பு சாதனம் தன் வியத்தகு விந்தைகளால் மக்களை அதிகம் தன்பால் ஈர்க்க ஆரம்பித்து விட்டது.

**இந்தியத் தொலைக்காட்சியின் வளர்ச்சி**

இந்தியாவில் முதன்முதலில் யுனெஸ்கோவின் நிதிஉதவியுடன் 1959 செப்.14ஆம் நாள் டெல்லி டெலிவிஷன் சென்டர் வானில் ஒளிபரப்பைச் செலுத்தியது. டெல்லியைச் சுற்றி 40 கி.மீ. தூரத்திற்குப் பரப்பும் ஆற்றலைக் கொண்ட ட்ரான்ஸ் மீட்டர்களைக் கொண்டதாய் அவ்வமைப்பு இயங்கியது. அதைத் தொடர்ந்து ஒவ்வொன்றும் 20 நிமிடம் ஒளிபரப்பும் நிகழ்ச்சிகள் வாரம் இருமுறை ஒளிபரப்பப்பட்டன. ஆகஸ்ட் 1965லிருந்து பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் அறிவிக்கும் நிகழ்ச்சிகளும் ஆரம்பித்தன. இவற்றுள் சமுதாயக் கல்வி நிகழ்ச்சிகள் தரப்பட்டன. சமுதாயக் கல்வி நிகழ்ச்சியை அளிப்பதற்காகவே முதன் முதலில் டெல்லியில் ஒளிபரப்பு அமைப்பு தொடங்கப்பட்டது. 1970இல் நிகழ்ச்சியின் நேரம் தினமும் 3 மணி நேரமாகக் கூட்டப்பட்டுத் தகவல்கள் மற்றும்

பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் தரப்பட்டன . 'க்ரிஷி தர்ஷன்' என்ற விவசாயிகளுக்கான நிகழ்ச்சியும் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. இதற்கிடையில் ட்ரான்ஸ்மீட்டரின் ஆற்றல் 60 கி.மீ.க்கு உயர்த்தப்பட்டு சுற்றுவட்டார விவசாயிகள் நிகழ்ச்சிகளைக் கவனிக்க ஏதுவாயிற்று.

1970களில் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளின் எண்ணிக்கை 22,000 ஆயிற்று. 70களின் மத்தியில் இந்தியாவிலேயே தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்க ஆரம்பித்து விற்பனைக்கு வந்தன. அக்காலகட்டத்தில் தொலைக்காட்சி உற்பத்தியாளர்களின் கோரிக்கை, நகர்ப்புற உயர்தர மக்களின் விருப்பம், விளம்பர நிறுவனங்களின் செல்வாக்கு முதலியவற்றிற்கிணங்க இந்திராகாந்தி அரசு ஒளிபரப்புச் சேவையை நாட்டில் விரிவுபடுத்த விழைந்தனர். அடுத்த சில ஆண்டுகளில் பாம்பே, ஸ்ரீநகர், புனே, கல்கத்தா, சென்னை, லக்னோ தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1976 ஜனவரி 1இல் வர்த்தக விளம்பரங்கள் தொலைக்காட்சியில் தரப்பட்டன. இதே ஆண்டில் ஆல்இந்தியா ரேடியோவிலிருந்து தொலைக்காட்சி பிரிந்தது. தகவல் ஒலிபரப்புத்துறையின் தனி அங்கமாகத் தொலைக்காட்சி, தூர்தர்ஷன் என்ற பெயரில் செயல்பட ஆரம்பித்தது. 1977இல் முதன்முதலில் வானொலிக்குச் சமமாகத் தேர்தலின் போது தொலைக்காட்சி பயன்படுத்தப்பட்டது.

இதற்கிடையில் எஸ்.ஐ.டி.இ. ( SITE) எனப்படும் ( Satellite Instructional Television Experiment) என்ற செயற்கைக்கோள்வழி அறிவு புகட்டும் தொலைக்காட்சிப் பரிசோதனைத் திட்டம் 1975ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1976ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வரை ஆறு மாநிலங்களில் உள்ள கிராமமக்களுக்கு கல்வி ஒளிபரப்பாக சோதனை முயற்சியாக நடத்தப்பட்டது. இம்முயற்சி வெற்றியாக அமைந்தது.

**தொலைக்காட்சி அமைப்பு**

தொலைக்காட்சி செயல்பட வேண்டுமானால் 1. ஒளி, ஒலி ஆகியனவற்றைப் பதிவு செய்ய காமிரா,மைக், 2. ஒலி,ஒளி முதலியவற்றை வாங்கிச் சீராக நடத்த ஒரு கட்டுப்பாட்டு அமைப்பு, 3. அஞ்சல் வசதி செய்ய ஏற்படுத்தும் ஒரு திட்டம், 4. நிகழ்ச்சியை வாங்கும் கருவிப்பெட்டி முதலியன அவசியம்.

தொலைக்காட்சி ஒரு மின்னணு (electronic) இயக்கம். எங்கோ ஓர் இடத்தில் நடக்கும் காட்சியை வீட்டுப் பெட்டி ஒன்றில் தெரிய வைப்பது அந்த மின்னணு ஆற்றலே ஆகும். மின்னணு ஆற்றல் என்பது எலெக்ட்ரான், புரோட்டான் ஆகிய ஆற்றல் மிக்க துகள்களை வெளியிடும் சக்தியோடு தொடர்புடையது. ஒலி அல்லது ஒளி மின்சார சமிக்ஞைகளாக

மாற்றப்பட்டு பெருக்கியால் ( ஆம்ப்ளி஁பயர்) பெரிதுபடுத்தப்பட்டு பின்னர் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டியில் மீண்டும் ஒலி / ஒளி சமிக்ஞைகளாக மாற்றப்படுகிறது. ஒளிச் சமிக்ஞையை காமிரா மின்சார சமிக்ஞைகளாக மாற்றுகிறது. அதை மீண்டும் ஒளிச் சமிக்ஞையாக வீட்டில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டி மாற்றுகிறது.ஓர் அறையில் நடக்கும் காட்சியை ஒரே கட்டிடத்தில் உள்ள பல அறைகளுக்கும் கம்பி மூலம் எடுத்துச் செல்லும் முறை கம்பி வழித் தொலைக்காட்சி ( Closed Circuit Television) ஆகும். இவ்வாறு கம்பி மூலமல்லாமல் காற்றுச்சூழல் வழி பரப்பப்பட்டுத் தொலைக்காட்சியில் காட்டும் அமைப்பு தொலைக்காட்சி ஒளிபரப்பில் உள்ளது. தொலைக்காட்சி நிலையத்தில் உள்ள உயர்ந்த ஒளிபரப்பில் கோபுரம் ஒளியை மின்காந்த அலைகளைக் காற்றிலிருந்து பெற்று ஒளியாக மாற்றித் தருகிறது. காற்றுச்சூழல் மூலம் நடத்தப்படும் ஒளி அஞ்சல் தொலைக்காட்சி எனலாம்.

தொலைக்காட்சி செய்தி மற்றும் ஒலி, ஒளிபரப்புத்துறையின்படி தனக்கென சில நோக்கங்களை வரையறை செய்து கொண்டுள்ளது. அவை பின்வருமாறு.

1. சமுதாய மாற்றத்திற்கான கிரியாஊக்கியாகச் செயல்படுதல்.
2. தேசிய ஒற்றுமையை அதிகரித்தல்.
3. மக்கள் மத்தியில் அறிவியல் உணர்வை வளர்த்தல்.
4. குடும்பக்கட்டுப்பாடு தொடர்பான செய்திகளைப் பரப்புதல்.
5. தேவையான விவசாயச் செய்திகளையும் விவசாய அறிவையும் வழங்கி மிகப்பெரிய அளவில் விவசாய உற்பத்தியைத் தூண்டுதல்.
6. சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்தலும் வளப்படுத்தலும் செய்தல்.
7. பெண்கள், குழந்தைகள், ஒடுக்கப்பட்டோர் நலம்சார்ந்த சமுதாய நலச் செய்திகளின் அவசியத்தை வெளிக்கொணர்தல்.
8. விளையாட்டுத்துறையில் ஆர்வம் அதிகரிக்கச் செய்தல்.
9. கலை மற்றும் பண்பாட்டு வளம் மீதான பற்றினை மேலும் தூண்டுதல்.

**தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் பணியின் பின்னணியில் எண்ணற்ற மக்களின் பணிகள் அடங்கியுள்ளன. அவர்களின் கடின உழைப்பில்லாமல் நிகழ்ச்சிகளைத்

தயாரிக்க இயலாது. இந்த மக்களின் திறமைகளை நம்பியே தொலைக்காட்சி இயங்க வேண்டியுள்ளது. மேலும் மின்னணுத் தொழில்நுட்ப சாதனங்களை இயக்குபவர்களையும் சார்ந்து அமைகிறது. இச்சேவையில் இயக்குநர், தயாரிப்பாளர், துணைத்தயாரிப்பாளர், வீடியோ எடிட்டர், ஒலிப்பொறியாளர், இரண்டு காமிராமேன், ஒப்பனைக் கலைஞர்கள், அரங்க அமைப்பாளர், தொழில்நுட்ப வல்லுநர்கள் போன்ற அனைவருமே தமக்கென ஓர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் அனைவரின் ஒட்டுமொத்த உழைப்பே ஒரு நிகழ்ச்சி அமைப்பின் தொழில்நுட்பத் திறனுக்குச் சான்று பகரும்.

சாதனங்கள், அறை அளவு இவற்றைப் பொறுத்துத் தொலைக்காட்சி அரங்குகள் வேறுபடுகின்றன. வேற்று ஒலி உட்புகாத அறையைக் கொண்ட தொலைக்காட்சி ஸ்டுடியோ (படப்பிடிப்பு அரங்கு) மிகவும் சக்தி வாய்ந்த ஒளிவிளக்குகள் மற்றும் நுண் ஒலி வாங்கிகள், குறைந்தது இரண்டு காமிராக்கள் ஆகியனவற்றைக் கொண்டிருக்கும். வீட்டில் ஒருவர் தொலைக்காட்சிப் பெட்டியில் பார்ப்பனவற்றை நிலையத்தில் உள்ள காமிரா அப்பொருளை / நிகழ்ச்சியைப் பார்க்கும் முறையைப் பொறுத்தே வீட்டுப் பெட்டிக்குத் திரைப்படம் வந்து சேரும். காமிராவிற்கு ஏற்ற ஒளி வசதி, காட்சி ஜோடனை, ஒலி வசதி, உரையாடல்கள் இயக்கம் முதலியன அமையும். தொலைக்காட்சியின் உயிர்நாடி காமிரா.

தற்காலத்தில் ஒளிபரப்புப் பணிக்கெனத் தரம்வாய்ந்த காட்சிப்பதிவுக் காமிராக்கள் பல்வேறு வகைகளில் குறைந்த எடையில் எளிதாகத் தூக்கிச் செல்லும் வகையில் மிகச்சிறிய வடிவத்தில் கிடைக்கின்றன. Electronic News Gathering என்பதன் சுருக்கமாகிய E.NG. எனப்படும் இத்தகைய காமிரா அமைப்பில் மினிகாம்ஸ் எனப்படும் காமிராவும் மிக விரைவாகச் செய்திகளை அனுப்பும் ஒளிநாடாவும் இணைந்து அமைகின்றன. பதிப்பித்தலும் கூட மின்னணுக்கருவிகளின் வழியால் கணிப்பொறியின் கட்டுப்பாட்டுடன் செய்யும் வழிமுறைகள் வந்துவிட்டன. காட்சிப் பதிவுகளைப் பதிப்பித்தல், (Editing) வெவ்வேறு தயாரிப்புச் செய்திகளையும் வரைபடங்களையும் செருகுதல் முதலியன கூட, விரைவாக மின்னணு வழி நடைபெறுகின்றன. நிழற்படக்கருவி ( காமிரா) பதிவுக் கருவி ( Recorder) இரண்டையும் எளிதில் தூக்கிச் செல்லும் வகையில் மிகச் சிறிய வடிவமாக்கி விட்டமை அரங்குகளில் மட்டுமின்றிச் சேய்மையில் உள்ள இடங்களைப் பற்றியும் அதிகப் படங்களைத் தயாரிக்க வழிவகுக்கிறது. வீடியோ காமிராக்கள் ஒளிப்பதிவினை மின்னணுக் குறியீடாக மாற்றுகிறது. விடியோ காமிராவில் உள்ள இந்த உரு ஒரு தகட்டில் செலுத்தப்பட்டு ( தகடு மிகவும் ஒளிஉணர்வு மிக்க செல்களால் ஆனது) மின்னணு

ஒளிக்கதிரினால் ஸ்கேன் செய்யப்பட்டு காற்றுச்சூழல் வழியாக வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு அனுப்பப்படுகிறது.

கட்டுப்பாட்டு அறையில் உள்ள வீடியோ ( காட்சி) மற்றும் ஆடியோ ( கேட்டல்) படப்பிடிப்பு சாதனங்களுடன் அரங்கில் உள்ள வீடியோ காமிராக்கள், மைக்ரோ போன்கள் இணைக்கப்பட்டுள்ளன. படப்பிடிப்பு அரங்கில் எடுக்கப்பட்ட காட்சிகள் இங்கு வருகின்றன. காட்சிக்கலப்பானின் உதவியுடனும் மானிடரின் உதவியுடனும் எடுக்கப்பட்ட காட்சிகள் இங்கு தெரிந்தெடுக்கப்படுகின்றன. மின்னணுக்கருவிகளின் துணையுடன் பல்வேறு சிறப்பு உத்திகள் இங்கு காட்சிக்குச் சேர்க்கப்படுகின்றன.

தொலைக்காட்சித் திரையில் காட்டுவதற்காக எழுத்துக்களையும், எண்களையும், மின்னணுமுறையில் உற்பத்தி செய்யும் எழுத்துருவாக்கக் கருவிகள் வந்துவிட்டன. எழுத்துக்களின் வெளியீடு காட்சிக் கலப்பு மேசையில் தோன்றி கட்டுப்படுத்தப்பட்டு நிகழ்ச்சியுடன் சேர்க்கப்படும். ஒலி அளவைக் கட்டுப்பாட்டில் வைக்கும் ஒலிபரப்புக் கட்டுப்பாட்டுத் திட்டமும் வசதியில் உள்ளன. இதனால் ஒலி அளவும் நிகழ்ச்சியில் கட்டுப்படுத்தப்படுகிறது. இத்தகைய கட்டுப்பாடு வசதிகளில் காட்சியையும் ஒலியையும் இணைக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வெளிப்புறப் படிப்பிடிப்பில், பேட்டியில் காட்சியும் ஒலியும் ஒரே நேரத்தில் பதிவாகலாம். ஆனால் நாடகம் போன்ற நிகழ்ச்சிகளில் வெளிப்புறப் படப்பிடிப்பாயினும் அரங்கப் படப்பிடிப்பாயினும் கதாபாத்திரங்கள் காமிராவைப் பார்த்துப் பேசுவர். ஒலிவாங்கியைக் கருத்தில் கொள்ளமாட்டார்கள். அத்தகைய காட்சியைத் தனியாகவும் ஒலியைத் தனியாகவும் பதிவு செய்து ஒலியைக் காட்சியுடன் சேர்ப்பதற்கு இத்தகைய வசதிகள் பயன்படுகின்றன. ஒலிக் கட்டுப்பாட்டு அறையில் எதிரொலி வசதி, பதிவு செய்யப்பட்ட ஒலியை அரங்கிற்குள் போட்டுக்காட்டும் வசதி ஆகியவை உள்ளன.

வெளிப்புற நிகழ்ச்சிகளைப் படம் பிடிப்பதற்கான வசதிகள் அடங்கிய ஒரு வண்டி ஒரு குட்டித் தொலைக்காட்சி நிலையமாகச் செயல்படுகிறது. இவ்வண்டியில் மூன்று காமிராக்கள் சேர்த்து நிலையத்திற்கு அனுப்பும் அளவிற்கு இந்த வண்டியினுள் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டுப் பிரிவு, ஒலிக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஆகிய பிரிவுகள் நிலையத்தில் உள்ளது போலவே உண்டு. இத்தகைய வசதிகளின் பெருக்கத்தினாலேயே இன்று எங்கோ நடக்கும் விளையாட்டு நிகழ்ச்சிகள், மிகப்பெரிய தலைவர்களின் மரணத்தின்போது நடைபெறும் இறுதி ஊர்வலங்கள், பெரிய பெரிய மாநாட்டு நிகழ்ச்சிகள் போன்றனவற்றை நம் வீட்டு

நடுக்கூடத்தில் அமர்ந்து கொண்டு அவை நடைபெறும் நேரத்திலேயே அப்படியே பார்க்க முடிகிறது.

கேபிள் டெலிவிஷன் என்னும் அமைப்பும் இன்று மக்களுக்குக் கிடைத்திருக்கும் அறிவியல் புதுமையே. Community Antenna Television என்பதன் சுருக்கமே CATV கேபிள் டெலிவிஷனைக் குறிக்கப் பயன்படுகிறது. கேபிள் தொலைக்காட்சி என்பது ஒரு கம்பிவழித் தொலைக்காட்சி அமைப்பு. இதன் மூலம் நிகழ்ச்சிகள் ஒரு மைய இடத்திலிருந்து பெறப்படுகின்றன. நிகழ்ச்சிகளைப் பெறுவதற்காக மாதம் இவ்வளவு என்பதற்கான ஆரம்ப சந்தாத் தொகையையும் கம்பிவழி இணைப்பினை நிறுவுவதற்கான கட்டணத்தையும் கட்டி சந்தாதாரர்களுக்குக் கம்பிவழி இணைப்பு தரப்பட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. ஒரு மைய இடத்திலிருந்து நிகழ்ச்சிகளைப் பெற உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டுள்ள 'டிஷ் ஆன்டெனா' உதவுகிறது. இந்த ஆன்டெனா சமிக்ஞைகளைத் தடைசெய்து அவற்றை கம்பிவழியாகச் சந்தாதாரர்களுக்கு அனுப்புகிறது. மாதாமாதம் பணம் கட்டி அதற்கேற்பத் தொலைக்காட்சியில் பல்வேறு நிகழ்ச்சிகளைக் குறிப்பாக விரும்பிய திரைப்படங்களைப் பார்க்கும் வசதி கேபிள் தொலைக்காட்சி மூலம் ஏற்பட்டுள்ளது.

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

தொலைக்காட்சியில் எலக்ட்ரானிக் முறையில் நிகழ்ச்சிகள் வீட்டுக்குள்ளேயே வந்து சேர, உற்றார் உறவினர்களுடன் அளவளாவிக் கொண்டே நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வசதி ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சி பொதுமக்களுக்கெனப் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தம் நோக்கத்திற்கேற்ற வகையில் அமைக்கிறது. அவையாவன.

1. கல்வி ஒளிபரப்பு
2. விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நல நிகழ்ச்சிகள்
3. நலச் செய்திகள்
4. குடும்பக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சிகள்
5. செய்திகள்
6. விளக்கப்படங்கள் (Documentaries)
7. பேட்டிகள்
8. வினாடி வினாக்கள்
9. குழந்தைகள் நிகழ்ச்சிகள்

10. இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகள்

11. விளம்பரங்கள்

12. நாடகத் தொடர்கள்

போன்றனவாக வகைப்படுத்த இயலும்.

**கல்வி நிகழ்ச்சிகள்**

கல்வி நிகழ்ச்சியைப் பொறுத்தவரை தொலைக்காட்சியின் தனித்த நலனே பல்வேறு கல்வியாளர்களால் வழங்கப்படும் கல்வி நிகழ்ச்சிகள் பலரைச் சென்றடைவதுதான். ஆனால் அதற்காகும் செலவு அதிகம் எனலாம். இயற்பியல், மருத்துவம், பூகோளம், நாடகம், வரலாறு போன்ற துறை தொடர்பான பாடங்கள் பயிற்சிமுறையில் தொலைக்காட்சியில் செய்து காட்டப்படும்போது எளிதில் விளங்கிக்கொள்ள ஏதுவாகிறது.

1961இல் தொலைக்காட்சிப் பரிசோதனை ஆரம்ப கட்டத்தில் இருந்தபோதே, சில தெரிந்தெடுத்த பாடங்களுக்கு அவற்றின் அடிப்படையில் ( குறிப்பாக அறிவியல் பாடங்களுக்கு) அறிவியல் போதிப்பதில் உள்ள தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாயிற்று. பள்ளிகளில் பரிசோதனைக் கூடங்கள் இல்லாமை, போதிய அறிவியல் ஆசிரியர்கள் இல்லாமை போன்ற நிலவரங்களைத் தொலைக்காட்சிக் காட்சிகள் மூலம் ஈடுகட்ட இவ்வகையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு ஆசிரியர், மாணவர் இருதரப்பிலும் நல்ல ஆர்வம் இருந்தது. 'எஜுகேஷனல் டெலிவிஷன் என்று இத்திட்டம் அழைக்கப்பட்டது. யுனெஸ்கோ வல்லுநர் டாக்டர் பால் நியூரத் அறிவியலைப் போதிப்பதில் உதவியாக இத்திட்டத்தின் அடிப்படையிலான நிகழ்ச்சி அமைந்து உள்ளது என்று வெகுவாகப் பாராட்டினார். தொடர்ந்து இருபது ஆண்டுகளுக்கு இந்நிகழ்ச்சி இதே அமைப்பு முறையில் அமைந்து ஒளிபரப்பப்பட்டது. இப்போதும் டெல்லியில் அதிகமான பள்ளிகளில் இத்தகைய நிகழ்ச்சிகள் மாணவர்களால் கவனிக்கப்படுகின்றன. செகண்டரி பள்ளி மாணவர்களுக்கு வாரத்திற்கு 2 மணி நேரம் அறிவியல் வகுப்பு தொலைக்காட்சி வழி தரப்படுகிறது. மிகுதியும் பாடத்திட்டத்தை அப்படியே அடியொற்றி இத்தொலைக்காட்சி வகுப்பு நடத்தப்படுவதால் மாணவர்கள் பொது ஆர்வம் தொடர்பான கூறுகள் இந்நிகழ்ச்சிகளில் குறைந்துள்ளன. ஆங்கில மொழி தொடர்பான பாடங்கள் நன்கு திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. பல்வேறு வகை ஒலி அழுத்தங்கள் உச்சரிப்புகளுடன் அவை அமைகின்றன.

வர்கீஸ் கமிட்டி உயர்கல்வியைத் தொலைக்காட்சியில் தரும் நிலையைச் சிபாரிசு செய்தது. 1984 ஆகஸ்ட் மாதம் யு.ஜி.சி. ( University Grants Commission) உயர்கல்வி நிகழ்ச்சி தொடங்க ஆரம்பித்தது. நாடு முழுவதுமான வகுப்பறை ( Country wide Classroom) என்றழைக்கப்படும் இவ்வகுப்பு நடத்தப்படுகிறது. பல்வேறு கல்லூரிகளில் உள்ள மாணவர்கள் இதனால் பயனடைகின்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள நான்கு ( EMRC) (எஜுகேஷனல் மீடியா ரிசர்ச் சென்டர்) நிறுவனங்களிலும், ஏழு ( AVRC) (ஆடியோ, விஷுவல் ரிசர்ச் சென்டர்) நிறுவனங்களிலும் தேவைப்பட்டால் வெளிநாட்டு மையங்களிலும் இந்நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. நேரடியாகப் பாடத்திட்டத்தோடு ஒட்டி அப்படியே தயாரிக்கப்படுவதை விட இந்நிகழ்ச்சிகள் ஏற்கனவே இருக்கும் கல்வி அனுபவத்தை விரிவுபடுத்துவதாகவும் மேம்படுத்துவதாகவும் கல்வி நோக்கத்திற்குக் கூடுதல் சிறப்பளிப்பதாகவும் அமையின் நன்றாக இருக்கும் எனலாம்.

டெல்லியின் தரை நிலையத்திலிருந்தும், அஹமதாபாத் தரைநிலையத்திலிருந்தும் கல்வி, விவசாயம், நலக்கல்வி, குடும்ப நலத்திட்டம் தொடர்பான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. நிகழ்ச்சிகள் AIRஇன் நிகழ்ச்சித் தயாரிப்பு மையங்களில் தயாரிக்கப்பட்டன. நிகழ்ச்சியைத் தயாரித்தவர்கள் பல்கலைக்கழக, கல்லூரி ஆசிரியர்களும் சமுதாயப் பணி மற்றும் சமுதாயவியலாளர்களும் ஆவர். இத்திட்டத்தின் மூலம்தான் தொலைக்காட்சி கல்விப்பணிக்கும் உரியது என்ற தகுதியைப் பெற்றது. பள்ளிக் கல்வி நிகழ்ச்சிகளின் நோக்கம் பின்வருமாறு அமைந்தது.

1. மாணவர்கள் பள்ளிக்கு வருவதை மேலும் ஆர்வமுடையதாக்கல்.

2. மாணவப் பருவத்திலேயே நலமுடன் வாழும் பழக்கத்தையும் சமுதாயம் மற்றும் வாழ்வின் புதுமையாக்கம் பற்றிய உணர்வினையும் ஊட்டல், மாணவர்களின் அடிப்படைத் திறமைகளை வெளிக்கொணர்தல், கலை உணர்வினை அவர்களிடையே அதிகரிக்கச் செய்தல்.

**விவசாய நிகழ்ச்சிகள்**

மத்திய விவசாய அமைச்சகம் பின்வரும் நோக்கங்களை வரையறை செய்தது.

1. புன்செய் நிலங்களில் பயிர்செய்வது பற்றிய செய்முறை விளக்கம் அளித்தல், அறுவடை மற்றும் அது தொடர்பான நிர்வாகம் பற்றி நடைமுறை வழக்கத்திற்குப் பரிந்துரைத்தல், கோழி மற்றும் ஆடுமாடு வளர்ப்புப் பற்றி அறிவித்தல்.

2. விவசாயத்திற்குத் தேவையான விதைகள், உரங்கள், சாதனங்கள் மற்றும் சந்தைப் பணிகள், கடனுதவிகள் முதலியன வழங்கும் மாவட்ட மையங்களைப் பற்றிய செய்திகளைத் தருதல்.

3. பூச்சிக்கட்டுப்பாட்டு முறை பற்றிய அறிவையும் கட்டுப்பாட்டு முறைக்குரிய செய்முறைப் பயிற்சியையும் அளித்தல்.

4. பருவச் சூழல், சீதோஷ்ணநிலை பற்றிய செய்திகளை அளித்தல்.

5. அந்தந்த வட்டாரத்தில் முன்னேற்றம் பெற்றுள்ள விவசாயிகள் தொடர்பான செய்திகளையும் விவசாயிகளுக்கு அறிவித்தல்.

இந்நோக்கங்களின்படி SITE விவசாயிகளை நவீன விவசாய உத்திகளின் வழி முன்னேற்ற ஆர்வம் கொண்டது. தினமும் 30 நிமிடத்திற்கு எல்லா மொழியிலும் விவசாயிகளுக்கு விவசாய நிகழ்ச்சியையும் கூடவே 30 நிமிடத்திற்கு ஹிந்தியில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் வழங்கியது. இந்நிகழ்ச்சிகள் நல்ல பலனைத் தந்தன எனலாம்.

**நலச் செய்திகள்**

பிரசவகால மருத்துவ உதவிகள் பற்றிய செய்திகள் வழங்கப்பட்டன. ஆனாலும் அந்தந்த கிராமங்களில் அவ்வசதிகளுக்காக அடிப்படை குறைவாக இருந்தபடியால் நிகழ்ச்சிகள் பயன் குறைவாகவே அமைந்தன. பொதுவாகவே அனைத்து நிகழ்ச்சிகளும் சிறப்புற அமைந்திருந்தாலும் இந்தியாவின் தேசிய உருவாக்கத்தில் இவற்றின் நேரடிப் பயனை மிகுதியாக அளவிட்டுச் சொல்ல முடியாது என்பதாகவே ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

**தொலைக்காட்சிச் செய்திகள்**

செய்தி அறிக்கைகள், குழுவிவாதங்கள் போன்றவை செய்தி நிகழ்ச்சிகள். இவை ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் அமைகின்றன. செய்தி நிகழ்ச்சியில் காட்டப்படும் காட்சிகள் ஒளிப்படங்கள், பிலிம் துண்டுகள், வரைபடங்கள், உலகப்படங்கள், அட்டவணைகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. அயல்நாட்டுச் செய்திகளுக்குரிய படங்களுக்குத் தன் அயல்நாட்டு நிருபர்களையும் அயல் நாட்டில் உள்ள 'Visnews', 'Eites' ஆகிய நிறுவனங்களை நாடுகிறது.'இந்த வாரம் உலகம்' நிகழ்ச்சி மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறுகிறது. ஏறக்குறைய ஒரு 30 நிமிடத்தில் இந்நிகழ்ச்சியில் செய்தியை அளிப்பவர் உலகின் பல்வேறு நிலைகள் பற்றித் தெரிவிக்கிறார்.

செய்தி அறையில் வந்து குவியும் செய்திகளைப் பிரித்துத் தொகுத்து அமைத்துத் தருவது செய்தி ஆசிரியர்களின் பணி. நிகழ்ச்சித் தயாரிப்பாளர் அச்செய்திப் படிவங்களுக்குரிய படங்களைத் தருகிறார். திரையில் தோன்றி, செய்தி அளிப்போர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஏற்பாடு செய்துள்ளபடி நிகழ்ச்சியை வழங்குகிறார். செய்தி வாசிப்பவர் வாசிப்பதுபோல் தோன்றாமல் இருக்கச் செய்ய 'டெலிபிராம்ப்டர்' என்ற கருவியில் தன்னெதிரே ஓடும் செய்தியை அவர் வாசிக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

செய்திகளை உள்ளது உள்ளபடியே கூறல் நன்றாம். செய்தியில் இருட்டடிப்பு (மறைப்பு) இருக்கக்கூடாது. நடுநிலையுடன் செய்திகளைத் தரவேண்டும். செய்தியுடன் தொடர்புடைய படங்களையும் காட்டல் நன்றாம்.

அரசியல், சமயம், சமுதாயம், பொழுதுபோக்கு, அறிவியல், விளையாட்டு, வானிலை, அதிசயம் ஆனால் உண்மையான புதுமைச் செய்திகள், உலகச் செய்திகள், வட்டாரச் செய்திகள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகத் தொலைக்காட்சிச் செய்திகள் தயாரிக்கப்படுகின்றன.

தனியார் தொலைக்காட்சிகள் கட்சி அரசியல் சார்புடையனவாக விளங்குவதால் அவ்வக் கட்சி சார்பான செய்திகள் இடம்பெறுகின்றன ( சன், ஜெயா, ராஜ் டி.வி.). சில தனியார் தொலைக்காட்சிகள் செய்திக்கென்றே ஓர் அலைவரிசையை வைத்துள்ளது ( சன் நியூஸ், ஜெயா நியூஸ், கலைஞர் நியூஸ்).

பொதிகை ( தூர்தர்ஷன்) தொலைக்காட்சி வழங்கும் செய்திகள் நடுநிலையுடன் விளங்குகின்றன.

தொலைக்காட்சிச் செய்திகள் நேயர்கட்கு அறிவூட்டுகின்றன, அறிவுறுத்துகின்றன.

**விளக்கப்படங்கள் (Documentaries)**

அதிக நேயர்களுக்கு விருப்பமுள்ள ஒன்றனைப் பற்றித் தயாரிக்கப்படும் நிகழ்ச்சி. தொலைக்காட்சியில் நாடகத்திற்கு அடுத்தபடியாக மிகச் சிறந்த நிகழ்ச்சியாகக் கருதப்படும் நிகழ்ச்சி விளக்கப்படம் . விளக்கப்படம் கடந்தகால நிகழ்ச்சிகள், நடப்பு நிகழ்ச்சிகள், எதிர்கால எதிர்பார்ப்புகள் முதலியவை பற்றியனவாய் அமைகின்றன. இஃது உண்மைக்கதை பற்றிய உண்மைத் தயாரிப்பு. ஒன்றனோடு அல்லது ஒரு நிகழ்ச்சியோடு தொடர்புடைய பாத்திரங்களை எடுத்துக்காட்டி நேயர்களை ஈர்க்கும் வகையில் சம்பவம் போல எடுத்துச் சொல்லும் கலை அம்சம் இதற்கு உண்டு. காட்சியும், விளக்கமும் கலந்த கலவையாக இஃது அமையும். நமக்குத் தெரிவனவற்றைப் பற்றிய ஆய்வாக விளக்கப்படங்கள்

அமைகின்றன. ஒன்றில் ஈடுபட்ட மக்களின் குணங்கள், உணர்வுகள், பாதிக்கப்படுவோர் கருத்துக்கள் முதலியன காட்டப்படும்.

செய்திக்கதையில் செய்தி முக்கியம் என்றால் விளக்கப்படத்தில் விளக்கம் முக்கியம். வெளிப்புறப் படப்பிடிப்பாக களத்திலேயே சென்று தயாரிப்பதன் மூலம் சம்பவங்களையும் மக்களையும் நேரடியாகக் காட்டி விளக்கப்படத்திற்கு உயிரூட்ட முடிகிறது. வெறும் உரைபோல் இல்லாமல் விளக்கப்படங்களை உயிரோட்டமாக அமைத்தல் வேண்டும்.

மக்கள் தொகைப் பெருக்கம், வறுமை, பஞ்சம், பண்பாடு, கலைஞர்களின் கலைப்படைப்பு தொடர்பான செய்திகள், விலங்குகளின் வாழ்க்கை என்று எதைப்பற்றியாயினும் இவை அமையும். விளக்கப்படங்களின் நோக்கம் ஒன்றினை அல்லது ஒரு சம்பவத்தைப் பற்றி மக்களுக்கு அறிவு விளக்கமூட்டி, நேயர்கள் அவற்றில் ஈடுபடச் செய்தல் அல்லது வெறுமனே பொழுதுபோக்கச் செய்தல் ஆகும்.

**பேட்டிகள் (நேர்காணல்)**

பேட்டி நிகழ்ச்சிகள் பல்வகைப்படும். ஒருவரது ஆளுமையை வெளிப்படுத்தும் பேட்டி, ஆளை அல்லாது செய்தியை மட்டுமே தருதலை நோக்கமாகக் கொள்ளும் செய்திப்பேட்டி, குழுப்பேட்டி போன்ற பல்வகைப் பேட்டிகள் இடம்பெறுகின்றன . திரைப்பட நடிகர்களைப் பேட்டி காணல் அவர்களது ஆளுமையை வெளிக்கொணரும் நோக்கில் அமைக்கப்படுகின்றன . 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில் தரப்படும் பேட்டிகள் நபரை அல்லாது அவர் தரும் விவசாய செய்திகள் அளிப்பதை நோக்கமாகக் கொள்வன. முதல் அமைச்சரைச் சூழ்ந்து கொண்டு பத்திரிகையாளர்கள் அவரை மாறிமாறிக் கேள்வி கேட்டு எடுக்கும் பேட்டி குழுப்பேட்டிக்குச் சான்று.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் சென்னைத் தொலைக்காட்சியில் ( பொதிகை) மாலை நேரம் 61/2 மணிக்கும், குறிப்பிட்ட நாள்களில் தரப்படுகின்றன. சன் தொலைக்காட்சியின் 'கண்மணிப் பூங்கா', ராஜ் டி.வி.யின் 'ராகம் சங்கீதம்', ஜெயா டி.வி.யின் 'செல்லமே செல்லம்' ஆகிய சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளும் பார்த்து அறியத்தக்கன. குழந்தைகளின் திறமைகள் இவற்றில் வெளிக்கொணரப் படுகின்றன. அதேபோல வினாடிவினா நிகழ்ச்சிகள் பள்ளி மாணவர்களின் பொதுஅறிவை வெளிப்படுத்தும் வகையில் அமைகின்றன. இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள், தேசிய நிகழ்ச்சிகளாகவும் தனியாகவும் தரப்படுகின்றன. மெல்லிசை, தேசபக்திப் பாடல், நாட்டுப்புறப்பாடல், குரலிசை

என்று பல்வகைப்பட்ட இசை நிகழ்ச்சிகள் தரப்படுகின்றன. இசை, நடனம் குறித்த தேசிய நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் கணிசமான இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன.

தொலைக்காட்சி விளம்பரங்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை, 30 முதல் 60 வினாடிகள் வரை ஒரு விளம்பரம் நேயரின் கவனத்தைத் தக்க வைப்பதாய் அமைகிறது. மிகக் குறுகிய நேரத்தில் ஏதாவதொரு மையக்கருத்தைப் பாடல் மூலம் விளக்கிக் காட்டும் 'ஜிங்கிள்' என்ற நிகழ்ச்சியும் ஒருவகை விளம்பரமே. சுதந்திரதினப் பொன்விழாவைக் குறிக்கும் வகையில் தேசியக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதைப் பாடல் பின்னணியில் காட்டியது இதற்குத் தகுந்த சான்று. வணிக விளம்பரங்கள், பொதுச்சேவை விளம்பரங்கள் உயர்வு நோக்கிலான விளம்பரங்கள் என்று பலவகையாக இவை அமைகின்றன. 1. நேரடி விற்பனை விளம்பர முறை பொருளைப் பற்றி தெளிவான, எளிமையான கூற்றைக் கொண்டதாகவும், நேயர்களுக்கு எளிதில் புரிவதாகவும் அமையும். 2. பாராட்டு விளம்பர முறை - சராசரி நேயர்களை விட சமுதாய அளவில் பொருளாதார நிலையில் உயர்ந்த ஒருவர் அப்பொருளைப் பற்றிச் சான்று கூறுவதாக அமையும். விளக்கமுறையில் ஒரு பிரச்சனையை அப்பொருள் தீர்ப்பதாகச் செய்து காட்டி விளக்கப்படும் விளம்பரங்களும் உண்டு. நகைச்சுவையாக விளம்பரம் அமைப்பதும் விளம்பரங்களின் பொதுவான கூறு.

**நாடகம்**

தொலைக்காட்சியின் நாடகத் தொடர்கள் குறிப்பிடத்தக்க இடம் பெற்றவை. மக்களால் பெரிதும் விரும்பிப் பார்க்கப்படுபவை. இப்போது ஹிந்தியில் தயாரிக்கப்படும் பல தொடர்கள் தமிழாக்கம் பெற்று ஒளிபரப்பப்படுகின்றன. இந்நாடகங்கள் இல்லத்தலைவியரை ஈர்க்கும் வண்ணம் குடும்பத் தலைவியை மையமாகக் கொண்டவை, சாந்தி, சுயமரியாதை, பெண், நிம்மதி, சொர்க்கம், ஆலயம் போன்ற தொடர்கள் சான்று. ஓம் நமச்சிவாயா,மீராபாய், கருணாமூர்த்தி போன்ற பக்தித் தொடர்கள், 'யுக்' போன்ற தேசபக்திக் கதைகள் போன்ற பல்வேறு கதைகள் பொதிகைத் தொலைக்காட்சியில் நாடகங்களாக ஒளிபரப்பப்பட்டு மக்கள் கவனத்தைப் பெற்றுள்ளன.

இதேபோல் சன், ஜெயா, விஜய், ராஜ், கலைஞர், மெகா, ஜீ டி.வி. தொலைக்காட்சி நாடகத் தொடர்களும் நேயர்களின் ஆதரவைப் பெற்றவை.

மொத்தத்தில் மக்களைத் தன்பால் பல்வேறு நிகழ்ச்சிகள் வாயிலாக ஈர்த்து வைத்துச் சமுதாயப்பணி ஆற்றும் ஒரு நிறுவனமாகத் தொலைக்காட்சிச் சாதனம் திகழ்கிறது.

**தொலைக்காட்சி விளம்பரங்கள்**

விளம்பரங்களே தொலைக்காட்சியை வாழவைக்கும் காமதேனுவாக விளங்குகின்றன. விவசாய நிகழ்ச்சி,மாதர் நிகழ்ச்சி, குழந்தைகளுக்கான நிகழ்ச்சி, தொழிலாளர் நிகழ்ச்சி, கிராம நிகழ்ச்சிகள்,தொடர் நாடகங்கள் போன்ற எந்த நிகழ்ச்சியானாலும் விளம்பரங்கள் இடம்பெறுகின்றன. திரைப்படப் பாடல்கள் ஒளிபரப்பாகும் ஒளியும் ஒலியும், தொடர் நாடகங்கள், திரைப்படம் ஆகியவை இடம்பெறும் நேரங்களில் மக்கள் வெறுப்பைத் தேடிக்கொள்ளும் அளவிற்கு விளம்பரங்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

தொலைக்காட்சியில் விளம்பரங்கள் 1976ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியன்று அறிமுகமாயின. விளம்பரங்கள் வாயிலாகக் கடந்த ஆண்டுகளில் தொலைக்காட்சி அடைந்த வருவாயை ஒப்பிட்டுப் பார்த்தால், தொலைக்காட்சி வெற்றிகரமான வாழ்வு பெற்ற வருவதன் காரணம் புலனாகும்.

ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்புவதற்கு ஆகும் செலவை ஏற்று அவ்வொளிபரப்பில் தம் நிறுவனத்தை விளம்பரப்படுத்தும் 'செலவு ஏற்பு நிறுவனங்கள்' (Sponsored) தற்போது பெருமளவில் ஒளிபரப்பாகின்றன. இம்முறை 1983-84 ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது.

தொலைக்காட்சி விளம்பரக் கட்டணங்களை நிர்ணயிப்பதில் நேரம் முக்கிய இடம் வகிக்கிறது. பெரும்பாலோர் பார்க்கக்கூடிய நேரத்தை 'Prime time' என்பார்கள். விளம்பர நேரங்களை Super A,B மற்றும் C என்று பிரித்துள்ளனர். ஒளியும் ஒலியும், திரைப்படம் போன்றவை ஒளிபரப்பாகும் நேரத்தை SuperA நேரம் என்கிறார்கள். விளம்பரக் கட்டணங்களை வரையறுப்பதிலும் நகரத்திற்கு நகரம் மாறுபாடு உள்ளது.

தொலைக்காட்சி விளம்பரத்தைத் தயாரிப்போரும், ஒளிபரப்புவோரும் சில குறிப்புகளை மனதில் கொள்கின்றனர். இவ்விளம்பரங்கள் சொற்செட்டோடு அமைதல் வேண்டும். ஓரிரு காட்சிகள் மட்டுமே கொண்டிருத்தல் வேண்டும். கண்களுக்கு எரிச்சலூட்டும் வகையில் பற்பல காட்சிகளை உடனுக்குடன் மாற்றிக் காட்டலாகாது. நவீன உத்திகளைக் கையாள வேண்டும். மொத்தத்தில் புதுமை வேண்டும். பொருளைப் பரிந்துரை செய்பவர்கள் மக்களுக்கு நன்கு அறிமுகமானவராயிருப்பது ( பிரபலம்) நல்லது. மகிழ்ச்சியான சூழலில் புன்னகை தவழும் முகத்துடன் அவர்கள் காட்சியளிக்க வேண்டும்.

**தொலைக்காட்சியும் பிற தகவல் தொடர்பு சாதனங்களும்**

பிற தகவல் தொடர்பு சாதனங்கள் மேம்பாடடைய தொலைக்காட்சி மறைமுகமாக உதவுகிறது. ஓய்வு நாட்களில் பெரும்பாலான மக்களின் பொழுதுபோக்காகத் திரைப்படம் இருந்தது. இன்று வாரத்திற்குக் குறைந்தது மூன்று திரைப்படங்கள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின்றன. தொடர்ந்து நாள் முழுவதும் திரைப்படங்களை ஒளிபரப்பும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் உள்ளன. இதனால் சிரமப்பட்டுத் திரையரங்கிற்குச் சென்று அதிகப் பொருட்செலவில் அமர்ந்து பார்க்கும் தன்மை மறைந்து - வீட்டிலேயே, தாம் நினைத்தபடி அமர்ந்தும் கிடந்தும் தொலைக்காட்சித் திரைப்படத்தைப் பார்த்துக் களிக்கின்றனர். இத்தன்மை மாறி, மக்கள் வழக்கம்போல் திரைப்படத்தை நாடுவதற்குச் சில புதிய உத்திகள் (சினிமாஸ்கோப், 70எம்.எம்.) ஏராளமான பொருட்செலவில் சண்டைக் காட்சிகள், மயிர்கூச்செறியும் இறுதிக் காட்சிகள், dts (Special Sound effect) ஒளிப்பதிவு, கேமிரா கோணங்கள் புகுத்தப்படுகின்றன. இவ்வாறு சினிமாவில் ரசிப்பதற்கு நிறைய உள்ளன என்ற எண்ணத்தை உருவாக்குவதற்கு தொலைக்காட்சி மறைமுகமாக உதவுகிறது.

வானொலியின் இடத்தினை இன்று தொலைக்காட்சி ஆக்கிரமித்துள்ளது என்றே சொல்லலாம். தொலைக்காட்சியைக் காட்டிலும் வானொலியினால் ( வேலை செய்து கொண்டே நிகழ்ச்சியைக் கேட்பது போன்ற ) பல பயன்கள் உண்டு என்றாலும் கண்ணையும் கருத்தையும் கவரும் தன்மை தொலைக்காட்சிக்கு உள்ளது. இதனால் வானொலியால் தொலைக்காட்சியுடன் போட்டியிட இயலவில்லை. இந்தியாவில் மட்டுமின்றி, அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும்கூட தொலைக்காட்சியின் வரவுக்குப்பின் வானொலி இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது. இங்கிலாந்திலுள்ள BBC, Local Radio, Independent Local Radio ஆகிய நிறுவனங்கள் தங்களை நிலைநிறுத்துவதற்குப் போட்டி போட்டுக் கொண்டுள்ளன.

நாளிதழ்களுக்கும் போட்டியாகத் தொலைக்காட்சி விளங்குகிறது. நாளிதழில் நாளை வரும் செய்தியை, தொலைக்காட்சியில் இன்று இரவே 7.00,7.30,8.00 மணி செய்தியில் நேரில் பார்த்துவிடலாம். ஆனால் நாளிதழ்கள் தருகின்ற அரசியல் விமர்சனங்களைத் தொலைக்காட்சியால் தர இயலாது. மேலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய விவரத்தையும், ஒளிபரப்பாகவிருக்கும் திரைப்படங்கள் பற்றிய செய்தியையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் விமர்சனத்தையும் நாளிதழ்கள் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. அரசியல் செய்திகளைச் சூடாகத் தரும் அரசியல் விமர்சனக் கட்டுரைகளும், உணர்ச்சிக்;கு விருந்தளிக்கும் செய்திகளும், அரசியல் விவகாரக் கணிப்புகளும், ஊழல்

பற்றிய செய்திகளும் நாளிதழில் பேரிடம் பெற்று வருகின்றன. இதனால் நாளிதழ்களின் விற்பனையைத் தொலைக்காட்சியால் ஒரேடியாகக் குறைக்க முடியவில்லை. ஆனால் மேலை நாடுகளில் நிலைமை வேறுவிதமாக உள்ளது. அங்கு தொலைக்காட்சியின் ஆதிக்கத்தால் பல நாளிதழ்களும், வார இதழ்களும், பருவ இதழ்களும் நின்று போயின (Saturday Evening Post 1969லும், Look இதழ் 1971லும், Life இதழ் 1972லும் நின்று போயின). நேரடியாக வாசகரைச் சென்று அடைவது போன்ற ( direct mail) பல்வேறு விற்பனை உத்திகளைக் கையாண்ட ( Reader's Digest) இதழ் மட்டும் தொலைக்காட்சியின் போட்டிக்கு ஈடுகொடுத்து வருகிறது.

**வீடியோவின் வரவு**

தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் வீடியோ படங்கள் பெருமளவில் வெளிவரத் துவங்கியுள்ளமையும் கம்பி வழித் தொலைக்காட்சி ( Cable TV) மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதற்குத் தலையாய காரணம் எனலாம். இந்தியாவில் சுமார் 2 மில்லியன் வீடுகளில் வீடியோ பதிவு சாதனங்கள் ( VCRS) உள்ளன என்று கணக்கிட்டுள்ளனர். வீடியோ படச் சாதனங்கள் (VCPS) இவற்றைக் காட்டிலும் கூடுதலாகவே உள்ளன. சுமாரான வருவாய் உள்ள குடும்பத்தினரும் வீடியோ படச்சாதனம் வைத்திருப்பதை முக்கியமானதாகக் கருதுகின்றனர். பொழுதுபோக்கிற்கும் அடுத்த நிலையில் இன்றியமையாத தகவல்களையும் ஒளிப்பேழைகளில் ( Vedio Cassettes) வாயிலாகத் தெரிந்துகொள்ள முடியும் என்று மக்கள் கருதுகின்றனர்.

இந்தியாவில் தற்போது பிரபலமாகி வரும் 'ஒளிப்பேழை இதழ்கள்' (Vedio magazine) இத்தகு தகவல்களை உடனடியாகவும், சுவையாகவும், ஆய்வு உணர்வுடனும் தருகின்றன. இவற்றுள் தமிழில் வெளியாகும் 'பூமாலையும்', ஆங்கிலத்தில் வெளியாகும் 'Newstrack'கும் குறிப்பிடத்தகுந்தன. பூமாலையை, குங்குமம் இதழ் நிறுவனத்தினர் வெளியிடுகின்றனர். இந்தியாவின் முதல் 'Newstrack' இதழ் என்ற பெயரைப் பெற்ற 'Newstrack' 1988, செப்டம்பர் 7ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது.தேர்தல் களமானாலும், போர்க்களமானாலும், மக்களை வெகுவாகப் பாதிக்கின்ற அன்றாட சமுதாயப் பிரச்சினைகளானாலும் இத்தகு ஒளிப்பேழை இதழ்கள் அவற்றை 'உயிர்ப்புடன்' சித்தரிக்கின்றன. 1984, 1989 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களின் போதும், ராமஜென்ம பூமி பிரச்சினை, மண்டல் குழு அறிக்கை மீதான எதிர்ப்பு போன்ற உணர்ச்சிமயமான போராட்டங்களின் போதும் 1990ஆம் ஆண்டு துவக்கத்தில் ( சனவரி, பிப்ரவரி ) நடைபெற்ற வளைகுடாப் போரின் போதும், 'ஒளிப்பேழை இதழ்கள்' பரபரப்பாக விற்பனையாயின என்பது குறிப்பிடத்தக்கது.

தனிநபர் அல்லது குடும்பப் பொழுதுபோக்குச் சாதனமாக இருக்கும் வீடியோ படச் சாதனங்கள் பொதுத்தேர்தலின்போது மக்களிடையே தேர்தல் பிரச்சாரம் செய்வதற்குப் பெருமளவில் பயன்பட்டது. தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது, அப்போதைய முதல்வராயிருந்த எம்.ஜி.ஆர். புரூக்ளின் ( அமெரிக்கா) மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உடல் நலம் தேறிவரும் காட்சிகளை ஒளிப்பேழையில் பதிவு செய்து அதனை அ.தி.மு.க.வினர் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தியதும் குறிப்பிடத் தக்கது.

**தகவல் ஒளிப்படங்கள் (Videotext-Teletext)**

தொலைக்காட்சி 'முட்டாள் சாதனம்' (idiot Box) என்று இடித்துரைக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்று தொலைக்காட்சி இல்லாவிட்டால் நமது அன்றாட வாழ்வில் உடனடியாகத் தேவைப்படுகின்ற ஒரு சில தகவல்களைக் கூடத் தெரிந்துகொள்ள முடியாது போய்விடும் என்ற நிலை உருவாகியுள்ளது. தொலைக்காட்சி நிலையம் தயாரித்துள்ள இரயில்களின் புறப்பாடு, வருகை பற்றிய விவரங்கள், விமானங்கள் வந்து செல்லும் நேரங்கள், சந்தை நிலவரம், இரயில்களின் முன்பதிவு வசதிகள் போன்ற தகவல்களை வீட்டிலிருந்தபடியே அறிந்த கொள்ளலாம். தொலைக்காட்சி நிலையத்தில் இத்தகு தகவல்கள் அன்றாடம் சரிபார்க்கப்பட்டு கணினிக்குச் செலுத்தப்படுகின்றன. இது போன்ற வசதிகளே தகவல் ஒளிப்படங்கள் (Teletext) எனப்படுகின்றன .

இத்தகு சேவைக்கென்று, தொலைபேசி விவரக் குறிப்புநூல் ( Telephone Directory) போன்று தகவல் அறிவதற்குரிய குறிப்பு நூல் ஒன்று தரப்பட்டிருக்கும். இதனைப் பயன்படுத்தி அத்தகவலுக்குரிய பொத்தான்களை இயக்கினால், அவை தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் ஒளிர்கின்றன. தொலைபேசிக் கட்டணம் வசூலிப்பது போன்று இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தக்கவாறு கட்டணங்கள் பெறப்படுகின்றன.

இதனை 1974இல் இங்கிலாந்தைச் சேர்ந்த சாம் ஃ பெடிடா ( Sam Fedida) என்ற பொறியாளர் உருவாக்கி இயக்கிக் காட்டினார். இதன் பயன்பாட்டை உணர்ந்த பிரிட்டிஷ் ஒளிபரப்பு நிறுவனம், பல்வேறு சோதனைகளுக்குப் பின் 1979இல் 'பிரீஸ்டல்' (Prestel) என்ற பெயரில் இவ்வசதியைப் பொதுமக்கள் சேவைக்காக அறிமுகப்படுத்தியது. பின்னர் 'சீஃபாக்ஸ்' (Ceefax) 'ஆரோக்கிள்' (Oracle) என்ற பெயர்களில் இத்தகவல் சேவைகள் தொடர்ந்தன. அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் இச்சேவை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இந்தியாவில் தகவல் ஒளிப்படங்கள் சேவை 19.01.1985இல் தொடங்கப்பெற்றது. இது இங்கு Intext என்று அழைக்கப்படுகிறது.

**தொலைக்காட்சி வளர்ச்சிப் பாதை**

| | | | |
|---|---|---|---|
| 1976 | ஜனவரி 1 | - | தொலைக்காட்சியில் வர்த்தக விளம்பரங்கள் அறிமுகமாயின. வானொலியும், தொலைக்காட்சியும் பிரிந்து இருதனித்தனித் துறைகளாகச் செயல்பட்டன. |
| 1977 | ஆகஸ்டு 17 | - | வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் தன்னாட்சி உரிமை தருவதற்கான வாய்ப்புகளை ஆராயுமாறு வி.ஜி.வர்கீஸ் தலைமையிலான 11 உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப் பட்டது. |
| 1978 | பிப்ரவரி 24 | - | வர்கீஸ் கமிட்டி தனது அறிக்கையை அரசுக்குத் தந்தது. |
| 1981 | நவம்பர் 17 | - | சோதனை முறையிலான வண்ண ஒளிபரப்புத் தொடங்கியது. |
| 1982 | ஆகஸ்டு 15 | - | முழு நேர வண்ண ஒளிபரப்பு நடைமுறைக்கு வந்தது. INSAT ஐயுயின் வாயிலாக நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாயின |
| 1983 | மார்ச் | - | தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கு டாக்டர் பி.சி. ஜோசி தலைமையிலான குழு ஏற்படுத்தப்பட்டது. |
| 1983 | அச்டோபர் | - | INSAT IAயின் மூலம் நிகழ்ச்சிகள் கூடுதல் நேரத்திற்கு ஒளிபரப்பாயின. |
| 1984 | ஏப்ரல் 2 | - | ஜோசி கமிட்டி தன்னுடைய அறிக்கையை அரசுக்கு வழங்கியது. |
| 1984 | ஆகஸ்டு 15 | - | பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் ஆதரவுடன் தினமும் முற்பகல் 1 மணி நேரமும், பிற்பகல் 1 மணி நேரமும் கல்வி ஒளிபரப்புத் தொடங்கப் பெற்றது. |
| 1984 | ஆகஸ்டு 27 | - | திருத்தப்பட்ட இந்தியத் திரைப்படச் சட்டத்தின்படி (Indian Cinematograph Amendment Act, 1984) வீடியோ திருட்டு தடை செய்யப்பட்டது. |
| 1988 | ஜீலை 6 | - | சென்னைத் தொலைக்காட்சியின் 2வது அலைவரிசை அறிமுகமானது. |
| 1988 | செப்டம்பர் 7 | - | இந்தியாவின் முதல் வீடியோ இதழை 'Newstrack' என்ற பெயரில் India Today நிறுவனம் வெளியிட்டது. |
| 1989 | பிப்ரவரி 6 | - | தூர்தர்ஷனின் மத்திய நிகழ்ச்சித் தயாரிப்பு மையம் |

| | | | |
|---|---|---|---|
| | | | டெல்லியிலுள்ள ஆசிய விளையாட்டு அரங்கில் நிறுவப்பெற்றது. |
| 1990 | செப்டம்பர் 6 | - | தொலைக்காட்சிக்கும் வானொலிக்கும் தன்னாட்சி அளிக்க வகை செய்யும் ப்ரஸார் பாரதி மசோதா மக்களவையில் நிறைவேறியது. |

**தனியார் தொலைக்காட்சிகளின் பரவல்**

இன்று பெரிய பத்திரிகைக் குழுமங்கள், கட்சிகள் தமக்கென ஒரு தொலைக்காட்சியைத் தொடங்கிவிட்டன. செய்தித் தொலைக்காட்சிகள் என்ற அமைப்பில் பத்துக்கும் மேற்பட்டன, விளையாட்டிற்குப் பத்துக்கும் மேற்பட்டன, இசைக்குப் பத்துக்கும் மேற்பட்டன எனப் பெருகின. ஒரு தொலைக்காட்சியே ஐந்துக்கும் மேற்பட்ட அலைவரிசைகளைக் ( Channels) கொண்டதாகத் தோன்றியுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட தொலைக்காட்சி (Channels) இந்தியாவில் காணக்கிடக்கின்றது.

ஒலி - ஒளிபரப்புக் கொள்கையில் செய்யப்பட்ட பல சீர்திருத்தங்கள், தனி ஆணையம், அந்நிய முதலீடு முதலிய இப்பெருக்கத்திற்குக் காரணம். இன்று போட்டி மிகுந்த தொழிலாக இது மாறிவிட்டது. இதனால்தான் தொலைக்காட்சிகளில் பல சார்புத்தன்மை காணப்படுகின்றது. தமிழில் மட்டும் அரசுத் தொலைக்காட்சி ( தூர்தர்ஷன்) நீங்கலாக இருபது தொலைக்காட்சி ( Channels) அலைவரிசைகள் உள்ளன. இவை தவிர நகர்ப்புறங்களில் உள்ளூர் அலைவரிசைகள் என்ற அமைப்பில் பல செயல்படுகின்றன.

மக்களின் செய்திப்பசியும், அறிவுப்பசியும், பொழுதுபோக்கு நாட்டமும் இவை பெருகக் காரணமாகின்றன.

**பன்னாட்டுத் தடங்கள்**

அண்மையில் அரசு சில கட்டுப்பாடுகளுடன் தனியார் தொலைக்காட்சி தொடங்க அனுமதித்ததில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன் மூலம் பன்னாட்டு முதலீடுகள் பெருகும் எனக் கருதியது. இதன் விளைவாக இந்தியாவில் அந்நிய தொலைக்காட்சிகளின் அணிவகுப்பு தோன்றியது. பெருநகரங்களை மையமாகக் கொண்டு இவை செயல்பட முனைகின்றன. இந்திய நிறுவனங்களின் கூட்டோடு ஆங்கிலம், அரபு போன்ற மொழிகளில் 24 மணிநேரமும் நிகழ்ச்சிகளை வழங்கும் தொலைக்காட்சிகளைக் காண முடிகிறது. இவற்றில் பல அந்நியத் தொலைக்காட்சிகளாகும்.

மக்களின் அன்றாடப் பொழுதுபோக்கு சாதனங்களில் தொலைக்காட்சி மிக அதிக இடம் பிடித்துள்ளது. தொலைக்காட்சியா? தொல்லைக்காட்சியா? என்று விவாதப் பொருள் ஒரு பக்கம், Idiot Box முட்டாளாக்கும் பெட்டி - என மறுபக்கம் தொலைக்காட்சியை -

நிகழ்ச்சிகளாகக் கூறினாலும், தொலைக்காட்சி பார்ப்போர் அறியலாம். நேயர்கள் அதிகம் என்பதை

தொலைக்காட்சியாக - சின்னத்திரை - வீட்டிற்குள் அகில உலகத்தையும் கொணர்ந்து நம் கண்ணிற்கும் காதிற்கும் விருந்து தருகிறது. தூர்தர்ஷன் பொதிகை ( சென்னைத் தொலைக்காட்சி) மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. பிற தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளின் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க கேபிள் வசதி பெற வேண்டியுள்ளது. இதற்காக மாத வாடகையாக ரூ.150 முதல் 200 வரை ஒவ்வொரு நேயரும் அந்தந்தக் கேபிள் உரிமையாளரிடம் செலுத்த வேண்டியுள்ளது.

தனியார் தொலைக்காட்சிகள், சன், விஜய், ஜெயா, ராஜ். மக்கள், கோல்டன், தமிழன், கலைஞர் டி.வி., புதிய தலைமுறை, மெகா, வசந்த், சங்கரா, திருப்பதி தேவஸ்தானம் என்ற பெயரில் நேயர்களுக்குத் தினம் தினம் பல்வித நிகழ்ச்சிகளைத் தந்து அறிவிக்கின்றன, அறிவுறுத்துகின்றன. களிப்பூட்டுகின்றன.

சிறுவர்கள் மனதில் கார்ட்டூன் டிவியில் வரும் டாமஞ்செரி, சோட்டா பீம் உள்ளிட்ட தொடர்கள் ஆதிக்கம் கொள்கின்றன.

சன் தொலைக்காட்சியில் அரட்டை அரங்கம், அசத்தப் போவது யாரு, நீங்கள் கேட்ட பாடல், உங்கள் சாய்ஸ். கொண்டாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளும், ஆனந்தம், மலர்கள், மேகலா, சித்தி, மெட்டிஒலி, கோலங்கள், அரசி, சொர்க்கம், நிம்மதி, நாதஸ்வரம் போன்ற தொடர் நாடகங்களும் அதிக ஈடுபாட்டை ஈர்த்து வருகின்றன.

ஜெயா தொலைக்காட்சியில் வரும் ஜாக்பாட், ராகமாலிகா, மக்கள் அரங்கம், வீட்டுக்கு வீடு லூட்டி உள்ளிட்டவை நேயர்களைத் தம்வசம் ஈர்த்துக் கட்டிப் போடுகின்றன. காலையில் சுப்ரபாதம், ஆன்மீகத் தலங்கள் பற்றிய அறிமுகம் என இறைஉணர்வையும் திரு. ஞானசம்பந்தனின் பட்டிமன்ற நிகழ்ச்சிகளையும் பார்ப்போர் மிக அதிகம் என்றே கூறலாம்.

விஜய் டி.வி.யில் வரும் சூப்பர் சிங்கர் (பாடல் நிகழ்ச்சி) சுவாமி ஐயப்பன், கிராண்ட் மாஸ்டர், விவாத அரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளும் நேயர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

மக்கள் தொலைக்காட்சியில் தினம் ஒரு தமிழ்ச் சொல், தமிழ்ப்பண், அன்றாட வாழ்வில் இலக்கணம்,செவ்வி ( அறிஞர் சந்திப்பு) போன்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்போர் ஏராளம்.

இதுபோலவே ராஜ் தொலைக்காட்சி, கலைஞர் டி.வி., சன் மியூசிக், சன் நியூஸ் உள்ளிட்ட தொலைக்காட்சிகள் பல்விதக் கூறுகளுடன் நிகழ்ச்சிகளைத் தந்து வருகின்றன.

கே. டிவியில் தினம் திரைப்படங்கள் இடம்பெறுகின்றன. பிற தொலைக்காட்சிகளும் திரைப்படத்தை ஒளிபரப்புகின்றன.

பொங்கல், தீபாவளி, தமிழ்ப்புத்தாண்டு உள்ளிட்ட முக்கியப் பண்டிகை நாட்களில் நேர்காணல், புதுத்திரைப்பட அறிமுகம், பட்டிமன்றம் எனப் புதுப்புது நிகழ்ச்சிகளைப் படைத்தளித்து நேயர்களைத் தம் நிகழ்ச்சிகளைக் காணப் போட்டி போடுகின்றன. ஒரு சில நிகழ்ச்சிகள் குடும்பத்தினர் அனைவரும் அமர்ந்திருந்து பார்க்கும்படி உள்ளது. சில திரைப்படக் காட்சிகள் காட்டும்போது வயது வித்தியாசமின்றி பார்க்க வைக்கும்போது கூச வைக்கின்றன. பெண்களுக்குரிய தனிப்பட்ட பொருள்களை விரிவாக விளம்பரப்படுத்தும்போது ( விஸ்பர், கேர்பிரீ) சிறுவர்கள் என்ன இது? எனக் கேட்கும்படி உள்ளது எனப் பலரும் தொலைக்காட்சிக்கு எழுதினாலும் தொலைக்காட்சி கேட்கும்படி இல்லை? என்ன செய்ய.

எனவே, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு தணிக்கை முறைகள் கூட எப்போதாவது அவசியமோ என நேயர்களைச் சிந்திக்க வைக்கிறது.

பொதிகைத் தொலைக்காட்சியில் வரும் எதிரும் புதிரும் (விடுகதைகள்), அருள்உரை, நாட்டுப்புறப் பாடல்கள், ஆடல்கள், தொடர்கள், ஆன்மீக அரங்கம், கர்நாடக இசையைக் கேட்பதற்கு /பார்ப்பதற்கு என்றே தனிப்பட்ட நேயர்கள் பட்டாளம் உள்ளது. இப்பொதிகைத் தொலைக்காட்சியும் பண்டிகை நாட்களில் பல்வித நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது.

தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீட்டைப் பார்ப்பது சிறிது கடினம்தான்.

1. குணம் நாடி குற்றமும் நாடி நேயர்கள் நல்ல நிகழ்ச்சிகளை / தொடர்களைப் பார்க்க வேண்டும்.

2. எப்பொழுதும் மிக அருகே அமர்ந்திருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து தம் கண் ஒளி கெட்டுப் போகாமல் சிறிது தொலைவில் இருந்து பார்த்து வாழ்வில் எல்லா நலமும், வளமும் பெற முயற்சிக்க வேண்டும்.

**வினாக்கள்**

1. வானொலியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | மின்னனுஊடகங்கள் குறித்துஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | பண்பலைநாடகங்கள் என்றால் என்ன? | K4 | CO3 | PO5 |
| 3 | ஒளிபரப்புநிலையங்கள் குறித்துவிளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | தொலைக்காட்சிஎழுத்துக் கலைஎன்றால் என்ன? | K5 | CO5 | PO2 |
| 5 | தொலைக்காட்சிவிளம்பரங்கள் எங்ஙனம் பயன்படுகின்றன? | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கணினியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துஎழுதுக. | K1 | CO4 | PO4 |
| 2 | தொலைக்காட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துஎழுதுக. | K4 | CO2 | PO6 |
| 3 | வானொலியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துஎழுதுக. | K3 | CO1 | PO5 |
| 4 | தொலைக்காட்சியும் பிறதகவல் தொடர்புசாதனங்களும் கட்டுரைவரைக. | K2 | CO5 | PO6 |
| 5 | தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நகழ்ச்சிகளின் வகைகளைஆய்க. | K4 | CO3 | PO3 |

# அலகு - 4

# திரை ஊடகங்கள்

## திரைப்படம் அறிமுகம்

நாட்டில் ஒருமைப்பாடு உருவாகவும், சிந்தனையை வளர்க்கவும் செய்தித் தொடர்பு மிகவும் அவசியம். மக்களாட்சி முறை செவ்வனே செயல்பட்டுவரும் நமது நாட்டில் செய்தி -மக்கள் தொடர்புத்துறையின் பணி மிகவும் இன்றியமையாததாகும்.

அரசின் ஆக்கப்பணிகளைப் பொதுமக்கள் செவ்வனே புரிந்து கொள்ளவும், அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதில் அவர்களின் ஒத்துழைப்பை நல்கச் செய்யவும் மக்கள் தொடர்பு சாதனங்கள், சீரிய வகையில் திறம்படச் செயலாற்றி வருகின்றன.

நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூக, பண்பாட்டு நிலைகளை மேம்படுத்தவும், பசி, வறுமை, அறியாமை இவற்றை ஒழிக்கவும், பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறவும், கருத்துக்களை உருவாக்கவும் திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் இவற்றின் பணி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தகைய மக்கள் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தும்போது இப்பரந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு வட்டாரத்தில் நிலவும் வேறுபட்ட தன்மைகளையும், பலதரப்பட்ட இன, மொழி, மாறுபாடுகளையும் கருத்தில் கொண்டு செயல்படுவது அவசியமாகும்.

"உலகம் சுருங்கி வருகிறது. உலக நாடுகள் நெருங்கி வருகின்றன. பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூட தெரிந்து கொள்ளாதது பழைய காலப் பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்து கொள்ள விழைகிறோம்' என்றார் பேரறிஞர் அண்ணா. அவர் கூற்றைச் செயலாக்குவதற்குத் தகவல் தொடர்புகள் உதவுகின்றன.

திரைப்படம் ஒரு சிறந்த சக்தி வாய்ந்த ஊடகம் திரைப்படத்தின் ஊடுருவல் தமிழ்நாட்டிலும்,மற்ற தென் மாநிலங்களிலும் அதிகம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை திரைப்படத் தொழிலில் பங்கேற்ற நால்வர் முதலமைச்சராகப் பணியாற்றியிருப்பது நினைவுகூறத்தக்கது. கருத்துக் கணிப்புக்கும், பயனுள்ள முறையில் செயலாக்கம் பெறுவதற்கும் திரைப்படங்கள் பெரிதும் உதவுகின்றன. மக்களிடையே சமுதாய அரசியல் விழிப்புணர்ச்சிக்குத் திரைப்படத்தின் பங்கு மிகவும் அவசியமெனலாம்.

கருத்துக்களைக் காணுதல், கேட்டல் என்ற பணியின் வாயிலாக, திரைப்படங்கள் சக்தி வாய்ந்த தொடர்பு சாதனமாகத் திகழ்கின்றன.

திரைப்படத்தினால் வரும் விளைவுகள் பல ஆண்டுகளுக்கு இருக்கும். நமது நாட்டில் சிலரின் அற்புதமான திறமைகள் திரைப்படத் தொழில் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**திரைப்படங்கள்**

நமது நாட்டில் திரைப்படம் மக்கள் தொடர்புச் சாதனங்களில் சக்தி வாய்ந்த சாதனமாக அங்கம் வகிக்கின்றது. உலக நாடுகளில் அதிக திரைப்படங்களைத் ( சுமார் 559 படங்கள்) தயாரிப்பதில் இந்தியா முன்னணியில் நிற்கிறது. அடுத்து ஜப்பானும் ( 337), அதற்கடுத்தாற்போல் பிரான்ஸ் ( 222), இத்தாலி ( 165), அமெரிக்கா ( 150) போன்ற நாடுகள் அதிகத் திரைப்படங்களைத் தயாரிக்கின்றன. 1972ஆம் ஆண்டு இந்தியா தனது திரைப்படத் தொழிலின் வைரவிழாவினைச் சிறப்பாகக் கொண்டாடியது. இதுவரை கிட்டத்தட்ட 18,000 திரைப்படங்களை வெளியிட்ட பெருமை நமது நரட்டிற்கு உண்டு.

திரைப்படங்கள் தந்தை என்று அழைக்கப்படும் தாதாசாகிப் பால்கே என்பவர் 1913ஆம் ஆண்டு புராணக்கதை ஒன்றினை பாரதமொழி ஒன்றில் " இராஜா அரிச்சந்திரா" என்ற பெயரில் வெளியிட்டார். இதன் வாயிலாக திரைப்படம் தயாரித்த முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெறுகிறார். தாதாசாகிப் எல்லாவற்றையும் தானே மேற்கொண்டார். கதை, வசனம், படவிற்பனை என்று எல்லாத் துறைகளிலும் முன்னின்று செயல்பட்டதால் அவரை, "திரைப்படத் தந்தை" என்று கூறுவது சாலவும் பொருந்தும். இவரது பெயரில் இப்பொழுது சிறந்த திரைப்பட வல்லுநர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கப்படுகிறது.

ஆர்.ஜி.தார்னி ( R.G.Torney). தாதாசாகிப் பால்கே,ஜே. எப்.மதன் ஆகியோர் " திரைப்பட உலகின் முன்னோடிகள்" என்று கௌரவிக்கப் படுகிறார்கள். முதல் திரையரங்கு கல்கத்தாவில் 1907இல் ஜே.எப்.மதன் என்பவரால் கட்டப்பட்டது.

திரைப்படக் கலைஞர்களின் அரும் முயற்சியினால் திரைப்பட வரலாற்றில் இந்தியா நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.சாந்தாராம், பீமல்ராய், சத்யஜித்ராய், பாலச்சந்தர் போன்ற திரைப்படக் கலைஞர்களின் பங்கை மறக்க முடியாது. நியூ தியேட்டர்ஸ், பாம்பே டாக்கீஸ், பிரபாத் போன்ற திரை அமைப்புகளின் பங்கு மிகவும் போற்றுதற்குரியது.

**மத்திய அரசு செய்தி திரைப்படப் பிரிவு (Films Division)**

அரசு நிறுவனமான செய்தி படப்பிரிவு தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஒரு பிரிவாக 1948ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தனியார் தயாரிக்கும் படங்கள் வியாபார நோக்குடையவை. வருமானம் தான் அதனுடைய முக்கியக் குறிக்கோள், கல்வி, நல்லொழுக்கக் கருத்துக்கள், தகவல், பண்பாடு, வரலாறு ஆகியனவற்றை எடுத்தியம்பும் ஏராளமான செய்தி, விளக்கப் படங்களை மத்திய அரசு செய்திப்படம் தயாரிக்கும் பிரிவும். மாநில அரசு செய்திப்படப் பிரிவும் தயாரிக்கின்றன. செய்திப் படங்களைக் காட்டுவதற்கென்று டெல்லியில் அமைக்கப்பட்ட திரையரங்கால் போதிய வெற்றியினை அடைய முடியவில்லை. ஆண்டுதோறும் ஏறத்தாழ, 65,000 செய்திப் படங்களின் நகல்கள் தயாரிக்கப்பட்டு, சுமார் 14,000 திரையரங்குகளில் அரசின் திரைப்படச் சட்டத்தின் (Cinematograph Act) மூலம் கண்டிப்பாகக் காட்டப்படுகிறன. குறைந்தபட்சம் 609.8 மீட்டர் படங்கள் கட்டாயமாகக் காட்டப்பட வேண்டும். செய்திப்படங்களைக் காட்டாத நிரையரங்குகளின் உரிமத்தை (Licence) ரத்து செய்ய அரசுக்கு உரிமை உண்டு. இதற்காக வாரத்தில் வசூலாகும் மொத்த வருமானத்தில் நூறில் ஒரு பங்கினை அரசுக்கு திரைப்பட அரங்குகளின் உரிமையாளர்கள் செலுத்துகின்றனர். படம் பார்ப்போரின் அறிவினை வளர்க்கவும், பண்பாடு மிக்கவர்களாக உருவாக்கவும் செய்திப்படங்கள் உதவுகின்றன.

செய்திப்படங்கள் 16 எம்.எம். திரைச்சுருள்கள் மூலம் கிராமங்களிலும், கல்விக் கூடங்களிலும், மற்ற பொது இடங்களிலும் காட்டப்படுகின்றன. மத்திய அரசுகள் விளம்பரத்துறை, மாநில அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகியவையும் இப்பணியினை மேற்கொண்டுள்ளன. தொலைக்காட்சி வாயிலாகவும் செய்திப்படங்கள் காட்டப்படுகின்றன. திரையரங்குகளில் செய்திப் படங்களைப் பார்ப்பதில் ஒரு சில மக்களே ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால், பொது இடங்களில் இவற்றின் மதிப்பு உயர்ந்துள்ளது. சமீபத்தில் மத்திய அரசின் கள விளம்பரத்துறையின் சார்பில் மதுரையில் செய்திப்படவிழா நடத்தப்பட்டது. மக்களின் மகத்தான ஆதரவை அவ்விழா பெற்றதென்பதால் " மக்கள் நிறைய செய்திகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்" என்று அறியப்படுகிறது. செய்திப்படங்களின் மீது மக்களுக்கு ஆர்வத்தினை ஊட்டவும், சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி உண்டாக்கவும் இத்தகைய படக்காட்சிகள் உதவும்.

இந்திய வெள்ளித்திரையை இரண்டு பெரும் அமைப்புகள் ஆக்கிரமித்துள்ளன. ஒன்று பம்பாய் இந்திப்பட உலகம். பிரபாத். நியூதியேட்டர்ஸ், பாம்பே டாக்கீஸ் என்று ஆரம்பிக்கப்பட்ட படத்தொழில், அமிதாப்பச்சன், ராஜேஸ்கண்ணா போன்ற புகழ்வாய்ந்த

நடிகர்களைத் திரைப்படத் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளது மட்டுமல்லாமல் திரைப்படத் தொழிலை தேசியமயமாக்க வேண்டும் என்ற கருத்தும் உருவாகியுள்ளது. மற்றொரு சக்தி அரசின் செய்திப் படப்பிரிவு 1948இல் ஆரம்பிக்கப்பட்டது. செய்திப்படப்பிரிவு, அதிகமான செய்திப் படங்களைத் தயாரித்து முன்னணியில் நிற்கின்றது.

ஆரம்ப காலத்தில் தேசிய எழுச்சிக்கு உறுதுணை புரிந்த திரைப்படங்கள் பின்னால் வியாபார நோக்கத்திலேயே அமைந்தன. சில சமயங்களில் அரசின் சாதனைகளை எடுத்துக்கூறும் பிரச்சார சாதனங்களாக அமைந்தன.

நமது நாட்டில் கிட்டத்தட்ட 110 மில்லியன் மக்கள் பெரிய நகரங்களில் வசிக்கின்றனர். படித்தவர்களின் விகிதமும், கல்வி வளர்ச்சியும் கணிசமாக அதிகரித்துள்ளன. மக்களின் பழக்க வழக்கங்களும் ஓரளவு மாற்றமடைந்துள்ளன. நடைமுறைக்கேற்ற / இன்றைய சூழ்நிலைக்கேற்ற கருத்துக்களையுடைய திரைப்படங்களையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். நமது நாட்டின் முக்கியப் பொழுதுபோக்கு அம்சமாக திரைப்படம் விளங்குகிறது. விளையாட்டு, இசை, கலை, சுற்றுலா போன்றவை திரைப்படங்களுக்கு அடுத்துதான் இடம்பெறுகின்றன. தற்பொழுது வரும் படங்கள் நடைமுறைக்கு ஏற்றவாறு நவீன தத்துவங்களையும், புதிய கருத்துக்களையும் தாங்கி வெளிவருகின்றன. பொழுதுபோக்கு அம்சம் நிறைந்த திரைப்படங்கள் நிறைய வெளியிடப்படுகின்றன. ஆதலால் திரைப்படங்களும் சில நடைமுறைக் கோட்பாடுகளை அமைத்துக் கொள்வது அவசியம்.

திரைப்படம் கல்விச் சாதனமாகவும் செயல்படுகிறது. திரைப்படம் மகிழ்ச்சியினையும், மனநிறைவினையும் அளிக்கின்றது. மக்களுக்கு நல்ல நெறியினைப் புகட்டவும் மக்களுடைய அபிமானத்தைப் பெறவும் திரைப்படம் பெரிதும் உதவுகிறது. நமது நாட்டில் ஊடுருவிப் பாய்ந்துள்ள சக்தி வாய்ந்த மக்கள் தொடர்புச் சாதனமாக திரைப்படம் விளங்குகிறது. நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்கவும், கலாச்சாரம், பண்பாடு, பரிவர்த்தனை போன்றவற்றிற்கும் திரைப்படம் உறுதுணை புரிகிறது. நாம் எல்லோரும் ஒன்றே என்ற உணர்ச்சியைத் தூண்டக்கூடிய அரிய சாதனமாகத் திகழ்கிறது. 1939இல் வெளிவந்த, "தியாக பூமி" எல்லோரையும் தேசிய உணர்வில், நாட்டு எழுச்சியில் ஒன்றுபடுத்தியது. பராசக்தி, மனோகரா படங்களின் வசனங்கள் அப்படம் வெளிவந்த சமயத்தில் இளைஞர்களை ஆட்படுத்தியது."மதர் இந்தியா" படம் மூலம் சிறந்த உலக நடிகை என்ற பட்டம் இந்திய நடிகை " நர்கீசுக்கு" கிடைத்தது. " மதர் இந்தியா" இந்தியப் படமென்றாலும் அப்படம் பார்த்த மக்கள் அனைவரும் உணர்ச்சிப்பிழம்பாய் ஆனார்கள்.

கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற படங்கள் நமது சுதந்திரத் தலைவர்களை நினைவுபடுத்தியது மட்டுமல்லாமல் அரும்பாடுபட்டு பெற்றச் சுதந்திரத்தைக் காப்பது கடமையென்று அறிவுறுத்துகிறது.

ராஜா ஹரிச்சந்திரா இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் இந்தியத் திரைப்படம் என்ற பெயரினைப் பெறுகிறது.

1935 ஆம் ஆண்டிலிருந்து திரைப்படங்கள் நமது நாட்டில் வேரூன்றி விட்டன. திரைப்படத் தொழில் பெற்ற வளர்ச்சி மற்ற தொடர்பு சாதனங்கள் பெறவில்லை என்று கூறலாம்.

பிரச்சார சாதனங்களில் திரைப்படம் மிகவும் சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுவதால் திரைப்படத்தினால் வரும் நன்மைகள் உண்டென்றாலும், அதனால் சமுதாயத்தில் ஏற்படும் இடையூறுகளும் அதிகம். திரைப்படங்களில் உரையாடல்கள் இருந்தபோதிலும் படத்தில் வரும் துணைத்தலைப்புகள், கதைச்சுருக்கம், கண்ணால் காணக்கூடிய செய்திகளாக வெளிப்படுவதால், மொழியால் தெரிந்து கொள்வதைக் காட்டிலும், திரைப்படத்தினால் தெரிந்து கொள்ளும் கருத்துக்கள் மனதைவிட்டு அகலாமல் நிலைபெற்று விடுகின்றன. வார்த்தைகளும், படங்களும் மனிதனின் கற்பனைக்கு வித்திடுகின்றன. திரைப்பட அரங்குகளிலிருந்து வெளிவரும் பொழுது மனிதன் அத்திரைப்பட நினைவுகளால் உந்தப்பட்டு அந்நினைவாலேயே வெளிவருகிறான். நமது நாட்டில் அதிகமாக மக்களைச் சென்றடைவது திரைப்படம் தான் .

**கல்வி மற்றும் செய்திப் படங்கள்**

திரைப்படங்கள் சிறந்த பொழுதுபோக்குச் சாதனங்களாக இருந்தபோதிலும், மக்களுக்குத் தகவல் கொடுப்பதிலும், மக்களை அறிவாற்றல் மிக்கவர்களாக மாற்றுவதிலும் சிறந்த பங்காற்றுகின்றன. இவ்வகைப் பணியினைச் செய்யும் படங்களை "செய்தி விளக்கப் படங்கள்" என்பர். உண்மைச் சம்பவங்களை / உள்ளதை உள்ளபடியே கூறுவது "டாகுமெண்டரி" படங்கள். இப்பொழுது செய்திப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. அறிவியல், தொழில் நுட்பம் இவைகளை விளக்க இத்தகைய படங்கள் உதவுகின்றன. கல்விக் கூடங்கள், தனியார் நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள் தங்கள் அமைப்பைச் சார்ந்தவர்கள் நேரிய பாதையில் செல்ல இத்தகைய செய்திப்படங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. சமுதாய நல முன்னேற்றம், தேசிய வளர்ச்சி, பொதுத்துறை நிறுவனங்களின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி இவைகளை மற்றவர்கள் அறிந்து கொள்வதற்கும் தகவல்கள் நிறைந்த செய்திப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்திய மக்களின் தேவைக்கேற்பவும். அரசின் திட்டங்கள், கொள்கையை மக்களுக்கு அறிவுறுத்தும் வகையிலும் அரசின் செய்திப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. நமது நாட்டின் பல்வேறு பகுதிகளின் மக்களுக்காக பல்வேறு மதங்களைப் பின்பற்றும் மக்களுக்காக, சமுதாய நலன்களைத் தூண்டக்கூடிய / தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தக்கூடிய சிறு சிறு திரைப்படங்கள் 1/2 மணி முதல் 1 மணி வரை ஓடக்கூடிய கதையம்சத்துடன் கூடிய இத்திரைப்படங்கள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம், கேர் போன்ற நிறுவனங்களும் சிறு திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டு ஆதரவினைப் பெற்றுள்ளன. புதிய இருபது அம்சத்திட்டத்தினை வலியுறுத்தும் வகையில், ஒவ்வொரு அம்சத்தினையும் சிறப்பிக்கும் வகையில் செய்திப்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

வாரச் செய்திச் சுருள்கள் அந்தந்த வாரங்களில் நடைபெற்ற முக்கியச் செய்திகளைத் தொகுத்து வெளியிடப்பட்டன. இப்பொழுது அவை நிறுத்தப்பட்டு " செய்தி மலர்" ( News Magazine) என்று ஒவ்வொரு செய்தியும் முழுமையாக ஆராயப்பட்டு படமாகத் தொகுக்கப்பட்டு வெளிவருகிறது. சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றிய 21 செய்திப்படங்களை வெளியிட்ட பெருமை மத்திய அரசு செய்திப்படப் பிரிவிற்கு உண்டு.

மக்களுக்காகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய படங்கள் தெளிவாக, புரிந்து கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும். அதிக புள்ளிவிவரங்கள், வரைப்படங்கள் மக்களின் ஆர்வத்தைக் குறைத்துவிடும். இது போன்ற படங்கள் கல்விக் கூடங்களுக்கும், பயிற்சி நிலையங்களுக்கும் முக்கியமானதாக இருக்கும். குடும்ப நலம் பற்றி " குழப்பம்" என்ற படமும் " அபாய அறிகுறி" என்ற படமும் வைட்டமின் " ஏ"யின் அவசியத்தை உணர்த்தும் "கீரைப்பட்டண கதையும்" மக்களிடம் அமோக ஆதரவைப் பெற்றுள்ளன. சுற்றுப்புறச் சூழலின் மேம்பாட்டை உணர்த்தும் " தள்ளிப்போட்ட கல்யாணம்" என்ற படம் கதையம்சம், பொழுதுபோக்கு, கருத்துக்கள் நிறைந்து மக்களை ஆற்றுப்படுத்துவதைக் கண்கூடாகக் காணலாம்.

மக்கள் தொடர்புப் பணிக்கு செய்தி விளக்கப் படங்கள் முதன்மையான பங்கினை வகிக்கின்றன. மக்கள் தொடர்புப் பணிக்கு உதவக்கூடிய படங்களைத் தயாரிக்க பல விளம்பர நிறுவனங்கள் உதவி செய்கின்றன. இதைத் தவிர விற்பனையை அதிகரிக்க உதவும் விளம்பரப் படங்களும், நிறுவனத்தின் நற்பெயரைக் காக்கக்கூடிய படங்களும் மக்களைக் கவரக்கூடிய அளவில் தயாரிக்கப்படுகின்றன. ஆதலால், இத்தகைய படங்கள்

மக்களின் ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாகவும், சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கக்கூடியதாகவும், தரமிக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

செய்தி விளக்கப்படமும் விளம்பரப் படங்களும் உடனடி விளைவை ஏற்படுத்துவதால் அவை முக்கியமான தகவல் தொடர்புச் சாதனங்களாகக் கருதப்படுகின்றன. மத்திய அரசு செய்திப்பிரிவு முன்பே குறிப்பிட்டபடி மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு 1948ஆம் ஆண்டு முதல் இந்தியாவிலேயே அதிகமான செய்திப்படங்களைத் தயாரிக்கும் நிறுவனமாக விளங்குகிறது. கார்ட்டூன் படங்களைத் தயாரிக்க தனியாக ஒரு பிரிவு இயங்குகிறது. வருடத்திற்கு நான்கு கார்ட்டூன் படங்களைத் தயாரித்து வெளியிடுகிறது.

**தமிழ்த்திரைக்கதை வரலாறு**

**தமிழ்நாடு திரைப்படப் பிரிவு**

பொதுமக்களுக்கு அரசின் ஆக்கப்பணிகளைத் திரைப்படங்கள் வாயிலாகத் தெரியப்படுத்துவது திரைப்படப்பிரிவின் நோக்கமாகும் .

தமிழகத்தில் நடைபெறும் அரசின் ஆக்கப்பணிகளையும், குடும்பநலம், சத்துணவு, சமுதாய விழிப்புணர்ச்சி, சுற்றுப்புறச்சூழல் மேம்பாடு மற்றும் சிறப்புமிக்க விழாக்களையும் திரைப்படம் எடுத்து மாதம் இருமுறை செய்திப்படங்களாகத் தயாரிக்கின்றது. இப்பிரிவு, தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சார்பிலும் செய்திப்படங்களை தயாரிக்கிறது. 35 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு இந்திய அரசின் திரைப்படப் பிரிவு வாயிலாக விநியோகிக்கப் படுகின்றன. செய்திப்படங்களும் கருத்து விளக்கப்படங்களும் 16 மி.மீ. பிரதிகள் எடுக்கப்பட்டு கிராமப்புறங்களில் மக்களுக்குத் திரையிடும் பொருட்டு மாவட்ட விளம்பரப் பிரிவுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

**தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் (National Film Development Corporation)**

1980ஆம் ஆண்டு ஏப்ரலில் அமைக்கப்பட்ட தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் மத்திய அரசின் நிறுவனம். திரைப்பட வளர்ச்சிக்கு உதவும் நிறுவனம் திரைப்பட நிதி நிறுவனம், இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக்கழகம் இணைந்த அமைப்பு இதுவாகும். நல்ல தரமான படங்களைத் தயாரிக்க இந்த நிறுவனம் உதவுகிறது. 1984ஆம் ஆண்டு வரை 149 திரைப்படங்களுக்கும், 57 செய்திப்படங்களுக்கும் பண உதவி செய்துள்ளது. இந்நிறுவனத்தின் உதவி பெற்ற 114 படங்கள் தேசிய அளவிலான விருதுகளையும், 26 படங்கள் அகில உலக விருதுகளையும் பெற்றுள்ளன. அரைமணியிலிருந்து ஒருமணி நேரம் வரை ஓடக்கூடிய

கதையம்சம் பொருந்திய படங்களைத் தயாரிக்கப் பெரிதும் உதவுகிறது. சர் ரிச்சர்டு அட்டர் போரரோவ் இயற்றிய "காந்தி" படம் தயாரிக்க தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் உதவி செய்துள்ளது. திரைப்பட அரங்குகள் கட்டுவதற்கும் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் உதவி புரிகிறது. திரைப்பட ஏற்றுமதி, இறக்குமதி பணிகளையும் இக்கழகம் மேற்கொள்கிறது. தனியாக இயங்கி வந்த திரைப்பட விழா இயக்குநரகம் ( Directorate of Film Feswtivals) 1981 இக்கழகத்துடன் இணைக்கப்பட்டு தேசிய அளவிலான திரைப்படவிழா, உலகத் திரைப்பட விழாவில் கலந்து கொள்ளல், பண்பாடு, கலை, பரிவர்த்தைனயின் கீழ் திரைப்பட விழாக்களை ஏற்பாடு செய்தல் போன்ற பணிகளையும் ஆற்றிவருகிறது. 90 நாடுகளுக்கு இந்தியத் திரைப்படங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**குழந்தைகள் திரைப்படச் சங்கம்**

குழந்தைகள் திரைப்படச் சங்கம் 1955இல் மும்பையில் நிறுவப்பட்டது. புதுதில்லி, சென்னை, கல்கத்தா நகரங்களில் இதன் கிளை நிலையங்கள் உள்ளன. தன்னாட்சி உரிமை பெற்ற இந்த அமைப்பு, குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிபுரிந்து வருகின்றது. குழந்தைகள் நல்வாழ்விற்கும் அறிவாற்றலுக்கும் உதவும் வகையில் திரைப்படங்களைத் தயாரிக்க இந்த நிறுவனம் பெரிதும் உதவுகிறது. 1984 வரை 98 குழந்தைகள் திரைப்படங்களைத் தயாரித்தும், வாங்கியும் உள்ளது. 139 சிறுதிரைப்படங்கள் இதே வகையில் பெறப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கான திரையரங்கு பெங்களூரில் திரைப்பட விழா ஆண்டும் நடைபெற்று வருகிறது. குழந்தைகள் பட இயக்கத்திற்கு பெரிதும் துணைபுரியும் இந்நிறுவனம் கிராமக் குழந்தைகள், கிராம இளைஞர்கள் பயன்பெறும் வகையில் புதிய கொள்கைகளை அமுல்படுத்தி வருகிறது.

**வீடியோ படம்**

இப்பொழுது தொலைக்காட்சிப் பெட்டியின் வழியாக வீடியோ படங்களைப் பார்ப்பவர்கள் எண்ணிக்கை பெருகிவருகிறது. ஆதலால் திரைக்கு வருமுன்னரே வீடியோ டேப்புகள் வாயிலாகப் புதுப்புதுத் திரைப்படங்களைக் காணமுடிகிறது. கூடிய விரைவில் வீடியோ திரையரங்குகள் அமைய வாய்ப்புகள் அதிகமுள்ளன. வீடியோ படங்களின் வாயிலாகத் திரைப்படத் தொழிலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. திருத்தப்பட்ட பதிப்புரிமைச் சட்டம் 1981. திருத்தப்பட்ட சினிமோடோகிராப் சட்டம் 1984 ஆகியனவற்றின் வழியாக திருட்டு வீடியோ படங்களைத் தடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**இந்திய திரைப்பட தொலைக்காட்சி நிறுவனம்** **(Film of Television Institute of India)**

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஓர் அங்கமாக தன்னாட்சி உரிமை பெற்ற ஒரு நிறுவனமாகச் செயல்படும் இந்திய திரைப்பட, தொலைக்காட்சி நிறுவனம் 1960ஆம் ஆண்டு புனேயில் நிறுவப்பட்டது. திரைப்படத்தினை இயக்கவும், திரைப்படக்கதை, வசனங்களை எழுதவும்,ஒலிப்பதிவுத் தொழிலும், திரைப்பட சீரமைப்புப் பிரிவிலும் திரைப்படங்களில் நடிப்பதற்கான திறமையை வளர்ப்பதிலும் பயிற்சி கொடுப்பது மட்டுமல்லாமல் டிப்ளமோக்களும் வழங்கப்படுகின்றன. தொலைக்காட்சி நிலைய அலுவலகங்களுக்குப் பயிற்சியும் இந்த நிறுவனத்தில் கொடுக்கப்படுகிறது. திரைப்பட ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டில் ஒவ்வோர் ஆண்டும் தனிப்பயிற்சியினை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

**இந்திய தேசிய திரைப்பட நகல் பாதுகாப்பகம்** (**National Film Archieve of India)**

1961ஆம் ஆண்டு பிப்ரவரியில் நிறுவப்பட்ட இந்த நிறுவனம் புனேயைத் தலைமையிடமாகக் கொண்டு பெங்களூர், திருவனந்தபுரம், கல்கத்தா போன்ற இடங்களில் மண்டல அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இந்திய, உலகப்புகழ் பெற்ற படங்களைப் பெறவும், அவற்றைப் பாதுகாக்கவும் திரைப்பட ஆராய்ச்சிக்கும், திரைப்பட வளர்ச்சிக்கும், திரைப்படப் பண்பாட்டினை வளர்க்கவும் இந்த அமைப்பு உதவுகிறது. 1985 மார்ச் 31 வரை 9,774 படங்கள் பாதுகாப்பிற்காகப் பெறப்பட்டுள்ளன. இவற்றில் ஊமைப் படங்கள் என்று கூறப்படும். சலனமற்ற படங்கள், பல ஆண்டுகளுக்கு முன் தயாரிக்கப்பட்ட படங்கள், இந்திய உலக அளவில் பரிசு பெற்ற படங்களும் அடங்கும். ஆக்கபூர்வமான திரைப்பட கல்வி, ஆராய்ச்சி நடத்தும் நிறுவனங்களுக்கு வேண்டிய உதவிகளை இந்திய தேசிய திரைப்பட பாதுகாப்பு அமைப்பு பெரிதும் உதவி செய்து வருகிறது. யுனெஸ்கோ அமைப்புடன் திரைப்படப் பாதுகாப்பின் வளர்ச்சிக்காகப் பல்வேறு கருத்துக் கூட்டங்களை நடத்துவது மட்டுமல்லாமல் நவீன கம்ப்யூட்டர் வழியாக ஆசியா, பசிபிக் பகுதி பற்றிய திரைப்பட, தொலைக்காட்சி படம் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்தும், கொடுத்தும் வருகிறது.

திரைப்படம் என்பது ஒரு சிக்கலான, சமூக, உளவியல் சம்பந்தமான ஒன்றாகும். திரைப்படம் என்பது வார்த்தைகளாலும், படங்களாலும், இசையாலும் இணைக்கப்பட்ட ஒரு பத்திரம் என்று கூறலாம். படம் பார்ப்பவர்களை எளிதில் கவரக்கூடிய சக்தி திரைப்படத்திற்கு உண்டு.

திரைப்படத்தின் முக்கிய குறிக்கோள் பொழுதுபோக்கு. ஒரு படம் தயார் செய்வதற்கு அதிகமாகப் பணம் செலவு செய்ய வேண்டியுள்ளது. தயாரிப்புக்கு அதிகமாகச் செலவு ஆனதால் மக்கள் அதிகமாகப் பார்க்க வேண்டும் என்று தயாரிப்பாளர் விரும்புகிறார். மக்களைக் கரவக்கூடிய படங்களைத் தயாரிக்கவே விரும்புகிறார். சாதியொழிப்பு, சிறுபான்மையினர் நலம் போன்ற தேசியக் கருத்துக்களை அத்தகைய தயாரிப்பாளர்களிடம் எதிர்பார்ப்பது நடைமுறைக்கு உகந்ததல்ல.

வணிக நோக்குள்ள திரையரங்குகளில் 35 மி.மீ. அல்லது 70 மி.மீ. அல்லது சினிமாஸ்கோப் படங்களைத் திரையிட வசதிகள் உள்ளன. திரைப்படம் என்பது இலகுவாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய சாதனமாகும். திரைப்படத் தயாரிப்பு என்பது நுட்பமான ஒரு கலையாகும். படத்தை இயக்குதல், நடித்தல், புகைப்படம் எடுத்தல், இசை, பதிவு செய்தல் என்று ஒவ்வொரு துறையும் இணைந்து செயல்படுவதன் மூலம் படத்தை திருப்திகரமான முறையில் வெளியிட முடிகிறது. திறமை, ஆற்றல், அறிவு, சாதுர்யம், கடின உழைப்பு என்று ஒவ்வொரு பண்பும் வெற்றிக்கு அடிகோலுகிறது. நடிப்பிலிருந்து இசையமைப்பு வரை நன்கு அமையும்பொழுது அனைத்து மக்களையும் கவரக்கூடிய வகையில் அமைகிறது. மக்களின் உள்ளத்தைக் கவர திரைப்படத்தினை எல்லாக் கட்சியினருமே பயன்படுத்துகிறார்கள்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்று அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களும் விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டே செயலாற்றுகின்றன. விளம்பரங்கள் அவைகளுக்கு உயிர் ஊட்டுவன என்று கூறலாம். ஆனால் திரைப்படங்கள் அதிகமாகப் பார்ப்பவர்கள், பிரதிகளின் விற்பனை இவற்றின் அடிப்படையிலேயே அவற்றின் உண்மையான மதிப்பு அடங்கியுள்ளது என்று கூறலாம்.

இளைஞர்களின் மத்தியில் திரைப்படங்களின் ஊடுருவல் அதிகம். ஆதலால் இளைஞர்களின் மனதைக் கெடுக்கும் வகையில் அமையும் குற்றம், பாலுணர்வு, பலாத்காரம், வன்செயல் போன்ற காட்சிகளை அனுமதிப்பதில் சில ஒழுங்குமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மக்கள் திரைப்படம் பார்க்கச் செல்வது அதிலிருந்து நல்ல கருத்துக்களைப் பெறவேண்டுமென்பதற்காக அல்ல. தங்களுடைய அன்றாட வேலைகளிலிருந்து சற்று மாறுபட்டு இருப்பதற்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் மட்டுமே திரைப்படம் பார்க்கச் செல்கிறார்கள். ஆனால் மக்கள் மற்ற கவலைகளை மறந்துவிட்டு சிறிதுநேரம் பொழுதுபோக்கலாம் என்று வரும்பொழுது முக்கியமான கருத்துக்கள்

எடுபடுவதில்லை. ஆதலால் படத்தயாரிப்பாளர்களும் அவ்வகைப் படங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

தொலைக்காட்சியின் பரவல் இப்பொழுது அதிகமாகி விட்டபடியால் தொலைக்காட்சிக்குப் போட்டியாக மக்களைக் கவரக்கூடியதாக, அவர்களுடைய உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியதாக, திரைப்படங்களைத் தயாரிக்க வேண்டியுள்ளது. நாட்டின் எழுச்சியை ஊட்டக்கூடிய படங்கள் வெளிவர வேண்டுமென்றால், அரசு ஏதாவதொரு வகையில் பண உதவி செய்தல் அவசியம். தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம் இவ்வகையில் ஓரளவு உதவி செய்கிறதென்று கூறலாம்."

தொலைக்காட்சி படம் திரைப்பட நுணுக்கங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது. தெளிவான படம், படத்தின் நேர்த்தி, உரையாடலில் தெளிவு, நடிப்பு, நுட்பமான படத்தொகுப்பு இவற்றில் திரைப்படம் முன்னணியில் இருக்கிறது. சில சமயங்களில் குறிப்பிட்ட நேரங்களில் தொலைக்காட்சியில் காட்டுவதற்காக செய்திப்படம் உட்பட பல திரைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வியாபார நோக்குள்ள திரைப்படங்களை தொலைக்காட்சியில் அதிகம் விரும்பிப் பார்க்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

**திரைப்பட விருது**

ஜனவரி 1987 டெல்லியில் நடைபெற்ற 11வது உலக திரைப்பட விழாவில் "மயில்" (peacock) விருதினை ருஷ்யப்படமான எலையர் இஸ்முகமாதோவ் ( Elyor Ishmukha Mador) இயக்கிய "குட்பை கிரீன் சம்மர்" என்ற படம் பெற்றுள்ளது.

மதுவிலக்கு,சாதிமுறையைப் போக்குதல், தீண்டாமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் முதலிய சிறப்பான கொள்கைளைப் பரப்பும் வகையில் சமூகப் பொருளாதாரக் கோட்பாடு அடிப்படையில் தயாரிக்கப்படும் சிறந்த தமிழ்ப்படங்களுக்கு 1978ஆம் ஆண்டு பிப்ரவரியில் திரைப்பட உதவித்தொகைத் திட்டம் செயலாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி தரமான திரைப்படங்களிலிருந்து மிகக் கவனத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து தரமான திரைப்படங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபாய் வீதம் நிதி உதவியினை அரசு அளிக்கிறது. 197879ஆம் நிதியாண்டு முதல் மிகச் சிறந்த கலைநுட்பமும், உயர்ந்த தொழில்நுட்பத் திறனும் கொண்ட தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் நல்கும் வகையில் ஆண்டுதோறும் அரசு விருதுகள் வழங்கும் திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படக் கலைஞர்களுக்குப் பரிசுகளும் விருதுகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

ஜவஹர்லால் நேருவின் நினைவாக சிறந்த குழந்தைகள் திரைப்படங்கள் மூன்றுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படுகின்றன. ரூ.5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப்பதக்கமும். ரூ.10 ஆயிரம் ரொக்கப்பணமும் முதல் பரிசாகவும், மற்ற இரண்டு படங்கள் ஒவ்வொன்றும் ரூ.5 ஆயிரம் மதிப்புள்ள தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்திய சினிமாவின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்களுக்கு மிகச் சிறந்த விருதான " தாதாசாகிப் பால்கே விருது" அளிக்கப்பட்டது. இந்த விருது மத்திய அரசால் வழங்கப்படுகிறது. முதல் விருது தேவிகாராணிக்குக் கொடுக்கப்பட்டது. 1984ஆம் ஆண்டு பால்கே விருது சிறந்த திரைப்படத் தயாரிப்பாளரும், சிறந்த திரைப்படக் கலைஞருமான "சத்யஜித்ராய்க்கு" வழங்கப்பட்டது. தென்னாட்டைச் சேர்ந்த எல்.வி.பிரசாத்துக்கு 1982இல் பால்கே விருது வழங்கப்பட்டது.

திரைப்பட விருதுகள் நல்ல திரைப்படங்களைத் தயாரிக்க ஊக்குவிக்க வேண்டும் என்ற முறையில் அரசால் வழங்கப்படுகின்றன. சிறந்த கதையம்சம், நடிப்பு நிறைந்த முழுநீள திரைப்படம், கல்வி சம்பந்தமான செய்திப்படம் குழந்தைகள் படம், செய்தி விளக்கப்படங்கள் என்று ஒவ்வொரு வகைக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார மொழிகளில் சிறப்பான படங்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த இந்தியத் திரைப்படத்திற்கு " ஸ்வர்ண கமல்" ( Gold Lotus) என்ற தங்கத்தாமரையும், அடுத்த சிறந்த திரைப்படத்திற்கு, 'ரகாத் கமல்" (Silver Lotus) என்ற வெள்ளித்தாமரையும் வழங்கப்படுகின்றன.

அரசின் இந்த விருதுகளைத் தவிர பிலிம்பேர் (குடைஅ குயசந), சினிமா எக்ஸ்பிரஸ் போன்ற திரைப்படப் பத்திரிகைகளும் பல்வேறு விருதுகளை வழங்கி திரைப்பட வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

பொழுதுபோக்கு மற்றும் செய்திப் படங்களின் எண்ணிக்கை பெருகிவிட்ட போதிலும் படங்களைப் பார்ப்பவர்களுக்கான வசதிகள் மிகவும் குறைவு. யுனெஸ்கோ நெறியின்படி 100 பேருக்கு 2 இருக்கைகளாவது இருக்க வேண்டும். ஆனால். நமது நாட்டில் நூற்றுக்கு 0.8 இருக்கைகளே உள்ளன. நமது நாட்டிற்குக் குறைந்தபட்சம் 30,000 திரையரங்குகளாவது இருக்க வேண்டும். ஆனால், நம் நாட்டில் இப்பொழுது 13,000க்கும் குறைவாகவே திரையரங்குகள் உள்ளன. ஒருநாளைக்கு சராசரி ஒரு கோடி மக்கள் திரைப்படம் பார்க்கிறார்களென்றால் திரைப்படம் எத்துணை பெரிய மக்கள் தொடர்பு சாதனம் என்பதை அறியலாம். ஓராண்டிற்குக் கேளிக்கை மூலம் ரூ.100 கொடியினை அரசு பெறுகிறது. ஆனால் இவ்வளவு முன்னேற்றமடைந்த பொழுது திரைப்படம் நமது நாட்டைப் பொறுத்தவரை 20 விழுக்காடு மக்களையே சென்றடைகிறது. என்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஒலி, ஒளி, அசைவு, வண்ணம் இவைகளின் கலவையான திரைப்படம் விளம்பரம் மற்றும் பிரச்சாரத்திற்கு மிகவும் பிரபலம் வாய்ந்த தொடர்பு சாதனமாகச் சொல்லப்படுகிறது. குழந்தைகள், கிராமக்கள் இவர்களை ஊடுருவிச் சென்று மனமாற்றத்தை ஏற்படச் செய்யும் சக்தி வாய்ந்த தொடர்பு சாதனமாகக் கருதப்படுகிறது.

திரைப்படங்கள் மிகவும் பயனுள்ளவை என்று கூறினால் மனமாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். திரைப்படங்கள் உணர்ச்சியைத் தூண்டக் கூடியதாகவோ, வேண்டிய நினைவை உண்டாக்கக் கூடியதாகவோ இருக்க வேண்டும்.

எல்லா தகவல் தொடர்பு சாதனங்களையும் விட திரைப்படம் எல்லாவகை மக்களுக்கும் பயன்படும் வகையில் அமைகிறது. வேற்று மொழிப் படமானாலும் நடிப்பின் மூலம் படத்தின் மையக் கருத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஒரே செய்திகளை டெல்லியில் உள்ள உயர் பதவியில் உள்ளவர்களுக்கோ, அல்லது நமது நாட்டிற்கு வந்துள்ள பிரெஞ்சு நாட்டு மக்களுக்கோ அல்லது முதுமலை வனச்சரணாலய பகுதியில் வாழும் பழங்குடி மக்களுக்கோ தெரியப்படுத்த திரைப்படம் உதவும்.

திரைப்படங்கள் கல்வி அறிவற்ற மக்களையும் சென்றடையும் ஒரு சக்தி வாய்ந்த ஊடகமாகும். கல்மனதையும் கனிந்துருகச் செய்யும் ஆற்றல் வாய்ந்ததாகும். திரைப்படத்தின் குரல் உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் கேட்கக்கூடிய ஒரு தொடர்பு சாதனமாகும். சுற்றுலா வளர்ச்சிக்கும், கலை கலாச்சார பரிவர்த்தனைக்கும் திரைப்படம் மிக்க பயனுள்ளதாக இருக்கிறது.

1955இல் நமது முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு கலைஞர் மத்தியில் பேசும்பொழுது, "திரைப்படம் இந்தியாவில் அதி அற்புதமான கருவியாகச் செயல்படுகிறது. புத்தகம், செய்தித்தாள்கள் இவற்றின் மொத்த ஊடுருவலைக் காட்டிலும் திரைப்படத்தின் ஊடுருவல் அதிகம் என்று கூறினார். நேருஜியின் கூற்று உண்மையானது மட்டுமல்ல தகவல் தொடர்பு அறிஞர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும்.

திரைப்படங்கள் உற்சாகப்படுத்துவதுடன் சில நல்ல கல்விக் கருத்துக்களையும் சொல்லும்பொழுது செய்திப்படங்களாகின்றன. தொழில்துறை உற்பத்தி, அறிவியல் நோக்கங்கள், தொழில்நுட்பப் பயிற்சி போன்ற பள்ளி, கல்லூரி, தொழில் முறைப் பயிற்சிக்கு வழிகாட்டும் நல்ல கருவிகளாகச் செய்திப்படங்கள் பெரும்பான்மையும் செயல்பட்டு வருகின்றன. இத்தகு செய்திப்படங்கள் பல்வேறு வகைப்பட்ட தேசிய வளர்ச்சி, பொதுத்துறை நிறுவன உடைமைகள், சமூக நலம் போன்றவற்றில் நன்கு அறிவுறுத்துவனவாக காட்டப்படுகின்றன.

திரையரங்குகளில் வியாபார நோக்கில் காட்டப்படும் படங்கள், புராணங்கள் மற்றும் நடப்புச் செய்திகளை அடிப்படையாகக் கொண்ட குழந்தைகள் படம், செய்திச்சுருள்கள் என்று அழைக்கப்படும் செய்தி விளக்கப்படங்கள், கலையம்சம், பண்பாடுகளை விளக்கும் படங்கள் எனப் பலவாறாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1935லிருந்து பேசும் படங்கள் தொடர்ந்தாற்போல் வெளிவர ஆரம்பித்தன.

**திரைப்பட மொழி அறிவு**

வெள்ளித்திரையிலிருந்து வெளியாகும் எழுத்து, படங்கள், சாதாரண ஒலிகள் கூட பொதுமக்கள் தொடர்புக் கூறுகளை உள்ளடக்கியதாக உள்ளது. திரைப்படங்கள் பிரச்சார உலகத்தின் முக்கியக் கருவியாக உள்ளது. அதனால் ஏற்படும் சமுதாயத் தீங்குகள் அல்லது தன்மைகள் அதிகம். ஒவ்வொரு குடிமகனும் அப்படத்தைக் கிரகிப்பதைப் பொறுத்து அதன் நன்மை, தீமை அமையும். நூறாவதுநாள் படம் பல கொலைகளைப் புரியக் காரணமாக அமைந்தது என்பது ஆட்டோ சங்கர் வாக்குமூலத்தின் வாயிலாக அறிகிறோம். உரையாடல்கள், கருத்துச் சுருக்கம் அல்லது துணைத்தலைப்புகள் வாயிலாகச் சொல்ல வேண்டிய பொருளைப் படங்கள் விளக்குகின்றன. " வார்த்தைகள் பேச வேண்டாம், படங்களே பேசும். திரையரங்குகளை விட்டு வெளியே வரும்பொழுது ரசிகன் பல கருத்துக்களைத் தன் உள்ளத்தில் புகுத்திக் கொண்டு மனநிறைவுடன் வெளிவருகிறான்".

முதல் தமிழ்ப்படம் "காளிதாஸ்" என்ற படமாகும்.

கல்கி எழுதிய நாவல்களான தியாகபூமி, மகுடபதி. அந்தமான் கைதி, கள்வனின் காதலி, மு.வ.வின் பெற்றால்தான் பிள்ளையா? ஜெயகாந்தனின் " யாருக்காக அழுதான்" போன்றவை திரைப்படங்களாக எடுக்கப்பட்டன.

சுதந்திரத்திற்கு முன் வந்த படங்கள் சுதந்திரப் போராட்டத்தைச் சித்தரித்து மக்களுக்கு உத்வேகமூட்டியது. மக்கள் சக்தியை ஒன்று திரட்டுவதில் திரைப்படம் அன்று தன் பணியைத் திறம்படச் செய்தது. ஆனால், இன்று மக்களுக்கு எழுச்சியூட்ட வேண்டிய துறை, அவர்களை மயக்க நிலைக்குக் கொண்டு செல்கிறது.

**மக்கள் தொடர்புத்துறையில் திரைப்படத்தின் பங்கு**

1. மக்கள் தொடர்புத் துறையில் திரைப்படத்திற்கு முக்கியப் பங்கு உண்டு. கண்ணுக்கும். காதுக்கும் செய்திகளைத் தரும் திரைப்படம் பல வகைப்பட்ட மக்களைச் சென்றடைவது மட்டுமல்லாமல் உலகின் பல பாகங்களையும் எளிதில் சென்றடைகிறது.

கற்பதற்கு, கல்விக்கு, பயிற்சிக்கு, ஆராய்ச்சிக்கு பயன் அளிக்கும் திரைப்படம் மக்கள் தொடர்புப் பணியில் சிறந்த பங்கினை வகிக்கிறது.

2. ஒரு குறிப்பிட்ட மக்களுக்காக, ஒரு குறிப்பிட்ட கருத்தைச் சொல்ல திரைப்படம் மிகவும் உதவும். சுருக்கமான முறையில் கூறத்தக்க வகையில் கருத்துக்களை உள்ளடக்கியது திரைப்படம். படம் பார்ப்பவர்களை நேரடியாக அக்காட்சிக்குத் திரைப்படம் அழைத்துச் செல்கிறது. நேரில் பார்ப்பது போன்ற உணர்வை திரைப்படம் உருவாக்குகிறது. கருத்துக்களையும், நடவடிக்கைகளையும் கூறுவது மட்டுமேயல்லாமல் கேட்கும் உணர்வு, பார்க்கும் உணர்வு இவற்றுடன் சம்பந்தப்பட்டிருப்பதாலும், ஆர்வத்தை, கற்பனையைத் தூண்டக் கூடியதாக இருப்பதாலும், திரைப்படங்கள் பார்வையாளர்களை ஒருங்கு சேர்ப்பதில் மிகவும் சக்தி வாய்ந்தவைகளாக இருக்கின்றன.

தற்போது திரைப்படத்தின் பெயரை தமிழில் வைக்கும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்திற்குத் தமிழக அரசு மானியம் வழங்கி வருவதும் அறியத்தக்கது.

**இந்திய திரைப்பட வரலாறு பற்றிய ஒரு கண்ணோட்டம்**

| | | |
|---|---|---|
| 1912 | - | முதல் இந்திய திரைப்படம் "புண்டலிக்" திரையிடப்பட்டது. |
| 1913 | - | முதல் இந்திய முழுநீள கதையம்சம் பொருந்திய திரைப்படமான " ராஜா ஹரிச்சந்திரா" வெளியிடப்பட்டது. தயாரித்தவர் தாதா சாகிப் பால்கே. பால்கேயின் இரண்டாவது படமான " பாஸ்மாசீர்" வெளிவந்தது. இப்படத்தில் தான் முதன் முதலாக நடிகையும் பங்கு பெற்றாள். |
| 1918 | - | "சினிமாடோகிராப் சட்டம் 1918" கொண்டு வரப்பட்டது. |
| 1931 | - | முதல் இந்தியப் பேசும் படம் "ஆலம் அரா" வெளிவந்தது. |
| 1947 | - | இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு அகில உலக பரிசினைப் பெற்ற படம் சேட்டன் ஆனந்தனின் "நிச்சா நகர்" என்ற படமாகும். |
| 1948 | - | மத்திய அரசின் திரைப்படப்பிரிவு துவங்கப்பட்டது. |
| 1950 | - | திரைப்பட தணிக்கைக்குழு நிறுவப்பட்டது. |
| 1952 | - | இந்தியாவின் முதல் நிர்வகிக்கப்பட்ட உலகத் திரைப்பட விழா. |
| | | முதல் வண்ணப்படமான மஹபூப்பின் "ஆன்" வெளிவந்தது. |
| 1955 | - | குழந்தைகள் திரைப்படச் சங்கம் தொடங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 1958 | - | சிறந்த நடிகைக்கான உலக விருது " மதர் இண்டியா" என்ற படத்தில் நடித்த நர்கீசுக்குக் கிடைத்தது. |
| 1960 | - | திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனமும் பூனாவில் தொடங்கப்பட்டது. திரைப்பட நிதி நிறுவனமும் இவ்வாண்டு தொடங்கப்பட்டது. |
| 1961 | - | தேசிய திரைப்படப் பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்பட்டது. |
| 1970 | - | பால்கே விருது அமைக்கப்பட்டது. முதல் விருது தேவிகா ராணிக்கு வழங்கப்பட்டது. |
| 1973 | - | திரைப்பட விழாவுக்கான இயக்குநரகம் அமைக்கப்பட்டது. பின்னால் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்துடன் இணைக்கப் பட்டது. |
| 1987 | - | தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் ஆதரவில் "சினிமா இன் இந்தியா" மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளியிடும் சினிமா இதழ் பி.கே. கரஞ்சியா நிறுவன ஆசிரியர் கொண்டு முதல் இதழ் ஜனவரி 87இல் வெளிவந்தது. |

**திரைப்படமாக்கப்பட்ட புதினங்கள்**

வெளியுலகைக் காண உதவும் வெளிச்சம் மிகுந்த சாளரம் என்று திரைப்படம் குறித்துப் பெஞ்சமின் டன்லப் என்ற தென்கரோலினப் பேராசிரியர் கூறியிருக்கிறார். திரைப்படம் மனிதனை உயர்வு நவிற்சி நோக்கில் பெருமைப்படுத்திக் காட்டுகிறது என்கிறார் கன்னடமொழி நாடக வல்லுநர் கணேஷ் கராந்த்.

எண்ணங்களைக் காட்சி வடிவில் தரும்போதுதான் அவை எளிதில் மக்களைச் சென்றடைகின்றன என இத்தாலிய நாட்டுக் கல்வியாளர் பெச்டலாசி பகிர்ந்திருக்கிறார். சட்டைப்பை நாடகம் எனப்படும் புதினங்கள் திரைப்படம் ஆக்கப்படும்போது அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், திறன்வளர்ச்சி ஆகியன நிறைவு பெறுகின்றன என இதழியல் துறையில் மூத்த வல்லுநரான என்.ரெங்கநாதன் கருத்துரைக்கிறார்.

தமிழ்மொழியில் மு.வ., கல்கி, ராஜாஜி, அகிலன், பாரதிதாசன், அண்ணா, கொத்தமங்கலம் சுப்பு, நாமக்கல் கவிஞர், தி.ஜானகிராமன், ஜெயகாந்தன், இந்திரா பார்த்தசாரதி ஆகியோர்தம் புதினங்கள் திரைப்படங்களாக மக்களிடையே உலாவந்தன.

"தணிக்கை ஏதும் செய்யாமல் இருந்தால், ஒரே திரைப்படத்தின் மூலம் ஆட்சியைப் பிடித்துவிடுவேன்" என்று அண்ணா கூறினார். அந்த அளவிற்குத் திரைப்படத்தின்

தாக்கத்தினை நன்றாகப் புரிந்து கொண்டு சமுதாயத்தில் புதிய சிந்தனைகளை மக்கள் மனங்களில் விதைத்தார் அவர்.

தமிழ் மொழிக்குக் குடியரசுத் தலைவரின் சான்றிதழை வாங்கித் தந்த பெருமை "மலைக்கள்ளன்" படத்தையே சாரும். இந்திய மொழிகளில் படமாக்கப்பட்ட சிறப்பும் இதற்கு உண்டு.

மலைக்கள்ளனுக்குப் பிறகு கலைஞர்களைக் கவர்ந்த படம் என்று சொல்லவேண்டுமானால், அது "தில்லானா மோகனாம்பாள்"தான். அரசின் எந்த விருதையும் பெறாமல் மக்களின் பாராட்டுதலை நுட்பமாகப் பெற்ற படம் இது. புனே திரைப்படக் கல்லூரியில் தமிழ்ப் பண்பாட்டைக் காட்சி வடிவத்தில் மேலை நாட்டவர்களுக்கு உணர்த்த ஒளிக் களஞ்சியத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் திரைவோவியம் இது.

"சில நேரங்களில் சில மனிதர்கள்" என்ற புதினம் படமாக்கப்பட்டபோது காட்சிக்கு அதிக அழுத்தம் கொடுத்து எடுக்கப்பட்டது, படைப்பாளியே திரையாக்கத்தில் ஈடுபட்டதால் ஒவ்வொரு சூழலின் தனித்தன்மையும் மிகக் குறைந்த சொற்களால் ஆழ்நிலையில் விளக்கப்பட்டது. சிறப்புச் சுற்றுப்புற ஒலிக்கு மிகுந்த முன்னுரிமை கொடுத்து எடுக்கப்பட்ட முதல் தமிழ்ப்படம் என்ற பெருமிதம் இதற்கே உண்டு. அதனால் இதற்கு அரசின் பரிசு கிட்டியது. உலகப்புகழ் பெற்ற சத்யஜித்ரேயைப் போலக் கண்ணுக்கும், காதுக்கும் சீரான இடம் கொடுத்த பெருமை இவருக்கு (ஜெயகாந்தனுக்கு) உண்டு. கறுப்பு, வெள்ளைப் படமாக இருந்தாலும் இந்தியத் திரைப்பட வரலாற்றில் ஜெயகாந்தனுக்கு ஒரு பத்தியாவது ஒதுக்கியாக வேண்டும். என்னைப்போல் ஒருவன், காவல்தெய்வம் ஆகிய புதினங்களும் திரைவடிவம் பெற்றாலும் கால வெள்ளத்தை நீந்தி வாழ்வது சில நேரங்களில் சில மனிதர்களே!

தி. ஜானகிராமன் தகழி சிவசங்கரன்பிள்ளை, எம்.டி. வாசுதேவன் போன்ற உலகப்புகழ் பெற்ற கேரள எழுத்தாளர்களுக்கு இணையானவர். இவர் எழுத்தில் தஞ்சை மண்ணின் வாசனை நன்கு தெரியும்."மோகமுள்"ளை யதார்த்தநோக்கில் திரைப்படம் ஆக்கினார்.

ராஜாஜியின் " திக்கற்ற பார்வதி" என்ற புதினம் மதுவொழிப்பை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. அது ஒரு கருத்து விளக்கப்படமாக எடுக்கப்பட்டது. கேளிக்கை வரியிலிருந்து அந்தப் படத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டது. வாணிக நோக்கில்லாமல் கல்வி புகட்டும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட படம் பொழுதுபோக்குச் செய்திகள் இல்லாத காரணத்தால் மக்களை இப்படம் சென்றடையவில்லை.

மு.வ.வின் பெற்றமனம், ஓர் அறிவுக் கருவூலமே.

தமிழகத்தில் ஞானபீடப் பரிசு பெற்ற பெருமை அகிலன் எனப்படும் அகிலாண்டம் அவர்களுக்கே உண்டு. அவருடைய "பாவை விளக்கு " நடுத்தர வர்க்கத்துக் கலைஞர்களைப் பெரிதும் ஈர்த்தது.

**திரைப்படம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்**

திரைப்படம் - சினிமா - பொழுதுபோக்காக மக்களுக்குப் பயன்படுகிறது. ரசிகர்கள் தத்தம் கவலைகளை மறந்து வசனங்களையும், கவர்ச்சி / கிளர்ச்சி நடிப்புகளையும், சண்டைக் காட்சிகளையும், திரைப்படப் பாடல்களையும், ஒலி ஒளிக் காட்சிகளையும், இடங்களையும் பார்க்கத் திரைப்படங்கள் உதவுகின்றன.

ஆயகலைகள் அறுபத்தி நான்குள் நடிப்பும் கலையாகும். தான் எடுத்துக் கொண்ட பாத்திரமாகவே நடித்தால் சிறந்த நடிகராக அவர் கருதப்பெற்று ரசிகர்களால் போற்றப்பெறுவார். இதனால் நடிகர்கள் பெயரில் மன்றங்கள் அமைக்கப்பெற்று சிற்சில சமூக நற்பணிகளையும் இம்மன்றங்கள் மக்கட்குச் செய்து வருகின்றன. ஒரு

அந்தக் காலத்து திரைப்படங்கள் நீளம், ஆனால் தற்காலத்துத் திரைப்படங்களோ நீலம் என்பர் ஒரு சாரார். திரைப்படத்தில் வரும் சிற்சில காட்சிகள், ஆபாச நடனம், இரட்டை அர்த்தம் வரும்படியான வார்த்தைகள், ஆங்கிலச் சொற்கள் கலப்பு, பாடல் புரியாமை, வார்த்தைகள் மனதில் நிற்காமை, புற்றீசல்கள் போல படம் தொடங்கிய வேகத்திலேயே பெட்டிக்குள் அடங்கிப் போதல், நிலையற்ற தன்மை, ரசிகர்களைக் கவராமை,கதையில்லாமை ஆகிய இக்கூறுகளால் சில திரைப்படங்களை மக்கள் / ரசிகர்கள் வெறுக்கின்றனர் / புறம் தள்ளுகின்றனர்.

"நூறாவது நாள்" திரைப்படம் பார்த்ததன் வழி ஆட்டோ சங்கர் என்பவன் பல கொலைகளைச் செய்ததாகத் தெரிவித்துள்ளான்.

"அலைபாயுதே" என்ற திரைப்படம் வழி இன்று ஒரு சிலர் காதல்வலையில் அகப்பட்டு வீட்டிற்குத் தெரியாது பதிவுத் திருமணம் செய்துகொண்டு, அவரவர் வீட்டில் தனித்தனியாக இருத்தலை அறியலாம். பத்திரிகைகளில் இது தொடர்பான செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.

குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் நன்றாம். சேரனின் “ஆட்டோகிராப்" என்ற திரைப்படம் தன் பழைய படித்த பள்ளி, நண்பர்கள், காதல் என பழைமையைச் சித்தரித்துக் காட்டி ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டமை

நினைவிருக்கலாம். " ஆட்டோகிராப்" திரைப்படத்தில் வந்த " ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது வாழ்வென்றால் போராடும் போர்க்களமே - ஒவ்வொரு விடியலுமே சொல்கிறது இரவானால் பகல் ஒன்று வந்திடுமே - நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில் இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஒரு நாளில் மனமே - நீ மாறி விடு - மலையோ, பனியோ - மோதிவிடு - என்ற கவிஞர் பா.விஜய் அவர்களின் பாடல் பலரின் நெஞ்சை ஈர்த்து, நம்பிக்கை விதையை வளர்த்ததை மறுப்பதற்கில்லை.

திரைப்பட நடிகர், நடிகைகள், நகைச்சுவைக் கலைஞர்களின் நடிப்புத் திறன்கள் ஆகியவை ரசிகர்களின் நெஞ்சில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சான்றாக - நடிகர் போல் தலை சீவுதல், காதில் குண்டலம் அணிதல், உடை அணிதல் போன்றவையும், நடிகைகளின் பெயரில் புடவைகள், நகைகள் கட்டுவதையும் அறியலரம்.

திரைப்படத்தில் வரும் நல்ல கருத்துக்கள் ரசிகர்களிடம் சென்று சேருவதைவிட, சில நேரங்களில் தேவையற்ற சிந்தனைகள் மனதில் குடிகொண்டு தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன. தீய பாதைக்கு அழைத்துச் சென்று விடுகின்றன என்பதை அறியலாம்.

**இன்றைய தமிழ் திரைப்படத்தின் போக்கு**

**கதை**

சினிமாவாக எடுக்க அதிக அளவு பணம் தரப்படுகின்றன.

கி.ராஜநாராயணனின் " கோபல்ல கிராமம்" என்ற நாவல் ஒரு விதத்தில் பாரதிராஜாவின் "முதல் 'மரியாதை"யில் எடுத்தாளப்பட்டது.

கீழே சில தமிழ் படங்களும், அவற்றின் மூலமாக உள்ள நாவலும், சிறுகதையும் தரப்படுகின்றன.

| வ.எண். | படம் | மூலநாவலும் / கதையும் ஆசிரியரும் (புதினம் /சிறுகதை) | இயக்குநர் |
|---|---|---|---|
| 1 | நண்டு | நண்டு / சிவசங்கரி | மகேந்திரன் |
| 2 | சில நேரங்களில் சில மனிதர்கள் | அதே தலைப்பு ஜெயகாந்தன் | பீம்சிங் |
| 3 | ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் | அதே தலைப்பு /ஜெயகாந்தன் | பீம்சிங் |

| | | | |
|---|---|---|---|
| 4 | 47 நாட்கள் | அதே தலைப்பு /சிவசங்கரி | கே.பாலச்சந்தர் |
| 5 | கண் சிவந்தால் மண் சிவக்கும் | குருதிப்புனல் / இந்திரா பார்த்தசாரதி | ஸ்ரீதர்ராஜன் |
| 6 | சிறை | சிறை / அனுராதா ரமணன் | ஆர்.சி.சக்தி |
| 7 | அவன்- அவள்-அது | ஒரு சிங்கம் முயலாகிறது /சிவசங்கரி | முக்தாசீனிவாசன் |
| 8 | புவனா ஒரு கேள்விக்குறி | அதே தலைப்பு /புனிதன் | எஸ்.பி.முத்துராமன் |
| 9 | முள்ளும் மலரும் | அதே தலைப்பு /உமாசந்திரன் | மகேந்திரன் |
| 10 | விக்ரம் | விக்ரம் / சுஜாதா | ராஜசேகர் |

**தகவல் தொடர்பியல்**

சினிமா தயாரிப்பில் திரைக்கதைதான் வெற்றிக்குக் காரணமாக அமைகின்றது. சினிமாத் தயாரிப்பில் ஈடுபடும் முன் தயாரிப்பாளர் தெளிவான திரைக்கதையைக் கையில் வைத்திருக்க வேண்டும். பெரும்பாலான தமிழ்ப் படங்களில் இயக்குநர்களே திரைக்கதையை எழுதிக் கொள்கிறார்கள்.

12,000 பாடல்களைப் பெற்ற இராமன் கதையினை நான்கு மணி நேரத்திலேயே சம்பூர்ண இராமாயணம் என்னும் திரைப்படம் வாயிலாகத் தெளிவடைகின்றோம். அரிச்சந்திரன் நாடகத்தால் காந்தியடிகள் மகாத்மாகாந்தியாக மாறினார். வீரபாண்டிய கட்டபொம்மனைப் பார்த்தவர்கள் எட்டையப்பர்களை எட்டி உதைக்கத் தொடங்கினார்கள். தண்ணீர்-தண்ணீர் பார்த்தமையால் அரசுப் பணியாளர்கள் நேர்மையின்மையைப் புரிந்து கொள்கின்றோம்.

உரையாடல்கள் இன்றிப் பாடல்களால் பேசப்படும் திரைப்படங்கள் உருவாயின. கதாநாயகர்களே பாடி நடிக்கவும் செய்தனர். திருச்சியைச் சார்ந்த தியாகராசபாகவதரின் தொண்டு பாராட்டுதற்குரியது. இவர் நடித்த " அரிதாஸ்" திரைப்படம் தொடர்ந்து 300 நாள்களுக்கு மேல் திரையிடப்பட்டு அன்றைய நாள்களில் தமிழகத்தையே குலுக்குக் குலுக்கியது. பி.யூ சின்னப்பாவின் நடிப்பும் பாடல்களும் இத்துறைக்கு மேலும் வலு

சேர்த்தது. டி. ஆர். மகாலிங்கம் பாடிய "செந்தமிழ் தேன்மொழியாள்", "ஆடை கட்டி வந்த நிலவே" போன்ற பாடல்கள் இன்றும் நம் காதுக்களில் ஒலிக்கின்றன.

திரைப்படத்துறை வளர்ச்சிக்கு அச்சாணியும் மூளையும் முதுகெலும்புமாக விளங்கிய பெருமை கலைஞர் மு. கருணாநிதியைச் சேரும். "பராசக்தி" திரைப்படத்தின் வாயிலாகத் தமிழகத்தில் நீங்கா இடம்பிடித்து விட்டார். இப்படத்தில் நடித்த சிவாஜி கணேசன் தமிழ்த் திரைப்படத்துறையின் வரப்பிரசாதமாக விளங்கினார். கலைஞர் மீண்டும் இராசகுமாரி படத்திற்கு வசனம் எழுதினார். எம்.ஜி.ஆர். நடித்த "அபிமன்யூ" என்ற புராணப் படத்திற்குப் புதுமையான வசனம் இவரால் எழுதப்பட்டது . குண்டலகேசியின் கதையை மையப் பொருளாக வைத்து, "மந்திரிகுமாரியை" உருவாக்கினார். இவர் கதை வசனம் எழுதிய மணமகள் 1951இல் வெளிவந்தது. "பொறுத்தது போதும் பொங்கி எழு மனோகரா" போன்ற சிவாஜி கணேசன், கண்ணம்பாளின் கனல் தெறிக்கும் வசனங்கள் அடங்கிய "மனோகரா" திரைப்படம் திரைப்படத் துறைக்குத் திருப்புமுனையாக அமைந்தது.

வீரபாண்டிய கட்டப்பொம்மனும், கப்பலோட்டிய தமிழனும் தமிழர்களின் நாட்டுப்பற்றினை வளரச் செய்தன. இயக்குநர் ஏ.பி.நாகராசனின் படைப்புகள் புராணங்களுக்குப் புத்துணர்ச்சியினைக் கொடுத்தன. திருவிளையாடற்புராணம், திருவருட் செல்வர், சரஸ்வதி சபதம், மகாகவி காளிதாஸ் போன்ற படங்களின் வசனங்கள் இன்றும் என்றும் இன்பம் பயப்பனவாகும். அன்றைய நாள்களில் வெளியான தேவதாஸ், கல்யாணப் பரிசு, தேன்நிலவு, நெஞ்சில் ஓர் ஆலயம், தாயைக் காத்த தனயன், தாய் சொல்லைத் தட்டாதே, பாசமலர், ஆண்டவன் கட்டளை, தில்லானா மோகனாம்பாள், பாகப்பிரிவினை, வஞ்சிக்கோட்டை வாலிபன் போன்ற படங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையில் பாராட்டினைப் பெற்றன. நவரச நாயகன் சந்திரபாபு, தங்கவேல், நாகேஷின் நகைச்சுவைகள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பினைத் தந்தன. இயக்குநர் பாலச்சந்தரின் படைப்புகளால் இத்துறை மேலும் வலுவான திருப்புமுனையினைப் பெற்றது. " அரங்கேற்றம்" "தப்புத்தாளங்கள்", "அவள் ஒரு தொடர்கதை", "நீர்க்குமிழி" ஆகிய படங்கள் பாராட்டினைப் பெற்றன.

இயக்குநர் பாரதிராசாவின் படைப்புகள் திரைப்படத் துறைக்குச் சிறந்த மறுமலர்ச்சியினைத் தேடித்தந்தன. நான்கு சுவர்களுக்குள் செயற்கையாகச் செய்யப்பட்ட அரங்குகளில் உருவாக்கப்பட்ட படங்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலைப்பகுதிகளில், கிராமப்புறங்களில் உருவாகத் தொடங்கின. ஊட்டி, கொடைக்கானல், பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், நாகர்கோவில், முட்டம் போன்ற இடங்களின் இயற்கை எழில்கள் இவர்

படங்களில் பளிச்சிட்டன. பதினாறு வயதினிலே,கிழக்கே போகும் இரயில், முள்ளும் மலரும், புவனா ஒரு கேள்விக்குறி, ஆறிலிருந்து அறுபது வரை போன்ற படங்கள் பிரமிக்க வைத்தன. கமலகாசன், ரஜினிகாந்த் போன்ற நடிகர்களால் இளைஞர்கள், மாணவர்கள் திரைப்படங்களுக்கு அடிமையாகிவிட்டனர். ரசிகர் மன்றங்கள் உருவாயின. மாதா, பிதா,குரு,தெய்வம், மதிப்புப் போல நடிகன் மதிப்பும் நாட்டில் ஆங்காங்கே நிலவத் தொடங்கின. நாட்டாமை, சூரிய வம்சம், நட்புக்காக, பொற்காலம், வல்லரசு, சேது, முதல்வன், ஜீன்ஸ் ஆகிய படங்கள் இத்துறை வளர்ச்சிக்கு மேலும் வலுவைக் கொடுக்கின்றன. மின்னியல் கணினியியலின் கைவண்ணங்கள் ஜீன்ஸ், முதல்வன் போன்ற படங்களில் புகத் தொடங்கின

நடிகையர்களுக்கு அரைமுழத்தில் ஆடையைக் கட்டி ஆபாசமாக அங்குமிங்குமாக ஓடவைத்துக் குலுக்கிக் குலுக்கி ஆடவைத்து உருவாக்கப்படும் ஒருசில தமிழ்த் திரைப்படங்கள் தவறான திசையில் சென்று கொண்டிருக்கின்றன.

## கதையின் உள் அமைப்புகள்

திரைக்கதையில் வசனம், ஓசை, பின்னணி இசை,சம்பவம் இவை எல்லாவற்றையும் பயன்படுத்த வேண்டும் என்று சொன் னோம். இவை அனைத்தும் ஒத்துழைத்து ஒவ்வொரு காட்சியிலும், முடிந்தால் ஒவ்வொரு ஃப்ரேமிலும் கதையை மெல்ல நகர்த்திச் செல்லும் உத்தியை இந்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

உங்களில் பலர் கார்ட்டூன் சித்திரம் பார்த்திருப்பீர்கள். குறிப்பாக மதன், ஆர்.கே.லக்ஷ்மண் போன்றவர்களின் சித்திரங்கள். அதை உன்னிப்பாகப் பார்ப்பது ஒரு நல்ல ஆரம்பம். அதில் ஒரு களம் இருக்கிறது. 'ப்ராப்' இருக்கும். கதாபாத்திரத்தின் முகபாவம் உள்ளது. அதனுடன் கீழே ஒரு வரி உரையாடல் உரையாடலை மட்டும் படித்தால் புரியாது. படத்தை மட்டும் பார்த்தால் புரியாது. இரண்டையும் சேர்த்தால்தான் ரசிக்க முடியும்.

கதைக்களம், கதைமாந்தர், குணாதிசயம், வசனம் இவை அனைத்தும் சேர்ந்து ஒரு கார்ட்டூனை உருவாக்குகின்றன. செய்தி தரும் உத்திகள் சினிமாவில் பல உள்ளன. ஒரு பெரிய வீட்டைக் காட்டினால் கதாநாயகன் பணக்காரன் என்று அறிகிறோம். ஒரு வீடு கருகிச் சிதிலமாக இருப்பதைக் காட்டினால் வீடு எரிந்துபோயிருக்கிறது, யாருக்கோ பெரும் இழப்பு என்பது புரியும். அதில் ஒருவன் எதையோ தேடிக்கொண்டிருந்தால் அது அவன் வீடு அல்லது நண்பன் வீடு என்பது தெரியவரும். இவ்வாறு காட்சி, பேச்சு, பொருள்கள் இவைகளின் தொகுப்பு சினிமா பார்ப்பவருக்கு அதிகப்படியான தகவல் கொடுக்கும். கொடுக்க வேண்டும்.

ஒரு சினிமாக்கதை என்பது படிப்படியாக இவ்வாறான தகவல்களைத் தொகுத்து அளிப்பதே. வீடு எரிந்துபோனதைக் காட்டியவுடன் அந்த சினிமாவைப் பொறுத்தவரை அந்தச் செய்தி சாசுவதமாகிறது. கதாநாயகன் வீடு எரிந்துபோனதைத் தொடர்ந்து அவன் பல காரியங்கள் செய்யலாம். கடன் வாங்கலாம். பழி வாங்கலாம். இன்சூரன்ஸ் வாங்கலாம் எப்படியும் முதலில் கொடுத்த 'வீடு எரிந்துபோனது' என்னும் தசுவல் மாறப்போவதில்லை. எனவே அடிப்படைத் தகவலின் மேல் கூடுதல் தகவல்களைச் சேர்த்து அளிக்கிறோம். இப்படி அதிகப்படியாக அளிக்கும் தகவல் முன்பே கொடுத்த தகவலை ஊர்ஜிதப்படுத்தலாம் அல்லது மாற்றலாம். அல்லது ரத்து செய்யலாம்.

உதாரணமாக ஒருவன் ஏர்போர்ட் போக வேண்டும் என்கிற தகவல் முதலில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டுவிட்டால் அடுத்த காட்சியில் ஒரு காரில் ஏறிக்கொண்டால் ஏர்போர்ட் போகிறான் என்பதுதான் உணரப்படும். அல்லது விமான நிலைய வளாகத்தில் கார் நுழைவதைக் காட்டினாலே அவன்தான் பயணப்படப்போகிறான் என்பதை உடனே புரிந்துகொள்வோம்.

இவ்வாறு சினிமாவின் பல சாத்தியங்களைப் பயன்படுத்திச் சுருக்கமாக, நெருக்கமாகக் கதையைச் செலுத்துவதே திரைக்கதையின் தந்திரம். சுருக்கமாக என்றால் ரொம்பச் சுருக்கமாகச் சொன்னால் விளம்பரப்படம்போல ஆகிவிடும். சில விஷயங்களை ஒரு தடவைக்கு இரண்டு தடவை சொல்ல வேண்டியிருக்கும். அப்போது, சொன்னதையே சொல்லாமல் வேறு வேறு சந்தர்ப்பங்களில் வேறு விதங்களில் அதைச் சொல்வது சினிமா உத்தி. நீங்கள் சில படங்களில் பார்த்திருக்கலாம், ஒரு கதாபாத்திரம் ஒரு வசனத்தையே படம் பூரா திரும்பத் திரும்பச் சொல்வதை. இது எரிச்சலூட்டும் மோசமான உத்தி. எப்போது பார்த்தாலும் 'நான் கெட்டவன், எனக்குக் கோபம் வந்தால் நான் வேறு ஆள்' போன்ற திரும்பத் திரும்பச் சொல்லும் இம்மாதிரியான உத்திகளை repetition என்பார்கள். இது கூடாது. ஆனால் duplication என்னும் உத்தி உண்டு. சொன்ன விஷயத்தை வேறு வடிவில், வேறு சூழ்நிலையில் மறுபடி சொல்வது. இதைத் திரைக்கதையில் பயன்படுத்தலாம். சில சமயம் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

ஒரு திரைப்படம் என்பது இரண்டு இரண்டரை மணிநேரம் இருட்டுக்குள் உட்கார்ந்துகொண்டு கவனிக்கும் ஒரு சின்னச் சிறைவாசம்தான். இதில் பார்வையாளர்கள் பார்த்ததை எல்லாம் ஞாபகம் வைத்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சில விஷயங்கள் கவனக் குறைவினாலும், கவனக் கலைப்பினாலும், களைப்பினாலும், இரைச்சலாலும், லேட்டாக வருவதாலும் பல காரணங்களால் மனதில் பதிந்திருக்காது.

இதனால் கதைக்கு முக்கியமான சில விஷயங்களைக் கதையில் அடிக்கடி ஞாபகப்படுத்துவது நல்ல உத்தி, அதற்காக ஒரே காட்சியைத் திரும்பத் திரும்பக் காட்டினால் கதை நேரம் விரயமாகிப் போர் அடிக்கும். ஆனால் அதை வெவ்வேறு சூழ்நிலையில் வெவ்வேறு விதமாகக் காட்டுவது நல்ல உத்தி.

எதைத் திரும்பக் காட்டுவது, எப்படிக் காட்டுவது இரண்டும் முக்கியம். உதாரணமாக ஒருவன் கெட்டவன், மூர்க்கன் என்றால் அந்தக் குணத்தைத் தக்க சமயத்தில் நினைவூட்டுவது கதைக்கு ஓர் அழுத்தம் கொடுக்கும். அவனுடைய சாது மனைவி ஏதோ ஒரு சின்னச் சலுகையை அவனிடம் கேட்குமுன் அவனது மூர்க்கத்தனத்தை நினைவுபடுத்தலாம். இதனால் 'இவன்கிட்ட இப்ப போய் கேக்கறியே. இருக்கு உனக்கு' என்று அவள் மேல் அனுதாபமும் கதையில் பார்வையாளர் பங்கும் கிடைக்கும். அதேபோல் நினைவூட்ட வேண்டிய எளிய விஷயங்கள் பல இருக்கலாம். கதாநாயகனின் ஏழ்மை, கதாநாயகியின் செல்வச் சிறப்பு. குழந்தைத்தனம் போன்ற வற்றை அடிக்கடி நினைவூட்டுவதில் தப்பில்லை. ஆனால் வெவ்வேறு விதமாகச் செய்ய வேண்டும்.

சில சமயம் தகவல்களை அடிக்கோடிட்டுக் காட்டுவதற்காகத் திருப்பிச் சொல்ல வேண்டியிருக்கும். அப்பா ரொம்பப் பணக்காரர் என்று ஒருமுறை வசனத்தில் சொல்லியிருக்கலாம். அடுத்தமுறை அந்த அப்பாவைக் காட்டும்போது அவர் பணக்காரர் என்பதற்கான அடையாளங்களைக் காட்ட வேண்டும். ஒரு பெரிய மாளிகை வாசலிலிருந்து அவள் காரில் ஏறிக்கொள்ளலாம். மாறாக அந்த அப்பா அடுத்த காட்சியில் பஸ்ஸில் போவதாகக் காட்டினால், என்ன இவன் குழப்பறான். பணக்காரங்கறான், பஸ்ல வரான்' என்று பார்வையாளர்கள் யோசிக்கும்போது கதையைக் கோட்டை விடுவார்கள். Consistencyக்காகத் திரும்பச் சொல்லும் அவசியம் ஏற்படும்.

ஆனால் இதை மோசமாகவும் பயன்படுத்த முடியும். மாடியிலிருந்து விழுந்து படுகாயமாகியிருப்பவனை 'விழுந்திட்டிங்களா' என்றோ சொட்டச் சொட்ட வருபவனை 'நனைஞ்சிட்டிங்களா' என்று கேட்பதுபோல. இந்தத் தப்பைப் பல திரைவசனகர்த்தாக்கள் செய்கிறார்கள். ஒருவன் ஓடி வருவான், அவனை 'ஏன் இப்படி தலை தெறிக்க ஓடி வரிங்க?' என்று சினிமாவில் கேட்பது தப்பு. ஒரு ரேடியோ நாடகத்தில் வேண்டுமெனில் கேட்கலாம். அவன் ஓடி வருவதை விஷுவலாகக் காட்டியபின் 'என்ன ஆச்சு?' என்கிற எளிய கேள்வியே போதுமானது.

**திரைக்கதை ஆசிரியர்கள்**

ஒரு திரைக்கதையில் டைரக்டரின் பங்கு என்ன, எழுத்தாளரின் பங்கு என்ன என்பதைத் தீர்மானமாகச் சொல்ல இயலாது. முழு சினிமாவில் டைரக்டரின் பொறுப்பு அதிகம். அவர்தான் சினிமாவின் காட்சி, வசனம், இசை, வேகம் இவை எல்லாவற்றையும் ஒருங்குபடுத்தித் தீர்மானிப்பவர். இதில் திரைக்கதை எழுத்தாளரின் பங்கு கால் பாகமே. இருந்தும் பல சமயங்களில் நல்ல 'டைரக்ஷன்' என்று சொல்லும் காட்சிகள் திரைக்கதையாளரால் எழுதப்பட்டிருக்கும். திறமையான திரைக்கதை அமைப்பில் டைரக்டரின் பங்கும் அதிகமாக இருக்கும். ஷங்கர், மணி ரத்னம் போன்றோருக்குக் கிடைக்க வேண்டிய பாராட்டுகள் எனக்குக் கிடைத்துள்ளன. அதுபோல் நான் அமைத்த காட்சிக்கு அவர்கள் பாராட்டப்பட்டிருக்கிறார்கள். திரைக்கதையின் இறுதி வடிவத்தில் டைரக்டருக்குப் பல இடங்களில் வசனம் தேவை இல்லை, ஒரு குளோசப் போதும் என்று தீர்மானிக்கலாம். சில சமயம் இந்த இடத்தில் ஒரு வசனம் கேக்குது என்று தீர்மானித்து, யாராவது நடந்து செல்லும்போது பின்னணியில் ஒலிக்கும் 'வாய்ஸ்ஓவராக வசனம் எழுதிச் சேர்ப்பது உண்டு. லாஜிக் தப்புகளைத் திருத்துவதற்கும் காட்சிகளும் வசனங்களும் தேவைப்படும்.

இதன் ஆதாரத் தத்துவம் பார்வையாளனைக் குழப்பாமல் கதையைச் சொல் என்பதே. நாம் முன்பு சொன்ன உதாரணத்தைப் போல, பணக்காரன் பஸ்ஸில் போவது, காலேஜ் ப்ரொபசர் என்று சொன்னவர், ஓட்டலில் காப்பி ஆத்துவது. இவையெல்லாம் visual paradox என்பார்கள். இவை தற்செயலாக அமைந்தால் திருத்தப்பட வேண்டும். கதைக்குத் தேவை என்றால் இவைகளை விளக்க சீன் வைக்க வேண்டும். பணக்காரன் பஸ்ஸில் போவது அவருக்கு மாதம் ஒரு நாள் தன் கடந்தகால வாழ்க்கையை ஞாபகப்படுத்திக்கொள்வதற்காக, ப்ரொபசர் காப்பி ஆத்துவது அந்த ஓட்டலில் தன் பெண் காதல் பண்ண வருகிறாளா என்று வேவு பார்க்க - இப்படி ஏதாவது சுற்றினால்தான் அந்தக் காட்சிகளின் முரண்பாடு நீக்கப்படும்.

ஒவ்வொரு காட்சியிலும் ஒரு விஷயம் சொல்ல வேண்டியது முக்கியம். அதனுடன் சேர்த்து இந்த ஊடகத்தின் பல்வேறு சாத்தியங்களைப் பயன்படுத்தி மற்ற பல விஷயங்களைக் காட்டலாம். சில ஆண்டுகளுக்கு முன் கனடாவிலிருந்து புறப்பட்ட ஏர் இண்டியா 747 ஜம்போ விமானம் ஒன்று சீக்கியத் தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டினால் நடுவானில் வெடித்து ஐரிஷ் வடக்குக் கடலில் விழுந்தது. நூற்றுக்கணக்கான பயணிகள், பெரும்பாலும் இந்தியர்கள். இறந்துபோனார்கள். அந்த விபத்தின் கொடூரத்தை பிபிசி

காட்டிய போது கடலிலிருந்து பிணம் எடுப்பதையோ ஏரோப்ளேனின் பாகங்களை மீட்பதையோ காட்டவில்லை. நடுக்கடலில் மிதக்கும் ஒரு விளையாட்டுப் பொம்மையை மட்டும் காட்டியது.

இவ்வகையிலான இரத்தினச் சுருக்கம் திரைக்கதையில் சாத்தியம். உதாரணமாக ஹிட்ச்காக்கின் 'மார்னி' என்கிற படத்தில் ஒரு காட்சி. கதாநாயகி ஆபிசில் இரும்புப் பெட்டியிலிருந்து பணத்தைத் திருட வேண்டியிருக்கிறது. எல்லோரும் போனதும் தனிமையில் இரும்புப் பெட்டியைத் திறந்து பணத்தை எடுக்கிறாள்.

அப்போது ஆபிஸ் முடிந்ததும் தரை துடைக்க வரும் வேலைக்காரி எதிர்பாராமல் வந்துவிடுகிறாள். அவள் இவளை இன்னும் பார்க்க வில்லை. கதாநாயகி மெல்லத் தன் செருப்புகளைக் கழற்றிக் கோட்டுப் பாக்கெட்டுக்குள் திணித்துக்கொண்டு சத்தம் போடாமல் நழுவுகிறாள். வேலைக்காரி வேறு எங்கோ பார்த்துக்கொண்டிருக்கிறாள். இவள் நழுவுவதைப் பார்க்கவில்லை, மார்னி தப்பிவிட்டாள என்று எண்ணுகிறோம். அப்போது அவசரமாகச் செருகப்பட்ட அந்தச் செருப்புகளில் ஒன்று நழுவித் தரையில் விழுந்து சப்தம் கேட்கிறது. 'போச்சுரா, கதாநாயகி மாட்டிக்கொண்டுவிட்டாள்' என்று உணர்கிறோம்.

ஆனால் இங்கே ஹிட்ச்காக்கின் திறமை வெளிப்படுகிறது. வேலைக் காரி தன்பாட்டுக்குத் தொடர்ந்து பெருக்கிக்கொண்டிருக்கிறாள்!

அவளுக்குக் காது கேட்காது!

இந்தக் காட்சியில், ஒரு வரி வசனம் இல்லாது எத்தனை செய்தி களைச் சொல்ல முடிகிறது. மனசைப் போட்டு அலைக்கழிக்க முடிகிறது.

டைரக்டர் ஷங்கரின் 'முதல்வன்' படத்தில் கடைசிக் காட்சியில் ஒரு வசனம் எழுதியிருந்தேன். காட்சி இது. ரகுவரனை அர்ஜுன் தன் முதலமைச்சர் அலுவலகத்துக்கு வரவழைத்திருப்பார். 'உன்னால் எனக்கு ரொம்பத் தொந்தரவு. என்னைக் கடமையைச் செய்யவே விடமாட்டேன் என்கிறாய். கலவரம் பண்ணுகிறாய். பாம் வைத்து என் தாய் தந்தையைக் கொன்றுவிட்டாய். உன்னை நான் இப்போது கொல்லப்போகிறேன்' என்று ஒரு துப்பாக்கியை டிராயரிலிருந்து எடுக்க அதற்கு ரகுவரன் சிரித்து 'என்னை உன்னால் கொல்ல முடியாது. நான் இங்கு வந்ததற்கும் உன்னுடன் தனியாக இருப்பதற்கும் சாட்சிகள் உள்ளன' என்கிறார். அர்ஜுன், 'நான் சுடப்போவது உன்னையல்ல. என்னை' என்று தன் கையில் சுட்டுக்கொண்டு அந்தத் துப்பாக்கியை அவர்பால் எறிகிறார் ரகுவரன் அதைப் பிடித்துக்கொண்ட நேரத்தில் காவலாளர்களைக் கூப்பிட்டுவிட, அவர்கள் நிலைமையைத்

தவறாகப் புரிந்துகொண்டு ரகுவரனை சுட்டு வீழ்த்துகிறார்கள். ரகுவரன் இறந்துபோகுமுன் ஒரு வசனம் எழுதியிருந்தேன். 'That was a good interview' என்று. ஷங்கர், 'இதை எதற்காக எழுதினீர்கள்' என்று கேட்டார். 'வில்லன் இறக்கும் முன் புத்திசாலித்தனமாக ஒரு வசனம் சொல்லிவிட்டுப் போவது ஹாலிவுட் வழக்கம். அது ரொம்பப் புத்திசாலித்தனமாக இருந்தால் வேண்டாம்' என்றேன்.

ஷங்கர், 'இருக்கட்டும் அதை நான் எப்படிக் காட்டுகிறேன் பாருங்கள்' என்றார். ரகுவரன் இறக்குமுன் ஒரே ஒரு 'இண்டர்கட்டாக அந்த இண்டர்வ்யூவின் ஒரு கேள்வி பதிலை ப்ளாக் அண்ட் ஒயிட்டில் போட்டார். அர்ஜுன் நிருபராக இருந்தபோது முதலமைச்சராக இருந்த ரகுவரனை எடுத்த பேட்டி அது. அதுதான் கதையின் முக்கியத் திருப்பம். அதை அவ்வாறு 'இண்டர்கட்டில் போட்டபோது பாமர மக்களுக்கும் அதைப் புரியவைத்துவிட்டார். டைரக்டரும் திரைக்கதை எழுதுபவரும் ஒத்துழைத்துச் சினிமாவின் அத்தனை சாத்தியங்களையும் பயன்படுத்தி ஒரு நல்ல காட்சியை அமைப்பதற்கு உதாரணம் ஷங்கர்.

இந்த அத்தியாயத்தில் நாம் சொன்னது திரைக்கதை எழுதுபவர் செய்தி சொல்லப் பல அஸ்திரங்கள் உள்ளன. கதையைச் சுலபமாகப் புரியும்படி சொல்ல வேண்டியது முக்கியம்.

காட்சிகளின் மூலம் சொல்வதற்கும் 'சிம்பாலிக்'காகச் சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு பெண் தூய்மையானவள் என்று காட்ட அவளைக் காட்டிவிட்டு, ஒரு வெண்மலரைக் காட்டினால் பாதி பேருக்குப் புரியாது. அவளையே இரட்டைப் பின்னல், பாவாடை தாவணியுடன் காட்டினால் எல்லோருக்கும் புரியும்.

## சீன்

சீன் என்கிற வார்த்தைக்குத் தமிழில் தனிப் பட்ட அர்த்தம் உண்டு. ஒரு நாடகத்தில் திரைபோட்டோ விளக்கணைத்தோ சீன் பிரிப்பார்கள். சினிமாவில் சீன் அல்லது காட்சி என்பது கதையின் ஒரு பகுதி. அதில் கதை நகர வேண்டும்.

ஒரு நாடகத்தில் மிஞ்சி மிஞ்சிப் போனால் அஞ்சு அல்லது ஆறு சீன் இருக்கும். சினிமாவில் நாற்பது ஐம்பது சீன்கள் இருப்பது சாதாரணம். சினிமாவில் சீன் என்பது இரண்டு வகைப்பட்டது. இடம் மாறும்போது சீன் மாறுகிறது. காலம் மாறும்போதும் சீன் மாறுகிறது.

முதலில் இடம் மாறுவதைப் பற்றிப் பேசலாம்.

சினிமாவில் காமிரா உலகில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். எந்தவிதத் தாமதமுமின்றி சினிமாவின் சீனை முதலில் இந்தியாவிலும் அடுத்தது அமெரிக்காவிலும் வைக்கலாம். முதல் சீன் ஏரோப்ளேனிலும் அடுத்தது வீட்டிலும் வைக்கலாம், ஏன் சுரங்கத்தில்கூட வைக்கலாம்.

இந்தச் சுதந்திரத்தைக் கண்டமேனிக்குப் பயன்படுத்தக்கூடாது.

எங்கெங்கே கதை நடக்கிறதோ அங்கெல்லாம் போகலாம். பொருத்த மாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். சும்மா காட்ட வேண்டுமே என்பதற் காகக் கதையைக் கோவாவுக்கு அலையவைக்கக்கூடாது.

கதை நடக்கும் இடம் கதைக்கு உதவ வேண்டும். இதற்குப் பல உதாரணங்கள் கொடுக்கலாம்.

ஆஸ்பத்திரி, அலுவலகம், குறுகலான சந்து, பெரிய கடைத் தெரு, ஒரு பொருட்காட்சிச் சாலை, சிறை, திருவிழா, ரெஸ்டாரண்ட் இவையெல்லாம் கதைக்கு உபயோகப்படும் இடங்கள். இவைகள் கதையின் தொனியையும் பாதிக்கக்கூடியவை.

ஓர் உதாரணம் பார்க்கலாம்.

ஒரு தகப்பனிடம் 'உன் மகள் உன் விரோதியின் மகனுடன் ஓடிப் போய்விட்டாள்' என்று தகவல் தரவேண்டியிருக்கிறது. இந்த சீனை எங்கு வைப்பது? தகப்பனின் அலுவலகத்தில் வைத்தால் அதன் உணர்ச்சியுடன் சம்பந்தமில்லாமல் இருக்கும். மாறாக தகப்பனின் வீட்டில் வைத்தால் காட்சி வலுப்பெறும். காரணம் அதே வீட்டில்தான் அவள் வாழ்ந்தவள். அவள் போட்டோக்களைக் காட்டலாம். அவள் விட்டுச்சென்ற வீட்டை, தற்போதைய வெறுமையைக் காட்டலாம்.

'முதல்வன்' படத்தில் ஒரு சீன். ஒரு நாளைக்கு முதல்வனாக நியமிக்கப்பட்டிருக்கும் கதாநாயகன் மக்களிடமிருந்து தொலைபேசியில் வரும் புகார்களை வாங்கிக்கொண்டு உடனே அவைகளை நிவர்த்திக்க ஏற்பாடு செய்கிறான். இந்த சீனை டைரக்டர் ஓர் அலுவலகத்தில் வைத்திருந்தால், இதன் அழுத்தம் குறைந்திருக்கும். மாறாக மேம்பாலத் தருகே போக்குவரத்தின் நடுவே மேசை போட்டு மக்களிடையே தெருவில் தற்காலிகமாக டெலிபோன்களை அமைத்துத் திறந்தவெளியில் மக்கள் முன்னிலையில் வைத்தது அந்த சீனின் தாக்கத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்தியது. திரைக்கதை அமைக்கும்போது சீனை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பதையும் யோசித்து எழுதினால் டைரக்டருக்கு உதவியாக இருக்கும்.

**காலம்**

சீன் நிகழும் காலமும் முக்கியமானது. இடம் மாறாமல் இருந்தாலும் காலம் மாறும். அதைத் திரைக்கதை எழுத்தாளர் உணர வேண்டும். பயன்படுத்த வேண்டும்.

ஒரே சமயத்தில் பல இடங்கள் மாறலாம். அதையும் உணர வேண்டும். திரைக்கதையில் காலம் ஒரு திசையில் சென்றுகொண்டே யிருக்கிறது. ஒரு நாவல் என்றால் சில தினங்களுக்கு முன், பல வருடங்களுக்குப் பிறகு என்று எழுதலாம். திரையில் அதைக் காட்ட ஃப்ளாஷ்பேக், ஃப்ளாஷ் ஃபார்வர்டு போன்ற உத்திகளைச் சற்று எச்சரிக்கையாகப் பயன்படுத்த வேண்டும்.

சினிமா பார்ப்பவர்களைக் குழப்பக்கூடாது என்பது ஒரு முக்கியமான விதி. முடிந்தால் ஃப்ளாஷ்பேக்கைத் தவிர்க்கவும். தவிர்க்கவே முடியவில்லை என்றால் அதன் எண்ணிக்கையைக் குறைக்கவும்.

ஃப்ளாஷ்பேக்கின் முதல் குறை இது. பார்ப்பவரின் ஞாபகசக்தியைப் படுத்தும். 'கதையை இந்த இடத்தில் விட்டிருக்கிறான்' என்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு கதையின் காலம் என்பது வரையறையில்லாதது. இரண்டு மணி நேரம் தொடர்ந்து நடப்பதை இரண்டு மணி நேரத்தில் காட்டலாம் அல்லது இருபது வருஷக் கதையை இரண்டு மணி நேரத்தில் காட்டலாம்.

இதில் சிக்கல் என்ன?

சுதாபாத்திரங்களின் மனநிலைகளும் படம் பார்ப்பவர்களின் மனநிலைகளும் முரண்படும்.

உதாரணமாக ஒரு கணவனும் மனைவியும் சண்டைபோடுவதாக ஒரு காட்சி வைக்கிறோம். அதற்கு அடுத்த காட்சி மறுதினம் நடப்பது என்றால் அந்தச் சண்டையின் ஞாபகமும் கோபமும் இன்னும் மிச்சமிருக்கும். மாறாக அடுத்த காட்சி ஒரு வருடம் கழித்து என்றால் அந்தச் சண்டையின் தாக்கம் மிகவும் குறைந்து, இதுக்குப்போய் சண்டைபோட்டோமா என்கிற மனநிலைகூட வந்திருக்கும். பார்வையாளனைப் பொறுத்தவரை இரண்டுமே அடுத்தடுத்த காட்சிகள். முதல் காட்சியின் தாக்கம் அவன் மனதில் பசுமையாக இருக்கும்போது கதாபாத்திரத்தின் மனதில் அது குறைந்து விடுகிறது. இந்த முரண்பாட்டைத் திறமையாகச் சமாளிக்க வேண்டும்.

பத்து மணி நேரத்திலிருந்து இரண்டு மணி நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் காட்டுகிறீர்களா, இல்லை பத்து வருடத்திலிருந்து இரண்டு மணி நேரங்களைக்

காட்டுகிறீர்களா? சாதாரணமாக சினிமாவில் சில மாதங்களாவது ஆண்டுகளாவது காட்டப்படுவது வழக்கம்.

சினிமாவின் அமைப்பில் சில சம்பிரதாயங்கள் உள்ளன. பகல் நேரங்கள் அலுவலகப் பணி புரிவதற்கும் மற்ற தின காரியங்களைச் செய்யவும் உரித்தானவை.மாலை நேரங்கள் உல்லாசத்திற்காக, விருந்தினரைச் சந்திப்பதற்காக. இரவு தூங்க, சல்லாபிக்க. இது எல்லோருக்கும் பொது.

இந்தச் சம்பிரதாயத்தை மீறினால் கதையில் சுவாரஸ்யம் அதிகமாகும். உதாரணமாக ஒருவன் இரவில் தூங்குவதைக் காட்டுவது நார்மல். பகலில் தூங்குவதைக் காட்டினால் அது முரண்பாடு. இதற்குக் காரணம் அவன் சோம்பேறியாக இருக்கலாம். அல்லது நைட் ஷிப்டாக இருக்கலாம். அல்லது ராத்திரி அவனைத் தூங்க விடாமல் யாரோ ஏதோ தடுத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

ஆபிசில் வீற்றிருக்கும் ஒரு டைப்பிஸ்டைப் பகல் நேரத்தில் காட்டினால் விபரீதமில்லை. அதே பெண் தனியாக இரவில் ஆபிசில் வீற்றிருந்தால் ஏதோ தப்பு நிகழ்ந்திருக்கிறது அல்லது நிகழப்போகிறது என்று அர்த்தம்.

ஒரு தகவலை ஒருவரிடம் சொல்லப் பகல் நேரத்தில் கதவைத் தட்டினால் பெரிசாக எதும் இல்லை. இரவில் கதவைத் தட்டினால் சொல்வதில் ஏதோ கெட்ட செய்தியோ அபாயமோ இருக்கிறது என்பது சுலபமாகப் புரியும்.

பகலையும் இரவையும் கதைக்கேற்றவாறு பயன்படுத்த வேண்டும்.

தமிழ் சினிமாவில் பகலா இரவா என்பதை அறுதியிட்டுக் காட்ட நம் டைரக்டர்கள் அதிகம் முனைவதில்லை. ஒரே காட்சி குறிப்பாகப் பாட்டுகள் பாதி பகலிலும் பாதி இரவிலும் காட்டுவதைப் பார்த்திருக்கிறோம். இது வீணடிக்கப்பட்ட சொத்து என்று சொல்ல வேண்டும்.

எந்தச் செயலுக்கும் ஒரு காலம் இருக்கிறது.கால இடைவெளி இருக்கிறது. ஒரு சாதனைக்குக் காலம் இருக்கிறது. இட்லி வைத்தால் அது வேகக் கொஞ்ச நேரமாகும். அதுபோல சினிமாவில் ஒரு கெட்டில் கொதிப்பதைக் காட்டினாலோ பால் பொங்குவதைக் காட்டினாலோ அது வைத்து ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது என்பதை மறைமுகமாகச் சொல்கிறோம்.

எந்த சினிமாவிலும் ஒரு நிகழ்ச்சி நிகழக் கால இடைவெளி வேண்டும் என்பது கட்டாயம்.

நிகழ்ச்சிகளுக்குக் காலக் கெடுவும் இருக்கும். உதாரணமாக,

பெண்ணுக்குத் தாலி கட்டுவதற்குள் காதலன் திரும்பி வர வேண்டும்.ரயில் புறப்படுவதற்குள் கதாநாயகி ஓடி வர வேண்டும். குண்டு வெடிப்பதற்குள் கதாநாயகன் அதை எடுத்துவிட வேண்டும்.

காலக் கெடு என்பது சினிமாவில் அதிகம் பயன்படுத்தப்படும் உத்தி.

சினிமாவின் நிகழ்காலம் நிஜவாழ்வின் நிகழ்காலத்திலிருந்து வேறுபட்டது. ஒரு சீனுக்கும் அடுத்த சீனுக்கும் உள்ள கால் இடைவெளி சமச்சீராக இருந்தால் நல்லது. இது எப்போதுமே சாத்தியமில்லை. முதல் சீன் இன்று, அடுத்த சீன் மறுநாள். அதற்கடுத்த சீன் அடுத்த வாரம். அதற்கடுத்து ஒரு வருஷம் கழித்து. இப்படி கதையின் தேவைக்கேற்ப அமைக்க வேண்டியிருக்கும். இதைக் கூடிய மட்டில் சீர்ப்படுத்தினால் அழகாக இருக்கும் என்று சினிமா வல்லுனர்கள் சொல்கிறார்கள். ஆனால் இதைப் பற்றிய ப்ரக்ஞையே இல்லாமல் பல சினிமாக்கள் எடுக்கப்படுவதுதான் அடிக்கடி பார்ப்பது.

ஒரு மனிதனுடைய வாழ்நாளை எடுத்துக்கொண்டு அவன் வாழ்வின் சம்பவங்களின் இடைவேளைகளை நோக்கும்போது ஆரம்பத்தில் பல விஷயங்கள் அவனுக்கு நிகழ்கின்றன. பிறப்பு, முதல் பள்ளிப்பாடம், முதல் முழங்கால் சிராய்ப்பு, முதல் காதல், முதல் வேலை, திருமணம் என்று அதன்பின் முதல் குழந்தை. பிறகு நீளும் இடைவெளிகள். இறுதியில் இறப்பு. இம்மாதிரி வாழ்வே கொஞ்சம் முன்னுக்குப் பின் வேறுபட்டு இருக்கும்போது வாழ்வைச் சிறிய அளவில் சித்தரிக்கும் சினிமா ஒழுங்கான இடைவெளியுடன் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தப்பு. இருந்தும் இதில் ஓர் ஒழுங்கு. pattern இருந்தால் நல்லது. x என்பது சீன்கள் என்றால்

xx....... xx..... x...... x....... x x....... x x....... xxx.... x

இப்படிக் கந்தலாக இடைவெளிகள் இருப்பது நல்லதல்ல.

ஓர் இரண்டரை மணி நேர சினிமாவுக்கு எழுபதிலிருந்து எண்பது சீன் இருந்தால் போதுமானது.

**கதைமாந்தர்களும் பார்வையாளர்களும்**

சென்ற அத்தியாயத்தில் எதைச் சொல்வது. எதை விடுவது, எதை ஒளித்துவைப்பது என்பது பற்றிப் பேசினோம். இவையெல்லாம் பார்வையாளனுக்குத் தரப்படும் தகவல்களைப் பற்றியது. இப்போது கதாபாத்திரங்களுக்கு என்ன என்ன தெரியவேண்டும். என்ன தெரியக்கூடாது என்பது பற்றிப் பேசுவோம்.

ஒரு தகவலை நாம் பார்வையாளர்களுக்கு முதலில் சொல்ல வேண்டுமா அல்லது கதாபாத்திரங்களுடன் சேர்ந்து சொல்ல வேண்டுமா என்பதைக் கதையின் போக்கை ஒட்டித் தீர்மானிக்க வேண்டும். பார்வையாளர்களுக்கு முன்பே தெரிவிப்பதில் கதையின் சம்பவங்களில் சுவாரஸ்யம் அதிகமாகும். உதாரணமாக ஒருவன் கொலைகாரன், கெட்டவன் என்பது பார்வையாளருக்கு முன்பே காட்டப்பட்டுவிட்டால், அதை அறியாமலேயே சுதாநாயகி அவனு டன் சினிமா போகவோ, காரில் போகவோ சம்மதிக்கும்போது கதையில் பரபரப்பு அதிகமாகும். இதனால் பெரும்பாலான கதைகளில் பார்வையாளர்களுக்கு முன்பே தெரிவிக்கும் உத்தி அதிகமாகப் பயன்படுத்தப்படும். இதில் உள்ள ஒரே சங்கடம், இந்தத் தகவலைக் கதாபாத்திரங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் வரும்போது கொஞ்சம் பேசிப்பேசிப் போர் அடிக்கும் சாத்தியம் உள்ளது நமக்கு ஏற்கெனவே தெரிந்ததை மறுபடி கதாபாத்திரத்துக்குச் சொல்ல வேண்டிய கட்டாயம். இதைச் சாமர்த்தியமாகத் திரைக்கதை அமைத்துச் சமாளிக்கலாம்.

கதாபாத்திரங்களுக்குத் தெரிந்திருந்து படம் பார்ப்பவர்களுக்குத் தெரியாது என்பதில் ஒரு கேள்வி தொக்கி நிற்பதால் அந்த விஷயத் தைக் கதை முடிவதற்குள் பார்வையாளர்களுக்குச் சொல்ல வேண்டும். சொன்ன பின், ஓ! இதனால்தான் அவன் அன்று கோபித்துக் கொண்டான், சண்டை போட்டான் என்று முன்னால் நடந்ததுக் கெல்லாம் காரணம் காட்ட வேண்டும்.

சில உதாரணங்கள் பார்ப்போம்.

'டெஸ்பரடோ' என்ற படத்தில் பாதியிலேயே கதாநாயகன் ( அண்டோனியோ பெண்டாரஸ்) வில்லனை மிகச் சுலபமாகக் கொன்றுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. அவனைத் தன் துப்பாக்கியின் குறியில்வைத்து டெலஸ்கோப் வழியாகப் பார்த்து ட்ரிகரை அழுத்தப்போகும்போது வில்லன் திரும்புகிறான். அவன் முகத்தைக் கதாநாயகன் பார்க்கிறான். சுடுவதில்லை.

கதாநாயகி 'ஏன் கடவில்லை. ஏன் தயங்குகிறாய்?' என்று கேட்கிறாள்.

கதையின் களைமாக்ஸ் காட்சியில்தான் காரணம் நமக்குத் தெரிகிறது. வில்லன் கதாநாயகனின் அண்ணன்.

இது பார்வையாளனுக்குத் தாமதமாகத் தகவல் தருவதற்கு ஓர் உதாரணம்.

பார்வையாளருக்குக் கதாபாத்திரங்களுக்கு முன்பே தகவல் தருவதில் நகைச்சுவைக் காட்சிகளுக்கான சாத்தியம் உண்டு, பலவித ஆள்மாறாட்டங்கள். குழப்பங்கள்

இவையெல்லாம் பார்வையாளருக்கு. முன்பே தெரிந்திருந்தால்தான் பயன்படும். உதாரணமாகக் 'கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் தபுவைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வரப்போவதை எதிர்பார்க்கிறார்கள். கதவு தட்டப்பட அஜித் நிற்கிறார். அவர் ஒரு அசிஸ்டண்ட் டைரக்டர். ஷூட்டிங்குக்கு அனுமதி கேட்க வந்திருக்கிறார். இது நமக்குத் தெரியும். கதைமாந்தர்களான தபுவுக்கும் ஸ்ரீவித்யாவுக்கும் தெரியாது. இவரைத்தான் மாப்பிள்ளை என்று எண்ணிக்கொண்டு வரவேற்கிறார்கள் . கொஞ்ச நேரம் அவர்கள் உரையாடலில் இவர்கள் கல்யா ணத்தைப் பற்றியும் அவர் படப்பிடிப்பைப் பற்றியும் பேச. ஏற்படும் குழப்பம் சுவாரஸ்யமாகிறது. 'ரேட் எவ்வளவு? ஒரு நைட்ல முடிச்சுருவோம்' என்றெல்லாம் அஜித் பேசும்போது திகைக்கிறார்கள்.

இது ஆடியன்ஸ் முன் தகவலுக்கு ஒரு நல்ல உதாரணம். பாரதி ராஜாவின் 'சிகப்பு ரோஜாக்கள்' படத்தில் கமல்ஹாசன்தான் கொலை செய்கிறார் என்பது. ஆடியன்சுக்கு மட்டுமே தெரிவிக்கப் படுகிறது. அது கதாபாத்திரங்களுக்குத் தெரிவதில்லை. இதனால் பல சுவாரஸ்யமான சஸ்பென்ஸ் மிகுந்த காட்சிகளைப் பாரதிராஜா வால் அமைக்க முடிந்திருக்கிறது. நமக்குத் தெரிந்து கதாநாயகிக்குத் தெரியாததால் ஏற்படும் பதட்டம் கதையில் நம்மை ஒன்றிப்போக வைத்து நம்மால் கதாபாத்திரங்களுக்குத் தகவல் தர இயலாமையால் ஒரு புதிய பரிமாணம் கிடைக்கிறது.

எப்படியும் மொத்த தகவல்களையும் கதாபாத்திரங்களுக்கும் படம் முடிவதற்குள் பார்வையாளர்களுக்கும் கொடுத்தேயாக வேண்டும். எப்போது, யாருக்கு முதலில், யாருக்குப் பிறகு என்பதை டைரக்டருடன் கலந்தாலோசித்து தீர்மானிக்க வேண்டிய விஷயம். திரைக்கதை எழுதுவதின் மிகச் சாமர்த்தியமான பகுதி இதுதான் என்பேன்.

கே. விசுவநாத்தின் 'சங்கராபரணம்' ஒரு நல்ல உதாரணம். அதில் சாஸ்திரி சங்கீத வித்வான் மேடையில் கம்பீரமாகப் பாடிக் கொண்டிருப்பார். முதல் வரிசையில் அவர் சங்கீதத்தில் மோகம் கொண்ட கதாநாயகி உட்கார்ந்திருப்பாள். அருகில் அவள் அம்மா. அவளுக்குப் பாட்டில் கவனமில்லை. தன் மகளின் கழுத்துச் சங்கிலி சரியாக இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டிருப்பாள். அப்போது ஒரு ஜமீன்தார் வருவார். அவரைத் தாய் வரவேற்று நாற்காலியை சபதம் போட்டு இழுத்து உட்கார வைப்பாள் பாடிக்கொண்டிருக்கும். சாஸ்திரி கோபம் கொண்டு பாட்டை நிறுத்திவிட்டு எழுந்து போய் விடுவார். இது அருமையான திரைக்கதை அமைப்புக்கு உதாரணம். ஒரு வார்த்தை பேச்சு இல்லாமல் கதாநாயகிக்கு சங்கீதத்தில் ஆர்வம், அவள் தாய் அவள் அழகைப் பயன்படுத்திச்

சம்பாதிப்பதில் சாஸ்திரி கோபக்காரர் என்று பல ஆர்வம் உள்ளவள், சங்கர சா செய்திகள் ஒரு நிமிஷத்தில் காட்டப்பட்டுவிடுகிறது.

சங்கராபரணம் படத்தில் இவ்வாறு பல இடங்களில் visual narration க்கு உதாரணங்கள் இருக்கின்றன. பல இடங்களில் பேசிப் பேசியும் மாய்கிறார்கள்.

உதாரணம் : அதில் ஒரு வக்கீல் வருவார். அவரைச் சார்ந்து காமெடிக்காகக் கதைக்குச் சம்பந்தமில்லாத பல காட்சிகள் ஓடும்.

இது இந்திய சினிமாவின் சாபக்கேடுகளில் ஒன்று. தனியான காமெடி ட்ராக் இல்லையென்றால் படம் ஓடாது என்கிற டைரக்டரின் பத்திரமின்மையையே இது காட்டுகிறது. 'சங்கராபரணம்' அற்புதமான சுருக்கமான காட்சிகளால்தான் வெற்றி பெற்றது. அதில் ஒரு பலாத்காரக் காட்சி வரும். கதாநாயகி மெய்மறந்து இசைத்தட்டில் பாட்டுக் கேட்டுக்கொண்டிருப்பாள். பின்னாலிருந்து அந்த ஜமீன்தார் வருவார். அவளைக் கவர்ந்து அணைத்துப் பலாத்காரமாக அடுத்த படுக்கை அறைக்குள் இட்டுச் செல்வான். காமிரா உள்ளே போகாது. அந்தக் கிராமபோன் தொடர்ந்து பாடும். இசைத்தட்டின் முடிவுக்கு வந்து நிரடித் தடுமாறும்.

உள்ளே அந்தப் பெண்ணின் தவிப்பைப்போல்.

திரைக்கதையில் விஷுவலின் மகத்தான சக்தியை உணர இந்த ஒரு காட்சி நல்ல உதாரணம். ஒரு திரைக்கதை என்பது வேறுவிதமான கலைப் படைப்பு. இதன் சாத்தியங்கள் அதிகம். அவைகள் அனைத் தையும் ஒரு தேர்ந்த எழுத்தாளன் பயன்படுத்த வேண்டும், ஆனால் எச்சரிக்கையுடன். திரைக்கதை எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால் எங்கே என்பதில் குழப்பம் இருக்கக்கூடாது. கடந்த காலத்தை ஃ ப்ளாஷ்பேக் மூலம் சொல்லலாம். இதிலும் குழப்பமிருக்கக் கூடாது. நிறையக் கதாபாத்திரங்களைக் காட்டலாம். அவர்களை மனதில் பதியக் காட்டுவது கஷ்டம். நிறையச் சம்பவங்களைக் காட்டலாம். அவற்றின் தாக்கத்தைக் காட்டுவது கஷ்டம். நிறையக் காட்சிகள் காட்டலாம். அவற்றை ஒட்டவைப்பது கஷ்டம்.

விஸ்தாரமாகக் கதை சொல்ல சில கட்டுப்பாடுகளும் தடைகளும் உள்ளன. முதல் தடை கதை நேரம். இரண்டு மணி நேரத்துக்குள் ஒரு வாழ்நாளையே காட்ட வேண்டியிருக்கலாம். இதனால் எதைக் காட்டுவது, எதை விடுவது என்பது முக்கியமான தீர்மானமாகி விடும்.

பல சந்தர்ப்பங்களில் டைரக்டர் இந்தக் குழப்பத்தில் இருக்கும் போது 'எடுத்து வை. அப்புறம் எடிட் பண்ணும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்பார். இது ஒரு திரைப்படத்தில் அதிக விரயமான விஷயம்.நிறைய எழுதலாம்,நிறைய எடுக்கக்கூடாது.

**கதை**

திரை எதை வைத்துக் கதை சொல்கிறது என்பது உங்களுக்கு இப்போது விளங்கியிருக் கும். எப்படிச் சொல்வது, எதைச் சொல்வது என்பதை இனிப் பார்க்கலாம். எல்லோரிடமும் நல்ல கதை ஒன்றாவது இருக்கிறது. இல்லாதது அதை எப்படிச் சொல்வது என்கிற அறிவுதான். ஒரு வக்கீலையோ, டாக்டரையோ, ஜட்ஜையோ கேட்டுப்பார்த்தால் தெரியும், ஒரு ஆளிடமி ருந்து நடந்தது என்ன என்பதைக் கேட்டு அறிவது எத்தனை கடினமான விஷயம் என்று. ஒரு சம்பவத்தையோ வியாதியையோ விவரிக்கும்போது மற்றவர் களுக்குப் புரியவைப்பதில்தான் பலருக்குச் சங்கடம்.

சின்ன உதாரணமான ஒரு ஜோக்கை எடுத்துக்கொண்டால். அதைச் சிரிக்கச் சிரிக்கச் சொல்ல முடியும். சிரிப்பே வராமல் சொல்லவும் முடியும். சொல்லும் விதத்திலேயே ஜோக்கைக் கொல்லும் விதமும் இருக்கிறது. கதை என்பது நடந்த சம்பவங்கள், கதை அமைப்பு என்பது அதைச் சொல்லும் விதம். கதையின் வடிவம்.

கதைக்கும் கதையைச் சொல்லும் விதத்துக்கும் குழப்பம்கூடாது.

உதாரணமாக நம் எல்லோருக்கும் தெரிந்த ஒரு பஞ்சதந்திரக் கதையையோ விக்கிரமாதித்தன் கதையையோ பலவிதங்களில் சொல்ல முடியும். சித்திரமாகச் சொல்ல முடியும். ஓர் நாடகமாக, இசை நாடகமாக, நடன நாடகமாக, திரைப்படமாக. ஒவ்வொன்றுக்கும் அமைப்பு வேறாக இருக்க வேண்டும் அல்லவா? கதை ஒன்றுதான்.

இதைத்தான் கட்டமைப்பு 'கன்ஸ்ட்ரக்ஷன்' என்கிறார்கள். கதை வேறு.

முதலில் கதையைப் பார்க்கலாம். யாராவது ஏதாவது செய்வதுதான் கதை... யார் செய்தார்கள் என்பதை விவரித்தால் குணச்சித்திரம். என்ன செய்தார் என்பதை விவரித்தால் அது நடைச்சித்திரம். ஆக்ஷன் செய்வது என்பதற்குத் தனி அடையாளம் கிடையாது. யாராவது செய்ய வேண்டும். அதற்கு யாராவது ஒரு கதாபாத்திரம் வேண்டும். கதாபாத்திரத்தை அவரது செயல் மூலம்தான் நம்மால்

புரிந்துகொள்ள முடியும். ஒருவன் நல்ல டென்னிஸ் விளையாட்டுக் காரன் என்றால் ஒரு தடவையாவது அவன் டென்னிஸ் ஆடுவதைக் காட்டினால்தான் புரியும். அல்லது டென்னிஸ் டிராயராவது போட்டுக் கொள்ள வேண்டும். யாராவது ஏதாவது செய்தால்தான்

யார் என்பது திரையில் புரியும். இதுபோல் யோசித்துப்பாருங்கள். கவிதை எழுதுபவனையோ, வயலின் வாசிப்பவனையோ, வேலை இல்லாதவனையோ காட்சி மூலம் காட்ட வேண்டுமெனில் எப்படி ஏலும்? எழுத்தில் காட்டுவது சுலபம் அவன் கவிஞன், அவன் கோபக்காரன், அவன் ஒரு துரோகி, அவன் கிரிகெட் நன்றாக விளையாடுவான், அவன் ஒரு பரணவன் என்று சுலபமாக எழுதி விடலாம். அனைத்தையும் திரையில் செயல்பாடுகளால்தான் காட்ட ஏலும்.

ஒரு கதாபாத்திரம் என்பது ஒரு மனிதன். தெரிந்த மனிதர்களைப் பற்றி எழுதலாம். அல்லது புதிய மனிதர்களை உண்டாக்கலாம். இதில் ஒரு யதார்த்தம் வேண்டும். அதற்குக் கொஞ்சம் மனோதத்துவம் தெரிந்திருக்க வேண்டும். மனோதத்துவம் பெரிய சாகரம். அதனால் மனிதர்களைப் பற்றி எழுதுவதற்கு மற்றொரு வழி இருக்கிறது. கவனிப்பது. மனிதர்கள் விதவிதமான சூழ்நிலைகளில் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதைக் கவனிப்பது. அதற்குச் சில விவரங்கள் அவசியம். உங்கள் கதாபாத்திரத்தின் வயசு என்ன என்பது தெரிய வேண்டும். காரணம் ஒரே சூழ்நிலையில் வயதானவர் ஒருவரும் இளைஞரும் வெவ்வேறு விதமாக நடந்துகொள்வார்கள்.

கதாபாத்திரத்தின் தொழில் தெரிய வேண்டும். வேலைக்காரரா, கல்லூரி முதல்வரா விஞ்ஞானியா வீட்டு மனைவியா விரிவுரை யாளரா அறிவுரையாளரா விற்பனைப் பெண்ணா கற்பனைப் பெண்ணா கம்ப்யூட்டர் ஆப்பரேட்டரா பரதநாட்டியமணியா-இந்த விவரம் தெரிந்தால் அவர்கள் பேச்சுக்கு ஓர் நுட்பமும் காரணமும் ஏற்படும்.

இதோடு உங்கள் கதாபாத்திரம் மற்றவர்களோடு எப்படிப் பழகுவார் என்பதும் தெரிய வேண்டும். கோபக்காரர், சிடுமூஞ்சி அல்லது சகஜமாகப் பழகுவார், சிரித்துப் பேசுவார், முணுக்கென்றால் கோபம் வந்துவிடும், சுலபமாகச் சிரிப்பார். இவையெல்லாம் மற்றவர் சார்ந்த விஷயங்கள்.

ஒரு நாவலில் போல சௌகரியம் திரைப்படத்துக்கு இல்லை. நாவலில் ஒரு பாத்திரத்தை வர்ணிக்கும்போது சோமசுந்தரம் மிக நல்லவர் என்று சுலபமாக எழுதிவிட முடியும், அதை நம்பவும் நம்புவார்கள். திரையில் அவர் மிக நல்லவர் என்பதை மற்ற பாத்திரங்களை வைத்துச் சொல்வது ஒரு முறை. 'அந்தாளு தங்கமானவன்பா.' ஆனால் அந்தப் பாத்திரங்களின் நம்பகத்தன்மை கதையில் மாறலாம். இதற்குப் பதில் சோமசுந்தரம் நல்லவர் என்பதை ஒரு காட்சி மூலம் காட்டுவது உத்தமமானது.

குணாதிசயமும் அதற்கான செயலும் ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டவை. தைரியம் என்பது ஒரு குணம். ஓர் ஆள் துப்பாக்கிச் சூட்டின் ஊடே நடந்து செல்லும் செயலைக்

காட்டினால் அவன் தைரியசாலி என்று உணர்ந்துகொள்ளலாம். கோழைத்தனம் என்பது மற்றொரு குணம். ஓர் ஆளைக் கன்னத்தில் தட்டுவதாகப் பாசாங்கு செய்யும்போது அவன் சட்டென்று அழ ஆரம்பித்தால் அவன் கோழை என்பது செயலால் புரிந்துவிடுகிறது.

திரைக்கதையில் குணங்களைச் செயல்கள் மூலம்தான் காட்ட வேண்டும். சிலசமயம் பேச்சுகள் மூலமும் குணாதிசயங்களைக் காட்ட முடியும். 'தெனாலி' படத்தில் கமல்ஹாசன் யாழ்ப்பாணத் தமிழில் தன் பயங்களைச் சொல்லும்போது அவரது குணாதிசயம் பளிச்சென்று புரிந்துவிடுகிறது.

செய்கைகள் குணாதிசயங்களைக் காட்டும் என்பதற்குச் சின்னச் சின்ன உதாரணங்கள் பல உண்டு. ஒரு பணக்காரன் சாலையில் செல்லும்போது கீழே கிடக்கும் நாணயத்தைப் பொறுக்குகிறான் என்றால் அவனைப் பற்றிப் பல விஷயங்கள் தெரிகிறது. அவன் கஞ்சன் அல்லது ஏழையாக இருந்து பணக்காரனானவன், பணத்தின மதிப்பு தெரிந்தவன், இவ்வாறு, அதேபோல் ஒருவனை வில்லன் என்று காட்ட அவன் கொலை, கொள்ளை செய்வதையோ அல்லது அவன் முகத்தில் சிவப்பு விளக்கு அடித்தோ, பக்கத்தில் பஞ்சடைத்த புலியைக் காட்டவோ தேவையில்லை. போகிற போக்கில் ஒரு நாய்க்குட்டியை உதைத்துவிட்டுப் போகிற செயலைக் காட்டினாலே போதும். ஜெமினியின் 'சந்திரலேகா' படத்தில் ரஞ்சன்தான் வில்லன். அவன் ஒரு காவலாளியை 'போ' என்று ஏவுவான். அதன்பின் அவன் நாய் அதை எதிரொலிக்கும் வகையில் லொள் என்று ஒரு முறை குலைக்கும். இது குணாதிசயத்தை விளக்கும் திரைக்கதை உத்திக்கு ஒரு நல்ல உதாரணம்.

ஒரு காலேஜ் ப்ரொபசர் காதல்வசப்படுவதும், ஓர் இளைஞன் காதல் வசப்படுவதும் வேறு வேறு விதமாக இருக்க வேண்டும். இதை எப்படிச் செய்கைகளால் காட்ட முடியும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஒரு திரைப்படத்தில் ஒரே மாதிரி குணம் உள்ள இரண்டு கதாபாத்திரங்களை அமைத்தால் குழப்பம் ஏற்படும். தேர்ந்த கதாசிரியர்களால்தான் இம்மாதிரியான பாத்திரங்களை அமைத்து எழுத முடியும். பாத்திரங்களின் குணாதிசயங்களுக்கிடையே வேறுபாடு இருந்தால் கதையில் பிடிப்பு வரும்.

சுருக்கமாகச் சொன்னால் பாத்திரப் படைப்பு என்பது ஒரு டாக்டரைப் பற்றி சொல்வது மட்டும் அல்ல. உங்கள் படத்தில் வரும் டாக்டர் விஜயகுமாரோ ஹூ சேனோ அவரைப் பற்றிச் சொல்வது.

## காட்சித் தொடர்

ஒரு திரைக்கதை என்பது சம்பவங்களின் தொகுப்பு. அந்தச் சம்பவங்கள் கதையின் நீரோட்டத்தைச் சார்ந்து இருக்கும். சுதாநாயகி ஒரு கல்லூரி மாணவி என்பது கதை என்றால் அதை நாம் எழுதும்போது சில காட்சிகள் மூலம் காண்பிக்க வேண்டும். அவள் வீட்டில் ஆரம்பிக்கலாம். அவசரமாகத் தன் புத்தகங்களை எடுத்துவைத்துக் கொள்கிறாள். 'அம்மா நான் கிளம்பிட்டேன்' என்று விடைபெறுகிறாள். இவ்வாறு காட்சித் தொடர்களை 'சீக்வென்ஸ்' என்பார்கள். ஒரு திரைக்கதையில் அதன் தேவைக்கேற்பப் பதினெட்டு இருபது சீக்வென்ஸ் இருக்கலாம். உதாரணங்கள்: கல்யாணம் ஒரு சீக்வென்ஸ். ஒரு பார்ட்டி ஒரு சீக்வென்ஸ். பிக்னிக் ஒரு சீக்வென்ஸ் கொலை நிகழ்வது ஒரு சீக்வென்ஸ்தான்! காமெடி ஒரு சீக்வென்ஸ்.

கதையைப் பொறுத்தவரையில் 'ராஜா அவளைக் கொல்கிறான்' என்ற ஒரு வாக்கிய வர்ணனை சீக்வென்ஸ் ஆகும்போது ராஜா ஓர் ஆயுதத்தைத் தேர்ந்தெடுப்பது, போன் செய்வது, தனியாக கார் ஓட்டிச்செல்வது இவ்வாறான சீன்கள் காட்சிகளைத் தொகுக் கிறோம். எனவே முதலில் கதையில் இவ்வாறான காட்சித் தொகுப்புகள் எத்தனை என்பதை அறிந்துகொள்வது அவசியம்.

மணி ரத்னம் இந்த சீக்வென்ஸ்களை ஒரு வரி வாக்கியங்களாக எழுதுவார். இவைகள் சீன்கள் அல்ல. ஆறு ஏழு சீன்களின் தொகுப்பு. ஒரே ஒரு நிகழ்ச்சியைக் காட்டுவதற்காக.

உதாரணமாக 'ரோஜா'வில் முதல் சீக்வென்ஸ் 'தீவிரவாதிகள்-அமானுல்லா கான் கைது'. இதுதான் சீக்வென்ஸ். இதில் ஐந்து சீன் இருக்கலாம். அடுத்த சீக்வென்ஸ் 'திருநெல்வேலி சுந்தரபாண்டிய புரம் ரோஜாஅறிமுகம்: இது ஒரு சீக்வென்ஸ். 'ரிஷி கடத்தப்படுகிறான்' இது ஒரு சீக்வென்ஸ். இவைகளுக்குள் பல சீன்கள் ஒளிந்து கொண்டிருக்கும்.

எனவே முதலில் கதையை இம்மாதிரியான தொகுப்புகளாக எழுதிக்கொள்ள வேண்டும்.

அதன்பின்தான் தனிப்பட்ட சீன்களை எழுத வேண்டும்.

இனி 'சீன்' என்றால் என்ன என்பதைத் தெளிவாகப் பார்ப்போம். ஒரு படத்தில் சீன் என்பதுதான் ஆதாரமான பகுதி. திரைக்கதையில் எழுபது அல்லது எண்பது சீன்கள்

இருந்தால் உத்தமம். ஒவ்வொரு சீனும் சராசரியாக இரண்டு நிமிஷத்துக்கு மேல் இருக்கக்கூடாது.

சீன் என்பது என்ன என்பதைப் பற்றி பல டைரக்டர்களிடம் குழப்பம் இருப்பதைக் காண்கிறேன். திரைக்கதையில் சீன் என்பது காலம். இடம் இவைகளில் எதிலாவது மாற்றம். ஒரே அறையில் காலையில் நடக்கும் சம்பவமும் இரவில் நடக்கும் சம்பவமும் வேறு வேறு சீன்கள். இது கால மாற்றம்.

இரண்டு பேர் பேசிக்கொண்டிருந்து தொடர்ந்து அடுத்த அறைக்குச் சென்றால் இதுவும் வேறு வேறு சீன்கள். இது இட மாற்றம். Cut to என்று வருவதெல்லாம் சீன் மாற்றம்தான். காமிராவை வேறு இடத்தில் வைப்பது சீன் மாற்றத்துக்கு அடையாளம்.

சீன் மாற்றம் என்பது ஒரு திரைக்கதையின் சுவாரஸ்யத்துக்குத் தேவையானது. ஒரே இடத்தில் பேசிப்பேசி மாய்ந்தால் அது நாடகமாகும். இதனால் கதைக் களத்தை மாற்றி அழகுணர்ச்சிக் காகவும், சில சமயம் கதையின் மூடுக்கு ஏற்றவாறும் மாற்றி அமைக்க வேண்டியிருக்கும். மேலும் சினிமா என்பது காட்சிக்கான ஊடகம். இதில் பல இடங்களைக் காட்டினால்தான் கதையில் சுவாரஸ்யம் அதிகரிக்கும்.

கதாநாயகன் கதாநாயகியைச் சந்திக்கும் இடத்தை எங்கு அமைப்பீர்கள்? அது ஒரு டிஸ்கோவில் நிகழலாம். கோவிலில் நிகழலாம். ரயில் நிலையத்தில் நிகழலாம். கதைக்கு எது சுவாரஸ்யமான களமோ அதைத் தேர்ந்தெடுங்கள். இதற்காக சீனை அமைக்கும் போது அதன் களம் கதையின் இயல்புக்கு ஏற்றவாறு அமைய வேண்டும். ஒரு டயலாக் வரப்போகிறது என்பதற்காக சீனை. பின்னணியை மாற்றுவது பழைய டெக்னிக் இன்றும் சில பழைய தமிழ்ப் படங்களில் இதை நீங்கள் பார்க்கலாம். வீட்டுக்குள் பேசிக்கொண்டிருக்கும்போது வில்லன் கதாநாயகியை அழைத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் ஒரு மலைப்பாதையில் சென்று ஓர் இடத்தில் நிறுத்தி, நீ மட்டும் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்றால் நான் அந்த முள்செடி மாதிரி ஆகிவிடுவேன் என்று அருகே உள்ள கள்ளிச்செடியைக் காட்டுவான். இவ்வாறு பலவந்தமாக சீனை நம் மேல் திணிக்கக் கூடாது.

பேசிக்கொண்டே இருக்கும்போது காரணமில்லாமல் சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து சுவிட்ஸர்லாந்துக்கு மாறுவதும் தப்பாட்டம். இந்தப் பாவச்செயல் பாட்டுக்களோடு போகட்டும். தேவையில்லாமல் இடம்மாற்றுவது நல்ல திரைக்கதையில்லை. இடமே மாற்றாமல் இருப்பது நாடகம்.

இதன் ஆதார விதி-கதைக்களத்தின் ஆரவாரமும் அலங்காரமும் கதையில் நம் நாட்டத்தைக் கலைக்கக்கூடாது. சென்ட்ரல் ஸ்டேஷன் இரைச்சலில் காதல் டயலாக் வைக்கக்கூடாது. கடற்கரையிலோ பார்க்கிலோ வைக்க வேண்டும். எளிய விதிகள்தான் கதையின் மூடுக்கு ஏற்றவாறு கதைக்களம். இதில் படம் பார்ப்பவருக்குக் கவனக் கலைப்புகூடாது. இவங்க எப்படி இங்க வந்தாங்க என்கிற கேள்வி எழுந்தால் அவர்கள் பேசுவதில் கவனம் போய்விடும். '

சீனை எங்கே ஆரம்பிக்க வேண்டும் என்கிற கேள்வி அடுத்தது எழும் நவீன சினிமாவின் விதி சீனை எவ்வளவு லேட்டாக முடியுமோ அத்தனை லேட்டாகத் துவங்குங்கள் என்பது. உதாரணமாக இந்த சீனை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு நங்கள். ஒரு ரெஸ்டாரண்ட்டில் இருவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆர்டர் செய்வது, வந்து சாப்பிட்டுவிட்டு, பில் யார் கொடுப்பது என்று லேசாகச் சண்டை போட்டுவிட்டு, பில் கொடுத்துவிட்டுப் புறப்படுகிறாற்போல சீன். புறப்படும்போது அவர்களில் ஒருவன் மற்றவனிடம் 'பை தி வே ஸ்வேதாவைப் பற்றி ஒண்ணு கேள்விப்பட்டேன்' என்கிறான். இந்த சீனை எங்கே ஆரம்பிப்பீர்கள்?

ஆர்டர் செய்யும்போதா, சாப்பிடும்போதா, பில்லுக்குச் சண்டை போடும்போதா? இந்த சீனில் உண்மையான ஆரம்பம் சாப்பிட்டு முடித்ததும் 'பை தி வே' என்கிறானே அங்குதான். அவர்கள் சாப்பிட்டு முடித்துவிட்டார்கள் என்பதை ஒரே விஷுவலில் முடித்துவிட்டு அந்த ஸ்வேதா மேட்டரை, போகிறபோது சொல்வதை மட்டும் எழுத வேண்டும்.

மறுபடி அந்த விதி. ஒரு சீனுக்குள் எவ்வளவு தாமதமாக நுழைய முடியுமோ, அதே போல் சீனை எங்கு முடிப்பது என்பதும். சொல்ல வந்த விஷயத்தைச் சொன்னதுடன் வெட்டிவிட வேண்டும். சொன்னபின் இழுக்கக்கூடாது.

உதாரணமாக 'சேகர் இந்த காரியத்தைச் செய்துட்டான் சரத்' இது வசனம். இந்த இடத்தில் முடிகிறது. அது தெரியாமல் 'சேகரா இப்படி செய்துட்டான்?'

'ஆமாம்பா.'

'நம்ம சேகரா?"

'ஆமாம் நம்ம சேகர்'

இதெல்லாம் அனாவசியமாக சீனை இழுப்பதாகும்.

சீனுக்குள் லேட்டாக வா. சீக்கிரம் வெளியேறு. இதுதான் சீன் அமைப்பின் தங்க விதி.

Enter the scene late and leave early.

இப்போது பகுதி பகுதியாகக் கதையை அமைப்பதைப் பற்றிப் பேசலாம்.

## திரைக்கதை வடிவம்

திரைக்கதை வடிவம் என்பது மிக எளிமை யானது. உங்கள் வேலை ஒரு கதையைக் காட்சியாகவும் உரையாடலாகவும் சொல்ல வேண்டியது. கேமிராவை இங்கே வைக்க வேண்டும், காமிரா மேலிருந்து கீழாகக் கதாநாயகியை அணுகி, அவள் கண்களில் முடிகிறது போன்ற குறிப்புகள் எல்லாம் திரைக்கதை எழுத்தாளனின் வேலையல்ல.

'கதாநாயகியின் முகத்தில் கோபம்' -இந்தக் குறிப்பு மட்டும்தான் உங்கள் வேலை. காமிராக் கோணங்களை விவரித்து உங்கள் நேரத்தையும் டைரக்டரின் நேரத்தையும் விரயம் செய்யாதீர்கள்.

அமெரிக்காவின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ஸ்காட் ஃபிட்ஸ்ஜெரால்டு திரைக்கதை எழுதும் கலையைச் சரியாக புரிந்துகொள்ளாமல் காமிரா கோணங்களையெல்லாம் எழுதி எல்லாவற்றையும் மாற்ற வேண்டியிருந்தது. காமிரா கோணங்கள் உங்கள் வேலையல்ல. கதை சொல்வதுதான் உங்கள் வேலை. ஸ்கிரிப்ட் எழுதுவது நீங்கள். டைரக்டரின் வேலை அதைப் படமாக்கு வது. கேமிராமேனின் வேலை விளக்குப்போடுவது. படம் எடுப்பது சிம்பிள். அவரவர் வேலையை அவரவர் பார்த்துக்கொள்ளட்டும். சினிமா ஒரு கூட்டு முயற்சி. அதை விட்டுவிட்டு 'காட்சி துவங்கும் போது high speedல் ஒரு காப்பிக் கோப்பை விழுந்து உடைகிறது. க்ளோசப்பில் அதன் மேல் ஒரு கண்ணீர்த்துளி பட்டுத் தெறிக்கிறது.

இதெல்லாம் வேண்டாத வேலை.

ஒரு காட்சியை எந்த அளவுக்கு வர்ணிக்க வேண்டும்? இதைப் பற்றிய கருத்து வேறுபாடுகள் உள்ளன. என் போன்ற எழுத்தாளனுக்கு ஒரு காட்சியை விவரிப்பது ஐஸ்க்ரீம் சாப்பிடுவது போல. அந்த அளவுக்கு detail விவரங்கள் டைரக்டருக்குத் தேவையில்லைதான். நான் முன்பு சொன்னதுபோல் ஒரு பாரா எழுதுவதை அவர் ஒரு ஷாட்டில் முடித்துவிடுவார். இருந்தும் கூடிய அளவுக்கு விவரமாகக் காட்சியை வர்ணிப்பது நிச்சயம் டைரக்டருக்கு உதவி செய்யும் காட்சி அமைப்பை விவரிப்பது உங்கள் திறமையைப் என்று. எதிர்பார்க்கக் கூடாது. மணிரத்னம் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் இரண்டு காட்சிகளையும், 'அலைபாயுதே' திரைப்படத்தில் பரபரப்பான கடைசிக் காட்சிகளையும் சிறுகதை வடிவத்தில் எழுதித்தரச் சொன்னார்.

'அமுதாவும் அவனும்' என்ற சிறுகதையாகத் தினமணியிலும் 'மனைவியைத் தேடி' என்கிற தலைப்பில் கல்கி மலரில் குறு நாவலாகவும் வெளிவந்திருக்கின்றன. 'வெளியேற்றம்' என்கிற கதை இன்னும் பிரசுரமாகவில்லை. அதைப் பின்னிணைப்பாகக் கொடுத்தி குக்கிறேன் என் கதையை அவர் எப்படி விஷ வலாக்கியிருக்கிறார் என்பதை நீங்கள் கவனிக்கலாம். பெரும்பாலும், 'விடைகொடு எங்கள் நாடே' என்கிற உருக்கமான பாடலாகவும் அம்மனாச்சி கோவில் காட்சிகளாகவும் அமைத்தார். இருந்தும் இந்தச் சிறுகதை அவரது கற்பனைக்கு உதவியது.

இப்போது ஒரு முழுத் திரைக்கதைக்கும் உதாரணத்தைப் பார்க்க லாம் 'இரண்டு மணி நேரப் படத்தையும் கொடுத்தால் அதைப் படிக்கப் பொறுமை இருக்காது. அதனால் இதன் firstact முதல் அங்கத்தை மட்டும் கொடுத்திருக்கிறேன் ( பின்னிணைப்பு 2) இது திரைப்படமாக இன்னும் வரவில்லை. ஆனால் காப்பிரைட் உரிமை களுக்கு உட்பட்டது. இதன் அமைப்பில் நீங்கள் கவனிக்கவேண்டியது முதல் அங்கத்தின் அங்க அடையாளங்கள் கதையின் அத்தனை பாத்திரங்களையும் கதைக் களனையும் அறிமுகப்படுத்தியுள்ளது. அதனுடன் கதையின் முக்கிய சம்பவம் inciting incident. அதையும் முதல் பத்து நிமிஷத்துக்குள் சொல்லிவிடுவது. கதையின் மற்ற பகுதி இதன் விளைவால் வருவது என்பதை சுலபமாக நீங்கள் உணர முடியும். உணர வேண்டும். இல்லையெனில் இத்தனை தூரம் இந்தப் புத்தகத்தைப் படித்ததற்குப் பயன் இல்லை. இந்த வடிவம் என் வடிவம். ஓர் எழுத்தாளனாகிய நான் அமைத்துக் கொண்ட திரைக்கதை வடிவம் திரைக்கதையின் பிதாமகர் என்று கருதப்படும் paddy Cheyefsky பாணி இது. இத்தனை விவரங்கள் நீங்கள் எழுத வேண்டும் என்கிற கட்டாயமில்லை. நல்ல திரைக்கதை அமைப்பதற்கான விதிகள் எளியவை.

ஒரு சினிமாவில் எல்லாவற்றையும் சொல்ல முயற்சிக்கும்போது. சிக்கல் வரும். ஒரு ஐடியாவைத் தெளிவாகச் சொன்னாலே போதும். ஏ.வி.மெய்யப்பன் அவர்கள் தன்னிடம் கதை சொல்ல வருபவர்களிடம் 'எங்கே பாட்டுப் புஸ்தகத்தில் வராப்போல கதையைச் 'சொல்லு' என்பாராம். அதைவிடச் சுருக்கமாக ஒரு வரியில் சொல்ல முடிந்தால்கூட நல்லது. இதைத்தான் 'ப்ரிமைஸ்' என்பார்கள்.

**திரைப்படங்களில் இசையமைப்பு**

திரைப்படங்களில் பாடப்படுகின்ற பாடல்களுக்கும். நடைபெறுகின்றன பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும், இசையமைப்பு பெரிதும் உறுதுணை புரிகின்றது. காதல் காட்சி, அழுகைக்

காட்சி, சண்டைக்காட்சி, எதிர்நிலைத்தலைவனின் கர்ச்சனைகள், உரையாடல்களின் ஏற்ற இறக்கங்கள் யாவற்றுக்கும் இசையமைப்பு பெரும்பங்கு பெறுகின்றது.

அன்னக்கிளியில் அறிமுகமான இளையராசாவின் இசைத் தொண்டால் தமிழ்த் திரைப்படங்கள் பொற்காலம் பெற்றன . பட்டி தொட்டிகளில் பயிலப்பட்ட, பாடப்பட்ட நாட்டுப்புறப் பாடல்கள் பலவும் இளையராசாவின் இசையமைப்பில் இன்று திரைப்பாடல்களாக மாறின. இயக்குநர் மணிரத்தினம் உருவாக்கிய " ரோசா" திரைப்படம் வழி ஏ.ஆர்.ரகுமான் இன்று ஆசிய கண்டத்தின் அரும்பெரும் இசையமைப்பாளராகத் திகழ்கின்றார். இவர் இசையமைத்த " சின்னச்சின்ன ஆசை" என்ற பாடல் எல்லா மொழிகளிலும் உருவாக்கப்பட்டு மக்கள் உதடுகளில் ஒலிக்கப்படுகின்றது. தேனிசைத் தென்றல் தேவா, இராஜ்குமார், சிற்பி போன்றோர் இசையமைப்புகள் என்றும் இன்பம் தருவனவாகும்.

**"காயும் ஒரு நாள் கனியாகும் நம்**
**கனவும் ஒரு நாள் நனவாகும்**
**காயும் கனியும் இலையாகும் நம்**
**கனவும் நினைவும் நிலையாகும்"**

"உழைக்காமல் சோம்பேறிகளாகத் திரியும் மனிதர்களை, வாய் பேசாத உயிர்களை வதைத்து உண்ணும் வெறி பிடித்த நரி " எனவும், உடல் வளைத்து நன்றாக நாம் உழைத்தால் உலகத்துக்கே நன்மை கிட்டும் எனவும் பட்டுக்கோட்டையார் கூறுகின்றார்.

**"செய்யும் தொழிலே தெய்வம் அந்த**
**திறமைதான் நமது செல்வம்**
**கையும் காலுந்தான் உறுதி - கொண்ட**
**கடமைதான் நமக்குப் பதவி"**

"உழைக்கின்ற நோக்கம் உறுதியாயிட்டா கொடுக்கின்ற நோக்கம் வளரும் எனவும், மனம் கீழும் மேலும் புரளாது" எனவும் உழைப்பின் மேன்மையை உணர்த்துகின்றார். கண்மூடித்தனமான கருத்துக்களை காதில் வாங்கிக் கொண்டு நாளுக்கு நாள் செத்துச் செத்து வாடி வதங்கி வாழ்க்கை நடத்தும் மானிடப் பூச்சிகளுக்குப் பட்டுக்கோட்டையார் தரும் துணிச்சல் என்றும் பயனுள்ளதாகும்.

**"வேப்பமர உச்சியில் நின்று**
**பேயொன்று ஆடுதுன்னு**
**விளையாடப் போகும் போது - உன்**

**சொல்லி வைப்பாங்க**

**வீரத்தைக் கொழுந்திலே**

**கிள்ளி வைப்பாங்க**

**வேலையற்ற வீணர்களின்**

**மூளையற்ற வார்த்தைகளை வேடிக்கையாகக் - கூட**

**நம்பிவிடாதே - நீ**

**வீட்டுக்குள்ளேயே பயந்து கிடந்து**

**வெம்பி விடாதே"**

சோம்பலால் ஏற்படும் தோல்விகளைப் பட்டுக்கோட்டையார் பின்வருமாறு படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

**"போர் படைதனில் தூங்கியவன்**

**வெற்றி இழந்தான் உயர்**

**பள்ளியில் தூங்கியவன்**

**கல்வி இழந்தான்**

**கடைதனில் தூங்கியவன்**

**முதல் இழந்தான் கொண்ட**

**கடமையில் தூங்கியவன்**

**புகழ் இழந்தான்".**

**கண்ணதாசன்**

கண்ணதாசன் பொதுவுடைமைக் கொள்கைக்குச் சிறந்த விளக்கம் தருவார்.

**"எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கு**

**இல்லாமை இல்லாத நிலை வேண்டும்**

**வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கி**

**வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடமை"**

**"அச்சம் என்பது மடமையடா**

**அஞ்சாமை திராவிடர் உடமையடா**

**ஆறிலும் சாவு, நூறிலும் சாவு**

**தாயகம் காப்பது கடமையடா'**

என்பவை நாட்டுப்பற்றுக்கு இவர் தந்த நல்ல முத்திரைகளாகும்.

மாசு மறுவற்ற வைரக்கற்களாகிய மழலைச் செல்வங்களுக்கு அன்று முதல் இன்று வரை கவிஞர்கள் ஆயிரமாயிரம் விளக்கங்களைத் தந்துள்ளனர். எனினும் கவியரசர் கண்ணதாசன் விளக்கம் நம்முள்ளத்தைக் கொள்கை காள்கை கொள்கின்றது.

**"மழைகூட ஒரு நாளில் தேனாகலாம்**
**மணல்கூட ஒரு நாளில் பொன்னாகலாம்**
**ஆனாலும் அவையாவும் நீ ஆகுமோ**
**அம்மா என்றழைக்கின்ற சேயாகுமோ"**

**போயும் போயும் மனிதனுக்கிந்த புத்தியைக் கொடுத்தானே" எனவும், "நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஏதுமில்லை" எனவும்,**

**"பரமசிவன் கழுத்திலிருந்த பாம்பு கேட்டது**
**கருடா சவுக்கியமா - யாரும்**
**இருக்குமிடத்தில் இருந்து கொண்டால்**
**எல்லாம் சவுக்கியமே கருடன் சொன்னது**
**அதில் அர்த்தமுள்ளது"**

**"தெய்வம் தந்த வீடு வீதி இருக்கு**
**இதில் நீயென்ன அதில் நான் என்ன ஞானப்பெண்ணே**

என்கிறார்.

பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்த் திகழ்கின்ற பெருமை கவிஞர் வாலியைச் சாரும்.

**"கருணையிருந்தால் வள்ளலாகலாம்**
**கடமை இருந்தால் வீரனாகலாம்**
**இரண்டும் இருந்தால் பேரை வாங்கலாம்**
**பேரை வாங்கினால் ஊரை வாங்கலாம்"**

**"கண்போன போக்கிலே கால் போகலாமா**
**கால்போன போக்கிலே மனம் போகலாமா**
**மனம்போன போக்கிலே மனிதன் போகலாமா**
**மனிதன்போன பாதையை மறந்து போகலாமா?"**

எனவும் இவர் பாடிய பாடல்கள் என்றும் சிந்தனைக்குரியதாகும்.

**போக்கு**

1. இன்றைய சில படங்களில் பாடல்கள், கதைகள் நன்றாக இருப்பினும் சிற்சில நேரங்களில் அதிக நாட்கள் ஓடாத நிலை காணப்படுவது அறியத்தக்கது. (சான்று - சங்கமம் திரைப்படம்).

2. ஆனந்தம், சந்திரமுகி, சிவாஜி, ஹேராம். முதல்வன், அந்நியன், காதல் கோட்டை, காதலுக்கு மரியாதை, ஆட்டோகிராப், பிரண்ட்ஸ், கஜினி, இந்தியன், ஜென்டில்மேன், வாலி, ஆடுகளம், சாமி, குஷி, எங்கேயும் எப்போதும் போன்ற திரைப்படங்கள் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவைகளாகும்.

3. சிறந்த கதை, இசையுடனும், கருத்துக்களுடனும் கூடிய பாடல், சிற்சில சண்டைக்காட்சிகள், விறுவிறுப்பான திருப்புமுனையுடன் கூடிய அளவு (சோகம் / இன்பம்) - இவைகளுடன் திரைப்படம் எடுக்கப்படின் ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பெறும் என்பது உறுதி.

4. நல்ல இசையுடன் கூடிய பாடல்கள் ரசிகர்களின் உதடுகளை விட்டு என்றும் நீங்காது எனலாம்.

5. சிற்சில ஆபாசக் காட்சிகளைத் தவிர்ப்பது நலம்.

6. ரசிகர்கள் கேட்கிறார்கள் / விரும்புகிறார்கள் என்ற போர்வையில் ஆபாசத்தைத் திரைப்படத்தில் திணிக்கும் போக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை.

எனவே, இன்றைய திரைப்படத்தின் போக்கு சரியான பாதையில் சென்று கொண்டிருந்தாலும், குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க நல்லன கொண்டு வாழ்வில் எல்லா நலமும் வளமும் பெற்று ரசிகர்கள் வாழ்தல் நன்றாம்.

**கலைப்படங்கள்**

திரைப்படத்தில், பொழுதுபோக்கு அம்சங்கள் குறைவாகவோ அல்லது மிகுதியாகவோ கலந்து விடுவது ஓர் இயல்பாக இருக்கிறது. இப்பொழுதுபோக்கு அம்சங்கள் மூலக்கதையின் தீவிர உணர்வு நிலையைச் சிதைப்பதாக ஆகிவிடலாம். இப்படிப்பட்ட திரைப்படங்கள் வணிக நோக்குடன் தயாரிக்கப்படுபவை ஆகும். செல்வாக்கு உள்ள நடிகர், நடிகைகளுக்கென்று கதை உருவாக்கப்பட்டு திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. அவை லாபநோக்குக் கொண்ட வணிகத் திரைப்படங்கள் ஆகும். இப்போக்கை மிறியதாக, பொழுதுபோக்கு அம்சங்கள் தவிர்த்து நடிகர் செல்வாக்கை நம்பாமல் தீவிரம் சார்ந்த சமூகப் பிரச்சனைகளை அல்லது மனித உணர்வுகளை எதார்த்தத்தோடு படம்பிடித்துக் காட்டும்

முறைப்படி தோன்றிய படங்களே கலைப்படங்கள் என்று அழைக்கப்பட்டன கலைப்படங்களின் தோற்றுவாய் ஐரோப்பியத் திரைப்படங்களாகும்.

சுவீடிஸ் திரைப்படக் கலைஞர் இங்மர் பெர்க்மானின், "ஏழாவது முத்திரை" (Seventh Seal) திரைப்பட உலகில், நிகரற்று விளங்கும் கலைப்படைப்பாகும். கலைப்படங்களின் குணம், சமூகச் சிக்கல்களை மிகையின்றி, எதார்த்தத்தோடு, பார்வையாளரின் மன உணர்வுகளைத் தொட்டு உசுப்பும் வகையில் எடுத்துக்காட்டுவது ஆகும்.

கலைப்படங்களின் ஆதார அம்சம் சமூகத்தின் நிகழ்வுகளை எதார்த்தமாகப் பிரதிபலிப்பதுதான். இதற்கு ஒரு நலல எடுத்துக்காட்டாக விக்டோரியா டிசிகாவின் சைக்கிள் திருடன் ( Bycycle thieves) என்ற இத்தாலியப் படத்தைக் கூறலாம். இரண்டாம் உலகப் போரின் முடிவில் ரோம்நகரின் அவலம் அளவு கடந்ததாகி விட்டவதை டிசிகா இப்படத்தில் படம் பிடித்துக் காட்டினார். உலகின் தலைசிறந்த பத்து திரைப்படங்களில் இதுவும் ஒன்றாக மதிக்கப்படுகிறது. இத்திரைப்படத்தைப் பார்த்தபிறகுதான் சத்யஜித்ரே திரைப்படத்தின் மேல் விருப்புற்று, "பதேர்பாஞ்சாலியை" எடுத்து உலகப்புகழ் பெற்றார்.

புனைவுகளின்றி, மிகையின்றி, பொழுதுபோக்கு அம்சங்களின்றி, நடிகர்,நடிகையர் மதிப்புகளின்றி, மனித வாழ்வின் சாரத்தை, எதார்த்தத்தோடு பேசுவது எதுவோ அதைக் கலைப்படைப்பு என்று கூறிவிடலாம். ஜப்பானின் அகிராகுரோசோவா உலகப் புகழ்பெற்ற கலைப்படங்களை உருவாக்கினார். அவருடைய ரசோமான், ஏழு சாமுராய் வீரர்கள் ( Seven Samuraise), ரத்த சிம்மாசனம் (Thrown of Blood) ஆகியன குறிப்பிடத்தக்கன.

இந்தியாவின் ஆன்மாவை சத்யஜித்ரே தம் திரைப்படங்கள் மூலம் காட்டினார். இந்தியாவில் நகரக் குடியேற்றம், எப்படி மனிதனின் இயல்பான உணர்வுகளைச் சாகடிக்கிறது என்பதை பதேர்பாஞ்சாலியில் காட்டினார் ரே. தலைமுறை இடைவெளி பிரச்சனையை அபராஜிதாவிலும் படம்பிடித்தார். வங்கமொழியில், கலைப்படங்கள் மிகுதியாக உருவானதற்கு ரே காணரமாவார். அவரைப் பின்பற்றி, மிருணால்சென், ரித்விக், கட்டக் போன்றோரும் கலைப்படங்களை எடுக்கின்றனர்.

இந்திய அளவில் வங்க மொழிக்கு அடுத்து, மலையாளத்திலும் கன்னடத்திலும் கலைப்படங்கள் உருவாக்கப்படுகின்றன. ஜான் ஆபிரகாம், அரவிந்தன், அடூர் கோபாலகிருஷ்ணன் போன்றோர் மலையாளத்தில் சிறந்த கலைப்படங்களை உருவாக்கியுள்ளனர். கன்னடத்தில், சமஸ்காரா போன்ற கலைப்படங்கள் வெளிவந்துள்ளன.

தமிழில், கலைப்பட முயற்சியில் ஈடுபட்டோரும், வெற்றிபெற்றோரும் மிகச் சிலரே. கலைப்படங்கள் பெரும்பாலும் வணிகரீதியான வெற்றியைப் பெறுவதில்லை. நாடகத் தன்மையில் எடுக்கப்பட்டு வந்த தமிழ்த் திரைப்படங்களைத் திரைப்படத்திற்கே உரிய இயல்புகளோடும், சமூக எதார்த்தத்தோடும் எடுத்தவர் ஸ்ரீதர். நெஞ்சில் ஓர் ஆலயம், கல்யாணப் பரிசு போன்ற ஸ்ரீதரின் படங்கள் கலைப்படங்களின் சாயலைக் கொண்டிருந்தன.

சிறந்த இலக்கியவாதியான ஜெயகாந்தன் தமிழ்த் திரைப்பட உலகில் கால் வைத்து அரிய கலைப்படங்கள் சிலவற்றை உருவாக்கினார். உன்னைப் போல் ஒருவன், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், யாருக்காக அழுதான், "ஒரு வீடு, ஒரு மனிதன், ஒரு உலகம்" போன்ற திரைப்படங்களை அவர் எடுத்தார். இவர் திரைக்கதையில் வெளியான படமே சில நேரங்களில் சில மனிதர்கள்.

ஜெயகாந்தனின் இத்திரைப்படங்கள் அனைத்தும் அவருடைய நாவல்களின் கதைகளாகும். திரைப்படக் கல்லூரியில் படித்துவிட்டு வந்த ருத்ரய்யா எடுத்த " அவள் அப்படித்தான்", "ஒரு கிராமத்து அத்தியாயம்" ஆகிய இரு திரைப்படங்களும் தமிழின் சிறந்த கலைப்படங்களாகப் போற்றப்படுகின்றன. மகேந்திரனின் திரைப்பட நுழைவு, வெம்மையில் ஒரு குளிர்ச்சியான தூறலைப் போன்றது. மிகுதியான பார்வையாளர்களைப் பார்க்கத் தூண்டிய கலைப்படங்களை மகேந்திரன் வெளியிட்டார். "முள்ளும் மலரும்", "உதிரிப்பூக்கள்" அவரின் மிகச்சிறந்த கலைப்படைப்புகளாகும். மகேந்திரன் தம் படைப்பிற்குரிய கதைகளை இலக்கியத்திலிருந்தே தேர்ந்தெடுத்துக் கொள்கிறார். புதுமைப்பித்தனின் "சிற்றன்னை" என்ற கதையைத் தழுவி " உதிரிப்பூக்களையும், உமாசந்திரனின், "முள்ளும் மலரும்" என்ற நாவலை அதே பெயரிலும் திரைப்படங்களாக்கினார். அண்மையில் கந்தர்வனின் சாசனம் என்னும் சிறுகதையை அதே பெயரில் குறும்படமாக வெளியிட்டுள்ளார். பாலுமகேந்திரா, கலைத்தரமுள்ள சில படங்களை இயக்கியுள்ளார். மூடுபனி, மூன்றாம்பிறை, வீடு, சந்தியா ராகம் ஆகியன பாலுமகேந்திராவின் கலைத்தரமுள்ள படைப்புகளாகும். தமிழின் சிறந்த கலைப்படைப்புகளில் ஒன்றாக துரை இயக்கிய "பசி" போற்றப்படுகிறது.

**புத்தலைப்படங்கள் (1990)**

புத்தலைப்படங்கள் ( New Waves) என்ற அடையாளத்திற்குள் எந்தத் தமிழ்த் திரைப்படமும் அடங்காது. புதிய எதார்த்தம் (Neo realism) என்ற தன்மையில், இத்தாலியப் பட இயக்குநர் டிசிகாவின் படங்கள் வெளிவந்ததை அடுத்து இத்தாலியிலும் பிரான்சிலும் புதிய எதார்த்தவகை திரைப்படங்கள் எடுக்கப்பட்டன. மையக்கருத்திற்கு கதைச் சட்டங்களை உருவாக்காமல், இயல்பாக நடக்கும் நிகழ்வுகளில் நடிகர்களைத் தொடர்பு கொள்ளச் செய்து,

படப்பிடிப்புக் கருவிகளைத் தெருவிற்குக் கொண்டுவந்து புதிய எதார்த்த வகைக் கலைஞர்கள் படத்தை உருவாக்கினார்கள். ஒரு வகையில் எதார்த்தக்கலை என்பதும் ஒரு பாவனைதான் அசலான வாழ்விற்கும் எதார்த்தக்கலைக்கும் இடைவெளி உண்டு. ஆனால் புதிய எதார்த்த திரைப்படங்கள் அசலான வாழ்வோடு நெருங்கி வரக்கூடியதாக இருந்தன.

புதிய எதார்த்தவகை திரைப்படங்களின் தொடர்ச்சியாகப் புதிய அலை திரைப்படங்கள் உருவாயின. இத்திரைப்படங்கள் சமூக நிகழ்வுகளையும் சிக்கல்களையும் நெருங்கிப் படம்பிடித்ததோடு, அந்நிகழ்வுகளின் மீது கடுமையான விமர்சனங்களையும் முன்வைத்தன. சமூகப் பொறுப்பு என்பதிலிருந்து சமூகமாற்றம் என்ற கருதுகோளைப் புதிய அலை திரைப்படங்கள் முன்மொழிந்தன. புதிய அலை திரைப்படங்கள் பிரான்சில் தான் முழுவீச்சோடு தயாரித்து வெளியிடப்பட்டன. இத்திரைப்படங்களை உருவாக்கியவர்களாக கோடார்ட், ட்ரூபா புனவல் ஆகியோரைக் கூறலாம். கோடார்ட் கம்யூனிச அறிவியல் அணுகுமுறைகளைக் கொண்டு சமுதாய நிகழ்வுகளை மதிப்பிட வேண்டும் என்று தனது திரைப்படங்களில் வாதித்தார். பெரும்பாலும் புதிய அலைத்திரைப்படங்கள் கலைப்பூர்வமான உணர்வுகளை மனதில் எழுப்பி, அறிவுத்தளத்தில் விவாதங்களை எழுப்பின. இப்படியான சாயலில் தமிழில் திரைப்படங்கள் உருவாகவில்லை. மனித நடவடிக்கைகளின் அனைத்துப் பிரிவுகள் பற்றியும் செய்திப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**திரைப்படத் தணிக்கை**

இந்தியாவில் திரைப்படங்கள், திரைப்பட தணிக்கை குழுவின் அனுமதி பெற்ற பின்னரே திரையிட முடியும்.1952ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சினிமோடொகிராப் சட்டப்படி இந்தக்குழு அமைக்கப்படுகிறது. மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது. கல்கத்தா, சென்னை, பெங்க@ர், திருவனந்தபுரம் ஆகிய இடங்களில் மண்டல அலுவலகங்களைக் கொண்டுள்ளது. ஆபாசம், வன்முறை இவைகளைத் தடை செய்ய இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அண்மைக்காலம் வரை தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இருந்த இந்தத் துறை சமீபத்தில் உணர்வுகளுக்கும், நலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தணிக்கைக் குழு செயல்படுகிறத. கலை உணர்வு, புதிய உத்திகளுக்கு மதிப்புக் கொடுத்தல், அவைகளுக்கு தடை செய்யாமல் பார்த்துக் கொள்ளுதல் போன்ற பணிகளிலும் திரைப்படத் தணிக்கை குழு செயல்படுகிறது. நமது நாட்டின் பண்பாட்டிற்கேற்ப, வாழ்க்கைக்கேற்ப திரைப்படம் முழுவதும் ஆராயப்பட்டு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

எவ்விதத் தடையுமில்லாமல் படம் திரையிட " யு" என்ற சான்றிதழும், தடை செய்யப்பட்ட, பதினெட்டு வயதிற்கு மேல் உள்ளவர்கள் பார்ப்பதற்குரிய படங்கள் திரையிட "ஏ" என்ற சான்றிதழும் வழங்கப்படுகிறது.

**பொதுக் கொள்கைகள்**

1. படங்களைப் பார்ப்பவரின் ஒழுக்கத்தைக் கெடுப்பதாக உள்ள எந்தப்படமும் அனுமதிக்கப்பட மாட்டாது. குற்றங்கள், கொடுமைகள், தீய செயல்கள், பாவங்கள் ஆகியனவற்றிற்கு ஆதரவளிக்குமாறு படங்கள் தயாரிக்கப்படக்கூடாது.

2. இயல்பான தினசரி வாழ்க்கைக்குத் தேவையான பொழுதுபோக்கு என்பது மட்டுமே அனுமதிக்கப்படும்.

சட்டங்களைப் பழிப்பதோ, அவற்றை மீறி நடக்கத் தூண்டப்படுவதோ அனுமதிக்கப்பட மாட்டாது.

**பின்பற்றும் முறை**

1. சட்டம், நீதிகளுக்கு எதிரான பிரச்சாரம், நீதி, சட்டம் இவற்றை மீறி நடப்பது ஆகியனவற்றைக் காட்டக்கூடாது.

2. பிறர் கற்றுக் கொள்ளும் முறையில் கொலைக்காட்சிகளைக் காட்டக்கூடாது. கோரக் கொலைகளை விளக்கிக் காட்டக்கூடாது. பழிக்குப்பழி வாங்குதலை நியாயப்படுத்திக் காட்டக்கூடாது.

3. பிக்பாக்கெட், பணப்பெட்டிகளை உடைப்பது, இதர வகையான திருட்டு, புகைவண்டி, பாலம், சுரங்கம் இவற்றை வெடி வைத்துத் தகர்ப்பது ஆகியனவற்றை விளக்கமாகக் காட்டுதல்கூடாது. தீ வைப்புக் காட்சிகள். துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கும் இது பொருந்தும். கடத்தல் பொருள்களைக் கொண்டு போவதையும் கள்ளச்சாராயம் தயாரிப்பதையும் காட்டக்கூடாது.

4. மதுபானங்கள் அருந்தும் காட்சிகளைக் காட்டக்கூடாது. மதுவிலக்குப் பிரச்சாரப்படங்களின் மதுவின் தீமைகளை விளக்குவதற்குக் காட்டப்படும் காட்சிகளும், மது அருந்துவதை மறுப்பதற்கோ, வெறுக்கச் செய்வதற்கோ, அதை நஞ்சு என்றோ, அநாகரிகம் என்றோ . சுகாதாரக்கேடு என்றோ, சட்டவிரோதம் என்றோ விளக்குவதற்கோ காட்டும் படத்தில் மதுபானக் காட்சிகள் அனுமதிக்கப்படும். இதற்கு மாறாக, மதுவிலக்கையோ அதை அமுலுக்குக் கொண்டுவந்த அரசாங்கத்தை விமர்சிக்கும் காட்சிகளும் மதுவிலக்குச்

சட்டத்தை மீறும்படித் தூண்டும் காட்சிகளும், மதுவிலக்கிற்கு எதிர்பிரச்சாரக் காட்சிகளும், மது அருந்துதல் தவறல்ல - நன்று என்று விளக்கும் காட்சிகளும் ஆட்சேபணைக்குரியவை.

திருமணம், குடும்ப அமைப்பு ஆகியன புனிதமாகும். கள்ளக்காதல் அனுமதிக்கப்படுவதாகவோ அல்லது வழக்கத்திலிருப்பதாகவோ சித்தரிக்கக்கூடாது. கதைக்கு மையமாகவும் அவசியத் தேவையாகவும் இருக்கும்போதுகூட விபச்சாரத்தையும், கள்ளத்தொடர்பையும் கவர்ச்சிகரமாகவும், நியாயமானதாகவும் காண்பிக்கக் கூடாது. படுக்கையறை, குளியலறைக் காட்சிகளைக் கவர்ச்சியாகக் காட்டக்கூடாது. கதைக்கு இன்றியமையாதது என்றாலொழிய, காமக் காட்சிகளைக் காட்டக்கூடாது. அவை இந்தியப் பண்பாட்டின் கற்பு நெறிகளுக்கோ, உயர்தரச் சமூக வழக்கங்களுக்கோ முரண்பட்டதாக இருக்கக் கூடாது. பொதுவாகப் பாலுணர்வுக் காட்சிகள் அனுமதிக்கப்பட மாட்டாது.

**பாலியல் பலாத்காரம்**

கதைக்குத் தேவைப்படும்போது பாலியல் காட்சிகளைக் குறிப்பாக மட்டுமே காட்ட வேண்டும். விளக்கிக் காட்டக் கூடாது. இக்காட்சிகளை நகைச்சுவையாகக் கையாளக்கூடாது. விபச்சாரத்திற்காகச் சிறு பெண்களை அடிமைப்படுத்துவது போன்ற படங்களையோ, காட்சிகளையோ தயாரிக்கக்கூடாது.

குழந்தை பிரசவத்தை நேரிடையாகவோ, நிழல் மூலமாகவோ காண்பித்தல் கூடாது. பேச்சு, செயல், பாட்டு, நகைச்சுவை, குறிப்பு ஆகிய எதிலும் ஆபாச, அசிங்கக் காட்சிகள் கலந்திருக்கக் கூடாது.

**புனிதமற்ற காட்சிகள்**

புனிதமற்ற ஆபாசக் காட்சிகளும் உரையாடல்களும் திரைப்படங்களில் சேர்க்கப்படக்கூடாது. கல்வி போதனைப் படங்களைத் தவிர, பிற படங்களில் சிற்றின்பம், உடலுறவு, உடல்நலம், கர்ப்பத்தடை, காமநோய்கள் போன்ற காட்சிகளைக் காட்டக்கூடாது.

**ஆடைகள்**

நிர்வாணம் திரைப்படங்களில் அனுமதிக்கப்படவே மாட்டாது. நேரிடையாகவோ, நிழல் வடிவமாகவோ இதர நடிகைகளின் மூலமாகவோ நிர்வாணத்தைக் காட்டக்கூடாது. ஆடையால் மறைக்கப்படும் உடல் உறுப்புகளை ஆடையின்றி ஆபாசமாகக் காட்டக்கூடாது . உடலமைப்பையும் உடல் உறுப்புகளின் மேடு பள்ளங்களையும் வெளிப்படுத்துவதற்கென்றே தேர்ந்தெடுத்து அணியப்படும் நாட்டிய உடைகள் அனுமதிக்கப்பட மாட்டாது. ஆபாச அங்க அசைவுகளும் கூடாது. ஒரு கதாபாத்திரம் எந்த

மனிதரைச் சுட்டுகிறதோ அந்த மனிதரையோ, அவருடைய ஜாதி, மதம் அல்லது கூட்டத்தைப் பழிப்பதாகவோ, அவமதிப்பதாகவோ ஆடை உடுத்தக்கூடாது. பெண் தெய்வங்களையும், ஆண் தெய்வங்களையும் முனிவர்கள், மகான்கள் முதலியோரையும் திரைப்படத்தில் காட்டும்போது, அந்தப் பாத்திரங்களுக்குரிய ஆடையலங்காரம் பயன்படுத்தக்கூடாது. அநாகரிகமான அல்லது மட்டமான நடனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

**பிற**

எந்தவொரு மதத்தையும் பழிப்பதான படமோ, காட்சியோ அனுமதிக்கப்படமாட்டாது. மத குருமார்களை நகைச்சுவையாகவோ, எதிர்நிலைத் தலைவர்களாகவோ அல்லது கேலியாகவோ காட்டக்கூடாது. மதத்தின் சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் மரியாதைக்குரியதாகக் காட்ட வேண்டும். புராணங்களைப் பழிப்பதாகவோ அவமதிப்பதாகவோ காட்சிகள் கூடாது. பொதுமக்கள் கடவுள், மதம் ஆகியவற்றிடம் கொண்டுள்ள நம்பிக்கையையும் பக்தியையும் இழிவுபடுத்துவதாக உள்ள கதைகள், காட்சிகள் அனுமதிக்கப்படமாட்டாது. தர்மம், நீதி,ஈகை, கற்பு போன்ற உயர்ந்த லட்சியங்களைக் கேவலப்படுத்தக் கூடாது. எந்த தேசம், கட்சி, மதம், குழுவாக இருந்தாலும் அவற்றிற்குரிய கொடிகள் அதற்குரிய மரியாதையுடன் காட்டப்பட வேண்டும்.

தூக்கிலிடுதல், கொடூரத் தண்டனைகள், சித்திரவதை, மிருகத்தனம், மனிதர்களுக்கோ மிருகங்களுக்கோ சூடுபோடுதல், குழந்தைகளையும் மிருகங்களையும் துன்பப்படுத்துதல், பெண்கள் கற்பை விற்பது போன்ற காட்சிகளைத் தரமில்லாத வகையில் சித்திரிக்கக் கூடாது.

நல்ல கருத்துக்களை மக்கள் மனதில் திரைப்படங்களின் மூலம் எடுத்துரைக்கும் தயாரிப்பாளர்களுக்கு ( தாதாசாகேப் பால்கே ) விருது வழங்கி மத்திய அரசு அவர்களை ஊக்குவிக்கிறது. புனேயிலும் சென்னையிலும் திரைப்படக் கலைஞர்களை உருவாக்கும் கல்லூரிகளை மைய அரசு நிறுவியுள்ளது. (தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகம்) குறுகிய கால அளவில் ஓடக்கூடிய வரலாற்று - சமூக முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படங்களைத் தயாரிப்பவர்களுக்கு நிதியுதவி செய்கிறது.

அண்மைக் காலத் திரைப்படங்கள் சிலவற்றில் வன்முறையும் பாலுணர்வும் மிகுந்துள்ளன. இருபது ஆண்டுகளுக்கு முன்பே, திரைப்படங்களில் ( முத்தக்காட்சி) தேவையா என்பதை ஆராய ( கோஸல்லா) குழுவை அரசு நியமித்தது. கதையோட்டத்திற்கும், காட்சியமைப்பிற்கும் மிகவும் முக்கியத் தேவையென்றால் ஒழிய அத்தகைய காட்சிகள் இடம்பெறக் கூடாது என்பதை அக்குழு பரிந்துரைத்தது.

## தமிழ்த் திரைக்கதை ஆசிரியர்களும், அவர்களது தனித்திறன்களும்

### 1. சி.என். அண்ணாதுரை

தமிழ்த்திரைப்பட வரலாற்றில் கதையின் கருத்தில், உரையாடலின் அமைப்பில் புரட்சிகரமான, புதுமையான உத்தியைக் கையாண்டு, ஒரு பெரிய திருப்பத்தை உண்டாககியவர்களில் முதன்மையானவர் சி.என். அண்ணாதுரை. அவரது கட்டுரைகள் விழிப்புணர்வைத் தந்தது போலவே, அவர் எழுதிய நாடகங்களும் திரைப்படக் கதைகளும் பெரும் மறு மலர்ச்சியை நாடக, திரைப்பட ரசிகர்களிடையே உண்டாக்கின.

அண்ணா என்று தமிழ் மக்களால் அன்புடனும், மரியாதையுடனும் அழைக்கப்படும் அண்ணாதுரை அவர்கள் 'ஓர் இரவு 'நாடகத்தை எழுதி, அது கே.ஆர்.ராமசாமி குழுவினரால் நாடகமாக நடிக்கப்பட்டபோது. அதற்கு விமர்சனம் எழுதிய 'கல்கி" அவர்கள் 'தென்னாட்டின் பொனாட்ஷா' என்று அண்ணா அவர்களைக் குறிப்பிட்டு, தலையங் கமாகவே தமது பத்திரிகையில் அதை வெளியிட்டார்.

அண்ணா அவர்கள் திரைப்படத்திற்காக எழுதிய முதல் கதை கலைவாணர் நடித்த 'நல்லதம்பி'. இதில் இடம்பெற்ற மதுவிலக்குப் பிரசார நாடகம் மிகப் பிரபலமாகியது.

தொடர்ந்து 'வேலைக்காரி' எனும் நாடகத்தை எழுதினார். இவ் நாடகத்தை ஜூபிடர் பிக்சர்ஸ் திரைப்படமாகத் தயாரித்தது. 'வேலைக் காரி'யின் கதை அமைப்பு, உரையாடல் அனைத்தும் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. பின்னர் 'சொர்க்கவாசல்', 'ஓர் இரவு', 'ரங்கோன்ராதா', 'நல்லவன் வாழ்வான்', 'தாய் மகனுக்குக்' கட்டிய தாலி', 'காதல் ஜோதி', 'வண்டிக்காரன் மகன்' போன்ற திரைப்படங்களுக்குக் கதைவசனம் எழுதினார். அண்ணா அவர்களின் அடுக்கு மொழியும் பொருள் பொதிந்த சொற்கட்டும் அவரது வசனங்களுக்குத் தனிச் சிறப்பைத் தந்தன.

தான் சார்ந்திருந்த சுயமரியாதை இயக்கத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை நிறுவினார். தனது கட்சியின் கொள்கைகளைப் பரப்ப நாடகத்துறையையும், திரைப்படத் துறையையும் நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் ஆட்சியை அமைத்த போது அண்ணா முதலமைச்சரானார். அண்ணா அவர்கள் முதலமைச்சர் பதவி ஏற்ற பிறகு வந்த படங்கள்: தாய் மகனுக்குக் கட்டிய தாலி, நல்லவன் வாழ்வான். எதையும் தாங்கும் இதயம்.

**2. பாரதிதாசன்**

'மணிக்கொடி' இலக்கிய அன்பர்கள் உருவாக்கிய 'ராமானுஜர்' படத்திற்குப் பாடல் எழுதும் வகையில், திரைப்பட உலகில் காலடி எடுத்து வைத்தவர் பாரதிதாசன். கனகசுப்புரத்தினம் என்ற இயற்பெயர் கொண்ட இந்த முற்போக்கு இலக்கியவாதி, எழுத்தாளர் வ.ரா. அவர்களின் அழைப்பை ஏற்று பாடல்கள் புனைய வந்தார்.

'ராமானுஜர்' வெற்றிப்படமாக அமையாவிட்டாலும், பத்திரிகை யாளர்கள் ஒன்றுசேர்ந்து உருவாக்கிய முதல் படம் என்ற பெயரைப் பெற்றது. அடுத்து, பாரதிதாசன் தொடர்பு கொண்ட படம் டி.கே.எஸ். சகோதரர்களின் தயாரிப்பான 'பக்காத்திருடன்' என்பதாகும்.

சுயமரியாதை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட கவிஞர் பாரதிதாசன் சுயமரியாதை இயக்க நண்பர்கள் சிலர் உருவாக்கிய 'காளமேகம்' படத்திற்குக் கதை, வசனம், பாடல்களை அமைத்துத் தந்தார். பிரபல நாதஸ்வர மேதை டி.என். ராஜரத்தினம் இதில் நடித்தார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் சார்பாகத் தயாரிக்கப்பட்ட சுலோசனா, சுபத்திரா போன்ற படங்களுக்குப் பாரதிதாசன் திரைக்கதை வசனம், பாடல்கள் எழுதினார்.

தமிழகத்தில் வெளிவந்த படங்களில் நீளமானப் படமான 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' என்ற திரைப் படத்திற்குத் திரைக்கதை, வசனம் எழுதியவர் பாரதிதாசன்.

இவருடைய 'எதிர்பாராத முத்தம்' காப்பியம் 'பொன்முடி' என்ற பெயரில் வெளிவந்து வெற்றியைத் தந்தது. தமிழ்ப் பெருங்காப்பி யங்களில் ஒன்றான 'வளையாபதிக்கு'த் திரைக்கதை வசனம் எழுதினார்.

தமிழ்ப்படங்களின் வளமையான வசனநடைக்குப் பாரதிதாசன் பெருமளவு உதவி செய்துள்ளார்.

**3. கலைஞர் மு. கருணாநிதி**

பெரியார் அவர்களின் திராவிட இயக்கத்திலும், பின்னர் அதிலிருந்து பிரிந்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத்திலும் தன்னை இணைத்துக் கொண்டுள்ள கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழ் இலக்கியத் திற்கும், நாடக உலகுக்கும், திரைப்படத்துறைக்கும் அரிய பல பணிகள் செய்துள்ளார். இலக்கிய நயம் நிறைந்த ஏராளமான நூல்களுடன் பல மேடை நாடகங்களையும், திரைப்படக் கதைகளையும் எழுதியுள்ளார்.

ஜூபிடர்ஸ் பிக்சர்ஸ் நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட ராஜகுமாரி, அபிமன்யு போன்ற படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதியுள்ளார். ஆனால் வசனகர்த்தா என்று இவரது பெயரைத் தாங்கி வெளிவந்த முதல் படம் 'மருதநாட்டு இளவரசி'. தொடர்ந்து மாடர்ன் தியேட்டர்ஸின் 'மந்திரிகுமாரி' படத்திற்கு வசனம் எழுதினார்.

தயாரிப்பாளர் - இயக்குநர் பெயர்களுக்கு இணையாக சுவரொட்டி களில் வசனகர்த்தாவின் பெயரும் இடம்பெற முன்னோடியாக இருந்தவர் கருணாநிதி. 'கதை - வசனம் கலைஞர் மு. கருணாநிதி' என்று ஒரு படத்தின் விளம்பரம் வந்தாலே, அதன் வெற்றிக்கு உத்திரவாத முத்திரை குத்தப்பட்டது. தொடர்ந்து பல படங்களுக்குக் கதை, வசனம் எழுதினார். திரைப்படத் தயாரிப்பிலும் ஆர்வம் காட்டினார். மேகலா பிக்சர்ஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்து அதன் சார்பாக பல வெற்றிப்படங்களைத் தயாரித்தார். தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று தமிழகத்தில் மந்திரிசபை அமைத்த போது, பொதுப்பணித்துறை அமைச்சரானார். அண்ணா அவர்களின் மறைவுக்குப்பின் கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சரானார். தற்பொழுது ஐந்தாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகி மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகிறார். நாட்டின் முதலமைச்சராக இருந்தாலும் கலையுலகுடன் கொண்டிருந்த தொடர்பை விட்டுவிடாமல் வைத்திருக்கிறார். இவன் கதைவசனம் எழுதி வெற்றிப் பெற்றப் படங்களில் 'பராசக்தி' குறிப்பிடத்தக்கது. நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அறிமுகமான படம் 'பராசக்தி'யாகும். 1986-இல் கலைஞர் மு. கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதி பெரும் வெற்றி பெற்ற படம் 'பாலைவன ரோஜாக்கள்' என்பதாகும். 2005-இல் வெளியான 'பாசக்கிளிகள்' என்ற படத்திற்கும் திரைக்கதை வசனம் எழுதினார்.

**4. எஸ்.டி.சுந்தரம்**

எஸ்.டி. சுந்தரம் மிகச்சிறந்த இலக்கியவாதியாகவும், நாடகம், திரைப்படங்களுக்குக் கதைவசனம் எழுதுபவராகவும் திகழ்ந்தார். இவர் கவியின் கனவு என்னும் நாடகத்தை எழுதினார். இவ் நாடகம் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தும் காவியமாகவே திகழ்ந்தது. ஜூபிடர் பிக்சர்ஸ் ராம்னாத் - சேகர் டைரக்ஷனில் கல்கியின் பிரபல நாவலான 'கள்வனின் காதலி' யைத் தயாரித்த போது அத்திரைப்படத்திற்கு எஸ்.டி. சுந்தரம் கதை வசனம் எழுதினார். 'மனிதனும் மிருகமும்' என்ற திரைப் படத்திற்குக் கதை வசனம் எழுதினார். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் உதவியாக இருந்தவர்களில் சுந்தரமும் ஒருவர்.

5. **கண்ணதாசன்**

திரைப்பட உலகில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்தவர் கண்ணதாசன். இவர் காலத்தாலும் அழிக்கமுடியாத அற்புதமான பல திரைப்படப் பாடல்களை எழுதினார். இதனாலேயே அவர் 'கவியரசு' என்ற பட்டம் பெற்றார். அரசின் ஆஸ்தானக் கவிஞராகவும் நியமிக்கப் பட்டு, பெருமைப்படுத்தப்பட்டார்.

'கன்னியின் காதலி' என்ற திரைப்படத்திற்கு எழுதிய 'கலங்காதிரு மனமே' என்று துவங்கும் பாடல்தான் கவிஞர் திரைப்படத்திற்கென எழுதிய முதல் பாடல். அவர் வாழ்க்கையில் பெரியதொரு திருப்புமுனையை ஏற்படுத்தித் தந்தது அது.

சிவாஜிகணேசன், பத்மினி நடித்த 'இல்லற ஜோதி' என்ற படத்திற்கு வசனம் எழுதினார். இப்படத்தில் அவர் எழுதிய 'அனார்க்கலி ஓரங்க நாடகம் குறிப்பிடத்தக்கது. இலக்கிய ரசனை ததும்பும் வசனங்கள் கண்ணதாசனின் தனி முத்திரையாகியது. இதன் பின்னர் அவர் தொடர்ந்து படங்களுக்கு வசனம், பாடல்கள் எழுத ஆரம்பித்தார். இவர் கதைவசனம் எழுதி வெளிவந்த 'மதுரைவீரன்' வெற்றிப்படமாகும்.

கண்ணதாசனும் ரவீந்தர் என்பவரும் இணைந்து திரைக்கதை வசனம் எழுதி மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். இரட்டை வேடங்களில் நடித்த நாடோடி மன்னன் பெருபெற்றி பெற்ற திரைப்படமாகும்.

கவிஞர் கண்ணதாசன் 'தென்றல் திரை' என்ற திரைப்பட தினசரியை சிறிது காலம் ஆசிரியர் பொறுப்பில் இருந்து நடத்தினார். 'கண்ணதாசன்' என்ற தனது பெயரிலேயே ஓர் இலக்கிய மாத இதழை சிறிது காலம் நடத்தினார்.

திரைப்படங்களுக்குப் பாடல்கள், கதை, வசனம் எழுதியதோடு ஒருசில படங்களில் அவர் நடிக்கவும் செய்தார். ரத்தத்திலகம், தாயே உனக்காக, கறுப்புப்பணம், நகரத்தில் திருடர்கள் போன்ற சில படங்களைத் சொந்தமாகத் தயாரித்து வெளியிட்டார்.

திரைப்பணியுடன், அவரது இலக்கியப் பணியும் தொடர்ந்தது. செல்வாக்குள்ளப் பத்திரிகைகளில் அவர் தொடர்ந்து கதை களையும், கட்டுரைகளையும் எழுதினார். அவர் எழுதிய 'அர்த்தமுள்ள இந்துமதம் ' பெரும் வரவேற்பைப் பெற்றது. இவர் கடைசியாக 'இயேசு காவியம்' என்னும் காப்பியத்தையும் எழுதினார்.

6. **முரசொலி மாறன்**

முரசொலிமாறன் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் சகோதரி மகன் ஆவார். முரசொலிமாறன் திரைக்கதை வசனம் எழுதி வெளிவந்த முதல் படம் குலதெய்வம்'. இப்படத்தில் இடம்பெற்ற

"பெண்களுக்கு ( வைரம் நெஞ்சிலிருக்க வேண்டுமே தவிர, கழுத்திலும் உடலிலும் தேவை இல்லை" என்ற வசனம் எல்லோராலும் பாராட்டப்பட்டது. திருஞானசுந்தரம் என்ற இயற்பெயர் கொண்ட, எம்.ஏ. பட்டதாரியான மாறன் சிறந்த இலக்கியவாதியும், அரசியல்வாதியும் ஆவார். இவர் எழுதிய 'மாகாண சுயாட்சி' என்ற புத்தகம் பெரும் பரபரப்பை அரசியல் உலகில் உண்டாக்கியது. 'குலதெய்வம்' படத்தையடுத்து மாறன் பல திரைப்படங்களுக்குக் கதை. வசனம் எழுதினார். பட்சிராஜாவின் 'மரகதம்' மற்றும் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்புகள் சிலவற்றுக்கும். சில தனியார் படங்களுக்கும் வசனம் எழுதினார். மேகலா பிக்சர்ஸ் தயாரித்த 'எங்கள் தங்கம்' என்ற படத்திற்கு இவர் எழுதிய வசனம் தனிப் பாராட்டுதல்களைப் பெற்றது. இப்படத்தில் எம்.ஜி.ஆரும், ஜெயலலி தாவும் இணைந்து நடித்தனர். 'மறக்க முடியுமா' படத்தின் மூலம் இவர் டைரக்ஷன் துறையிலும் காலடி எடுத்து வைத்தார்.

தமிழ்நாட்டிலிருந்து அகில இந்திய அரசியலுக்குச் சென்ற தலைவர்களில், அறிவாற்றலின் காரணமாக அங்கீகரிக்கப்பட்டவர் முரசொலிமாறன், வர்த்தகத்துறை அமைச்சராக இருந்த போது சர்வதேச அளவில் இந்தியாவின் உரிமைகளுக்காக அவர் நல்ல பல திட்டங்களை வகுத்தார். தமிழ்நாட்டின் பெருமையை, தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் நிலைநாட்டியவர். அவரின் சிறந்த சேவையைப் பாராட்டி பாராளுமன்ற வளாகத்தில் 08.12.2006 இல் பாரதப் பிரதமர் மன்மோகன்சிங்கினால் மாறனது சிலை திறக்கப்பட்டது.

7. **இளங்கோவன்**

சிலப்பதிகார காப்பியத்தை 'கண்ணகி' என்ற பெயரில் ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்து வெளியிட்டபோது அதன் வசனங்களை, இலக்கிய மணம் கமழ 'இளங்கோவன்' எழுதினார். இப்படம் வெளிவரும் வரை கதாபாத்திரங்கள் தமிழ்ப்படங்களில் பேசிவந்த மணிப்பிரவாள நடை யிலிருந்து மாறி, தூய தமிழில் பேச ஆரம்பித்தார்கள். திரைப்படத்தின் மூலம் தமிழை வளர்த்தவர்களில் இளங்கோவன் சிறப்பிடம் பெறுகிறார். கண்ணகியைத் தொடர்ந்து திருநீலகண்டர், சிவகவி, ஹரிதாஸ், அம்பிகாபதி, அசோக்குமார், மகாமாயா, சுதர்ஸன், ) சக்கரவர்த்தித் திருமகள் போன்ற பல வெற்றிப்படங்களுக்கு வசனம் எழுதினார்.

பாகவதருடன் அவர் இணைந்து பணியாற்றிய படங்களில் பெரும் பாலானவை பெரும் வெற்றிப் படங்களாக அமைந்து தமிழ்ப்படவுலகில் சாதனைப் படைத்துள்ளன.

தணிகாசலம் என்ற இயற்பெயர் கொண்ட 'இளங்கோலன்' இலக்கியத் துறையிலும் சிறப்புற்று விளங்கினார். இவரது பல படைப்புகள் பல பத்திரிகைகளில் அச்சேறியுள்ளன.

**8. ஏ.பி. நாகராஜன்**

ஏ.பி. நாகராஜன் நாடக மேடையிலிருந்து திரையுலகுக்கு வந்த கலைஞராவார். ஆரம்பத்தில் நடிகராக நாடகங்களில் நடித்து வந்த ஏ.பி. நாகராஜன் பிறகு சொந்தமாக நாடகங்களை எழுதி நடிக்க ஆரம்பித்தார்.

அவர் எழுதி நடித்த 'நால்வர்' நாடகம் மிகப் பிரபலமடைந்தது. இதன் காரணமாக 'நால்வர்' நாகராஜன் என்றே அவர் அடை மொழியிட்டு அழைக்கப்பட்டார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் 'நால்வா" நாடகத்தை திரைப்படமாக்கியபோது ஏ.பி. நாகராஜன் அப்படத்தில் கதாநாயகனாக நடித்தார். 'நால்வர்' திரைப்பட வெற்றி நாகராஜனைத் திரைப்படவுலகுடன் நிரந்தரமாக இணைத்து விட்டது.

எம்.ஏ. வேணுவின் தயாரிப்பில் வெளிவந்த மாங்கல்யம், பெண்ணரசி, சம்பூர்ண ராமாயணம் போன்ற படங்களுக்கு ஏ.பி. நாகராஜன் திரைக்கதை வசனம் எழுதி, நடிக்கவும் செய்தார். பின்னர் சொந்தமாக ஏ.பி.என். பிக்சர்ஸ் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

திருவிளையாடல், சரஸ்வதி சபதம், திருவருட்செல்வர், திருமால் பெருமை, கந்தன் கருணை போன்ற புராணப் படங்களையும், வா ராஜ வா, நவரத்தினம் போன்ற சமூகப் படங்களையும், அகத்தியர் போன்ற வரலாற்றுப் படங்களையும் தயாரித்து, டைரக்ட் செய்து, நடித்து வெளியிட்டார். மேலும் இவரது திரைக்கதை வசனத்தில் 'மக்களைப் பெற்ற மகராசி' என்னும் திரைப்படம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றது.

சிறந்த கதை - வசனகர்த்தாக்கள் என்று சொல்லக் கூடியவர் களின் வரிசையில் ஏ.பி. நாகராஜன் இடம்பெற்றவர்.

**9. ஏ.எஸ்.ஏ.சாமி**

ஏ.எஸ்.ஏ.சாமி சிறந்த இயக்குநராகவும், கதை வசன கர்த்தாவாகவும் திகழ்ந்தார். ஜூபிடரின் தயாரிப்பில் வெளிவந்த மோகினி, அபிமன்யு, ராஜகுமாரி, மாமயோகி போன்ற படங்களுக்கு இயக்குநராக இருந்து பணிபுரிந்தார். மேலும் நரசுவின் துளிவிஷம், தங்கப்பதுமை, அரசிளங் குமரி, கற்புக்கரசி போன்ற வெற்றிப்படங்களை இயக்கினார். அவர் இயக்கிய பல படங்களுக்கு அவரே வசனம் எழுதினார்.

### 10. ப. நீலகண்டன்

"கலைவாணி' என்ற தரம் மிக்க மாத இதழை நடத்தி வந்தவர் ப. நீலகண்டன். 'நாம் இருவர்' என்ற நாடகத்தை எழுதினார். பின்னர் இவ் நாடகம் 1945 ல் திரைப்படமாக்கப்பட்டு திரையிடப் பட்டது. சுதந்திரப் போராட்டத்தையொட்டி வெளிவந்த இத்திரைப்படத்தில் பாரதியாரின் பாடல்கள் இடம்பெற்றன. பாரதியாரின் பாடல்கள் இடம்பெற்ற முதல் திரைப்படம் "நாம் இருவர்" தான். சென்னை ஏ.வி.எம். ஸ்டுடியோவில் உருவான 'செல்லப்பிள்ளை', அண்ணாவின் 'ஓர் இரவு' படங்களை ப. நீலகண்டன் டைரக்ட் செய்தார்.

பின்னர் பி.ஆர்.பந்துலுவுடன் இணைந்து 'கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி', 'முதல் தேதி' படங்களை இயக்கினார். மேலும் அம்பிகாவதி, சக்ரவர்த்தி திருமகள் படங்களை இயக்கினார்.

இவருக்கு எம்.ஜி.ஆரின் அறிமுகம் ஏற்பட தொடர்ந்து அவரது படங்களை இயக்க ஆரம்பித்தார். எம்.ஜி.ஆர். நடித்த அதிக படங்களை இயக்கியவர் என்ற பெருமை இவருக்கு உண்டு. அரசு பிக்சர்ஸ் என்ற பெயரில் இவர் சொந்தமாகப் படம் தயாரித்து வெளியிட்டுள்ளார். ப நீலகண்டன் எழுதி இயக்கிய பல படங்கள் பரிசுகளைப் பெற்றுள்ளன.

### 11. 'சக்தி' கிருஷ்ணசாமி

ஆரம்பகாலத்தில் புராணக்கதைகளே மேடைகளில் நடிக்கப்பட்டு வந்தன. ஸ்ரீ வள்ளித்திருமணம், ராமாயணம், அல்லி அர்ஜுனா போன்ற வைகளும், பவளக்கொடி, ஆரவல்லி போன்ற கிராமிய காண பரம்பரைக் கதைகளும் முக்கிய இடம்பிடித்து வந்தன.

இந்த நிலையை மாற்றி, சமூகக் கண்ணோட்டத்தோடு, நாடகங்களை சில நாடகக் கம்பெனிகள் தயாரித்து மேடை யேற்றின். இத்தகைய நாடகக் கம்பெனிகளில் ஒன்றுதான் 'சக்தி நாடக சபை'. இதன் நிறுவனர் நாவலாசிரியர் கிருஷ்ணசாமி. சக்தி கிருஷ்ணசாமி என்றே இவர் அழைக்கப்பட்டார்.

மூடநம்பிக்கைகளுக்கு சவுக்கடியாக விளங்கிய விதி, சுதந்திர உணர்வைப் பிரதிபலித்த 'கவியின் கனவு'. 'கட்டபொம்மன்', சரித்திரப் பின்னணியைக் கொண்ட 'நூர்ஜஹான்' போன்ற நாடகங்களை சக்தி நாடக சபையினர் தயாரித்து அரங்கேற்றினர்.

சக்தி நாடக சபையில் நடித்த பலர் திரைப்படவுலகில் நடிக்க வந்தனர். சிவாஜிகணேசன், ஏ.பி. நாகராஜன் போன்ற கலைஞர்கள் சக்தி நாடக சபையில் நடித்தவர்களே. 'கட்டபொம்மன்' நாடகம் 'வீரப் பாண்டிய கட்டபொம்மன்' என்னும் பெயரில் திரைப்படமாக வெளிவந்தது. இப்படத்திற்கு சக்தி கிருஷ்ணசாமி வசனம் எழுதினார்.

12. **ஸ்ரீதர்**

ஸ்ரீதர் எழுதிய முதல் நாடகமான 'ரத்தபாசம்' அவரது முதல் திரைப்படமாகவும் அமைந்தது. 'ரத்தபாசம்' படத்தையடுத்து ஸ்ரீதர் கதை, வசனம் எழுதி வந்த படம் 'எதிர்பாராதது'.தொடர்ந்து மகேஸ்வரி, 'மங்கையர் திலகம்' போன்ற படங்களுக்கு வசனம் எழுதினார். நண்பர்களுடன் சேர்ந்து 'வீனஸ் பிக்சர்ஸ்' என்ற படக் கம்பெனியை உருவாக்கி அதன் சார்பில் அமரதீபம், உத்தமபுத்திரன் படங்களுக்குக் கதைவசனம் எழுதி தயாரிப்பிலும் பங்கு கொண்டார். வீனஸ் பிக்சர்ஸ் சார்பாக எடுக்கப்பட்ட கல்யாணப்பரிசு' என்ற படத்தை ஸ்ரீதர் இயக்கினார். இப்படம் வெள்ளிவிழாக் கொண்டாடியது. பின்னர் வீனஸ் பிக்சர்ஸை விட்டு விலகி ('சித்ராலயா' என்ற நிறுவனத்தைச் சொந்தமாக ஆரம்பித்தார். இதன் சார்பாக 'தேன்நிலவு','நெஞ்சில் ஓர் ஆலயம்', 'காதலிக்க நேரமில்லை', 'சிவந்தமண்' போன்ற படங்களைத் தயாரித்தார். இதில் சிவந்த மண் எனும் படம் வெளிநாட்டில் எடுக்கப்பட்ட படமாகும். தமிழ் தவிர, தெலுங்கு, இந்தி மொழிகளிலும் ஸ்ரீதர் படங்களைத் தயாரித்து, டைரக்ட் செய்து வெளியிட்டார்.

13. **ஆரூர்தாஸ்**

பல திரைப்படங்களுக்கு வசனம் எழுதியவர் ஆரூர்தாஸ். மொழி மாற்றுப் படங்களுக்கும் சிறப்பாக வசனம் எழுதியுள்ளார். இவர் வசனம் எழுதிய படங்களில் குறிப்பிடத்தகுந்தவை வாழவைத்த தெய்வம், வீரத் திருமகள், நானும் ஒரு பெண், காக்கும் கரங்கள், ராமு, பாசமலர் போன்றனவாகும்.

14. **கே. பாலசந்தர்**

பாலசந்தர் சிறந்த வசனகர்த்தாவாக இருந்து பல திரைப்படங்களை இயக்கியுள்ளார். 'கவிதாலயா' என்ற திரைப்பட நிறுவனத்தைத் தொடங்கி அதன் சார்பாக பல திரைப்படங்களை வெளியிட்டுள்ளார். இவரது திரைப்படங்களில் குறிப்பிடத் தகுந்தவை ‘எதிரொலி', 'அபூர்வ ராகங்கள்'.'அரங்கேற்றம்', 'தண்ணீர் தண்ணீர்', 'அச்சமில்லை அச்சமில்லை', 'நினைத் தாலே இனிக்கும்', 'சிந்து பைரவி' 'கல்கி', பார்த்தாலே பரவசம்', 'அவர்கள்', 'வானமே எல்லை', 'பொய்' போன்றனவாகும். தற்போது சின்னத்திரையிலும் பல படங்களுக்கு கதை வசனம் எழுதி இயக்கியும் வருகிறார். அவர் இயக்கிய சின்னத்திரைப் படங்கள் ரெக்கை கட்டிய மனசு, நிம்மதி உங்கள் சாய்ஸ், அண்ணி, சஹானா, அகிலா எங்கே போகிறாள், ஊஞ்சல் போன்றனவாகும்.

**15. பாரதிராஜா**

பாரதிராஜாவின் வரவு தமிழ்த்திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு மேலும் உதவியது. இவர் கதைவசனம் எழுதி வெளிவந்த முதல் படம் பதினாறு வயதினிலே'. இப்படத்தில் ரஜினிகாந்த், கமலஹாசன், ஸ்ரீதேவி போன்றோர் நடித்தனர். கிராமியச் சூழலில் எடுக்கப்பட்ட இப்படம் பெருவெற்றி பெற்றது. தொடர்ந்து அவர் கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், அலைகள் ஓய்வதில்லை, புதுமைப்பெண், முதல் மரியாதை, வேதம் புதிது, கருத்தம்மா, கடல்பூக்கள், அந்தி மந்தாரை போன்ற வெற்றிப்படங்களைத் தமிழ்த் திரைப்பட உலகுக்குக் கொடுத்தார்.

**16. பாலுமகேந்திரா**

பாலுமகேந்திரா 'நெல்லு' என்ற மலையாளத் திரைப்படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக அறிமுகமானவர். பிறகு 'கோகிலா' என்ற கன்னட படத்தின் மூலம் இயக்குனர் ஆனார். 'அழியாத கோலங்கள்' படம் மூலம் தமிழுக்கு அறிமுகமான பாலு மகேந்திரா 40 ஆண்டுகாலம் திரைப்படத்துறை அனுபவம் வாய்ந்தவர். 'மூன்றாம் பிறை', 'வீடு' 'சந்தியா ராகம்' உள்ளிட்ட தேசிய விருது பெற்ற படங்களை இயக்கியவர் பாலுமகேந்திரா.

**17. மணிரத்னம்**

மணிரத்னம் சிறந்த கதை வசனம் எழுதுபவராகவும், இயக்குந ராகவும் பல படங்களில் பணிபுரிந்துள்ளார். இவரது இயக்கத்தில் மௌனராகம், அக்னி நட்சத்திரம், ரோஜா, பம்பாய், இருவர், ஆய்த எழுத்து, அலைபாயுதே, பகல் நிலவு, ரோஜா, கன்னத்தில் முத்தமிட்டால், தளபதி, நாயகன், அஞ்சலி போன்ற படங்கள் வெளிவந்து வெற்றி பெற்றன. 2006 இல் 'குரு' என்ற இந்திப் படத்தையும் இயக்கினார்.

**18. பாக்கியராஜ்**

பாக்கியராஜ் பாரதிராஜாவினிடத்தில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தார். பின்னர் தானே கதைவசனம் எழுதி பல படங்களை இயக் கவும் செய்தார். இவர் கதைவசனம் எழுதி இயக்கிய படங்களில் குறிப் பிடத்தகுந்தவை முந்தானை முடிச்சு, அந்த ஏழு நாட்கள், பாரிஜாதம் போன்றனவாகும்.

எம்.ஜி.ஆர். அவர்கள் பாக்கியராஜைத் தன்னுடைய திரைப்பட வாரிசு என்று கூறினார். இவர் முதலில் அ.இ.அ.தி.மு.க.விற்காக தேர்தல் பிரச்சாரம் செய்தார். பின்னர்

அக்கட்சியில் இருந்து விலகி 2006 இல் நடந்த சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.விற்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். இவர் பாக்யா என்ற வார இதழையும் நடத்தி வருகிறார்.

**19. விஜய. டி. ராஜேந்தர்**

எம்.ஏ. பட்டதாரியான விஜய டி. ராஜேந்தர் திரைக்கதை வசனம் மற்றும் பாடல்களை எழுதி பல திரைப்படங்களை இயக்கியுள்ளார். இவர் கதை வசனம், பாடல் எழுதி இயக்கி வெளிவந்த திரைப்படங்களில் குறிப்பிடத்தகுந்தவை ஒருதலை ராகம்', 'மைதிலி என் காதலி', 'என் தங்கை கல்யாணி', 'சொன்னால் தான் காதலா', 'காதல் அழிவதில்லை', 'மோனிஷா என் மோனாலிசா' போன்றனவாகும். 2006 இல் சிம்பு சினி ஆர்ட்ஸின் சார்பாக 'வீராசாமி' என்னும் திரைப்படத்திற்குக் கதை, வசனம், பாடல்களை எழுதி இயக்கினார்.

**20. சேரன்**

இளைய தலைமுறை கதாசிரியர்களில் சேரன் குறிப்பிடத் தகுந்தவர். இவர் பல வெற்றிப்படங்களுக்குத் திரைக்கதை வசனம் எழுதி இயக்கியுள்ளார். அவற்றுள் காலத்தால் அழிக்க முடியாத திரைக் காவியங்கள் 'பாரதி கண்ணம்மா'. 'பொற்காலம்'. 'ஆட்டோகிராப்' 'தவமாய் தவமிருந்து' போன்றனவாகும்.

**21. எஸ்.ஏ. சந்திரசேகரன்**

எஸ்.ஏ. சந்திரசேகரன் சிறந்த திரைப்பட இயக்குநராவார். இவர் திரைப்பட இளம் கதாநாயகன் விஜயினுடைய தந்தையாவார். இவர் தன்னுடைய 'சட்டம் ஒரு இருட்டறை' என்ற திரைப்படத்தின் மூலம் விஜயகாந்தை அறிமுகப்படுத்தினார். இவருடைய இயக்கத்தில் 'முத்தம்', 'சுக்ரன்', 'நெஞ்சிருக்கும் வரை' என்ற படங்கள் தயாரிக் கப்பட்டுள்ளன.

**22. ஷங்கர்**

ஷங்கர் பல வெற்றிப்படங்களை இயக்கியுள்ளார். இவர் 'ஜென்டில்மேன், 'முதல்வன்', 'இம்சை அரசன் 23-ஆம் புலிகேசி', 'காதலன், 'இந்தியன்', 'ஜீன்ஸ்', 'பாய்ஸ்'. 'அந்நியன்' போன்ற படங்களையும், 2006 இல் ரஜினிகாந்த் நடித்த 'சிவாஜி' படத்தையும் இயக்கியுள்ளார்.

**23. அகத்தியன்**

அகத்தியன் சிறந்த இயக்குநர்களில் ஒருவர். இவர் இயக்கிய படம் 'காதல் கோட்டை'. இது பெருவெற்றிப் பெற்ற படமாகும்.

**24. கே.எஸ். ரவிக்குமார்**

கே.எஸ்.ரவிக்குமார் சிறந்த இயக்குநராவார். இவர் பல படங்களை இயக்கியுள்ளார். இவர் ரஜினிகாந்த் நடித்த 'முத்து' படத்தை இயக்கினார். சிம்பு நடித்த சரவணன் என்ற படத்தை இயக் கினார். மேலும் நாட்டாமை, படையப்பா போன்ற படங்களையும் இயக்கியுள்ளார்.

இவர் சி. சுந்தர் நடித்த 'தலைநகரம்' என்னும் படத்தை இயக்கினார். இப்படம் வர்த்தக ரீதியில் பெருவெற்றியடைந்தது. 2006 இல் இவர் இயக்கிய 'வரலாறு' வெற்றி பெற்றது. கமல்ஹாசன் பத்து வேடங்களில் நடித்த 'தசாவதாரம்' என்னும் படத்தையும் இயக்கினார்.

**25. கவுதம்**

கவதம் ஒரு சிறந்த இயக்குநர். இவர் மின்னலே, காக்க காக்க, வேட்டையாடு விளையாடு, பச்சைக்கிளி, முத்துச்சரம் போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

**26. சரண்**

சரண் காதல் மன்னன், அமர்க்களம், வசூல் ராஜா எம்.பி.பி.எஸ். ஜேஜே, முனி, தசாவதாரம்,இதயத்திருடன், வட்டாரம் போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

**27. பி. வாசு**

பி. வாசு 'தொட்டால் பூ மலரும்', 'சந்திரமுகி' போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

**28. பாலா**

பாலா ஒரு சிறந்த இயக்குநர். 'நான் கடவுள்', 'சேது', 'பிதாமகன்' போன்ற படங்களை இயக்கியுள்ளார்.

**29. விக்ரமன்**

விக்ரமன் இயக்கத்தில் வெளிவந்த 'பூவே உனக்காக 'சூர்யவம்சம்', 'வானத்தைப்போல', 'சென்னைக்காதல்' போன்ற படங்கள் பெரும் வெற்றியைத் தந்த படங்களாகும்.

**30. துரை**

துரையின் இயக்கத்தில் பசி, கிளிஞ்சல்கள் போன்ற படங்கள் வெளிவந்தன.

1. **திரைப்பட வெற்றி**

திரைப்படத்துறையைப் பொருத்தவரையில் எப்போதும் ஒரு படத்தினுடைய வெற்றி முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. அவ்வெற்றியினால் தயாரிப்பாளர், இயக்குநர், நடிகர் நடிகைகள் பாடலாசிரியர்கள், ஒளிப்பதிவாளர்கள்,இசை அமைப்பாளர்கள் டெக்னீஷியன்கள் போன்ற அனைவரும் மகிழ்ச்சியடைகிறார்கள். ஒரு படம் வெற்றி பெற்றால் அப்படத்தின் பார்முலாவைப் பின்பற்றி தொடர்ந்து குறைந்தது பத்து படங்களாவது தயாரிக்கப்படுகின்றன. இவ்விதமாகப் பார்க்கும் போது கடந்த ஐந்து ஆண்டுகளில் வெற்றியடைந்த படங்களை நாம் கூர்ந்து நோக்கினால் அது சார்ந்து நிகழ்ந்த மாற்றங்களை நாம் புரிந்துகொள்ள முடியும்.

1990களின் இறுதியில் வெளிவந்த இயக்குநர் பாலாவின் சேது, அதனைத் தொடர்ந்த தங்கர்பச்சானின் அழகி, சேரனின் ஆட்டோகிராப், பாலாஜி சக்திவேலின் காதல் போன்ற படங்களை முக்கிய படங்களாகக் கருதலாம். இந்தப் படங்களின் வெற்றி தமிழ்த்திரையுலகில் நிகழ்த்திய மாற்றம் மிக முக்கியமானது.

வணிக ரீதியாக வசூலில் சாதனைப் புரிந்த படங்களைப் பட்டியலிட்டால் ரமணா, கில்லி,தூள்,சாமி, காக்க காக்க படங்களின் வெற்றியைச் சொல்லலாம். ஆனால் பெரும் முதலீட்டில் புகழ்பெற்ற நடிகர்களைக் கொண்டு தயாரிக்கப்படும் படங்கள் பெரும் வெற்றி யடைந்தபோதும் அவை திரைப்படத்தின் போக்கைத் தீர்மானிக்கிற மைல்கற்களாகக் கருதப்படுவதில்லை. காரணம் அவை ஒரு வணிகத் திரைப்படத்திற்கே உள்ள வழக்கமான சமன்பாடுகளுடன் தயாரிக்கப் படுபவை. எனவே படைப்பு ரீதியாகவோ அல்லது தொழில் நுட்ப ரீதியாகவோ இம்மாதிரியான படங்கள் முன்மாதிரியாகக் கருதப் படுவதில்லை. ஆயினும் திரைப்படத்துறை வளமாக இயங்குவதற்கு இம்மாதிரியான படங்களின் வெற்றியே பெரும் துணைபுரிகிறது.

யதார்த்தம் சாராத திரைப்படங்களும் வெற்றிபெறுகின்றன. அப்படங்களின் கதை அம்சமும், வாழ்க்கைக்குப் பொருந்தாத காதல் காட்சிகளும், சண்டைக்காட்சிகளும், பாலியல் தூண்டலுக்கான மூலப்பொருளாகக் கதாநாயகியும் அவள் சார்ந்த காதலும் திரைப்படச் சந்தையின் நுகர்பொருளாக மட்டுமே கருதப்படுகின்றனவே அன்றி முக்கிய நிகழ்வாகப் பொருட்படுத்தப்படுவதில்லை. இன்றளவும் தமிழ்த்திரைப்படங்களின் எடுத்துக்காட்டுகளாகச் சொல்லப்படும் மகேந்திரனின் உதிரிப் பூக்கள், பாரதிராஜாவின் பதினாறு வயதினிலே, முதல் மரியாதை, பாலுமகேந்திராவின் அழியாத கோலங்கள், பாலாவின் பிதாமகன் முதலான திரைப்படங்களின் முன்னும் பின்னும் நூற்றுக் கணக்கான படங்கள் வந்து போன பின்னும் இந்தப் படங்கள் முக்கியமான வையாகவும், இந்த

இயக்குநர்கள் முக்கியமானவர்களாகவும் கருதப் படுவதற்கு இப்படங்களின் யதார்த்தம் சார்ந்த அணுகுமுறையையும், நேர்மையான உணர்வுகளையும் உதாரணமாகச் சொல்லலாம்.

இவ்விதமான முறையில் சேது, அழகி, ஆட்டோகிராப், காதல் முதலான படங்களின் யதார்த்தம் சார்ந்த அணுகுமுறை, உணர்வு சார்ந்த நேர்மை இதெல்லாம் கடந்து இந்தப்படங்கள் வணிகரீதியாக அடைந்த பெரிய வெற்றி இந்தப் படங்களைப் பொருட்படுத்தத்தக்க மதிப்பை ஏற்படுத்தித் தந்தது. ஏனெனில் பாரதி, காமராஜ், இயற்கை - முதலான யதார்த்தமான படங்கள் வணிக ரீதியாக தோல்வியையே சந்தித்தன. இவை பொருட்படுத்தத்தக்க மதிப்புகளைத் தமிழ்த் திரைப்படச் சூழலில் தராது போய்விடுகிறது.

எனவே வெற்றி என்பது பொருளாதார ரீதியில் மட்டும் இல்லாது உள்ளடக்கத்திலும் கதை சொல்லும் முறையிலும் புதிய பரிமாணங் களைத் தரும்போது அந்த படங்கள் சலனத்தை ஏற்படுத்துகின்றன. சேது படம் மன நோயாளிகளின் உடல்மொழி (Body Language) மற்றும் பழக்கங்கள் சார்ந்த விஷயங்களை வணிகத் திரைப்படம் அனுமதிக்கிற எல்லைக்குள் யதார்த்தமாகப் பதிவு செய்கிறது.

அழகி படம் பால்ய நினைவுகளின் சில நுட்பமான பகுதிகளை முதன் முறையாகத் தமிழ்த்திரைப்படத்தில் பதிவு செய்கிறது. ஆட்டோகிராப் படம் கதை சொல்லும் விதத்தில் யதார்த்தத்தின் சதவீதத்தை அதிகரிக்கிறது. காதல் படம் நுட்பமான விஷயங் களைக் கவனித்துச் சொல்வதன் மூலம் போலியற்ற வெகு நேர்மையான உணர்வுகளைப் பதிவுசெய்கிறது. இந்த நான்கு படங்களும் யதார்த்தமான படங்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். திரைப்பட ரசிகர்கள் யதார்த்தத்தை வரவேற் கின்றனர் என்பதற்கு இப்படங்கள் சான்றுகளாகும். இந்த நான்கு படங்களுமே பிரபலமாகாதவர்களை வைத்துத் தயாரிக்கப்பட்ட படங்களாகும். கதையையும், கதை சொல்லப்பட்ட தன்மையையும் அடிப்படையாகக் கொண்டே இப்படங்கள் வெற்றிபெற்றன. இதனை முன்மாதிரியாகக் கொண்டு பிரபலமாகாத பல புதிய நடிகர்களைக் கொண்டு குறைந்த செலவில் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

சான்றாக பரத் நடித்த எம் மகன் என்ற படத்தைக் கூறலாம். ஆனால் அதேநேரத்தில் நன்கு பிரபலமான நடிகர்களைக் கொண்டு அதிக பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட படங்களும் வெற்றியைப் பெறுகின்றன. சான்றாக விஜயகாந்த் நடித்த 'ரமணா', விஜய் நடித்த 'கில்லி', விக்ரம் நடித்த 'சாமி', 'அந்நியன்', அஜீத் நடித்த 'வரலாறு', ரஜினிகாந்த் நடித்த 'சந்திரமுகி' என்பனவற்றைக் கூறலாம். யதார்த்தமான படங்கள் வெற்றிபெறுவது போலவே

அதிக பொருட்செலவில் தயாரிக்கப்பட்ட படங்களும் வெற்றி பெறுவது தமிழ் திரைப்பட உலகத்தின் வளர்ச்சிப் பாதையையே காட்டுகிறது.

### 2. தொழில் நுட்பம்

கடந்த ஐந்து ஆண்டுகளில் திரைப்படத் தயாரிப்பில் தொழில் நுட்பத்தின் பங்கு இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது.

திரைப்படத்தின் கச்சாப்பொருளான பிலிம் சுருள்களை கைவிட்டுவிட்டு நாடாவில் (Tape) படப்பதிவு செய்கிற அதிவிவரத் தொழில்நுட்பம் ( High Definition Technology) மூலம் அறிமுகமாகும் டிஜிட்டல் சினிமாவின் ஆரம்பக்கட்டத்தில் திரைப்படத் தயாரிப்பு இருக்கிறது .ஸ்டார் வார்ஸ் ( STAR WARS) என்ற ஹாலிவுட் திரைப்படம் முதன்முதலாக இந்தத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டது. 1990களின் இறுதியில் வந்த இந்தத் தொழில்நுட்பத்தை இந்தியத் திரைப்படத் துறையினரும் பின்பற்றத் தொடங்கினர். தமிழில் அதிவிவரத் தொழில்நுட்பத்தைப் (HDT) பின்பற்றித் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ்ப்படம் பி.சி. ஸ்ரீராமால் இயக்கப்பட்டு 2004 இல் வெளிவந்த 'வானம் வசப்படும் என்ற திரைப்படமாகும். இந்தத் திரைப்படம் வணிக ரீதியாக தோல்வியடைந்தாலும் தற்பொழுது பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு இந்த உயர்தர தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே படங்களைத் தயாரிக்கிறார்கள்.

ஒரு திரைப்படம் தயாரிப்பதற்கு ஆகும் செலவை இவ் டிஜிட்டல் தொழில்நுட்பம் முற்றிலும் குறைத்து விடுகிறது. 2005 இல் வெளிவந்த 'மும்பை எக்ஸ்பிரஸ்' முற்றிலும் இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டதாகும். இத்தொழில் நுட்பத்தின் குறைபாடாகக் கருதப்படுவது ரிவர்ஸ் டெலிசின் ( Reverse Telecine) என்கிற முறை. வீடியோவில் படம் பிடித்தாலும் திரும்பவும் அதனை பிலிம் சுருளுக்கு மாற்ற வேண்டியிருக்கிறது. ஏனெனில் தமிழகத்திலிருக்கும் திரை யரங்குகள் பிலிம் சுருளைத் திரையிடும் வசதியை மட்டுமே பெற்றிருக்கின்றன. இந்த வசதியின்மையைச் சரிசெய்யும் விதமாக அறிவியல் திரையரங்குகளை டிஜிட்டல் நுட்பத்திற்கு மாற்றும் வழிவகைகளைச் செய்துவிட்டது. இதன்பயனாக பெரும்பாலான திரையரங்குகள் டிஜிட்டல் ஒளிபரப்பு வசதியைச் செய்துள்ளன.

இதன்மூலம் ஒவ்வொரு ஊருக்கும் படப்பெட்டி அனுப்புகிற நிலை மாறி குறுந்தகடுகளை ( Hard Disc) அனுப்புகின்ற நிலை வந்துள்ளது. அடுத்த கட்டமாக ஒரு திரைப்படத்தின் வெளியீட்டை ( Release) செயற்கைக் கோள் வழியே வெளியிட்டு தேவைப்படும் திரையரங்குகள் படத்தை வான் வழியே ஒலி ஒளி அலைகளாகப் பெற்று

திரையிடும் வசதியும் வந்துவிட்டது. அதிகத் திரையரங்குகள் டிஜிட்டல் நுட்பத்திற்கு மாறும் போது வான் வழியே திரையரங்குகள் படத்தைப் பெற்றுத் திரையிடும் நிலை ஓரிரு வருடத்திற்குள் வந்துவிடும். இதுபோலவே இசை, படத்தொகுப்பு, ஒலிச்சேர்ப்பு, ஒளிப்பதிவு போன்றவை புதிய தொழில்நுட்பத்தால் அபரிமிதமான மாற்றங்களைக் கண்டுள்ளன. இயக்குநர்களின் கற்பனைத் திறனுக்கேற்ப விரும்பியதை நிர்மாணிக்கும் தொழில்நுட்பம் தமிழ்த்திரைப்படத்தில் வந்துவிட்டது. அதுபோல அனிமேஷன் ( Animation) துறையிலும் கிராபிக்ஸ் ( Graphics) எனப்படும் வரைகலைத் துறையிலும் தமிழ்த்திரைப்படங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

### 3. மாற்று சாதன முயற்சிகள்

வீடியோ தொழில்நுட்ப வருகையின் அடுத்தகட்டமாக டிஜிட்டல் வீடியோ வரத் துவங்கியது. இந்த டிஜிட்டல் தொழில் நுட்பம் மிகக் குறைந்த விலையில் ஒளிப்பதிவுக் கருவிகளையும், கணினி சார்ந்த உபகரணங்களையும் திரைப்பட உலகிற்கு தாராளமாக வழங்கியுள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பம் திரைப்படத் தயாரிப்பில் பயன்படுவதைப் போன்று ஆவணப்படங்கள் மற்றும் குறும்படங்கள் தயாரிப்பிலும் பயன்படுகின்றது.

தமிழகத்தில் செய்திப்படத்திற்கு (Documentary Film) மிகப்பெரிய பாரம்பரியம் இல்லை. செய்திப்படங்களின் தந்தை என்று கருதப்படுகிற ராபர்ட் ப்ளஹர்ட்டியின் 'நானுக் ஆப் தி நார்த்' (Nanook of the North) என்ற ஆவணப்படம் போல தமிழில் ஏ.கெ. செட்டியாரின் 'மகாத்மா காந்தி' பற்றிய செய்திப்படம்தான் வெளிவந்தது. ஆனால் தமிழில் தற்போது வாழ்வியல், தனிமனித வாழ்க்கை வரலாறு, பிரச்சனைகள் மற்றும் அழிவு குறித்த நூறு ஆவணப்படங்கள் வெளிவந்துள்ளன. இந்த செய்திப்படங்கள் பெரும்பாலும் கடந்த ஐந்தாண்டுகளில் எடுக்கப் பட்டவை.

இதுபோல குறும்படங்கள் ( Short Film) என்ற வடிவம் ஐந்தாண்டுகளுக்கு முன்னால் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருந்தது. ஆனால் இன்று முந்நூறுக்கும் அதிகமான குறும்படங்கள் தமிழில் எடுக்கப்பட்டுள்ளன. 1970களில் தமிழ் இலக்கியத்தில் குறிப்பாகக் கவிதைத் துறையில் நிகழ்ந்த மறுமலர்ச்சிக்கு ஈடாக இதனைச் சொல்லலாம். மரபை உடைத்து புதுக்கவிதை இயக்கம் தீவிரமாக வளர்ந்து மொழியின் நடையில் பெரிய மாறுதல் ஏற்படுத்தி யதைப் போலச் சமீப காலங்களில் அதிக அளவில் எடுக்கப்படும் இக்குறும்படங்கள் காட்சி சார்ந்த கலாச்சாரத்தை வேறொரு கோணத்தில் அணுகுகிறது. சான்றாக 2006 இல் வெளிவந்த ‘சுகவாசி' என்ற குறும்படத்தைக் கூறலாம். சினிமா

எடுக்கப்போகிறேன் என ரயிலேறி சென்னைக்கு வந்துவிடும் இளைஞர்கள், அவர்களின் இலக்கை அடைவதற்குள் எப்படி மாறுபடுகிறார்கள் என்ற சோகத்தை அருமையாக படம்பிடித்திருக்கிறது 'சுகவாசி' என்ற குறும்படம்.

உதவி இயக்குநர்கள் என்று வெளியே கௌரவமாகச் சொல்லிக் கொண்டாலும் யூனிட்டில் டீ வாங்கி வருவது உட்பட எல்லா உதவி களையும் சில நேரங்களில் செய்ய வேண்டி யிருக்கும். தங்கியிருக்கும் வீட்டின் வாடகை கொடுக்க முடியாததால் உரிமையாளரிடம் ஒரு உதவி இயக்குநர் திட்டு வாங்குவது போல் ஒரு காட்சி. எல்லா உதவி இயக்குநர்களையும் பார்த்து இந்தச் சமூகம் திட்டுவது போல் உருக வைக்கிறது.

இதுபோன்ற காட்சிகளைத் தத்ரூபமாகக் காட்டியிருக்கும் 'சுகவாசியை' இயக்கியிருப்பவர் ஜி. முரளி. இந்திய அளவில் சிறந்த குறும்படங்களுள் ஒன்றாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

கைக்கு அடக்கமான டிஜிட்டல் கருவியைக் கொண்டு நண்பர்களை, நடிகர்களைக் கொண்டு இருபதாயிரம் ரூபாய் செலவுக்குள் எடுக்கப்படும் இத்தகைய குறும்படங்கள் உள்ளடக்கத்தில் போதுமான வீரியத்தை அடைய முயற்சிக்கிற இக்காலகட்டம் மிக முக்கியமானதாகும்.

இத்தகைய ஆவண மற்றும் குறும்பட முயற்சிகள் மைய நீரோட்டத்தில் (Main Stream) திரைப்படத்தின் போக்கினை மாற்றுகிற சூழலை நாம் எதிர்பார்க்க முடியாது என்ற போதும் தொடர்ச்சியாக எடுக்கப்படுகிற இந்த மாற்று ஊடக முயற்சிகள் பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஊடகம் கவனிக்கத் துவங்கியிருப்பதும், இதன் தொடர்ச்சியாக ஊருக்கு ஊர் சிறுசிறு சங்கங்கள் நடத்தும் திரைப்பட விழாக்களும் ரசனை சார்ந்த விழிப்புணர்வை வரும் காலங்களில் ஏற்படுத்தும் சாத்தியம் இருக்கிறது.

மேலும் டிஜிட்டல் திரையரங்குகள் தமிழகத்தில் பெருகும் போது இந்தக் குறும்படங்கள், ஆவணப்படங்கள் திரையரங்கு களில் திரையிடப்படும் காலமும் கனிந்து வருகிறது. மும்பை திரையரங்கு ஒன்றில் ஆனந்த் பட்டவர்த்தனின் வார் அன்ட் பீஸ் (War and Peace) என்ற ஆவணப்படம் முதன் முதலாக கட்டண முறையில் திரையிடப் பட்டிருக்கிறது. இத்தகைய படங்களுக்கு எதிர்காலத்திலிருக்கும் வணிகச் சாத்தியங்கள் மைய நீரோட்டத் திரைப்படத்தின் உட்பிரிவாக வளரும் சாத்தியங்களையும் கொண்டிருக்கிறது.

### 4. திரைப்படப் பயிற்சிக் கல்லூரி

தமிழகத்தின் பல முன்னணிக் கல்லூரிகள் காட்சிப் பரிவர்த்தனக் கல்வியை (Visual Communication) துவங்கி யிருப்பதும், இந்தியாவின் முன்னணி நிறுவனமான பிரசாத் லேபரட்டிரீஸ் திரைப்படக் கல்விக்கென பயிற்சிக் கல்லூரி தொடங்கியிருப்பதும் திரைப்படத்தை ஒரு அறிவியலாக, கல்வியாக, கலையாக வளர்த்தெடுக்க வேண்டும் என்கிற விழிப்புணர்வு தமிழ்ச் சூழலில் ஏற்பட்டிருப்பதற்கான சான்றாகக் கூறலாம்.

### 5. திரைப்பட இதழ்கள்

தமிழிலக்கியச் சூழலில் தீவிரமாகச் செயல்படும் தீராநதி, காலச்சுவடு, உயிர்மை, புதிய பார்வை போன்ற சிறு பத்திரிகைகள் இத்தகைய குறும்பட, ஆவணப்படங்கள் பற்றிய விமர்சனங்களை கருத்தாகவோ, செய்தியாகவோ தொடர்ந்து பதிவுசெய்கின்றன. திரைப்படத்திற்கென தனியாக நிழல், செல்வகம், படப்பெட்டி முதலான மூன்று திரைப்பட இதழ்கள் செயல்படுகின்றன. மேலும் பதிப்புத்துறையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் எப்போதும் இல்லாத அளவுக்குத் திரைக்கதைகள், இயக்குநர்கள் பற்றிய புத்தகங்கள் அதிக அளவில் வந்துள்ளன. சேது, அழகி, காதல், ஆட்டோகிராப் முதலான படங் களிலிருந்து சத்யஜித்ராய், குரோசோவா, அடூர் கோபாலகிருஷ்ணன், பாலசந்தர் போன்ற படைப்பாளிகளின் படைப்புகளும் தமிழில் படிக்கக் கிடைக்கின்றன.

தற்பொழுது இலக்கிய உலகுக்கும் திரைப்பட உலகுக்கு மிடையே நெருங்கிய உறவு காணப்படுகிறது. இது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். இளம் எழுத்தாளர்கள் திரைப்படத்திற்குக் கதைவசனம் எழுத வருகின்றனர். படித்த இளைஞர்கள் இயக்குனர்களாகவும், ஒளிப்பதி வாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் இளைஞர்கள் தொழில் நுட்பத்தில் எல்லாத் துறைகளிலும் புகுந்திருப்பது தமிழ்த்திரைப்பட உலகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றிருக்கிறது. இயக்குநர்களே தயாரிப்பாளர்களாகவும் செயல்படுகின்றனர். சான்றாக மணிரத்னம், ஷங்கர்,சேரன், பாலசந்தர் போன்றோர்களைக் கூறலாம்.)

தொழில்நுட்ப புரட்சியென டிஜிட்டல் சினிமா அறிமுகமாகி இயங்கத் தொடங்கிய இந்தச் சூழலில் இதழியல், தொலைக்காட்சி ஊடகங்களில் நிகழும் மாற்றங்களும், கதை சார்ந்து வணிகத் திரைப்படங்களில் நிகழும் யதார்த்தம் நோக்கிய தேடலும், திரைப்படம் ஒரு கல்வி அதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வும், மாற்று ஊடகங்களான ஆவணப்படத்திலும், குறும்படத்திலும் நிகழும் தொடர்ச்சியான முயற்சிகளும் இந்த ஐந்தாண்டுகளில் நிகழ்ந்த முக்கிய மாற்றமாகக் கருதலாம். துவக்க

நிலையிலிருக்கும் இத்தகைய முயற்சிகளின் தொடர்ந்த செயல்பாடு மூலம் தமிழ்த்திரைப்பட உலகம் எதிர்காலத்தில் உலகத்தரம் வாய்ந்த படைப்புகளை வெளியிட்டு, உயரிய விருதுகளைப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமில்லை. (செழியன், 2006: 90-95

**தேசிய மற்றும் சர்வதேசத் திரைப்பட விழாக்கள் (National and International Film Festivals)**

1. செய்தி மற்றும் சிறு படங்களின் சர்வதேசத் திரைப்பட விழாவை ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் மும்பையில் திரைப்படப்பிரிவு நடத்தி வருகின்றது.

2. இந்தியக் குழந்தைகள் திரைப்படச் சங்கம் ஒவ்வோர் ஆண்டும் இந்தியாவின் சர்வதேசக் குழந்தைகள் திரைப்பட விழாவை நடத்தி வருகின்றது.

3. திரைப்பட விழா இயக்குநரகம் ஒவ்வோர் ஆண்டும் தேசிய மற்றும் சர்வதேசத் திரைப்பட விழாவை நடத்துகின்றது. பண்பாட்டுப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இந்த இயக்குநரகம் பல அயல்நாட்டுப் படங்களையும் திரையிட ஏற்பாடு செய்கிறது.

**முக்கிய சர்வதேசத் திரைப்பட விழாக்கள்**

உலகின் பல நாடுகளில் சர்வதேசத் திரைப்பட விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றில் முக்கியமான சர்வதேசத் திரைப்பட விழாக்கள் பின்வருமாறு:

1. பெர்லின் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் பெர்லினில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. உலக நாடுகளிலுள்ள சிறந்தப் படங்கள் இங்கு திரையிடப்படுகின்றன.

2. கேன்ஸ் (Gannes) - பிரான்ஸ் : ஒவ்வொரு வருடமும் மே மாதத்தில் கேன்ஸில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. திரைப்பட சம்பந்தப்பட்ட நபர்கள் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர்.

3. கிரகௌ ( Cracow) -போலந்து : ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தில் கிரகௌவில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. இங்கு 30 நிமிடங்களுக்கு உட்பட்ட சிறுபடங்கள் காட்டப் படுகின்றன.

4. எடின்பரோ - ஸ்காட்லாந்து : ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. இத்திரைப்பட விழா தூரகிழக்கு நாடுகளின் படங்கள், செய்திப்படங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை உள்ளடக்கியது.

5. லோகர்நோ - ஸ்விட்சர்லாந்து: ஒவ்வொரு வருடமும் 'ஆகஸ்ட்' மாதம் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. இது இளைய திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கான விழாவாகும். இவ்விழாவில் வளரும் நாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

6. லண்டன் : ஒவ்வொரு வருடமும் 'நவம்பா' மாதத்தில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. இவ்விழா பொது மக்களுக்கானது. பிரிட்டிஷ் பிலிம் இன்ஸ்ட்டியூட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

7. மன்ஹைம் - மேற்கு ஜெர்மனி: ஒவ்வொரு வருடமும் 'அக்டோபர்' மாதத்தில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. சிறிய மற்றும் பெரிய செய்திப்படங்கள், நகரும் கார்ட்டூன் ஆகிய இரண்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

8. மெல்போர்ன் - ஆஸ்திரேலியா: ஒவ்வொரு வருடமும் 'ஜூன்' மாதத்தில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. சிறுபடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

9. ஓபர் ஹவுஸன் ( மேற்கு ஜெர்மனி) : ஒவ்வொரு வருடமும் 'மே' மாதத்தில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. சிறிய படங்கள் திரையிடப்படுகின்றன.

10. வெனீஸ் ( இத்தாலி): ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட், செப்டம்பர் மாதத்தில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது. உயர்ந்த தரமானத் திரைப்படங்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுத் திரையிடப்படு கின்றன.

**இந்தியாவில் திரைப்பட விழா**

இந்தியாவில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் திரைப்பட விழா நடத்தப்படுகிறது.

25.11.2006 இல் கோவா தலைநகர் பனாஜியில் இந்திய சர்வதேச திரைப்பட விழா தொடங்கியது. இந்த விழா தொடர்ந்து பத்து நாட்கள் நடந்தது.

08.12.2006 இல் திருவனந்தபுரத்தில் 11வது சர்வதேச திரைப்பட விழா தொடங்கியது. திருவனந்தபுரத்திலுள்ள நிஷாகந்தி அரங்கத்தில் தொடக்கவிழா நடைபெற்றது.மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் பிரியரங்சன்தாஸ் முன்ஷி விழாவைத் தொடங்கினார். கேரள சுற்றுலாத்துறை அமைச்சர் எம்.ஏ. பேபி தலைமை வகித்தார்.

விழாவில் மலையாள திரை உலகிற்கு பெருமை சேர்த்த பழம்பெரும் நடிகர் மது, நடிகைகள் ஷீலா, ஆரன்முளா பொன்னம்மா, சுகுமாரி, ஜெயபாரதி,பாடகர் கே.ஜே. ஜேசுதாஸ், பாடகிகள் பி.சுசிலா, எஸ். ஜானகி உட்பட 34 பேர் கவுரவிக்கப்பட்டனர். திரைப்பட விழாவில் முதல் படமாக சவுண்ட்ஸ் ஆப் சான்ட் என்ற பெல்ஜியம் படம் திரையிடப்பட்டது. மேலும், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ஈரான் உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 220 படங்கள் திரையிடப்பட்டன. திருவனந்த புரத்தில் நடந்த இதில் சர்வதேச திரைப்பட விழாவில் தமிழ்ப்படமான 'ஆடும் கூத்து' இரண்டாவது பரிசை

வென்றது. இப்படத்தை டி.வி. சந்திரன் இயக்கியுள்ளார். முதல் பரிசை மெக்சிகோவைச் சேர்ந்த பிரான்ஸிங்கோ இயக்கிய 'தி வயலட்' என்னும் படம்பெற்றது.

சிறந்த படமாக துருக்கியைச் சேர்ந்த 'ஏஞ்சல்பால்' மற்றும் வங்கதேசத்தைச் சேர்ந்த 'பார்வெர் புளோ' ஆகிய இரு படங்கள் தேர்வு செய்யப்பட்டன. இப்படங்களை இயக்கிய செமித் மற்றும் அபுசையத் ஆகியோருக்கு தங்கப்பதக்கத்தையும், ரூ. 10 லட்சம் ரொக்க பரிசையும் கேரள முதல்வர் அச்சுதானந்தன் வழங்கினார்.

விழாவில் சிறந்த இயக்குநராக ஈரான் நாட்டுப் படமான 'பயர் ஒர்க்ஸ்' என்பதன் இயக்குநர் அஸ்கர், சிறந்த புதுமுக இயக்குநராக இலங்கையைச் சேர்ந்த பிரசன்ன ஜெயக்கொடி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**வினாக்கள்**

1. திரைப்படத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.
2. திரைக்கதை ஆசிரியர்களின் தனித்திறன்களை விளக்குக.
3. திரைக்கதை அமைப்பை விவரி.
4. திரைப்படத்தின் இன்றையப் போக்கினை விவரி.
5. திரைப்பட விமர்சனக் கலை குறித்து எழுதுக.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | மின்னனுஊடகங்கள் குறித்துஎழுதுக. | K2 | CO2 | PO4 |
| 2 | பண்பலைநாடகங்கள் என்றால் என்ன? | K4 | CO3 | PO5 |
| 3 | ஒளிபரப்புநிலையங்கள் குறித்துவிளக்குக. | K1 | CO4 | PO1 |
| 4 | தொலைக்காட்சிஎழுத்துக் கலைஎன்றால் என்ன? | K5 | CO5 | PO2 |
| 5 | தொலைக்காட்சிவிளம்பரங்கள் எங்ஙனம் பயன்படுகின்றன? | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கணினியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துஎழுதுக. | K1 | CO4 | PO4 |
| 2 | தொலைக்காட்சியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துஎழுதுக. | K4 | CO2 | PO6 |
| 3 | வானொலியின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துஎழுதுக. | K3 | CO1 | PO5 |
| 4 | தொலைக்காட்சியும் பிறதகவல் தொடர்புசாதனங்களும் கட்டுரைவரைக. | K2 | CO5 | PO6 |
| 5 | தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் நகழ்ச்சிகளின் வகைகளைஆய்க. | K4 | CO3 | PO3 |

# அலகு - 5

## குறும்படங்கள்

**குறும்படம் : SHORT FILM தயாரிப்பு**

குறும்படம் என்பது ஏதேனும் ஒரு கதையைத் தழுவியதாக இருக்க வேண்டும். நேர அளவு முவழியா குமிடத்திற்குள்ளாக இருக்க வேண்டும் என்பது சர்வதேச

தமிழ்த்திரைப்பட உலகில் தொடக்ககாலப் படங்கள், சிறு சிறு கதைகளைச் சிறுசிறு பகுதிகளாக எடுத்துக்காட்டக் கூடிய தாகவே இருந்தது. பெரும்பாலும் நகைச்சுவையை மையமாகக் கொண்ட அந்தக் குறும்படங்களை மூன்று நான்காக இணைத்தே இரண்டு மணி நேரத் திரைப்படமாகக் காட்டப்பட்டது.

இந்த வகையில் 1939ல் வெளிவந்த 'சிரிக்காதே 'என்ற திரைப்படத்தில், அடங்காப்பிடாரி, புறாவேட்டை, போலிப் பாஞ்சாலி, சமவாதனை என்ற நான்கு குறும்படங்கள் இணைக் கப்பட்டிருந்தன.

இதே உத்தி இலத்தின் அமெரிக்கப் படங்களில் பயன் படுத்தப்பட்டன புகழ்ப் பெற்ற ஈரானியத் திரைப்பட இயக்குநர் மஃக்பல் பஃப் இதே குறும்பட முறையில் 'கெப்பே' என்ற திரைப்படத்தை அண்மையில் வெளியிட்டுள்ளார். தமிழகப் படைப்பாளிகள் பலரும், ஆவணப்படம், தொலைக் காட்சிப் படம் இரண்டைக் காட்டிலும், குறும்படங்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். காரணம், திரையுலகில் நுழைவதற்குப் பார்வை அட்டையாகப் (Visiting card) பயன்படும் என்ற எதிர்ப்பார்ப்புத் தான். எனவே, தங்களது அறிவு, திறமை முதலியவற்றை இதில் அதிகம் வெளிப்படுத்துகின்றனர்.

தமிழகத்தில் வெளியிடப்பட்ட சில குறும்படங்களை இனி பார்ப்போம்.

விபத்து ஒன்றில் ஓர் இளைஞன் சிக்கிக் கொள்கிறான். முகம் உள்பட உடலின் பல பாகங்கள் இதனால் பாதிக்கப் படுகிறது. இதற்குப் பிறகு விபத்து தந்த அதிர்ச்சியும் தனிமையும். ஒரு மனிதனுக்கு ஏற்படும் பயமும், அவை தொடர்பாக அவன் கொள்ளும் கற்பனை நிகழ்வுகளும், பயத்திலிருந்து அவனாக மீண்டு. அவையெல்லாம் கற்பனைதான் என்று உணர்ந்து கொள்ளும் தெளிவும்தான் இந்தக் குறும்படம் கூறும் செய்தி'

ஒளி பொருந்திய விளக்குகள் படப்பிடிப்பிற்குப் பயன்படுத் தப் படவில்லை. இரவில் ஓர் அறையில் நிலவும் மங்கிய வெனிச்சம் மட்டுமே படப்பிடிப்பிற்குப் பயன்பட்டிருந்தது.

வழக்கமான பின்னணி இசை சேர்க்கப்படாமல், ஒலிகளின் மூலமாகவே இசைப் பின்னணி நிரப்பப்பட்டிருப்பது உள்பட பல பரிசோதனை முயற்சிகள் வெற்றிகரமாக இந்தப் படத்தில் கையாளப்பட்டிருக்கின்றன. அறுபது குறும்பட விழாக்களுக்கு அனுப்பப்பட்ட இந்தப்படம், ஹாலிவுட் உள்பட 27 நாடுகளில் முதல் சுற்றில் தேர்வாகி இருப்பது குறிப்பிடத்தக்க செய்தி.

My Imagination என்ற இந்தக் குறும்படத்தின் இயக்குநர் பி.சி.சேகர். இவர் திரைப்படக் கல்லூரி மாணவர் அல்லர். ஒரு எம்.சி.ஏ.பட்டதாரி.

சக்திமிக்க ஊடகமான தொலைக்காட்சி, நம் மக்களி டையே நிகழ்த்திவரும் மாறுதலையும், பண்பாட்டுக், கலாசாரத் தளங்களில் ஏற்படுத்திவரும் தாக்கங்களையும் கண்டு மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள் அதிகமாகவே கவலை கொள் கின்றனர்.

மேலும் நமது அன்றாட நடைமுறை வாழ்வில் அதன் பாதிப்புகளையும், உறவு முறைகளில் தொலைக்காட்சி ஏற்படுத்திவரும் இடைவெளிகளையும் கருவாகக் கொண்டு, திருமேனி என்பவர் 'சேனல் சமூகம்' என்ற குறும்படத்தை இயக்கி உள்ளார்.

24 நிமிடமே ஓடும் திருமேனியின் இந்தப்படம், மத்திய அரிமா சங்கத்தின் சிறந்த வீடியோ படத்திற்கான விருதையும், பல்கலைக்கழக மானியக் குழுவின் கீழ்ச் செயல்படும் கல்வியியல் தொடர்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் சிறந்த கல்வி வீடியோ தயாரிப்பு விருதையும் பெற்றிருக்கிறது.

குறும்படங்களின் மூலம் உலகின் கவனத்தையும் பரவ லான வரவேற்பையும் பெற்ற தமிழ்ப் பெண் மதுமிதா. கும்பகோணத்தில் பிறந்து சென்னையில் வளர்ந்து இந்தோனேஷி யாவில் படித்தவர். 23 வயதாகும் இவர் இதுவரை இந்தியப் பெண்கள், பாரம்பரியம், பொட்டு உள்ளிட்ட ஐந்து குறும் படங்களை இயக்கி உலகம் முழுக்க விருதுகளை வாங்கிக் குவித்திருக்கிறார்.

இதில் பி.பி.சி. தொலைக்காட்சியின் சிறப்புக் குறும்பட விருதும் அடக்கம் இனி அவரைப்பற்றிக் காண்போம்.

**உங்கள் பிறப்பு - வளர்ப்பு குடும்பம் பற்றிக் கூறுங்கள்?**

நான் பிறந்தது கும்பகோணம். அப்பா சுந்தரராமன், அம்மா நளினி, தம்பி மதன் என்று அளவான குடும்பம். அப்பா வங்கிப் பணியில் இருந்தாலும், பட்டிமன்றப் பேச்சாளர், நாடக நடிகர், கவிதை, கட்டுரை நாவலாசிரியர் என்று பல முகங்கள் பெற்றவர் 1992ஆம் ஆண்டு அவர் இந்தோனேஷியாவிற்கு பணிமாறுதல் பெற்றுச் நச் சென்றதும் தமிழ் மன்றம்

ஒன்றை சென்றார். அங்குச் ஆரம்பித்தார். வீட்டில் நாங்கள் கட்டாயம் தமிழில்தான் பேச வேண்டும். வாரம் ஒருமுறை எல்லாத் தமிழர்களையும் அழைத்து விருந்துகள் வைத்துப் போட்டிகள் நடத்துவார். பாரதியார் கவிதைகள், நடிகர் திலகம் சிவாஜி போல் நடிப்பது, தமிழிசைப் பாடல்கள் இப்படிப் பல போட்டிகள் இருக்கும். பரிசாகப் பல தமிழ்ப் புத்தகங்களைத் தருவார். இப்படிப்பட்ட சூழலில் தான் நான் வளர்ந்தேன்.

**உங்கள் கல்வி பற்றிக் கூறுங்கள்?**

சென்னையில் பள்ளிப் படிப்பு முடித்ததும், மேற்படிப்புப் படிக்கச் சிங்கப்பூர் சென்றேன். சிங்கப்பூர் லாசலி கல்லூரியில் மல்டிமீடியா படித்தேன். அந்தக் கல்லூரியில் படித்த ஒரே தமிழ்ப் பெண் நான்தான்.

**குறும்படத் துறையில் எப்படி நுழைந்தீர்கள்?**

லாசலி கல்லூரியில் படிக்கும் போது 'பொட்டு' என்ற குறும்படத்தை இயக்கினேன். அப்படத்தைப் பி.பி.சி. நிறுவனம் சிறந்த குறும்படமாக, தேர்வுச் செய்தது. அந்த உற்சாகத்தில் தொடர்ந்து இயக்க ஆரம்பித்தேன்.

**உங்கள் குறும்படங்கள் எங்கெங்கு திரையிடப்பட்டன? அவை பெற்ற விருதுகள் என்னென்ன?**

எனது குறும்படங்களை ஹாலிவுட்டின் வார்னர் பிரதர்ஸ்-ஸ்கிரீனிங் தியேட்டர், இந்தோனேஷியாவில் உள்ள ஜகார்தா இன்டர்நேஷல் பிலிம் பெஸ்டிவெல், மீடியா தட் மேட்டர்ஸ் பிலிம் பெஸ்டிவெல், நெதர்லாந்து நாட்டில் சான்ட்பெர்க் இன்ஸ்டிட்யூட் பெஸ்டிவெல், லாஸ் ஏஞ்சல் பிலிம் பெஸ்டிவெல் இப்படிப் திரையிடப்பட்டுள்ளன. திரைப்பட விழாக்களில்

இப்படங்களுக்கு அமெரிக்க உமன் இன்டிபென்டன்ட் சினிமா விருது, மெடமோஷிசெல் சல் விருது, சிங்கப்பூர் குறும்பட விழா விருது என பல விருதுகள் கிடைத்துள்ளன.

**திரைத்துறையிலும் பணிபுரிகிறீர்கள். உங்கள் அடுத்த கட்டம் என்ன?**

இயக்குநர் கௌதமின் அனைத்துப் படங்களிலும் நான் பணிபுரிந்திருக்கிறேன். இப்போது, தனியாகப் படம் ஒன்றை இயக்குவதற்கான ஏற்பாடுகளில் இருக்கிறேன். பிரிதிவிராஜ் கதாநாயகனாகவும் சினேகா கதாநாயகியாகவும் நடிக்கும் இப்படத்திற்கு, கவியரசு வைரமுத்து பாடல்கள் எழுத பரத்வாஜ் இசை அமைக்கிறார். இதிலும் கண்டிப்பாக வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்த் தொலைக்காட்சிகளில் தொடர் களின் (Serials) ஆதிக்கம் மிகுந்து காணப்படும் இவ்வேளையில், பரிக்ஷா நாடகக் குழுவின் ஞாநி, பெரும் பரிசோதனை முயற்சி ஒன்றைப் பொதிகையில் தொடங்கி அதை வெற்றிகரமாகச் சாதித்துக் காட்டினார்.

'அய்யா' என்ற தலைப்பில் பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைத் தொலைக்காட்சிப் படமாக எடுத்த ஞாநி. அத்தொடரின் திரைக்கதை, வசனம், பாடல், இசை, இயக்கம் எனப் பல பொறுப்புகளையும் அவரே ஏற்றிருந்தார்.

"நான் வாழ்க்கையில் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்ட சில செயல்களில் இதுவும் ஒன்று. பெரியாரைப் பற்றிப் படிக்கப் படிக்க அவ் வளவு ஆச்சரியம். பெரியார் ஒரு நெருப்புத் துண்டு என் பார்கள். உண்மையற்ற யாரும் அவரை நெருங்கக் முடியாத அளவுக்கு வாழ்நாள் முழுவதும் இந்தச் சமூகத்திற்காக உண்மையாக உழைத்த அந்த மனிதரைப் படம் எடுக்க வேண்டும் என்பது நீண்ட நாளைய சுனவு. இப்போது கனவு மெய்ப் பட்டிருக்கிறது. இதுமாதிரி நல்ல பணிகளைச் செய்வதற்கு அரசுத் தொலைக்காட்சியில் மட்டுமே இன்று வாய்ப்பிருக்கிறது. என்கிறார் இயக்குநர் ஞாதி.

நிகழ்காலத்திற்கும் பொருந்தும்படி, பெரியாரைச் சம காலத்து மனிதர்கள் சந்திப்பதுபோல் எடுத்ததுதான் இத் தொடரின் சிறந்த உத்தி.

பெரியார் தொலைக்காட்சிப் படத்திற்கு முன்பாகவே சென்னைத் தொலைக்காட்சிக்காகப் படமொன்றை இயக்கினார் திரு. பாலுமகேந்திரா. ஓவியர் வீரசந்தானம், நடிகை அர்ச்சனா நடிப்பில் வெளிவந்த 'சந்தியா ராகம்' என்ற அந்தப்படம் சிறந்த கதையமைப்பையும் சிறப்பான தொழில் நுணுக்கத்தையும் கொண்டிருந்தது.

சென்னையில் இயங்கிவரும் பிரெஞ்சு அரசாங்கத்தின் Alliance Francaise of Madras கடந்த ஆண்டின் மிகச் சிறந்த பிரெஞ்சுக் குறும்படங்களைத் திரையிட்டுக் காட்டியது. Butterfly women, Neither seen nor known, House, The elemental dance, Life Line, Hymne to the gazette in the land of the bears எனும் தலைப்பிடப்பட்ட அந்தப் படங்கள் பெரும்பாலும், மாறிவரும் உலகச் சூழலில் ஏற்படும் தனிமனித உளவியல் பிரச்சினைகள், பாலியல் சிக்கல் மற்றும் பறிக்கப்படும் குழந்தைகள் சுதந்திரம் பற்றியதாகவே இருக்கிறது.

உலகின் அனைத்துப் பாகங்களிலும், பல்வேறு வகைகளில் சமுதாயக் கூட்டமைப்பு உடைபடுவதும், அதைத் தொடர்ந்து ஏற்படும் உளவியல் பாதிப்புகளையுமே, குறும்படங்கள் அதிகம் பேசுகின்றன.

ஆவணப்படம், மற்றும் குறும்படத் தயாரிப்புகளில் மகாராஷ்டிரம், தில்லி, வங்காளம், கேரள மாநிலத்தவரே முன்னிலை வகித்த நிலை மாறி, தற்போது தமிழகத்திலும் படைப்புகள் உருவாக்கப்பட்டுப் பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளன.

ஆவணப் படங்களுக்காக ஜப்பானின் யமகட்டா, ஜெர்மனியின் ஓபர்ஷபிசன் பட விழாக்கள் முக்கியத்துவம் வாய்ந்தன. இந்தியாவிலும் மும்பையில் ஒவ்வோர் ஆண்டும் ஆவணப்பட விழா நடத்தப்படுகிறது. முதன் முறையாக ஆவணப் படங்களும் தணிக்கைச் செய்யப்பட வேண்டும் என்ற நடைமுறை முந்தைய பிஜேபி அரசால் வலியுறுத்தப்பட்டது. குஜராத் கலவரத்தையொட்டி எடுக்கப்பட்ட இறுதித்தீர்வு ( Final Solution) இந்த வகையில் மத்திய அரசால் அனுமதி மறுக்கப்பட்டு, பின்னர் ஆட்சி மாற்றத்திற்குப்பின் அத்தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

தமிழக அளவில் முதன்முறையாகக் குறும்படவிழா 'திவுகள் 2000' என்ற பெயரில் சென்னையிலும், 2001 இல் யமுனா ராஜேந்திரன் முயற்சியால் இலண்டனிலும், 2002 இல் பாரிஸ் தண்பர்கள் வட்டத்தைச் சேர்ந்த அசோக்கின் முயற்சியால் பிரான்ஸ், நார்வே, ஜெர்மனி, நெதர்லாந்து நாடு னிலும் தமிழ்க் குறும்பட விழாக்கள் நடத்தி அதன் படைப் பாளர்களுக்குப் பரிசளித்தனர்.

2003 இல் திருஅஜீவனின் முயற்சியால் சுவிட்சர்லாந்திலும் 194 இல். அமெரிக்காவில் சிந்தனையாளர் வட்டம் சார்பில் நியூஜெர்ஸியிலும் குறும்பட விழாக்கள் நடத்திப் படைப்பாளர் அளுக்கு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பரிசுகளும் சான்றிதழ் களும் வழங்கப்பட்டன.

இவை அத்தனை நிகழ்வுகளிலும் தமிழகத்தில் இயங்கும் 'நிழல்' என்ற அமைப்பு இணைந்து செயலாற்றியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும், இந்த அமைப்பு அவ்வப்போது வேறு சில அமைப்புகளுடன் இணைந்து, குறும்பட பயிற்சிப்படப் பட்டறைகளை நடத்துகிறது.

இதில், குறும்பட ஆவணப்பட வரலாறு, புகைப்படக்கலை, ஒளியமைப்பு, கேமரா பயிற்சி திரைக்கதை, விளம்பரப் படங்கள், படத் தொகுப்புப்பற்றி விரிவான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

**குறும் படங்களின் தேவைகள்,வகைகள்**

நம் நாட்டில் எத்தனையோ தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்க்கின்றனர் - ஒவ்வொரு தொழிற்சாலையிலும். என்றாலும்

சிறு தொழில்கள் நம் நாட்டில் இல்லை என்றால் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கும்.

பெரிய தொழிற்சாலைகளினால் மட்டும் போதுமான வேலைவாய்ப்பைக் கொடுத்துவிட முடியாது. ஒரு சில பேருக்குத்தான் பெரிய தொழிற்சாலையினால் வேலை கொடுக்க முடியும். அதனால்தான் அரசாங்கம் கூட சிறுதொழில்களை ஊக்கப்படுத்தி வருகின்றன. சிறு தொழில் பற்றி நான் சொன்ன உதாரணம், சினிமாவுக்கும் பொருந்தும் என்பதால்தான் அதை மேற்கோள் காட்டுகிறேன்.

நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் ஏற்படாமல் இருக்க சிறு தொழில்கள் எந்த அளவுக்குக் காரணமாக இருக்கிறதோ, அதே அளவு சினிமாத் துறை செழிப்பாக இருக்க சிறு முதலீட்டுப் படங்களே காரணம். சிறு முதலீட்டுப் படங்கள் இல்லை என்றால் சினிமாவை நம்பி இருப்பவர்கள் பிழைக்க முடியாது. அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரை சினிமாத்துறை சுபிட்சமாக இருந்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். வருடத்திற்கு நூற்றுக்கும் மேற்பட்ட படங்கள் வெளிவந்து கொண்டிருந்தன.

சுமார் இருபத்தைந்து படங்கள் எந் நேரமும் தயாரிப்பில் இருந்தன. சினிமாத்துறையின் இயக்கம் சீராக இருந்தது. காரணம், அப்போது நிறைய சிறு முதலீட்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டு வந்ததுதான்.

இப்போது நிலைமை முற்றிலும் மாறிப் போய்விட்டது. சிறு முதலீட்டுப் படங்கள் என்ற கேட்டகிரி இல்லாமலே போய்விட்டது. இப்போது எடுக்கப்படும் படங்கள் எல்லாமே பெரிய பட்ஜெட் படங்கள்தான்.

இந்த மாற்றத்தினால் சினிமாத்துறை சுருங்கிப் போய்விட்டது. வருடத்திற்கு எழுபது படங்கள் வெளிவந்தால் அதிசயம் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அதே போல் தயாரிப்பில் இருக்கும் படங்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்து போய்விட்டன. ஐந்து அல்லது ஆறு படங்கள் தான் தயாரிப்பு நிலையில் இருக்கின்றன.

படங்களின் எண்ணிக்கை குறைந்து போனதால் வேலைவாய்ப்பும் குறைந்து விட்டது. சில நூறு பேர்கள் மட்டும் பிஸியாக இருக்கிறார்கள். பல ஆயிரம் பேர் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

தொழிலாளர்கள் மட்டுமல்ல, நட்சத்திரங்களும், டெக்னீஷியன்களும் கூட பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். ஹீரோக்களை எடுத்துக் கொள்வோம் - ஐந்தாறு ஹீரோக்கள் மட்டுமே பிஸி! மற்றவர்கள் வேலை இல்லாமல் வீட்டில் இருக்கிறார்கள்.

சினிமாவை நம்பி பிரயோஜனம் இல்லை என்று ஒரு சிலர் டி.வி.பக்கம் போய் விட்டனர். ஒரு சிலர் இன்னமும் சினிமாவில் நல்ல காலம் பிறக்கும் என்ற நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள் - இதெல்லாம் சிறு முதலீட்டுப் படங்கள் இல்லாமல் போனதால் ஏற்பட்ட விளைவுகள்.

சரி, இதற்கு என்னதான் தீர்வு?

மறுபடியும் சிறு முதலீட்டுப் படங்கள் வர வேண்டும் என்பது தான் ஒரே தீர்வு. அதற்காகப் பெரிய படங்கள் வரக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. அவை ஒரு பக்கம் வந்து கொண்டு இருக்கட்டும். அதே சமயம் இன்னொரு பக்கம் சின்ன படங்களும் வர வேண்டும்.

சின்ன படங்களின் வருகையிலும், அதன் வளர்ச்சியிலும் நான் மிகுந்த அக்கறை கொண்டவன்.

இதை எல்லா சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தி வருகிறேன். திரையுலக விழாக்களில் பேச எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதும், இந்த விஷயத்தை நான் பேசாமல் இருந்தது இல்லை.

காரணம்.... சின்ன படங்கள்தான் திரையுலகைச் சீரும் சிறப்புமாக வாழவைக்கும் என்பது எனக்கிருக்கும் அழுத்தமான நம்பிக்கை!

சின்ன படங்கள் வெற்றி பெற்றால் பலரும் குறைந்த முதலீட்டில் படம் எடுக்க ஆர்வமாக முயற்சி செய்வார்கள்.

திரையுலகம் மறுபடியும் செழிப்பான சூழ்நிலையை நோக்கிச் செல்லும்,

இந்த சந்தர்ப்பத்தில் சில விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் சொல்லும் விஷயங்கள் திரையுலகத்துக்குப் பயன்தரும் என்ற நம்பிக்கையில்தான் இதைச் சொல்கிறேன்.

பெரிய படங்கள் பெற்ற தொடர் வெற்றியினாலும், வேறுபல காரணங்களினாலும், பெரிய படங்கள் மட்டுமே ஓடும், சின்ன படங்கள் ஓடாது என்ற சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்றி சின்ன படங்களும் ஓடும் என்ற நிலையை உருவாக்க வேண்டும்.

குருட்டாம் போக்கில் ஒரு படம் எடுப்போம். வந்த வரை லாபம் என்று தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது. பல சின்ன படங்கள் வந்தாலும், ஓடியது என்னவோ நல்ல கதையம்சம் உள்ள படங்கள்தான். ஆக, இதன் மூலம் என்ன உண்மை நமக்கு புலப்படுகிறது? சின்ன படம் என்பதற்காக அவை ஓடவில்லை. நல்ல படம் என்பதற்காகவே ஓடி இருக்கின்றன.

எனவே, நாம் ஒரு விஷயத்தைத் தீர்க்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல கதைதான் படத்தை ஓட வைக்கும். கதையில் கவனம் செலுத்தாமல் படம் எடுத்தால் தியேட்டருக்கு வரும் ரசிகர்கள் ஏமாந்து போவார்கள். அதனால் படத்தின் வெற்றி பாதிக்கப்படும்.

அது மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக சின்ன படங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் ஆபத்தும் இருக்கிறது. நல்ல கதையம்சம் இல்லாத படத்தைப் பார்த்து ஏமாந்து போயிருக்கும் ரசிகர்கள் மற்ற படங்களையும் அதே போல் நினைத்து, தியேட்டருக்கு வராமல் போனால் கஷ்டம்தானே?

அதனால்தான் சொல்கிறேன். நாம் செய்யும் அலட்சியம் மற்ற படங்களையும் திரையுலகத்தையும் பாதித்து விடக்கூடாது. இதை மனதில் கொண்டாவது நல்ல கதையை நம் தயாரிப்பாளர்கள் தேர்வு செய்ய வேண்டும். இல்லை என்றால் எல்லோருக்கும் கஷ்டம்!

இனி வரப் போகும் எல்லா சின்ன படங்களும் ஓட வேண்டும். அப்போதுதான் விநியோகஸ்தர்களின் ஆதரவு தொடரும். தியேட்டர்காரர்களும் சின்ன படத்தை திரையிட ஆர்வம் காட்டுவார்கள். ரசிகர்களிடமும் வரவேற்பு இருக்கும்.

கதை அம்சம் இல்லாத படங்களை எடுத்தோமானாலும் எல்லாமே கெட்டு குட்டிச்சுவராகிவிடக்கூடும். இதை உணர்ந்து சின்ன படங்கள் எல்லாம் நல்ல படங்கள் என்று மக்கள் சொல்லும் காலத்தை நாம் ஏற்படுத்த வேண்டும்.

பெரிய படங்களை வாங்கவே இப்போது விநியோகஸ்தர்கள் இல்லை. இந்த நிலையில் சின்ன படங்கள் வந்தால் யார் வாங்குவார்கள் என்று பலருக்கும் கேள்வி எழலாம்.

நம் வியாபார முறையை மாற்றிக் கொண்டு செயல்பட்டால், வெற்றிகரமாகச் சின்ன படங்களை எடுக்க முடியும் என்பது என் அபிப்ராயம்.

வெளிநாட்டு ஏரியாவை நாமே பிரித்து விற்பனை செய்ய வேண்டும். இதன் மூலம் கணிசமான தொகை கிடைக்கும். அப்புறம்... வெளிநாட்டு ஆடியோ உரிமை! இதிலும் பெரும் தொகை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

அதன்பிறகு படம் வெளிவந்து ஒரு வருடம் அல்லது இரண்டு வருடம் கழித்து வெளியிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் வி.சி.டி. உரிமை கொடுக்கலாம். இதன் மூலமும் ஒரு தொகை கிடைக்கும்.

நல்ல கதையை தேர்ந்தெடுத்து படம் எடுத்தால் பிற மொழி ரைட்ஸ் விலை போகும். இதிலும் ஓரளவு பண வருவாய் உண்டு.

பிறகு தனியார் தொலைக்காட்சிக்கு ரைட்ஸ் கொடுக்கலாம். இதில் மிகப் பெரிய தொகை கிடைக்கும் என்பது நிச்சயம்.

தனியார் தொலைக்காட்சி தவிர, இந்திய தொலைக்காட்சி ( தூர்தர்ஷன்) க்கும் உரிமை மூலமும் சிறு தொகை கிடைக்க வாயப்பு உண்டு.

அரசாங்கம் தரும் மான்யம் நிச்சயமாகச் சின்ன படங்களுக்குக் கிடைக்கும்.

இப்படி எல்லா வகையிலும் வரும் தொகை போட்ட முதலீட்டை விட அதிகமாகவே இருக்கும். அதாவது படம் ரிலீஸுக்கு முன்பே முதலீடு கிடைத்து விடும்.

இத்தனையும் செய்த பிறகு படத்தை வெளியிட முயற்சி செய்யலாம். விநியோகஸ்தர்கள் வாங்க முன்வந்தால் நல்லது. இல்லை என்றால் தயாரிப்பாளர்கள் சொந்தமாக வெளியிடலாம். அவரவர் சக்திக்கு ஏற்றர்ற்போல் பந்து பிரிண்ட்டோ பதினைந்து பிரிண்ட்டோ போட்டு படத்தை வெளியிடலாம்.

இப்படி வெளியிடப்பட்டால் படம் ஓடுகிற வரை லாபம்! நிச்சயமாக நஷ்டம் வராது. நல்ல படமாக இருந்தால் கண்டிப்பாக வெற்றி கிடைக்கும். லாபமும் அதிகமாகக் கிடைக்கும்.

இந்த வழியில் நம் தயாரிப்பாளர்கள் முயற்சி செய்தால், வெற்றி பெற முடியும். இதன் மூலம் மறுபடியும் சினிமாத் துறை செழிப்பாக முடியும்.

வரும் காலத்திலாவது இந்த முறையில் நம் முயற்சிகளைத் தொடங்க வேண்டும். திரையுலகினரின் இந்த முயற்சி வெற்றி பெற தியேட்டர்காரர்கள் ஒத்துழைக்க வேண்டும். அதாவது தியேட்டரில் சின்ன படத்தைத் திரையிட தடையாக இருக்கும் வாடகை சிஸ்டத்தை தளர்த்த வேண்டும்.

படங்களை தியேட்டர்களில் திரையிட இரண்டுவிதமான முறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. ஒன்று சதவிகித அடிப்படையில் திரையிடுவது. மற்றொன்று தியேட்டர்களுக்கு வாடகை கொடுத்து திரையிடுவது. இதில், ஆரோக்கியமான வழி சதவிகித அடிப்படையில் திரையிடுவதுதான். இந்த முறையில் படத்தை வெளியிடும்போது லாபமோ, நஷ்டமோ விநியோகஸ்தர்களுக்கும், தியேட்டர்களுக்கும் சரிசமமாக ( அல்லது ஒரு சில சதவிகிதம் கூடுதல் -குறைவாக) கிடைக்கும்.

வாடகைக்குப் படம் திரையிடுவதில் இந்த நன்மை இருக்காது.லாபம் என்றாலும், நஷ்டம் என்றாலும் விநியோகஸ்தர்களுக்குத்தான். தியேட்டர்காரர்களுக்குக் குறிப்பிட்ட தொகை மட்டும் வாடகையாகக் கிடைத்து விடும். படம் சூப்பர் ஹிட்டானாலும் கூடுதலாக பணம் வராது. ஃப்ளாப்பானால் நஷ்டமும் இல்லை.

இந்த முறையினால் பாதிப்பு விநியோகஸ்தர்களுக்குத்தான். ஏனென்றால் இப்போது வெற்றி பெறும் படங்கள் அரிதாகி விட்டன. தோல்விப் படங்கள்தான் அதிகம்.இப்படியான சூழ்நிலையில் வாடகை கொடுத்து படத்தைத் திரையிடுவதில் விநியோகஸ்தர்கள் தொடர்ந்து நஷ்டப்பட்டு வந்தார்கள் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் 'வாடகை கொடுத்து இனி படங்களைத் திரையிடுவதில்லை. சதவிகித அடிப்படையில்தான் படத்தைத் திரையிடுவோம் என்று விநியோகஸ்தர்கள் சங்கம் அறிவித்தது.

இதை வரவேற்பது மட்டுமல்ல, இந்த முறை தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றும் விரும்புகிறேன். இந்த சிஸ்டத்தைக் கொள்கைரீதியில் ஒத்துக் கொண்டுவிட்டு, நடைமுறையில் கடைப்பிடிக்காமல் இருந்துவிடக் கூடாது. விநியோகஸ்தர்களின் நலனை மனதில் கொண்டு, தியேட்டர்காரர்கள் இந்த உடன்படிக்கையைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும்.

ஏனென்றால், இதுநாள்வரை இருந்த வாடகை சிஸ்டத்தினால் சிட்டி ஏரியா விநியோகஸ்தர்கள் ஒருவரும் சம்பாதிக்கவில்லை. கையில் இருந்த முதலீடு கரைந்து போய்,ஷிப்டிங் படங்களை வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். அதனால் தயாரிப்பாளர்களே சிட்டி ஏரியாவில் நேரடியாகத் திரையிட ஆரம்பித்தும் விட்டார்கள்.

அது மட்டுமல்ல, சிட்டி ஏரியா விநியோகஸ்தர் என்றாலே இளக்காரமாகப் பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது.காரணம் சிட்டி ஏரியாவில் படத்தைப் போடுபவர்கள் கையில் காசு இருக்காது என்ற எண்ணம்தான்.

சென்னை நகரில் உள்ள சொத்து மதிப்பு நாளுக்குநாள் அதிகரித்து, இப்போது நம்ப முடியாத அளவுக்கு உயர்ந்து விட்டது. அதனால் பல தியேட்டர்கள் இடிக்கப்பட்டு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்களாக மாறி விட்டன. இப்படியாக தியேட்டர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது.அதனால் தியேட்டர்களுக்கு டிமாண்டும் அதிகமானது.

இன்னொரு பக்கம் நேரடிப் படங்கள் குறைந்து, டப்பிங் படங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. டப்பிங் படங்கள் அதிகமானது. தியேட்டர்களுக்கு டிமாண்ட்டை அதிகப்படுத்தியது. டிமாண்ட் அதிகமானதால் தியேட்டர் வாடகை கொடுத்து படத்தைத் திரையிடும் வழக்கம் ஏற்பட்டது.

இப்போது அந்த வழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரம் வேறு சில கட்டுப்பாடுகளும் இந்த நேரத்தில் அவசியம். முக்கியமாக டப்பிங் படங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். முதல் கட்டமாக ஆங்கில, இந்தி படங்களை டப் செய்வதையாவது நிறுத்த வேண்டும். இன்னொரு விஷயம் குறிப்பிட்ட நாட்களுக்குக் கண்டிப்பாகத் தமிழ்ப் படங்களைத் திரையிட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ஏற்கனவே, வருடத்திற்குக் குறைந்தபட்சம் பன்னிரெண்டு வாரங்களுக்கு தமிழ்ப்படங்கள் திரையிட வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறது. அதை யாரும் பின் பற்றுவதில்லை. அரசும் கண்டு கொள்ளவில்லை. அதனால்தான் தமிழ்நாட்டில், தமிழ்ப்படங்கள் ஓடும் தியேட்டர் அரிதாகிப் போனது.

என் அபிப்ராயம் என்னவென்றால் பன்னிரெண்டு வாரங்கள்கூடப் போதாது. குறைந்தது இருபத்தாறு வாரங்கள் தமிழ்ப்படம் போட வேண்டும் என்று சட்டம் கொண்டு வர வேண்டும். அதோடு, அதைத் தீவிரமாக கண்காணிக்கவும் வேண்டும். படங்களின் எண்ணிக்கைக் குறைவாக இருந்தால்தான் ரகவிகித அடிப்படையில் படத்தைத் திரையிடுவது வொர்க் டப்பிங் படங்கள், பிற மொழிப் படங்கள் என்று பட எண்ணிக்கை அதிகமாக இருந்தால், குறுகிய நாட்களிலேயே தியேட்டரிலிருந்து படத்தை எடுத்துவிடுவார்கள். இப்படி எடுப்பதால் லேட் பிக்கப் ஆகக்கூடிய படங்கள்கூட வெற்றி பெற முடியாமல் போய்விடும்.

திரையிட்டபோது கூட்டம் இல்லாமல் இருந்து, மூன்று வாரங்களுக்குப் பிறகு பிக் அப்பாகி பெரும் வெற்றி பெற்ற படங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஒருதலை ராகம்' முதல் 'சேது' வரையான பல படங்களை உதாரணமாகச் சொல்லலாம். இன்றைய சூழ்நிலையில் எந்த நடிகருக்கும் ஓபனிங் இல்லை. சுருக்கமாகச் சொன்னால் நடிகருக்காக

மூன்று வாரம் ஹவுஸ்புல்லாகும் என்பதும் பொய்த்துப் போய்விட்டது. எப்பேர்ப்பட்ட படமாக இருந்தாலும், முதலில் டல்லடித்து, மெல்லமெல்லத்தான் பிக் அப்பாகிறது.

இப்படி பிக் அப் ஆகும் வரை படங்கள் தியேட்டரில் இருக்க வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் மேற்சொன்ன கட்டுப்பாடுகள் அவசியம். இந்தக் கட்டுப்பாட்டினால் தயாரிப்பாளர்களுக்கும், திரை உலகுக்கும் லாபம்தான் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆகவே குறைந்த பட்சம் இருபத்தாறு வாரங்கள் தமிழ்ப்படம் திரையிட

## குறும்படங்களுக்கான திரைக்கதை எழுதுவது

குறும்படங்களுக்கான திரைக்கதை எழுதுவது ஒரு சுருக்கமான , ஆக்கப்பூர்வமான செயல்முறை. ஒரு சுருக்கமான , கவனத்தை ஈர்க்கும் கதையைத் திட்டமிட்டு , அதற்கான காட்சிப்படுத்தல்களை எழுதி, கதையின் அடித்தளத்தை வலுவாக அமைக்க வேண்டும்.

**கருவை தேர்வு செய்தல்**

- குறும்படங்களுக்கான கருக்கள் , ஒரு வலுவான செய்தி அல்லது உணர்வை செய்யக்கூடியதாக இருக்க வேண்டும்.
- குறும்படத்தின் நோக்கம் என்ன என்பதை தீர்மானிக்கவும். அது ஒரு சமூகப் பிரச்சினை, ஒரு காதல் கதை அல்லது ஒரு நகைச்சுவை கதையா?
- கதை சுருக்கமானதாகவும், சுவாரஸ்யமானதாகவும் இருக்க வேண்டும்.

2. கதை கட்டமைப்பை உருவாக்குதல்:

- கதையை ஆரம்பம் , நடுப்பகுதி மற்றும் முடிவு என மூன்டும் பாகங்களாக பிரித்து , ஒவ்வொரு பகுதியிலும் என்ன நடக்கிறது என்பதை திட்டமிடுங்கள்.
- கதையின் மையம் என்ன என்பதை தெளிவாக வரையறுக்கவும்.
- குறும்படத்தில் ஒரு முக்கிய திருப்பம் இருக்க வேண்டும் , அது கதையை மேல்நோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

3. கதாபாத்திரங்களை உருவாக்குதல்:

- குறும்படத்தின் கதாபாத்திரங்களை யதார்த்தமானதாகவும் , சுவாரஸ்யமானதாகவும் உருவாக்கவும்.
- கதாபாத்திரங்கள் கதையின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும்.
- கதாபாத்திரங்களின் நடத்தைகள் , அவர்களின் நோக்கங்கள் மற்றும் அவர்களின் உணர்வுகளை தெளிவாக வரையறுக்கவும்.

**காட்சிப்படுத்தல்**

- கதையை காட்சிப்படுத்துவதற்கு காட்சிகள் , இடம், உரையாடல்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான காட்சிகள் ஆகியவற்றை பயன்படுத்தவும்.
- காட்சிகள் கதையை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.
- காட்சிகளை சுவாரஸ்யமாக்குவதற்கு ஒளி , நிறம் மற்றும் ஒலி போன்றவற்றை பயன்படுத்தவும்.

**உரையாடல்களை எழுதுதல்**

உரையாடல்கள் கதையின் வேகத்தை அதிகரிக்க வேண்டும் , உரையாடல்கள் கதாபாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் , உரையாடல்கள் பார்வையாளர்களை கதைக்குள் கொண்டு செல்ல வேண்டும்.

**திரைக்கதை எழுதுதல்**

- திரைக்கதை எழுதுவதற்கு முன்பு, ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கவும்.
- திரைக்கதையில் காட்சிகள் , உரையாடல்கள், கதாபாத்திரங்கள் மற்றும் கதையின் மையத்தை தெளிவாக எழுதவும்.
- திரைக்கதையை ஒரு தொழில்முறை திரைக்கதை வடிவமைப்பில் ( screenplay format) எழுதவும்.

7. திருத்தங்கள் மற்றும் மறுபரிசீலனை:

- திரைக்கதையை பலமுறை படித்து திருத்தவும்.
- வேறு யாராவது உங்கள் திரைக்கதையை படித்து, கருத்துக்களை தெரிவிக்கவும்.
- திரைக்கதையில் உள்ள தவறுகளை திருத்தி, கதையை வலுவாக்கவும்.

குறும்படங்களுக்கான திரைக்கதை எழுதுவது ஒரு சவாலாகும் , ஆனால் அது ஒரு சுவாரஸ்யமான பணியாகும். ஒரு நல்ல திரைக்கதை ஒரு நல்ல குறும்படத்தின் அடித்தளமாக இருக்கும்.

சமூக விழிப்புணர்வு திரைப்படங்கள் , சமூகத்தில் உள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மக்களிடையே விவாதம் மற்றும் மாற்றத்தை தூண்டவும் உருவாக்கப்பட்டவை. இவை சமூக நீதி , கல்வி, சுற்றுச்சூழல், பாலினம், குடிமக்களின் உரிமை போன்ற பல முக்கிய அம்சங்களை விவாதிக்கின்றன.

**படங்களின் வகைகள்**

செய்தித்தாள்களில் வெளிவரும் புகைப்படங்களைக் கீழ்காணும் முறையில் வகைப்படுத்தலாம். அவை 1. செய்தி நிகழ்ச்சிப் படங்கள் ( New Event Photos), 2.2 உருவப்

படங்கள் (Portrait Pictures), 3. **கவர்ச்சிப் படங்கள்** ( Cheese cake shots), 4. **செயல்விளக்கப் படங்கள்** (Action shots), 5.**வடிவமைப்புப் படங்கள்** (Pattern Shots), 6. **உற்பத்திப் படங்கள்** (Product shots), 7. **கருத்துப் படங்கள்**(Cartoons), 8. **நகைச் சுவைப் படங்கள்** ( Comics), 9.**வரைப்படங்கள்** (Maps, Drawings, Graphs, Diagrams, Charts, Sketches etc.) போன்றவையாகும்.

**1. செய்தி நிகழ்ச்சிப் படங்கள்**

செய்தியாகும் ஒன்றினை வெளிக்காட்டும் படங்கள் செய்தி நிகழ்ச்சிப் படங்களாகும். (எ.கா). குடியரசுத்தலைவரைத் தமிழக முதல்வர் சந்தித்தக் காட்சியைப் படமாக்கி வெளியிடல்.

**2. உருவப் படங்கள்**

விருதுகள் பெற்றவர்களின் படங்கள், முதல் மதிப்பெண் பெற்றவர்களின் படங்கள் போன்றவற்றை உரிய தகவல்களோடுத் தருதல் .

**3. கவர்ச்சிப் படங்கள்**

பாலுணர்ச்சியைத் தூண்டும் படங்கள் இவ்வகையைச் சாரும். நடிகைகளின் புகைப்படங்கள் இதனுள் அடங்கும்.

**4. செயல்விளக்கப் படங்கள்**

ஒரு செயலைச் செய்கின்ற பொழுது எடுக்கின்ற படங்கள் செயல்விளக்கப் படங்களாகும். ஏதேனும் ஒரு புதிய கண்டுபிடிப்புகள் அதன் பயன் குறித்த செயல்விளக்கப் படங்கள் இவ்வகையைச் சாரும்.

**5. வடிவமைப்புப் படங்கள்**

விளம்பர நோக்கில் உற்பத்தி செய்த பொருட்களின் வடிவமைப்பு வெளிப்படும் வகையில் எடுக்கப் பெற்ற படங்கள் வடிவமைப்புப் படங்களாகும். விதவிதமாக வடிவமைக்கப்பட்டுள்ள ஆடை, அணிகலன்கள் குறித்த படங்கள்.

**6. உற்பத்திப் படங்கள்**

உற்பத்திச் செய்கின்றவை பற்றி விளக்கும் படங்கள் இவ்வகையைச் சாரும். (எ.கா). நெல் உற்பத்தியில் புரட்சியாக ராஜராஜன் 1000 என்ற நெல்லைப் பற்றிய சிறப்புக் கண்ணோட்டத்தைக் கூறலாம்.

**7. கருத்துப் படங்கள்**

செய்திகளுக்குரிய விளக்கங்களாக இவ்வகைப் படங்கள் அமையும். இவை தலையங்கத்திற்கு இணையானவை. ( எ-டு) ஒரு மனிதன் தன் தலையில் மூட்டை முடிச்சினைச் சுமப்பது போன்ற கருத்துப்படம் மூட்டை முடிச்சு வரிச்சுமையைக் குறிக்கும்.

**8. நகைச்சுவைப் படங்கள்**

ஒரு நகைச்சுவைத் துணுக்கை விளக்கும் வகையில் அமைக்கப் படும் படங்கள் நகைச்சுவைப் படங்களாகும். இவை மகிழ்வித்தல், பணியைச் செய்கின்றன. ( எ-டு) தினத்தந்தியில் வெளியாகும் ஆண்டிப்பண்டாரம் என்ற தலைப்பில் அமையும் படங்கள்.

**9. வரைபடங்கள்**

ஒருநாட்டின் பழைய தற்போதைய வரைபடம், கட்டட வரைபடம், புதிய கண்டுபிடிப்புக் கருவிகள் போன்ற படங்கள் இவ்வகையை சேரும். ( எ-டு) இந்தியா வரைபடம், ஆஸ்திரேலியா வரைபடம்.

**புகைப்படங்களைப் பயன்படுத்தலிலுள்ள விதிமுறைகள்**

1. செய்திகளோடு தொடர்புடைய படங்களை அச்செய்திக்கு அருகிலேயே அமைக்க வேண்டும்.

2. செய்தியை வெளியிடும் நாளில் புகைப்படம் கிடைக்கவில்லை என்றால், மறுநாள் அது தொடர்பானச் செய்தி வெளியிடும்போது படத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.

3. படங்கள் மிகச் சிறியவையாகவோ, தெளிவற்றவைகளாகவோ அமையக் கூடாது.

4. படங்களுக்குரிய விளக்கங்களைப் படங்களின் கீழ் சுருக்கமாக எழுதலாம்.

5. படத்தில் காணப்படும் மனிதர்களின் பெயர்களை இடமிருந்து வலமாக முறையே கூற வேண்டும். இம்முறையிலிருந்து மாறுபடுவதும், சிலரைப் பற்றி மட்டும் குறிப்பிட்டுவிட்டு, மற்றவர்களை விட்டுவிடுவதும் கூடாது.

**செப்பனிடுதல்**

புகைப்படக் கலைஞன் புகைப்படங்களை பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பியவுடன் அப்படங்கள் செய்திக்குத் தொடர்பானவை என்பதை செய்தி ஆசிரியர் முடிவு செய்து அவைகளைத் தேர்ந்தெடுப்பர். படம் தெளிவாக அமைய இது உதவுகின்றது.

**படத் தலைப்பிடுதல்**

ஒவ்வொரு புகைப்படத்தையும் ஒரு விளக்கத் தலைப்போடு அல்லது குறிப்போடு வெளியிட வேண்டும். வாசகர் முதலில் படத்தைப் பார்த்துவிட்டு. பின்பு தலைப்பினைப் படித்து மேலும் விவரங்களைத் தெரிந்து கொள்ள ஏதுவாக அமையும். படத்திற்கு நல்ல தலைப்பினைக் கொடுத்தால்தான் அது படத்திற்கு வலுவூட்டும். நல்ல தலைப்பு வாசகரின் மனதில் எளிதில் பதியும். எம்.வி. காமத் படத்தலைப்பினை நான்கு வகைகளாகப் பாகுபடுத்துகின்றார்."

1. செய்தியின் ஒரு பகுதியாக வரும் புகைப்படத்தினை விளக்கு கின்ற தலைப்பு ஒரு வகை. இது சுருக்கமாக இருக்க வேண்டும்.

2. ஓரிடத்தில் படத்தையும் மற்றுமொரு இடத்தில் செய்தியையும் வெளியிட்டு, வாசகர்களை என்னவென்று அறியத் தூண்டும் தலைப்பினை வெளியிடலாம். எடுத்துக்காட்டாக, இரு தலைவர்கள் சேர்ந்து சிரிக்கும் படத்தை ஓரிடத்தில் வெளியிட்டு இவர்கள் ஏன் சிரிக்கின்றார்கள்? (விவரம் எட்டாம் பக்கத்தில் காண்க) என்று வெளியிடலாம்.

3. செய்தி இல்லாமல், படமே செய்தியாக இருந்தால் தலைப்பு முழுமையானதாக இருக்க வேண்டும். ( எ.கா). திரைப்பட விருது வழங்கும் விழாவில் எடுக்கப்பட்ட முக்கிய படங்களை வெளியிடுவது.

4. செய்திகளுக்கு ஆதாரமில்லாமல் புகைப்படத்தை மட்டும் வெளியிட்டால், புகைப்படம் எடுக்கப் பெற்ற சூழலையும் தலைப்பில் சேர்த்துக் கூற வேண்டும்.

உலகெங்கும் படங்களோடு கூடிய இதழ்கள் வாசகர்களிடத்தில் நல்ல வரவேற்புப் பெற்றுத் திகழ்கின்றன. இதன் காரணமாகச் சில பத்திரிகைகள் புகைப்படத்திற்கு என்றே சில பக்கங்களை ஒதுக்குவதைக் காணலாம்.

**படத்துணுக்குகள் (Cartoons)**

வார, மாத இதழ்களில் சிறுகதைகளுக்கும், தொடர்கதை களுக்கும் அணி சேர்க்கும் வகையில் ஓவியங்களை வெளியிடு கின்றனர். இவற்றில் படங்கள் உரைநடைக்குத் துணைபோகின்றன. படங்கள் கருத்துகளையும், செய்திகளையும் கூறும் வகையில் வெளியிடுகின்றனர். இவ்வாறு வெளியிடுவதால் அவை வாசகர் களைக் கவர்ந்து விடுகின்றன.

சிறுவர் இதழ்கள், அம்புலிமாமா போன்றவற்றில் படங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சிறுவர்கள் பெரிதும் படங்களை விரும்புகின்றனர். பெரியவர்களும் படங்களைப் பார்ப்பதை விரும்புகின்றனர்.

படத்துணுக்குகள் சுமூகமான முறையில் மனித உணர்வைத் தூண்டிவிட்டு, சிந்திக்க வைக்கின்றன. படத்துணுக்குகள் பிரச்சினையின் மையப்பகுதியை எளிதாகப் படம்பிடித்துக் காட்டக்கூடியவை.

**வகைகள்**

இதழ்களில் வெளிவரும் படங்களை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம். அவை

1. பேச்சுமொழியற்றவை
2. படக்கதை
3. கருத்துப்படங்கள், கேலிச்சித்திரங்கள்

**1. பேச்சுமொழியற்றவை**

படங்களோடு எந்த வாசகமும் வெளியிடாமல் கதையை, கருத்தை வெளியிடுவது. இதில் கதாபாத்திரங்கள் பேசும் முறையில் இல்லாமல், படங்களே தன்னிலை விளக்கங்களாக அமைகின்றன.

**2. படக்கதை**

படங்களின் மூலமாக கதையைக் கூறுவது. வார இதழ்கள் படக்கதையை வெளியிட்டு வருகின்றன. இப்படக்கதைகள் ஒரே இதழில் நிறைவுபெறும் தனிக்கருத்துப் படமாகவோ அல்லது தொடர் கருத்துப் படமாகவோ அமையலாம். (எ.கா). விக்கிரமாதித்தன் கதை, பீர்பால்கதை.

**கேலிச் சித்திரங்கள், கருத்துப்படங்கள்**

நாளிதழ்களிலும், வார இதழ்களிலும் கேலிச் சித்திரங்களும், கருத்துப் படங்களும் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. பல சொற்களில் உணர்த்த முடியாதக் கருத்துக்களை கேலிச் சித்திரங்களும், கருத்துப் படங்களும் எளிதாக உணர்த்துகின்றன. சமுதாயம், சமயம், அரசியல், பொருளாதாரத் துறைகளில் உள்ள குற்றங்குறைகளை, நகைச்சுவையோடு, தாக்கி வீழ்த்தும் வகையில் கேலிப்படங்கள் அமைகின்றன.

தமிழ்நாட்டில் முதன் முதலாகக் கருத்துப்படங்களை வெளியிட்ட பெருமை மகாகவி பாரதியாரைச் சாரும். ஆங்கிலேயர்களின் ஆட்சியின், கொள்கைகளின் குறைகளை இந்தியா இதழில் கேலிச் சித்திரங்களின் மூலம் வெளியிட்டார். பெரும்பாலும் எல்லாச் செய்தித்தாள்களும், வார, மாத இதழ்களும் கருத்துப் படங்களையும், கேலிச் சித்திரங்களையும் வெளியிடுகின்றன. கருத்துப்படங்களும், கேலிச்சித்திரங்களும் ஒன்றுபோல் தோன்றினாலும், அவற்றிற் கிடையே மிகவும் நுட்பமான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கருத்துப்படங்களில் கருத்துக்குத்தான் முதலிடம் தரப்படும். கருத்துப் படங்கள் ஒரு மையக்கருத்தை எடுத்துரைக்கும் வகையில் எளிமையான படங்களைக் கொண்டவைகளாக இருக்கும். இக்கருத்துப்படங்கள் வாசகர்களைச் சிந்திக்க வைக்கும். கருத்துப் படங்களில் எந்தக் கருத்தினை உணர்த்த விரும்புவார்களோ அந்தக் கருத்து வெளியிடப்படும் வகையில் படத்தைப் பெரிதாக வரைந்து காட்டுவார்கள்.

கேலிச்சித்திரம் பெரும்பாலும் சில மனிதர்களை, அவர்களின் கொள்கைகளைக் கேலி செய்வதற்காக வரையும் படங்களாகும். கேலிச் சித்திரங்களில் வரைகின்ற தலைவரின் ஓரியல்பைச் சுட்டிக் காட்டி அவரைக் கேலி செய்யும் வகையில் படத்தை அமைப்பார்கள்.

இதழ்களின் சிறப்பு அம்சமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள கருத்துப் படமும், கேலிச்சித்திரமும் சில விதிமுறைகளின் அடிப்படையில் எழுதப்படுகின்றன.

1. கருத்துப்படங்களும், கேலிச்சித்திரங்களும் தனிநபர்களின் மனம் வருந்துகின்ற வகையில் அமையக் கூடாது.
2. தனிநபர் பற்றிய அந்தரங்கச் செய்திகள் நாட்டிற்கு நலம் பயக்குமானால் கேலிச் சித்திரமாக்கலாம். வேறு நோக்கத்தோடு பிரசுரிக்கக் கூடாது.
3. கருத்துப்படங்களும் கேலிச்சித்திரங்களின் அடிப்படையில் அமைதல் வேண்டும்.
4. இப்படங்கள் மக்களைச் சிந்திக்க வைக்க வேண்டும்.
3. அறிவுறுத்தும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

## ஆவணப்படங்கள்

வரலாறு, சமூகக் கூறுகள் , கல்வித்துறை சார்ந்த தகவல்கள் என பலதரப்பட்ட செய்திகளைப் புனைவுகள் எதுவுமின்றி எடுக்கப்படும் நிகழ்படத்தை ( Video) ஆவணப்படம் என்கிறார்கள் தகவல் படம் , செய்திப்படம், வாழ்க்கைச் சித்திரப்பட்டம் என்று இதன் வடிவங்களும் மாறுபட்டிருக்கின்றன. ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் நெடுங்காலமாக ஆவணப்படங்கள் இருந்தாலும் தமிழ் வழியிலான ஆவணப் படங்கள் மிகக் குறைவுதான்.

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் , டிஜிட்டல் வீடியோ கருவிகள் குறைந்த விலைக்கு வாக் தொடங்கிய பின்ப தமிழிலும் ஆவணப் படங்கள் ,விலைக்கு வரத் தொடங்கிய பின்பு , தமிழிலும் ஆவணப் படங்கள் , குறும்படங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கின. குறும்படங்கள் ஏதாவதொரு சிறிய கருத்தை மையப்படுத்திப் புனைகதையாக உருவாக்கப்படுகின்றன. ஆவணப்படங்கள் ஒரு தகவலையோ அல்லது வாழ்க்கை வரலாற்றையோ அல்லது சமூக நிகழ்வுகளையோ அப்படியே நிகழ்படமாக்கி உருவாக்கப்படுகின்றன.

ஆங்கில மொழியிலான பல்வேறு ஆவணப்படங்களை மட்டுமே உள்ளடக்கமாகக் கொண்டு ஓர் இணையதளம் செயல்பட்டு வருகிறது. செயற்பாட்டாளர் ( Activist), தொல்பொருளியல் ( Archaeology), கலை மற்றும் கலைஞர்கள் ( Art and Artists), இறைமறுப்பு (Atheism), வாழ்க்கை வரலாறுகள் ( Biographies), வணிகம் ( Business), புகழ்பெற்றவர் ( Celebrity), கல்வி ( Educational), சுற்றுச்சூழல் ( Environment) உள்ளிட்ட 38 தலைப்புகளில் மொத்தம் 911 ஆவணப்படங்கள் இந்த இணையதளத்தில் தற்போது இடம் பெற்றிருக்கின்றன.

இந்தியத் தொலைக்காட்சி உலகம், அதிகம் பயன்படுத்தாத இதுறை இது. ஆனால் மேற்கத்தியத் தொலைக்காட்சி நிறுவனங்கள் உட்பட உலகின் பல்வேறு தொலைக்காட்சிகளும் ஆவணப்படங்கள், குறும்படங்கள் மற்றும் தொலைக்காட்சிப் ) படங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன.

நாடுகளின் வரலாறுகள், அவற்றின் சுதந்திரப் போராட்டம், சரித்திரப் புகழ்பெற்ற தலைவர்கள் மற்றும் இரண்டாம். உலகப்போர் பற்றி பி.பி.சி. தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்து வெளியிடும் ஆவணப்படங்கள் பற்றி நாம் முன்னரே கண்டிருக்கிறோம்.

அண்டார்டிக் பனிக்கண்டம், எவரெஸ்ட் சிகரம். அமேஸான் காடுகள், ஆப்ரிக்கப் பழங்குடி, பசிபிக் கடல் உயிரினங்கள் மற்றும் எகிப்தின் பிரமிடுகள் பற்றி 'டிஸ்கவரி'

தொலைக்காட்சியும், 'நேஷனல் ஜியாகிராபிக்' தொலைக் காட்சியும் வெளியிடும் படங்கள் யாவும், ஆவணப்படங்கள் வகையைச் சார்ந்தவையே.

ஆவணப்படங்கள் உண்மையை ( Facts) அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட நேர வரையறையைக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

சரி ! ஆவணப்படமாக எதை எடுப்பது? இதற்கும் வரையறை இல்லை. வனவிலங்குகள் முதல் வானவியல் வரையும், ஒரு குறிப்பிட்ட தலைவர் முதல், ஒரு குறிப்பிட்ட பொருள் தயாரிப்பு வரை எதை வேண்டுமானாலும் எடுக்கலாம்.

1922ல் அமெரிக்காவைச் சேர்ந்த ப்ளஷர்ட்டி எடுத்த “நானுக் ஆப் தி நார்த்” எனும் படம்தான் உலகின் முதல் ஆவணப் படமாய்க் கருதப்படுகிறது.

ஆலந்து நாட்டைச் சார்ந்த மோரிஸ் இவானும், பிரான்ஸின் கிரிஸ் மார்க்கும் இத்துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்தியவர்கள்.

இந்தியாவில் திரைப்படத் தயாரிப்பிலும் தனியார்த் தொலைக்காட்சிகளிலும் தமிழகம் முன்னிலை வகிப்பதைப் போன்றே ஆவணப்படத் தயாரிப்பிற்கும் தலைவாயிலாக விளங்கியது.

தேசத்தந்தை மகாத்மா காந்தியை இவ்வாறு ஆவணப்பட மாக்கியவர் திரு ஏ.கே.செட்டியார். 1937ஆண்டுத் தொடங்கி 1940 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகள் இந்த முயற்சியில் இருந்த ஏ.கே. செட்டியார், இதற்கென நான்கு கண்டங்களில் பல லட்சம் மைல்கள் பயணம் செய்தார். பற்பல செய்திப்படக் கம்பெனி களில் ஏறி இறங்கி ஒரு நூறு கேமராக்கள் எடுத்த படங்களைச் சேகரித்தார். ரோமன் ரோலந்து பேலிக் போன்ற உலக அறிஞர்களின் கருத்தைக் கேட்டறிந்து படத்தில் இணைத்தார். 50,000 அடிவரை இந்த ஆவணப் படம் நீண்டது. இதுவே இரண்டரை மணி நேரம் ஓடும் அளவில் பன்னிரண்டாயிரம் அடியாகச் சுருக்கப்பட்டு, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாளன்று புதுதில்லியில் வெளியிடப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற மாமனிதரின் வாழ்க்கைப் பதிவையும், காலங் கடந்து நிற்கும் அதன் மதிப்பையும் அறிந்து, அமெரிக்காவின் புகழ் பெற்ற படத் தயாரிப்பு நிறுவனம் ஒன்று, அந்த ஆவணப்படத்தை இருபது பல் விலைமதி இலட்சம் ரூபாய்க்கு விலை பேசியது, ஆனால் அந்தக் காலக் கரூவூலத்தை, இந்திய திக்க இலவசமாகவே தந்துவிட்டார் திரு.ஏ.கே. செட்டியார், அரசுக்கு ஒரு து

இயக்குநர் ரிச்சர்ட் அட்டன் பரோவின் 'காந்தி' படம் பற்றி உலகம் முழுவதுக்கும் தெரியும். ஆனால் உயிருள்ள காந்தியை உண்மையாகவே தனது சொந்தப் பணத்தில் பதிவு செய்த திரு.ஏ.கே. செட்டியாரைப் பற்றி எத்தனைத் தமிழர் களுக்குத் தெரியும்?

சுதந்திரத் தினத்தன்றும் குடியரசு நாளன்றும் நடிக நடிகையரை வைத்துச் சிறப்பு நிகழ்ச்சி நடத்தும் தமிழகத் தொலைக் காட்சிகள் இதுப் பற்றிச் சிந்தித்தால் நல்லது.

இந்திய அளவில், ஆவணப்படம் பற்றிய தாக்கத்தை ஏற்படுத்தியது இந்தியச் செய்திப்படப் பிரிவு என்று கூறலாம். அரசின் பல்வேறு நலத்திட்டங்கள், விளைபொருள் உற்பத்தி மற்றும் பல்வேறு மாநில மக்களின் வாழ்க்கை முறை இவற்றையொட்டி, நூற்றுக்கணக்கான ஆவணப் படங்களை மத்திய அரசின் செய்திப் படப்பிரிவு தயாரித்துள்ளது.

திரைப்படம், தொலைக்காட்சிக் கருவிகளின் வீச்சு பரவலான பின்பு, ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகே ஆவணப் படங்கள் குறும்படங்கள் பற்றியச் சிந்தனை தமிழகத்தில் தலை தூக்கியது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறுகளின் புகழ் பெற்ற படத்தொகுப்பாளர் பி.லெனின் எடுத்த 'நாக் அவுட்' எனும் குறும்படம் தமிழகத்தைத் தாண்டி, பல்வேறு உலகப்பட விழாக்களில் பாராட்டைப் பெற்றது.

திரு.சொர்ணவேல் இயக்கிய 'தங்கம்' எனும் ஆவணப்படம் நாற்பது பட விழாக்களில் பங்கெடுத்த பெருமைக்குரியது. இது இத்தாலியின் Rai - 3 தொலைக்காட்சியிலும் திரையிடப் பட்டது. இயக்குநர் அருண்மொழி எடுத்த 'அரவாணிகள்' பற்றிய " Second birth" படமும் இதே தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

தமிழகத்தின் அம்ஷன் குமார், வட இந்தியாவின் பிரசித்திப் பெற்ற வீதிநாடகக் கலைஞர் பாதல் சர்க்காரையும் மகாகவி பாரதியாரைப் பற்றியும் சிறந்த தந்துள்ளார். ஆவணப்படங்களைத்தற்போது மத்திய மாநில அரசுகளும் ஆவணப்படங்களின் முக்கியத்துவத்தை அறிந்து அதில் கவனம் செலுத்துவது ஆறுதலான செய்தி. சாகித்ய அகாதமிக்காக, எழுத்தாளர் ஜெயகாந்தனின் வாழ்க்கை வரலாற்றை ஆவணப் படமாகத் தயாரித்துள்ளார் எழுத்தாளர் சா.கந்தசாமி.

'யுனெஸ்கோ கூரியர்' தமிழ் இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவரும் தற்போது பிரிட்டானியா கலைக்களஞ்சியத் தின் தமிழ்ப் பதிப்பு ஆசிரியராகவும் உள்ள திரு. மணவை முஸ்தபா "அறிவியல் தமிழின் தந்தை" என்று போற்றப்படுபவர். தனி ஒரு மனிதராகவே

அய்ந்து இலட்சம் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கி அதை ஏழு தொகுதிகளாக வெளியிட் டுள்ளவர். இந்தியாவில் இயங்கும் எந்த ஒரு பல்கலைக்கழகமும். எந்த மொழிக்காகவும் செய்திராத இமாலயப்பணி இது. இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை, திருமணவை முஸ்தபாவின் இந்தச் செயற்கரியத் திறனை உணர்ந்து, வருங்காலச் சந்ததி யினருக்காக. தயாரித்தது. அவரை ஆவணப்படமாக அண்மையில்

கால கடந்த வரலாற்றை அறிதல், நாம் வாழும் சமுதாயத்தில் சக மனிதர்களின் ம அக்கறை செலுத்துதல், தனித்திறன் பெற்ற மனிதர்களைப் பற்றி வருங்காலச் சமுதாயத் தினருக்கு எடுத்துரைத்தல் போன்றவற்றில், ஆவணப்படங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

அய்ரோப்பிய நாடுகளில் தமிழர்களுக்கென்று ஒளிபரப் பாகும் பல்வேறு செயற்கைக்கோள் தொலைக்காட்சிகளில் திரையிடப்பட்டு " வள்ளுவம்" மிகச்சிறந்த வாழ்க்கை நெறி என்பதை உலகமுழுவதும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இளைஞர் சொ. அரங்கநாதன் இயக்கிய "வள்ளுவமே வாழ்க்கை" என்ற ஆவணப்படம்.

கடந்த 2004ஆம் ஆண்டில் திருப்பூர் அரிமா சங்கம் நடத்திய குறும்படங்களுக்கான போட்டியில் பரிசு பெற்ற இந்த ஆவணப்படம், கேரள மாநிலத்தில் வாழும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்களில் ஒரு பிரிவினர் திருக்குறள் நெறியை வாழ்க்கை முறையாகக் கொண்டு வாழ்ந்து வருவதைப் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

தமிழ்ச்சான்றோரிடமும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர் களிடமும் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தப்படம் சொற்கூர்மையும், ஒளிவீச்சும், நேர்த்தியான படத்தொகுப்பும் இசைச் சேர்ப்பும் கூட்டணி அமைத்து, அனைவரையும் உணர்ச்சிப் பிழம்பாக ஆக்குவது மட்டுமல்லாமல், நாம் வாழும் நவீன வாழ்வியலைப் பற்றிப் பல கேள்விகளையும் எழுப்புகிறது.

"பொதுவாக, அறிவு ஜீவிகளின் உலகமாகத்தான் குறும்பட / ஆவணப்பட உலகம் தன்னைக் குறுக்கிக் கொண்டி ருந்தது. அதை அனைத்து மக்களுக்கும் எடுத்துச் சொல்லும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டும், ஒரு வட்டத்துக்குள் வீழ்ந்து கிடக்கிற தமிழ் விழுமியங்களை உலகத்தின் பார்வைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையிலும் தான் எனது படைப்பு முயற்சிகளை மேற் கொள்கிறேன் " என்று தனது ஆவணப்பட முயற்சிபற்றி கூறுகிறார் இயக்குநர் சொ அரங்கநாதன்.

"தமிழர்களின் உலோகச் சிற்பக்கலைத் திறனை வெளிக் கொணரும் "வடிவும் வார்ப்பும்" என்ற ஆவணப்படத்தையும் இவர் வெளியிட்டுள்ளார்.

ஒளிப்பதிவு, படத்தொகுப்பு. இசைச் சேர்ப்பு முதலிய பன்முகத் திறமை பெற்ற இயக்குநர் சொஅரங்கநாதன், போர்டு பவுண் டேஷன், ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி, விவேகானந்தா கேந்திரம், தான் பவுண்டேஷன் போன்ற நிறுவனங்களுக்காக, இருபத்தைந்து ஆவணப் படங்களை இதுவரை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இயக்கியுள்ளார்

ஈகோடான் என்ற அமைப்பு, ஓ.டி.சி புத்தக நிறுவனம், சத்யம் திரையரங்கு ஆகியவற்றுடன் இணைந்து வனவிலங்குகள் பற்றிய ஆவணப்பட விழாவைச் சென்னையில் நடத்திவிலுங்

அதில் அப்போன்ஸ்ராய் இயக்கிய 'Bhandarghar: A temple for tiger' என்ற படம் திரையிடப்பட்டது. மத்தியப் பிரதேசத் திலுள்ள பாந்தங்கர்க் காடுகளில் வாழும் புலிகளைப் பற்றியது இந்தப் படம். சீதா என்ற புலியையும் அதன் இரண்டு குட்டி களையும் பற்றிய இந்தப் படம், புலிகளின் வாழ்க்கை பற்றிய மிகச்சிறந்த ஆவணப்படமாகத் திகழ்கிறது. அதுமட்டுமல்லாமல், காட்டு விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கிடையேயான உறவில் புதிய கேள்விகளையும் எழுப்புகிறது.

பாந்தங்கர் காடுகளின் நடுவே, ஒரு விஷ்ணு கோயில் இருக்கிறது. அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருக்கும் புலிகளின் உறுமல் சத்தத்தையெல்லாம் பொருட்படுத்தாமல் கடவு ளுக்கு அன்றாடம் படையல் வைத்தாக வேண்டும் என்ற பிடிவாதத்துடன் ஒரு பூசாரி அந்தக் கோயிலில் தனியாக வாழ்கிறார். புலியின் நடமாட் டத்தையும் பூசாரியின் அன்றாட வாழ்க்கையையும் மாறிமாறிக் காட்டும்போது, ஆவணப்படம் சுவை மிகுந்த புனைவாக மாறிவிடுகிறது.

அந்தத் துறவியின் இரத்தம் புலிகளின் புலன் களுக்கு அப்பாற்பட்டதா அல்லது ஏதேனும் அதிர்ஷ் டத்தின் அடிப்படையில் அன்றாடம் அவர் உயிர்ப்பிழைத்து வருகிறாரா என்ற ஐயப்பாடு நமக்குள் எழாமல் இல்லை.

அல்போன்ஸ்ராய் இன்னொருவருடன் இணைந்து இயக்கிய படம் "Great Cats of India". சிங்கம், புலி, சிறுத்தை, பனிச் சிறுத்தை ஆகிய பூனைக் குடும்பங்களைப் பற்றிய ஆவணப் படமும், பல வியப்பூட்டும் உண்மைகளைப் பார்வையாளனுக் குத் தருகின்றது.

சென்னையைச் சேர்ந்த சேகர்தத்தா வனவிலங்குப் பற்றிய ஆவணப் படங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர். தென்னிந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகள், அசாமின் காஸிரங்கா காடுகளில் பல மாதங்கள் பயணப்பட்டு, சிறுத்தைகள், புலிகள்,

யானைகள், ஹான்பில் ( Horn bill) போன்ற அரிய பறவைகள், காண்டாமிருகங்கள் பற்றி அதிகமான ஆவணப் படங்கள் எடுத்தவர்.

வனவிலங்குகள் பற்றிய அரிய ஆவணப்படங்களுக்காக, "ரோலக்ஸ் அவார்டு" என்ற சர்வதேச விருதையும் பெற்றிருக்கும் சேகரின் ஆவணப் படங்களை 'டிஸ்கவரி' மற்றும் 'ஜியோ கிராபிக்' தொலைக்காட்சிகள் ஒளிபரப்புகின்றன.

சமூகத்தின் விளிம்பு நிலை மக்களைப்பற்றி ஆவணப்படங்கள் எடுத்து, அதிகம் பேரை யோசிக்க வைத்தவர் கவிஞர் லீனா மணி மேகலை பல்துறை அறிவும் பன்முகச் செயலாற்றலும் நிரம்பிய லீனா தொலைக்காட்சி மற்றும் திரைப் படத் துறையிலும் பணியாற்றியவர்.

மாத்தம்மா, பறை, பலிபீடம் போன்ற ஆவணப் படங்களை இயக் கியவர் இவர். தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பான எனது 'புது யுகம் நிறுவன நிகழ்ச்சிக்காக இவரை ஒரு முறை நேர்காணல் செய்தேன்.

அதற்குமுன் அவரை அறிந்திருந்தேன் என்றாலும் அது தான் எங்கள் முதல் சந்திப்பு. அவர்பற்றிய விவரம் அறிந்தபோது மிகவும் மகிழ்ந்து போனேன்.

எனது முதல் நூலான 'முட்களின் மூலம் நட்சத்திரங் களுக்கு' எனும் சிறுகதைத் தொகுப்பைப் பாராட்டிப் பேராசிரியர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். அதுமட்டுமல்ல நூலின் நூறு பிரதிகளை வாங்கிக் கல்லூரி நூலகங்களில் விரியோகித்தார். அவர்தான் பேராசிரியர் இரா. ரகுபதி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியின் தமிழ்த் துறைப் பேராசிரிப்புத்

வாழ்நாளெல்லாம் தமிழுக்குத் தொண்டாற்றி, யாரும் எதிர்பாராத வேளையில் இறந்துபோன அந்தத் தமிழ்ப் பேராசிரியரின் புதல்விதான் லீனா "

பேராசியருக்குச் செலுத்தும் மரியாதையாக எண்ணி அவரது மகளின் நேர்காணலை விரிவாகவும் ஆழமாகவும் செய்தேன். சமூக அக்கறை கொண்ட படைப்பாளிகளில் முன் னணிப் போராளி லீனா. அந்நிகழ்ச்சி ழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெறவே, அடுத்த நாளே அத் தொலைக்காட்சி மறுஒளிபரப்பும் செய்தது.

லீனாவின் ஆவணப் படங்கள் முயற்சி பற்றி மக்கள் தொலைக்காட்சி பிப்ரவரி 2007ல் ஒரு நேர்காணல் நடத்தி அவரது ஆவணப்படங்களின் சில பகுதிகளையும் ஒளிபரப்பியது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கடந்த கால வரலற்றின் இருண்ட பக்கங்களை, நிகழ் காலச் சமுதாயத்தின் கண்முன் நிறுத்தி கேள்விகள் எழுப்புவதில் நிகரற்று விளங்குபவை ஆவணப் படங்கள்.

பல்வேறு சிரமங்களுக்குகிடையில், சமூக அக்கறையோடு எடுக்கப்படும் இத்தகைய ஆவணப் படங்கள், மறைக்கப்பட்ட வரலாற்றை மக்கள் முன் காட்டி, அதுவரை நாம் அறிந்தவற்றை மறு கேள்விக்கு உட்படுத்துகின்றன.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டு:

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்தியா அடிமைப் பட்டுக்கிடந்தபோது, நாட்டில் பல ஆண்டுகள் பஞ்சம், பட்டினி தலைவிரித்தாடியது. பிழைக்க வழிதேடி மக்கள் நகரங்களை நோக்கிப் படையெடுத்தார்கள். அடிமை ஆட்சியில் தொழிற் பெருக்கம் ஏதும் இல்லாததால், நகரங்களிலும் நிலைமை கவலைக்குரியதாக இருந்தது.

அதே வேளையில், மேற்கிந்திய நாடுகளின் "கறுப்பின மக்களுக்கான" அடிமைமுறை படிப்படியாக அகற்றப்பட்டு வந்ததில், விடுதலை பெற்ற சந்தோசத்தில் அவர்கள் புதிய புதிய துறைகளில் கால் எடுத்து வைத்தனர்.

உலகின் பல்வேறு நாடுகளில் விவசாய பொருள் உற்பத் தியைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தியிருந்த ஏகாதிபத்திய வாதிகளுக்குப் புதிய அடிமைகள் தேவைப்பட்டனர். அவர்கள் கண்முன் வந்தவை ஆசிய நாடுகள்தான். குறிப்பாகச் சீனாவும், இந்தியாவும் பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஆளுகைக்குள் இருந்த கரீபியன் கடல் ல் தீவுகளான கயானா, சூரிநாம், கொத்லூப், மார்டினிக், டிரினிடாட் போன்ற தீவுகளின் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய இவர்கள் தேவைப்பட்டனர்.

அடிமைச் சங்கிலிக்குப் பதிலாக, ஒப்பந்தம் என்ற பெயரில் காகிதச் சங்கிலியால் கட்டப்பட்ட புதிய அடிமைகள், சீனா விலிருந்ருந்தும் இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப் பட்டனர்.

இந்த வகையில், பன்னிரெண்டுக் கப்பல்களில் சீன விவசாயி களை ஏற்றிக்கொண்டு போய்க் கரீபியன் தீவுகளில் இறக்கியது பிரிட்டன். மாறுபட்ட தட்பவெப்பநிலை, சதுப்பு நிலப் பண்ணைகளில் இருந்த இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள், பூச்சிகள், ஆண்டின் சில மாதங்களில் உறைய வைக்கிற கடுங்குளிர் போன்றவற்றினால் சீன விவசாயிகளில் தொண்ணூறு சதவீதம் பேர் தற்கொலை செய்து கொண்டனர்.

அதிர்ந்துபோன பிரிட்டன், "சீன இறக்குமதி" யை நிறுத்திக்கொண்டு, இந்தியர்களிடம் திரும்பியது. இந்தியர் களின் உடல் உழைப்புதான் அவர்களுக்குத் தெரிந்ததாயிற்றே.

1838 முதல் 1917 ஆம் ஆண்டு முடிய, எண்பது ஆண்டுகளில் அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பெருங்கடல்களில் உள்ள தீவுகளுக்கு ஐந்து இலட்சம் இந்தியர்கள் அனுப்பப்பட்டார்கள். இவர்களில் அதிகம் பேர் தமிழர்கள்.

"அந்தமான்ல கரும்பு வெட்ற வேலை கை நிறையச் சம்பளம். ஆறு மாசத்தில திரும்பிட என்று ஆசை காட்டப்பட்டு, சென்னை, புதுவை, காரைக்கால், துறைமுகங்களிலிருந்து சுப்ப லில் ஏற்றி அழைத்துச் செல்லப்பட்ட இவர்களின் கதையைக் கேட்டால் கல்லும் கரைந்துருகும்.

பல அடுக்குகள் உள்ள கப்பலில், மேல்தளங்களில் வசதி யாக வெள்ளை அதிகாரிகளும் பண்ணை முதலாளிகளும் பயணம் செய்ய, கப்பலின் கீழ்த் தளத்தில் ஆடு, மாடுகளைப்போல, இந்தியர்கள் கூட்டம் கூட்டமாய் அடைக்கப்பட்டனர்.

"ரெண்டு மூணு நாள்ல அந்தமான் போயிடலாம்" என்று அவஸ்தைகளை எல்லாம் பொறுத்துக்கொண்டு அடைபட்டி ருந்த தமிழர்கள், மாதக் கணக்கில், கரையையே காணாமல், கடலில் போகும் கப்பலைக் கண்டு, கிக்பிரமை பிடித்து, செய்வதறியாது நின்றனர். சரியான காற்றோட்ட வசதியோ, உணவோ இல்லாமல், சுகாதாரம் கெட்டு, காலரா பரவி, கப்பலிலேயே பல பேர் கொத்துக்கொத்தாக மாண்டுபோக, எஞ்சியோர் கரை சேர்ந்தனர்.

படிப்பறிவற்ற அந்தத் தமிழர்கள், உலகத்தில் நாம் எங்கு இறக்கி விடப்பட்டோம்? அந்த நாட்டின் பெயர் என்ன? மொழி என்ன? இங்கிருப்பவர்கள் யார்? நாம் எத்தனை நாளைக்கு இங்கிருக்கப் போகிறோம்? என எந்தக் கேள்விக்கும் விடை தெரியாமல் சதுப்பு நிலக்காடுகளில் இறக்கிவிடப்பட்டு ஆயுள் கால அடிமைகளாயினர்.

பிழைக்க வழிதேடிப் போய், திரும்பி வர வழி யில்லாமல், ஆயுள்கால அடிமைகளாக்கப்பட்ட தமிழர்களின் இந்தியர் களின் துயர வரலாற்றை, ஆவணப் படமாக்கி நாக ரீக உலகை அதிர வைத்த வர் திரு.சுரேஷ்குமார் பிள்ளை. கேரளாவின் புகழ்ப் பெற்ற ஆவணப்பட இயக்குநரான இவரின் ஆவணப்படங்களை பல உலகின் காட்சிகளும் ஒளிப்பரப்பின. நாட்டுத் தொலைக்

தென்னியந்தியர்களின் இந்த வரலாற்றுத் துயரத்தை ஆவணப் படமாக்கியதுபோல, வட இந்தியர்களின் அடிமை வாழ்வைப்பற்றியும் இன்னொரு ஆவணப் படம் பேசியது.

1879ஆம் ஆண்டு முதல் 1916ஆம் ஆண்டு வரை பீகார், உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 60 ஆயிரம்பேர், பிஜியில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய அழைத்துச்

செல்லப் பட்டனர். மிகச்சிறிய வீடுகளில் இருக்க வைத்து, விலங்குகளைப் போலவே நடத்தப்பட்ட இந்த மக்கள் பாலியல் தொல்லைகள் உட்பட சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாயினர்.

இரத்தம் கசியும் இந்தச் சோக வரலாற்றை ஆஸ்திரேலிய எஸ்.பி.எஸ் வானொலியில் பணிபுரியும் குமுத்மி ராணி திரைப் படமாக எடுத்துக் கடந்த ஆண்டின் ஆசிய பசிபிக் ஒலிபரப்பு யூனியன் விருதைப் பெற்றார்.

தமிழகத்தின் சமீபகால வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரும் கொடுமையை ஆவணப் படமாக்கி, சாதனை நிகழ்த்திய வர் இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார்.

"ராமய்யாவின் குடிசை" என்ற இந்த ஆவணப்பட முயற்சி பற்றித் "தீக்கதிர்" நாளிதழ் இவ்வாறு எழுதியது:

"மொத்தம் 38 நாள்கள் படப்பிடிப்பு, குறைந்தது 3,000 கி.மீ பயணம். இரண்டு மோட்டார் பைக்குள்தான் படப்பிடிப்பு வாகனங்கள். அத்தனை ஒளிப்பதிவு, ஒலிப் பதிவுக் கருவிகளையும் தோளில் சுமந்து கொண்டுக் கீழத் தஞ்சை, மேலத்தஞ்சை கிராமங்களுக்குள் சென்று வருவது வசதியான அனுபவமல்ல. முப்பெத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வழக்கு சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளைச் சேர்ந்த மக்களைச் சந்தித்து, அவர்களது பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளச் செய்வது எளிமையான வேலையில்லை. மணிக் கணக்கில் அவர்களைப் பேசவிட்டால்தான் ஆவணப் படத்தில் ஒரு சில நிமிடங்கள் மட்டும் இடம் பெறக்கூடிய தகவல்கள் கிடைக்கும்."

இப்படித்தான் முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முந்தைய கீழவெண்மணிப் படுகொலைப் பற்றிய மறைக்கப்பட்ட வரலாறு மீண்டும் உயிர் பெற்று வந்தது.

கும்பகோணம் பள்ளித் தீவிபத்துப் பற்றியும் இவர் எடுத்த ஆவணப்படம் அனைவரையும் அதிர வைக்கிறது.

"இது ஆவணப் படம் அல்ல அது போன்ற அவலங்கள் இனி அரங்கேறாமல் இருக்க ஆவன செய்ய வேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தும் பாடம்"

தனது படைப்பின் உருவாக்கம்பற்றிக் கூறுகிறார் பாரதி கிருஷ்ணகுமார்.

உலகப்பட விழாக்களில் ஆவணப் படங்களுக்கும் ஒரு பிரிவை ஏற்படுத்திச் சிறந்த படங்களைத் திரையிடுகிறார்கள். அந்த வகையில் கோவா 37ஆவது பன்னாட்டுத் திரைப்பட விழாவில் நான் பார்த்த இந்திய ஆவணப் படங்களில் குறிப் பிடத்தக்கவை. குவஹாத்தி

(அசாம்) தொலைக்காட்சிகாக இயக்குநர் அரிபாம் சர்மா இயக்கிய மணிப்பூர் நடனக் கலைஞர் தாம்போலிங் தேவி ஆவணப்படம்பற்றி நான் முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன்.

சிக்கிமின் புத்த மடாலயங்களில் நடைபெறும் விழாக்கள் பற்றிய இன்னொரு ஆவணப் படம் சமய மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு ஆர்வமூட்டக் கூடிய ஒன்று. அடுத்த ஆவணப் படம் நமது தமிழகம் தொடர்புடையது. நீலகிரி மலைகளில் வாழும் பழங்குடி மக்களின் குழந்தைகள் பற்றியது. அடிப்படை வசதிகள் ஏதுமன்றிக் கல்விக்காக அச்சிறுவர்கள் படும் சிரமங்களையும் காடுகளினூடே கழியும் அவர்கள் வாழ்க்கை முறையையும் அற்புதமாக சித்தரிக்கிறது.

தமிழ்த் தொலைக்காட்சிகள் ஆவணப் படங்கள் பக்கம் ஆர்வம் காட்டத் துவக்கியுள்ளது ஆறுதலான விசயம் ஜெயா தொலைக்காட்சி ஆவணப் படங்கள் குறும்படங்களுக்காகப் போட்டிகள் அறிவித்து சிறந்த படங்களைத் தெரிவு செய்து வல்லுநர் கருத்துகளோடு ஒளிபரப்பியதை இங்குக் குறிப்பிட்டுக் கூற வேண்டும்.

## சமூக விழிப்புணர்வு திரைப்படங்களின் வகைகள்:

சமூக விழிப்புணர்வு திரைப்படங்கள் எடுப்பதன் மூலம் , சமூகத்தில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இந்த திரைப்படங்கள், சமூகத்தில் உள்ள பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்கும் , மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் , சமூக மாற்றங்களை தூண்டுவதற்கும் ஒரு முக்கிய கருவியாக இருக்கின்றன.

**சமூக நீதி**

சமூகத்தில் உள்ள பாகுபாடுகள் , ஏற்றத்தாழ்வுகள் மற்றும் ஒடுக்குதல்கள் குறித்து விவாதிப்பவை. உதாரணமாக, "டு கில் எ மோக்கிங்பேர்ட்" திரைப்படம் , 1960 களில் அமெரிக்க தெற்கில் நிலவிய இனவெறி பற்றிய கதையை விவரிக்கிறது.

**கல்வி**

கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படங்கள் , கல்வி உரிமை, பெண் கல்வி, கல்வி சமத்துவம் போன்ற அம்சங்களை விவாதிக்கின்றன.

**சுற்றுச்சூழல்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு , காலநிலை மாற்றம் மற்றும் வனவிலங்குகள் பாதுகாப்பு போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படங்கள்.

**பாலினம்**

பாலின சமத்துவம் , பாலின அடிப்படையிலான வன்முறை , பெண்களுக்கு எதிரான பாகுபாடு போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படங்கள்.

**குடிமக்களின் உரிமை**

குடிமக்களின் உரிமை , கருத்து சுதந்திரம் , தகவல் உரிமை போன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் திரைப்படங்கள்.

சமூக விழிப்புணர்வு திரைப்படங்களின் பயன்கள்:

**விழிப்புணர்வு**

மக்கள் மத்தியில் சமூகப் பிரச்சினைகள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி , அவர்கள் அந்தப் பிரச்சினைகள் பற்றி சிந்திக்கவும் , விவாதிக்கவும் தூண்டுகின்றன.

**மாற்றத்தை தூண்டுகின்றன**

திரைப்படங்கள் மூலம் மக்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்ளவும் , சமூக மாற்றங்களுக்காக போராடவும் தூண்டப்படுகிறார்கள்.

**சமூக இயக்கங்களுக்கு ஆதரவு**

திரைப்படங்கள் சமூக இயக்கங்களுக்கு ஆதரவு அளித்து , அவற்றின் நோக்கம் மற்றும் நோக்கங்களை பரப்புவதற்கும் உதவுகின்றன.

**விவாதத்தை தூண்டுகின்றன**

திரைப்படங்கள் சமூகப் பிரச்சினைகள் பற்றி விவாதங்களை தூண்டி , சமூகத்தில் ஒரு பெரிய உரையாடலை உருவாக்குகின்றன.

## காட்சியின் வகையும் திரை மொழியும்

மது முன்னோர்களைப் போல, அவ்வளவு திறமையாக நயாரும் கதை சொல்விட முடியாது. " ஒரு ஊர்ல ஒரு இராசா இருந்தாரு. அவரு ஒரு நாள் தம் மந்திரிகளோட, வேட்டை யாடக் காட்டுக்குப் போனாரு. அங்க.." எனப் பாட்டிமார்கள் கதை சொல்லி நிறுத்தும் போதே, அந்தக் கதை மாந்தர்களுடன், அதே சூழ்நிலையில் நாமும் ஆள் அரவம் இல்லாத அந்தக் காட்டில் திசை தெரியாமல் தடுமாறுவது போல் இருக்கும். அவ்வனவு உணர்ச்சிகளும், சுவாரஸ்யமும் ஊடுருவி நிற்கும்.

**சரி கதை என்பது என்ன?**

சில பல சம்பவங்களின் சேர்க்கைதான் கதை ஒருவரது வாழ்க்கை வரலாறு திரைக்கதையாக எழுதப் படுகிறது எனில் குழந்தைப் பருவத்தை, ஒரு தலைப்பாக எடுத்துக் கொண்டு எழுதலாம். மாணவப் பருவத்தை, ஒரு பிரிவு அல்லது தலைப்பாக எடுத்துக்

கொண்டு எழுதலாம். அப்படியே இளமைப் பருவம், இல்வாழ்க்கைப் பருவம் என்று கொண்டு செல்லலாம் அல்லவா?

சில பல பிரிவுகள் அல்லது தலைப்புகளை ஒன்று சேர்த்து, பாகம் அல்லது அத்தியாயம் என்று பிரித்துவிடுவோம்.

1. இளமைப் பருவம்
2. இல்வாழ்க்கைப் பருவம்
3. பொதுவாழ்க்கை
4. முதுமைக்காலம்

இப்படி மூன்று நான்கு பாகங்கள், அத்தியாயங்கள் சேர்ந் ததுதான் ஒருவரது வாழ்க்கை வரலாறாகும்.

இதையே ஒரு திரைக்கதையாக்கி, திரைப்படம் எடுத் தாலோ சின்னத் திரைக்கான கதைத் தொடராக எடுத்தாலோ, அது எப்படி அமையும்?

| | | |
|---|---|---|
| Shots | - | துண்டுக் காட்சிகள் |
| Scenes | - | காட்சிகள் |
| Sequences | - | நிகழ்ச்சிப் பகுதிகள் |

என்று திரைக்கதை பகுக்கப்படுகிறது.

Shot எனப்படும் துண்டுக்காட்சி என்பது என்ன?

கேமரா இயங்கத் தொடங்கியது முதல் அது நிறுத்தப் படுவது வரை நிகழும் ஒரு பதிவையே Shot என்கிறோம்.

A SHOT IS THE PORTION RECORDED BY THE CAMERA BETWEEN A SWITCH ON AND SWITCH OFF.

திரைக்கதையில் Shot - துண்டுக் காட்சிகள் பெறும் முக்கியத்துவம் என்ன?

ஓர் அழகுமிக்க அரண்மனையின் வலுவிற்குத் தூண்கள் எப்படி இன்றியமையாதனவோ, அப்படித்தான் திரைக்காட்சி யில் இந்தத் துண்டுக் காட்சிகள் (Shots) பயன்படுகின்றன.

**துண்டுக் காட்சிகளின் (SHOTS) வகைகள்**

1. Extreme Long Shot : மிக நீண்டத் தொலைவுக் காட்சி
ELS — தூரத்துப் பனிமலை, முகடு உரசும் முகில் கூட்டம்.

2. Very Long Shot : வெகு தொலைவுக் காட்சி
VLS — பனிமலையில் வெள்ளிக் கம்பியாய்க் கீழிறங்கும் அருவி

3 Long Shot : தொலைவுக் காட்சி
LS — அருவி தரைசேரும் இடத்தில் ஒரு மீனவன்

4. Medium Long Shot : இடைநிலைத் தூரக்காட்சி
MLS — கொண்டு வந்த தூண்டிலை அருவியில் வீசுகிறான்.

5. Medium Shot /Mid shot : இடைநிலைக் காட்சி
MS — தூண்டிலுடன் நிற்கும் மீனவன்.

6. Medium close up : இடைநிலை அண்மைக் காட்சி
MCU — பனிச்சாரலில் அவன் முகம், உடல் முழுவதும் நனைந்துள்ளது.

7. Close Up : அண்மைக்காட்சி
CU — அருவி நீரில், தூண்டில் தக்கை இழுக்கப்படுகிறது.

8. Tight close up- : வெகு அண்மைக் காட்சி
TCU — தூண்டிலை வெளியே இழுக்கிறான் மீனவன் புல் தரையில் துள்ளும் மீன்.

9. Extreme Close-Up : மிகமிக அண்மைக் காட்சி
தூண்டில் முள் குத்திய இடத்தில், துளித் துளியாய் இரத்தம்.

மேற்கண்ட ஒன்பதுவகைக் காட்சிகளே உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகிறது. இதற்குக் கோலிவுட், பாலிவுட், ஹாலி வுட் என்ற விதி விலக்கெல்லாம் இல்லை. ஒரே வரையறைதான்

**திரைமொழி அல்லது காட்சி மொழியின் வலிமை**

வெவ்வேறுபட்ட காட்சிகளை, ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கித் தொடர்ந்து காட்டும்போது. அது தனியான அல்லது புதுவிதமான அர்த்தத்தை வெளிப்படுத்தும். எப்படி?

நம் நண்பரின் சிற்றூருக்கு வந்திருக்கிறோம். நம்மிடத்தில் ஒரு வீடியோ கேமரா இருக்கிறது. கண்ணில் காண்பதையெல் லாம் படம் பிடித்துப் பதிவு செய்கிறோம்.

1. தெருக்கோடியில் ஒரே கூட்டம் / கூச்சல், ஒருவரை, உட்கார்ந்த நிலையில் தூக்கி வருகிறார்கள். கணுக்காலில் சதை பிய்ந்தபடி ரத்தம் நம் கேமராவில் பதிவு செய்கிறோம். பாவம் ! " வெறகு வெட்டிட்டிருந்தான். சில்லு ஒண்ணு காலைப் பெயர்த்திடுச்சு" யாரோ ஒருவர் சொல்லிக் கொண்டே ஓடுகிறார்.

2. அட என்ன இது ! ஏன் இப்படி இவன் அலறி ஓடுகிறான்? தோப்பிலிருந்து விலகி, வயல் வரப்பில் ஒருவன் அதி வேகமாய் ஓடுகிறான். பின்பக்கமிருந்து பார்க்கிறோம். மாந்தோப்பில் மாங்காய் கூட திருடியிருக்கலாம். யாராவது பார்த்திருக்கலாம். அதனால் அவன் தப்பிக்கலாம். அதையும் பதிவு செய்கிறோம்.

3. அடடே ! எவ்வளவு அழகான நாய் தனியாக இப்படி ஒற்றையடிப் பாதையில் வாயைத் திறந்தபடி ஓடி வருகிறதே. தண்ணீர் தாகமோ?

படம் பிடிக்கிறீர்கள் அப்படியே போகிறோம். தோப்பு வருகிறது.

சரி வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு காரணங் களுக்காக நடைபெற்ற காட்சிகளைப் பதிவு செய்திருக்கிறோம். அதை இப்படி அடுத்தடுத்த காட்சியாகத் தொகுத்துப் பார்ப்போம்.

1. விரைந்து ஓடிவரும் நாய்.

2. தப்பித்து ஓடும் ஒருவன்

3. காலில் காயத்தோடு தூக்கி வரப்படும் மனிதன்

இந்தக் காட்சி மொழி உணர்த்துவது என்ன?

ஒரு கிராமத்தானைக் வெறிபிடித்து ஓடிவந்த நாய் ஒன்று. ஒரு அடித்துக் குதறி, காயப்படுத்தி அவனை ஆபத்தில் ஆழ்த்தி யிருக்கிறது.

திரைமொழி, அல்லது காட்சி மொழி என்பதன் வலிமையை இப்போது தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

நமது திரையுலகினர் ஒரு நிகழ்வைக் காட்சிப் படுத்துவது மிகவும் ஆச்சரியமாய் இருக்கும்.

1. காரில் தன் வீட்டிற்குள் நுழைந்த நாயகன்

2. காரைப் 'போர்டிகோ'வில் நிறுத்திவிட்டு

3. வீட்டிற்குள் நுழைந்து

4. மாடிப்படி ஏறிவந்தான்

5. 'ச்சே! கல்யாண நாளும் அதுவுமா இன்னக்கும் லேட்டா என எரிந்து விழுந்தாள், படுக்கையறையில் இருந்த நாயகி.

ஒரே இடம், ஒரே நிகழ்வாக இருந்தாலும் வெவ்வேறு இடங்களில் எடுத்திருப்பார்கள் நமது இயக்குநர்கள். ரஜினியின் 'சந்திரமுகி' திரைப்படத்தில் இப்படித்தான் ஒரு காட்சி எடுக்கப்பட்டது. இது பற்றி அதன் இயக்குநர் பி.வாக கூறுவதைக் கேளுங்கள்:

"படத்தில் முக்கியமா ஒரு பெரிய வீடுவரும். அந்த வீட்டின் வெளித்தோற்றம்-சென்னை. ஹால்-ஹைதராபாத்தில் செட் போட்டோம். காரிடார்-பெங்களூர். வீட்டிற்குள் வருகிற படிக்கட்டுக் காட்சிகள்-மைசூரில் செய்தோம்.

பெட்ரூம்-ராமோஜி பில்ம் சிட்டியில். இப்படி ஒரு வீட்டையே பல விதமாகப் பிரிச்சு பிரம்மாண்டமா செட் போட்டு அசத்தியிருந்தார் தோட்டாதரணி.

உதாரணமாக இங்கே சென்னையில் வீட்டிற்குள் ரஜினி நுழைகிற மாதிரி காட்சின்னா, அதோட தொடர்ச்சியா படிக் கட்டில் ஏறுவதை இன்னொரு நாள் மைசூரில் ஷூட் பண்ணு வோம். ஹாலுக்குள் நுழையணும்னா பெங்களூர் போகணும். இப்படி ஒரே சீன் தொடர்ச்சியை மாத்தி பல ஊர்களில் படம் பிடித்தோம். படம் பார்க்கிற போதுதான் அதன் சுவாரஸ்யம் புரியும்"

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சூழல்களில் படம் பிடித்தாலும், காட்சிகளின் இயல்பு மாறாமல், தொடர்ச்சியைச் சரியாகப் பயன்படுத்தினால் சிறப்பான திரைமொழி, அல்லது சரியாகப் பயன்படுத்தினறற்று.

## கேமரா கோணங்கள்

### உயர் கோணம் (High Angle)

கேமரா பொருளைக் கீழே இருந்து பார்க்கிறது , இது பொருளை சிறியதாகவும் , பலவீனமாகவும் காட்டுகிறது.

**தரை மட்ட கோணம் (Eye Level Angle)**

கேமரா பொருளின் கண் மட்டத்தில் இருந்து பார்க்கிறது , இது ஒரு இயல்பான பார்வையை அளிக்கிறது.

**தரைக்கு கீழ் கோணம் (Low Angle)**

கேமரா பொருளை மேலே இருந்து பார்க்கிறது , இது பொருளை பெரியதாகவும் , ஆதிக்கம் செலுத்துவதாகவும் காட்டுகிறது.

**புழுவின் கண் பார்வை (Worm's Eye Angle)**

கேமரா பொருளைப் பார்ப்பதற்கு மிகவும் கீழே இருந்து பார்க்கிறது.

கேமரா அசைவுகள்:

**பான் (Pan)**

கேமரா இடது அல்லது வலதுபுறமாக நகர்வது.

**சாய்வு (Tilt)**

கேமரா மேல் அல்லது கீழாக நகர்வது.

**பெரிதாக்கு (Zoom)**

கேமரா பொருளை நோக்கி நகர்வது அல்லது பொருளில் இருந்து விலகுவது.

**டோலி (Dolly)**

கேமரா பொருளைப் பின் தொடர்வது அல்லது முன்னே நகர்வது.

**கிரேன் (Crane)**

கேமராவை மேலே அல்லது கீழே தூக்குவது. இந்த கேமரா கோணங்கள் மற்றும் அசைவுகள் திரைப்படத் தயாரிப்பில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றன , அவை ஒரு காட்சியை மேலும் ஆக்கப்பூர்வமாக்க உதவுகின்றன.

கதையை இன்னும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சொல்ல ஒவ்வொரு இயக்குனரிடமும் இருக்கும் மிகவும் திறமையான கருவிகளில் கேமரா கோணத்துடன் விளையாடுவது ஒன்றாகும். அதேசமயம் , கேமராவை நிலைநிறுத்துவது சினிமா வரலாற்றின் மூலம் நிறுவப்பட்ட விதிகளைக் கொண்டுள்ளது. எனவே இன்று திரைப்படங்களில் அதிகம் பயன்படுத்தப்படும் கேமரா கோணங்களைப் பற்றி மேலும்

அறியவும், ஒவ்வொன்றும் ஒரு காட்சியில் ஒரு சிறப்பு உணர்வை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை அறியவும் விரும்புகிறோம்

**வெவ்வேறு கேமரா ஷாட்களின் கண்ணோட்டம்**

கேமரா வெறும் படம் பிடிப்பதில்லை , ரகசியங்களை கிசுகிசுக்கிறது. நுட்பமான சாய்வுகள் மற்றும் மாற்றங்கள் மூலம் , கேமரா கோணங்கள் ஒரு கண்ணுக்குத் தெரியாத மொழியைப் பின்னுகின்றன , நமது உணர்ச்சிகள் , உணர்வுகள் மற்றும் திரைப்படக் கதைகளைப் புரிந்துகொள்வதை வடிவமைக்கின்றன.

அடுத்த முறை நீங்கள் ஒரு திரைப்படத்தைப் பார்க்கும்போது , அதில் ஒரு சுறுசுறுப்பான பங்கேற்பாளராகுங்கள். கோணங்கள் உங்கள் புரிதலையும் , உங்கள் உணர்ச்சிகளையும் எவ்வாறு மாற்றுகின்றன என்பதைப் பாருங்கள். அவ்வாறு செய்வதன் மூலம், கதைசொல்லலின் இந்த அறியப்படாத ஹீரோக்கள் , சினிமா உலகம் முழுவதும் தங்கள் மாயாஜாலத்தை இழைக்கும் கண்ணோட்டத்தின் அமைதியான கையாளுபவர்கள் மீது ஆழமான பாராட்டைத் திறப்பீர்கள்.

**தலைக்கு மேல் ஷாட்; கடவுளின் கண் பார்வை**

கூரையிலிருந்து கீழே பார்த்து, ஒரு மினியேச்சர் உலகம் போல விரிவடையும் ஒரு காட்சியைக் காண்பதை கற்பனை செய்து பாருங்கள். தலைக்கு மேல் எடுக்கப்பட்ட ஷாட்டின் சக்தி அதுதான் , அங்கு கேமரா , பொருளிலிருந்து கிட்டத்தட்ட 90 டிகிரி உயரத்தில் நிலைநிறுத்தப்பட்டு, பெரும்பாலும் மிக உயரமாக இல்லாமல் , தெளிவு மற்றும் சூழ்ச்சியுடன் கூடிய ஒரு தனித்துவமான பார்வையை வழங்குகிறது. இது ஒரு காட்சியின் யதார்த்தத்திற்கு மிக நெருக்கமான ஒரு பார்வையை நமக்கு வழங்குகிறது ; சிக்கலான விவரங்களை வெளிப்படுத்தும் இடத்தின் கிட்டத்தட்ட மிகை-யதார்த்தமான சித்தரிப்பு.

மேல்நோக்கிய ஷாட் பொதுவாக ஒரு காட்சி மற்றும் செயல்கள் பற்றிய கூடுதல் தகவல்களை நமக்குத் தருகிறது , மேலும் அவற்றுக்கிடையேயான காரணத்தையும் விளைவையும் நமக்குக் காட்டுகிறது, பல ஆண்களுக்கு இடையிலான சண்டைக் காட்சியின் மேல்நோக்கிய ஷாட்களைப் போல . ஒரு பொருளின் சூழலையோ அல்லது கதாபாத்திரம் இருக்கும் சூழ்நிலையையோ காட்ட இது ஒரு நல்ல வழி , ஏனெனில் அது ஒரு சூழ்நிலையில் நாம் குறைந்துவிட்டோம் அல்லது சிக்கிக்கொண்டோம் என்ற உணர்வைத் தருகிறது.

**வான்வழி ஷாட்**

கேமராவின் மிக உயர்ந்த நிலையில் இருந்து தொடங்கி , வான்வழி ஷாட் அல்லது பறவையின் பார்வை, ட்ரோன்களின் கண்டுபிடிப்பால் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது, இது ஒரு பெரிய அளவிலான காட்சியை உள்ளடக்கிய ஷாட் ஆகும் , இது ஒரு இடம் அல்லது ஒரு செயலின் முழு படத்தை நமக்கு வழங்குகிறது மற்றும் பெரும்பாலும் அவற்றைப் பற்றிய கூடுதல் தகவல்களை நமக்கு வழங்குகிறது. பல ஹாலிவுட் படங்களில் பயன்படுத்தப்படும் ஒரு சிறப்பு அறிமுக காட்சியை உருவாக்குவதற்கு வான்வழி ஷாட் சிறந்த விருப்பங்களில் ஒன்றாகும்.

**உயர் கோண ஷாட்**

ஹை ஆங்கிள் ஷாட் எப்படியோ மேல்நோக்கிய ஷாட்டின் அதே உயரத்தைக் கொண்டுள்ளது, ஆனால் வேறு கோணத்தில். இது கதாபாத்திரத்தைச் சுற்றி ஆபத்து அல்லது தாழ்வு உணர்வை உருவாக்குகிறது , குறிப்பாக ஜூம் இன் மூலம் அதைப் பயன்படுத்தும் போது. திகில் படங்கள் அல்லது அதிரடி வகைகளில் கதாபாத்திரம் ஆபத்தை உணர்ந்து சூழ்நிலையில் ஆதிக்கம் செலுத்தாதபோது நாம் ஹை ஆங்கிள் ஷாட்டைக் காணலாம்.

**கண் நிலை ஷாட்**

உயர் கோண ஷாட்டை விடக் கீழே , கதாபாத்திரத்தின் கண்களின் அதே மட்டத்தில் , கண் மட்ட ஷாட் உள்ளது. நாம் மக்கள் முன் நிற்கும்போது எப்படிப் பார்க்கிறோமோ , அதே யதார்த்த உணர்வை இது வெளிப்படுத்துகிறது. பார்வையாளருக்கும் கதாபாத்திரத்திற்கும் இடையிலான அனுதாப உணர்வையும் தொடர்பையும் அதிகரிக்க கண் மட்ட ஷாட் சில நேரங்களில் பயன்படுத்தப்படுகிறது. எந்த தீர்ப்பும் இல்லாமல் ஒரு கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்த இது ஒரு நடுநிலையான வழியாகும்.

**தோள்பட்டை நிலை ஷாட்**

ஒரு கதாபாத்திரத்தின் தோள்களில் கேமராவை வைப்பது , ஒரு கதாபாத்திரத்தைப் பின்தொடர அதிகம் பயன்படுத்தப்படும் கேமரா கோணங்களில் ஒன்றாகும். தோள்பட்டை அளவிலான ஷாட் ஹெட்ரூமைக் குறைத்து , ஒரு கதாபாத்திரத்தின் உடலை அதிகமாகக் காட்டுகிறது. குறிப்பாக உரையாடல்களின் போது , ஒரு கதாபாத்திரத்தைக் காட்ட இது மிகவும் சினிமாத்தனமான வழியாகக் கருதப்படுகிறது. அதனால்தான் இரண்டு கதாபாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல்களின் பிங் பாங்கிற்கு ஓவர் தி ஷோல்டர் ஷாட்டை (OTS) தேர்ந்தெடுப்பது திரைப்படங்களில் மிகவும் பொதுவான ஷாட் ஆகும்.

**குறைந்த கோண ஷாட்**

குறைந்த கோண ஷாட் என்பது கதாபாத்திரம் கேமராவை விட உயரமாக இருப்பதால் கேமரா அவரைப் பார்ப்பது. இது கண் கோட்டிலிருந்து சற்று கீழே கேமராவை வைப்பது போன்றதாகவோ அல்லது கேமரா மிகக் குறைந்த கோணத்தில் கதாபாத்திரத்தைப் பார்ப்பது போன்றதாகவோ இருக்கலாம். குறைந்த கோண ஷாட்டின் மிகவும் பயனுள்ள நிகழ்வு ஒரு கதாபாத்திரம் உயர்ந்ததாகவோ அல்லது ஆதிக்கம் செலுத்துவதாகவோ இருக்கும்போதுதான். திகில் அல்லது அதிரடி திரைப்படங்களில் தவழும் எதிரி கதாபாத்திரங்களுக்கான அறிமுகக் காட்சிகளிலும் இது பயனுள்ளதாக இருக்கும் , ஏனெனில் இது அவர்களை இன்னும் ஆபத்தானதாகக் காட்டுகிறது.

**டச்சு ஆங்கிள் ஷாட்**

1920களில் ஜெர்மன் எக்ஸ்பிரஷனிஸ்டுகளால் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட டச்சு கோணம் அல்லது டச்சு சாய்வு ஷாட் என்பது சமமாக இல்லாத மற்றும் ஒரு பக்கத்தில் குறிப்பிடத்தக்க சாய்வைக் கொண்ட ஒரு ஷாட் ஆகும். இது உணர்ச்சிகளை குறிப்பாக பதற்றம் அல்லது பயத்தை தீவிரப்படுத்தப் பயன்படுகிறது. டச்சு கோண ஷாட் பார்வையாளர்களுக்கு ஏதோ சரியில்லை என்று சொல்லி கதைக்கு ஒரு நல்ல மாற்றத்தைக் கொடுக்க ஒரு நல்ல வழியாகும். டச்சு கோண ஷாட்டில் கேமராவின் உயரம் காட்சியின் தேவைகளைப் பொறுத்தது , ஆனால் இது பெரும்பாலும் குறைந்த கோண ஷாட்டுடன் இணைந்து பயன்படுத்தப்படுகிறது.

**இடுப்பு நிலை ஷாட்**

இடுப்பு மட்ட ஷாட் அல்லது கவ்பாய் ஷாட் என்பது கேமராவை கிட்டத்தட்ட இடுப்பு உயரத்தில் வைக்கும்போது உருவாக்கப்படுகிறது. இது பெரும்பாலும் கவ்பாய் திரைப்படங்களில் சண்டைக் காட்சியில் துப்பாக்கியை வெளியே இழுக்கும் தருணத்தை தீவிரப்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. கதாபாத்திரங்கள் ஒரே மட்டத்தில் இல்லாதபோதும் இது பயனுள்ளதாக இருக்கும். படுக்கையில் உட்கார்ந்திருக்கும்போது அல்லது படுத்திருக்கும்போது ஒரு கதாபாத்திரம் மற்ற கதாபாத்திரத்தை விடக் கீழே இருக்கும்போது போல.

**முழங்கால் நிலை ஷாட்**

இன்னும் கொஞ்சம் கீழே வரும்போது , முழங்கால் அளவிலான ஷாட்டைப் பார்ப்போம். ஒரு கதாபாத்திரத்தை நடக்கும்போது காண்பிக்கும் போது , குறிப்பாக கவனம்

சேருமிடத்தில் அல்லது கதாபாத்திரம் பின்பற்றும் விஷயத்தில் இருக்கும்போது இது பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. குறைந்த கோண ஷாட்டைப் பின்பற்றினால், அது ஒரு கதாபாத்திரத்தின் மேன்மையையும் வெளிப்படுத்தும்.

**தரை மட்ட ஷாட்**

இது ஒரு கேமராவை வைக்கக்கூடிய மிகக் குறைந்த நிலை. இது முழங்கால் மட்ட ஷாட்டைப் போலவே அதே நோக்கங்களைக் கொண்டுள்ளது , ஆனால் இது மிகவும் தீவிரமானது மற்றும் கதாபாத்திரம் மற்றும் நடைபயிற்சி இயக்கத்தில் அதிக கவனம் செலுத்துகிறது. சில நேரங்களில் தரை மட்ட ஷாட் பார்வையாளர்களை நிலத்தடி இடத்திற்கு அழைத்துச் சென்று இரண்டு இடங்களுக்கு இடையில் ஒரு சுவிட்ச் பாயிண்டாகப் பயன்படுத்தப்படுகிறது.

**கேலிச்சித்திரத்தினை வரைபவருக்குரிய தகுதிகள்**

1. கேலிச்சித்திரம் வரைபவர் ஓவியம் வரைவதில் சிறந்த தேர்ச்சி பெற்று இருப்பதுடன் நகைச்சுவை உணர்வும் பெற்று இருத்தல் வேண்டும்.

2. அரசியல் கட்சிகள், தனிநபர் பற்றியும் கூர்மையான அறிவு பெற்றிருக்க வேண்டும்.

3. யார் மனதையும் புண்படுத்தாமல் யாரைப் பற்றிய சித்திரம் வரையப்படுகிறதோ அவரும் சிரித்துக் கொள்ளும் முறையில் ஓவியம் வரைய வேண்டும்.

4. சமுதாய உணர்வும். கிண்டலும், கேலியும் சேர்ந்த கூட்டுக் கலவையாகக் கேலிப்படம் உருவாக வேண்டும்.

**கருத்துப்படத்தின் வகைகள்**

1.**அரசியல் கருத்துப்படங்கள் (Political Cartoons)**

அரசியல் நடவடிக்கைகளைக் கிண்டல் செய்ய வெளியிடும் கருத்துப்படங்கள் அரசியல் கருத்துப் படங்களாகும்.

**2. தலையங்கக் கருத்துப்படங்கள் (Editorial Cartoons)**

ஆசிரியரின் தலையங்கத்திற்கு அரண் செய்யும் வகையில் தலையங்கத்தை ஒட்டிய சில கருத்துப் படங்களை இதழ்கள் வெளியிடுகின்றன. ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்ற இதழ்கள் தலையங்கக் கருத்துப் படங்களை வெளியிடுகின்றன.

**3. கட்டத்திற்குள் கருத்துப்படம்**

வாசகர்களின் கருத்தைக் கவர, ஒரு கட்டம் கட்டி கருத்துப் படங்களை வெளியிடுவர்.

**கருத்துப்படங்கள், கேலிச்சித்திரங்களின் பயன்கள்**

கருத்துப்படங்களும், கேலிச் சித்திரங்களும் வாசகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. இப்படங்களிலிருந்து வாசகர்கள் நல்ல கருத்துக்களையும் அறிந்து கொள்கிறார்கள். " கருத்துப்படங்களும், விச்சித்திரங்களும் நகைச்சுவையுடன் வாசகர்களின் சிந்தனையைத் தூண்டி புதிய எண்ணங்களையும் பிரதிபலிக்கின்றன" என்று கார்ட்டூனின் தந்தையான ஜேம்ஸ் கில்லரி (James Gillary) கூறுகின்றார்.

கருத்துப் படங்களும், கேலிச்சித்திரங்களும் வாசகர்களிடத்தில் நகைச்சுவை உணர்வைத் தூண்டுகின்றன.

**9. துணுக்குகள்**

உலக நடப்புகளைத் தெரிவிப்பனவாய் அளவில் சிறிதாக இருப்பவை துணுக்குகள் ஆகும். இதழ்களில் புனைகதைகளையும், கட்டுரைகளையும் படித்து வரும் வாசகர்களுக்கு இவை இடைநிறுத்தம் போல் அமைகின்றன. மேலும் பக்க அமைப்பிற்கும் ( Page-make-up) இவை உதவுகின்றன.

இதழில் பக்க அமைப்பின்போது உண்டாகும் இடைவெளிகளை நிரப்பத் துணுக்குகள் பயன்படுவதால் இவற்றை இடநிரப்பிகள் என்பர் இவையே ஆங்கிலத்தில் டிட்பிட்ஸ் ( hieris எனப்படுகின்றன.

நீண்ட பகுதிகளின் தொடர்ச்சியிலிருந்து ஒரு சிறு மாறுதலைத் தருவது ஒரு வெளியீட்டினை உருவாக்கும் போது எஞ்சியுள்ள ஒரு பக்கம் அல்லது ஒரு பகுதியை நிரப்புவதற்காக வேறுபட்ட அளவுகளின் சிறிய தகவல் என்பதே நிரப்பிகளின் நோக்கமாகும் என்று எல்மோ ஸ்காட் வாட்சன் எனும் இதழியளாளர் கூறுகின்றார்.

துணுக்குச் செய்தி என்பது 'Bit Matter' என்ற ஆங்கிலச் சொல்லின் நேரடி மொழிபெயர்ப்பாக விளங்குகிறது. எனவே ஆங்கிலத்தில் Bit என்பது "துணுக்கு" என்ற தமிழ் வடிவம் பெற்றுள்ளது. "துணுக்கு" என்பது பக்க அளவில் சிறியன என்றும் கொள்ளலாம்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | குறும்படங்களின் தேவைகள் யாவை? | K2 | CO2 | PO4 |
| 2 | குறும்படங்களின் வகைகள் விளக்குக. | K3 | CO3 | PO5 |
| 3 | சமூகவிழிப்புணர்வுப் படங்கள் யாவை? | K4 | CO4 | PO1 |
| 4 | காட்சிதுணுக்கின் வகைகளைவிளக்குக. | K5 | CO5 | PO2 |
| 5 | காட்சிமொழியின் வலிமைகுறித்துஎழுதுக. | K1 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கருத்துப் படங்கள்,கேலிச்சித்திரங்களின் பயன்கள் குறித்துவிவரிக்க. | K2 | CO1 | PO4 |
| 2 | கேமராகோணங்களின் வகைகளைவிவரி. | K1 | CO2 | PO6 |
| 3 | ஆவணப்படங்கள் குறித்துகட்டுரைவரைக. | K4 | CO2 | PO5 |
| 4 | குறும்படங்களின் தேவைகளைஎடுத்துரைக்க. | K3 | CO4 | PO6 |
| 5 | குறும்படங்களின் வகைகளைவிவரி. | K5 | CO1 | PO3 |

| Text Books/ Reference Books |
| --- |
| 1. இதழியல் கலை - மா. பா. குருசாமி |
| 2. தகவல் தொடர்பியல் - வே. கிருஷ்ணசாமி |
| 3. உலகத் திரைப்படங்கள் - எஸ். ராமகிருஷ்ணன் |
| 4. எம் தமிழர் செய்த படங்கள் - சு.தியோடர் பாஸ்கரன் பார்வை நூல்கள் |
| 5 தமிழ் சினிமாவின் கதை - அறந்தை நாராயணன் |
| 6. உலக சினிமா - செழியன் (மூன்று தொகுதிகள்) |
| 7. திரைக்கதை எழுதுவது எப்படி - சுஜாதா |
| 8. திரைக்கதை எழுதும் கலை - சங்கர்தாஸ் |

| | Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.] |
| --- | --- |

**Web Sources**

- Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>
- Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library
- Project Madurai - www.projectmadurai.org.
- Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.
- Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.
- Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com
- Tamil Books on line- books.tamil cube.com
- Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org
- Tamil novels on line - books.tamilcube.com

| Expected Course Outcomes | | |
|---|---|---|
| இப்பாடத்தைக்கற்பதால்பின்வரும்பயன்களைமாணவர்அடைவர். | | |
| On the Successful completion of the Course,Students will be able to | | |
| CO 1 | ம் பற்றி அறிந்து கொள்வர் | K2,k1 |
| CO 2 | ஊடகம் பற்றி அறிந்து கொள்வர் | K3,k1 |
| CO 3 | ஊடகம் பற்றித் தெரிந்துகொள்வர் | K4,k1 |
| CO 4 | ஊடகம் பற்றி அறிந்து கொள்வர் | K3,k1 |
| CO 5 | ஊடகம் பற்றித் தெரிந்து கொள்வர் | K5,k1 |
| Remember; K2 - Undestand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| CLO1 | 2 | 3 | 2 | 3 | **3** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 |
| CLO2 | **3** | **3** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | **2** |
| CLO3 | **3** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | **2** |
| CLO4 | **3** | 3 | **3** | 2 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | **3** |
| CLO5 | 2 | 3 | 2 | 3 | **3** | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 |

**வினாக்கள்**

1. குறும்படங்களின் தேவைகள் யாவை?
2. குறும்படங்களின் வகைகள் யாவை?
3. சமூக விழிப்புணர்வுப் படங்கள் யாவை?
4. கேமரா கோணங்களின் வகைகளை விவரி.
5. காட்சி துணுக்கின் வகைகளை விளக்குக.


**சு.பேச்சியம்மாள்,**

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி.